
நாட்டார் வாழ்ந்த காலத்து ஆய்வறிவு, கருத்துச் சுதந்திரம், அவருக்கிருந்த இடையூறு, பொருளாதாரப் பற்றாக்குறை என நினைத்துப் பார்த்தால் அன்னாரது பணி இறவாப் புகழுக்குரிய ஒன்று என்று கூறுவது சரியான மதிப்பீடாக இருக்கும். நாட்டார் சிறந்த நாவன்மையும், இலக்கியப் புலமையும் செயலூக்கமும் கொண்டு ஓயாது உழைத்து உள்ளார். தன்னடக்கம் சான்ற புலமையும் கொண்டு நாட்டார் உழைத்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. எனவே அவரது உழைப்பு இன்று நாம் பல மைல் தூரம் முன்னேறுவதற்கு உதவியாக உள்ளது என்பதே பொருந்தும். அவரது பணியைத் தொடர்வது நம் கடமையாகும்.

தி. மகாலட்சுமி




தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

21 நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்

# நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்

21



நாட்குறிப்பு – 1

தமிழ்மண்

# நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்

## 21

## நாட்டார் நாட்குறிப்புக்கள்

*ஆசிரியர்*

**நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

*பதிப்பாசிரியர்*

**பேராசிரியர் பி. விருத்தாசலம்**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **நாவலர் நாட்டார் தமிழ் உரைகள் – 21** |
| உரையாசிரியர் | : | நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் |
| பதிப்பாசிரியர் | : | **பேராசிரியர் பி. விருத்தாசலம்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதற்பதிப்பு | : | 2007 |
| தாள் | : | 18.6 கி. என்.எஸ்.மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 22+ 290= 312 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **290/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | வ. மலர் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

## பதிப்பாசிரியர் உரை

*புனல் பரந்து பொன்கொழிக்கும் மலைத்தலைய கடற் காவிரியை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கானல் வரியில்,*

***வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி,***
***ஊழியுய்க்கும் பேருதவி ஒழியாய்வாழி காவேரி***
***உழியுய்க்கும் பேருதவி ஒழியாதொழுகல் உயிரோம்பும்***
***ஆழியாள்வான் பகல்வெய்யோன் அருளேவாழி காவேரி***

*என்று புகழ்ந்து பாடுவார். காவிரித்தாயின் உலகு புரந்தூட்டும் உயர்பேரொழுக்கம் காரணமாக இன்றைய கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பண்டைய சோழவளநாடு*

***“ சோழவளநாடு சோறுடைத்து”***

*எனவும்,*

***“ சாலி நெல்லின் சிறைகொள் வேலி***
***ஆயிரம் விளையுட் டாகக்***
***காவிரி புரக்கும் நாடுகிழ வோனே”***

*பொருநராற்றுப்படை 246 - 248 எனவும்,*

***“ ஒருபிடி படியுஞ் சீறிடம்***
***எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே” (புறநானூறு–40)***

*எனவும் புலவர் பெருமக்களால் பாராட்டப்பெறுவதாயிற்று. இவ்வாறு, கரும்பல்லது காடறியாப் பெருந்தண்பணைகள் நிரம்பிய சோழநாட்டில், தஞ்சாவூருக்கு வடமேற்கே பத்துக்கல் தொலைவிலுள்ள* **நடுக்காவிரி** *என்னும் சிற்றூரில் திருவாளர் வீ.முத்துச்சாமி நாட்டார் திருமதி தைலம்மை இணையருக்கு மூன்றாவது மகனாக 12.04.1884 இல் பிறந்த பெருமைக்குரிய வர்தாம் நாவலர், பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர் களாவார். அவர் ஆசிரியர் எவருடைய துணையுமில்லாமல் தாமே படித்து, மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய* **பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம்** *ஆகிய மூன்று தேர்வுகளையும் முறையே 1905, 1906, 1907 ஆகிய மூன்றே ஆண்டுகளில் எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அதனால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் நாட்டார் ஐயாவிற்குப் பொற்பதக்கம் அளித்தும், தங்கத்தோடா அணிவித்தும்*

சிறப்புச் செய்தார். அதுகாரணமாக நாட்டார் ஐயா அவர்கள் **தாமே பயின்ற தமிழ்ப் பேராசான்** என்று நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப் பெற்றார். திருமுருகாற்றுப்படை கல்வி கேள்விகளிலும், தவத்திலும் சிறந்த முனிவர்களைப் பற்றி

> " ...........................யாவதும்
> கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
> தாம்வரம் பாகிய தலைமையர்"

**திருமுருகாற்றுப்படை 132-134)**

என்று சிறப்பித்துக் கூறும், அவர்களைப் போன்று வீறுசான்ற அறிவு நிரம்பிய நாட்டார் அவர்கள்

> " கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
> சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

**(தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல் - 9)**

என்று தொல்காப்பியர் கூறிய பெருமிதம் உரையவராய் விளங்கினார்.

1907-இல் பண்டிதம் பட்டம் பெற்ற நாட்டார் ஐயா அவர்கள் 1908-இல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வந்த எஸ்.பி.ஜி. கல்லூரியிலும் (அக்கல்லூரி இப்பொழுது பிசப் ஈபர் கல்லூரி என்று வழங்கப் பெறுகின்றது) 1909-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள தூயமைக்கேல் உயர்நிலைப்பள்ளியிலும் வேலைபார்த்தார்; மீண்டும் திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரியில் 1910-இல் பணியில் சேர்ந்து 1933 வரை **இருபத்து இரண்டு ஆண்டுகள்** தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அக்கல்லூரி 1933-இல் மூடப்பெற்றது. அதன்பின் இராசா சர்அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அன்புநிறைந்த அழைப்பினை ஏற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்; அங்கே, 1933 முதல் 1940 வரை ஏழாண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்ற பின் தஞ்சையில் வந்து குடியிருந்த நாட்டார் ஐயா அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் **செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார்** அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கக் **கரந்தைப் புலவர் கல்லூரியில்** ஊதியம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் **மதிப்பியல் முதல்வராக** 02.07.1941 முதல் 28.03.1944-இல் அவர் இறக்கும் நாள் வரையில் பணிபுரிந்தார்.

நாட்டார் ஐயா அவர்கள் தம்முடைய வாழ்நாளில் அறிஞர் பெருமக்களால் மிகுதியும் மதிக்கப்பெற்றார். இருபதாம்

நூற்றாண்டில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்ட பெருமை மிக்க திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் **"செந்தமிழ்ச்செல்வி"** என்னும் தமிழராய்ச்சித் திங்களிதழை நடத்தி வந்தது; அந்த இதழ் இன்றும் காலந்தவறாமல் தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றது. அந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைமைப் பொறுப்பாளர்களாக முதலில் **திருவரங்கனாரும்**, அவருக்குப்பின் அவர் தம்பி தாமரைத் **திரு வ.சுப்பையா பிள்ளை** அவர்களும் விளங்கினர். மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையாரின் கணவர் திருவரங்கனார் ஆவார். ஆயினும், செந்தமிழ்ச் செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினராகவும் தலைவராகவும் நாட்டார் ஐயா அவர்களை ஏற்றுக் கொண்டமைக்கு ஐயா அவர்கள் செந்தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் செய்துவந்த தொண்டுகளே காரணம் ஆகும். தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த குடிமக்களுள் **சேக்கிழார் வழிவந்த தொண்டை மண்டல முதலியார்கள்** இன்றைக்கும் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நடத்திவந்த **சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்கு** நாட்டார் ஐயா அவர்கள் பல ஆண்டுகள் தலைவராக இருந்தார் என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும். 1940-இல் **சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில்** நாட்டார் ஐயா அவர்களுக்கு **நாவலர்** என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. 28.3.1944-இல் நாட்டார் ஐயா தம் பூத உடம்பை நீத்துப் புகழுடம்பைப் பெற்ற போது அவரை அடக்கம் செய்த இடத்தில் கோயில் ஒன்று எழுப்பப் பெற்றது. அக்கோயில் **நாட்டார் திருக்கோயில்** என்று தமிழன்பர்களால் பெருமையுடன் அழைக்கப் பெறுகின்றது. நாட்டார் ஐயா அவர்கள் 1921-இல் தம்முடைய முப்பத்து ஏழாம் வயதில் **தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக வேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாகத் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவவேண்டும்** என்றும் கருதி அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள். அக்கல்லூரி நிறுவுவதற்குத் தமிழ்நாட்டில் தன்மானப் பேரியக்கத்தைத் தோற்றுவித்தவரும், பகுத்தறிவுப் பகலவனாக விளங்கியவரும் ஆகிய **தந்தை பெரியார்** அவர்கள் உருபா 50/- நன்கொடை வழங்கினார்கள் என்பது பெருமைக் குரிய வரலாறு ஆகும். இவ்வாறு நாட்டார் ஐயா அவர்கள் 1921 -இல் நிறுவ விரும்பிய திருவருள் கல்லூரி, 71 ஆண்டுகள் கழிந்ததற்குப் பிறகு **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி** என்னும் பெயரில் தனித்தமிழ்ப் புலவர் கல்லூரியாகத் தஞ்சாவூரில் **14.10.1992இல்** தொடங்கப் பெற்று இன்று வரையில்

கடந்த பதினைந்து ஆண்டுகளாக மிகச் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இவ்வாறு, தமிழ்நாட்டில் புலவர் ஒருவரின் பெயரால் திருக்கோயில் கட்டப்பெற்றதும், கல்லூரி நிறுவப் பெற்றதும் நம் நாட்டார் ஐயா அவர்களுக்கு மட்டுமே.

இத்தகைய சிறப்புமிக்க நாட்டார் ஐயா அவர்கள் எஸ்.பி.ஜி.கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், கரந்தைப் புலவர் கல்லூரியிலும் பணிபுரிந்த காலத்தில் வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர்சரித்திரம், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும், சோழர் சரித்திரம் என்னும் **ஆறு வரலாற்று நூல்களை** எழுதினார்; அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதல் இருபத்தாறு காதைகள்; திருவிளையாடல் புராணம், இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார்நாற்பது, திரிகடுகம் ஆகிய கீழ்க்கணக்கு நூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய பிற்கால நூல்கள் ஆகிய **பதின்மூன்று நூல்களுக்கு உரை** எழுதினார்; அகத்தியர் தேவாரத்திரட்டு, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய **மூன்று நூல்களுக்கும் உரைத்திருத்தங்கள்** செய்தார். அத்துடன் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய **இலக்கியப் பேருரைகள், கட்டுரைத்திரட்டு என்னும் பெயரில் இரண்டு தொகுதிகளாக** வெளியிடப்பெற்றன; மேலும், நாட்டார் ஐயா அவர்கள் பல்வேறு மாநாடுகளிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலிய தமிழ்க் கழகங்களின் ஆண்டு விழாக்களிலும் ஆற்றிய உரைகளும், பல சங்கங்களின் விழா மலர்களில் எழுதிய கட்டுரைகளும் **நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்வி, கலை, பண்பாட்டு அறக்கட்டளையினரால்** நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கணக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், சொற்பொழிவுக் கட்டுரைகள் என்னும் பெயர்களில் மூன்று நூல்களாக வெளியிடப்பெற்றன. இப்பொழுது, தமிழ் மொழிக் காவலர் திரு கோ.இளவழகன் அவர்களால் மிகவும் அரிதின் முயன்று திரட்டப் பெற்ற நூல்களும், கட்டுரைகளும் தமிழ்மண் பதிப்பகத்தாரால் வெளியிடப் பெறுகின்றன. அவை, பின்வருமாறு

1. திரிகடுகம் - ந.மு.வே.உரை
2. மணிமேகலை வரலாறு
3. தொல்காப்பிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள்
4. நாவலர் நாட்டார் நாட்குறிப்பு முதலியனவாம்.

**இவ்வாறு, நாட்டார் ஐயா அவர்கள் எழுதிய நூல்கள் வெளிவந்த ஆண்டுகளைப் பற்றிய விவரம் வருமாறு:**

1. வேளிர் வரலாற்று ஆராய்ச்சி - 1915
2. நக்கீரர் - 1919
3. கபிலர் - 1921
4. கள்ளர் சரித்திரம் - 1923
5. இன்னா நாற்பது
6. களவழி நாற்பது
7. கார் நாற்பது
8. ஆத்திசூடி
9. கொன்றை வேந்தன் - 1925 (5–12)
10. வெற்றி வேற்கை
11. மூதுரை
12. நல்வழி
13. நன்னெறி
14. கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் - 1926
15. சோழர் சரித்திரம் - 1928
16. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராண உரை - 1925 - 31
17. அகத்தியர் தேவாரத் திரட்டு உரைத்திருத்தம் - 1940
18. தண்டியலங்காரப் பழைய உரைத்திருத்தம் - 1940
19 யாப்பருங்கலக்காரிகை உரைத்திருத்தம் - 1940
20. கட்டுரைத் திரட்டு முதல் தொகுதி - 1941
21. சிலப்பதிகார உரை - 1940-42
22. மணிமேகலை உரை - 1940 -42
23. அகநானூறு உரை - 1942-1944
24. கட்டுரைத் திரட்டு - இரண்டாம் தொகுதி - 1942
25. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கணக் கட்டுரைகள் - 2006
26. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கியக் கட்டுரைகள் - 2006
27. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் சொற்பொழிவுக் கட்டுரைகள் - 2006
28. திரிகடுகம் உரை - 2007

தமிழக அரசு நாட்டார் ஐயா அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியதன் பயனாகப் பல பதிப்பகத்தார்களும்

நாட்டார் நூல்களைப் பதிப்பிக்க முன் வந்துள்ளனர். அவ்வகையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் சிறை சென்ற தமிழ்மொழிக் காவலர் **திரு கோ.இளவழகன் அவர்கள் தம்முடைய தமிழ்மண் பதிப்பகத்தின் வாயிலாக நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் அனைத்தையும் இருபத்து நான்கு தொகுதிகளாக** இப்பொழுது வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. அவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், திருவி.க., யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையா பிள்ளை, வெ.சாமிநாத சர்மா, சாத்தான்குளம் அ. இராகவன், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் முதலிய தமிழறிஞர்களின் நூல்கள் மற்றும் தொல்காப்பிய பழைய உரைகள் அனைத்தையும் முழுமையாக வெளியிட்ட பெருமைக்குரியவர். அவர் இப்பொழுது **நாட்டார் ஐயா** அவர்களின் நூல்கள் அனைத்தையும் ஒரு சேர வெளியிடுவது மிகவும் துணிவான செயல் ஆகும். அவருடைய முயற்சி காரணமாகத் தமிழகப் பதிப்புத்துறை வரலாற்றில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைப் போலவே தமிழ்மண் பதிப்பகமும் பலநூறு ஆண்டுகளுக்குத் தமிழறிஞர்களால் புகழ்ந்து பாராட்டப் பெறும். அவரது **இந்த முயற்சி இமயமலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் வங்காள விரிகுடாவில் வைப்பது போன்ற அரிய பெரிய முயற்சி ஆகும்.**

> ***“ எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்***
> ***திண்ணிய ராகப் பெறின்” (திருக்குறள் 666)***

என்னும் குறளுக்குத் **திரு கோ.இளவழகன்** அவர்களே தக்க தோர் எடுத்துக் காட்டாவார். அவர் வாழ்க, அவர் முயற்சி வெல்க என்று நான் வாயார மனமார வாழ்த்துகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நாட்டார் ஐயாவின் நூல்கள் இடம் பெறுமாறு செய்ய வேண்டுவது தமிழறிஞர்களின் கடமை ஆகும். அதுபோலவே தமிழக அரசால் நடத்தப்பெறும் தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள் அனைத்திலும் ந.மு.வே.நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் இடம்பெறுமாறு செய்யும் படி தமிழக அரசை அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

*17.07.2007* **பேராசிரியர் பி.விருத்தாசலம்**
***நிறுவனர்***

*நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி,*
*கபிலர் நகர், வெண்ணாற்றங்கரை,*
*தஞ்சாவூர் - 613 003. தொ.பேசி : 04362 252971*

# அணிந்துரை

## "இருந்தமிழே உன்னால் இருந்தேன்"
## (நித்தல் நிகழ்ச்சி - அறிமுக உரை)

தமிழே உருவாகிய 'நாவலர்' என்று போற்றிப் புகழப்படும் **பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார்** அவர்களின் நித்தல் நிகழ்ச்சிகள் "**நாட் குறிப்பு**"களாக வெளிவருகின்றன. தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனாரின் "வாழ்க்கைக் குறிப்புகள்" போன்றும் திருஆனந்தரங்கம் பிள்ளை யவர்களின் நாட்குறிப்புப் போன்றும் இந்நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புகளும் தமிழர்க்குப் பெரிதும் பயன் விளைவிக்கும் என்பது திண்ணம்.

தமிழ் இனம் பழமையான இனம். சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் (தமிழ் நாகரிகம்) என்றும் சிந்து வெளி எழுத்துக்கள் திராவிட வடிவங்கள் என்றும் ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர். அண்மையில் மயிலாடுதுறைக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட தொல்பழங்காலக்கற்கருவியும் அதன்கண் காணப்படும் எழுத்துக்களும் சிந்து முதல் காவிரி வரை ஒரு தொடர்ச்சியான நாகரிகம் செழித்து ஓங்கியிருந்துள்ளதென்றும் உணர்த்துகின்றன.

இப்பழமை வாய்ந்த நாகரிகத்தின் சொந்தக்காரர்களாகிய தமிழரின் வரலாறு மறைக்கப்பட்டே வந்துள்ளது. தமிழர் வரலாறுகள் திட்டமிட்டு அழிக்கவும் பட்டுள்ளன. நம்மிடம் தஞ்சைப் பெரியகோயில் உண்டு. ஆனால், அதனைக் கட்டிய **அருண்மொழிவர்மன் வாழ்ந்த அரண்மனை** இல்லை. உலகம் போற்றும் உன்னத காவியங்கள் உண்டு. அவை தோன்றிய காலம் பற்றிய உண்மைச் செய்திகள் இல்லை. உலகப் பொதுமறையாம் திருக்குறள் உண்டு. ஆனால் அதன் ஆசிரியர் பற்றிய கற்பனைகளும் புனைவுகளும் தாம் உண்டு. உண்மை வரலாறு இல்லை; இவையெல்லாம் நம் முன்னோர்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றிய சரியான குறிப்புகளை எழுதி வைக்காமல் போன வரலாற்றுப் பிழைகள்.

*இதனை நன்குணர்ந்த நாட்டாரையா அவர்கள் பழம் பாடல்களின் தரவுகளால் "நக்கீரர்" "கபிலர்" என்னும் புலவர்களின் வரலாற்றையும், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி , கள்ளர் சரித்திரம், சோழர் வரலாறு என்னும் நூல்களின் வாயிலாகத் தமிழக வரலாற்றையும், தமிழர் வரலாற்றையும் ஆய்ந்து நூல்களாகத் தமிழ் கூறும் நல் உலகிற்கு வழங்கினார். பண்டைப்புலவர் வரலாறு, தமிழ், தமிழ்நாடு, தமிழர் வரலாறு ஆகிய இவை அழியாமல் காக்கப்பட வேண்டுமேல் ஆனந்தரங்கம்பிள்ளை, திரு.வி.க. ஆகியோர் நாட்குறிப்புகள் போல் தழிறிஞர்கள் நாட்குறிப்புகள் எழுத வேண்டும் என்னும் மன உந்துதலாலும், வாழ்வில் சத்தியத்தைக் கடைப்பிடித்து ஆன்மவளர்ச்சி பெற்று மனமாசுகள் நீங்க வேண்டியும் இந்நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புகள் எழுதப்படுகின்றன என்று நாட்டார் அவர்களின் குறிப்புத் தெரிவிக்கின்றது.*

***" ஆரணங்காண் என்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்***
***காரணங்காண் என்பர் காமுகர் காம நன்னூலதென்பர்***
***ஏரணங்காண் என்பர் எண்ணெழுத்தென்பர் இன்புலவோர்***
***சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே"***

*என்று மாணிக்க வாசகரின் கோவை நூலுக்குக் கூறியது போல இந்நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புகளைப் படிப்போர் தத்தம் அறிவு, ஒழுக்க நிலைக்கேற்பப் பயன் துய்ப்பர்.*

*இனி, இக்குறிப்புகளால் அறியப்படுவனவற்றுள் சில வற்றைக் காண்போம்.*

***1. காந்தியடிகள்***

*பல இடங்களில் சுதேசமித்திரன் இதழில் வந்த காந்தியடிகள் பற்றிய செய்திகளை விரித்துக் கூறி, அவரை* ***இந்தியத்தாயின் தவப்புதல்வன்*** *எனக் குறிப்பிடு கின்றார்.அவர் மேற்கொண்ட உண்ணாநோன்பு, அகிம்சைக் கோட்பாடு, மனிதநேயப் பண்பு, தீண்டாமை ஒழிப்பு முதலாய அறவழிச் செயல்களைப் பாராட்டுவதையும் காணலாம். எனினும்* ***"வருணங்களைப் புணருத்தாரணம் செய்வேன்"*** *என்று கூறி நால்வகை வருணப்பாகுபாட்டை நியாயப்படுத்தும் கருத்தை மறுத்து* ***"காந்தியடிகள் சொல்லுகின்றபடி நான்கு வருணத்தைப் புணருத்தாரணம் செய்வது இயலாது என்பதே என்கருத்து"*** *என்று தீண்டாமை ஒழியட்டும் ஜாதி இருக்கட்டும் என்ற காந்தியின் கருத்தை மறுத்துள்ளார். (20.3.1925 ஆம் நாள் குறிப்பைக் காண்க.)*

### 2. சேரன்மாதேவி குருகுலச் சச்சரவு:

இது தமிழக வரலாற்றில் குறிப்பிடக்கூடிய நிகழ்வாகும். காங்கிரசு கட்சியின் நிதி உதவியுடன் வ.வே.சு. ஐயரால் நடத்தப் பட்ட இக்குருகுலத்தில் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட சாதிவெறிச் செயல் பெருங் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. காந்தியடிகளாலும் தீர்க்க முடியாத நிலை எய்தியது. இறுதியில் வ.வே.சு. ஐயர் விலக நேர்ந்தது. அவரும் குற்றாலம் அருவியில் தவறி விழுந்து இறக்க நேரிட்டது. குருகுலம் குறித்து "ஐயர் கிளியை வளர்த்துப் பூனையிடம் ஒப்படைத்தது போல்" சில துராசை பிடித்த பார்ப்பனர்வசம் குருகுலம் சிக்கிக் கொண்டது என்று குறித்துள்ளார். மேலும் "ஒரு நல்ல அல்லது பெரிய காரியத்தைச் செய்தற்குப் பல இடையூறுகள் உண்டென்பதை இச்செய்தி நிதர்சன மாக்குகிறது"(26.3.1925) என்றும் நடுவுநிலையுடன் குறிப் பிட்டுள்ளார்.

### 3. சைவப் பெருமை

சைவம் தமிழரின் பழம்பெரும் சமயம் "சைவ சமயம்சாரும் ஊழ்பெறற்கரிது" என்று ஓரிடத்தில் குறித்துள்ளார். சிவனடி யார்களிடத்துக் கொண்டிருந்த இவருடைய பக்தியுணர்வு இவர் ஒரு தொண்டர் சீர் பரவுவார் என்பதனைக் காட்டுகிறது. **சைவத் திருமுறைகளையும், திருவாசகம், திருக்குறள் போன்ற நூல்களையும், வடநாட்டில் பகவத்கீதையைப் பிரதி எடுத்து இலவசமாக வழங்குவது போல வழங்க வேண்டும்** என்ற நாட்டாரின் விருப்பம் 17.4.25 இல் எழுதியுள்ள நாட்குறிப்பில் தெரிகிறது.

### 4. சமயப் பூசல்கள்

வடகலை, தென்கலை, வேதாந்தம்., சித்தாந்தம், இந்து, முசுலீம், சைவம், வைணவம் என்று வேறுபாடு கொண்டு அதன் காரணமாகத் தமிழ்நாட்டில் எழுந்த கலவரங்கள் பற்பல. ஆன்ம ஈடேற்றத்திற்குரிய மதங்கள் ஆன்மாக்களை நிரயத்தில் வீழ்த்தும் சாதனங்களாகச் செய்து கொள்ளப்படுகின்றன என்று இரங்குகின்றார்.

### 5. இதிகாசம்

7.10.1925 ஆம் நாள் குறிப்பில் காணப்படும் செய்தி இன்றைய தமிழக வரலாற்றிற்கு மிகவும் பொருத்தமானதாக உள்ளது. **பிறவாத இராமன் கதையைக் கூறித் தமிழர்களின் 150 ஆண்டுக் கனவைத் தகர்க்கும் மதவாதிகள்**, இதிகாசம் என்றால் என்ன என்பதனைக் காந்தியடிகளின் கூற்றாக நாட்டார்

குறித்துள்ளதை கண்டாவது தங்களைத் திருத்திக் கொள்வது நாட்டிற்கு நல்லது. **கிருட்டினன் உலகத்தில் பிறந்த, வாழ்ந்த ஒருவராகத் தான் நினைக்கவில்லை**. மகாபாரதம் மதப்பற்றை உண்டாக்கக் கூடிய நூல். அதனைச் சரித்திரமாகவும் அதிற்கூறி **இருப்பன எல்லாம் உண்மை என்றும் கொள்ளலாகாது**'' எனக் காந்தியடிகள் கூறுகிறார். இதனை தமிழ்நாட்டுச் சுப்பிரமணியசுவாமிகளும், இராமகோபாலர்களும் படித்து இராமனும் கற்பனையே என்பதனைத் தெளிந்து தமிழ்நாட்டு நலனுக்குத் தீங்கு செய்யாது இருப்பார்களாக.

### 6. திருமுறைகளின் சிறப்பு

"இசை நலமும், பொருள் உணர்ச்சியும், இறைவனிடத்து அன்பும் ஒருங்கு வாய்ந்தவர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடும்பொழுது கேட்பவர்க்குப் பெரும்பயன் விளையும்'' (24.3.1925) என்ற குறிப்பால் நம் தமிழ்த் திருமுறைகளை முறையாக ஆலயங்களில் ஓதினால் கருங்கல் மனங்களும் கரைந்து உலகினர் யாவரும் அன்பர் ஆகுவர் என்னும் உண்மையை உணரலாகும்.

### 7. கவிதைக்கலை

கவிதை ஓர் அரிய கலை; ஓர் அற்புத ஆற்றல், அதனால்தான் "பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிதை இல்லை'' என்றான் பாரதி. கவிதை ஓர் அற்புதுமான ஆயுதம். மூடத்தனமும், தாழ்மையுணர்ச்சியுமுடையவர்களைத் தட்டி எழுப்பி அறிவும் சமத்துவமும் உடையவர்களாக மாற்றவல்லது கவிதை. பாவேந்தர் "கொலை வாளினை எடடா: மிகு கொடியோர் செயல் அறவே'' என்று பாட்டால் எழுச்சியுண்டாக்கினார். 10.4.1925ஆம் நாளிட்ட குறிப்பில் "கவிதா சாமர்த்தியம் உலகத்தில் ஒழிந்து போய் விடாமல் ஒரோவொரு இடங்களில் அருகியேனும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.ஆனால், அது காலத்துக்கேற்றபடியும் உலகிற்குப் பயனளிக்கும் முறையில் இயற்கையை ஒட்டியும் வளர்ச்சியுற வேண்டும்'' என்று எழுதியுள்ளார். இதனால் கவிதை காலத்திற்கு ஏற்றதாகவும் இயற்கையை ஒட்டியதாகவும், பயன் விளைப்பதாகவும் இருக்க வேண்டும் என்ற நாட்டாரின் கவிதைக் கலைக்கோட்பாடு புலனாகிறது.

### 8. சமூக உணர்வு

மனிதன் சமூகமாக வாழ ஆரம்பித்த காலத்தில்தான் மொழியும் நாகரிகமும் தோன்றலாயின. தமிழ்நாட்டில் வெள்ளுடைவேந்தர், பி.தியாகராயர், திரு.வரதராஜுலு நாயுடு போன்ற சான்றோர்கள் தோற்றுவித்த பார்ப்பனர் அல்லாதர்

சங்கமும், தந்தை பெரியார் அவர்களின் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவப் பரப்புரையும் இல்லாது போயிருந்தால் தமிழர்கள் இன்று அடைந்துள்ள ஓரளவு சமத்துவ நிலையும் இல்லாமல் பார்ப்பனீய மேலாண்மையே ஓங்கி இருந்திருக்கும். திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில் ஒரு கிறித்தவரும் பார்ப்பனர் ஒருவரும் போட்டியிட்டனர். நாட்டார் இந்து என்ற முறையில் பார்ப்பனருக்கு வாக்களித்திருக்க வேண்டும்.ஆனால், கிறித்தவருக்கு வாக்களித்து விட்டுப் பின்வருமாறு எழுதுகிறார். "இந்நாட்டில் பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பனருக்கு சமானமாய் உத்தியோகத் துறையிலும், நாட்டாண்மையிலும் நகராண்மைக் கழகம் முதலியவற்றிலும் உரிமை பெறுகிற வரையில் பிராமணர்க்கு 'வோட் ' செய்வது பாதகம். முன்னேறிய பார்ப்பனர்கள் இப்பொழுது விழித்து எழுந்து முன்னேற விரும்புகிற பார்ப்பனர் அல்லாதார்க்குப் பெரிய தடையாக எதிர்த்து நிற்கின்றனர்". அன்றெழுதிய இத்தொடர்கள் இட ஒதுக்கீட்டிற்கு எதிராகவும் தமிழ் அர்ச்சனைக் கெதிராகவும் உச்சநீதிமன்றத் தடை ஆணை பெற்றுள்ளவர்களின் சூழ்ச்சித் திறனை உணர்ந்து அன்றே எழுதிய சத்திய உரைகளாம். (11.9.25 குறிப்பு)

### 9. தமிழ்ப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பகைவர்களும்

தமிழ்நாட்டு வளர்ச்சி நெறி அமைச்சர் T.N. சிவஞானம் பிள்ளையவர்கள் தலைமையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் காண ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் நாட்டார் அவர்களும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். இக்குழு பலமுறை கூடிற்று, திரு.டி.தேசிகாச்சாரியால் ஒருமுறை கூடியபொழுது **"தமிழ்" என்னும் சொல் நாட்டைக் குறிக்காது. மொழியை மட்டுமே குறிக்கும் என்று தடையெழுப்பப்பட்டது. நாட்டார் தமிழ் மொழியையும் நாட்டையும் குறிக்கும் என்று தக்கவாறு மறுத்துரைத்துள்ளார்.** தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இன்றியமை யாமை குறித்துக் கேட்புரைக்கு எழுதிய குறிப்பில் தக்கவாறு விடையும் அளித்துள்ளார். இவை குறித்து நித்தல் நிகழ்ச்சிக் குறிப்பில் பின்வருமாறு குறிப்பெழுதியுள்ளார். **"வெள்ளைக் காரர்கள் தமிழுக்குப் பெருமை கொடுப்பதில் எதிரிடையாய் இல்லை என்றும் பிராமணர்களே எதிரிடையாய் இருக்கிறார்கள்** என்றும் இக்கூட்டத்தில் அறிந்தேன்." தமிழால் தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் இதயத்தில் சமற்கிருதமே இருந்தது என்பது இதனால் புலனாகின்றது. இதனால் தானோ என்னவோ தன்னை வழியனுப்ப வந்த நாட்டார் அவர்களின்

இருகரங்களையும் பிடித்துக் கொண்டு அமைச்சர் டி.என். சிவஞானம் பிள்ளையவர்கள் "நாட்டார் நீங்கள் உடல் நலமுடன் நீண்டநாள் வாழவேண்டும்" என்று கூறிய குறிப்பையும் காண முடிகிறது. (12.10.1925 குறிப்பு)

**10. சில அரிய செய்திகள்**

1. **டார்ஜிலிங் அருகில் உள்ள சிவலிங்கமலை தான் மனிதன் தோன்றிய இடமாகலாம்.** (பக்கம். 65)

2. தமிழ் நாவலாசிரியர் அ.மாதவையா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக செனட் கூட்டத்தில் செனட் சபையிலேயே நாற்காலியில் அமர்ந்தபடியே இறந்தார்.

3. சுவிட்சர்லாந்து நாட்டில் 150 வருடங்களுக்கு முன் சைவசித்தாந்த சபை ஏற்பட்டுள்ளது.

4. அக்காலத்தில் வெளிவந்த 1. தாய்நாடு 2. அன்பானந்தன் 3. மறவர்நேசன் 4)சத்திரிய மித்திரன் 5) பாலபாரதி 6) தேசபக்தன் 7) சைவபரிபாலனம் 8)தமிழ் நேசன் 9) தமிழர் போன்று பல பத்திரிக்கைகளின் குறிப்புகளும் தாய்நாடு பத்திரிக்கைக்கு கட்டுரை எழுதிய செய்தியும் "தமிழ்ப்பொழில்" என்ற பெயர் நாட்டார் அவர்களால் வைக்கப்பட்டதென்பதும் அறிய வருகின்றன.

**11. உரை மாண்பும் மறைவும்**

நன்னூல் கூறும் நல்லாசிரியர் இலக்கணம் யாவும் அமையப் பெற்ற நாட்டார் அவர்கள் பாடஞ் சொல்வதிலும், உரை எழுதுவதிலும் ஆராய்ச்சி நூல்கள் வரைவதிலும் தன் உடலை வருத்தி நோயின் துன்பத்தை மறந்து வாழ்ந்தார். ஆஸ்துமா என்னும் நோயால் உற்ற துன்பங்களைப் படிக்கும் பொழுது கண்கள் குளமாகும். பரிமேலழகர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், இளம்பூரணர் என்னும் உரையாளர்கள் ஒருங்கே உயிர்த்து வடிவு எடுத்த "ஐம்பெருங்குழு" நாட்டார் என்றால் அது மிகையாகாது. திருக்குறள், பதிற்றுப் பத்து ஆகியவற்றிற்கு உரைவரைய விரும்பிய நாட்டாரையா அவர்களைச் சேரர் வரலாற்றையும் 'வாயுறை வாழ்த்தி'ன் விரிவுரையையும் கேட்கவே ஆலவாய் அமர்ந்த அருட்செல்வன் தன் திருவடி நீழலில் அறுபதாம் அகவை நிறையும் முன்னரே அழைத்துக் கொண்டான் போலும். இது தமிழின் சோகம். தமிழரின் தவக்குறை.

இவ்வறிமுகவுரையை நாட்டார் அவர்களின் அன்பு மாணவர் கோலாலம்பூர் திருஆர்.நரசிம்ம ஐயங்கார் அவர்களின் மடலுடன்

முடிப்பது சாலவும் பொருத்த முடைத்து."ஐயா, உங்களை எண்ணும் போதெல்லாம் என் மனதிற்குத் தானாகவே என்னை அறியாமல் மூவர்களுடைய ஞாபகம் உடனே வந்துவிடுகிறது. மனம் நெடிது ஓடிப் பிறகு ஓரிடத்தில் அமருங்காலை என்ன காரணம் கொண்டு அவர்களையும் நுங்களையும் என் ஏழை மனம் நினைக்கின்ற தென்று கூற முடியாது. அம்மூவர்களுடைய பெயர் சடகோபன், வள்ளுவன், காந்தி. ஆழ்வாரைச் சேவிக்க ஓர் ஆசை உண்டு. வள்ளுவனை வணங்க ஓர் எண்ணமுண்டு. காந்தியைத் தரிசிக்க ஓர் பிரியமுண்டு. எனில் நுங்களைக் காணவோர் நெஞ்ச முண்டு". இவ்வுரை நாட்டாரைத் தரிசிக்க எல்லோர் நெஞ்சையும் தூண்டுகிறது.

தமிழர்கள் அனைவரும் நாட்டாரைக் கருத்துலகில் காண இந்நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புகள் பயன்படும். இத்தனை காலமும் இக்குறிப்புகளைப் பாதுகாத்து வைத்த எனக்கு வாய்த்த நற்பேறாக உள்ள என் மனைவியும் நாட்டார் ஐயா அவர்களின் மகள் வழிப் பெயர்த்தி யுமாகிய திருமதி க. தையல்நாயகிக்கு என் வாழ்த்துக்களும் நன்றியும். இதனையும் நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் யாவற்றையும் தொகுத்து வெளியிடும் "**தமிழ்மண்**" பதிப்பகத்தாருக்கும், அதன் உரிமையாளர் **திரு.இளவழகனார்** அவர்கட்கும் என் வணக்கங்கள்.

இதற்கு ஒரு முன்னுரை எழுதுமாறு என்னைப் பணித்த இளவழகனார்க்கும் எனக்குக் கிட்டிய இப்பெரும்பேற்றிற்கும் கைமாறு என்ன செய்ய இயலும். நன்றி.

வணக்கம்.

**கோ.கணேசமூர்த்தி**

*தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)*

*9, புதிய வீட்டுவசதி வாரிய குடியிருப்பு*

*தஞ்சாவூர்- 613 005.*

*தொ.பேசி: 226390*

*19.10.2007*

# பதிப்புரை

*முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் நம் தமிழ் மொழியின் ஈடற்ற அறிவுச் செல்வங் களை யெல்லாம் தேடியெடுத்துத் உலகெங்கும் வாழும் தமிழர்க்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு* ***'தமிழ்மண் பதிப்பகம்'*** *தொடங்கப் பெற்றது.*

*தாய்மொழியாம் தமிழுக்கு வளம் சேர்ப்பதை முதன்மை யாகக் கொண்டும், இனநலம் காப்பதைக் கடமையாகக் கொண்டும் மிகுந்த தமிழுணர்வோடு தமிழ் நூல் பதிப்பில் எம் பதிப்புச் சுவடுகளைக் கால் பதித்து வருகிறோம்.*

*தமிழ் , தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு வடிவம் தந்து தமிழுக்கு அளப்பரிய தொண்டு செய்த அறிஞர்கள் எழுதிய நூல்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்து ஒரே வீச்சில் தொகை தொகையாய் எம் பதிப்பகம் இதுகாறும் வெளியிட்டு வருவதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.*

***மொழிநூல் கதிரவன் பாவாணரின்*** *அறிவுச் செல்வங்களை யெல்லாம் ஒரே நேரத்தில் மறுபதிப்புச் செய்து வெளியிட்டதால் தமிழ் உலகம் என்னை அடையாளம் கண்டது; என் மதிப்பை உயர்த்தியது.*

*நல்ல தமிழ் நூல்களைத் தமிழர்களுக்கு அளிக்கும் போதெல்லாம் எனக்குப் புத்துணர்ச்சியும் பெருமகிழ்வும் ஏற்படுகின்றன. பதிப்புத் துறையில் துறைதோறும் மேலும் பல ஆக்கப் பணிகளைச் செய்ய உறுதி கொள்கிறேன்.*

*தமிழ்நூல் பதிப்பில் எம் பதிப்பகம் இதுகாறும் ஆற்றிய தமிழ்ப் பணியை எண்ணிப் பார்க்கிறேன். நெஞ்சில் ஒரு நிறைவு. இனிச் செய்ய வேண்டிய பணியை எண்ணிப் பார்க்கிறேன். தயக்கமும் கவலையும் மேலிட்டாலும், தக்க தமிழ்ச் சான்றோர்கள், நண்பர்கள் துணையோடு அதனைச் செய்து முடிப்பேன் என்ற உறுதியும் தெம்பும் எனக்கு ஏற்படுகின்றன. எனவே, முன்னிலும் வேகமாக என் பதிப்புப் பணிகளைத் தொடர்கின்றேன்.*

***“தொண்டு செய்வாய்! தமிழுக்கு..., செயல் செய்வாய் தமிழுக்கு......,ஊழியஞ் செய் தமிழுக்கு......., பணி செய்வாய்! தமிழுக்கு........, இதுதான் நீ செயத் தக்க எப்பணிக்கும் முதல் பணியாம்.”*** எனும் பாவேந்தர் வரிகளின் உணர்வுகளைத் தாங்கித், தமிழ், தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்தின் பின்னணியோடு வளர்ந்த நான் தாய்மொழிவழிக் கல்வியின் மேன்மையை வலியுறுத்திய **நாவலர் நாட்டாரின்** நூல்களை தமிழர் தம் கைகளில் தவழ விடுகிறேன்.

## நாட்டார் யார்?

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் **தமிழ்த் தேரை** இழுத்த பெருமக்களுள் **நாவலர் ந.மு.வே. நாட்டாரும்** ஒருவர்; தமிழுக்கு வளம் சேர்த்த அறிஞர் பெருமக்களுள் முன்வரிசையில் வைத்துப் போற்றத் தக்க பெருமையர்; “சங்கத் தமிழ் நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர்; பன்னூல் அறிவும் பழந்தமிழ்ப் புலமையும் மிக்கவர்; இணையற்ற உரையாசிரியர்; நூலாசிரியர்; வரலாற்று ஆய்வாளர்; ஆய்வறிஞர்; தமிழ் அறிஞர்கள் நடுவில் என்றும் பொன்றாப் புகழுடன் நிலைத்து நிற்பவர்” என்று அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர் களால் போற்றப் பெற்றவர்.

மேலும், நாட்டாரையா அவர்கள் தமிழ் நெறியையும், தமிழர் மரபையும் உலகுக்கு உணர்த்திய உரைவளச் செம்மல்; தமிழுணர்வின் - தமிழாற்றலின் வலிமையை வெளிப்படுத்திய தமிழ்ப் பேராசான்; தமிழறிவின் வற்றாத வளத்துக்குத் தமிழ் வள்ளலாய் வாழ்ந்தவர்; தமிழ்ப் பண்பாட்டு வடிவங்களுக்கு அடையாளமாகத் திகழ்ந்தவர்; தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர்; தன்னலம் கருதாது தமிழ் நலம் கருதியவர். தம்மை முன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தித் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்த்த இப்பெருந் தமிழறிஞரின் நூல்களை எம் பதிப்பகம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

பன்னருஞ் சிறப்புக்கள் நிறைந்த பழந்தமிழ்க் கருவூலங் களை ஒருசேரத் தொகுத்துத் தமிழ் உலகிற்கு வழங்க வேண்டும் என்று எனக்கு வழிகாட்டியவர் செந்தமிழறிஞர், கரந்தைப் புலவர் கல்லூரியின் மேனாள் முதல்வர், நாவலர் ந.மு.வே. நாட்டார் திருவருள் கல்லூரியின் நிறுவனர் பேராசிரியர் **பி.விருத்தாசலம்** ஆவார். அவர் ‘கெடல்எங்கே தமிழின்நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க! ’ எனும் பாவேந்தர் வரிகளுக்கு

நம்மிடையே இன்று சாட்சியாக வாழ்ந்து கொண்டிருப்பவர்; வாழும் தமிழறிஞர்களில் நான் வணங்கும் சான்றோருள் ஒருவர். இப் பெருமகனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டும் இவருடைய முழு ஒத்துழைப்புடனும், மேற்பார்வையுடனும் **நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்** என்னும் தலைப்பில் நாட்டாரையா நூல்கள் அனைத்தையும் **24 தொகுதிகளாகத்** தமிழ் உலகுக்குப் பொற் குவியலாகத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

குமுகாய மாற்றத்துக்கு அடிப்படையானது தாய்மொழி வழிக் கல்வி ஒன்றுதான். இக்கல்விதான் மக்களுக்கு ஊற்றுக் கண். தாய்மொழி வழிக் கல்விதான் குமுகாயத்தின் முகத்தைக் காட்டவல்லது; மக்களை உயர்த்த வல்லது என்னும் உறுதியான நிலைப்பாடுடைய இப்பெருந்தமிழறிஞரின் நூல்களை வெளியிடு வதில் பெருமைப் படுகிறேன். ‘தாய்மொழியே சிந்தனைக்கு மலையூற்று’ என்னும் பாவேந்தரின் சிந்தனையைத் தம் நெஞ்சில் தாங்கியவர் பேராசிரியர் விருத்தாசலனார்.இவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இப்பழந்தமிழ்க் கருவூலங்களை வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

தாய்மொழியைப் புறக்கணித்த எந்த இனமும் , எந்த நாடும், வளர்ந்ததாகவோ, வாழ்ந்ததாகவோ, செழித்ததாகவோ வரலாறு இல்லை. வளர்ந்து முன்னேறிய நாடுகளின் மக்கள் எல்லாம் தம் தாய்மொழியின் மூலம்தான் கல்வி கற்று உலகரங்கில் உயர்ந்து நிற்கின்றனர் என்பதைத் தமிழர்கள் இனியேனும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசோ, பல்கலைக் கழகங்களோ, பேரியக்கங்களோ, அறநிறுவனங்களோ, பெருஞ்செல்வர்களோ அறிஞர்கள் குழு அமைத்துச் செய்ய வேண்டிய பெரும்பணியைப் பெரும் பொருள் நெருக்கடிகளுக்கு இடையில் செய்ய முன் வந்துள்ளேன். பழந்தமிழ்க் கருவூலமான நாட்டாரின் இவ்வருந்தமிழ்ப் புதையல்கள் தமிழர்கள் இல்லந்தோறும் இருப்பதற்கு உங்களின் பங்களிப்பையும் செய்ய முன் வாருங்கள். மொழி, இன நாட்டின் அடையாளங்களை மீட்டெடுக்கும் எம் தமிழ்ப் பணிக்குக் கைகொடுத்து உதவுங்கள். இந் நூல்கள் அனைத்தும் தமிழ் மக்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் வைத்துப் போற்றத் தக்க - பாதுக்காக்கத்தக்க கருவூலங்கள் ஆகும்.

நாவலர் நாட்டார் தமிழ் உரைகளுக்கு அணிந்துரை தந்து எம் தமிழ்ப் பணிக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் பேராசிரியர்**பி.விருத்தாசலம், புலவர் இரா.இளங்குமரனார்,**

**முனைவர் சோ.ந.கந்தசாமி, முனைவர் அ.தட்சிணாமூர்த்தி, புலவர் செந்தலை ந. கவுதமன், ச.சிவசங்கரன் , நாட்டாரின் மரபு வழி உறவினர் திருமிகுகுரு.செயத்துங்கன், பேரா. கோ. கணேசமூர்த்தி** ஆகியோர்க்கு எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

நாட்டார் தமிழ்க் கல்லூரியின் பேராசிரியப் பெரு மக்களும், கல்லூரி மாணவர்களும் நாட்டார் தமிழ் உரைகள் பிழையற்ற செம்பதிப்பாக வெளிவருவதற்குப் பல்லாற்றானும் துணையிருந்தனர். இவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இப்பதிப்பில் பிழை காணின் சுட்டி எழுதுங்கள்: சொல்லுங்கள். அடுத்த பதிப்பில் பிழை நீக்கி நிறைவு செய்வேன்.

இந்நூல் ஆக்கத்திற்கு இரவும் பகலும் என்னோடு இருந்து, எனக்குப் பெருந்துணை செய்த எம் பதிப்பக ஊழியர்கள் அனைவரையும் இந்நேரத்தில் நன்றி உணர்வோடு பாராட்டு கின்றேன்.

சென்னை இங்ஙனம்,
3-10-2007 கோ.இளவழகன்

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பதிப்பாசிரியர் உரை | iii |
| அணிந்துரை | xi |
| பதிப்புரை | xvi |
| நாட்குறிப்புக்கள் | 1-290 |

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்
124 ஆம் ஆண்டு
நினைவு வெளியீடு

# நாட்டார் நாட்குறிப்புக்கள்

19.3.25 முதல் 31.12.1927

**திருமிகு. கோ. கணேசமூர்த்தி** அவர்கள் நாட்டார் அய்யாவின் மகள் வழிப் பெயர்த்தி திருமதி. **க. தையல் நாயகியை** திருமணம் செய்து கொண்டவர். பல ஆண்டு காலம் கையெழுத்துப் படியாக இருந்த **நாட்டாரின் நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புக்களை** பாதுகாத்து வைத்திருந்தார். இதனை எங்களுக்குக் கொடுத்து உதவினார். அவருக்கு எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றி.

## வல்லுநர் குழு

1. முனைவர் கு.திருமாறன்
2. முனைவர் இரா.கலியபெருமாள்
3. பேராசிரியர் சண்முக.மாரி ஐயா
4. பேராசிரியர் நா.பெரியசாமி
5. முனைவர் பி.தமிழகன்
6. முனைவர் மு.இளமுருகன்

திருச்சிற்றம்பலம்

**நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க**
**இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க**
**கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க!**

**அன்பே சிவம்**

*கலி 5025, (கி. பி. 1925 மார்ச்சு மாதம் 19) இரத்தாட்சி, பங்குனி, 6ஆம் தேதி வியாழக்கிழமை, உத்திராடம் கூடிய நன்னாளில் சிங்க லக்கினத்தில் இக்குறிப்பு* **தொடங்கப்** *பெறுகின்றது.*

## 19 - 3 - 1925

*நான் நேற்று மாலையில் கோச்செங்கட் சோழர் சரித்திரம் எழுதிக் கொண்டிருந்தேன். அதில் 'ஒரு வெள்ளானை .... நீலகண்டராகிய பெருமானை நித்தலும் வழிபாடு செய் தொழுகாநின்றது. அதனால் திருஆனைக்கா என்னும் பெயரும் அத்தலத்திற்கு உளதாகி நிலவுகின்றது' என எழுதிக் கொண்டிருக்கும் பொழுது திருவானைக்காக் கோயிற் றிருப்பணி புரியும் யானையானது ஒருநிமித்தத்தால் அலங்கரிக்கப்பெற்று வந்தது என் வீட்டிற்கெதிரே எனக்குக் காட்சியளித்துப் பெரியதோர் இறும்பூது விளைத்தது. நாம் பசுபோதங் கொண்டு ஆராயும் பொழுது கடவுளுண்மையில் நமக்குளவாகும் ஐயப்பாடுகள் இத்தன்மையனவாக நிகழும் திருவருள் நிகழ்ச்சி பலவற்றால் நம்மை விட்டொழிகின்றன. கடவுள் எவ்வளவு அரியவரோ அவ்வளவு எளியவராகவும் விளங்கின்றார். (1)*

*இன்று பகலில், ஏகாலியர் குலத்தில் உதித்தவரும், தேவாரம் பெற்ற திருப்பதிகளில் இரண்டு மூன்றொழிய எல்லாம் தரிசித்த வரும் ஆகிய மாரியம்மன் கோயில் முத்து என்னும் சிவனடியார் என் இல்லத்திற்கு வந்திருக்க அவருடன் உண்ணும் பேறு எனக்குளதாயிற்று. அவர் தமது பதினெட்டாவது வயதி லிருந்து சுமார் நாற்பத்தைந்து வருடமாகச் சிவஸ்தல யாத்திரை செய்தலையே கடனாகக் கொண்ட உத்தம சிவபக்தர். உணவுண்ட பின் இரண்டு மூன்று நாழிகை அவருடன் பேசிக் கொண்டிருந்தேன். நாயன்மார்களைக் குறித்தும் சிவ ஸ்தலங்களைக் குறித்தும் பல*

*நுட்பமான விஷயங்களை அவர் அறிந்து கொண்டிருக்கின்றனர். எல்லாரும் இன்புற வேண்டு மென்னும் விரிந்த எண்ணம் அவர்பால் இருக்கின்றது. திருவானைக்காவில் சிவபெருமானைப் பூசித்த யானையே சிறப்புலிநாயனாராகத் தோன்றியது என்னுங் குறிப்பு அவரால் எனக்குணர்த்தப் பெற்றது. நான் அவரை ஒரு பெரியாரென உணர்ந்தும் அவருக்குத் தாழ்ந்து நின்றொழுகலாகாத சிறுமை யுடையவனாயினேன். இத்தகைய தீங்குகள் என்னை விட்டொ ழியுமாறு பெருமான் திருவருள் புரியுங் காலம்யாதோ? (2)*

**20 - 3 - 1925**

*இன்று பத்திரிகையில், மகாத்மா காந்தி கேரள நாட்டில் வைக்கம் சத்தியாக்கிரக நிகழ்ச்சிக்குச் சென்று, பற்பல இடங் களைச் சந்தித்து வரும் வழியில் ஒரு வடமொழிக் கல்லூரியின் உபசாரம்பெற்ற வரலாறு காணப்பட்டது. அதில் முக்கியமான குறிப்புக்கள் சில பின் வருவன: ஆல்வாய் ஆற்றங்கரையில் ஒரு சிறந்த இடத்தில் வற்கலை சிவகிரி மடத்திற்குச் சொந்தமான அத்வைத ஆச்சிரமம் ஒன்றுளது. அதில் ஒரு சம்ஸ்கிருதப் பள்ளிக்கூடமும் விடுதியும் இருக்கின்றன. எல்லா வகுப்புக் களையும் சேர்ந்தவர்களாக இருநூறு மாணவர்கள் இதிற் பயிற்சி பெறுகின்றனர். இந்து, நாயர், தீயர், புலையர் முதலிய யாவரும் ஒரேபொதுவான உணவு விடுதியிலிருக்கின்றனர். ஆசிரியர்களும் பல வகுப்பினர். புலைய மாணவர்கள் காந்தியடி கட்குச் சம்ஸ்கிருதத்தில் ஓர் உபசாரப் பத்திரம் படித்தனர். காந்தியடிகள் பதில் கூறுகையில் "இந்த ஆச்சிரமத்தின் கொள்கை ஏக ஜாதி, ஏக மதம் என அறிகின்றேன். இந்த விருப்பம் நமது கைக்கு எட்டக்கூடியதன்றென எனக்குத் தோன்றுகின்றது. கடவுள் ஒருவர் என்ற கொள்கையை நான் உணரக்கூடும். நாம் கோடிக் கணக்கான வழிகளில் வழிபட்டாலும் நம்முடைய பக்தி யெல்லாம் ஒருவரிடமே போய்ச் சேருகின்றது. மனதிற் பலவகை யிருப்பதால் மனித வருக்கம் உள்ள வரை வேற்றுமை இருந்தே தீரும். என்னைச் சுற்றிப் பார்க்கும்பொழுது இயற்கையின் சொரூபம் ஆயிரக்கணக்கான உருவமாகத் தோன்றுகிறது. அதனாற்றான் கடவுள் பலராகி விடுகின்றார். மனித வர்க்கத்தின் எந்த நிலையிலாவது ஒரே மதமாக இருக்க முடியுமென்று நினைப்பது இயற்கையைத் தலைகீழாகப் பார்ப்பதாகும். நான் பிறப்பில் விக்கிரக ஆராதனைக்காரன். அவதாரங்களிலும் மறுபிறவிகளிலும் எனக்கு மிகுந்த நம்பிக்கை யுண்டு. எனினும் அவற்றில் நம்பிக்கையில்லாத முஸல்மான்கள் அவர்கள்*

விருப்பப்படி வழிபட நான் சம்மதிக்க வேண்டும். எனக்கு அவதாரத்தில் நம்பிக்கை இருந்தாலும் கிறிஸ்துதான் பூரண தெய்வத்தன்மை பொருந்தியவரென்பதிலாவது, அவர்தான் கடவுளின் குமாரர் என்பதிலாவது எனக்கு நம்பிக்கையில்லை. எனினும் கிறிஸ்தவர்கள் அவ்வாறு நம்புவதை நான் தடை செய்யக்கூடாது". மற்றும் காந்தியடிகள் எழுதிய கட்டுரை இன்று பத்திரிகையில் வெளிவந்ததில் அவர் தீண்டாமைக்கு மாத்திரமே மாறுபட்டவரென்றும், வருணா சிரமக் கொள்கையைப் பூரணமாக ஒத்துக்கொள்பவ ரென்றும், வருணாசிரம முறை சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் ஒத்ததெனக் கருதுபவரென்றும் வெளியாகின்றது. அவர் கூறுவது, "வருணாச்சிரம முறை சாஸ்திரீயமான ஆதாரத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். தருக்க வழியாகப் பார்க்குமிடத்தும் அது நியாய விரோதமானதாத் தோன்றவில்லை. அதனால் சில பாதகங்கள் ஏற்படலாம். ஆனால் சாதகங்களும் ஏற்படுகின்றன. பிராமணன் தனது சூத்திர சகோதரருக்கு உழைப்பதை அது தடுக்கவில்லை. சாதிப் பாகுபாடானது சமூக சம்பந்தமாயும் ஆன்மார்த்த சம்பந்தமாயும் உள்ள கட்டுப் பாடுகளை யேற்படுத்துகிறது. சாதிப்பாகுபாட்டின் முறையைப் பெருக்கிக் கொண்டே போக முடியாது. அதனை நான்கு வருணத்துடன் நிறுத்திவிட நான் விரும்புகிறேன். இதற்குமேல் அதிகமான பாகுபாடுகளைச் செய்துகொண்டு போவது கேட்டையே விளைவிக்கும். நான் வருணங்களைச் சீர்தி ருத்துவேன். அதிலுள்ள கேடுகளை நீக்குவேன். ஆனால் வருணாசிரம முறையை ரத்து செய்ய எவ்விதக் காரணமும் இருப்பதாக எனக்குத் தோற்றவில்லை. என்னைப் பொறுத்த வரையில் ஏற்றத்தாழ்வுகள் எதுவும் கிடையாது. மற்றைச் சாதியினர் எல்லோரும் தம்மைவிடத் தாழ்ந்தவர்களென்றும், தாமே உயர்ந்தவரேன்றும் கருதிக் கொள்ளும் பிராமணர் பிராமணராக மாட்டார். அவர் முதன்மையானவராகக் கருதப் படுவதாக இருந்தால் அதற்கு அவர் செய்யும் சேவையே காரண மாக இருத்தல் வேண்டும்" என்பது. கலப்பு விவாகத்திலும் அவருக்கு உடன்பாடில்லையெனத் தெரிகிறது. அது குறித்து அவர் எழுதும் பொழுது, "உலகெல்லாம் ஒரே மதமாக இருக்கும் காலம் வருமென்று என் நினைவிற்குத் தோன்றவே யில்லை. ஆதலால் மத சம்பந்தமான தடை இருந்து கொண்டே இருக்கும். ஜனங்கள் தங்கள் மதத்தினர்க்குள்ளாகவே மணஞ்செய்து கொள்வர். அது போன்றே ஸ்தல சம்பந்தமான கட்டுப்பாடும், சாதி சம்பந்தமான வரையறையும் சமூக

சௌகரியத்திற்காக இருந்து கொண்டே வரும் . . . கல்யாணம் ஒரு சேவை யாகாது. அஃது ஆடவரோ மகளிரோ தங்களுக்காகத் தேடிக் கொள்ளும் சௌகரியமே. சௌகரியத்திற்குரிய துறையைக் கட்டுப் படுத்துவதிலோ, அன்றி வாழ்க்கையின் போக்கையே மாற்றி விடும் படியாக இருக்கும் கல்யாண விஷயத்தில் தேர்ந்தெடுப் பதற்குரிய இனங்களையும் ஒரு வரையறைக்குட் படுத்துவதிலோ ஏதேனும் கெடுதியிருப்பதாக நான் கருதவில்லை" என்று கூறுகின்றார். காந்தியடிகள் தாம் அறிந்த உண்மைக்கு மாறாகப் பேசுபவரல்லர். அவர் மிகுந்த ஆராய்ச்சியுடனும் தெளிவுடனும் பேசுகின்றாரென்பதிலும் ஐயமில்லை. ஆயினும் அவர் கூறுவன வற்றை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சில கொள்கைகள் ஒருபுடை ஒவ்வாதன வாக நமக்குத் தோன்று கின்றன. ஆச்சிரமம் என்பது எல்லாருக்கும் உரிய நிலைவேறு பாடாகலின் அதனை வருணத் துடன் கலக்க வேண்டுவதில்லை. வருணப் பாகுபாடு ஆதியில் உயர்ந்த நோக்கத்துடனேயே ஏற்பட்டிருத்தல் கூடும். நான்கு சாதியினும் அதிகமான பிரிவுகள் உண்டாதற்கு ஸ்மிருதி கர்த்தாக்களே இடங்கொடுத்து விட்டார்கள். சமுதாய வாழ்க்கையின் பொருட்டு ஏற்பட்ட பிரிவுகள் உயர்வு தாழ்வு களுக்குக் காரணமாகி விட்டன. இப்பொழுது சாஸ்திரப்படி சாதியே இல்லையென்றாவது அநேக சாதிகள் உண்டென் றாவது கொள்ளவேண்டிய நிலைமையில் நாடு இருக்கின்றது. சென்றதை விட்டுவிட்டு இனி எல்லா வகுப்பையும் நான்கு வருணங்கட்கு உட்படுத்திச் சீர்திருத்துவது சாத்தியமா என்று பார்ப்போம். நான்கு வருணத்திற்கும் பங்கிட்டு வைத்துள்ள தொழில்கள் உலகிற்கு இன்றியமையாதவையே. அவை இயற்கையுடன் பொருந்தி யவையும் ஆகும். ஆனால் இப் பொழுது வருணமென்பது பிறப்பினாலேயே கொள்ளத் தக்கதா? அவ்வப்பொழுது செய்யும் தொழில்களுக்கேற்றபடி நிர்ணயித்துக் கொள்ளக் கூடியதா? என ஆலோசித்துப் பார்க்க வேண்டும். தொழில் பற்றியென்றால் இப்பொழுது யாரையும் இன்ன தொழில்தான் செய்யவேண்டுமென்று கட்டுப்படுத்த முடியாது. கட்டுப் படுத்துவது நியாயமாகவும் தோன்றவில்லை. ஆகலின், எப்படி ஒருவரே வெவ்வேறு நிலையில் வேறு வேறு ஆச்சிரமி எனப்படுகின்றாரோ அப்படியே வெவ்வேறு தொழில் செய்யும் பொழுது ஒருவரே வேறுவேறு வருணத்தவராகவும் பேசப்படுதற்குரியராவர். அங்ஙனம் பேசப்படுதலினாலே வரக் கடவதொரு நன்மையும் இல்லை. இப்பிறப்பினாலே வருணங் களை வரையறை செய்யலாமென்றால் இப்பொழுது சூத்திரர்

முதலிய பெயரைத் தாங்குதற்கு யாரும் விருப்பமுடையவ ராக இல்லை. இன்னின்னார் இன்ன வருணத்தினர் என இப்பொழுது வரையறுப்பது முடியக்கூடிய காரியமாயில்லை. மேலும் தொழில் நியமத்திற்கு உட்படாதபொழுது வருணத்தின் பெயராற்றான் பயன் என்னை? ஆகவே காந்தியடிகள் சொல்லு கின்றபடி நான்கு வருணத்தைப் புனருத்தாரணஞ் செய்வது இனி இயலுங் காரியமன்றென்பதே என் கருத்து. எல்லாம் ஒரே வகுப்பாக மாறுவதும் இயற்கையன்று. சமூக ஒப்புரவாண்மை நன்கு நடைபெறுதற்கு இனி நாம் செய்யத்தக்கன நமக்குள் வகுப்பு வேற்றுமையிருப்பினும், பழக்க வழக்கங்களில் சிற்சில மாறு பாடுகள் இருப்பினும் ஒவ்வொருவரும் பிறரை மதிக்கவும் பிறரை நேசிக்கவும், பிறருக்காக ஊழியஞ் செய்யவும் மனமார ஒத்துக்கொள்ளக்கூடிய நெறிகளைக் கண்டுபிடித்தலும், அந் நெறியில் பயிற்றுவித்தலுமேயாம். வகுப்பு வேற்றுமை இனி மேலும் பெருகாமலிருப்பதற்கும், ஒரு வகுப்பினுள்ளேயே காரண மின்றியும், சிறு காரணத்தாலும், போலிக்காரணத்தாலும் உண்டாகியிருக்கின்ற உட்பிரிவுகள் ஒழிவதற்கும் கூடிய வரையில் முயலுவதும் கடனாகும். அதன்பொருட்டுத், தங்கள் ஆன்மார்த்த வாழ்வைப் பாதிக்கக்கூடாத நிலைமையில் சில பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளுதல் நலமாகும்.

முன்பு ஒருநாள் மைசூர் மகாராஜா நூல் நூற்கிறார் என்று பத்திரிகையில் படித்தேன். இன்று வந்த பத்திரிகையில் கொச்சி மாஜிமகாராஜா நூல் நூற்கிறார் என்றும், கதர் உடுத்துகிறார் என்றும், அவர் 18ஆம் தேதி மகாத்மா காந்தியைப் பூரண கும்பம் முதலிய மரியாதைகளுடன் வரவேற்றார் என்றும் படித் தறிந்தேன். ‘தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய - மன்னுயி ரெல்லாந் தொழும்’ என்பது பொய்யாமொழியன்றோ?

**21 - 3 - 1925**

இன்று பத்திரிகையில் பின்வருஞ்செய்திகள் காணப் பட்டன:- ‘சென்னை உயர்தர நீதிமன்றத்தில் நீதிபதியாயிருந் தவரும், உலகினர் பலரால் நன்கு அறியப் பெற்றவருமாகிய டாக்டர் S. மணியையர் சில மாதங்களின்முன் சிவபத மடைந்தமை குறித்து, நேற்றுச் சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. பல கக்ஷியினரும் கூட்டத்திற்கு வந்திருந் ததுடன், எல்லோரும், மணியையரின் கல்வியையும், தைரியத்தையும், மற்றுமுள்ள உயர்குணங்களையும் புகழ்ந்து பேசினர். அவரது ஞாபகமாக அவருக்குச் சிலை செய்து வைக்கவேண்டு மென்றும் தீர்மானித்தனர்.

'வங்காள மாகாணத்தை இரண்டாகப் பிரித்து, இந்தியாவில் பெருங்கிளர்ச்சியுண்டாதற்குக் காரணராயிருந்த லார்டு கர்சன் இறந்துவிட்டனரென 19ம் தேதி தந்தி வந்தளது.'

'சென்ற ஆண்டிலே பூகம்பத்தால் பேரழிவுக்குள்ளாகிய ஜப்பானிலே இப்பொழுது மீட்டும் அக்கினி பொங்கியெழுந்து பெரிய அழிவையுண்டாக்குகிறது. அளவில்லாத வீடுகள் நாச மடைந்தன. அப்பகுதிகளிலுள்ள ஜனங்கள் சிதறியோடுகின் றார்கள்' - கடவுளின் சங்கற்பமுளதேல் இவ்வுலக முழுதும் ஒருகணப்பொழுதில் அழிதல் அருமையன்று. 'ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப, கோடியுமல்ல பல'

காந்தியடிகள் திருப்பூருக்கு வந்தபொழுது, சில மாதங்களின் முன் கொங்கு நாட்டிலே மழையை வேண்டி நாற்பத்தெட்டு நாள் உபவாசமிருந்த ஜயராமசாமி நாயுடு என்பவருடன் பேசிக் கொண்டிருந்தார்' - நாயுடுவின் கல்வி ஞானமோ, சமய சம்பந்தமான ஆராய்ச்சி அநுபவங்களோ எத்தன்மையன' என்பதைப் பற்றி நான் யாதும் கேள்வியுற்ற தில்லை. எத்தனை காலமாக எந்த நோக்கங்களுடன் அவர் உபவாசப் பயிற்சி செய்து வந்திருக்கின்றனரென்பதும் தெரிந்திலது.

**22 - 3 - 1925**

நேற்றுத்தான் ஜப்பானில் தீயானது பொங்கி பெருஞ்சேதம் விளைத்ததெனப் படித்தோம். இன்று பத்திரிகையில், அமெரிக்காவில் தென் இல்லினோஸ் என்ற இடத்தில் தீக் காற்றினால் ஆயிரம் பேர் மாண்டனரென்றும், இரண்டாயிரத் தெழுநூறு பேர்களுக்குப் பலத்த காயமென்றும், சில இடங்களில் ஜனங்கள் மைல் கணக்காகக் காற்றினால் தூக்கிச் செல்லப்பட்டன ரென்றும்; பல இடங்கள் பாழடைந்து விட்டன வென்றும் செய்தி வெளியாகியிருக்கிறது.

திருச்சூரிலிருந்து ஒரு மாது இந்துப் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:- 'கையால் நூற்கப்பட்ட நூல் இல்லாமையாற்றான் இங்குள்ள மாதர்கள் தற்சமயம் கதரணிந்து கொள்ளாதிருக்கின்றனர். ஒரு ராஜகுமாரர் தான் நூல் நூற்கின்றாரென்று மகாத்மாஜி கூறியுள்ளார். ஆனால் பெரும்பான்மையான ராஜகுமாரர்களது மனைவிமார்களும் ராஜகுமாரத்திகளும் பொழுதுபோக்கிற்காகத் தாங்களே நூல் நூற்று வருகின்றனர். தற்சமயமுள்ள (கொச்சி) மகாராஜாவின் மனைவியார் இராட்டின விஷயத்தில் மிகுந்த சிரத்தையுடன்

உழைத்துவருகின்றார். அவர் முன்னமே ஒரு நெசவுப்பள்ளிக் கூடம் ஏற்படுத்தி நடத்திவருகின்றார். அதில் நெய்யப்படும் துணிகளைத்தான் நாங்கள் சாதாரணமாக அணிந்து வருகிறோம். திருப்பணத்துறையில் ஒரு நூற்கும் பள்ளிக்கூடத்தை அவர் ஏற்படுத்தியுள்ளார். இதில் ஐம்பது மாணவர்கள் இருக்கின்றனர். மகாராஜாவின் குமாரத்திகளில் இருவர் நூற்கக் கற்றுக் கொடுக்கின்றனர். இப்பள்ளிக்கூடம் மகாராஜாவின் மனைவி யினது மேற்பார்வையில் நன்கு நடைபெற்றுவருகிறது.'

காந்தியடிகள் பாலக்காடு சென்றிருந்த பொழுது ஓர் அம்மையார் எழுதிய பின்கண்ட கடிதம் அவரிடம் சேர்ப்பிக்கப் பெற்றது. 'மேன்மை தங்கிய மகாத்மா அவர்களுக்கு: - நான் 63-வயதான ஒரு வயோதிக ஸ்திரீ. ஒத்தப் பாலத்திற்கருகி லுள்ள சுனங்காத்தில் ஒரு கௌரவமான நாயர் குடும்பத்தைச் சேர்ந்தவள். தங்களைத் தரிசனம் செய்ய வேண்டுமென்பது எனது நெடுங்கால ஆவல். ஆனால் தாங்கள் இந்தப் பாகத்திற்கு வரும் இச்சமயத்தில் தேக அசௌக்கியத்தால் படுக்கையிலேயே இருக்கிறேன். ஆகையால் உலக சிரேஷ்ட ராகிய தங்களுக்கு எனது நமஸ்காரத்தை அர்பணம் செய்ய என்னுடைய குழந்தைகளையும், பேரப் பிள்ளையும் அநுப்பியி ருக்கின்றேன். எனது வணக்கத்திற்கு அடையாளமாகத் தங்கத்திற் கட்டிய ஒரு துளசிமாலை அநுப்பியிருக்கின்றேன். அதனை மகாத்மாஜி தங்களுடைய தினப்பிரார்த்தனைக்கு உபயோகிக்க வேண்டு மென்பது என் விருப்பம். எனது கோரிக்கைக்கு இணங்குவீர்க ளென்றும் நம்புகிறேன். அவ்வம்மையின் பேரனும் நான்கு வயதுள்ள வனுமாகிய மாதவமேனன் என்னும் பையன் மகாத்மாஜியிடம் அந்தத் துளசி மாலையைக் கொடுத்தான். மகாத்மா அதை வெகு சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டார்.

திருவாங்கூரிலிருந்து காந்தியடிகள் 'யௌவன இந்தியா' பத்திரிகைக்கு ரிக்ஷா வண்டியைக் கண்டித்து 'மனிதர்க்கு மனிதர் இழைக்கும் கொடுமை' என எழுதிய கட்டுரையில் 'திடசரீரி யாயும் அங்கஹீனமில்லாதவனாயும் இருக்குமொருவனை மற்றொரு மனிதன் தூக்கிச் செல்வது கெட்ட காரியமென்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். சில ரிக்ஷாக்களில் இரண்டு மூன்று பேர் நெருக்கி உட்கார்ந்து கொண்டு போவதைக் காண எனக்கு அளவில்லாத வருத்தமுண்டாயிற்று. மானிடரில் ஒருவனாகப் பிறந்ததுபற்றிக் கூட வெட்கமடைய நேரிட்டது. ஒருவருக்குமேல் உட்கார்ந்தால் இழுக்கமுடியாதென்று

ரிக்ஷாக்காரன் மறுக்காம லிருப்பது தவறென்பதில் ஐயமில்லை. ஆனால் பணத்தைச் சிறிது மிச்சப்படுத்துவதற்காக இரண்டு மூன்று பேர்கள் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு ஒருவனைக்கூட இழுக்கும் வலிமை யில்லாதவனாக இருக்கும் தங்கள் இனத்தைச் சேர்ந்த மானிட னொருவனை வண்டியை இழுக்கும்படி செய்வது வெட்ககரமான காரியமென்று நினைக்காமலிருப் பவர்களைப் பற்றி ஒருவர் என் சொல்வது?' என்று கூறி யிருக்கின்றார்.

**23 - 3 - 1925**

ஏழெட்டு மாதங்களாகச் சில நாளைக்கொரு முறையேனும் சென்று தரிசனஞ் செய்யும் வழக்கப்படி இன்று மலைக் கோயிலில் சென்று தாயுமானபெருமானைத் தரிசித்து வந்தேன். திருக்கோயிலில் இறைவனையும் இறைவியையும் வணங்கித் துதிக்கும் பொழுதும் என் மனம் ஒருங்கிநில்லாது என்னைத் திமிறிக்கொண்டு வேறு எண்ணங்களிற் செல்லுகிறது. நான் அதனை அடக்குதற்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. சாதாரணமாக இருக்கும்பொழுது இல்லாத எண்ணங்களும் அங்கே உண்டாகின்றமையால் கோயிலுக்குப் போகா திருக்கலாம் என நினைப்பதும் சரியென்று தோன்றவில்லை. மனம் ஒடுங்குதற்கு இடமாகிய கோயிலிலேயே அஃது ஒடுங்காது சலிக்கின்ற தென்னின் அதற்குக் காரணம் என்னுடைய நெடுங்காலப் பழக்கமும் தூய்மையின்மையுமேயாதல் வேண்டும். மேலும் கோயிலை விட்டு விட்டு நான் பற்றிக்கொள்ள அதற்கு மேலான தொரு சாதனம் இருப்பதாகவும் எனக்குப் புலப்பட வில்லை. வேறுசில உபாயங்களைப்பற்றிப் பார்க்கினும் இறைவனருள் துணைபுரியாவிடின் அவை எங்ஙனம் சித்தியாதல் கூடும். இப்பொழுது இறைவன் திருமுன் என் மனம் ஒருமையுறா விடினும், அன்பு தோன்றாவிடினும் அடுத்தடுத்துப் பலகாலும் கோயிலுக்குச் சென்று இறைவன் திருமுன்பு பொய்யாகவேனும் கதறி யழுது குறையிரந்து விண்ணப்பித்துக் கொண்டுவந்தால் எப்படியும் இறைவன் றிருவருட்குரிய னாகலாம் என்கிற கற்பனை யொன்று என்னிடம் உளது.

**24 - 3 - 1925**

இன்று, 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் மிகுதியான விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. காந்தியடிகள் கேரள நாட்டிலிருந்து சென்னைக்குத் திரும்பி வந்தவுடன் 22ஆம் தேதி சென்னையில் நடந்த கூட்டங்களை விவரித்தெழுதியிருப்பது முக்கியமாகும். காந்தியடிகள் ஒரு பகற்பொழுதில் பத்துப்

பன்னிரண்டு கூட்டங்களுக்கு விஜயஞ்செய்து, சுருக்கமாகவும் விரிவாகவும் அவரவர்களுக்கு ஏற்றபடி உபதேசமோ உபந்நியாசமோ செய்வது மிக்க வியப்பை விளைக்கிறது. இஃது அவர்போலும் அறிவு ஆற்றல் வாய்ந்தவர்களுக்கன்றி ஏனையார்க்கு இயலும் காரியமன்று. சென்னையில் நடந்த கூட்டங்களில் காலஞ்சென்ற S. கஸ்தூரிரங்க ஐயங்காரின் (இந்துப் பத்திரிகையின் ஆசிரியர்) உருவப்படத் திறப்புக்காகக் கூடிய கூட்டம் மிகவும் சிறந்தது. அரசர்களும், பெரிய அந்தஸ்துள்ளவர்களுமாகிய அநேகர் அக்கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்தனர். மகாகனந்தங்கிய V. S. சீனிவாச சாஸ்திரியார் அக்கிராசனம் வகித்திருந்தார். காந்தியடிகள், உருவப் படத்தைத் திறந்து வைத்து, கஸ்தூரிரங்க ஐயங்காரின் மேன்மைக் குணங்களையும் பத்திராசிரியரின் கடமை முதலியவற்றையும் பற்றி நீண்டதோர் உபந்நியாசம் செய்திருக்கின்றனர். அக்கிராசனரும் விரிவாகப் பேசியுள்ளார். காந்தியடிகள் தொழிலாளர் கூட்டத்திலும், மாணவர் கூட்டத்திலும் செய்திருக்கும் உபதேசங்கள் அவர்கட்குப் பெரும் பயனளிக்கக் கூடியவை. தங்கள் வாழ்க்கையை நல்வாழ்க்கையாகவும், மெய்வாழ்க்கை யாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டுமென்னும் விருப்பமுடை யவர்கள் காந்தியடிகளின் உபதேசங்களைக் கவனித்து ஆராய்ச்சி செய்து வருதல் நலமெனக் கருதுகின்றேன்.

இன்றிரவு, என் அருமை நண்பராகிய திருவாளர் அ. மு. சரவண முதலியார் அவர்கள் பாடிய தேவார திருவாசகப் பாடல்களைச் செவிமடுக்கும் பேறு கிடைத்தது. இசை நலமும், பொருளுணர்ச்சியும், இறைவனிடத் தன்பும் ஒருங்கு வாய்ந்தவர்கள் திருமுறைப் பாடல்களைப் பாடும்பொழுது கேட்பவர்க்குப் பெரும் பயன் விளையுமென்பது என் கருத்து. முதலியாரவர்கள் அவை ஒருங்கு வாய்ந்தாராதலோடு திருவாசகம் முதலியவற்றைப் பெரும் பாலும் மனப்பாடஞ் செய்திருப்பார்கள். எவ்வளவு நேரமா யினும் தமது மெய்வருத்தம் முதலியன கருதாது ஆர்வம் விஞ்ச ஈடுபட்டுப் பாடுவார்கள். (எழுதியது மறுநாட் காலை)

## 25 - 3 - 1925

காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய ஐயர் ஞாபகமாக அவர் பெயரால் திருவல்லிக்கேணியில் ஒரு வாசகசாலைத் திறப்பு விழா நிகழ்ந்தது இன்று பத்திரிகையில் வெளியாயது. சட்டசபை மாஜித் தலைவரும், இந்திய மந்திரிசபை அங்கத்தினருமாகிய

சர். பி. இராஜகோபாலச்சாரியார் வாசகசாலையைத் திறந்து வைத்தனர். ஜி. சுப்பிரமணிய ஐயர் 1878-ம் ஆண்டில் 'இந்து' என்னும் ஆங்கிலப் பத்திரிகையை ஏற்படுத்தி நடத்தியவர். இவர்தான் 1882-ம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' என்னும் பெயருடன் தமிழ் வாரப் பத்திரிகை ஏற்படுத்தி நடத்திவந்து, பின்பு 1899-ல் அதனைத் தினசரியாக்கி நடத்தினர். சென்னை மாகாணத்தில் அரசியலறிவு பெருகுவதற்குக் காரணராயிருந் தவர்களில் இவரை முதன்மையாகக் கூறலாம். ஆசாரச் சீர்திருத்தம் முதலிய வழிகளிலும் இவர் தைரியமாக வேலை செய்திருக்கின்றனர்.

மூன்று சாதுக்கள் இன்று காலையில் சிற்றுண்டியும், மத்தியானம் உணவும் என் இல்லத்தில் ஏற்றுக்கொள்ள நான் அவர்களுடன் இருந்துண்ணும் பேறு எனக்குக் கிடைத்தது. 'இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று தெய்வப்புலவர் கூறுவது இல்வாழ்வாரின் கடமையை விளக்குகிறது. அதனைச் செவ்வன் நிறைவேற்றுவது இயலாததா யிருப்பினும் ஒரோ வழியேனும் அக்கடமையை ஒருவாறு செய்ய நேர்வது மகிழ்ச்சிக்குரியதாகும். என் மனைவி இவ்விஷயத்தில் என்னுடன் மாறுபடாமல் இயன்றவரை செய்வதனாலேயே இவ்வளவேனும் நிறைவேறக் கூடியதாயிருக்கிறது.

**26 - 3 - 1925**

பாண்டி நாட்டிலே சேரமாதேவி என்ற ஊரில் வ. வே. சுப்பிரமணிய ஐயரவர்களால் 'குருகுலம்' என்னும் பெயருடன் ஓர் கலாசாலை ஏற்பட்டு நடந்துவருகிறது. அதிலுள்ள மாணவர் களில் பார்ப்பனப் பிள்ளைகள் வேறாகவும், மற்றைப் பிள்ளைகள் வேறாகவும் உணவுண்ணுகின்றார்களாம். காங்கிரசி லிருந்தும் பெரும்பாலும் பார்ப்பனரல்லாதாரிடமிருந்தும் கிடைத்துள்ள பணத்தைக்கொண்டு குருகுலம் என்னும் பெயரால் நடத்தப் படும் இதன்கண் இவ்வாறு சாதி வேற்றுமை பாராட்டுவது தவறு என அதனை கண்டிக்க ஒரு கட்சி உண்டாயது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகிய டாக்டர் P. வரதராஜலு நாயுடுவே இக்கட்சிக்கு முதன்மை யானவர். நவசக்தி, திராவிடன் என்னும் பத்திரிகைகளும் இக்கொள்கையை ஆதரிப்பனவாயின. சில மாதங்களாகவே இவ்விஷயம் பத்திரிகைகளில் விவாதிக்கப் பட்டு வந்தது. காந்தியடிகள் வைக்கத்திற்கு வந்திருக்கும் பொழுது அவரிடம் சொல்லி, அவர் அபிப்பிராயப்படி இவ்விஷயத்தை

ஒருவித முடிவுக்குக் கொண்டுவரலாமெனக் கருதி வ. வே. சு. ஐயர் வைக்கத்துக்குச் சென்று காந்தியடிகளிடம் தெரிவித்தன ரென்றும் வரதராஜலுவும் தன் கட்சியை அடிகளிடம் தெரிவித்துக் கொண்டனரென்றும், அப்பொழுது அடிகள் தம் கருத்தை நன்கு ஆலோசித்துத் தெரிவிப்பதாகக் கூறிவிட்டன ரென்றும் முன்பு பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இன்றைய பத்திரிகையில், சென்னையில் காந்தியடிகளின் முன்பு பலர் கூடி இது விஷயமாக விவாதித்தார்களென்றும், யாதொரு முடிவும் ஏற்படவில்லை யென்றும் வெளியாகியிருக்கிறது. குருகுலத்தை நடத்துவோரின் உண்மை நோக்கமும், அதனை மறுப்போரின் உண்மை நோக்கமும் இன்னவென நான் நன்கு அறிந்து கொள்ளக் கூடவில்லை. வ. வெ. சு. ஐயர் நடத்துகின்ற முறை சரியென்றாவது தவறென்றாவது துணிதற்கும் இப்பொழுது என் மனதில் தெளிவுண்டாகவில்லை. ஆனால் ஒரு நல்ல அல்லது பெரிய காரியத்தைச் செய்தற்குப் பல இடையூறுகள் உண்டென்பதை இச் செய்தி நிதரிசனமாக்கு கிறது. செய்கின்றவர்கள் தூய மனத்துடன் சோர்வின்மையும் கடைப்பிடியும் உடையவர்களா யிருந்து கடவுளை நம்பித் தன்னலங் கருதாது உழைத்து வருவார்களாயின் இறைவன் றிருவருள் அக் காரியத்தை எப்படியும் நிறைவேறச் செய்யும் என்னும் கருத்து எனக்குண்டு.

திருவாளர், பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் (சூப்பிரண்டெண்டிங் இன்சினீர்) கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஓர் ஆண்டு விழாவில் படித்தற்காக ‘அஞ்ஞானம்’ எனப் பெயரிட்டெழுதி யநுப்பிய கட்டுரையைப் பின்பு அச்சிட்டுப் பலருடைய அபிப்பிராயத்திற்கும் அநுப்பியிருந்தனர். சிலர் அதனைப் புகழ்ந்தும், சிலர் இகழ்ந்தும், சிலர் ஒன்றிலும் படாதும், அதற்கு அபிப்பிராயம் எழுதியிருந்தனர். சிலர் யாதும் எழுதாதிருந்து விட்டனர். கிடைத்துள்ள அபிப்பிராயங்களில் தம் கருத்துடன் மாறுபட்டவற்றுக்கெல்லாம் நாய்க்கரவர்கள் சமாதானமெழுதி மறுமுறை பதிப்பிப்பதாகத் தெரிகிறது. அஞ்ஞானச் சுவடிக்குக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களால் எழுதிய மதிப்புரையும், அதில் தம் கொள்கையுடன் பொருந்தாதவற்றை மறுத்தும், தமது கட்டுரையின் மேன்மையை வருணித்தும் நாய்க்கரவர்களால் எழுதிய குறிப்பும் பிழைதிருத்தியநுப்ப வேண்டுமெனக் கேட்டு நாய்க்கரவர்களால் எனக்கு அநுப்பப் பெற்றிருந்தது. நான் இன்று அதனைப் பார்த்து முடித்தேன். தாம் எழுதிய ‘அஜ்ஞானம்’ என்னும் கட்டுரை மந்திர இலக்கண

முடைய தென்றும், அதற்கு நிகரான மந்திரம் வேறில்லை யென்றும், எழுதியிருப்பதுடன், வசியம் முதலிய எண்வகைச் சித்திகளையும் அவ்வஜ் ஞான மந்திரம் தரவல்லது என்பதற்குப், பார்த்தவர்கள் வேடிக்கையென்று நினைக்கும் படியான சில உதாரணங்களும் எழுதப்பட்டுள்ளன. நாய்க்கரவர் களுடன் நான் நன்கு பழகியிருக்கின்றேன். அவர் மிக்க அறிவின் மதுகை வாய்ந்தவர். அவரது அறிவின் திறத்தைக் கண்டு நான் பல சமயங்களில் மிகவும் வியப்பெய்தியதுண்டு. ஆனால் அவர் சரியாக ஆராய்ச்சி செய்யாமலே சிலவற்றைப்பற்றித் துணிந்து விடுகின்றனரென்பதும், தமது கொள்கை பிழையெனப் பிறர் எடுத்துக்காட்டும் பொழுது அதனை மதித்தல் செய்யாது தம் கொள்கையே சரியென்று பிடிவாதமாய்ச் சாதிக்கின்றன ரென்பதும் என் கருத்து. அவர் தொல்காப்பிய ஆராய்ச்சி செய்து வெளியிடும் முடிபுகள் பலவற்றில் நான் மாறுபட்ட கருத்துடையேன். எனினும் அவர் நிதானத்துடன் நேர்மையான வழியில் தம் ஆராய்ச்சியறிவைச் செலுத்துவரேல் தமிழுக்குப் பெரிய நன்மையுண்டாகலாமென்பது என் எண்ணம். அவர் வாயிலாக அத்தகைய நலம் விளைவது திருவருட் குறிப்பிற்கு இசைந்ததாயின் அங்ஙனமே ஆகக்கூடும்.

**27 - 3 - 1925**

மலைக்கோயிலுக்குச் சென்று அம்மையப்பரைத் தரிசித்ததும், நான்கைந்து ஆண்டுகளாகத் தூர தேசத்திலிருக்கும் அன்பர் ஒருவரது கடிதம் வரப்பெற்றதும் என்னைப் பொறுத்த நற்செய்திகள். தி. ரா. கோவிந்தராஜையர் என்னும் இளைஞர் ஒருவர் இண்டர்மீடியட் வகுப்பில் என்னிடம் கல்வி பயின்றவர். மதிநுட்பமும், தமிழ்ப்பற்றும், சிவபக்தியும், காரியத்தில் ஊக்கமும், வைராக்கியமும் உடையவர். என்னிடம் அளவு கடந்த பற்றுடையவர். என்னைத் தந்தையாகவே கருதும் இயல்பினர். இவர், ஒத்துழையா இயக்கம் தோன்றிய காலத்து நாகபுரிக் காங்கிரசுக்கு, B. A. வகுப்பில் படித்துக்கொண்டிருந்த தம் தம்பியொருவருடன் புறப்பட்டுக் கால்நடையாகவே போய்ச் சேர்ந்தனர். வட நாட்டில் வெவ்வேறு இடங்கட்குச் சென்று வடமொழி முதலியன பயின்று வருகின்றனரெனத் தெரிகிறது. சுமார் இரண்டாண்டுகளாக எனக்குக் கடிதம் எழுதாதிருந்த இவர் காசி, இந்து யூனிவர்சிட்டியில் இருந்து கொண்டு எழுதிய நீண்டதொரு கடிதம் இன்று எனக்குக் கிடைத்தது நான் மகிழத்தக்க செய்தியேயாகும்.

## 28 - 3 - 1925

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் 15-வது ஆண்டு விழாவிற்கு இன்று காலை புறப்பட்டு வந்தேன். திருவானைக் காவில் வண்டி வாடகைக்குப் பேசிய பொழுது ஒரு சிறு காரணத்தை முன்னிட்டு வண்டிக்காரன்மேல் சினங்கொண்டு கொடுஞ்சொற்களும் சொல்லிவிட்டேன். அவன் பொறுமை யுடன் இருந்தான். எனது குணக் குறையை நினைந்து பின் துயரம் உளதாயிற்று. என் உடம்பு நலங்குன்றியிருந்தது எனக்குக் கோபம் என்னும் தீக்குணம் மிகுதற்குக் காரணமாயிருந்திருக்குமென்ற கருத்தும் எனக்குளது. நாம் அரிய பெரிய காரியங்களைச் செய்து முடித்தற்கேயன்றிச் சாதாரணமாக நற்குணமுடையவராக இருத்தற்கும் நம் உடம்பு நலங் குன்றாதிருப்பது அவசியம் என்னும் உணர்ச்சி எனக்கு நாளடைவில் உறுதியுறுகின்றது.

இனி, பூவாளூரில் சபையானது கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியாரவர்களின் தலைமையில் நடந்தது. விளம்பரத்தில் சபை ஆரம்பம் 3 - மணிக்கேக் குறிப்பிட்டிருந்தது. 4 - மணிக்கு தொடங்கிற்று. தலைவர் முன்னுரை முடிந்து உபந்நியாசம் ஆரம்பிப்பதற்கு 6 மணியாயிற்று. குறிப்பிட்ட நான்கு உபந்நி யாசங்களில் மூன்றே நடந்தன. சபை இரவு 11½ மணிக்கு முடிந்தது. ஆனால் எனக்கு இன்று உபந்நியாசம் இல்லாமை யாலும், உடல்நலமின்றி யிருந்தமையாலும், தலைவர் முன்னுரையும், முதல் உபந்நியாசமும் செவிமடுத்துப் பின் இருப்பிடத்திற்கு வந்து கண்டுயில்வேனாயினேன்.

## 29 - 3 - 1925

பூவாளூரில் சபையின் 2-வது நாளில் மூன்று மணிக்கே கூட்டம் ஆரம்பமாயினும் முடிவு பெற இரவு 12- மணிக்கு மேலாயிற்று. இன்று நிகழ்ந்தவை நான்கு உபந்நியாசங்கள். 'சேக்கிழார் கவித்திறன்' என நான் பேசியது அவற்றுள் ஒன்று. இரண்டு நாட்களிலும் சபை பூர்த்தியாக இவ்வளவு நேர மானமைக்குக் காரணம் தலைவர் முன்னுரையும், உபந்நியா சங்களைப் பற்றி அவர் கூறிய அபிப்பிராயங்களும் மிக விரிந்து போனமையேயாகும். இதனை நான் ஒரு பெருங்குறையாகவே கருதுகின்றேன். கற்றவர்கள் உலகநடை அறிந்தவர்களாதலும் வேண்டும். இந்தியர்களாகிய நாம் குறித்த காலத்திற் குறித்தபடி எதையும் செய்வதில்லை என்று கூறப்படுகின்ற குறை இன்னும் விரிந்துகொண்டே யிருக்கிறது. காலவரையறைக்குள் காரியஞ் செய்து முடிப்பது வித்தகர்க்குரியதொன்று. இரு தினங்களிலும்

உபந்நியாசங்களிலிருந்து எப்படியும் நல்ல விஷயங்கள் சில சபையோர்க்குக் கிடைத்திருக்கக் கூடும். 'எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானு மான்ற பெருமை தரும்' என்பது தமிழ்மறை.

சபையின் அமைச்சராயிருந்து பெரும்பாலும் தமது கைப்பொருட் செலவு கொண்டே இதனை நடத்துகின்ற திரு. அ. ரா. அமிர்தஞ் செட்டியாருடைய நற்குணமும், பேரன்பும் எப்பொழுதும் நினைவு கூரத்தக்கவை.

**30 - 3 - 1925**

பூவாளூரிலிருந்து காலை 10 - மணிக்குத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். இற்றைப் பொழுது முழுதும் வறிதே கழிந்த தென்றுதான் சொல்லவேண்டும். 'பொழுது போக்கிப் புறக்கணிப்பானாக' இறைவனது கீழ்க்கணக்கில் எழுதப் பெறுவேன்! (மூன்று நாட் குறிப்புக்கள் இன்று எழுதப்பெற்றன.)

**31 - 3 - 1925**

இன்று பத்திரிகையில் வெளிவந்த செய்திகள்:- மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் மதுரையில் கிறிஸ்தவ வாலிபர் சங்கக் கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அச்சங்கத்தினர் உலக நன்மைக்கான பல அரிய காரியங்கள் செய்து வருவதாக அவர் அப்பொழுது பேசியிருக்கின்றனர்.

சென்னைச் சட்டசபைத் தலைவராகிய திவான்பகதூர் L. T. சாமிக்கண்ணுப் பிள்ளை யவர்களின் தலைமையில் மதுரையில் 'மருத்துவர் மகாநாடு' நடைபெற்றது. வரவேற்புக் கழகத் தலைவரான டாக்டர் சங்கரசுப்புப் பிள்ளையின் வரவேற்புப் பிரசங்கத்தில் பின்வருஞ் செய்திகள் காணப்படு கின்றன: "வட இந்தியாவிலுள்ள மருத்துவரெல்லாம் வைத்தியத் தொழிலன்றிப் பல்வேறு தொழில்களுஞ் செய்கின்றனர். பலர் கோயிற்பூஜை செய்யும் குருக்களாகவும், பிராமணர் வீட்டுப் பரிசாரர்களாகவும், சிற்றுணவுகளைச் செய்து பொது ஜனங்களுக்கு விற்று வருபவர்களாகவும், பொதுவாக ஒருவகைப் பிராமண ராகவும் விளங்கி வருகின்றனர். இவர்கள் வடநாட்டரசர் களுக்குப் பழைய காலத்திலிருந்து யாகசாலை மேல் விசாரணைக் காரராயிருந்து வந்திருக்கின்றனர். தமிழ் நாட்டரசர்களுக்கும் அமைச்சர்களாயும், சேனாபதிகளாயும் இருந்துவந்தனர். ஐம்பெருங் குழுவில் இவர்கள் சேர்ந்திருந் திருக்கின்றனர். சிலாசாஸனங்களில் வருகின்ற மூவேந்த மங்கலப் பேரரையன்,

வீர மங்கலப் பேரரையன் என்னும் மந்திரிகள் இக்குலத்தின ராவர். சென்னைப் பொருட்காட்சிச்சாலையி லுள்ள பாண்டி நாட்டுச் செப்புப் பட்டயத்தில் 'வண்களந்தை வைத்தியகுலம் விளங்கத் தோன்றி மன்னவர்க்கு மகாசா மந்தனாய் மாற்றரசரை வலிதொலைக்கும் வீரமங்கலப் பேரரை யனாகிய தீரதரன்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது."

பங்குனி மாதத்துப் 'பாலபாரதி' மாத சஞ்சிகையை இன்று படித்தேன். பஞ்சாப் வித்தியாலயத்தில் தை மாதத்தில் ஜகதீச சந்திர வஸா செய்த பிரசங்கம் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. அதிற் பல அரிய கருத்துக்களும், கம்பீரமான எண்ணங்களும் காணப்பட்டன. உதாரணமாக ஒன்றிரண்டு எழுதுகின்றேன்:- 'வித்தை சம்பந்தமான துறைகளிற் கூட ஒருமுறை இருமுறை மும்முறையெனப் பல முறையும் தோல்வியடைந்தும், மனோதிடத்தைக் கைவிடாது, எத்தகைய ஆபத்துக்களையும் சங்கடங்களையும் பொருட்படுத்தாது கொண்ட நோக்கமே பெரிதென நினைத்துப் பொருது கரையேறினோர்களாற்றான் சிறந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன'. 'விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சி செய்பவனுக்குச் சுகமென்பது கிடையாது. அவனுக்கு எப்பொழுதும் கஷ்டமும் போராட்ட முந்தான். வெற்றியையும் தோல்வியையும், இலாபத்தையும் நஷ்டத்தையும் ஒருபொருட் பல கிளவிகளெனக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையையே அவன் மகாபலியாகத் தியாகஞ் செய்துவிடவேண்டும். எளிதில் கிடைக்கக்கூடிய ஜெயமாவது, இலாபமாவது அல்லது எளிதிற் செய்து முடிக்கக் கூடிய தொழிலாவது சுத்த வீரன் மனதுக்குப் பிடிப்பதில்லை. எட்டாத சந்திரபிம்பத்தைப் பிடித்துப் பந்தாட எண்ணி, அந்த நாட்டத்தில் அவன் படும் அவஸ்தைகளும், அபஜெயங்களும் அவன் மனதைக் கவர்வன.' 'விஞ்ஞான சாஸ்திர உண்மையைக் கண்டறிதற்கு இன்றியமையாத நிபந்தனைகளாக உள்ளவை: 1. அளவு கடந்த கற்பனாசக்தி. 2. சிறிதளவும் தவறுதல் இல்லாத சாஸ்திரப் பரீக்ஷை வாயிலாகக் காணக்கூடிய உண்மைகளுடன் தம் யுக்திக்கு எட்டிய விஷயங்களை ஒத்திட்டுப் பார்த்தல். 3. மனதை ஒருநிலை நிறுத்தல். 4. சகல கருவிகளும் நிறைந்த ஆராய்ச்சிச்சாலை. 5. நூதன கருவிகளை யூகித்தறிந்து அமைத்துக் கொள்ளும் ஆற்றலும் கைத்திறமும்.'

'பால பாரதி'யில் எழுதப்பெற்ற 'குருகோவிந்தசிங்கன்' என்னும் கட்டுரை வீர உணர்ச்சியை உண்டாக்குகிறது.

**1 - 4 - 1925**

திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, சைவசித்தாந்த சபையில் 'சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவர்கள் தேவாரமும்' என்னும் பொருள் பற்றி, சென்னை, கயப்பாக்கம் திருவாளர் சதாசிவ செட்டியாரவர்களால் நேற்றும் இன்றும் உபந்நியாசம் செய்யப்பெற்றது. இரு நாட்களிலும் மாலை 6½ மணி முதல் 9½ அல்லது 10 மணிவரையில் உபந்நியாசம் நிகழ்ந்தது. கேட்க வந்தோர் 30-பேர் இருக்கலாம். தமிழிலும் சைவத்திலும் அன்புடையார் சிலர் இறுதிவரை இருந்து கேட்டனர்.

**2 - 4 - 1925**

திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அச்சிடுதற்காக நான் நீதி நூல்கள் திருத்திவந்ததில் 'அறநெறிச் சாரம்' என்னும் நூல் இன்று திருத்தப்பெற்று முடிந்தது. சமண சமயத்தைச் சேர்ந்த முனைப்பாடியார் என்னும் ஆசிரியரால் இயற்றப்பெற்ற இந்நூல் நீதிகளை அழகுபெற எடுத்துரைப்பதில் இணையற்ற பெருமை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இதில் அறஞ் செய்யுமாற்றை 'இன்சொல் விளைநிலமா' என்னும் பாட்டும், ஆராய்ச்சி 'செய்யும் முறையை' 'காய்தலுவத்தலகற்றி' என்பதும், பொறையுடைமையின் சிறப்பை 'எள்ளி பிறருரைக்கும்' என்பதும், நன்னட்பினராவாரிவரென்பதனை 'காலொடு கையமுக்கி' என்பதும், நிலையாமையை 'தெரிவி லிளமையும்' என்பதும், புலனடக்கலை 'பரிந்தெனக்கோர்' 'உள்ளூரிருந்தும் தம்', நின்னையறப் பெறுகிற்கிலேன்' என்பனவும் ஊழினியல்பை, 'தானே தனக்கு' 'உயிர்திகிரியாக' என்பனவும், இல்வாழ்க்கையின் நடைபேற்றை 'மருவியகாதல்' என்பதும், வீடுபேறெய்துதலை 'இந்தியக் குஞ்சரத்தை' 'உணர்ச்சியச்சாக' என்னும் பாக்களும் எவ்வளவு அழகாகவும் உறுதியாகவும் விளக்குகின்றன என்பதைப் பலமுறை படித்தறிந்தின்புறல் வேண்டும். ஆனால் இந்நூலில் நீதிகளே யன்றிச் சமண சமயச் சார்பான பாட்டுக்களும் பல உள்ளன. செவி, கண், மூக்கு, நா என்னும் பொறிகளும், தலை, கால் என்னும் அங்கங்களும் கடவுள் சம்பந்தமான அறவுரை கேட்டல் முதலியவற்றைப் பொருந்தாவிடில் பயனிலவா மென்பது நன்கு கூறப்பெற்றுளது. தேவ மூடம் என்பதில் வேறு பல சமயத் தெய்வங்களும் மெய்ம்மையில்லன போற் கூறப் பட்டிருக்கிறது. பாசண்டி மூடம் என்பதில் 'தோல் காவி சீரை' என்பன முதலாக சைவக் கோலங்கள் நிந்திக்கப்படுகின்றன. சமயிகளின் கொள்கையும், நம்பிக்கையும் முதலியவற்றைப் பற்றி

இப்பொழுது ஒன்றுஞ் சொல்லாமல் இவ்வளவில் நிறுத்து கின்றேன். நூற்பயன் கூறுஞ் செய்யுள்களிலொன்றின் அருகதேவன் 'சிவன்' என்னும் பெயராற் கூறப்படுகின்றான். சிலப்பதிகாரத்தில் 'சங்கரன்' முதலிய பெயர்களோடு 'சிவகதி நாயகன்' என்னும் பெயராலும் அருகன் கூறப்பட்டுள்ளமையும் காண்க. இவ்வாற்றால் 'சிவன்' என்பது பொதுப்பெயராகும் போலும்? ஆனால், 'சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்' என எங்கள் அப்பர் கூறுவதன் கருத்தென்னை?

**3 - 4 - 1925**

இன்று இரவு சிருங்ககிரி ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமி களைத் திருச்சிராப்பள்ளியில் மலைக்கோட்டையைச் சூழ பவனி யெழுந்தருளப் பண்ணினார்கள். வேடிக்கை பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பல் கும்பலாய்ச் சென்று கொண்டி ருந்தனர். ஆனால் என் மனதில் ஒரு வகையான உணர்ச்சியும் ஏற்படாதிருந்தமையால் நான் சென்று பார்க்கவில்லை.

இன்று நான் வழக்கம் போல் ஏதோ காரியஞ் செய்து கொண்டிருந்ததன்றி விசேடமாக ஒன்று செய்யவுமில்லை. அறியவுமில்லை. இன்று வெள்ளிக்கிழமையாயிருந்தும் மலைக் கோயிலுக்குச் சென்று இறைவனைத்தரிசிக்காமலிருந்தது ஒரு பெருங்குறை யென்று மாத்திரம் சொல்லலாம்.

**4 - 4 - 1925**

இன்று வந்த 'நவசக்தி' பத்திரிகையில் சென்னை மாகாணத்தின் கல்வியைப் பற்றிய குறிப்பு எழுதப்பட்டுளது. 'சென்னை மாகாணத்தில் மொத்தத்தில் 44,364 கல்விச்சாலைகள் உள்ளன. 20,70,588 - மாணாக்கர் இருக்கின்றனர். மலயாளத்தில் அதிக மாணவரும் கிருஷ்ணா ஜில்லாவில் அதிக கல்விச் சாலைகளும் உண்டு. ஐரோப்பியர் ஆங்கிலோஇந்தியர் முதலிய வர்களில் நூற்றுக்கு 29-பேரும், பார்சிகளில் 22-பேரும், பிராமணர்களில் 19-பேரும், சுதேச கிறிஸ்தவர்களில் 16-பேருக்கு மேலும், மற்றைய முற்போக்கடைந்த இந்துக்களில் 7½-பேரும் படித்தவர் களாவார்கள்.' (பெண்மக்களுள்ளும் ஏறக்குறைய இதேவீதம் இருக்கின்றன?) கலாசாலைகளில் மாணாக்கர் ளுக்ககாச் செலவிடும் தொகையில் பாதிக்குக் கீழாகத்தான் சம்பளங்களின்மூலம் கிடைக்கின்றதாம். சகெண்டரி கல்விச்சாலைப் படிப்பில் இந்திய மாணாக்கனுக்கு ரூபாய் 62 - வீதமும், ஐரோப்பிய மாணாக் கனுக்கு ரூ. 292-க்கு மேலும் செலவாகிறது. எலிமேண்டரி

கல்விச்சாலையில் அரசாங்கத்தார் இந்திய மாணாக்கருக்கு ஏறக்குறைய 10- ரூபாய் வீதம் செலவு செய்கின்றனர். தமிழ்ப் பாஷை மாணவரே பெரும்பாலோர். அடுத்தபடி தெலுங்கு பாஷை படிப்பவராவர். சம்ஸ்கிருதக் கல்வியை 19,000 - ஆடவரும், 1800-பெண்களும் படிக்கின்றனர்.'

'நவசக்தி'யில் இறக்குமதிக் குறிப்பு 'ஜப்பான் தேசத்தி லிருந்து 1914 - 15-ம் ஆண்டில் 60-லட்சம் கஜம் துணிகளும், 1 - லட்சம் பவுன் நிறையுள்ள நூல்களும்; 1923-24-ல் 12 - கோடியே இருபது லட்சம் கஜம் துணிகளும், 20- கோடியே நாற்பது லட்சம் பவுன் நிறையுள்ள நூல்களும் 1924 - 25-ல் முதல் 10- மாதங்களில் 12- கோடியே எண்பது லட்சம் கஜம் துணிகளும், 28-கோடியே தொண்ணூறு லட்சம் பவுன் நிறையுள்ள நூல்களும் இந்தியாவுக்கு இறக்குமதியாயின. 'நவசக்தி'யில் 'கீழ்நாட்டுத் தாய்மார்களும் அவர்கள் பெருமையும்' என்னும் தலைப்பில் ஒரு சிறந்த கட்டுரை எழுதப்பெற்றுள்ளது. இது 'இந்தியன் ரெவ்யு' பத்திரிகையில் ஸ்ரீமான் வி. பி. மேதா என்பவர் எழுதியதாக மேல்நாட்டுப் பெண்டிர்க்கும் கீழ்நாட்டுப் பெண்டிர்க்கும் உள்ள வேற்றுமை இதில் நன்கு விளக்கப் பெற்றுளது.

ஜர்மனியின் குடியரசுப் பிரசிடெண்டுக்குத் தேர்தல் நடந்ததில் மாஜி கெய்சருக்கு நான்கு வாக்குகளே கிடைத்தனவாம்.

'சுதேச மித்திர'னில் பின்வரும் குறிப்பு உள்ளது. சென்னை நகரத்தில் பிச்சையெடுப்போரின் தொகை மிகாமல் தடுப்பதற்கு ஆலோசனை சொல்லுமாறு சென்னைக் கார்ப்பரேஷனால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதில் கனம் ஜனாப் உஸ்மான்சாகிப், ராவ்பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியார், டாக்டர் ஸி. நடேச முதலியார் முதலிய ஏழு பேர் அடங்கியிருந்தனர். இவர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்திருக்கும் கணக்காவது, 'சென்ற ஜூலை மாதத்தில் எடுத்த கணக்கின்படி சென்னையில் 2,087 - பிச்சைக்காரர் இருக்கின்றனர். இவர்களில் 1,416 பேர் இந்து மதத்தினர். 584 - முகம்மதியர், 87 - கிறிஸ்தவர். இவர்களில் 1214 - பேர் பிச்சைக் காரர்களுக்கே பிறந்த பரம்பரையினர். மற்ற வர்கள் இத்தொழிலில் புதிதாய்ப் புகுந்தவர்கள். இத்தொகையில் 128 - நொண்டி முடங்கள், 208 - குருடுகள், 39 - ஊமை செவிடுகள், 109 - குட்டரோகிகள், 59 - பாரிச வாயுக்காரர், 118 - பல் பிணியினர். 971 - பேர் வரையில் வெறுந் தடியர்கள்.' பிச்சைக்காரர் தொகை மிகாமல் இருப்பதற்கும், வியாதிகள் பரவாமல் தடுப்பதற்கும் ஒரு சட்டம் இயற்றுவதைப் பற்றி ஆலோசனை சொல்லி யிருக்கிறார்கள்.

## 5 - 4 - 1925

1924-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதி இரவு வைகறையில் நான் விழித்துக்கொண்டு நான் உத்தியோகத்திற்கு வந்த நாள் முதலாக மாணவர்கட்கும் எனக்கும் இருந்த சம்பந்தங் களையும் அன்பின் பெற்றியையும் சிந்தித்துப் பார்த்து நாளடைவில் அன்பு சுருங்கியதை யுணர்ந்து சகிக்கலாற்றாது மனம் வெம்பி அழுது கொண்டிருந்தேன். காலையில் எழுந்த வுடன் அந்நினைவுகளை 'வைகறை நினைவு' என்னும் பெயருடன் ஓர் பெரிய ஆசிரியப் பாவாக எழுதினேன். அப்பாட்டினை என் அன்பர் பலர் அறிந் திருக்கின்றனர். அக்காலத்தில் ஜூனியர் இண்டர்மீடியட்டில் படித்துக் கொண்டிருந்த நங்கை நான் எழுதிய 'கள்ளர் சரித்திரம்' என்னும் புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்து தனது நன்றியறிவை எனக்குத் தெரிவிக்கும் படியாக அடுத்த பிப்ரவரி மாதம் 2-ம் தியதி எழுதிய அருமைக் கடிதம் எனக்குக் கிடைத்தது.

## 6 - 4 - 1925

'செந்தமிழ்ச் செல்வி' என்னும் மாதப் பத்திரிகைக்கு, 'தெய்வ மணக்கும் செய்யுளெலாம்' என்னும் தலைப்பெயரிட்டு ஒரு கட்டுரை யெழுதினேன். சைவ சமயப் பெரியார்கள் அருளிய பன்னிருதிருமுறைச் செய்யுட்களும் தெய்வ மணங் கமழ்வ எனக்கொண்டு, பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்திலுள்ள நாடு நகர வருணனை முதலியவற்றில் சில செய்யுட்களை யெடுத்துக் காட்டி விளக்கியுள்ளேன். திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலுக்குச் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

## 7 - 4 - 1925

ஸ்ரீமத் மணிவாசக சரணாலய சுவாமிகள் காளையார் கோயிலைச் சேர்ந்த வெற்றியூரில் கோயில் கொண்டிருக்கும் அன்னபூரணியம்மன் என்னும் தேவி மீது பாடிய எட்டுப் பிரபந்தங்களும் அரங்கேற்றுதற்காகப் பார்த்து வைக்கும்படி என்னிடம் கொடுக்கப்பெற்றிருந்தன. அவற்றுள் ஏழு பிரபந் தங்களை இன்று முற்றிலும் படித்துப் பார்த்தேன். யமக வந்தாதியில் இரண்டு மூன்று பாட்டுக்களை மாத்திரம் பார்த்துவிட்டு வைத்திருக்கிறேன். அதை முற்றிலும் படித்துப் பார்க்க எனக்கு அவகாசம் இல்லை. சுவாமிகளைப் பற்றி இன்னும் நான்கு தினத்தில் மீட்டும் நான் பேச வேண்டியிருக்கு மாதலால் இப்பொழுது இவ்வளவில் நிறுத்துகின்றேன்.

பங்குனி உத்தரமாகிய இன்று, பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை முதலிய முருகக்கடவுள் திருப்பதிகளில் அளவிட முடியாத அடியார்கள் காவடி யெடுத்துக் கொண்டும், அலகு குத்திக் கொண்டும், பக்தி ஆவேசத்துடன் பாடிஆடிக் கொண்டும் குழாங் குழாமாயிருந்து கொண்டிருப்பர். திருவாரூரின் கண்ணே நங்கள் தியாகராஜா திருத்தேரில் எழுந்தருளித் திருவுலாப் போந்து அடியார்களுக்குக் காட்சி தந்தருளுவர். நான் இன்று மலைக்கோயில் தரிசனஞ் செய்தேன்.

வருகிற சனி, ஞாயிறுகளில் இந்நகரில் நடைபெறவிருக்கும் தமிழ்ப் பண்டிதர் கூட்டத்து நிகழ்ச்சிமுறைகளில் ஒருவர் சில குற்றங்கள் கூறிக் கொண்டிருக்கின்றனரென ஒரு அன்பர் என்னிடம் தெரிவித்தபொழுது நான் குற்றங் கூறியவரைப் பற்றிச் சினத்துடன் பேசலானேன். சினமுண்டாய பொழுதில், சினமின்றிப் பேச வேண்டுமென முயன்றும் அது வெளிப்பட்டுக் கொண்டுதான் இருந்தது. ஆகவே கோபத்தை அடக்கும் ஆற்றல் எனக்குண்டாகவில்லை யென்பது தெளிவு.

**8 - 4 - 1925**

இன்று வழக்கம்போல் சில அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன். விசேட செய்தி ஒன்றும் இல்லை.

**9 - 4 - 1925**

காமன்ஸ்சபையில் தொழிற்கட்சி அங்கத்தினர் ஒருவர் 'இந்திய விஷயங்களை லார்டு ரீடிங்குடன் ஆலோசிக்கும் பொழுது மகாத்மா காந்தியையும், ஸி. ஆர். தாஸையும் அழைத்து அபிப்பிராயங் கேட்கலாமா' என்று கேட்டதற்கு, இவைகளைக் குறித்து நன்கு ஆலோசிக்க வேண்டுமென்றும் துரிதப்படலாகா தென்றும் உதவி இந்தியா மந்திரி பதில் கூறினர் என இன்று பத்திரிகையில் வெளிவந்துள்ளது.

இன்று, திருவானைக்காவில் பஞ்சப்பிராகாரக் காட்சி அன்பர்களுக்கு இன்பமளிப்பதாகும். நான் அதற்குப் போக முடியாதது வருந்தத் தக்கதே. ஒரு பெரியாருடனிருந்து உண்டும் உரையாடியும் மகிழ்வுற்றதே இன்று எனக்குத் திருப்தியளிக்குஞ் செய்தியாகும்.

**10 - 4 - 1925**

உலகத்தில் மனிதர்களின் தொகை பெருகாமலிருப்பதற் காகப் பிரஜா உற்பத்தியைத் தடுக்க (கலவி செய்வதனாற்

கருவுறாமற் செய்ய) மருந்துகளையும் கருவிகளையும் உபயோகித் தலைக் கையாடி வரும் வழக்கம் மேல்நாடுகளிலே தோன்றி எப் பக்கத்தும் பரவிவருகின்றது. காந்தியடிகள் இதனை நன்கு பரிசீலனை செய்து, இம்முறையால் மக்களின் ஒழுக்கம் மிகுதியும் கெடுதற்கு இடனுண் டென்றும், வேறு பல தீமைகளும் விளையும் என்றும் எடுத்துக் காட்டி, இதனைக் கண்டித்துச் சின்னாளின் முன் தமது 'இளைய இந்தியா' என்னும் பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். ஆனால் அவர் பிரஜா உற்பத்தி பெருகாமலிருக்க வேண்டும் என்னும் கொள்கையை அங்கீகரித்துக்கொண்டு, அதற்காகக் கையாளும் முறையைக் கண்டிக்கின்றார். பிரமசரிய ஒழுக்கத்தாலேயே அதனைத் தடுக்க வேண்டும் என்கின்றனர். இங்ஙனம் காந்தி யடிகள் எழுதியதற்கு அம்முறை வேண்டுமென்னும் கொள்கை யுடையார் மறுப்புகள் எழுதியிருக்கின்றனர். அம்மறுப்புகளில் ஒருவருடைய மறுப்புரையை அப்படியே எடுத்தெழுதிக், காந்தி யடிகள் மீண்டும் தம் கொள்கையை வற்புறுத்தெழுதி, பிறர் கொள்கையைக் கண்டித்திருப்பது இன்று பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. காந்தியடிகள் பிரஜா உற்பத்தி மிகாமலிருக்க வேண்டு மென ஒப்புக்கொள்வது தானும், மிகுதலினாலே ஜனங்கள் வயிற்றுக்கில்லாமற் கஷ்டப்படு வார்கள் என்னும் கருத்தினாலன் றென்றும், வேறு காரணத்தி னாலேயே என்றும் அவர்கள் உரையால் வெளியாகிறது.

உயர்திரு. க. மணிவாசக சரணாலய சுவாமிகள் வெற்றியூர் அன்னபூரணியம்மை மீது இயற்றிய அட்டப் பிரபந்தங்கள் திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையில் இன்று சிறப்பாக அரங்கேற்றப் பெற்றன. இதற்கு நான் தலைமையாக இருக்கும்படி பணிக்கப்பெற்றிருந்தேன். வெளியூர்களி லிருந்தும் புலவர்கள் இதற்கு அழைக்கப்பெற்று வந்திருந்தார்கள். சுவாமிகள் மிக விரைவிலே பாட்டியற்றும் ஆற்றல் படைத்திருக் கின்றனர். அவர்கள் பாடிய பல சந்தப் பாக்களை நான் பார்த்து மிக்க வியப்படைந்துளேன். கவிதா சாமர்த்தியம் உலகத்தில் ஒழிந்து போய்விடாமல் ஒரோவிடங்களில் அருகியேனும் இருந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் அது காலத்துக்கேற்ற படியும், உலகிற்குப் பயனளிக்கும் முறையில் இயற்கையை ஒட்டியும் வளர்ச்சியுற வேண்டும். சுவாமிகள் இலக்கணப் பயிற்சியும் உடையவர்களேயாயினும் சிற்சில இடங்களில் இலக்கண வழுக்களும், சிறப்பில்லாத் தொடர்களும் கொண்டு அவர்கள் பாடல்கள் இயலுதலை நான் அறிகின்றேன். அத்தகைய குறைகள்

இல்லாமல் அவர்கள் பாட்டியற்றக் கருதிச் சற்று அமைதியுடன் முயன்றால் அங்ஙனமே சிறந்த பாடல்கள் இயற்றலாகும் என்பதில் ஐயமில்லை. அரங்கேற்றத்தின் பொழுது சில புலவர்களால் சாத்துக் கவி சொல்லப்பெற்றன. நான்கு புலவர்களுக்கு மங்கல அறிகுறியான சம்பாவனைகளும் வழங்கப்பெற்றன. சுவாமிகள் தமிழ் மொழியும், சைவமும் தழைத்தோங்க வேண்டுமென்னும் பேரார்வமுடையவர்கள். அதற்காக ஒரு கலாசாலை நிறுவ வேண்டுமென்றும் மிக்க பிரயாசை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். இறைவனருளால் அவர்கள் முயற்சி இனிது நிறைவேறி நலம் பயக்க வேணடும்.

**11 - 4 - 1925**

இன்று, திருச்சிராப்பள்ளியின் மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில், சென்னை அரசியல் வளர்ச்சி நெறி அமைச்சராகிய திவான்பகதூர் T. N. சிவஞானம் பிள்ளை அவர்களின் தலைமையில் தமிழ்ப்பண்டிதர் மகாநாடு நடைபெற்றது. இது மூன்றாவது மகாநாடாகும்.

**12 - 4 - 1925**

தமிழ்ப்பண்டிதர் மகாநாட்டின் தொடர்ச்சி, இன்றும் நடைபெற்றுப் பூர்த்தியாயது. இரண்டு நாளிலும் ஆறு உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. தமிழ் சம்பந்தமாகப் பதினைந்து தீர்மானங்கள் வரையில் செய்யப்பெற்றன. 6-ல் இரண்டு உபந்நி யாசங்கள் திருவாளர், பா.வே. மாணிக்கநாயக்கர் B.E., M.C.I. (சூப்பிரண்டெண்டிங் இன்சினீர்) அவர்களால் செய்யப்பெற்றன. பிராமணர்க்கும், மற்றையோர்க்கும் இடையில் வெறுப்புணர்ச்சி மிகுந்து வருவது பெரிதும் இரங்கத் தக்கது. பல வகுப்பினரும் கூடிய ஒரு கூட்டத்தில் ஒரு வகுப்பினர் வேறு வகுப்பினரை இழிவு படுத்திக் கூறுவது எவ்வளவு இழிவும் கொடுமையும் வாய்ந்த செயல் என்பதனை உணராது போகின்றனர். ‘கண்ணோட்டத்துள்ள துலகிய லஃதிலா - ருண்மை நிலக்குப் பொறை’ என்று தெய்வப் புலவர் அறிவுறுத்திருப்பதனை ஓர்கின்றிலர். தமிழ்ப் புலவரென்பார் சிலரும் இங்ஙனம் இருக்கின்றனர். இறைவன் இவர்களைத் திருத்தியருள்க. இனி, இம்மாநாட்டுக்குத் தமிழ்ப் பண்டிதர்கள் பெரும்பாலோர் வராதிருந்துவிட்டமை பெரிதும் இரங்கத்தக்கதும், வருந்தத் தக்கதும் ஆகும். மகாநாட்டுக்கு வரவேற்புக் கழகத் தலைவரா யிருந்தவர் திருவாளர், T.M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் (M.A., B.L; M.C.I.) நானும், திரு. மு. நடேசமுதலியாரும் தமிழ்ப்

பண்டிதர் கூட்டத்தின் அமைச்சர்கள். மகாநாட்டுக்குப் பொருள் சேகரித்ததும், அதனைச் செலவிட்டுக் காரியங்களை நடத்தி யதும் திரு. மு. நடேச முதலியாரே. நான் பெயருக்கே காரிய தரிசியாய் இருந்தேன். இரு நாட்களிலும் உயர்குணம் வாய்ந்த அன்பர் சிலருடன் அளவளாவியிருந்ததே பெரிதும் மகிழத்தக்க செய்தி.

**13 - 4 - 1925**

*கலி 5020, (குரோதன ஆண்டு சித்திரை மாதம் முதல் தேதி) ஞாயிற்றுக்கிழமையாகிய நேற்று நாழிகை 58-51 க்கு கேட்டையில் பிறந்திருக்கிறது.*

வருடப்பிறப்பும் திங்கட்கிழமையுமாகிய இன்று மலைக் கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன். பி. ஏ. வகுப்பில் தமிழ் எடுத்துக் கொண்டு என்னிடம் படித்து இவ்வருடம் பரீக்ஷைக்கு எழுதியிருக்கிற ரெங்கசாமி என்ற மாணவர் தாம் ஊருக்குச் செல்வதைத் தெரிவித்து விடை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இன்றிரவு என்னிடம் வந்தார். அவர் விடைபெற்றுக் கொள்ளும் பொழுது என் அடிகளில் வீழ்ந்து பணிந்தெழுந்து, திருநீறு பெற்றுத் தரித்துக் கொண்டு, தான் பிழைகள் செய்திருப்பின் அவற்றைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு சென்றனர். இதனை நான் எதற்காக இங்கே எழுத வேண்டுமென்றால் B.A. வகுப்பில் படித்த மாணவரொருவர் தமிழாசிரியரின் அடிகளில் வீழ்ந்து வணங்குவதென்பது எவ்வளவு அருமையான செயல் என்பதனையும், எவ்வளவு போற்றத் தகுந்த தென்பதனையும் யாவரும் அறிய வேண்டு மென்பதற்காகவே. சில இடங்களில் சில தமிழ்ப் பண்டிதர்கள் மாணவர்களுக்கு இன்பமுண்டாகும் படி கற்பிக்கவும், அவர்களை ஒழுங்காக நடத்தவும் திறமையற்றவர் களாயிருக்கும் பொழுது மாணவர்கள் அவர்கள்பால் அடக்கமும் மரியாதையு மின்றி நடந்து கொள்ளுதல் இயற்கையே. அப்படி நடந் திருத்தலும் கூடும். ஆனால் தற்காலத்தில் தமிழ்ப் பண்டிதர் களைப் பற்றிப் பேசவருகின்ற பிறர் அதனையே ஒரு பாடமாகக் கற்றுக் கொண்டு ‘தமிழ்ப் பண்டிதரென்றால் மாணவர்கள் மதிப்பதில்லை. பிறரும் மதிப்புக் கொடுப்பதில்லை’ என்று இவ்வாறாகவே பேசுவது எவ்வளவு அறியாமையின் பாற் பட்டதாகும்! முன்பு ஒரு சமயம் தமிழ்ப் பண்டிதரின் நிலைமை அப்படியிருந்திருப்பினும், சென்ற பதினாறு வருடமாக நான் பார்த்துவருவதில் அத்தகைய நிலைமையில்லை யென்பதை

அறிந்திருக்கிறேன். ஒரோ விடங்களில் சிறுபான்மை யிருப்பினும் இருக்கலாம். ஆனால் மற்றை ஆசிரியர்களில் அங்ஙனம் ஒருவரும் இருப்பதில்லையோ? இரண்டு மூன்று எம். ஏ. பட்டம் பெற்று ஆங்கிலம் முதலியன போதிக்கும் ஆசிரியர்கள் பலர் மாணவர் களை ஆளுந்திறமின்றிப் பரிபவப் பட்டு வருந்தும் தன்மையை நான் அறிந்திருக்கிறேன். அவர்கள் ஒவ்வொரு வேளையிலும் பாடம் போதிக்க வகுப்பில் நுழைவதென்றால் எவ்வளவு வருத்தத் துடனும் கவலையுடனும் நுழைவார் களென்பது கூறத்தக்க தன்று. அவர்களை இழித் துரைப்பது என் கருத்தன்று. மற்றை ஆசிரியர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழாசிரியரிடத் திற்றான் மாணவர்கள் உண்மையான அன்பும், மரியாதையும், அடக்கமும் மிகுதியாக உடையரா யிருக்கின்றனர் என்பது நான் அறிந்ததும், ஏனையர்க்கு அறிவிக்க வேண்டியதும் ஆகிய உண்மை. பொதுமக்களிடத்தும் மற்றை ஆசிரியர்கட்கே மிகுதியான செல்வாக்கும் மதிப்பும் உள்ளன என்பது உண்மை.

பண்டிதர் பெருங்கூட்டத்திற்குத் தலைவராக வந்திருந்த திவான் பகதூர் T.N. சிவஞானம் பிள்ளையவர்களை வழியநுப்பு தற்காக ஜங்க்ஷன் சென்று, அவருக்கு ஏற்பட்டிருந்த சலூன் வண்டியில் அவருடனிருந்து சில நேரம் பேசிக் கொண்டிருந்து மாலை சூட்டிவிட்டு வந்தோம். இறுதியாக ஒவ்வொருவரும் கை குலுக்கித் திரும்பினோம். பிள்ளையவர்கள் என் கையைக் குலுக்கும் போது 'நாட்டார் சௌக்கிய மாயிருக்கவேண்டும்' என்று சொல்லிக் குலுக்கியது, அவர்கள் என் பால் வைத்துள்ள அன்பினைப் புலப்படுத்தியது.

**14 - 4 - 1925**

'நவசக்தி'யில் (10-4-25) பரலில், மொழிபெயர்த்து வெளி வந்த இரண்டு கட்டுரைகளிலிருந்து சில குறிப்புக்களை இங்கே எழுதுகின்றேன். 'மேனாட்டு நாகரிகமும் கீழ் நாட்டு நாகரிகமும்' என்னும் தலைப்பில் சி. எச். சூ என்பவர் எழுதிய கட்டுரையில் 'இந்துக்கள் சிந்தனை உலகத்தில் வசிப்பதில் விருப்பமுள்ள வர்கள். ஏனென்றால் அவர்கட்கு ஓய்வு இருக்கிறது; திருப்தி யுண்டு; அன்பு நிறைந்த உணர்ச்சியிருக்கிறது; மிருகங்கள் உட்பட எல்லாவற்றிலும் தெய்விக சக்தி இருக்கிறது என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. மாமிச ஆகாரத்தை ஏற்றுக் கொள்வது மதசம்பந்தமாகத் தவறு என்று இந்துக்களே அதைப் புறக்கணித் திருக்கின்றனர். இதனால், காலஞ் செல்லச் செல்ல, எளிதில் உள்ளம் நெகிழக் கூடிய, பிறரிடத்தில் பரிவு காட்டும் தன்மையதான,

*(குறுகிய நோக்கமுடைய?) பிறர்க்கு நன்மையே செய்ய வேண்டு மென்ற எண்ணத்தையுடைய பெண் தன்மையான நாகரிகம் அவர்களிடத்தில் ஊன்றிவிட்டது?' 'மேனாட்டு நாகரிகத்தில் சக்தி, முறுக்கு, சுறுசுறுப்பு, எதிர்நோக்கல், சகிப்புத் தன்மை யில்லாமை, கூட்டு அமைப்பு, எதையும் காரியத்தில் செய்து காட்டுதல் ஆகிய இக்குணங் களெல்லாம் அடங்கியிருக்கின்றன. ஓவியம், சித்திரம் முதலியவைகளிற் கூட மேனாட்டார் ஆண் தன்மையையும், கீழ் நாட்டார் பெண் தன்மையையும் விரும்பு வதைக் காணலாகும்' என்னும் குறிப்புக்கள் உள்ளன.*

*டக்கா, சர்வ கலாசாலை ஆசிரியர் ஜே. ஸி. சின்னா சென்ற பிப்ரவரி மாதத்தில் 'டக்காமஸ்லினின் மகிமை'யைப் பற்றிச் செய்த உபந்நியாச சாரத்தில், 'ஓடுந்தண்ணீர் என்று பொருள் படும் 'அப்-இ-ராவன்' என்பதும், நெசவுத்தொழிலையேற்றுக் கொண்ட வாயு என்று பொருள்படும் 'பாப்ஹோவா' என்பதும் டக்காமஸ்லினுக்குப் பெயர்களே. மாலைப்பனி (ஷாப்நாம்) என்றும் இதற்கு ஒரு பெயருண்டு. ஓடுகின்ற தண்ணீரில் போட்டால் அது கண்களுக்கும் புலனாகாது. காற்றில் மேகம் போல மிதக்கும். புற்றரையில் விழும் பனியிற் போட்டால் பனிக்கும் இதற்கும் வேற்றுமை தெரியாது. ஆதலால் இப்பெயர்கள் இவற்றிற்குக் கிடைத்தன.' 'ஜிகான்கீர் காலத்தில் இரண்டு முழ அகலமும் பத்து முழநீளமுமுள்ள ஒரு துணி (பருத்தி நூல் துணி) நானூறு ரூபாவிலையென்றும், அவுரங்கசீப் காலத்தில் 'ஜம்தானி' மஸ்லின் விலை ரூ. 250 என்றும், 1776-ம் வருடத்தில்கூட டக்காவில் தயார் செய்யப்பட்ட 'ஜம்தானி'யின் விலை ரூ.450- என்றும் சொல்லப்படுகிறது' என்னும் குறிப்புக்கள் உள்ளன.*

**15 - 4 - 1925**

*இன்று பத்திரிகையில் வெளிவந்த செய்திகளில் அகில இந்திய 'இந்துமகாசபை' இந்துக்களின் மகாநாடு 11ம் தேதி கல்கத்தாவில் நடைபெற்றதைத் தெரிவிப்பது முக்கியமானதா கும். மகாநாட்டுத் தலைவர் லாலா லஜபதி ராய். வரவேற்புக் கழகத் தலைவர் சாஸ்திர அறிஞரான ஸர். பிரபல சந்திர ராய். லஜபதி ராய் தமது பிரசங்கத்தில் தீண்டாமை யொழிதலை வற்புறுத்துகின்றார். இந்துக்களில் ஆடவரும் மகளிரும் பலத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்கிறார். இந்துக்கள் பிறர் தம்மைத் துன்புறுத்தும் பொழுது அதனைச் சகித்துக் கொண்டிருப்பது அஹிம்ஸா தர்மமாகாது என்றும், இல்லறத் தாரையும் துறவி களைப் போல் நடக்கச் சொல்வது அபிவிருத்திக்குத் தடையாகு*

மென்றும் லஜபதி கூறுவன போல்வன காந்தியடிகளின் கொள்கையைக் குறிப்பாகக் கண்டிப்பன போல் தோன்றுகிறது.

நான் ஏப்பிரல் மாதம் 5ம் தேதிக் குறிப்பில் விரித்தெழுதி யிருக்கிற என் நண்பருடன் இன்றிரவு 6-மணிமுதல் 8-மணி வரையில் பேசிக் கொண்டிருந்தேன். 'மனோன்மணீய' நாடகத்தில், காதலின் இயல்பைப் பற்றி வாணியும் மனோன்மணீயும் விவாதிப்ப தாகவுள்ள பகுதியை நான் படிக்க அவர் கேட்டுக் கொண்டிருந்தார். இன்றிரவு நான் குடும்பத்துடன் நடுக்காவேரிக்குப் பிரயாண மாவதை நான் அவரிடம் தெரிவித்துவிட்டு வந்தேன். விடுமுறை முடிவதற் குள்ளாகவே அவரைச் சந்திக்கலாமென எண்ணியிருக் கிறேன்.

### 16 - 4 - 1925

நேற்றிரவே புறப்பட்டு இன்று பகல் 1-மணிக்கு மேல் குடும்பத்துடன் நடுக்காவேரி வந்து சேர்ந்தேன். பிரயாண அலுப்பினால் இளைப்பாறிக் கொண்டிருந்ததன்றி, ஒரு வேலையும் இன்று என்னாற் செய்ய முடியவில்லை. இன்று மெத்தை அறையில் இரண்டு தேள் அடிக்கப்பட்டன. சில நாட்களாக எவ்வுயிரையும் கொல்லலாகாதென்ற உணர்ச்சி எனக்கு இருந்து வரினும் இவற்றை நான் அடிக்காது விட முடியவில்லை. இதன் காரணம் பூரண பரிசுத்தமும், நிறைந்த அருளும் எனக்கு உண்டாகாமையே.

### 17 - 4 - 1925

வெள்ளிக்கிழமையாகிய இன்று நடுக்காவேரியில் சிவாலயத் திற்குச் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

கல்கத்தாவில் நடைபெற்ற இந்து மகாசபைக் கூட்டத்தில், 'பகவத்கீதை' ஐந்து லக்ஷம் பிரதிகள் அச்சிட்டு வழங்குவதாகப் பலர் ஒப்புக் கொண்டனரென இன்று பத்திரிகையால் அறிந்தேன். இது சாலவும் போற்றத்தக்க செய்தி. கிறிஸ்தவ பாதிரிமார்கள் தங்கள் மதத்தைப் பரவச் செய்தற்காகக் கையாளும் முறைகளில், தங்கள் மதப்புஸ்தகத்தை யாவரும் சுலபமாய்ப் பெற்றுப் படிக்கும் படி அச்சிட்டுப் பரப்புவது ஒன்றாகும். இந்த அரிய முறையை இதுவரையில் இந்துக்கள் கைக்கொள்ளாமலிருந்ததே பெருந் தவறாகும். தமிழிலுள்ள திருக்குறள், திருவாசகம், சிவஞான போதம் முதலிய நூல்களையும் லக்ஷக்கணக்காக அச்சிட்டு விலையில்லாமலோ, சொற்ப விலையுடனோ யாவரும் பெற்றுப் படிக்கும் படி தமிழ் நாட்டார் செய்தல் வேண்டும்.

## 18 - 4 - 1925

சென்னையிலுள்ள கயப்பாக்கம் திருவாளர் சதாசிவ செட்டியாரவர்களால் உரையெழுதப் பெற்றுத் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் அச்சிட்டு வெளியிடப் பெறுகின்ற 'அகத்தியர் தேவாரத்திரட்டு உரை' சென்ற ஓராண்டின் மேலாக நான் பார்த்துத் திருத்தஞ் செய்து வந்தது இன்று பூர்த்தியாயது. இதை நான் பார்த்துத் திருத்தியே அச்சிட வேண்டுமென்று அக்கழகத்தினர் எனக்கு அநுப்பிய காலத்தில், 'பிறர் எழுதிய உரையை நான் திருத்துவது' முறையன்றென்று அவர்கட்கு எழுதியிருந்தேன். ஆனால் அக்கழக அமைச்சராகிய திருவாளர், வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள், செட்டியாரவர்களிடம் இதனைத் தெரிவித்து அவர்கள் சம்மதிபெற்றே எனக்கு அநுப்பியதாகவும், நான் எவ்வகையான திருத்தமும் செய்யலாமென்றும் எனக்குத் தெரிவித்தார்கள். நானும் திருத்தஞ் செய்து வந்தேன். ஒருவர் எழுதிய உரையை முற்றிலும் என் கருத்திற்கு இணங்கத் திருத்துவது எளிதாயிருக்கவில்லை. உரை நடைபெற்றுள்ள முறை அவ்வளவு சிறப்பாகத் தோன்றவில்லை. செட்டியாரவர் கள் திருமுறைகளில் மிகுந்த பயிற்சியும், பிரசங்க ஆற்றலும் வாய்ந்தவர்களே. எனினும் உரையெழுதுவதென்பது வேறுவகையான ஆற்றல்.

இன்று சித்திரைச் சதயம் திருநாவுக்கரசர் திருநாளாகும். இந்நன்னாளில் அடியார் பூசையாவது தமிழ் மறைமுழக்க மாவது இவ்வூரில் காணவும் கேட்கவும் கூட வில்லை. நான் இன்றிரவு இவ்வூர்க்குக் கிழக்கே ஒரு மைலில் உள்ள திருவாலம் பொழில் சென்று இறைவரைத் தரிசித்து வந்தேன். திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் திருமடங்கட்டிக் கொண்டு, உழவாரத் தொண்டு செய்துவந்த நாளில் திருவாலம் பொழிலுக்கும் வந்து உழவாரத் தொண்டு செய்தனரெனச் சொல்கின்றார்கள். இவ்வூர் திருப்பூந்துருத்தியைத் தொடர்ந்து மேல்புறமாக இருக்கின்றது. கோயிலில் இறைவர் திருமுன் ஒருபுறமாகத் திருநாவுக்கரசர் திருவுருவம் இருக்கின்றது. இதில் பூசை செய்வோர் அன்பு சிறிதும் இல்லாத வன்கண்ணராகக் காணப் பட்டனர். அவர் செய்த தீபாராதனை கற்பூரத்தைக் கொளுத்து வதும் கையால் அணைப்பதுமாக இருந்தது. வெகு விரைவாகக் கோயிற் கதவங்களைத் திருக்காப்பிட்டார். நான் என்னை உள்ளே வைத்து மறந்து சாத்திவிடுவரோ என எண்ணித் துரிதமாகப் பிராகாரம் வலம் வந்தேன். நல்ல வேளையாகக் குருக்கள் இருவரும் கோயில் வாசலில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப்

புகையிலை போட்டுக் கொண்டிருந்தனர். இத்தகைய செயல்களை மெய்யன்பர்களாயுள்ளார் கண்டால் என்ன பாடுபடுவார்களோ தெரிந்திலது. திருநாவுக்கரசர் போலும் பெருமக்களெல்லாம் எண்ணிறந்த அடியார் கூட்டங்களுடன் வழிபட்டும் தொண்டு செய்தும் சிவ விளக்கம்பொலியச் செய்த இந்நாட்டிலே திருக்கோயில்களின் நிலைமை இவ்வாறிருக்கிறது! இதுவும் அவனது திருவருள் தானோ?

சிவஞானபோத மகாபாடியம் 1906-ம் ஆண்டில் பூரணமின்றி அச்சிட்டிருந்ததனை முன்பு படித்திருந்தேன். மூன்றாண்டுகளின் முன் பூரணமாக அச்சிட்டு வெளியாயதை இன்று படிக்கத் தொடங்கியிருக்கிறேன்.

**19 - 4 - 1925**

அரசாங்கத்திற்குத் துன்பமிழைப்பதற்காக இரகசியமாய்ச் சதியாலோசனைகளும், கொடுஞ்செயல்களும் செய்து வருகின்ற அராஜகக் கூட்டத்தார் வட இந்தியாவிலே இருந்து வருகின்றனரென்பதைப் பத்திரிகை படிப்போர் யாவரும் அறிந்திருப்பர். அவர்களை அடக்கும் நோக்கத்துடன் சமீபத்திற்றான் இந்திய அரசாங்கத்தினர் ஒரு சட்டம் இயற்றியிருக்கின்றனர். அச்சட்டமானது நிரபராதிகளுக்கெல்லாம் தீங்கிழைப்பதாகும் என்று தேசாபிமானிகள் பலரும் அதனைக் கண்டித்து வருகின்றனர். எனினும் அவர்களனைவரும் அராஜகத்தை மிகவும் வெறுக்கின்றனர். நிற்க- அராஜகக்காரர்கள் பலர் காந்தியடிகளுக்குக் கடிதமெழுதி, அராஜகக்காரர்களாகிய தாங்கள் பெரிய தேசாபிமானிகள் என்றும், தங்களாற்றான் இந்தியாவுக்கு விடுதலை கிடைக்கப் போகிறதென்றும், தங்களைக் காந்தியடிகள் போல்வார் வெறுப்பது பெரிய அநீதியாகுமென்றும் இங்ஙனம் தெரிவித்து வருகின்றனர். பல கேள்விகளும் கேட்டு எழுது கின்றனர். அவற்றில் முக்கியமானவும், புத்திசாலித்தனம் வாய்ந்தனவுமாகவுள்ள கடிதங்களையெல்லாம் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' வில் வெளியிட்டு, கேள்விகளுக்குப் பதிலும் எழுதிக் கொண்டு வந்திருக்கின்றனர். காந்தியடிகள், அராஜகக்காரர் தம்மை எவ்வளவு கடுமையாகத் தாக்கி எழுதினும், தாம் அவற்றைப் பொருட்படுத்தாமல் சாந்தமான முறையில் கேள்விகளுக்கு விடையெழுதி, அராஜகம் எந்த வகையிலும் தீதேயன்றி நன்மையன்றென நிரூபணஞ் செய்வது படிப்பதற்கு இன்பமாயிருப்பதுடன், யாவர்க்கும் பயனளிக்கக் கூடியது மாகும். அதிலும் கடைசியாக, இன்று வந்த 'சுதேசமித்திர'னில் வெளியான அராஜகக்காரரின்

கேள்விகளும், காந்தியடிகளின் பதில்களும் மிகுந்த வியப்பை விளைக்கின்றன.

**20 - 4 - 1925**

திங்கட்கிழமையாகிய இன்று நடுக்காவேரியில் சிவாலயத்தை அடைந்து கடவுளைத் தரிசித்து வந்தேன். வேறு விசேடமொன்று மில்லை. நாட்கள் எப்படியோ கழிந்து விடுகின்றன.

**21 - 4 - 25**

டாக்டர் பி. வரதராஜலுநாயுடு சேரமாதேவி 'குருகுல'த்திற்கு மாறாகத் தமிழ்நாட்டின் பல பாகங்களிலும் உபந்நியாசஞ் செய்து வருகின்றனர். திருச்சிராப்பள்ளி, தஞ்சை முதலிய இடங்களில் அவர் உபந்நியாசித்தது இன்று பத்திரிகையில் வெளி வந்துளது. தாம் செய்வது சரியான தென்றும், முக்கியமானதென்றும் அவருக்குத் தோன்றி யிருக்கலாம். ஆனால் அவர், 'இதன் பொருட்டாகப் பிராமணரல்லாதார் ஒருசொட்டு ரத்தம் மிச்சம் இருக்கும் வரையிலும் போராடுவார்கள்.' என்று வீரவாதங் கூறுவது பைத்தியக்காரத்தனம் போல் தோன்றுகிறது. பிராமணரல்லா தாருக்குள்ளேயே எவ்வளவு வேற்றுமைகள் இருக்கின்றன என்பதை இவர் உணராததென்னை? இவரது கொள்கையும் என் கொள்கையும் ஒன்றே. அக்கொள்கையை நிறைவேற்றுதற்கு இவர் மேற்போட்டுக் கொண்டுள்ள முறை சரியன்றென் றென்பதே என் கருத்து. இவரது செயலால் சமத்துவத்திற்கு மாறாக வேற்றுமையும் விரோதமும் விளையவும் கூடும். சமத்துவம் என்பது அன்பினால் உண்டாகற்பாலது.'

மகாத்மா காந்தி, பசுசம்ரக்ஷண சபை ஒன்று ஏற்பட்டு விருத்தியடைந்து வருவதாகவும், அதன் கூட்டம் சமீபத்தில் கூட இருப்பதற்கு இந்தியாவிலுள்ள ராஜாக்களும், மகா ராஜாக்களும் வரவேண்டுமென்றும், வர இயலாதவர்கள் பொருள் கொடுத்தல் முதலியவற்றால் தங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்றும் தமது பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருக்கின்றனரென இன்று படித்தேன்.

தேவதாசிகளைப் பற்றி, மகாத்மா காந்தி தமது 'யங் இந்தியா'வில் எழுதியிருப்பதன் மொழிபெயர்ப்பு இன்று 'சுதேசமித்திர'னில் வந்துளது. தாம் தென்னாட்டிற்கு வந்த பொழுது பலரும் வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திரங்களில், தேவதாசிகட்காக வாசித்துக் கொடுத்தது தமக்கு மிகவும் உருக்கத்தை விளைத்த தென்று தொடக்கத்திற் கூறிக் கொண்டு காந்தியடிகள்

அக்கட்டுரையை எழுதியிருக்கின்றனர். தங்கள் கற்பை விற்றுத் தீயநடையினாலேயே ஒருவர்க்கத்தார் இங்ஙனம் வாழ்ந்து வருவதை நினைந்து மிகவும் துயருறுகின்றார். இப்படியாக ஒருவர்க்கத்தையும், சட்டத்தையும் ஏற்படுத்தின ஆடவர்கள் மிகவும் கொடியவர்களென்கின்றார். இத்தீங்கிற்கு அம்மகளிரைப் பார்க்கிலும் ஆடவர்களே பெரிதும் காரணமாவார்கள் என வாதித்துக் காட்டியிருக்கின்றனர். கடைசியாக இவ்வெளிய வர்க்கத்தைச் சீர்திருத்துவதற்கு எல்லோரும் ஆலோசித்து முயல வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றனர். தொல்காப்பியம் என்னும் பழைய தமிழ் நூலிலும் இவர்களைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. இந்த வகுப்பு எப்படி உண்டாயது என்பது தான் அறிய முடியாததும் ஆச்சரியப்படத்தக்கதும் ஆகின்றது. அகப் பொருளில் பரத்தையிற் பிரிவு வைத்திருப்பதும், அப்பிரிவு தானும் எல்லாத் தலைமக்கட்கும் உண்டென விதித்திருப்பதும் அக்காலத்தில் பெருஞ் செல்வர்களாயுள்ளார் அனைவரும் இத்தீய வழக்கத்திற்கு உட்பட்டிருந்தனர் என்பதனைக் காட்டு கின்றன. பரத்தையரில் 'ஒருவன்றனக்கே உரிமைபூண்டு' வருகின்ற வர்களும் உளர். அவர்கள் கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள் போலும். தலைவிக்கு ஊடலையுண்டாக்கி, அன்பும் கலவி யின்பமும் சிறந்து காட்டுமாறு செய்வது பரத்தையிற் பிரிவாயினும், அஃது அயோக்கியமான செயலென்பதே அதனாலும் வெளியா கின்றது. இவர்கள் பரத்தையர், பொருட் பெண்டிர் அதாவது விலைமாதர், பொது மகளிர் என்பன வாகிய பெயர்களால் வழங்கப் பெறுகின்றனர். தேவதாசி, தேவடியாள், உருத்திரகணிகை என்னும் பெயர்கள் திருக்கோயில்களில் ஆடற்றொண்டும், பாடற்றொண்டும் முதலிய தொண்டியற்றிய காரணத்தாற் போந்தனவாதல் வேண்டும். இடைக்காலத்தி லிருந்த பெரியோர்கள் இவ்வகுப்பினரும் கடைத்தேற வேண்டு மென்னுங் கருணையினால் இத்தொண்டு நெறியை ஏற்படுத்தி வைத்தனர் போலும்? இப்பொழுது அந்நெறிதானும் சீர்கெட்டு விட்டது. தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தமது பெருநூலில், 'வரைவின் மகளிர்' என ஓர் அதிகாரங் கூறி அதிற் பரத்தையரிணக்கத்தை மிகவும் கடிந்திருக்கின்றனர். 'பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில், ஏதில் பிணைந்தழீஇ யற்று' 'வரை விலா மாணிழையார் மென்றோள் புரையிலாப், பூரியர்களாழு மளறு' என்பன காண்க. தமக்கு உறுதி நாடி ஒழிக்கவேண்டுமென்று தெய்வப்புலவர் வற்புறுத்திய இத்தீய ஒழுக்கத்தை அவ்வருக்கத்தின் மேலுள்ள இரக்கத்தினாலும்

ஒழிக்க வேண்டுமென்று காந்தியடி களென்னும் முனிவர் பெருமான் நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

**22 - 4 - 1925**

நேற்று, டாக்டர் பி. வரதராஜலு நாயுடுவின் குருகுலப் போரைப் பற்றி எழுதியிருந்தேன். இன்று வந்த பத்திரிகையில், அவர் மாயூரத்தில் உபந்நியாசஞ் செய்த பொழுது கூட்டத்தில் பெருங்குழப்பம் உண்டாகிப் பேசமுடியாது போய்விட்ட தென்று வெளியாகியிருக்கிறது. குருகுலத் தலைவராகிய வ. வெ. சு. ஐயரவர்கள் தமது தலைமைப் பதவியை ராசி நாமாச் செய்து மேற்படி ஆசிரம அங்கத்தினர்களுக்கு எழுதியுள்ள கடிதமும் வெளியாகியிருக் கிறது. தாம் சமாதானத் துக்கு, எவ்வளவு இணங்கி வந்தும், நாயுடுவும், அவர் போன்றவர்களும், தம்மீது உள்ள துவேஷத்தால் கலவரஞ்செய்து வருகின்றனர் என்னும் காரணத்தால் தாம் ராசிநாமாச் செய்வதாக அதில் கூறியிருக்கின்றனர்.

சாதி வகுப்புப் போர்களும், அரசியற் கட்சிப் போர்களுமே யல்லாமல், சமயப் போர்களும் நிகழ்ந்து கொண்டு தானிருக் கின்றன. இந்து முஸ்லீம் போர் போன்ற மதச்சண்டைகள் ஒரு புறமிருக்க, இந்து மதத்தின் உட்பிரிவுகளுக் குள்ளேயே சண்டை சச்சரவுகள் இருந்து கொண்டிருக்கின்றன. சைவ வைணவப் போரும், வேதாந்த சித்தாந்தப் போரும், தென்கலை வடகலைப் போரும் பதினைந்து இருபது ஆண்டுகளின் முன்பு இந்நாட்டில் கடுமையாக இருந்தன. இப்பொழுது அவ்வளவில்லையென்பது உண்மையே. எனினும் அவை ஒவ்வொரு சமயங்களில் வெளிப் பட்டுவிடுகின்றன. சில மாதங்களாகவே ஸ்ரீரங்கத்தில் தென்கலை வடகலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வருவது தெரிகிறது. இந்து சமயம் என்று சொல்வதில் ஒரு பிரிவு வைஷ்ணவம் என்பது. இதற்குள்ளேயே தென்கலை வடகலை என்ற பிரிவுகள். நான் இவ்வகையான வேற்றுமைகளையே ஆக்ஷேபிக்கவில்லை. ஆன் மார்த்த விஷயத்தில் அவரவர்களுக்கும் சுதந்திரம் இருக்க வேண்டுவதே. கொள்கை அல்லது தத்துவங்களைப் பொறுத்து வாதாடினால் பரிகாசத்திற்கேனும் இடமின்றியிருக்கும். இன்று வந்த பத்திரிகையில், ஸ்ரீரங்கத்திலே ஒரு மண்டபத்தில் வடகலை நாமம் போட்டுவைத்தார்களென்றும், அதனால் அங்கே சுவாமி விடப்படவில்லையென்றும் இங்ஙனமே வீதிகளின் தோரணங் களிலும் ஒருவர் ஒருவரின் மாறுபட்டு வடகலை நாமமும் தென்கலை நாமமும் போட்டு வைத்துக் கலவரம் விளைத்துக் கொண்டார்களென்றும் வெளியாகியிருக்கிறது. அன்பையே

அடிப்படையாகக் கொண்டதும், சகல சுவதந்தரங்களையும் இழந்து இறைவனைச் சரண்புகும் படி போதிப்பதுமாகிய மதத்தினை அநுசரிப்போர் இவ்வளவு இழிந்த நிலைமைக்கு வந்து விட்டனர். ஆன்ம ஈடேற்றத்திற்குரிய மதங்கள் ஆன்மாக்களை நிரயத்தில் வீழ்த்தும் சாதனங்களாகச் செய்து கொள்ளப் படுகின்றன.

**23 - 4 - 25**

இந்திய தேசீய மகாசபையாகிய 'காங்கிரஸ் மகாசபை'யில் மிதவாதிகள் என்றும் அமிதவாதிகள் என்றும் இருபிரிவினர் இருந்து வந்திருகின்றனர். காங்கிரஸானது சிலகாலம் மிதவாதிகளின் ஆதிக்கத்திலும் சிலகாலம் அமிதவாதிகளின் ஆதிக்கத்திலும் இருந்து வந்தது. காலஞ் சென்ற இருபெருந்தலைவர்களாகிய கோகலே, திலகர் என்பவர்களை முறையே இரு கட்சிக்கும் உதாரணமாகக் கொள்ளலாம். மகாத்மா காந்தியானவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்து, இந்தியாவில் ராஜீய வேலைகளை மேற்போட்டுக் கொண்டு நடத்தத் தொடங்கிய பின்பு 'ஒத்துழையாமையியக்கம்' என்பது அவரால் ஏற்படுத்தப் பெற்றது. காங்கிரஸ்காரர்கள் அனைவரும் ஒத்துழையாதவர்கள் ஆயினர். நாட்டுப் புறங்களிலுள்ள பாமர ஜனங்களிடையேயும் ஒரு வகையாகத் தேசீய உணர்ச்சி பரவலாயிற்று. காந்தி என்னும் பெயர் பெண்டிர்களும் பாலகர்களும் ஆகிய அனைவர்க்கும் தெரியக்கூடியதாயிற்று. காந்தியடிகள் அரசாங்கத்தாரால் சிறைவைக்கப் பெற்றிருந்த பொழுது, இந்தியாவின் நிலைமையை ஆராய்ந்தறியத் தொடங்கிய, காங்கிரசைச் சேர்ந்த கமிட்டியினர் இரு கட்சியாகப் பிரிந்தனர். ஸி. இராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் முன்பு போலவே சட்ட சபைப் பிரவேசம் முதலியன கூடாதென்றார்கள். இவர்கள் மாறுதல் வேண்டாதார் எனப் பெறுவர். நேரு, தாஸ் முதலியவர்கள் சட்டசபை பிரவேசம் முதலியன வேண்டுமென்றார்கள். காங்கிரசில் இராஜகோபாலாச் சாரியார் வெற்றி பெற்றமையாலே நேரு முதலியவர்கள் 'சுயராஜ்யக்கட்சி' என ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். பின் காந்தியடிகள் சிறையினின்று வெளிவந்ததும், சுயராஜ்யக் கட்சியினர்க்கும் காங்கிரசில் இடங்கொடுத்தனர். காந்தியடிகள் மாறுதல் வேண்டாதவரேயாவர். இப்பொழுது இவையன்றி, மிதவாதக்கட்சி, ஜஸ்டிஸ் கட்சி என்பன போலும் கட்சிகள் காங்கிரசின் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் இருக்கின்றன. நிற்க, இந்தியா சட்ட சபையில் இடம் பெற்ற சுயராஜ்யக் கட்சியின் அச்சபையில் ஒரு கட்சியிலும் சேராது சுயேச்சையா யிருந்தவர்களுடன் சேர்ந்து ஒப்பந்தஞ் செய்து கொண்டு ஒரு

புதிய கட்சியை உண்டாக்கினார்கள். பண்டிதர் மதன்மோகன மாளவியா, ஜின்னா முதலியவர்கள் சுயேச்சாவாதிகளாவர். சுயராஜ்யக் கட்சியும், சுயேச்சைக் கட்சியும் சேர்ந்துண்டான கூட்டுக்கட்சிக்குத் 'தேசீயக்கட்சி' என்று பெயர். இவர்கள் இப்படிச் சேர்ந்து வேலை செய்து வரும் பொழுது சுயேச்சைக் கட்சியினர் பிரிந்து விட்டனர். தாம் பிரிந்த காரணங்களை விவரித்து ஜின்னா பத்திரிகைக்கு எழுதியிருந்தனர். அதில் அவர் சுயராஜ்யக்கட்சியினர் மேல் பல குற்றங்களைச் சுமத்தியுள்ளார். ஆனால் சுயராஜ்யக் கட்சித் தலைவராகிய பண்டிதர் மோதிலால் நேரு, சுயேச்சைக் கட்சியினர் மோசஞ் செய்து விட்டார் களென்றும், தேசத்துக்குப் பெருந்தீங்கிழைத்து விட்டார்கள் என்றும் காட்டி ஒரு நீண்ட கட்டுரை எழுதி யிருக்கின்றனர். அஃது இன்று பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. அதில் தேசீயக் கட்சி என்னும் கூட்டுக்கட்சி உண்டான வரலாறு தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 24 - 4 - 25

கார்த்திகையும் வெள்ளிக்கிழமையும் ஆகிய இன்று நடுக்காவேரியில் சிவாலயத்திற்குச் சென்று இறைவரைத் தரிசித்து வந்தேன். வேறு விசேடச் செய்தி ஒன்றுமில்லை.

## 25 - 4 - 25

ஸ்ரீமான் ஸி. ஆர். சீனிவாசையங்கார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் அடிக்கடி பல அரிய விஷயங்களைப் பற்றிக் கட்டுரையெழுதி வருவது பலரும் அறிந்தது. இப்பொழுது 'நாடகங்கள்' என்னும் தலைப்பில் ஓர் கட்டுரையெழுதி வருகின்றனர். இதில் பல அரிய செய்திகள் உள்ளன. "லளித விஸ்தர மென்ற புத்த சரித்திரத்தில் (இது திபேத்தன் பாஷையில் செய்யப்பட்டுப்பின் சம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கப் பட்டது) புத்தபகவான் பால்யத்தில் எல்லாச் சாஸ்திரங்களிலும் கலைகளிலும் பரீக்ஷிக்கப்பட்டபொழுது நாட்டிய நாடகமும் அவைகளில் ஒன்றென்று சொல்லப்படுகிறது. திபேத்திலுள்ள பரம்பரையான ரஹஸ்யகிரந்தங்களின்படி கௌதம புத்தருடைய நிருவாணம் (560-பி. சி.) என்று ஏற்படுகிறது. கும்பகோணம் சாரதா பீட மடத்திலுள்ள பிராசீன கிரந்தங்களின்படி ஆதிசங்கரருடைய காலம் (509-பி.சி.) என்று தெரிகிறது. இவ்விஷயம் திபேத்திலுள்ள மதாச்சாரி யார்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. புத்த பகவான் 80-வது வயதில் பரநிருவாணத்தை அடைந்தார். ஆகையால் 640-பி.சி.க்கு வெகுகாலத்திற்கு முன்பே இந்தியாவில்

நாடகங்கள் வழங்கியிருக்க வேண்டும்'' என, இன்று 'மித்திர'னில் வெளியான அக்கட்டுரையில் எழுதப்பெற்றுளது. புத்தர் நிர்வாண காலம் சிறிது ஏற்றத்தாழ்வாகக் கேட்கப்பட்டு வருகின்றது. சங்கரர் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு என இப்பொழுது சரித்திரக்காரர்கள் கருதுகின்றனர்.

**26 - 4 - 25**

இன்று யாதொரு விசேடமும் இல்லை.

**27 - 4 - 25**

திங்கட்கிழமையாகிய இன்று இவ்வூரில் (நடுக்காவேரி) சிவாலய தரிசனஞ் செய்தேன். வேறு விசேடமில்லை.

என் தம்பிகளுடன் பங்கு பிரித்துக் கொள்ளும் விஷயம் இன்று பேசப்பெற்றது. இராமாயணத்திலிருந்து இராமன் முதலானவர்களுடைய சகோதர தர்மத்தையெடுத்து நான் மற்றவர்களுக்குப் போதிப்பதனாலும் அழகாகப் பிரசங்கிப் பதனாலும் யாது பயன்? அந்நால்வரில் ஒருவருடைய குணத்தின் ஒரு பகுதியும் எங்கள் நால்வரில் ஒருவர்க்கும் ஏற்படவில்லை. அற்பவிஷயத்திலும் விட்டுக் கொடுக்கும் இயல்பின்றி என் உளம் அழுக்கடைந்திருக்கின்றது. இத்துணைச் சிறுமையுடைய நான் பெரிய காரியங்கள் செய்ய வேண்டுமென எண்ணுவதும் பேசுவதும் உண்மையாதல் எங்ஙனம்?

**28 - 4 - 25**

பிரஞ்சுதேசத்துப் பார்லிமெண்டுக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் கீழேதள்ளி அடித்துக் கொண்டனரென்றும், அதனால் அவர்கள் தேகத்தில் இரத்தம் பெருகிற்றென்றும், சிலருக்குப் பல் உடைந்து போயிற்றென்றும் (லண்டன், ஏப்ரல் - 23) இன்று வந்த 'சுதேசமித்திர' னில் வெளியாகியிருப்பதைப் பார்த்தேன்.

அமெரிக்காவைச் சேர்ந்த வாஷிங்டன் பட்டணத் திலிருந்து டாக்டர் ஹரிலித்கர் என்ற மனித சாஸ்திரநிபுணர் சிம்லாவிற்கு வந்து ஒரு பிரசங்கம் செய்திருக்கின்றனர். மனிதன் உற்பத்தியான தெப்படி, அவனுடைய வருங்கால நிலைமை எப்படியிருக்கும் என்பவற்றைக் குறித்து ஆராய்ச்சியுடன் பேசினார். இங்குள்ள சிவலிங்க மலையில் 5-வகையான மனிதக் குரங்குகளின் இருப்பிடத்தையறிந்து மனித உற்பத்தி சாஸ்திர நுட்பங்களை இன்னும் ஆராய்ச்சிசெய்வது தான் அவர் இந்தியாவுக்கு

வந்ததன் நோக்கம். மனித உற்பத்திக்கான அறிகுறிகள் மேற்படி சிவலிங்க மலையில் இருப்பதால் அதை இந்தியர் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டுமென்றும், உலகத்திலுள்ள எல்லா சாஸ்திர மேதாவிகளும் இந்தச் சிவலிங்க மலை இரகஸ்யத்தையே அறிய ஆவலாயிருக்கிறார்களென்றும், மனிதர் உற்பத்தியாகுமுன் சிவலிங்கமலைக் குரங்குகளின் உருவந்தான் அவர்களுக்கிருந்ததென்றும், சென்ற 5-லக்ஷம் வருஷத்திற்குள் மனிதனின் மூளைவிருத்தியாகிவிட்ட தென்றும், நீக்ரோவர், வெள்ளைக்காரர் உட்பட எல்லா ஜாதியார்க்கும் உற்பத்திஸ்தலம் ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்தார் - என்று ‘சுதேசமித்திரன்’ சிம்லாச் செய்தி கூறுகின்றது.

## 29 - 4 - 25

கூர்ஜரத்தில் ஓர் ஊரிலே ஒரு வைதீக பிராமணர் தமது வீட்டிலேயே பஞ்சமர்களுடைய கூட்டம் ஒன்றைக் கூட்டி வைத்தனர். அந்தப் பிராமணருடைய கிழத்தாயார் உட்படப் பிராமணஸ்திரீகள் அதற்குச் சம்மதித்தே மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். இவ்வைபவத்தைக் காண மகாத்மா காந்தியும் அங்கே விஜயஞ் செய்திருந்தனர். அவ்வீட்டு ஆடவரும் மாதரும் தங்கள் கையால் நூற்றுநெய்த கதராடையே தரித்திருந்தனர். நாலைந்து பிராமணஸ்திரீகள் காந்தியடிகளை நமஸ்கரித்துச் சென்றனர் - என்னும் செய்தி இன்று வந்த பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

ஜெர்மனி தேசத்துக் குடியரசுத் தலைவர் பதவிக்கு தேர்தல் நடந்ததில் வான் ஹிண்டன் பர்க் என்பவர் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார் என்ற விபரம் இன்று வந்த பத்திரிகையில் பிரசுரிக்கப் பெற்றுளது. இவர் மகாயுத்தம் நடந்த காலத்தில் ஜர்மன் பிரதமதளகர்த்தராக விளங்கினார். இவர் தேர்ந் தெடுக்கப் பெற்றது குறித்து இங்கிலாந்து, பிரான்சு முதலிய நாடுகளில் மிக்க பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

## 30 - 4 - 25

இன்று ‘சுதேசமித்திர’னில் பல அரிய செய்திகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் எல்லோருடைய கவனத்தையும் கவரத் தக்கதும் யாவரும் வருந்தத்தக்கதுமாகிய செய்தி சர். பி. தியாகராச செட்டியார் உயிர் நீத்தனர் என்பதாகும். இவர் 1852-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 27 -ஆம் தேதி பிறந்தார். நாற்பது வருஷகாலம் சென்னை நகர சபையில் சம்பந்தப்பட்டிருந்தார். கடைசியில்

அதன் தலைவராகவும் இருந்து சமீபத்தில் விலகினார். சீர்திருத்தம் ஏற்படுவதற்கு முன்னும், ஏற்பட்ட பின்னும் சென்னைச் சட்டசபை அங்கத்தினராக இருந்து வந்திருக்கிறார். 1919-ல் திவான் பகதூர் பட்டமும், 1920-ல் நைட் பட்டமும் கிடைக்கப் பெற்றார். ஒருவாரமாகப் பிளவை யுண்டாகி 1925-ஏப்ரல் 28-ஆம் தேதி இரவு தமது 73-வது வயதில் காலஞ் சென்றனர். இவரது மரணத்தைக் குறித்துச் 'சுதேசமித்திரன்' உப ஆசிரியக்கலத்தில் தொடங்கும் பொழுதே, 'எது சரியென்று தமது புத்தியிற் பட்டதோ அதன் பொருட்டுப் போராடுவதில் பின் வாங்காதவரும், அப்படிப்பட்ட போராட்டங்களிலேயே தமது வாழ்நாள் முழுமையும் ஈடுபட்டிருந்தவருமான ஸர். பி. தியாகராச செட்டியார் நேற்றிரவு காலகதியடைந்து விட்டாரென்று அறிந்து மிக வருந்துகின்றோம்' என்று எழுதப் பெற்றுளது. மற்றும் அதிலுள்ள சில வாக்கியங்களை இங்கே எடுத்துக் காட்டுகின்றேன்: 'முனிசிபல் வாழ்வு சம்பந்தப்பட்ட வரையில் இந்நகரின் தலைவராகவும் முதற் பிரஜையாகவும் பலவருஷங்களாக அவர் விளங்கி வந்திருக்கின்றார். முனிசிபல் நிர்வாகத்தைச் சீராக்கவும், உரிமைகள் ஜனங்களுக்குக் கிடைக்கும் படி செய்யவும் முக்கியமாக அவர் உழைத்தவர். வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் அவருக்கு மிகுந்த சிரத்தை யுண்டாகையால் அவைகளின் சுவாதீனத்தின் பொருட்டு மிகப் பாடுபட்டார். இத்தேசத்தில் தொழில்கள் ஏற்பட்டுச் செழிக்கும்படி கவர்ன் மெண்டார் எவ்வித உதவியும் செய்ய வேண்டுமென்று அவர் செய்த போராட்டங்களை அளவிட முடியாது . . . முதல் முதல் காங்கிரஸ் கூடுவதற்கு முன் எல்லா மாகாணத் தலைவர்களும் சேர்ந்து ஒரு கிளர்ச்சி செய்ய வேண்டு மென்ற விஷயமாக 1885-ம் வருஷ மத்தியில் சென்னையிற் கூடிய கனவான்களில் அவரும் ஒருவர். அவர் ஒரு பெரிய தீர புருஷர்.'

சென்னை நகர பரிபாலன சபைத்தலைவர் பதவி தேர்ந் தெடுக்கும் உரிமை கிடைத்தவுடனே முதன் முறையும், அடுத்த முறையும் இவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதும், சீர்திருத்த சட்டசபையில் சென்னை நகரத் தொகுதிக்கு இவர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதும், சென்னையில் இவருக்கிருந்த செல்வாக்கை நன்கு விளக்கும். நான் இவ்வளவு தூரம் இவரைப் பற்றி எழுதி வருவது இவர் புரிந்த மற்றொரு அரிய செயல் பற்றியே. காலஞ்சென்ற டாக்டர் T.M. நாயருடன் சேர்ந்து 'தென்னிந்திய பிராமணரல்லாதார் இயக்க'த்தை உண்டாக்கிய தலைவர் இவரே. இவர் இவ்வியகத்தை

உண்டாக்கியிராவிட்டால் திராவிட மக்களுக்கிடையில் இப்பொழுது காணப்படும் அளவுதானும் எழுச்சி உண்டாயிராது. திராவிட சமூகமானது சிறுதொகையினரான பிராமணரின் ஆதிக்கத்தினின்று விடுபடவோ, தனக்குள் ஆண்மை முயற்சி முதலியவற்றை உண்டாக்கிக் கொள்ளவோ நினைக்கவும் முயலவும் செய்தது இவ்வியக்கமே. இவ்வியக்கத்தில் சம்பந்தப் பட்டவர்களிற் பலர் வகுப்புத்துவேஷம் முதலியவற்றையே பிரதானமாகக் கொண்டு இவ்வியக்கத்திற்குப் பெருமைக் குறைவை விளைத்து வந்தார்களாயினும் பொதுவாக நோக்கு மிடத்து இவ்வியக்கம் இன்றியமையாத தென்பதில் சிறிதும் ஐயமில்லை. நாட்டிலே சமத்துவம் ஏற்படுதற்கும், பிராமணர்கள் திருந்தி நன்னிலை யடைவதற்கும் கூட இவ்வியக்கம் சாதனமான தென்பது என் அபிப்பிராயம். இவ்வியக்கத்தை உண்டாக்கினமை யால் தியாகராச செட்டியார் தென்னிந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான மக்களின் உள்ளத்திலே நிலவுவாராயினர். இவர் சீர்திருத்த சட்ட சபையில் முதல் அங்கத்தினரான பொழுது இவரது கட்சியே மெஜாரிட்டி ஆனமையால் இவர் மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ளும்படியும், மற்றை மந்திரிகளையும் ஏற்படுத்தும்படியும் கவர்னரால் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் இவர் தமக்கு மந்திரி பதவி வேண்டாமென்று மறுத்து, வேறு மூவரைத் தேர்ந்தெடுத்து, தமது தியாகத்தைப் புலப்படுத்தினார்.

பஞ்சாப் முதலிய வடஇந்திய மாகாணங்களில் சீக்கியரின் ஆலயங்கள் பல இருக்கின்றன. அவற்றுக்கு ஏராளமான சொத்துக்களும் பூர்வீர்கர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள மடாதிபதிகளைப் போலவே அச்சொத்துக் களை மேற்பார்த்து ஆலயபரிபாலனஞ்செய்வோர் மகந்துக்கள் எனப்படுவர். மகந்துக்களில் பெரும்பாலார் மேற்படி தர்ம சொத்துக்களைத் தம் சொந்த ஆடம்பரத்திற்கும் துன்மார்க்கச் செயல்கட்கும் செலவிட்டுவந்தனர். தர்ம சொத்துக்கள் வீணாகாமல் காப்பதற்காகச் சீக்கியர் குருத்துவாரக்கமிட்டி களை (குருத்துவாரம் - சீக்கியர் தொழுமிடம்) ஏற்படுத்தி, கமிட்டி மூலம் தர்மசொத்துக்களை மேற்பார்த்து, மகந்துக்களை அப்புறப்படுத்த முயன்றனர் அவ்வியக்கத்தை மகந்துக்கள் எதிர்த்தனர். கவர்ன்மெண்டார் மகந்துக்கள் சார்பில் நின்று குருத்துவார இயக்கத்தை நசுக்க முயன்றனர். சீக்கியர்கள் ‘சத்தியாக்கிரக’த்தை மேற்கொண்டு சிறைசென்றனர். மூன்று முறை இத்தகைய சத்தியாக்கிரகம் ஏற்பட்டது. போர்க்குணம்

அமைந்த வீரர்களாகிய சீக்கியர்கள் சகல துன்பங்களையும் பொறுத்துக் கொண்டு அமைதியுடன் நாலைந்து வருடமாகச் சத்தியாக்கிரகஞ் செய்தனர். செல்வாக்குள்ள பெரியோர் பலர் சிறைப்படுத்தப்பட்டனர். இது சம்பந்தமாக முன் பலசட்டங் களை ஏற்படுத்தியும் அவை பயனில்லாது போனமைகண்ட கவர்ன்மெண்டார் இப் பொழுது 'சீக்கிய குருத்துவார பரிபாலன சட்ட மசோதா' ஒன்றைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். இம்மசோதாவில் குருத்துவாரக் கமிட்டிகளுக்குத் தர்ம பரி பாலனத்தில் அதிக உரிமையளிக்கப் பெற்றுளது. சீக்கியப் பொது மக்களால் இம்மசோதா பெரும்பாலும் திருப்திகரமானதென்று கருதப்படுகிறது.

கல்கத்தாவிலுள்ள இந்தியப் பத்திராதிபர், நிருபர் இவர்களின் சங்கம் நடைபெற்ற பொழுது 'ஸ்டேட்ஸ்மென்' பத்திரிகையின் ஆசிரியராகிய ஸீபிரிட்ஜ் என்பவர் 'செய்திகள்' என்னும் பொருள் பற்றி ஓர் அரிய உபந்நியாசம் செய்துள்ளார். அதில், பத்திரிகைக்குச் செய்தியநுப்பும் நிருபர் (ஏஜண்டு) களின் கடமையைப் பற்றி அழகாகப் பேசியிருக்கிறார்.

லோகமான்ய பாலகங்காதர திலகரின் ஜீவிய சரிதத்தைப் பற்றி எழுதிய ஒரு புத்தகத்திற்குப் பண்டிதர் மோதிலால் நேரு முகவுரை எழுதியிருக்கின்றனர். அதில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்: 'சீக்கிரத்தில் முன்போலவே பெரிய போராட்டம் ஆரம்பமாகுமென்பதிற் சந்தேகமில்லை. இப்பொழுது மகாத்மா மீண்டும் ஒரு வழியை ஏற்படுத்த வேண்டுவதற்காகத் தேசம் காத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ஸத்தியாச் சுயராஜ்யக்கட்சி மகாத்மாவால் செய்யப்பட்ட ஒரு கப்பலில் லோகமான்யரால் ஏற்படுத்தப்பட்ட மார்க்கமாகச் சென்று கொண்டிருக்கிறது. இந்த இருமகான் களினுடைய முயற்சி யினால்தான் இந்தியா தற்காலம் இந்நிலை யுற்றிருக்கிற தென்பதை யார் மறுக்க முடியும்? சுயராஜ்யக் கட்சி லோகமான் யருடையவும், மகாத்மாவினுடையவும் அடி யிணைகளில் ஈடுபட்டு அவர்களுடைய உன்னத லக்ஷியங்களை நடையில் ராஜீய தோரணையில் நிறைவேற்றி வருகிறது?'

## 1 - 5 - 25

நேற்று, சர். பி. தியாகராசசெட்டியாரின் மரணத்தைப் பற்றி எழுதியிருந்தேன். அவரது பிரேத அடக்க வைபவம் இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி மாலை 6-மணிக்கு அவருடைய பிரேதத்தைப் புஷ்பப்

பல்லக்கில் உட்காரவைத்து ஊர்வலமாகக் கொண்டு போனார்கள். சென்னையிலுள்ள முக்கியஸ்தர்கள் எல்லோரும் அவருடம் பைக் காண்பதற்குச் சென்றிருந்தார்கள். புஷ்பவிமானத்தை சென்னை முதல் மந்திரியாகிய கனம் பணகால் ராஜா ஸர். கே. வி. ரெட்டி, ஒ. தணிகாசலஞ் செட்டியார் முதலிய முக்கியஸ்தர்கள் தூக்கிச் சென்றார்கள். ஊர்வலம் ஒரு அரை மைல் நீளம் இருந்தது. அடக்கஞ் செய்யும் இடத்திற்குச் சென்றதும், கனம் பணகால் ராஜா, ஹைக்கோர்ட் ஜட்ஜி தேவதாஸ், ஸர். கே. வி. ரெட்டி, ஹக்கீம் லைனுலாப்தீன், ஒ. தணிகாசலம் செட்டியார், டாக்டர் நடேச முதலியார் முதலானவர்கள் தியாகராச செட்டியாரின் பெருமைகளைப் பேசித் தங்களுடைய பெருந்துயரத்தை வெளிப்படுத்தினார்கள். பின் அடக்கஞ் செய்யப் பெற்றது.

திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. இதில் சேரமாதேவி, குருகுல விஷயம் விவாதத்திற்கு முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்று வந்த பத்திரிகையில் பாதிவரையில் இவ்விவாத விஷயமே காணப்படுகிறது.

பம்பாயில் மகாத்மா காந்தியின் தலைமையில் பசு சம்ரஷணசபை ஒன்று நடைபெற்றது.

இன்று நடுக்காவேரியில் சிவாலய தரிசனஞ் செய்தேன்.

**2- 5 - 25**

பற்பல இடங்களில் காற்றும் இடியும் கடுமையாயிருக்கின்றனவென்று தெரிகிறது. மேட்டுப்பாளையத்திற் கருகிலுள்ள ஓர் ஊரில் இடி விழுந்து இருவர் மாண்டனரென்றும், திருவனந்தபுரம் மேல் கடலோரத்திலுள்ள ஓர் ஊரில் ஒரு வீட்டிலே கல்யாணம் நடந்து கொண்டிருக்கும் பொழுது இடி விழுந்து விருந்தினர் ஒருவர் இறந்து போக பலருக்குக் காயமேற்பட்டதென்றும் இன்று வந்த பத்திரிகை கூறுகிறது.

காந்தியடிகளைப் பத்திரிகைப் பிரதிநிதி யொருவர் கண்டு 'அகில இந்தியக் காங்கிரஸ் நிதியிலிருந்தாவது, கூர்ஜர மாகாணக் காங்கிரஸ் நிதியிலிருந்தாவது தங்கள் பிரயாணச் செலவு முதலியவற்றுக்கு ஏதேனும் பணம் எடுப்பதுண்டா?' என்று கேட்டதற்குக் காந்தியடிகள் 'யங் இந்தியா'வில் பின்வருமாறு விடையளித்திருக்கின்றனர்: 'நான் காங்கிரஸ் நிதியிலிருந்து ஒரு காசும் எடுப்பதில்லை. போகுமிடங்களில் அங்கங்குள்ளவர்களே டிக்கட்டு முதலான எல்லாச் செலவுகளையும் பொறுத்துக்

கொள்கின்றனர். அளவுக்கு மிஞ்சி உபசாரஞ் செய்கின்றனர். பிறர் பரிசிலாக அளிக்கும் கதருடைகளில் எனக்குவேண்டியன போக, மிஞ்சியவற்றை மற்றவர்களுக்குக் கொடுத்து விடுகிறேன். அல்லது ஆச்சிரமத்தின் உபயோகத்திற்குச் சேர்த்து விடுகின்றேன். நான் எனக்கென்று ஒரு ஐவேஜியையும் வைத்துக் கொள்ளவில்லை; ஆனால் என்னைப் போல் வேறு பிரபு இல்லையென்று நான் ஒவ்வொரு சமயத்தில் நினைக்கின்றேன். என் சொந்த உபயோகத் திற்கோ, அல்லது நான் செய்யும் காரியங்கட்கோ இதுவரை பணத்தட்டென்பது ஏற்பட்டதில்லை.' காந்தியடிகளைப் போல் வேறு பிரபு இல்லையென்பது உபசாரமாகுமோ? 'வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை - யாண்டும்; தொப்பதில்' என்பது பொய்யா மொழியன்றோ?

**3 - 5 - 25**

காந்தியடிகள் கல்கத்தாவுக்குச் சென்றிருக்கின்றனர். அவரது தேக அசௌக்கியத்தை உத்தேசித்துப் பொதுஜனங்கள் ரயில்வே ஸ்டேஷனில் அதிகமாய்க் கூடவேண்டாமென்று ஸி.ஆர். தாஸ் எச்சரிக்கை செய்திருந்தும் அடிகள் வந்திறங்கும் பொழுது ஜனங்கள் அளவின்றிக் கூடிவிட்டனர். ரயில்வே அதிகாரிகள் காந்தியடிகளின் பிரயாணத்திற்கு ஒரு முதல்வகுப்பு வண்டி முழுதும் ஒழித்துக் கொடுத்திருக்கிறார்கள். (இதற்கு 2-வது வகுப்பு வண்டிக்கட்டணஞ் செலுத்தினால் போதுமாம்) அன்றியும் அடிகள் வங்காள மாகாண முழுதும் பிரயாணஞ் செய்யும் பொழுது அவருக்குச் சகல சௌகரியங்களும் செய்து கொடுக்கும்படி ஆங்காங்குள்ள ரயில்வே உத்தியோகஸ்தர் களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். காந்தியடிகள் ஸி. ஆர். தாசின் வீட்டுக்குச் சென்ற பொழுது அவ்வீடு அவருக்குச் சொந்தமன்றென்றும், அதைத் தருமத்திற்காகக் கொடுத்து டிரஸ்டிகளிடம் ஒப்படைத்துவிட்டாரென்றும் அங்கிருந்தவர் கள் சொல்லக்கேட்டு, அவரது தியாகத்தை நினைந்து கண்ணீர் விட்டிருக்கின்றனர். (பத்திரிகை) கோடீஸ்வரராயிருக்க வேண்டிய ஒருவர், பிறவற்றையெல்லாம் துறந்ததோடமையாது தமது அழகிய மாளிகையொன்றையும் துறந்தது காந்தியடிகளின் மனதைக் கரைத்துவிட்டது.

**4 - 5 - 25**

இன்று வழக்கம் போல் சில புத்தகம் படித்துக் கொண்டிருந்ததன்றி விசேடமில்லை. மழையாலும் இடியாலும் கோயிலுக்குப் போகவும் கூடவில்லை. இடியிடிக்கும் பொழுது

வெளியே செல்வதாயின் என்னையறியாமலே மனதில் அச்சமும் குழப்பமும் உண்டாகின்றன. இஃது எனது கீழான நிலைமையை அறிவுறுத்துகின்றது. மனத்தூய்மை, தெய்வபக்தி, மெய்யுணர்வு என்பவற்றுள் ஒற்றேனுமிருப்பின் இத்தகைய அச்சம் உண்டாகக் காரணமில்லையல்லவா?

## 5 - 5 - 25

காந்தியடிகள் பரித்பூரில் நடந்த வங்காள மகாநாட்டிற்கு விஜயஞ் செய்தனர். மகாநாட்டுத் தலைவராகிய தேசபந்து ஸி. ஆர். தாஸ் காந்தியடிகளை வரவேற்று மொழிந்த வாசகம்: "வங்காள மகாநாட்டின் தலைவர் என்ற முறையில் தங்களை வரவேற்கும் பெருமையும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தன. ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காலம் முதல் தங்களுடைய சிஷ்யனாக நான் இருந்து வந்திருக்கின்றேன். இன்னும் தங்களுடைய உபதேசத்தையே பின்பற்றித் தங்களுக்கு ஒரு சகாவாயிருந்து கொண்டு ஊழியஞ் செய்து வருகின்றேன். தங்களைப் பற்றி நான் துதியிடுவது அழகன்று. உலகத்தாருக்கு அவ்வேலையை விட்டு விடுகின்றேன். இந்தியர் அனைவரும் தங்களுடைய உபதேசத்திற்குச் செவி கொடுப்பது போல் உலகத்தாரும் தலை சாய்க்கப் போவது நிச்சயம். தாங்கள் தான் எங்களுக்கு வழிகாட்டி ஊக்க முயர்த்த வேண்டும்...... தேசத்தில் ஒற்றுமையுண்டுபண்ணுவதற்குத் தாங்கள் இல்லாமல் முடியாது. அவ்வொற்றுமையும் கட்டுப்பாடும் இருந்தால்தான் ஸ்வ ராஜ்யம் கிடைக்கும். ஆகையால் ஸ்வராஜ்யம் வரும் வரையில் தாங்களே வழிகாட்டியாக விளங்க வேண்டும். தாங்கள் நெடுங்காலம் ஜீவித்திருக்க வேண்டுமென்று நாங்கள் பிரார்த்திக் கின்றோம்." என்பது (பத்திரிகை)

## 6 - 5 - 25

இன்று விசேட செய்தி ஒன்றும் கேட்கப் பட்டிலது.

## 7 - 5 - 25

ஸர். பி. தியாகராச செட்டியார் உயிர் நீத்தமைக்குப் பற்பல நகரங்களிலும் ஊர்களிலும் கூட்டங்கள் கூடி அநுதாபந் தெரிவித்து வருகின்றனர். சேலத்திற் கூடிய கூட்டத்தில் டாக்டர் வரதராஜலு நாயுடு தலைமை வகித்துச் செட்டியாரைப் புகழ்ந்து பேசியதுடன், தேசத்திற்கு நன்மை பயக்கும் கட்சிகள் ஒத்துழையாஇயக்கமும், ஜஸ்டிஸ் கட்சியும் ஆகிய இரண்டுமே யென்றும், தியாகராஜ செட்டியாரின் கொள்கைகள் மிகவும்

சரியானவையென்றும் இப்பொழுதே தமக்குத் தோன்று கிறதென்றும், ஜஸ்டிஸ் கட்சி தழைத்தோங்க வேண்டுவது அவசியமென்றும், ஜஸ்டிஸ் கட்சியினர் கதருடுத்துவதாயின் தாம் அக்கட்சியில் சேர்ந்து கொள்ளத் தயாரென்றும் பேசியிருக்கிறார்.

பரித்பூரில் நடந்த வங்காள மாகாண மகாநாட்டை யொட்டி வங்காள மாகாண ஹிந்து மகாசபையின் மகாநாடு ஒன்றும் கூடியது. அதில் பிரபல ரசாயன சாஸ்திர நிபுணரான டாக்டர் பி. ஸி. ராய் தலைமை வகித்து ஓர் அருமையான பிரசங்கஞ் செய்திருக்கின்றனர். நூறு வருஷங்களுக்குள் வங்காளத்திலுள்ள ஹிந்துக்களின் தொகை குறைந்து வருவதற்கும், முஸ்லீம்களின் தொகை பெருகி வருதற்கும் கீழ்க்கண்ட புள்ளி விபரம் கொடுத்திருக்கிறார். அத் தொகைகளைப் பதினாயிரத்தால் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வருஷம் | 1881 | 1891 | 1901 | 1911 | 1921 |
| ஹிந்துக்கள் | 4882 | 4767 | 4700 | 4523 | 4372 |
| முகமதியர் | 4969 | 5088 | 5119 | 5234 | 5345 |

இங்ஙனம் இந்து சமூகம் அருகிவருதற்கு அவர் கூறும் முக்கிய காரணங்கள் (1) கல்யாணஞ் செய்து கொள்ளத்தக்க பெண் மக்களில்லாமை, (2) விதவா விவாகத்தைக் கட்டாய முறையில் தடுத்திருப்பது; முக்கியமாகச் சிறு குழந்தைகளாயிருக் கும் பொழுதே விதவைத் தன்மையடைந்தவர்கள் புனர் விவாகஞ் செய்து கொள்ள அநுமதியளிக்காமலிருப்பது - என்பன. கலப்பு விவாக முறை ரத்து செய்யபட்டிருத்தலால் பெண்ணுக்கு மாப்பிள்ளையும், மாப்பிள்ளைக்குப் பெண்ணும் கிடைப்பது அரிதாகி விடுகிறது என்கிறார். 'ஜாதிப் பாகுபாடு என்னும் விலங்கை இந்துக்கள் தாங்களாகவே சிருஷ்டித்துக் கொண்டிருக் கிறார்கள். வண்ணான் குயவன் வேலையையும், குயவன் கொல்லன் வேலையையும் செய்ய மறுக்கின்றனர். முகமதியர் இத்தகைய தடைகளைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் தங்கள் மனதிற் கிசைந்த எத்தொழிலையுஞ் செய்யலாம்! என்றிங்ஙனம் பல விஷயங்களைக் குறித்துப் பேசியிருக்கின்றனர். அவர் பேச்சிலிருந்து விதவாவிவாகம், கலப்பு விவாகம், தீண்டாமை யொழிவு இவை யெல்லாம் அவருக்கு உடன்பாடானவை என்று நன்கு புலனா கின்றது. சாதிக்கட்டுப்பாட்டையும் அவர் வெறுக்கின்றார்.' 'பித்தலாட்டம், வெளிவேஷம், பழக்க வழக்கங்கள் முதலியன தற்சமயம் மதமென்று கருதப்படுகின்றன' என்கின்றனர்.

வங்காள மாகாண மகாநாட்டில் சிலர் புரட்சிக்கார இயக்கத்தைப் பலமாக ஆதரித்துப் பேசினரென்றும், ஸி. ஆர். தாஸ் அதைப் பலமாக எதிர்த்தமையால் அவர்கள் தீர்மானம் நிறைவேறவில்லையென்றும், காந்தியடிகள் தமது பிரசங்கத்தில் புரட்சியியக்கத்தைக் கண்டித்து மிகவும் உருக்கமாகப் பேசினரென்றும் தெரிகிறது. (பத்திரிகை)

**8 - 5 - 25**

பிரபல சந்திர ராயின் பிரசங்கத்தைப் பற்றி நேற்று எழுதியிருந்தேன். அவர் பிரசங்கத்தின் தொடர்ச்சி இன்று பத்திரிகையில் வெளிவந்துளது. ‘உயர்ந்த சாதியார் என்போர் உடம்பில் திராவிட ரத்தமும் ஏனையர் இரத்தமும் ஓடுகிறதென்றும், வங்காளத்தில் புத்தமதம் ஆயிர வருஷம் வரையில் பரவியிருந்ததென்றும், அக்காலத்தில் எல்லாச் சாதிகளும் கலந்து விட்டன என்றும், இப்பொழுது இந்துக்களின் எல்லாப் பிரிவினருடைய மூக்கு முதலிய உடற் கூறுகளும் ஒரே தன்மையாகவேயிருக்கின்றனவென்றும்’ ராய் கூறுகின்றார். வியாசர், வசிட்டர், நாரதர் முதலானோரின் பிறப்புகளை சாதிக் கலப்புக்கு உதாரணமாகக் காட்டி, அக்காலத்தில் இந்து மதம் அதற்கு இடங்கொடுத்திருந்தது என்கின்றார்.

இன்று சித்திரா பூர்ணிமை, வெள்ளிக்கிழமை. சித்திரை விசாகம் ஆகலின் இன்று எனது பிறந்த நாளுமாகும். என்னிடம் தமிழ் பயிலும் மாணவர் நால்வர் இன்று இங்கு வந்திருக்கின்றனர். இன்று இவ்வூரில் (நடுக்காவேரியில்) சிவாலய தரிசனஞ் செய்து வந்தேன்.

**9 - 5 - 25**

இன்று, திருவையாறு சப்தஸ்தலத் திருவிழாவுக்குச் சென்று இறைவர் திருவுலாவுடன் சூழ்வந்தது நற்செய்தியாகும். இத் திருவிழாவானது பங்குனி உத்தரத்து நிகழ்ந்த திரு நந்திதேவர் திருமணத்தின் திருவுலாவாகும். சித்திரை விசாகத்தில் திருநந்தி தேவர் ஒரு பல்லக்கிலும், அறம் வளர்த்த நாயகி சமேத ஐயாறப்பர் ஒரு பல்லக்கிலுமாக ஆரோகணித்துத் திருவுலாப் புறப்பட்டுத் திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்னும் தலங்கட்கு முறையே சென்று, மீட்டும் திருவையாற்றுக்கு எழுந்தருளுகின்றனர். தென்னிந்தியாவில் நடைபெறும் திருவிழாக் களில் மிகவும் சிறப்பு வாய்ந்ததொன்று இது. ஏழு தலங்களும்

பந்தர்களாலும், தோரணம் முதலியவற்றாலும் அலங்கரிக்கப் பெறுகின்றன. ஆங்காங்குத் தண்ணீர்ப்பந்தர் வைத்தும், அடியார்கட்கு அமுதளித்தும் மற்றும் பற்பல வகையானும் அறங்கள் செய்யப்படுகின்றன. ஏறக்குறையப் பதினைந்து கடிகை வழியுள்ள ஏழு தலங்கட்கும் சென்று சூழ்வரும் அடியார்கள் 60-அல்லது 70 நாழிகை வரையில் மற்றைக் கவலைகளையெல்லாம் மறந்து இதில் ஈடுபடுகின்றனர். எவ்விடத்தும் தேவாரத் திருக்கூட்டமும், சிவநாம ஆரவாரமும், திருத்தாளவோசையு மாக இருக்கின்றன. நேரில் சென்று இத்திருவிழாவைத் தரிசிப் பவர்கள் பல உண்மைகளை அறிந்து கொள்ளக்கூடும். நான் உத்தேசம் இருபது ஆண்டுகளாக இத்திருவிழாவில் ஏழுதலமுஞ் சென்று வரும் வழக்கமுடையேன். சென்ற ஆண்டு செல்ல முடியாது போயிற்று. இவ்வாண்டு அன்பர் பலருடன் சென்று தரிசிக்கும் பேறு திருவருளால் வாய்த்தது.

**10 - 5 - 25**

இன்று, ஏழுதலங்களும் சென்றுமீட்டும் திருஐயாற்றை அடைந்து 'நல்விழாப் பொலிவு கண்டார்ந்த'தும், ஐயாறப்பர் திருக்கோயிலில் முருகப்பெருமான் திருமுன் சைவ சம்பந்தமான சில பேச்சுகளை அன்பர்களுடன் செவிமடுத்தும், பேசியும் இன்புற்றதும் நிகழ்ந்தனவாகும்.

**11 - 5 - 25**

இன்று, திருவையாற்றிலிருந்து மெய்யன்பராகிய திரு. அ.மு. சரவண முதலியாரவர்களுடன் நடுக்காவேரி வந்தேன். சென்ற இரண்டு நாளைப் பத்திரிகை படித்ததுதான் நான் இன்று செய்த வேலை. இரவு சிவாலய தரிசனஞ் செய்தேன்.

மே மாதம் 7-ஆம் தேதி தந்தியாகப் பத்திரிகையில் பின்வரும் விஷயம் வெளிவந்துளது. கல்கத்தாவில் புத்தருடைய 2543-வது பிறந்த தினக் கொண்டாட்டம் நடந்தது. காந்தியடிகள் தலைமை வகித்தனர். அவரது பிரசங்கத்திலுள்ள சில குறிப்புக்கள்: "உலகத்திலுள்ள எல்லா மதங்களைச் சேர்ந்தவர்க ளும் என்னைத் தங்கள் மதத்தினரில் ஒருவனாகப் பாவிப்பதைக் காண எனக்கு விநோதமாயிருக்கிறது. ஜெயினர் என்னை ஜெயினனென்று தவறாகப் பாவிக்கிறார் கள். பல பௌத்த நண்பர்கள் என்னைப் பௌத்தனென்று கருதுகிறார்கள். நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ நண்பர்கள் என்னைக் கிறிஸ்தவனென்கிறார்கள். கிறிஸ்தவர் களிலேயே இன்னுஞ் சிலர் 'நீங்கள் ஏன் உள்ளதைச் சொல்லப்

பயப்படுகிறீர்கள்; நீங்கள் கிறிஸ்தவரென்பதை நாங்கள் அறிவோம்; ஏசுநாதரிடத்தில் உங்களுக்கிருக்கிற நம்பிக்கையைத் தைரியமாக ஒப்புக் கொள்ள ஏன் முன் வரலாகாது;' என்று கேட்கிறார்கள். நான் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்ளாது போனாலும் வியவகாரத்திற்கு என்னை முஸ்லீமென்றே சில முஸ்லீம் நண்பர்கள் கருதுவதை நான் அறிவேன். நான் ஒரு முஸல்மானாகி விடக் கூடியநிலைமையில் இருப்பதாக வேறு சிலருடைய அபிப்பிராயம். இங்ஙனம் என்னைப் பற்றிப் பலவாறாக நினைப்பதும் பேசுவதும் எனக்குப் பெருமையாகவே படுகிறது. அவர்களுடைய அன்பின் மிகுதியாற்றான் இவ்வாறு சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் நான் ஹிந்துதான்; மிகத் தாழ்மையாக அதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து மதக் கொள்கைகளைப் பற்றி நான் அதிகமாகப் படிக்கப் படிக்க இந்து மதத்தில் எனக்குள்ள நம்பிக்கை இன்னும் உறுதிப் படுகின்றது. இந்து மதமானது உலகத்தைப் போல் அவ்வளவு பரந்த நோக்க முடையது. உலகத்தில் நல்லன என்று சொல்லக் கூடிய எல்லாம் இந்து மதத்தில் இருக்கின்றன" . . . "மேற்குறித்த எல்லாச் சிரேஷ்டமான மத உபதேசங்களையும், ஏசுநாதர், புத்தர், மஹாவீரர் முதலிய பல உபதேசிகளையும் எனது சக்தியாநுசாரம் நான் பின்பற்ற முயன்றிருப்பது தான் என்னை இங்கு அழைத்ததற்குக் காரணமென்று நினைக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் புத்தரின் உபதேசங்களை நான் அப்படியே அநுஷ்டித்துக் காட்டுவதாகப் பல நண்பர்கள் கருதுகின்றனர். அவர்களுடைய நற் சாட்சிப் பத்திரத்திற்கு நான் நன்றியுள்ள வனாயிருக்கிறேன்; மஹத்தான மதபோதனைகள் அனைத்தையும் கூடியவரையில் பின் பற்றி வாழ நான் முயன்று வருகின்றேன். . . . புத்தர் தமது வாழ்க்கையில் இந்து மத தர்மங்களையே அநுஷ்டித்து வந்ததாக நான் அபிப்பிராயப் படுகிறேன். புத்தர் காலத்தில் ஏற்பட்ட சங்கடமான நிலைமையில் அவர் சீர்திருத்தக்காரராக விளங்கியது உண்மை. அந்தரங்க சுத்தியுடன் அச்சீர்த்திருத்தங்களுக்காக அவர் உழைத்தார். அதற்காக எவ்வளவோ தியாகஞ் செய்தார். பிராமணர்கள் குருட்டுத் தனமாக அவருடைய சீர்திருத்த இயக்கத்தை ஆட்சேபித் தார்கள். அவர்கள் சுய நலங்கருதியே அங்ஙனம் எதிர்த்தனர். புத்தர் நாஸ்திகரல்லவென்று நான் தைரியமாகக் கூறமுடியும். நமது பெரிய மதங்களெல்லாம் காலக்கிரமத்தில் மோசடி, வஞ்சகம், ஹம்பக், அஸத்தியம், மூட பக்தி முதலிய வற்றிலிருந்து விடுபட்டுப் பரிசுத்தமாகப் பிரகாசிக்குமென்பது திண்ணம்.

அன்பும் சத்தியமுந்தான் உலகத்தில் செல்லும்; மற்றவைகளைச் செல்லாக் காசுக்கே ஒப்பாகச் சொல்வேன்."

**12 - 5 - 25**

வங்காள மாகாணத்தில் காந்தியடிகள் சுற்றுப்பிரயாணஞ் செய்வதைப் பற்றிய செய்திகளே பத்திரிகைகளில் மிகுதியாக வந்து கொண்டிருக்கின்றன. அம்மாகாணத்தில், ரயில்வே ட்ராபிக் மானேஜர் ரயில்வே சூப்பரிண்டெண்டுகட்குப் பின்வரும் உத்தரவை அநுப்பியுள்ளார்: 'மகாத்மா காந்தி பிரயாணஞ் செய்வதற்காக ஒரு முதல் வகுப்பு வண்டியும், இரண்டு இரண்டாவது வகுப்பு வண்டிகளும் பிணைத்த ஸலூன் வண்டி ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. முதல் வகுப்பு வண்டிக்கு இரண்டாவது வகுப்புக் கட்டணமே விதிக்கப் பெற்றுளது. அவரது பிரயாணக் குறிப்பின்படி அவ்வண்டித் தொடரை அங்கங்கே பிரித்தும், இணைத்தும் வசதி செய்ய வேண்டுமென்று கீழுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கும்படி அறிவிக்கப் படுகிறது?

காந்தியடிகள் ஒரு ஊரில் பொழுது விடிவதற்குள்ளாக ஏழு கூட்டத்தில் பேசினாரென்றும், அப்பொழுது 2000-ஜனங்கள் கூடியிருந்தனரென்றும் அறிவிக்கப்பட்டுளது. அவரது பிரயாணத் தால் அம்மாகாணம் முழுதும் 'கதர்' துரிதமாக அபிவிருத்தி யடையுமென்று தெரிகிறது.'

**13 - 5 - 25**

இன்று குறிப்பிடக் கூடிய செய்தி ஒன்றும் புலப்படவில்லை.

**14 - 5 - 25**

இன்றும் யாதொரு செய்தியும் இல்லை.

**15 - 5 - 25**

சில துயரமான செய்திகள் இன்று பத்திரிகையிற் காணப் பட்டன: ஜப்பானில் பட்டுத் தொழிலுக்குப் பேர்போன ஒரு இடத்தில் இரண்டாயிரம் வீடுகளுக்கு அதிகமாக எரிந்து விட்டன. மனிதரும் பலர் உயிர் துறந்தனர்.

மயிலாப்பூர் ஹைக்கோர்ட் வக்கீல் ஒருவரின் மாப்பிள்ளையும், பம்பாய் சென்று வியாபாரக் கல்வி பயின்று வந்தவருமான 25-வயதுள்ள வாலிபர் ஒருவர் திருச்சி மேலைச் சிந்தாமணிப் பக்கத்தில் காவிரியில் ஸ்நானஞ் செய்யும் பொழுது மேற் குறித்த

வக்கீலின் 10-வயதுப் பெண்ணுடனும், 8-வயதுப் பையனுடனும் முழுகி இறந்து விட்டனர். அவர் அன்றுதான் திருச்சிக்கு வந்தனராம்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள நகரம் ஜமீந்தார் சென்ற மாத இறுதியில் வைசூரியால் உயிர் துறந்தனர். அவரது இரு மனைவியரும், சகோதரரும், சகோதரர் பிள்ளைகளும், சகோதரி பிள்ளைகளும் ஒருவாரத்தில் அவ்வியாதியால் காலஞ் சென்றனர். ஜமீந்தாரிக்கு சகோதரர் மனைவி ஒருவரே மிச்சம் இருக்கிறார். தாசில்தார் எஸ்டேட்டைக் கண்காணித்து வருகிறார். 'வாழ்வாவது மாயம்!' திருநாவுக்கரசர் திருமடங் கட்டிக் கொண்டு எழுந்தருளியிருந்து உழவாரத் தொண்டாற்றிய திருப்பூந்துருத்தி என்னும் தலத்திற்கு வெள்ளிக்கிழமையாகிய இன்று அழைக்கப் பெற்றுச் சென்று அம்மையப்பரைத் தரிசித்ததும், திருக்கோயிலில் கூடிய கூட்டத்தில் உயர் திரு. சிதம்பர சுவாமிகள் முதலிய சிலருடன் திருநாவுக்கரசர் பெருமையைப் பற்றி உபந்நியசித்ததும் இன்று நிகழ்ந்த நற்செய்திகளாகும்.

**16 - 5 - 25**

இந்தியாவில் 120-கோடி ரூபாய் விலைமதிப்புள்ள துணிகள் ஒரு வருடத்திற்குச் செலவாகின்றன என்றும், இதில் 60-கோடி ரூ.. மதிப்புள்ளது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவ தென்றும், 30-கோடி மதிப்புள்ளது. இந்தியாவிலுள்ள ஆலை களால் நெய்யப்படுகிறதென்றும், 30 கோடி மதிப்புள்ளது. கைத்தறியால் நெய்யப்படுகிற தென்றும், புடைவை நெய்வதில் பல காரணங்களால் ஆலைகள் கைத்தறியுடன் போட்டி போட முடியவில்லையென்றும், சில வருடமாக நடக்கும் கிளர்ச்சி யினால் இப்பொழுது கைத்தறி நெசவு நூற்றுக்கு 25/ வீதத்தி லிருந்து 30/வீதமாக உயர்ந்திருக்கு மென்றும், பம்பாய் கவர்ன்மெண்டார் கைத்தறி நெசவை விருத்திசெய்ய நினைத்திருக் கின்றனரென்றும் 'இந்தியன் டெயிலி மெயில்' என்னும் பத்திரிகை கூறுகிறது. இக்குறிப்புப் புத்தகம் எழுதத் தொடங்கிய முதல் நாளில் குறிப்பிட்டுள்ள சிவனடியார் இன்று இங்கு வந்திருக்கின்றனர்.

**17 - 5 - 25**

ஸர். சுரேந்திரநாத் பானர்ஜி 'வங்காளி' முதலிய மூன்று பத்திரிகைகளின் ஆசிரியப் பதவியை மீண்டும் ஏற்றுக் கொண்டனராம். இந்தியாவிலேயுள்ள காங்கிரஸ்வாதிகளில் பழமை வாய்ந்தவராகிய இவர் பெரும்பாலும் இந்திய மக்கள்

அனைவராலும் அறியப்பட்டவராவார். நாவன்மையில் யாவராலும் கொண்டாடப் பெற்றவர். இவர் ஒரு சமயம் பார்லிமெண்டில் பேசிய காலத்தில் இவரது வாக்குவன்மையை ஆங்கில மேதாவிகள் வியந்து பாராட்டியிருக்கின்றனர். வங்காளப் பிரிவினை காலத்தில் இவர் பெருங் கிளர்ச்சி செய்து வந்தார். இவரது பிரசங்கத்தைக் கேட்ட வளவில் ஜனங்களுக்கு ஆவேசம் வந்து விடும். சில வருடங்களாக இவரது செல்வாக்கு மிகவும் குறைந்து விட்டது. இதற்குக் காரணம் இவர் மிதவாதியாக இருந்ததும், மிதவாதக் கொள்கைக்கு மதிப்பில்லாமற் போனது மேயாகும். இவர் சீர்த்திருத்த சட்ட சபையில் வங்காள மாகாண அமைச்சராய் நியமிக்கப் பெற்றிருந்தார். பின்பு சட்ட சபைத் தேர்தலில் தோல்வியுற்றார். இவர் சமீபத்தில் எழுதி வெளி யிட்டதொரு புத்தகத்தில் தம்மைப் பற்றிய சில குறிப்புக்கள் எழுதியிருக்கின்றனர். 'எனக்கு வயது 75-ஆகியும் நல்ல பலத்துடன் இருக்கிறேன். ஞாபகசக்தி சிறிதும் குன்றாமலிருக்கிறது. வியாதியென்பதே எனக்கில்லை. இதற்குக் காரணம் தேகத்தைப் பாதுகாப்பதை என் முதற்கடமையாகக் கொண்டிருப்பதுதான். தினந்தோறும் காலையில் தூங்கி யெழுந்தவுடனும், மாலையிலும் நான் தேகப் பயிற்சி செய்வதில் தவறுவதே யில்லை. உணவிலும் உறக்கத்திலும் ஒரே விதமாக இருந்து வருகிறேன். எக்காரணத்தாலும் உறக்கத்தைக் கெடுத்துக் கொள்வதில்லை. இரவு 9-மணிக்கே படுத்துக் கொண்டு அதிகாலையில் எழுவது என் வழக்கம்' என்று கூறுகின்றார். (பத்திரிகை)

இன்று பகல் உணவு உண்டு கொண்டிருக்கும் பொழுது பத்திரிகையில் இண்டர்மீடியர் ரிசல்ட் வந்து விட்டதென்று என் தம்பி மு. கோ. கூற, உடனே அதனைப் பார்க்க வேண்டுமென எனக்குண்டாகிய ஆவலை அளவிடமுடியாது. உணவை மிக விரைவிலே ஒருவாறு முடித்துக் கொண்டு துரிதமாகச் சென்று ரிசல்டைப் பார்த்தேன். என்னிடம் தமிழ் பயின்றவர்களில் என் உள்ளத்தையே கவர்ந்து கொண்டிருக்கும் அன்பர் ஒருவரது நம்பரை முதலிற்பார்த்தேன். அவர் தேறினர் என அறிந்தவளவில் மனதில் அமைதியுண்டாயிற்று. என் அன்பிற்குரிய மாணவர் களில் இன்னுஞ் சிலர் தேறியிருப்பின் என் மகிழ்ச்சி அளவு கடந்திருக்கும்.

### 18 - 5 - 25

குரோதன வருடம் வைகாசி மாதம் 5-ம் தேதி திங்கட் கிழமையாகிய இன்று, நாங்கள் நான்கு சகோதரர்களும், எங்கள்

தந்தையார், நடுக்காவேரி, சு. கோவிந்தசாமி செட்டியார் இவர்கள் முன்னிலையில் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்' நீங்குங் காலம் என்றோ அறிந்திலேன். இன்று இவ்வூர்ச் சிவாலய தரிசனஞ் செய்யச் சென்ற பொழுது (இரவு - 8மணிக்குள்) கோயிற் கதவம் திருக்காப்பிட்டிருந்தது.

**19 - 5 - 25**

காந்தியடிகள் தமது வங்காள பிரயாணத்தைப் பற்றி 'யங் இந்தியா' வில் எழுதியிருப்பதில் பின்வரும் குறிப்புக்கள் கவனிக் கற்பாலன: 'வங்காளத்தார் எனக்கு அதிக சௌகரிய முண்டாதற் பொருட்டு ஸலூன் வண்டியேற்படுத்தியிருக் கின்றனர். பத்து IIவது வகுப்பு வண்டிகள் சேர்ந்த ஸலூன் தான் வண்டித் தொடரிலிருந்து குறித்தவிடத்தில் பிரிக்கவும் இணைக்கவும் கூடும். ஆனால் அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகள் எனக்கு மிகுந்த வருத்தத்தை விளைக்கின்றன. நான் இங்ஙனம் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தால் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஏழை மக்களின் நிலைமையை நான் எங்ஙனம் அறிந்து கொள்ளக் கூடும். நான் ஏழைகளுடன் கலந்து அவர் களில் ஒருவனாக வாழாவிட்டால் அவர்கள் என்னை எப்படி நம்புவார்கள். எனது தேசமக்கள் என்னை அச்சத்துடன் பார்க்கும்படியாக எனக்கும் அவர்கட்கும் இடையில் பெரும் பிரிவை வங்காளத்தார் உண்டாக்கி விட்டனர். நான் 3-வது வகுப்பு வண்டியில் பிரயாணஞ் செய்ய முடியாவிட்டாலும் சாதாரண 2-வது வகுப்பிலாவது பிரயாணஞ் செய்ய வேண்டும். அதுவும் முடியவில்லையென்றால் நான் தேச கைங்கரியஞ் செய்யத் தகுதியற்றவனென்று சும்மா இருந்து விடுவதே நலம்!

என்னுடைய வாழ்க்கை பரிசுத்தமடையும் வழியில் ஓராண்டளவாக வந்து கொண்டிருக்கிறதென நான் எண்ணிய தெல்லாம் வெறும் கனவே போலுமெனக்கருத நேர்கின்றது. சில தினங்களாகக் குடும்ப சம்பந்தத்தால் என் மனம் மிகவும் குழப்ப மடைந்துளது. பொருட் பற்று நீங்கினாலொழியப் பரிசுத்த மடைதற்கு வழியில்லை.'

**20 - 5 - 25**

எனது புதல்வன் சிரஞ்சீவி நடராஜன் சில தினங்களின் முன்பு கீழே விழுந்து காலில் வேதனையேற்பட்டிருத்தலால் சிகிச்சையின் பொருட்டு அவனை உடன் கொண்டு கரந்தை

திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் B.A., B.L., வீட்டிற்கு இன்று வந்து சேர்ந்தேன். பிள்ளையவர்களின் குணாதி சயங்களைப் பிறிதொரு சமயம் விரித்தெழுதக் கருதியிருக்கிறேன்.

சில தினங்களாகச் சென்னைக்கு வடக்கே கீழ் கடலோரமான ஜில்லாக்களில் 200-மைல் தூரம் வரையில் பயங்கரமான காற்றடித்ததில் தந்திக்கம்பிகள் அறுபட்டும், டிரெயின் வண்டிகள் தூக்கியெறியப்பட்டும், தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டும் பெருஞ்சேதங்கள் உண்டாயிருக்கின்றன வென்றும், போக்கு வரத்துகள் தடைப்பட்டு விட்டன என்றும் பத்திரிகையிற் செய்திகள் வெளிவந்துள்ளன. சில ஆண்டுகளாகவே உலகத்தில் பற்பல வகையான கொடுமைகளும், பயங்கர நிகழ்ச்சிகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. 1926, 27 - ம் ஆண்டுகளில் முந்திய மகாயுத்தம் சிறிதென்று சொல்லும் படியான கொடிய உலகயுத்தம் நிகழுமென்று சோதிடர்கள் கூறிவருகின்றனர். இறைவனுடைய திருவிளையாடல்களை அளந்தறியவல்லார் யாவர்?

**21 - 5 - 25**

இன்று தஞ்சையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு ஒரு கல்யாணத்தின் பொருட்டு வந்தேன். வேறு விசேடமில்லை.

ஐம்பொறிகள் என்னைக் கெடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றன. நான் சிறிது உறுதியின்றியும், பராமுகமாயும் இருப்பின் என் விரதங்களை இழந்து விடக் கூடும். இழந்தால் என் வாழ்க்கை நரக வாழ்க்கையே. எப்படியும் பெருமான் என்னை ஆண்டருள்வன். (இஃதெழுதும் பொழுது பல்லி நிமித்தம் கூறுகிறது.) ‘ஐவரை யகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச் - செய்வதொன்றறிய மாட்டேன்றிருப் புகலூரனீரே?

**22 - 5 - 25**

இன்று திருச்சிராப்பள்ளியிலிருந்து என் மாணவராகிய வெங்கடேசன் என்பவருடன் பேட்டைவாய்த்தலை என்னுமிடத் திற்கு வந்தேன். இங்கே உய்யக்கொண்டான் ஆற்றருகில் பிரயாணிகள் தங்கும் பங்களா ஒன்றிருக்கிறது. இதற்கு வடக்கே ஒரு பர்லாங்குக்குள்ளே காவிரி நதி செல்கிறது. இந்தப் பங்களாவில், 5-4-25-ல் நான் குறித்திருக்கிற என் அன்பர் தம்மை ஆதரிக்கிற ஐரோப்பியமாது சிரோமணியுடன் சில நாளாக வந்து தங்கியிருக்கின்றனர். அன்பரின் உடன் பிறப்பினர் முதலிய வேறு சிலரும் இங்கு வந்திருக்கின்றனர். இன்று, அமாவாசை, வெள்ளிக் கிழமையோடு கூடிய கார்த்திகையாகும். எனது

கார்த்திகை விரதம் இனிது நிறைவேறியது. இன்று என் மனம் விகார மடைந்திருந்தால் நான் மிகவும்வருத்த மடைய நேரும். திருக்கோயில் சென்று இறைவனை வழிபடாதிருந்தது இன்று நிகழ்ந்த குறையாகும்.

**23 - 5 - 25**

இன்று பகல் முழுதும் நேற்றுப் போன்றே பேட்டை வாய்த் தலையில் பொழுது இனிது கழிந்தது. மாலையில் புறப்பட்டு எல்லோருமாக 7½ மணிக்குத் திருச்சிக் கோட்டை ஸ்டேஷன் வந்து சேர்ந்தோம். இரண்டு ஒற்றை மாட்டு வண்டிகள் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. ஒரு வண்டியில் சாமான்களுடன் என் அன்பர் ஏறிக் கொண்டனர். மற்றொரு வண்டியில் சில சாமான்களுடன் அவரது சோதரியும் போஷகியாரும் ஏறிக் கொண்டனர். நானும் என்னுடன் வந்த மாணவரும் அவ்வண்டிகளில் ஏறாமலும், வேறு வண்டி பிடிப்பதற்கு அவகாசம் பெறாமலும் சிறிது தூரந்தானே யென்று நினைத்து வண்டிகளுடன் தொடர்ந்து நடந்து வந்தோம். என் அன்பர் ஏறிய வண்டி முன்னே விரைவாகச் சென்றமையால் எங்களால் தொடர முடியவில்லை. எனினும் இருட்டில் தனியே அவ்வண்டி செல்வதைக் குறித்துக் கவலையுற்று என் மாணவரை இடையில் நிறுத்தி விட்டு நான் மாத்திரம் ஓடோடியும் வந்து வீட்டில் பார்த்தேன். அங்கு அவர் வந்து சேரவில்லையென அறிந்தவளவில் என் கவலை அளவு கடந்து விட்டது. திரும்ப ஓடி வந்தேன். வண்டிக்காரர்கள் பெரும்பாலும் அயோக்கியர்கள் ஆகையால் என்ன அபாயம் நேருமோ என்ற சிந்தனையுடன் இங்ஙனம் விரைந்து வரும் பொழுது, என் அன்பர் ஏறிய வண்டி ரஸ்தாவில் ஒரு மரத்தில் ஏற்றப்பட்டுக் கவிழ்ந்து விட்ட தென்றும், வண்டியிலிருந்தவர் அடிபட்டு உட்கார்ந்து கொண்டிருக்கின்றனரென்றும் எதிரில் வந்த என் நண்பரொருவர் சொல்ல அறிந்தேன். பின்பு அவ்விடம் நோக்கி விரைந்து சென்ற பொழுது தமது போஷகியாருடன் அங்கு உட்கார்ந்திருந்த என் அன்பர் தமது நகை முகத்தைக் காட்டி என் வாட்டத்தை யோட்டினார். வண்டியிலிருந்த சாமான்கள் மேலேபுரண்டு விழுந்தமையால் அவருக்குத் தலை சிறிது அடிபட்டுளதெனத் தெரிந்தது. வண்டிக்காரன் மிதமிஞ்சிக் கட்குடித்திருந்தான் எனப் பின்பு கேள்விப்பட்டேன். கடவுள் இவ்வளவு தூரம் கருணை பாலித்தமைக்கு அவரை வாழ்த்துவதே கடன். இச்சம்பவம் கடவுள் செய்த ஒரு எச்சரிக்கையேயாகும். இது எனக்கு ஒரு விஷயத்தைப் போதித்தது போல் என் அன்பர்க்கும் சில புத்திமதி கற்பித்திருக்குமென்பதில் ஐயமில்லை. பின்பு, என்பால் மிக்க

அன்புடையராகிய திரு. தாயுமானவ முதலியார் வீட்டுக்கு நான் விருந்தாக வந்து அவரால் உபசரிக்கப் பெற்று இருந்து கொண்டிருக்கிறேன். தம்பி கோவிந்தராஜன் I.T. பரீக்ஷையில் தேறவில்லையென்ற செய்தியும் இப்பொழுது அறியலாயிற்று. கடவுள் எனக்குப் பெரிய இன்னலை விளைக்க மாட்டார் என்ற நம்பிக்கையுடையேனாயினும், குழந்தை நடராஜனைப் பற்றிச் சிறிது கவலையும் உண்டாயிருக்கிறது. உலகத்திலே துன்பம் விரவாத இன்பமும் உளதோ? இன்பமேயாயினும் துன்பமேயா யினும் இறைவனை மறவாது நுகர்ந்து அமைவது கடனாகும்.

**24 - 5 - 25**

காந்தியடிகள் வங்காள நாட்டில் பிரயாணஞ் செய்யும் பொழுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்டேஷன்களின் பக்கங் களில் மரங்களிலும் கூரைகளிலும் ஏறிக் கொண்டு வேடிக்கை பார்க்கக் காத்திருக்கின்றார்களாம். ஒரு ஊரில் ஒரு மகாராஜாவின் அரண்மனைக்குக் காந்தியடிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடா யிருந்தது. அடிகள் ஏறுவதற்கென்று ஒரு கோச்சு வண்டி யிருந்தது. அவ்வண்டிக்காரன் தனக்குக் கிடைத்த மகிமையைக் குறித்து மிகவும் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தான். ஆனால் காந்தியடிகள் திடீரென வேறொரு மோட்டார்க் காரில் ஏறிப் போம்படி ஆயிற்று. அவருடைய சகாக்கள் கோச்சில் ஏறியிருந்தனர். மகாத்மா காரில் போய் விட்டாரென்று அறிந்தவளவில் வண்டிக்காரன் கோவென்று கதறியழுது கொண்டு கோச்சை ஓட்டாமலிருந்து விட்டான்! பின்பு அங்கிருந்தவர்கள் வண்டிக்குள் சின்ன மகாத்மா இருக்கிறா ரென்று சொல்லவே அவன் ஒருவாறு தேறுதலடைந்து வண்டியை ஓட்டினான்!! இங்ஙனமே மகாத்மா இல்லாத பல சமயங்களில் அவருக்குப் பதிலாக யாரையேனும் மகாத்மா என்று ஜனங்களுக்குக் காட்ட வேண்டியிருக்கிறதாம்!!

நான் இன்றிரவு மலைக் கோயிலுக்குச் சென்று, ‘வஞ்சகப் பெரும் புலையனேனையும் தன் கோயில் வாயிலிற் பிச்சனாக்கி’ வைத்த பெருமானையும் பெருமாட்டியையும் தரிசித்து வந்தேன்.

**25 - 5 - 25**

சென்னை மாகாண ஆரம்ப ஆசிரிய மானேஜர்களின் மகாநாடு, சாமிவேங்கடாசலஞ் செட்டி M.L.C. அவர்களின் தலைமையின் கீழ்த் திருச்சிராப்பள்ளியில் இன்று நடைபெற்றது. நான் எதிர் பார்த்தபடி கூட்டம் அவ்வளவு அதிகமாக இருக்க

வில்லை. இதில் 'ஆசிரியர் கடமை' என்ற விஷயமாக நான் ஒரு உபந்நியாசஞ் செய்தேன்.

**26 - 5 - 25**

இன்று திருச்சியிலிருந்து கரந்தை வந்து, அங்கு வந்திருந்த உயர்திரு மணிவாசக சரணாலய சுவாமிகளுடனும், சில அன்பர்களுடனும் கும்பகோணத்திற்கு வந்தேன். இன்றிரவு கும்பேசுவரரையும் அம்பிகையையும் தரிசித்து மகிழ்ந்தேன்.

**27 - 5 - 25**

இன்று காலை, சுவாமி மலை என்கின்ற திருவேரகத் திருப்பதிக்கு வந்து சேர்ந்தோம். இங்கே சாமிநாதனாகிய முருகப் பெருமான் சந்நிதியில் உயர்திரு. க. மணிவாசக சரணாலய சுவாமிகள் இயற்றிய 'முருகக் கடவுளின் சோடசப் பதிகப் பிரபந்தங்கள்' அரங்கேற்றப் பெற்றன. இவ்வரங்கேற்ற அவைக்கு நான் தலைவனாக நியமிக்கப் பெற்றிருந்தேன். கல்வியறிவிற் சிறந்தவர்களும் பேரன்புடையவர்களுமான சிலர் அரங்கேற்ற அவைக்கு அழைத்துவரப் பெற்றிருந்தனர். கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சரான திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், சேற்றூர் சமஸ்தான வித்வான் திருவாளர் அப்பாவுக்கவிராயர் அவர்கள் முதலாயினோர் வந்திருந்தனர். முருகக் கடவுளின் ஆறு படை வீடுகட்கும், வேறு பத்துத் திருப்பதி கட்கும் தலத்திற்கொரு பதிகமாகச் சந்த விருத்தத்திற் பாடியிருந்த பதினாறு பதிகங்களும் காலையிலும் மாலையிலுமாகப் படித்து அரங்கேற்றப் பெற்றன. முருகப் பெருமானுக்குப் பூசையும், புலவர்களுக்கு வெள்ளிப் பாத்திரம் உடை முதலிய மரியாதைகளும் நிகழ்த்தப் பெற்றன. காரைக்குடியிலுள்ள தனவணிகராகிய சுப்பிரமணியஞ் செட்டியார் குமாரர் திருவாளர் இராமசாமிச் செட்டியார் மிக்க அன்புடன் முன்வந்து தமது பொருட் செலவில் இவ்வரங்கேற்ற விழாவை நடத்தி வைத்தனர். மெய்யன் புடையார்க்கேயன்றி என்போலும் வன்பராய் முருடொக்குஞ் சிந்தையினார்க்கும் இன்னருள் சுரக்கும் மின்னிலை வடிவேற் குமரவேளினை அபிஷேக அலங்கார தீபாராதனை உள்ளிட்ட பூசனைப் பொலிவுடன் இன்று பகல் முழுதும் அடுத்தடுத்துத் தரிசித்து வணங்கப் பெற்றது பெறுதற்கரியதோர் பெரும் பேறாகும்.

**28 - 5 - 25**

இன்று காலை, சுவாமி மலையினின்றும் அன்பர்களுடன் புறப்பட்டுத் திருவலஞ்சுழி வந்து கோயிலைச் சூழ்வந்து, சுந்தரப் பெருமாள் கோயிலில் வண்டியேறிக் கரந்தை வந்து சேர்ந்தேன்.

ஜப்பானில் பல இடங்களில் பூகம்பம் ஏற்பட்டுப் பெருஞ் சேதம் விளைந்துளதென்றும், பல நூறு பேர்கள் உயிர் துறக்கவும் நேர்ந்ததென்றும் பத்திரிகைச் செய்திகள் கிடைத்தன.

**29 - 5 - 25**

திருப்பூரில் பெருங்காற்றடித்துச் சிறு கூரைகள் அடியுடன் பெயர்த் தெறியப்பட்டனவென்றும், உறுதிப் பாடான வேலை செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் கூடப் பழுதாயின வென்றும், வண்டிகளெல்லாம் கவிழ்க்கப்பட்டும், தூக்கிச் செல்லப்பட்டும் போயின வென்றும், மற்றும் பலவாறாகவும் நேற்றுப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை இன்று படித்தறிந்தேன்.

வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு கருந்திட்டைக் குடியிலுள்ள மீனாக்ஷிசுந்தரேசர் ஆலயஞ் சென்று தரிசித்து வந்தேன்.

**30 - 5 - 25**

நாள் முழுதும் வறிதே கழிந்தமை குறித்து மனம் வருந்து கிறது. இந்நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தை அன்பர் அ. மு. சரவண முதலியாரவர்கள் ஏப்பிரல் மாதம் 12-ம் தேதியிலும், மே மாதம் 12-ம் தேதியிலும் படித்துப் பார்த்தார்கள். அன்பர் T.S. தாயுமான முதலியார் மே மாதம் 25-ம் தேதியில் படித்துப் பார்த்தனர். என் அந்தரங்க வாழ்க்கை குறித்து அன்பர்கள் என்ன நினைக்கின்றார் களென்பதைத் தெரிந்து கொள்வது என் கருத்தாயிருந்தது. முற்குறித்த இரு அன்பர்களும் என்பால் முன்னையினும் விசுவாசமுடையவர்களாகவே தோற்றியது நான் கலக்கமடையா திருக்க ஏதுவாயிற்று. காதல் நிகழ்ச்சியாக நான் குறித்து வந்திருக்குஞ் செய்தி அன்பர்கட்கு உவகை விளைவியாமலும் இருந்திருக்கலாம்; எனினும் நான் இயன்றவரையில் உண்மையைக் கடைப்பிடிக்க (எழுதும் பொழுது மணியடிக்கிறது) முயன்றிருப்பது அவர்கட்குத் திருப்தியை விளைத்ததாதல் வேண்டும். நிற்க-

நேற்றும் இன்றும் ஆகிய மே மாதம் 29,30 ஆகிய இரு நாட் களிலும் என் அரிய நண்பர் திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் இக்குறிப்புப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தார்கள்.

**31 - 5 - 25**

மத்திய மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு ஒன்று நடைபெற்றது திராவிடனில் படித்தறிந்தேன். மகாநாட்டின்

தலைவரும் வரவேற்புக் கழகத் தலைவரும் பார்ப்பனரைத் தாக்கிப் பேசியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் சிறிதும் மரியாதையில்லாத முருட்டுத் தன்மையான வார்த்தைகளால் பேசியிருப்பது எனக்கு மிக்க அருவருப்பை விளைக்கிறது.

ஆங்கிலத்தில் Golden Smith என்பவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்றில் இரண்டு பக்கத்திற்குத் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களிடம் பொருள் கேட்டுக் கொண்டேன். பிள்ளையவர்களிடம் போதிக்குந் திறன் நன்கு அமைந்திருப்பது கண்டு மகிழ்வுற்றேன்.

**1 - 6 - 1925**

நேற்று நள்ளிரவிலிருந்து எனக்கு அஜீரணத்தால் வயிறு பொருமிக் கொண்டு வயிற்றோட்டம் மிகுந்து துன்புறுத்து கின்றது. 'அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து' என்னும் தெய்வப்புலவர் திருவாக்கினைக் கடைப்பிடித் தொழுகாமையே இத் துன்பத்திற்குக் காரணம்.

தஞ்சை தாலூகா போர்டில் தஞ்சைப் பகுதிக்கு இரண்டு அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பதற்காக இன்று தேர்தல் நடைபெற்றது. சீர்திருத்தத்தின்பின் தஞ்சைத் தாலூகா போர்டுத் தலைவராக இருந்து வரும் திருவாளர் T.V. உமாமகேசுவர பிள்ளை. B.A. B.L. அவர்கள் ஓர் அபேக்ஷகராகும். பிள்ளைய வர்கள் போர்டின் தலைவராக இருந்து வந்திருக்கின்ற சில ஆண்டுகளில் பல நல்ல காரியங்கள் செய்து வந்திருக்கின்றனர். இன்னும் செய்ய வேண்டுமென்னும் விருப்பமுடையவர். ஜில்லா போர்டிலும் பல சீர்த்திருத்தங்கள் இவர்கள் முயற்சியாற் செய்யப்பட்டன. திருவையாறு சம்ஸ்கிருத காலேஜில் செய் திருக்கும் திருத்தங்களைத் தமிழ் மக்கள் மிகவும் போற்றக் கடமைப் பட்டிருக்கின்றனர். அன்பு, ஒப்புரவாற்றல், வாய்மை முதலிய குணங்கள் பிள்ளையவர்கள் பால் தலைசிறந்து விளங்குகின்றன. தமிழ் மொழியும், தமிழ் மக்களும் முன்னேற்ற மடைய வேண்டுமென்னும் பெரு நோக்கங்கொண்டு அதற்காக இவர்கள் இடையறாது உழைத்து வருகின்றார்கள். கரந்தைத் தமிழ்ச்சங்கம் என்னும் பயிரானது இவர்களது தூய உள்ள மாகிய நிலத்தில் முளைத்து, இவர்களும் தற்பொழுது இதற்கு அமைச்சராயிருப் போர் முதலான அன்பர்களும் ஆகிய இன்னோர்களின் அன்பு, ஊக்கம் முதலிய உரன்கள் பொருந்தப் பெற்று, சங்கத்தின் தலைவராகிய இவர்களின் தியாக மாகிய தண்ணீரால் நன்கு செழித்தோங்கி வருகின்றது. இதன்

விளைவினைத் தமிழகம் நுகர்ந்து இன்புறுமென்பதில் ஐயமில்லை. பிள்ளையவர்கள் இச்சங்கத்தினைத் தம் உயிரேபோல் போற்றி வருகின்றனர். தமிழ்நாட்டில் இவர்கள் போலும் தியாக உணர்ச்சி யுடையார் சிலர் பலர் தோன்றி விட்டால் அப்பொழுது தமிழக மென்பது துறக்கவுலகமேயாகும். தம்முடைய ஈகை, ஒப்புரவு முதலிய குணங்களைப் பிறரறியாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் இயல்புடன், ஒரோவழி தம்மைப் பிறர் சற்றுக் கடுமையானவர் என்று நினைக்கும் படி வெளியிற் சொற்கள் முதலியவற்றாற் காண்பித்து உள்ளத்தில் அன்பு வைத்திருக்கும் பான்மையும் இவர்களிடத்தே உள்ளன. மிக்க சிவபக்தியும் வாய்ந்தவர். அரசியற் கொள்கை முதலியவற்றில் மாறுபட்ட கல்விமான்களும் இவருடைய குணங்களை நன்கு மதிப்பர். தியாகம், சரசமாய்ப் பழகுதல், பணிவு என்ற குணங்கள் இவரிடம் மிகவும் சிறந்து விளங்குவன. இத்தகையோரிடத்தும் எம்மவரிற் சிலர் மாறுபட்டு நடக்கும் அறியாமையைக் காண என் மனம் நாணமடைகின்றது. பிள்ளையவர்கள் போல்வாரையும் என் நண்பர்களென்று சொல்லிக் கொள்ளும் பேறு வாய்த்திருப்பது கடவுளின் மட்டற்ற கருணையினாலே யாம். இன்று தேர்தல் நடைபெற்ற விடத்து எனது உடம்பின் நலிவுடன் நானும் சிறிது நேரஞ் சென்றிருந்தேன்.

**2-6-25**

இன்று என் பொழுதுவறிதே கழிந்ததென்று தான் சொல்ல வேண்டும்.

காந்தியடிகள் வங்காள நாட்டில் போல்பூரிலுள்ள 'சாந்தி நிகேதனம்' என்னும் ஆச்சிரமத்திற்குச் சென்று, கவீந்திரராகிய சர் ரவீந்திரநாததாகூர் அவர்களுடன் மே மாதம் 30ம் தேதி சனிக்கிழமை 3-மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். வருணாச் சிரம தர்மத்தைப் பற்றி முதலில் விவாதம் தொடங்கியது. தற்பொழுதுள்ள முறைப்படி வருணாசிரமக் கொள்கையைத் தாம் முற்றிலும் ஒப்புக்கொள்ள முடியா தென்றும் இந்து சமயத்தின் முக்கிய பலஹீனங்களில் இது ஒன்றென்றும் ரவீந்திரநாதர் கூறினார். எண்ணிறந்த புதிய உட்பிரிவுகளையும், உட்சாதிகளையும் தாம் விரும்பவில்லை யென்றும், மனித சமூகத்தின் தொழில் பற்றிய பிரிவுகளில் தமக்கு நம்பிக்கை யிருப்பதாகவும், உடம்பின் பல உறுப்புக்கள் போல மனித சமூகத்தின் இன்றியமையாத வெவ்வேறு காரியங்கட்கு அவை ஏற்பட்டன வாதலால் அவற்றில் உயர்வு தாழ்வுகட்கு இடமில்லை

யென்றும் காந்தியடிகள் தமது கொள்கையை வற்புறுத்திப் பேசினார். மனித இயற்கையானது எண்ணிறந்த வேறுபாட்டுடன் கூடியதாய்ச் சொந்த இச்சைக்கும் சுதந்திரத்திற்கும் இடமளிக்கிறதென்றும், ஆகையால் பிறப்பிலே யே இத்தகைய சாதி, வேறுபாடுகள் உண்டென்பது உண்மை நூலுக்கு ஒவ்வாததும் (unscientific), இயற்கைக்கு மாறானதும் ஆம் என்றும் கவீந்திரர் கூறினார். கதரைப் பற்றிக் கவீந்திரர் கேட்டதற்கு அதனாலுண்டாகும் நன்மைகளைப் பல உதாரணங்களுடன் விரிவாக எடுத்து விளக்கிக் காந்தியடிகள் விடையிறுத்தார். காந்தியடிகள் சாந்தி நிகேதனத்தில் 5-நாள் வரையில் இளைப்பாறுதற்குத் தங்கியிருப்பார். (பத்திரிகை)

**3 - 6 - 25**

நேற்றுக்காலை நான் நண்பர் R. வேங்கடாசலம் பிள்ளையவர் களுடன் வடவாற்றங்கரைப் பக்கம் போய்க் கொண்டிருந்த பொழுது ஒரு வண்டிக்குதிரை மிக்க தளர்ச்சியுடன் புவியில் விழுந்து கிடந்ததைக் கண்டேன். அது வேலை செய்யத் தகுதியற்றதான பொழுது உடையவனால் கைவிடப் பெற்றதாதல் வேண்டுமென நாங்கள் கருதிக் கொண்டோம். இன்று காலையில் நாங்கள் போனபொழுது அக்குதிரை சிறிது சேறும் தண்ணீருமுள்ள குழியில் விழுந்து பரிதபிக்கத்தக்க நிலையில் கிடந்தது. நாங்கள் அதைக் கண்டபொழுது தீவிரமான இரக்க உணர்ச்சி எங்களுக் குண்டாக வில்லையென்றாலும், இருப்பிடஞ் சென்று யாரை யேனும் அழைத்து வந்து அதைத் தூக்கி விடவேண்டுமென்று பேசிக் கொண்டு சென்றோம். நண்பர் வேறு அலுவல்களினால் அதனை மறந்து சென்றுவிட்டார். நான் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தை அடைந்து அங்கிருந்த பலரிடமும் சொல்லி, அவர்களை அழைத்து வந்து குதிரையைத் தூக்கிக் கரை சேர்ப்பித்துச் சிறிது உணவு கொடுக்கச் செய்தேன். என் கையால் குதிரையைத் தூக்காவிட்டாலும் நான் செய்தது எனக்குச் சிறிது ஆறுதலளித்தது. இச்செய்தியைப் பின்பு அறிந்த நண்பர் தாம் அயர்த்து விட்ட செய்கைக்கு வருந்தி அதற்குக் கழுவாயாக இன்றிரவு தாம் உணவுண்பதில்லை யென்று தீர்மானித்துக் கொண்டனர். ஜூன் முதற்றேதியிலிருந்து தமது வாழ்க்கைக் குறிப்பு எழுதத் தொடங்கியுள்ள நண்பர் தமது குறிப்பில் இச் செய்தியை எழுதியிருக்கக்கூடும்.

இன்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி' விடுமுறையின் பின் திறக்கப் பெற்றது. என்னிடம் தமிழ்பயின்ற அன்புள்ள மாணவராகிய

வீ. உலகவூழியர் என்பவர் இக்கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராக இன்று நியமிக்கப் பெற்றார். நமது சக்கரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பெருமான் பிறந்த தினமாகையால் இன்று காலை பத்து மணிக்குக் கல்லூரி திறந்தவுடன் சில பிரசங்கங்கள் அரச விசுவாசத்தைக் குறித்து நிகழ்த்திக் கற்கண்டு வழங்கி லீவு விடப் பெற்றது. இக்கூட்டத்திற்கும், இன்று மாலை இக்கல்லூரியில் சேலம் ஜில்லா ரிஜிஸ்தரார் திருவாளர் சபாபதிப் பிள்ளை யவர்கள் கம்பராமாயணத்தைப் பற்றிப் பிரசங்கித்த கூட்டத் திற்கும் என்னைத் தலைவனாக நியமித்திருந்தார்கள். இக் கல்லூரியில் 3-வது பாரம் இன்றே திறக்கப் பெற்றது. இவ் வாற்றால் ஊரைவிட்டுப் புறப்பட்ட பல நாட்களாக வறிதே பொழுது கழித்துக் கொண்டிருந்த எனக்கு இன்று நற் பொழுதாகச் சென்றது என்று கூறலாகும்.

**4 - 6 - 25**

திருப்பாதிரிப் புலியூருக்குச் செல்வதற்காக இன்று காலை நானும், திருவாளர் T.V. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும் பழனித்துரை என்னும் இளைஞரொருவருடன் புறப்பட்டு வந்து, ஒரு காரிய நிமித்தமாக மாயூரத்தில் இறங்கி அங்கே தாசில் தாராக இருக்கும் திருவாளர் பெத்த பெருமாள் பிள்ளை (விசையதேவர்) அவர்கள் வீட்டுக்குச் சென்றோம். விசைய தேவர் ஊரிலில்லாமையால் அவ்வூரில் தமிழ்ப் பண்டிதராக இருக்கும் திருவாளர் வேலாயுத முதலியாரவர்கள் வீட்டுக்குச் சென்று, அவருடன் கோயிலுக்குப் போய்ப் பிரமதீர்த்ததில் ஸ்நானஞ் செய்து ஸ்வாமி தரிசனஞ் செய்து வந்தோம். பண்டிதர் வீட்டில் நாங்கள் பகலுணவு உண்பதற்குச்சமையல் நடந்து கொண்டிருந்த பொழுது திருவாசக முலம் எழுதப் பெற்றுள்ள ஓர் ஏட்டுச் சுவடியை முதலியார் எங்களிடம் காட்டினர். அச்சுவடி பனையோலையில் ஒன்றேகால் அங்குலச் சதுரமுள்ள ஏடுகளில் எழுதப் பெற்றதாய் இருந்தது. ஒரு பக்கத்து வரிகளை எண்ணிய பொழுது இருபத்து மூன்று வரிகள் இருந்தன. எழுத்துக் களின் முறைமையிலிருந்து சுவடி சுமார் இருநூறு வருடத்திற்கு முற்பட்டதாகலாம் எனக் கருதினேன். சில வருடங்கட்கு முன்பு வேறொரு திருவாசக ஏட்டுப்பிரதியை நான் பார்த்ததுண்டு. அதுவும் நூறு அல்லது நூற்றைம்பது வருடங்கட்கு முற்பட்ட தாகலாமெனத் தோன்றியது. (அப்பிரதி இராஜாளியாரவர் களிடம் போய்ச் சேர்ந்திருக்கும் போலும்) நான் பார்த்த இரண்டு சுவடிகளிலும் அச்சுப் புத்தகங்களிற் காணப்படுகின்ற திருப்பதிகக்

கருத்துக்களும், இன்னபதியில் அருளிச் செய்யப்பட்டது இது என்னும் குறிப்புக்களும் காணப்படவில்லை. இன்று பார்த்த பிரதியில் திருப்பதிகத்தின் ஈற்றில் 'திருச்சிற்றம்பலம்' என்று மாத்திரம் எழுதியிருக்கிறது. எனவே திருப்பதிகக் கருத்து முதலியன பிற்காலத்தில் யாரோ ஒருவரால் எழுதப்பட்டன வெனத் தோன்றுகிறது. ஆகவே அக்கருத்துக்களும் ஆராய்ச்சி செய்தே கொள்ளப்பட வேண்டுமென்பது என் எண்ணம். மாயூரம் பண்டிதரவர்கள் தொல்காப்பிய மூலம், திருக்கோவையார் மூலம், பெரிய புராண மூலம் முதலியனவும் ஏட்டுச்சுவடியில் தம்மிடம் இருக்கின்றன என்றார்கள். திருக்கோவையார் மூலத்தின் பின் அச்சுப் புத்தகத்திற் காணப்படும் 'கொளுக்கள்' ஏட்டுச்சுவடியில் இல்லையென்றனர்.

இன்று நண்பகலில் மாயூரம் ஸ்டேஷன் வந்து வண்டியேறித் திருப்பாதிரிப்புலியூர் வரும் பொழுது வழியில் சிறிது நேரம் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்களிடம் ஆங்கிலத்தில் Gold Smith எழுதிய கட்டுரை யொன்றின் தொடர்ச்சிக்குப் பொருள் கேட்டுக் கொண்டு வந்தேன். இப்பிரயாணத்தில் பிள்ளையவர்களின் குணச் சிறப்பு மேன்மேல் விளங்கிக் கொண்டிருந்தது. வருகிற வழியில் ஸ்டேஷன்கள் பல முக்கிய சிவஸ்தலங்களாக இருக்கும் பொழுது அவற்றைத் தரிசியாது வண்டியில் போய்க் கொண்டிருப்பது குறித்து மனதில் சிறிது வருத்தம் ஏற்பட்டது. சிதம்பரம் வந்த பொழுது தான் அவ்வுணர்ச்சி சற்று அதிகமாயிருந்தது. இரவு சுமார் 8¼ மணிக்குத் திருப்பாதிரிப் புலியூர் வந்து ஸ்ரீமத்ஞானியார் மடாலயம் அடைந்தோம். இரவு கைலாசவாகனத்தில் பெருமான் திருவுலாப் போந்த காட்சியும் தரிசிக்கலாயிற்று.

**5 - 6 - 25**

திருப்பாதிரிப் புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தின் தலைவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீல ஸ்ரீசிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின் கல்விப் பெருமை யையும், பிரசங்க ஆற்றலையும் தமிழுலகம் நன்கு அறியும். தமிழ் மொழியையும், சைவசமயத்தையும் வளர்ப்பதில் பெரு விருப்புடையவர்களாய் அவ்வழியில் முயலுபவர்கள். எப்பொழுதும் பல மாணவர்களை வைத்துக் கொண்டு தமிழ்ப்பாடம் போதிக்கும் கடப்பாடுடையவர்கள். இவர் களுடைய பிரசங்கத்தால் எத்தனையோ பலர் நன்மை யடைந்திருப்ப ரென்பதில் ஐயமில்லை. மடாலயத்திற் கெதிரே ஓர் சிறந்த பாடசாலை

வைத்து நடத்தி வருகின்றார்கள். சைவ வளர்ச்சியின் பொருட்டு வேறுபல காரியங்களும் செய்து வருகின்றார்கள். தமிழ் நாட்டிலே இவர்கள் போன்று பெரிய சைவ மடாதிபதிகள் சிலர் இருப்பார்களாயின் தமிழுக்கும் சைவத்திற்கும் ஒரு குறையும் நேராது. ஞானியார் ஸ்வாமிகள் தமது மடாலயத்தில் 'வாணீவிலாச சபை' 'சைவசித்தாந்த சபை' 'ஞானியார் மாணவர்கழகம்' என மூன்று சபைகள் ஏற்படுத்தி நடத்தி வருகின்றார்கள். அச்சபைகளின் ஆண்டு விழாவை வழக்கம் போல் வைசாக உத்ஸவ நாட்களில் இன்று முதல் மூன்று நாட்கள் கொண்டாட ஏற்பாடாகியிருந்தது. அதன் பொருட்டே நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம். ஆண்டு விழாவிற்குத் தலைவராகக் குறிப்பிட்டிருந்த சென்னைவளர் நெறி அமைச்சர் திவான் பகதூர் T.N. சிவஞானம் பிள்ளையவர்கள் ரயில் வண்டித் தவறுதலால் இன்று சபைக்கு வரக்கூடாமையால், சபை நிகழ்ச்சியின் வேறாக இன்று திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் தலைமையில் இரண்டு உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் ஒன்று 'கண்ணப்பர்' என்னும் பொருள் பற்றி நான் பேசியது. அவைத் தலைவரின் முடிப்புரை சிறப்பாக இருந்தது. இன்று பத்திரிகையில், வ. வே. சுப்பிரமணிய ஐயரவர்கள் உயிர் துறந்தனர் என்ற செய்தி அறிய மிக்க வருத்தம் உண்டாயது. இவர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்த பொழுது இந்தியா ஹௌஸில் சேர்ந்து புரட்சி இயக்கங்களில் தலையிட்டவர். இங்கிலாந்தில் கர்சான் வில்லிகொலைக் கேசில் சம்பந்தப்பட்டு மாறுவேடம் பூண்டு தப்பிவந்து, பாண்டிச்சேரியில் பல ஆண்டுகள் இவர் தங்கியிருந்தனர். காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமை யியக்கம் ஏற்பட்ட காலத்தில் இவர் சென்னைக்கு வந்து 'தேசபக்தன்' என்னும் தமிழ்த்தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து அதனைச் சிறப்பாக நடத்தி வந்தனர். அப்பொழுது ராஜீயக் குற்றத்திற்காகச் சென்னை அரசாங்கத்தினர் இவரைச் சிறையிலிட்டனர். 9-மாதம் சிறையிலிருந்து மீண்ட பின், அரசியற்றுறையைக் கைவிட்டுப் பாண்டி நாட்டிலே சேர மாதேவி என்னும் இடத்தில் 'பாரத்துவாஜ ஆசிரமம்' என ஒரு ஆசிரமமும், அதன் சார்பில் 'குருகுலம்' என்னும் பாட சாலையும் ஏற்படுத்தி நடத்தி வந்தனர். 'பாலபாரதி' என்னும் ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையும் ஏற்படுத்தி, அதன் ஆசிரியராக இருந்து நடத்தி வந்தனர். ஆங்கில ஆராய்ச்சி முறையில் கம்பராமாயணத்தைப் பற்றி ஓர் அழகிய ஆராய்ச்சி 'பாலபாரதி'யில்

எழுதிவந்தனர். கம்பனிடத்தில் இவருக்கிருந்த மதிப்பு அளவிடற் பாலதன்று. வால்மீகியை விடக் கம்பன் எவ்வளவோ வகையில் சிறந்தவன் என்று இவர் விளக்கிக் காட்டியிருக்கிறார். இந்திய நாட்டு மொழிகள் பலவும், மேல் நாட்டு மொழிகள் பலவும் இவர் பயின்றவராவர். இவர் ஏற்படுத்தி நடத்தி வந்த குருகுலத்தில் சமபந்தி போஜனத்தைப் பற்றியெழுந்த வாதங்களை முன்னரே இப்புத்தகத்தில் குறித்திருக்கின்றேன். அவ்வாதம் முடிந்து 'குருகுலம்' நன்னிலைக்குள் வருவதற்குள் இவர் உயிர் துறந்தார். தமிழகம் ஒரு சிறந்த கல்விமானையிழந்தது. இவர் பாபநாசத்தில் கல்யாண தீர்த்தத்தின் பக்கத்தில் மாணவர்களோடும் 14-வயதுள்ள சுபத்திரா என்னும் தமது புத்திரியோடும் இவர் போய் கொண்டிருந்தபொழுது புதல்வி தடுமாறி அருவியில் வீழ்ந்து விட அந்தோ! அக்குழந்தையை யெடுப்பதற்காகத் தாமும் அருவியிற் பாய்ந்து மறைவாராயினார். குழந்தையும் உயிர் துறந்தது. ஆசிரியர் அருவியிற் குதித்தவுடன் அவரைக் காப்பதற்காக ஒரு மாணவரும் அருவியிற் பாய்ந்து தடுமாறி விழுந்து எப்படியோ தப்பிக் கரையேறினர். எல்லாம் இறைவன் செயல்.

எங்கள் அப்பர் திருநாவுக்கரசர் பெருமான் சமணர்களால் கல்லிற் பூட்டிக் கடலில் விடப்பெற்று நமச்சிவாயத் திருப்பதிகம் ஓதிக் கொண்டு, கல் தெப்பமாக மிதக்க அதன் மீது ஆரோ கணித்துக் கரையேறித் திருத்தொண்டின் மேன்மையை உலகறியச் செய்த திருத்தலமாகிய திருப்பாதிரிப்புலியூரில் வைகாசி விசாகமும் வெள்ளிக்கிழமையும் கூடிய இன்றிரவு உண்மையன்புடையார் சிலருடன் திருக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசிக்கும் பேறுளதாயிற்று.

**6 - 6 - 25**

இன்று மாலை 4-மணிக்கு மேல் திவான்பகதூர் T.N. சிவஞானம் பிள்ளையவர்களின் தலைமையில் நடந்த ஆண்டுவிழாச் சபையில் நடந்த இரண்டு உபந்நியாசங்களில் ஒன்று எனது நண்பர் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B.A., LT., 'தேவாரம்' என்னும் பொருள் பற்றிச் செய்ததாகும். பிள்ளையவர்கள் தூயமனமுடையர். தமிழும் சைவமும் தழைத்தோங்க வேண்டுமென்னும் பெரு விருப்புடையர். மிக்க உணர்ச்சியுண்டாகப் பேசும் பிரசங்க ஆற்றலுடையர்.

**7 - 6 - 25**

இன்று காலை 9-மணிக்கு மேல் சில உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. பகலுணவு மந்திரியாருடன் இருந்து உண்பதற்காக அழைக்கப் பெற்றுச் சென்றிருந்தேன். இதற்கு முன் பல சமயங்களில் நான் இத்தகைய விருந்துகளிற் கலந்து கொண்டிருப்பினும் இம்முறை சற்று அதிகமான உணர்ச்சியை உண்டாக்கியது. கோடிக்கணக்கான ஏழை மக்கள் அரை வயிற்றுக்கும் உணவில்லாமல் வருந்தும் பொழுது பணக்காரர் அல்லது பெரிய மனிதரென்போர் அளவின்றிச் செலவு செய்து பல்வகை யுணவு களைச் சேகரித்து உண்பதும், அவற்றை எச்சிலாக்கி எடுத்தெறியச் செய்வதும் மிக்க கொடுமையான செயலாகும்.

இன்று பகலில் அமைச்சர் நீலகிரிக்குப் புறப்பட்டு விட்டபடியால் மாலை 4-மணிக்கு மேல் திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் தலைமையில் சபை நடந்தது. என் அன்பராகிய திருவாளர் அ. மு. சரவண முதலியாரவர்கள் 'அழுதடியடைந்த அன்பன்' என்று எடுத்துக் கொண்டு ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளைப் பற்றிச் செய்த உபந்நியாசம் கேட்டோர்க்குப் பெரும் பயன் விளைப்பதொன்று. 'திருத்தொண்டத்தொகை' என்னும் பொருள் பற்றி நான் ஒரு உபந்நியாசஞ் செய்தேன்.

**8 - 6 - 25**

மனிதப் பிறப்பின் பயனையடைதற்குரிய வழிகளிற் செல்லும் நாட்களில் இன்று ஓர் நாளாகும். 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத, சீதவளவயற் புகலித் திருஞான சம்பந்தர்' ஆகிய எங்கள் பரமாச்சாரியர் திருப்பெருமண நல்லூரிலே தமது திருமணத்தைத் தரிசிக்க வந்திருந்த எண்ணிறந்த அடியார் கூட்டங்களுடன் முத்திபெற்ற வைகாசி மூல நாளாகிய இன்று காலையில் திருப்பாதிரிப் புலியூரில் பஞ்சமூர்த்திகளுடன் திருஞான சம்பந்தப் பெருமான் திருவுலாப் போந்த காட்சியைத் தரிசித்து விட்டு, சிவபத்தி அடியார் பத்தியிற் சிறந்த என் அன்பராகிய சரவண முதலியாரவர்களுடன் ஞானியார் ஸ்வாமிகளிடம் விடை பெற்றுப் புறப்பட்டு நண்பகற் பொழுதில் சிதம்பரத்தை அடைந்தேன். மாலையில், தில்லைத் திருச்சிற்றம் பலத்தே சதாகாலமும் பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் புரியும் சபாநாதரைத் தரிசித்தோம். இரவு சீகாழித்திருப்பதியையடைந்து

அர்த்த ஜாம பூஜாகாலத்தில் பிரமபுரீசரை, தோணியப்பரை, பெரிய பிராட்டியாரை, சட்டை நாதரை, திருஞானசம்பந்தப் பெருமானை தரிசித்துப் பேரின்புற்றோம். நாங்கள் திருப்பாதிரிப் புலியூரினின்றும் புறப்பட்டவுடன் எங்களுக்குத் துணையாக ஒருவர் கிடைத்தனர். அவரது ஊர் விருத்தாசலம்; பெயர் V.P. சிங்காரவேலு; எங்கள் கலாசாலையில் 6-வது பாரம் படித்தவர். என்னிடம் கல்வி பயிலாவிட்டாலும் என்பால் மிக்க அன்புடையவர். இவரும் ஞானியார் மடத்தில் நடந்த சபைக்கு வந்திருந்து, எங்களுடன் புறப்பட்டுச் சிதம்பரத்திற்கும், சீகாழிக்கும் எங்களுக்குத் துணையாகவே வந்து விடுதிகளும், உணவு வசதியும் ஏற்படுத்திக் கொடுத்துத் தரிசனத்திற்குப் பலவகையாலும் உதவிபுரிந்தனர். நாங்கள் சிதம்பரமும் சீகாழியும் தரிசிக்க வேண்டுமென எண்ணியவளவில் நாயினும் கீழான எனக்கும் இன்னருள் சுரக்கும் கருணையங் கடலாகிய சிவபெருமான் இவரைத் துணையாக அநுப்பி வைத்தனரென நாங்கள் எண்ணி மகிழ்ந்தோம்.

**9 - 6 - 25**

நானும் என் அன்பரும் சீகாழியினின்றும் புறப்பட்டு இன்று காலை தஞ்சை வந்து சேர்ந்தோம். தஞ்சையில் சில வருடங்களாகப் பலர் போட்டி போட்டுக் கொண்டு திருஞான சம்பந்தர் திருநாளில் முத்துப் பல்லக்கு அலங்கரித்து உற்சவம் நடத்துவதும், அதற்குத் திரளான கூட்டம் வந்து செல்வதும் பலரும் அறிந்தது. இன்று காலை பத்து மணிக்குக் கூடப் பல்லக்குகள் தெருக்களில் வந்து கொண்டிருந்தன. வரும்வழியில் நாங்களும் தரிசித்தோம். இத்திருவிழா தஞ்சையில் அவ்வளவாகச் சைவப் பொலிவுடன் நடைபெறுவதாகத் தோன்றவில்லை. ஏதோ வேடிக்கை பார்ப்பதற்கென்றே ஜனங்கள் கூடுகின்றனர். மாலையில் நடுக்காவேரி வந்து சேர்ந்தேன். நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு இருபத்தொரு நாள் ஆனமையாலும், குழந்தை நடராஜனுக்கு கால் உபத்திரவம் ஏற்பட்டிருந்தமையாலும், குழந்தைகளைக் காண வேண்டு மென்ற அவா இம்முறை சற்று அதிகமாகவே எனக்குள் உண்டாயது. நான் வீட்டிற்கு வந்தவுடன் குழந்தை களைக் கண்டு ஆறுதலடைந்தேன். நான் கடிதம் எழுதவில்லை யென்று என் மனைவி இந்திராணி வருத்த முற்றனர். குழந்தை பார்வதியம்மாள் எனக்கு வந்திருந்த கடிதங்களையும் பத்திரிகை களையும் என்னிடம் கொண்டு வந்து கொடுக்க வாங்கி ஒரு முறை பார்த்தேன். என் காதற்கியைந்தாரது கடிதமும் வந்திருந்தது.

**10 - 6 - 25**

நான் புறப்பட்டது முதல் மீண்டது வரையிலுள்ள 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளை இன்று ஒருமுறை புரட்டிப் பார்த்துச், சில வியாசங்களும் படித்தேன்.

இன்று பகல் 1-மணிக்கு நான் நெய்தேய்த்துக் கொண்டு வீட்டில் ஸ்நானஞ் செய்யும் பொழுது ஒரு தபாற் கடிதம் வந்தது. மனைவியும், பார்வதியம்மாளும் அதையெடுத்த பொழுது 'பொன்னம்மாள் எழுத்து' என்று சொன்னேன். நேற்றுத்தான் கடிதம் வந்ததே யென்று அவர்கள் சொன்னதற்கு 'ஏதேனும் அவசர மாயெழுதியிருக்கலாம்' என்று பதில் சொன்னேனா யினும், 'பொன்னம்மாள் ஏதேனும் கனவு கண்டிருக்கலாமோ' என மனதில் எண்ணினேன். அவ்வெண்ணம் உண்டானதற்குக் காரணம் முன் பல சமயங்களில் அவரது கனவு நிலையை நான் அறிந்திருப்பது தான். கடிதத்தைப் பிரித்துப் படித்தபொழுது நான் எண்ணியபடி கனவு விஷயமாகவே எழுதப் பெற்றிருந்தமை கண்டேன்.

மங்கையர்க்கரசி கிணற்றில் விழுந்து தூக்கியெடுத்தபின் அவசமெய்தி, பின்பு தான் பொன்னம்மாள் கடவுளை வேண்டியதால் உயிர் பெற்றெழுந்ததாகவும், பிறவாறும் கண்ட கனாவினால் மிகுந்த நடுக்கமும், துயரமும் எய்திக் குழந்தை களைக் கிணற்றண்டையில் அநுப்பவேண்டாம் எனக் குறிப்பிட்டு எழுதிய கடிதம் இது. நேற்றுத்தான் மங்கையர்க்கரசி வீட்டின் பின்புறத்து வயலில் வெட்டப் பெற்றுள்ள அருகிய நீருள்ள கிணற்றில் ஒரு சிறிய ஈயச்செம்பில் நீர் இறைத்து வந்ததென்று வீட்டில் சொன்னார்கள்! இக்கடிதம் என் மனைவிக்கும், குழந்தை பார்வதியம்மாளுக்கும் படித்துக் காட்டப் பெற்றது.

**11 - 6 - 25**

சென்ற பல நாட்களாகவே ஊக்கத்துடன் வேலை செய்யு மாறின்றிப் பொழுது கழிவது போன்று இன்றும் கழிந்தது. வ. வே. சு. ஐயர் உயிர்துறந்த வரலாறும், அது குறித்துப் பலர் இரங்கி எழுதிய கட்டுரைகளும் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. 250-அடி உயரத்திலிருந்து விழும் கல்யாண தீர்த்தத்தின் மேலே சிறிது தூரத்தில் ஜூன் மாதம் 3ம் தேதி இவர் மாணவர்களோடும், புதல்வியோடும் இருந்த காலையில், புதல்வி ஆற்றைக் கடந்து அக்கரை போய்ப் பார்க்க வேண்டுமென்று சொல்ல, ஆறு கடத்தலின் அபாயத்தை இவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லி மறுத்தும், புதல்வியின் பிடிவாதத்தால் அவளை உடன் அழைத்துக்

கொண்டு போய் வேகமாய்ச் செல்லும் அருவியின் பால் ஒரு பாறையில் இருக்க வைத்துத் திரும்புமுன் அக்குழந்தையை அருவி அடித்துக் கொண்டுபோக, இவரும் உடன் பாய்ந்து மறைவாராயினார். இருவர் பிரேதமும் அகப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டனவாம். என் தம்பிகளில் ஒருவர் நடத்தை இன்று நான் உலக வாழ்விலேயே சிறிது அருவருப்புக் கொள்ளும் படி செய்தது. இருள், மழை முதலியவற்றில் எனக்கிருந்த அச்சம் நீங்கி வருவதாக இன்று உணர்ந்தேன்.

**12 - 6 - 25**

'பாலபாரதி'யின் 2-வது புத்தகத்தில் முதல் இரண்டு பகுதிகளிலுள்ள பல கட்டுரைகளை இன்று படித்தேன். அறிவும், ஊக்கமும், சமரச பாவமும் வளர்தற்குரிய செய்திகள் அவைகளில் அடங்கியிருந்தன. பிற தேசத்திலும், பிற ஜாதி மதங்களிலும் இருந்து வந்திருக்கும் பெரியோர்களின் சரித்திரங்களை ஒவ்வொருவரும் அறியக் கூடுமானால் ஒருவர்க்கு மற்றவரிடத்தில் அன்பும், மதிப்பும் உண்டாக அதனால் சமரசம் வளரும் என்பதில் ஐயமில்லை. 'கொன்புத்ஸ'னின் வரலாறு சீனதேசத்தின் பால் மதிப்பை யுண்டாக்குகிறது. 'இஸ்லாமும் சாஸ்திர பரிசீலனையும்' என்ற கட்டுரை அராபியர்களின் கல்விப் பெருமையை விளக்கு கிறது. ளகரோ நகரத்திலிருந்த பகிரங்க புத்தக சாலையில் இருபது லக்ஷம் நூல்கள் இருந்தன என்றும், அவற்றுள் வான சாஸ்திரத்தைப் பற்றி மாத்திரம் ஆறாயிரம் நூல்கள் இருந்தன என்றும் அதில் குறிக்கப் பெற்றுளது. ஜகதீச சந்திர வசுவின் ஆராய்ச்சி படிக்கப்படிக்க இன்பம் விளைக்கிறது. அவர் உண்டாக்கியிருக்கும் 'மாக்நடிக் க்ரெஸோக்ராப்!' (காந்தபூதக் கண்ணாடி) என்னும் கருவி வஸ்துக்களை ஐந்து கோடி முதல் பத்துக்கோடி வரையில் பெருக்கிக் காட்டக் கூடியதென்று சொல்லி, அதை வருணித்திருப்பது மிக்ககளிப்பை விளைக்கிறது.

'அஸ்ஸீரியா, பாபிலோனியா முதலிய பிரதேசங்களில் பூமியைத் தோண்டி ஆராய்ச்சிகள் செய்து வரும் ஸாய்ஸ் என்னும் பண்டிதர் அங்கே அகப்படும் பாத்திரங்கள், ஆயுதங்கள், சமாதிகள் முதலியவற்றினின்று, அங்கு அநேக ஆயிரம் ஆண்டு களின் முன் வசித்த ஸுமேரியருக்கும் திராவிடருக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறார்'- பாலபாரதி.

இன்று நடுக்காவேரியில் சிவாலய தரிசனஞ் செய்தேன்.

**13 - 6 - 25**

*இன்று குறிப்பிடத்தக்க விசேட செய்தி யாதுமில்லை.*

*(கலி 5026 (கி. பி. 1925 ஜூன் மாதம் 14) குரோதன வருடம் ஆனி மாதம் 1ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை).*

**14 - 6 - 25**

*இன்று விசேட செய்தி ஒன்றுமில்லை. பொதுவாகச் சொல்லுமிடத்தில், நான் இங்ஙனம் குறிப்பு எழுதிவருவது என் ஆன்ம வாழ்விற்கு ஒருவாறு உறுதியளித்து வருகின்றதென்பதில் ஐயமில்லை. ஆன்மா பரிசுத்தமடைவதற்குச் சத்தியமே அந்த சாதனம் என்னுங் கொள்கையுடன் அதனை கடைப்பிடிக்க முயன்று வந்திருக்கிறேன். இன்றும் நான் பூரணமாகச் சத்தியத்தை அநுபவிக்க முடியவில்லை யென்றாலும், அதில் முற்போக்கடைந்து வருவதுடன், பூரணமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு, அதன் பொருட்டுக் கடவுளைப் பிரார்த்தித்து வந்திருக்கிறேன். நான் கடவுளைப் பிரார்த்திப்பதெல்லாம் 'நான் சத்தியத்தைக் கடைப்பிடிக்கவும் விரதங்களின் வழுவாதிருக்கவும் உறுதியளிக்க வேண்டும். என் பாவங்களையெல்லாம் மன்னித்துப் பாசங்களையகற்றிப் பரிசுத்தமும் மெய்ம்மையும் பொருந்திய வாழ்வை யளித்தருளல் வேண்டும். எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும், எல்லாருமின்புற்றிருக்கக் கண்டு மகிழவும் அருள் புரிதல் வேண்டும். சைவ சமயமும் தமிழ் மொழியும் தழைத்தோங்க வேண்டும். அடியேனுக்குச் சத்தியத்தையும் அன்பையும் தந்தருள வேண்டும். நான் தேவரீரது திருவருளுக்கு உரியனாதல் வேண்டும். தேவரீருக்குத் திருத்தொண்டு செய்யும் உறுதி யளித்தல் வேண்டும். எல்லா வுயிர்களும் தேவரீரது திருவருளுக் குரியனவாதல் வேண்டும். உலகெங்கும் உண்மையும் அன்பும் அருளும் தலை சிறந்தோங்க வேண்டும். என்னாற் காதலிக்கப் பட்டவரைப் பழிப்பில்லாத வகையில் எனக்கு அளித்துத் திருத்தொண்டுக்கு உதவியாக்க வேண்டும். என் குடி முழுதும் ஆண்டருள வேண்டும்; உலகெங்கும் தேவரீரது புகழ் மிக வேண்டும்' என்பனவாகும்.*

## திருச்சிற்றம்பலம்
## 'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க'
## 'அன்பே சிவம்'

*(கலி - 5025 இரத்தாட்சி வருடம் பங்குனி மாதம் 6 ஆம் தேதி கி. பி. 1925 மார்ச்சு 19 முதல்; கலி - 5026 - குரோதன வருடம் ஆனி மாதம் முதல் தேதி 1925 ஜூன் 14 முடிய முதற் குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பெற்றுள்ளது.)*

*(கலி - 5026 - குரோதன ஆனி 2)*

### 15 - 6 - 25

*இரவு 2-மணிக்கு மேல் நடுக்காவேரியினின்றும் புறப்பட்டுப் பூதலூர்ப் புகைவண்டி நிலயம் வந்து, அங்கு நின்றும் காலையிற் புகை வண்டியேறி நானும், என் மனைவி இந்திராணியும், குழந்தைகள் மூவருடன் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையி லுள்ள 'திருநாவுக்கரசு தமிழகம்' என்னும் இல்லத்தை அடைந்தோம். கோடை விடுமுறையின் பின் இன்று எங்கள் (பிஷப் ஹீபர்) கல்லூரி மறுதிறப்பு ஆகையால் நான் கல்லூரிக்குச் சென்று கையெழுத்திட்டு வந்தேன். எங்கள் கல்லூரியைச் சார்ந்த பள்ளியில் சென்ற இரண்டு ஆண்டுகளாக 4-வது வகுப்பில் படித்துக் கொண்டிருந்த என் குமாரன் சிரஞ்சீவி நடராஜன் இவ் வாண்டு 5-வது வகுப்பில் படித்தற்கு உரியனாயினான். அவனை இன்று பள்ளியிற் சேர்ப்பித்தேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலுக்குச் சென்று தாயுமானேச்சுரருக்கு அர்த்த ஜாம பூஜை நடக்கும் பொழுது தரிசித்து இறைஞ்சி வந்தேன்.*

### 16 - 6 - 25

*நேற்றும் இன்றும் கல்லூரிக்குச் சும்மா போய்த் திரும்பிய தன்றி வேலையொன்றுமில்லை. என்னிடம் கல்வி பயின்று வருபவரும் முதற் புத்தகத்தே பலவிடத்தில் குறிக்கப்பட்டிருப்ப வரும் என் உளத்தின் கண் என்றும் நின்று நிலவுதலுடை யாரும் ஆகிய பொன்னம்மாள் என்னும் நங்கையைக் காண்பதற்கு இன்று மாலை 4 ½ மணிக்கு மேல் புறப்பட்டு மலைவாசற்படி கடந்து செல்லும் பொழுது, அந்நங்கையும் அவரை அன்புடன் ஆதரித்து வரும் ஐரோப்பிய மாதராரும் வெங்கடேசன் என்ற என் அன்புள்ள மாணவர் ஒருவருடன் தண்ணீர்ப் பம்பின்*

தலைப்பிடத்தைக் காண வேண்டி அங்கு வண்டியில் வந்து கொண்டிருந்தவர்கள் என்னைக் கண்டு உடன்அழைத்துச் சென்றார்கள். நான் அவர்களுடன் ஒரே வண்டியில் ஏறிச்சென்று வேடிக்கை பார்த்துத் திரும்பினேன். என் அன்பிற்குரிய நங்கை மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையின் தேறுதற்குறிப்பு வந்து விட்டதென்றும், அதில் இண்டர் மீடியட் மாணவர் ஒருவரும் முதல் வகுப்பில் தேறவில்லை யென்றும், தாம் இரண்டாவது வகுப்பில் முதலாகத் தேறியிருப்பதாகவும் என்னிடம் தெரிவித்தனர். அவர் முதன்மையாகத் தேற வேண்டுமென நான் மிக்க ஊக்கமும் கவலையும் எடுத்துக் கொண்டிருந்தேன் ஆகையாலும், அவரும் நன்கு படித்து ஆர்வத்துடன் எழுதினார் ஆகையாலும் அவர் முதன்மையாகத் தேறினும் பரிசு பெறுதற்கில்லாத இரண்டாவது வகுப்பில் தேறினர் என்றது எனக்கு மிகுந்த வருத்தத்தையும் ஏமாற்றத்தையும் விளைத்தது. அவரும் எனக்கு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டுமென்னும் கருத்தினாலேயே தாம் முதல் வகுப்பில் தேற மிகவும் ஆவல் கொண்டிருந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. கடவுளின் விதிப்படியே தான் யாவும் நிகழும் எனினும் தமிழ்ச்சங்கப் பரீட்சை முறையில் சில குறைபாடு களிருத்தலை இங்கு நினைக்காமலிருக்க முடியவில்லை. தமிழ்ச் சங்கத்தார் ஒரு கழகம் ஏற்படுத்திப் பரீட்சை முறைகளை ஒழுங்கு படுத்தாது, சிற்சிலரைப் பரீட்சகர்களாக நியமித்து விடுகின்றனர். வினாக்கள் பெரும்பாலும் வகுப்புகட்கு ஏற்ற முறையில் அமைவ தில்லை. மாணவர்களின் படிப்பையாவது அறிவையாவது பரிசோதிக்கும் வகையிலன்றி, அவர்கள் எழுத முடியாதபடி பயனற்ற செய்திகள் வரம்பின்றிக் கேட்கப் படுகின்றன. இவ்வாற்றல் பரீட்சையை ஏற்படுத்தினவர்களின் நல் லெண்ணத்திற்கு மாறாக இப்பொழுது மாணவர்கட்குத் தமிழில் ஊக்கக் குறைவு உண்டாக்கப்படுகின்றது.

**17 - 6 - 25**

இன்று நான் கல்லூரிக்குச் சென்று ஆசிரியர்களின் பொது அறையில் இருந்த பொழுது என் உடன்பாடு பெற்றும் பெறாதும் எனக்கு அனுப்பப்பட்டு வருகிற தமிழ்ப் பத்திரிக்கைகளில் 'சைவ பரிபாலனம்' 'பாரதமித்தரன்' ' தமிழ் நேசன்' 'செந்தமிழ்ச்செல்வி' என்னும் நான்கு பத்திரிகைகள் மேசை மேற் போடப் பட்டிருந்தன. அவை எல்லாவற்றையும் ஒருவராகப் பார்த்து முடித்தேன். அவற்றுள் 'சைவ பரிபாலனம்' என்பது கருவூரினின்றும் மாதம் இருமுறையாக வெளிவருவது; தமிழ் வளர்ச்சிக்கோ, அன்றிச் சைவசமய வளர்ச்சிக்கோ உரிய கட்டுரைகள் இதில் வெளிவந்த

தாக இரண்டு மூன்றாண்டு களாக நான் பார்த்து வந்ததில் எனக்குப் புலனாக வில்லை; கல்வி நிரம்பாதவர்களும், உலக நடை அறியாதவர்களும் தம்மனம் போனவாறு பிறரை நிந்தித் தெழுதும் பயனற்ற உரைகள் இதில் வந்து கொண்டிருக்கின்றன. 'பாரதமித்திரன்' என்பது கும்பகோணத்தினின்றும் வாரம் ஒரு முறையாகச் சில மாதங்களாக வந்து கொண்டிருக்கும் ஓர் சமசாரப் பத்திரிக்கை, இதில் சில நாட்டுக்கோட்டைச் செட்டி மார்களின் தருமங்களும், திருவிழாக்களும், இவை போல்வன பிறவும் எழுதப்படுகின்றன. 'தமிழ் நேசன்' என்பது கோலாலம் பூரினின்றும் வாரம் ஒரு முறையாக வெளிவரும் சமாசாரப் பத்திரிக்கை இதன் ஆசிரியராவார் என் மாணக்கரும் என்பாற் பேரன்பு வைத்திருப்பவர்களில் ஒருவரும் ஆகிய K. நரசிம்ம ஐயங்கார். கடவுளிடத்தில் நிரம்பிய அன்புடையவர். இவரைப் பற்றி நேரு மேல் பிறிதொரு சமயம் பேசுவேன். 'சுதேசமித்திரன்' போலும் பத்திரிகை படிப்பவர்க்கு இதிற் சுவையுண்டாவதற்கு இடமில்லை. மேலும் இந்நாட்டிற்குரிய செய்திகளில் மிகச்சில இதிற் காலந் தாழ்த்து வெளியிடப் பெறுகின்றன ஆகலின் இங்குள்ளார் இது படிப்பதற்கு விருப்புறக்காரணமின்று, 'செந்தமிழ்ச்செல்வி' என்பது தமிழுக்கு அரிய தொண்டுகள் பல ஆற்றிவரும் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் சென்னையிலிருந்து வெளியிடப் பெறும் மாதப்பத்திரிகை. இதன் தொடக்கத்திலிருந்து நான் இப்பத்திரிகையின் ஆசிரியர் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்ந்து கட்டுரைகள் எழுதிவந்திருக்கிறேன். இதிற் பல ஆராய்ச்சிகள் வெளிவருவதுண்டு. எனினும் இன்னும் சிறந்த முறையில் இது நடைபெற்றால் நலமாக இருக்கும். இன்று வந்த மூன்றாஞ் சிலம்பின் ஐந்தாவது பரலில் அவ்வளவு சிறந்த கட்டுரைகள் காணப்படவில்லை. 'புத்த நிர்வாணகாலம்' என்பது பற்றி ஆராய்ந்துள்ள கட்டுரையொன்று இதில் உள்ளது.

இரவு நேற்றும் இன்றும் வந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகை களை வாங்கிப் படித்தேன். அவற்றில் காந்தியடிகளின் வங்காள மாகாணப் பிரயாண சம்பந்தமான செய்திகள் மிகுதி யாக வெளிவந்திருக்கின்றன. வங்காள சட்ட சபையினர் மந்திரிகளின் சம்பளத்தை அனுமதிக்காமல் மூன்று முறை நிராகரித்து விட்டமையால் மந்திரிகட்கு மாற்றப் பட்ட இலாகாக்களையும் கவர்னரே இந்தச் சட்டசபை முடியும்வரை மேற்பார்த்து வருவதென்று இந்தியா மந்திரியின் அநுமதி பெற்று இந்திய அரசாங்கத்தினர் தீர்மானித்து விட்டனர் என்றுஞ் செய்தி

வெளிவந்துளது. பி. ஏ. வகுப்பிற்கு VI பிரிவில் தமிழ் எடுத்துக் கொண்டு எங்கள் கல்லூரியிலிருந்து பரீக்ஷைக்குச் சென்ற மாணவர் இருவரும் 2 -வது வகுப்பில் தேறிவிட்டனர் என்னுஞ் செய்தி இன்றைய பத்திரிகையால் அறிந்தது மனதிற்கு மகிழ்ச்சியை விளைத்தது. நான் ஆசிரியனாக வந்த நாள் தொடங்கி என்னிடம் படிக்கின்ற மாணவர்கள் நன்கு தேறிப் பரிசு முதலியன பெறு தற்குரிய ராகின்றனர் என்று தமிழ்நாட்டினர் வியந்து பேசும் ஒரு பேற்றைக் கடவுள் எனக்கு அளித்து வருகின்றார்.

இன்றிரவு மாயப்படைகள் வந்து என்னைத் தாக்குத லுற்றன. என்னைக் காத்தருள வேண்டுமென்று கடவுளை நோக்கிக் குறையிரந்தேன்; பெருமான் திருவருள் இம்முறை என்னைக் காப்பாற்றியது. இன்றிரவு முழுதும் மழை பெய்து கொண்டிருந்தது.

**18 - 6 - 25**

'தமிழர்' என்னும் பத்திரிகை நேற்றிரவே அதன் ஆசிரிய ராகிய திரு. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையால் கொடுக்கப் பெற்றேன். இவர் நான் கல்லூரிக்கு வந்த தொடக்கத்தில் எப். ஏ. வகுப்பில் படித்த மாணவர்களில் ஒருவர். பல கூட்டங்களில் முன்னின்று வேலை செய்து புகழ் பெற வேண்டு மென்னும் விருப்புடையர். இவர் தொடங்கியுள்ள இம்மாதப் பத்திரிகையில் முதல் இரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. பல வகையான செய்திகள் இவற்றில் காணப்படுகின்றன. இப்பத்திரிகையைப் பரவச் செய்தற்கு இவர் மிக்க முயற்சி யெடுத்துக் கொண்டிருக் கின்றனர். இதன் முதல் இதழுக்கு நான் 'கோச் செங்கட் சோழர்' என்னும் கட்டுரை எழுதும் பொழுது நேர்ந்த தெய்விக நிகழ்ச்சியிலிருந்தேதான் நான் 'நித்தல் நிகழ்ச்சிக் குறிப்புகள்' எழுதிவருகின்றேன். இன்று காலை வந்த 'தாய்நாடு'என்னும் வாரப்பத்திரிகையையும், 'தமிழர்' என்பதினையும் காலையிற்ப் படித்தேன். 'தாய் நாடு' திருச்செங் கோட்டிலிருந்து இரண்டாண்டு களின் முன்தொடங்கி வெளிவரும் சமாசாரப் பத்திரிகை. இதன் முதலாண்டில் நான் ஊதியம் பெற்று இதற்குத் தமிழ் சம்பந்த மான கட்டுரைகள் எழுதிவந்தேன்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் பரீக்ஷைகளில் இண்டர் மீடியட், பி.ஏ; வகுப்பினர் ஒருவரும் முதல் வகுப்பில் தேறாமை சம்பந்தமாக, அச்சங்கத்தினர் கௌரவ காரிய தரிசியாகிய திருவாளர் டி.ஸி. ஸ்ரீநிவாசையங்கார் B.A; B.L; M.L.C அவர்கட்கு ஒரு நீண்ட கடிதம் இன்று எழுதியுள்ளேன்.

இன்று திருநெல்வேலியிலிருந்து அச்சிட்ட தமிழ்க்கடிதம் ஒன்று எனக்கு வந்தது. அங்கே 'தென்னிந்திய தமிழ்ச்சங்கம்' என ஒரு சங்கம் ஏற்படுத்தப் பெற்றிருப்பதும், அதில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் தனித் தமிழ்ப் பரீக்ஷகள் போன்று மூன்று வகையான பரீக்ஷகள் நடத்தத் தீர்மானித்திருப்பதும் அக்கடிதத் தால் அறியலானேன். சங்க நோக்கங்களை நிறைவேற்றுதற்குப் பன்னிருவர் அடங்கிய புலவர் குழு ஒன்று ஏற்படுத்தி அதில் என்னையும் சேர்த்து, என் சம்மதியைக் கேட்டிருந்தார்கள். நானும் அதற்குச் சம்மதித்து இன்றே கடிதம் எழுதிவிட்டேன். திருநெல்வேலியிலேயே 'தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் சில பரீக்ஷகள் ஏற்படுத்தி நடத்தி வருவதும் இங்கே நினைக்கத்தக்கது. தமிழுக்காகபலர் உழைக்க வேண்டிய காலம் இது.

வங்காள சட்ட சபையினர் மூன்று முறை மந்திரிகளின் சம்பளத்தை நிராகரித்து அரசாங்கத்தினரைத் தோல்வியுறச் செய்தது முதலிய செய்திகளை நேற்றுத்தான் எழுதினேன். அதற்குக் காரணராயிருந்த வீரபுருஷராகிய சித்தரஞ்சனதாஸ் உயிர் துறந்தனர் என்னுஞ் செய்தி இன்று பத்திரிகையில் வெளிவந்துள்ளது. ஸி. ஆர். தாஸ் நெடுங்காலமாகப் பெருமை பெற்றுள்ள ஓர் வங்காளிக் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய தந்தையாகிய பாபு பூவன் மோகன்தாஸ் கல்கத்தா ஹைக் கோர்ட்டில் அட்டர்ணியாகவும், இரண்டு பத்திரிகைகட்கு ஆசிரியராகவும் மிருந்து புகழ் பெற்றவர். அவருக்கு நல்ல வருவாய்வந்ததாயினும் தம் ஏழை உறவினர்கட்கு மிகுதியாய்ச் செலவிட்டும் பெருங்கடனாளியாகி, கடனிறுக்கச் சக்தியற்றவ ரென நீதிமன்றத்தின் மூலமாகப் பாதுகாப்புப் பெற (இன்சால் வெண்டு) நேர்ந்து உயிர் துறந்தார். சித்தரஞ்சனதாஸ் 1870 -ம் ஆண்டு நவம்பர் மாதம் 5 -ம் தேதி பிறந்தார். 20 -வது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்பு இங்கிலாந்து சென்று ஸிவில் சர்விஸ் போட்டிப் பரீக்ஷயில் தேறினாராயினும் அவர் இந்தியா சம்பந்தமாக அங்கே செய்த சில கிளர்ச்சி காரணமாக அவருக்கு உத்தியோகம் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. தாதாபாய் நௌரோஜி பார்லிமெண்டில் இடம் பெறப் போட்டி போட்ட காலத்தில் தாஸ் பிரசார வேலையில் ஈடுபட்டுப் பல பிரசங்கம் புரிந்தனர். பிரிட்டிஷ் முதல் மந்திரியாகிய மிஸ்டர் கிளாட்ஸ்டன் அக்கிராசனத்தில் இந்திய விஷயங்களைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுச் செய்தார். பின் பாரிஸ்டர் பரீக்ஷயில் தேறி 1893 -ல் இந்தியாவுக்குத் திரும்பி

வந்து வக்கீல் தொழில் நடத்தி ஏராளமாகப் பொருள் சம்பாதித்து, தமது தந்தையால் இறுக்க முடியாது தள்ளுபடியான 16 -லட்சம் ரூபாயைத் தாம் கொடுத்துத் தீர்த்து அதனால் மிகுந்த மதிப்பைப் பெற்றார். 1903 -ல் தற்பொழுது பெரிய யோகியாக விளங்கும் அரவிந்த கோஷ்டி மீது ராஜீய வழக்குத் தொடரப்பட்ட பொழுது அவருக்குச் சித்தரஞ்சன் ஆஜராகிச் செய்த வாதங்களி லிருந்து அவரது பெயர் மிகுந்த பிரபல மடைந்து விட்டது. இங்ஙனம் எத்தனையோ வழக்குகளில் அவர் வாதித்து வந்திருக் கின்றார். அவர் குடும்பத் தாருக்கு இயற்கையாகவுள்ள கவித்துவம் அவருக்கும் வாய்ந்திருந்தது. தாஸ் ஆரம்பத்திலிருந்தே காங்கிரஸ் அங்கத்தினராயிருந்து தேச ஊழியங்களில் ஈடுபட்டு வந்திருக் கின்றார். தாம் சம்பாதித்த பெரும் பொருளையெல்லாம் ஏழை மாணவர்களுக்கும், வேறு தருமங்களுக்குமாகச் செலவிட்டு வந்தார். தேச ஊழியத்தில் ஈடுபட்டுத் துன்புற்ற ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு அவரே காப்பாளரா யிருந்தார். காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்திற்கு ஆரம்பத்தில் விரோத மாயிருந்தாராயினும் பின் அதில் ஈடுபட்டு, தாம் அடையக் கூடிய பெரும்பதவிகளை யெல்லாம் துறந்ததுடன், மாதம் ஐம்பதினாயிர ரூபாய் வரக்கூடிய வக்கீல் தொழிலையும் விட்டு விட்டார். இவர் தமது புதல்வரையும், பத்தினியையுங் கூடச்சிறைக்க நுப்பித்தாமும் சிறைசென்ற செய்தி யாரையும் உருகச் செய்யும் தன்மையுடையது.1922-ல் காங்கிரஸ் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுதே அரசாங்கத்தினர் அவரைச் சிறையிலிட்டு விட்டனர். கடைசி யாகக் காங்கிரசினின்றும் சுயராஜ்யக் கட்சியை நிறுவித் தமது முழுப்பலமும் கொண்டு அரசாங்கத்தினரைத் திகைக்குமாறு செய்து விட்டனர். வங்காளத்தில் அவருக்கிருந்த செல்வாக்கிற்கு அளவில்லை. தமது சகல சொத்துகளையும் தேசத்திற்கு அர்ப்பணஞ் செய்து விட்டார். பெருந்தியாகி, மகாவீரர், ஒப்பற்ற புத்திமான் ஆகிய ‘தேசபந்து’ சித்தரஞ்சன தாஸ் டார்ஜிலிங் என்ற இடத்தில் ஜூன் மாதம் 16 தேதி மாலை 5 -மணிக்கு உயிர்துறந்தார். தேசமெங்கும் இரங்கற் கூட்டங்கள் நடக்கின்றன. (தொடரும்).

கார்த்திகையும் பிரதோஷமும் ஆகிய இன்று மலைக் கோயில் சென்று ஆண்டவனைத் தரிசித்து வந்ததே இன்று எனக்கு ஆறுதலளிக்கக் கூடிய செய்தி.

இரவில் மழை பெய்து கொண்டிருக்கிறது.

**19 - 6 - 25**

ஸி. ஆர். தாசின் மரணத்தைக் குறித்துத் தேசமெங்கும் துக்கங் கொண்டாடப்படுகிறது. பத்திரிகைகள் யாவும் அவரைப் பாராட்டி அவரது மரணத்தால் தேசத்திற்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்று எழுதுகின்றன. இராஜப் பிரதிநிதி தந்தி மூலம் தமது துக்கத்தைத் தாஸின் பத்தினிக்குத் தெரிவித் திருக்கிறார். உலக சிரேஷ்டராகிய காந்தியடிகள் குல்னா என்ற இடத்தில் ஸர். பி. ஸி. ராய் மூலம் தாஸின் மரணத்தைக் கேட்டு இதர வேலைகளை யெல்லாம் நிறுத்திக்கொண்டு கல்கத்தா விற்குப் புறப்படத் தீர்மானித்தார். எனினும் அன்று அங்கு நடக்கும் கூட்டத்தில் தாம் இருக்க வேண்டிய கடமையை நிறைவேற்றி விட்டுப் போகத் துணிந்து, அன்றைய கூட்டத்தில் தாஸைப் பற்றிப் பிரசங்கஞ் செய்தார். 'தாஸ் புருஷோத்த மர்களில் ஒருவர்' என்று கூறிச் சில நிமிஷம் பேச நாவெழாமல் ஸ்தம்பித்து நின்று விட்டார். காந்தியடிகள் பேசியிருப்பன வெல்லாம் மிகுந்த உருக்கத்தை விளைப்பன. ' தாஸினது இராஜ தந்திரத்தையும் கல்வியறிவையும் புகழ்ந்து பேசுதற்கு நான்யார்? என்று காந்தியடிகள் கூறும் புகழைப் பார்க்கிலும் தாஸ் அடையக் கூடிய பெருமை யாதுளது? டார்ஜிலிங் என்ற இடத்தி லிருந்து தாசின் பிரேதம் மெயில் வண்டியில் கல்கத்தாவிற்குக் கொண்டுவரப்பட்டது. அதனைக் காண்பதற் காகக் காலை 2-மணிக்கு மேல் 6-மணிக்குள்ளாக 4-லட்சம் ஜனங்கள் ஸ்டேஷன் பக்கத்தில் கூடிவிட்டார்கள். பிரேதம் ஊர்வலமாகக் கொண்டு போகப்பட்டது. தகன விஷயம் நாளைப் பத்திரிக்கையில் வெளிவரக்கூடும்.

இவ்வூரில் பஞ்சமரில் இராயப்பப் புலவர் என்கிற ஒரு வயது சென்றவர் இருக்கிறார். இவர் முத்துவீர உபாத்தியாய ரிடம் தமிழ் கற்றவராம். இவ்ருடைய கையெழுத்து வியப்பினை விளைக்கின்றது. இவர் பாடியுள்ள 'பத்துக்கற்பனை விளக்கம்' என்ற பாடல்களுக்குச் சாத்துக்கவி கொடுக்க வேண்டுமென்று பல மாதங்களாக என்னைத் தொடர்ந்து கேட்டு வந்தார். இன்று தான் இவருக்கு ஒரு சாத்துக் கவி எழுதிக் கொடுத்தேன்.

'திருக்குறட் குமரேச வெண்பா'வின் 10- வது சஞ்சிகை இன்று வந்தது. இது திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாட்டுக்கும் பொருத்தமான கதையினை முன்னிரண்டடியிற் கூறிக் குமரேசனை விளித்து, இறுதியிரண்டடிக்கும் குறட்பாவை யமைத்து நேரிசை வெண்பாவால் இயற்றப்பட்டதொரு நூல்.

இதனை மூலமும் உரையுமாக எழுதி வெளியிட்டு வருவோர் ஒட்டடநத்தம் ஜகவீர பாண்டியக் கவிராயர் என்பவராவர்.

வெள்ளிகிழமையாகிய இன்று நான் கோயிலுக்கும் போக வில்லை. என் அன்பருடன் சிறிது நேரம் இன்பமாகப் பொழுது போக்கியதன்றி வேறு காரியஞ் செய்யப்படவில்லை. நான் செய்ய வேண்டிய காரியங்கள் பலவுள்ளன. அவற்றைச் செய்யும் ஆற்றலைக் கடவுள் தந்தருள வேண்டும்.

**20 - 6 - 25**

ஸி . ஆர். தாசின் தகனக்கிரியை இன்று பத்திரிகையில் வெளிவந்துளது. அதன் வைபவத்தை அளவிட்டுரைக்க முடியாது. கங்கைக் கரையில் அவரைத் தகனஞ் செய்த மயானத்திற்குக் காந்தியடிகள் சென்றிருந்தார். தாஸ் இறந்தவுடன் தமது ‘யௌவன இந்தியா’ பத்திரிகைக்குத் தந்தி மூலம் ஏதேனும் செய்தியநுப்பும்படி கேட்கப்பட்ட பொழுது, காந்தி யடிகள் ‘ அளவு கடந்த துக்கத்தால் என் மனம் ஒடிந்து சஞ்சலப் படுவதால் எழுதுதற்குப் பேனா ஓடவில்லை; துக்கத்தில் மூழ்கி யிருத்தலால் தந்தியிலும் அதிகம் அநுப்ப முடியவில்லை’ என்று தந்தி கொடுத் திருப்பதும் காந்தியடிகளின் நிலைமையையும் விளக்கக் கூடியதாயிருக்கிறது. காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோக்கலே, பாலகங்காதர திலகர் என்னும் பெரியோர்களின் வரிசையில் சித்தரஞ்சன தாசரும் சேர்த்தெண்ணப்பட வேண்டியவரே.

உக்கடை ராவ்பகதூர் அண்ணாசாமித் தேவர் பிணியொன்று மின்றி ஸ்நானஞ் செய்வதற்கு ஸ்நான அறைக்குச் சென்ற பொழுது உடனே மயக்க முண்டாகி உயிர் துறந்தார் என்று இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. இவர், கள்ளர் குலத்தினர். பெரிய நிலக்கிழமையுடையவர் வீ. அப்பாசாமி வாண்டையாரின் ஒன்று விட்ட சகோதரர். சில மாதங்களுக் குள்ளாகத் தஞ்சை ஜில்லாவில் பெரிய மிராசுதார்களும், பணக்காரர்களும், ஜமீன்றாரும் ஆகப்பலர் உயிர் துறந்திருக் கின்றனர். இவர்களில் வட பாதிமங்கலம் சோம சுந்தர முதலியார் ஒருவரே தமிழ் நாட்டில் ஒரு பெரிய சர்வகலாசாலை ஏற்படுத்தி நடத்தத் தகுந்த பணமுடையவர். யாதொரு அறச்செயலு மில்லாமல் இவர்கள் பொருளைக் கைவிட்டுப் போனது தான் இரங்கற்குரியது. நாகப்பட்டினம் பக்கிரிசாமிப்பிள்ளை மாத்திரம் தொழிலாளர் சங்கம் முதலியன நடத்தி வந்து சிறிது பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருந்தார்.

*'தமிழ்ப்பொழில்' என்னும் பத்திரிகையின் இரண்டாவது மலர் இன்று வந்தது. இது, தமிழ் வளர்ப்பதில் உண்மையான பற்றும் ஊக்கமும் கொண்டுள்ள 'கரந்தைத் தமிழ்ச் சங்கத்தி னின்றும் இரண்டு மாதமாக வெளிவரும் ஒரு செந்தமிழ் மாதப்பத்திரிகை. தமிழ்பொழில் என்னும் பெயர் என்னால் இடப்பெற்றதே. இதன்ஆசிரியர் எனது நண்பராகிய திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள். நான் சில மாதங்களாக ஆங்கிலங் கற்க ஆவல் கொண்டு சில நாள் இடை விட்டேனும் தினம் சிறிது நேரம் படித்து வந்ததைச் சின்னாளாக நிறுத்தி யிருந்தேன். இன்று மீண்டும் படிக்கத் தொடங்கியுள்ளேன்.*

**21 - 6 - 25**

*'அன்பானந்தன்' என்னும் மாதப்பத்திரிகையின் 1வது மலரின் 3வது இதழ் இன்று வந்துள்ளது. இது நாகர் கோயிலினின்றும் வெளியாவது. இந்நகர்ப் பெரிய கடைத் தெருவின் ஓர் மனையில் போர்டுகள் போட்டும் வாத்தியம் முழக்கியும் விளம்பரப்படுத்தி ஓர் வேடிக்கை காட்டப் படுதலை இரண்டு மூன்றும் நாளாக அறியலானேன். இரண்டு பெண்கள் பிறப்பில் இடைப் பகுதிமாத்திரம் ஒட்டி ஒன்றாயிருக்கப் பிறந்தவர்கள். கால், கை, தலை எல்லாம் இருவர்க்கும் முறைப்படி வேறு வேறாக இருக்கின்றனவாம். இவர்கட்கு வயது இருபது இருக்கலாமென்றும், இவர்கள் தனித்தனியே தையல் முதலிய வேலை செய்து கொண்டிருக்கின்றனரென்றும், இவர்கள் பிறந்தது மைசூர்ப் பக்கத்தில் என்றும் சொல்கின்றார்கள். இவர்களைப் பார்த்தற்கு 2-அணா கட்டணம் விதித்து இவ்வூரில் வாங்கப்படுகிறது. இவர்களின் சகோதரர்கள் இப்பெண்களைப் பற்பல இடங்கட்கும் கொண்டு சென்று இவ்வாறாக இருபது முப்பது ஆயிர ரூபாய்கள் சம்பாதித்து விட்டனர் என்று சொல்கின்றார்கள். விதிவயத்தால் இங்ஙனம் பிறந்த இவ்வெளிய சகோதரிகளைக் காட்சிப் பொருளாகக் காட்டிப் பொருள் ஈட்டத் துணிந்தவர்களின் இழிதகைமையையும் வன்கண்மையையும் என்ன வென்று கூறலாகும்?*

*இன்று ஒரு அறச்செயலில் சிறிது ஈடுபட்டிருந்தேன்.*

**22 - 6 - 25**

*இன்று உடம்பு சிறிது நலக்குறைவாகவுளது. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை. இங்கே தமிழ்கற்க வந்திருக்கும் மாணவர் சிலர்க்கு இரவு 9- மணிக்கு மேல் திருக்குறளில் முதல் மூன்று பாக்கள் பாடஞ்சொல்லினேன்.*

## 23 - 6 - 25

இன்றும் உடம்பு நலங்குன்றியேயிருக்கிறது. இன்றிரவு என் வாழ்க்கைத் துணையாவாருடன் என் அன்பர்கள் பலரைப் பற்றிய செய்திகளைச் சொல்லிச் சல்லாபித்துக் கொண்டிருந்தேன்.

## 24 - 6 - 25

இன்று எங்கள் கல்லூரித் தலைவராகிய ரெவரண்ட் கார்டினர் அவர்களை ஒரு காரியமாக அவரது அறையிற் சென்று கண்டேன். அவருடன் இரண்டு வாக்கியங்கள் ஆங்கிலத்திற் பேசினேன். இது தான் நான் முதல் முதலாக ஆங்கிலத்திற் பேசியது என்னலாம். கார்டினர் சீமைக்குச் சென்று, சென்ற மாதந்தான் இங்குத் திரும்பி வந்தார். இப்பொழுது முன்னையினும் அன்புடையவராகக் காணப் படுகின்றார். என் தேக சுகத்தை விசாரித்தார். இந்தியரின் வழக்கத்தை அநுசரித்து இரு கைகளினாலும் கும்பிட்டார்.

காந்தியடிகள் ' குடும்ப ரகசியம்' என்று பெயரிட்டுத் தமது 'யௌவன இந்தியா' வில் எழுதியுள்ள ஓர்கட்டுரையின் மொழி பெயர்ப்பு இன்று வந்த 'சுதேசமித்திர'னில் வெளியாயிருக்கிறது. காந்தியடிகளின் புதல்வராகிய ஹரிலால் M. காந்தி என்பவரின் பெயர் ஓர் கம்பெனியின் முக்கியஸ்தர்களின் பெயர்களில் ஒன்றாக விளம்பரஞ் செய்யப்பட்டிருந்ததென்றும், அது குறித்தே தாம் அதில் ஒரு பங்குக் காரராயினதாகவும், பின்பு அக் கம்பெனி இருப்பது இல்லாதது ஒன்றும் தெரியவில்லை யென்றும், தாம் எழுதிய கடிதங்களில் ஒன்றுக்கும் பதிலின்மையால் தமது பொருளுக்கு நஷ்டம் வந்து விட்டதெனத் தாம் ஐயுறுவதாகவும் ஓர் மகமதிய கனவான் தமது வக்கீல் மூலமாகக் காந்தியடிகட்குக் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு எழுதிய பதிலே 'குடும்ப ரகசியம்' என்பது, காந்தியடிகள், ஹரிலாலுக்குத் தாம் தந்தையா யிருக்க நேர்ந்து விட்டது உண்மையென்றும், அவர் தமது மூத்த புதல்வர் என்றும் குறிப்பிட்டுவிட்டுப் பல செய்திகள் எழுதியிருக் கின்றார். ஹரிலாலுக்கு வயது 36 அவருக்கு நான்கு பிள்ளைகள் உண்டு. மூத்த பிள்ளைக்கு வயது 19. அவர் என் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டவர். ஹரிலால் என் ஆலோசனையைக் கேட்டு நடப்பவராயின் பொது ஊழியங்களில் கலந்து கொண் டிருப்பார்; நேர்மையான வழியிலும் பொருள் ஈட்டுவார். அவருக்குப் பொருளாசை மிகுந்திருக்கிறது. சிரமப்படாமலும் பொருளீட்டக் கருதுகிறார். அவர் செய்யும் எக்காரியத்திலும்

எனக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. பல வருடங்களாகவே அவர் என்னை விட்டு விலகியிருக்கின்றார். 16- வயதானவுடன் நான் பிள்ளைகளைத் தோழராக நினைப்பதன்றிப் பிள்ளை களாக நினைப்பதில்லை. அவர்களுடைய சுதந்தரத்தில் நான் குறுக்கிடுவதில்லை ஆனால் என் ஆலோசனையைக் கேட்டு நடக்கும் பொழுது நான் அவர்கட்கு உதவி செய்யக் கூடும். என் மனைவி மக்களாயினும் தீய நடையுடையரேல் நான் அவர் களுடன் ஒத்துழையாமை' யைக் கடனாகக் கொண்டிருக்கிறேன்' என்று காந்தியடிகள் கூறியிருக்கின்றார். மற்றும் பல செய்திகள் அக்கட்டுரையில் அடங்கியிருக்கின்றன. காந்தியடிகளின் வரலாறு எழுதுபவர்க்கு அது பயன்படக் கூடியவைகளில் ஒன்றாயிருக்கலாம்.

**25 - 6 - 25**

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக அமைச்சர் சென்னையிலிருந்து அநுப்பிய குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு இன்று கைவரப் பெற்றேன். புத்தகம் கண்கவர் வனப்பினதாக இருக்கிறது. இக்கழகத்தினர் இங்ஙனம் தமிழ் நூல்கள் பல வற்றை அச்சிட்டு வெளிப்படுத்தி வருவது தமிழ் வளர்ச்சிக்குரிய ஓர் சிறந்த வழியாகும். இக்கழக அமைச்சராகிய திருவாளர், வி. திருவரங்கம் பிள்ளை அவர்களின்அரிய முயற்சி பெரிதும் புகழ்ச்சிக்குரிய தொன்றாகும். நான் 'செந்தமிழ்ச் செல்வி' யின் இதழாசிரியர் கூட்டத்தில் இருந்து இயன்ற பணி செய்து வருவதற்கு ஈடாகக் கழகத்தினர் தங்கள் பதிப்புகளில் ஒவ்வொரு புத்தகம் எனக்கு உதவி வருகின்றார்கள்.

கோயமுத்தூர் வக்கீல் திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர்கள் B .A; J. M. L. எழுதிய ' மாணிக்க வாசகர்' என்னும் உரை நூல் பல மாதங்களின் முன்பு எனக்கு அநுப்பப் பட்டிருந்தது. அதிற் சில பகுதிகளை முன்பு படித்திருந்தேன். இன்று முழுதும் ஒருவாறு பார்த்து முடித்தேன். நல்ல நடையில் எழுதப் பெற்றுள்ளது. கருத்துமாறுபாடுகள் சில இருப்பினும் பொதுவாக அன்பு பெருகுமாறு நன்கு விரித்தெழுதப் பெற்றுள்ளது. முதலியாரவர்கள் சைவத் திருமுறைகளில் மிக்க பழக்கமும் அன்பும் உடையவர்களென்று இந்நூலால் வெளியாகின்றது. இன்று முழுதும் சோர்வின்றி நான் படித்தும் பாடஞ் சொல்லியும் வந்திருப்பது எனக்கு ஆறுதலளிக் கின்றது.

**26 - 6 - 25**

இன்று காலை 6 மணிக்குமுன் கனவிலே காரைப்பாக்கம் சுவாமி உயிர் நீத்தனரென்று யாரோ சொல்லக் கேட்டுத் துயரத்தால் புரண்டு அழுதுகொண்டிருந்தேன். இவர்கள் திருவையாற்றுக்கு வடக்கில் உள்ள காரைப்பாக்கம் என்னும் ஊரில் பிறந்தமையால் இப்பெயராலே வழங்கப்பெறு கின்றார்கள். குமாரசுவாமி என்பது இவர்கள் பெயராம். வெள்ளையுடை உடுத்தியிருப்பர். திருவாசகம், பெரிய புராணம் முதலிய சைவத் திருமுறைகளில் நல்ல பயிற்சியும் மனப் பாடமும் உடையவர். பல மடாதிபதிகளுடனும் பெரிய மனிதர்களுடனும் நேரிற்பழக்க முடையவர். இல் வாழ்வார் போன்று பயின்றவர் களிடத்தில் நண்பு பாராட்டுந் தன்மையர். இவர் புகையிலையை அளவின்றி உபயோகிப்பதும், இழிமொழிகள் விரவப் பேசுவதும் பிறர்க்கு வெறுப்பினை விளைக்கக்கூடும். அன்றியும் தம்மைப் புகழ்ந்து கொள்ளுங் கருத்தின்றியே தாம் செய்து முடித்த காரியங்களை அடிக்கடி தாமே சொல்லும் பழக்கத்தை மாற்ற முடியாத வராயுள்ளார். இத்தகைய குறைகளிருப்பினும் நான் இவர்களை ஓர் சிவனடியாரெனக் கருதுதலால் வெறுப்பின்றி அன்பு செய்கின்றேன். தமது கையில் எவ்வளவு பொருள் வந்தாலும் அதனை உடனே செலவிட்டு விடும் பெருங்குணம் அல்லது துறவுத்தன்மை இவரிடம் காணப்படும். திருவாசகப் பாக்கள் முதலியவற்றைக் கண்ணீர் பெருக்காது சொல்ல இயலாத அத்துணைப் பேரன்புடையவர் இவர். மதி நுட்பமும் நன்கு வாய்ந்தவர் இவர் வாயால் திருவாசகம் முதலியன கேட்பதில் எனக்குப் பெரு விருப்பமுண்டு. என்பால் இவர்கட்கு மிக்க அன்புண்டென்பதை அறிவேன். நான்அருமையாகக் காணும் சிவனடியார்களில் காரைப்பாக்கம் சுவாமிகள் ஒருவராவர்.

தமிழ்மொழியும் சைவமும் தழைத் தோங்க வேண்டு மென்னும் பெருவிழிப்புடன் அதன் பொருட்டு உழைத்து வருபவர்களும், மிக விரைவில் பாட்டியற்றும் ஆற்றல் வாய்ந்தவர்களும், என்பால் அளவு கடந்த அன்புடையவர்களும் ஆன உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் செங்கோட்டையில் நடைபெற விருந்த மறவர் மகாநாட்டுக்கு என்னை அழைத்துச் செல்ல வேண்டு மென்று இன்று இங்கு வந்திருக்கிறார்கள் நானும் அதற்குப் போக ஆயத்தஞ் செய்து கொண்டிருந்த பொழுது, மிகுந்த மழையால் மகாநாடு மாற்றி வைக்கப்பட்டதென இன்று மாலை தந்தி வந்து பிரயாணத்தை நிறுத்தி விட்டது.

சைவ சமய குரவருள் ஒருவரும், அன்பினால் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகி அழுத கண்ணீருள் மூழ்கி ஐயன் திருவருளைப் பெற்ற பெரியாரும், ஓதுவாரெல்லாம் உள்ளங் கரைந்து அன்பராகும்படி செய்யவல்ல ஒப்புயர் வற்ற திப்பிய பாடல்களாகிய திருவாசகத்தையும், திருக்கோவை யாரையும் பாடியருளிய அன்பர் சிகாமணியும் ஆகிய மாணிக்கவாசக சுவாமிகள் தில்லை திருச்சிற்றம்பலத்திலே திரு நிருத்தம் புரியும் சிவ பரஞ்சுடருடன் இரண்டறக் கலந்தருளிய திருநாளாகிய ஆனித் திருமகம் ஆம் இந்நன்னாளில், நான் அப்பெருமானது வரலாற்றில் சிற்சில பகுதிகளைப் பரஞ்சோதி முனிவர் வாக்கில் படித்துக் கொண்டிருந்ததும், உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் வரப்பெற்றதும், மலைக் கோட்டையிலுள்ள சைவ சித்தாந்த சபையில் ‘வாதவூரடிகளின் பெருமை’ என்பது குறித்து உபந்நியாசம் புரிந்ததும் நான் மகிழக் கூடிய செய்திகளாகும். என் அன்பிற்குரியாரொருவர் தம்மைப் புரந்து வருவாருடன் இன்று மாலை இல்லத்திற்கு வந்து, உபநியாசத்திற்கும் சிறிது நேரம் இருந்து விட்டுச் சென்றனர். இன்று உபந்நியாசிக்கும் பொழுது பிற்பகுதியில் எனக்கு மிகுந்த மயக்கமும் தடுமாற்றமும் உண்டாகிவிட்டன. விஷயங்கள் நினைவிற்கு வரவில்லை. உரையும் தடுமாறிவிட்டது. இதற்குக் காரணம் நான் ஒரு குறுகிய நேரத்திற் சொல்லுமாறு விஷயங்களை ஒழுங்கு படுத்தி வைத்துக் கொள்ளாமையும், என் உடம்பும் மூளையும் வலிகுன்றியிருப்பதும் ஆதல் வேண்டும். ‘உண்மையுணர்ச்சியென்பதின்றியே ஏன் வீணிலே பிதற்றிக் கொண்டிருக்கிறாய்’ என இறைவன் அறிவுறுத்துவதாக இந்நிகழ்ச்சியைக் கொள்ளலாமோ என்றும் கருதுகின்றேன். உயர் திரு. சுவாமிகளும் நமது பெருமானது பெருமையைச் சிறிது நேரம் விளக்கினார்கள். இன்று உபந்நியாசம் கேட்க மாதர்கள் பலர் வந்திருந்தனர்.

**27 - 6 - 25**

சில நாட்களாகவே சீன தேசத்தில் குழப்பம் மிகுந்து வருவது பத்திரிகைகளால் அறியப்படுகின்றது. பூர்வீக நாகரிகம் பெற்ற தேசங்களில் ஒன்றாகிய சீனம் சில காலமாகச் சரியான ஆட்சி முறையின்றி ஒற்றுமை குலைந்து வலிமைகுன்றி வந்து கொண்டிருக்கிறது. அதனால் பிற நாட்டினர் சீனத்தின் பொருள்களைக் கவர்ந்து செல்லவும் ஆதிக்கஞ் செலுத்தவும் தலைப்பட்டனர். இப்பொழுது சீனத்து வாலிபர்களெல்லாம் ஒன்று திரண்டு பிறநாட்டினர்க்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். சப்பானியர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர்

என்போர் இருக்கும் இடங்களிலெல்லாம் அவர்களைத் தாக்கி வருகின்றனராம். இதிலிருந்து மற்றொரு உலகயுத்த மானது விரைவில் ஏற்பட்டுவிடக் கூடுமோ என்னும் ஐயமுண்டாகின்றது.

உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகளால் முருகக் கடவுளின் பதினாறு தலங்கட்குச் சந்த விருத்தத்தால் இயற்றப் பெற்று முன் சுவாமி மலையில் அரங்கேற்றப் பெற்ற 'முருகக் கடவுளின் சோடசப்பிரபந்தம் என்னும் பதிகங்களை அவர் களுடன் பார்த்துச் சில திருத்தங்கள் செய்ததே இன்று என் அலுவலாயிருந்தது.

'நித்தல் நிகழ்ச்சிக் குறிப்பு' முதற்புத்தகத்தையும், இதன்கண் இன்று வரை எழுதப்பெற்றவைகளையும் சுவாமிகள் இன்று படித்துப் பார்த்து விட்டு மகிழ்வுற்றதுடன், விடாது தொடர்ந்து எழுதி வரவேண்டுமென வற்புறுத்தினார்கள்.

**28 - 6 - 25**

நேற்றிரவு கனவில் ஒரு காட்சி நிகழ்ந்தது. அதன் விபரம்: நான் நடுக்காவேரியிலிருந்து சில தலங்கட்குப் போக எண்ணினேன். எங்கள் பங்காளிகளில் சம்பந்தன் என்னும் பெயருள்ள வாலிபன் 'கலைய நல்லூர் என்னுந் தலத்திற்குச் சென்று பின்பு மற்றைத் தலங்கட்குச் செல்லலாம்' எனத் தெரிவித்தனன், 'அது தென்மேற்கில் நாற்பதைம்பது மைல் தூரத்தில் உள்ளது' என்றுங் கூறினன். அவன் துணையாக நான் அத்தலத்தையடைந்து கோயிற் பிராகாரத்தில் வரும் பொழுது ஒன்றொடொன்று அணுகிய மூன்றிடத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதாகத் தெரிவிக்கப் பெற்றேன். அவற்றுள் ஓரிடம் ஒரு மரத்தினடியாக இருந்தது. அங்கே உருவ மென்றாவது அருவமென்றாவது கூறலாகாத புகைபோலும் பிழம் பொன்றினைக் கண்டேன். அஃது ஒரு நெற் கூட்டின் ஆகாரமாகப் பெரிதாயிருந்தது. நான் நிலத்துடன் குனிந்து அதனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதனிடத்திருந்து சூரிய கிரகணம் போலும் ஒளிக்கதிர்கள் வந்து கொண்டிருந்தன. சிறிது தூரத்தில் மற்றும் பலர் என்னைப் போலவே நின்று அதனைப் பார்த்துக் கொண்டிருந்தனர் - என்பது. கனவின் முற்பகுதியில் என்நினைவு பிறழ்ந்திருப்பினும் இருக்கலாம். ஆனால் ஒளிக்காட்சி உண்மை. நெடுநாளாகக் கனவிலேனும் ஒரு நற்காட்சியைப் பெற்றிலேனென மனம் உளைந்திருந்த எனக்கு ஆண்டவன் ஒரு கணப்பொழுது இங்ஙனம் காட்டியருளினான்.

**29 - 6 - 25**

திருவாளர் பி.தி. ஸ்ரீநிவாசையங்கார் M.A; L. T. அவர்கள் எழுதிய ' புதுக்கோட்டைச் சீமை சரித்திரம்' என்னும் தமிழ் வசன புத்தகத்தை -இன்று முழுதும் படித்துப் பார்த்தேன். ஐயங்காரவர்கள் சிறந்த கல்வியாளர்களில் ஒருவராக மதிக்கப் படுபவர். பல துறைகளில் அறிவுபடைத்தவர். ஆனால் தமிழில் அவர் எழுதிய புத்தகங்களிலெல்லாம் பிழைகள் மலிந்து கிடக் கின்றன. எழுத்துச் சொற் பிழைகளேயன்றிப் பொருட் பிழை களும் மிக்குள்ளன. இங்ஙனம் பிழைமிகுதற்குக் காரணம் தாம் அறியாதவற்றையும் அறிந்தனவாகப் பாவித்துக் கொள்ளுதலும், சிறிது அறிந்த துணையானே நன்கு ஆராயாது துணிந்து விடுதலும், முன்பின் பாராது விரைவில் எழுதி வெளிப்படுத்தலும் ஆதல் வேண்டும். அவருடைய துணிபுகட்கு அவர் பெரும்பாலும் ஆதரவு காட்டுவது மில்லை.

இன்று என் புதல்வி திரு. பார்வதிக்கு நள வெண்பாவில் முப்பது பாட்டுக்கள் வரை பாடங்கேட்டு இடையிடை பொருள் சொல்லிக் கொடுத்தேன்.

திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசனஞ் செய்தேன்.

**30 - 6 - 25**

இன்றிரவு திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத்தில் ஆறு பதிகங்கள் படித்தேன்.

**1 - 7 - 25**

இன்று முழுதும் இடைவிடாது வேலை செய்து கொண்டிருந் தேன். திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அச்சிடுமாறு நான் உரையெழுதிவரும் நூல்களில் கார்நாற்பது உரை முகவுரையுடன் இன்று எழுதி முடிந்தது.

**2 - 7 - 25**

இன்று வழக்கம் போல் அலுவல்கள் பார்த்துக் கொண்டிருந் தேன். பத்திரிகையில் நான் படித்தவற்றில் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை. அவை இரண்டும் அமெரிக் காவில் வெளி யாகும் 'ஆசியா' என்னும் பத்திரிகையில் எழுதப் பெற்றவற்றின் மொழிபெயர்ப்புகளாம். அவற்றுள் ஒன்று 'உழைப்பின் பயன்' என்றும் தலைப்பின் கீழ் எழுதியிருக்கிற ஜேம்ஷட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடாவின் சரித்திரம், வங்காளத்தில் காடாயிருந்த ஒரு பாகம்

எங்ஙனம் ஜேம்ஷட்பூர் என்னும் நகரமாயிற்று என்பதும், அதிலுள்ளதும் உலகத்தில் மிகச்சிறந்ததாயும் உள்ள இரும்பு எஃகுத் தொழிற்சாலை உண்டான வரலாறும், அதனை உண்டாக்கிப் பெரும் புகழ் படைத்த டாடாவின் வரலாறும் உயர் குணங்களும் அதிற் கூறப்பட்டுள்ளன.

மற்றொன்று 'காந்தி -போர்டு' என்னும் தலைப்பின் கீழ் எழுதப்பெற்றது. இதில் காந்தியடிகளையும் போர்டு என்பவரையும் ஒப்பிட்டு இருவரும் வேறு வேறு வழிகளாக அநுசரிக்கின்றார் களாயினும் இவருடைய நோக்கமும் ஒன்று தான் என்று கூறப் பட்டிருக்கிறது.

**3 - 7 - 25**

தேசபந்து சித்தரஞ்சன தாஸ் இறந்தது குறித்தும் பதினாறாம் நாளாகிய ஜூலை மாதம் 1ஆம் தேதி இந்தியா எங்கும் பெருங் கூட்டங்கள் கூடித் துயரம் கொண்டாடப் பெற்ற செய்திகள் இன்று பத்திரிகையில் வெளி வந்துள்ளன. பல கட்சியினரும், ஆங்கிலேயர் உட்படப் பல சாதி மதங்களைச் சேர்ந்தவர்களும் துயரக் கொண்டாட்டங்களிற் கலந்து கொண்டார்களாம். தாஸ் ஞாபகச் சின்ன நிதிக்கு 10- லக்ஷ ரூபாய் ஜூலை முதற்றேதிக்குள் சேர வேண்டுமெனக் காந்தியடிகள் முதலானோர் சின்னாள்முன் விளம்பரஞ் செய்திருந்தனர். ஆனால் அத்தேதிக்குள். 2-லக்ஷத்து 40- ஆயிரம் ரூபாயே சேர்ந்திருக்கிறதென்றும், ஜூலை முழுதும் தாம் பணம் வசூலிக்கப் போவதாகவும் காந்தியடிகள் 2-ம் தேதி வெளியிட்டிருக்கின்றனர். காந்தியடிகள் எவ்வளவு பெரியவராயினும் தேச நிலையைச் சரியாக உணராமலே அவசரப்பட்டுச் சில காரியங்களைச் செய்து விடுகின்றனரென லாலா லஜபதிராய் முதலிய சில பெரியோர்கள் சொல்லி வந்திருக்கின்றனர். நானும் சில சமயங்களில் அப்படி நினைத்ததுண்டு. இப்பொழுது பண வசூலுக்கு நாள் குறிப்பிட்டதும் அங்ஙனம் கருதற்பாலதே.

வட அமெரிக்காவில் கலிபோர்னியா என்ற இடத்தில் ஜூன் மாதம் 29 தேதி காலை பெரிய பூகம்பம் உண்டாகிப் பத்து மைல் நீளம் பூமியில் பிளவு ஏற்பட்டதென்றும், 800 -அடி உயரமுள்ள ஒரு மலையின் உச்சிப்பாறை இடிந்து விழுந்ததில் ஒரு ரயில் வண்டி அகப்பட்டு மறைந்து கிடக்கிறதென்றும், பல வகையாலும் சேதம் மிகுதியென்றும், 30000 -பேர் வசிக்க வீடின்றியிருக்கின்றனரென்றும் பத்திரிகைகட்குச் செய்தி வந்துள்ளது.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு நான் மலைக்கோயில் சென்று அம்மையப்பரை இறைஞ்சி வழக்கம் போல் என் விண்ணப்பங்களைத் திருமுன் முறையிட்டு வந்தேன்.

**4 - 7 - 25**

வட அமெரிக்காவின் பூகம்பத்தைப் பற்றி நேற்று எழுதினேன். இன்று வந்த பத்திரிகையில் போலந்து தேசத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகளும், தொழிற்சாலைகளும் விழுந்து விட்டன என்றும், 10- லக்ஷம் பவுன் நஷ்டம் இருக்கக் கூடுமென்றும், 150000-பேர் வீடின்றியிருக்கின்றன ரென்றும் வெளியாகியிருக்கிறது.

கல்கத்தாவுக்கு 5- மைல் தூரத்திலுள்ள ஓர் இடத்தில் ‘பக்ரீத்’ பண்டிகையினால் இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டதாம். வங்காள சுயராஜ்யக் கட்சித் தலைவராகத் தாஸுக்குப் பதிலாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சென் குப்தா அவ்விடம் சென்று சமாதானப் படுத்தினராம். காந்தியடிகள் முதலானோரும் அங்கே சென்று விசாரித்தார் களாம். இன்னும் நாளைப் பத்திரிகையில் என்ன வெளியாகுமோ தெரியவில்லை. தலைவர்கள் இந்து முஸ்லீம் ஒற்றுமை குறித்து எவ்வளவோ முயன்று பார்த்தும் ஒன்றும் பயனில்லா திருக்கின்றது. சுயராஜ்யம் என்பது பகற் கனவு தானோ?

நேற்று என் தந்தையார் அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதியதில், என் தமக்கை புதல்வனாகிய சிரஞ்சீவி சிவப்பிர காசத்தை இங்கு அநுப்பினால் தமிழ்கற்பிக்கலாமென்று எழுதியிருந்தேன். அக்கடிதம் போய்சேருவதற்குள் அவர் அதே கருத்தை மேற்கொண்டு இன்று காலை இங்கு வந்திருக்கிறார்.

உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் எழுதிய கடிதம் ஒன்று இன்று வந்தது. என் வாழ்க்கையில் நடந்து வரும் அந்தரங்க போராட்டத்தை அறிந்து வைத்திருக்கின்ற அவர்கள் அது குறித்துச் சில நன் மதிகளை அக்கடிதத்தில் மிக்க அன்புடன் எனக்கு எழுதியிருக்கிறார்கள்.

‘செந்தமிழ்ச்செல்வி’ என்னும் மாதப் பத்திரிகைக்கு ‘பெரிய புராணமும் பொருளிலக்கணமும்’ என்னும் பொருள் பற்றி நான் இன்று ஒரு கட்டுரையெழுதினேன்.

காந்தியடிகள் ‘பிரமசாரிகளின் இலக்கணம்’ என்னுந் தலைப்பில் ‘யௌவன இந்தியா’ப் பத்திரிகையில் எழுதியிருக்கும்

கட்டுரையொன்றின் மொழி பெயர்ப்பை இன்று படித்தேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எவ்வளவு அடக்கமுடைய வர்களாயிருக்க வேண்டும் என்பதைப்பற்றி அதில் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். 'மனிதர்களுக்கு வெற்றியென்பதேயில்லை; எல்லா வெற்றிகளும் கடவுளுக்கே உரியன' என்று அதன் இறுதியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

**5 - 7 - 25**

இன்று காலை 10-மணிக்கு நான் உணவுண்ணத் தொடங்கு முன் ஒன்று சொல்லியதற்கு என் மனைவி இந்திராணி இனிமை யில்லாத குரலில் 'என்னா' என்று சற்று உரத்துக் கூறியதைக் கேட்டேன். மனையாளை யஞ்சு மறுமையிலாளன் -வினையாண்மை வீறெய்த லின்று' என்று தெய்வப் புலவர் கூறியிருக்கிறனர். நான் பிறிதொன்றுஞ் செய்யாது காந்தியடிகள் கடைப்பிடித்தும், உபதேசித்து வரும் 'சத்தியாக்கிரக' முறையால் என் மனைவி தன் குற்றத்தை யுணரும்படி செய்ய வேண்டுமெனக் கருதிப் பகல் ஒரு மணி வரையில் உணவு கொள்ள மறுத்து விட்டேன். மனைவி கூறியது பராமுகமாயெழுந்த குற்றமற்ற கூற்றாயுமிருக்கலாம். ஆனால் நான் அதைக் குற்றமாகக் கருதியே அங்ஙனஞ் செய்தேன். பலவழிகளில் நான் என் மனைவியைப் பாராட்டவும் என்னை வெறுத்துக் கொள்ளவும் காரணமிருப்பினும், மனைவியின் பால் ஒரோ வழி நிகழும் இத்தகைய செயல்கள் எனக்குப் பொறுக்கக் கூடாதனவா யிருக்கின்றன. இங்ஙனமாக என் குடும்ப வாழ்க்கையில் இன்று 'சத்தியாக் கிரகம்' தொடங்கப்பெற்றது. ஆனால் இதற்கு நான் இன்னும் பரிசுத்தமும் உறுதியும் உடையனாதல் வேண்டு மென்றும், இதனைப் பிரயோகிக்கப் பெறுபவர் இன்னும் சற்றுச் சாதுரிய அறிவுடையராதல் வேண்டுமென்றும் உணர்கின்றேன். நான் ஒரு மணிக்கு மேல் உணவுண்டேன். என் மனைவியோ மூன்று மணி வரையில் உணவின்றியே வேலை செய்து கொண்டிருந்து, என் வற்புறுத்தலின் மேல் பின் உணவுண்ண நேர்ந்தது. உடம்பு நலமில்லாத நிலையில் இங்ஙனம் நேர்ந்தது எனக்கு வருத்தத்தை விளைத்தது. எவ்வாறாயினும் இன்றைய நிகழ்ச்சி பலனளிக்கக் கூடிய தொன்றெனவே எண்ணுகிறேன்.

என் அன்பிற்குப் பெரிதும் உரியராக நான் குறிப்பிட்டு வந்திருக்கிற ஆடகப் பெயரினரை நான் சந்திக்கும் நிகழ்ச்சி யெல்லாவற்றையும் எழுதுதல் வேண்டா என நிறுத்திக் கொண்டுள்ளேன். இன்றியமையாதவைகள் மாத்திரம் குறித்து வருவேன். 3-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை. என் 'நித்தல்

நிகழ்ச்சிக் குறிப்பு' முதற் புத்தகத்தை அவரிடம் கொடுத்து வந்தேன். இன்று மாலை அதனை மீளப் பெற்றுக் கொண்டேன். அவருடன் எனக்குளதாய தொடர்பினை அப்புத்தகத்தில் நான் எழுதியிருக்கிறேன். அவர் அப்புத்தகம் முழுதும் படித்திருப்ப ரென்பதில் ஐயமில்லை. என்பால் அவருக்குள்ள அன்பு சிறிதும் சுருங்காது எனினும் அவரது மனதின் ஆழத்தை எளிதில் அறிந்து கொள்ள இயலாது, இன்று என்னிடம் புத்தகம் சேர்பிக்கும் பொழுது மாறுபாடில்லாத முகமலர்ச்சியுடனேயே இருந்தார். தமது கருத்தைப் பின்பு நேரும் பொழுது அவர் தெரிவிக்கக் கூடும். நானும் என் மரபிற்கும் நாட்டிற்கும் மதத்திற்கும் துரோகம் செய்யாத வகையில் என்னைக் காத்துக் கொள்ளக் கூடும். எங்கள் அன்பு மாத்திரம் என்றும் குன்றாதென நினைக்கிறேன். திருவருட்குறிப்பிருந்தால் குற்ற மற்ற வழியில் காதற்பயன் நுகர்தல் கூடும். அவர் கல்லூரியிற் சேர்ந்து பி. ஏ. வுக்குப் படிப்பதில் சில நாளாக ஏற்பட்டிருந்த ஐயம் இன்று நீங்கிற்று. நாளை முதல் கல்லூரியில் அவருக்கு நான் தமிழ் கற்பிக்கத் திருவருள் கூட்டியதையுணர்ந்து மகிழ்வெய்து கின்றேன். எங்கள் கல்லூரித் தலைவராகிய ரெவரண்ட் கார்டினரிடம் அவர் பேசிய வீரஞ் செறிந்த மொழிகளை அவர் சொல்லக் கேட்டு மிகுந்த வியப்பெய்தினேன். கார்டினரே வியப்பெய்தினராம். கார்டினர் அவரைப் பாராட்டியும் வாழ்த்தியும் உதவி செய் வதாகக் கூறியும் அவருக்கு நேற்று எழுதியநுப்பிய நீண்ட கடிதத்தை அவர் இன்று என்னிடம் படித்துக் காட்டினர்.

'தமிழர்' என்னும் மாதப்பத்திரிகைக்குக் 'கோப்பெருஞ் சோழர்' என்னுந் தலைப்பில் இன்று ஓர் கட்டுரை (ஒரு பகுதி) எழுதினேன்.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சில பதிகங்கள் இன்று படிக்கப் பெற்றன.

**6 - 7 - 25**

நாள் முழுதும் பாடங்கற்பிக்கும் வேலையிருந்தது. நேற்று வந்த 'சுதேசமித்திரன்' இன்று படித்தேன். அதில் பின்வருங் குறிப்பு இருந்தது. " ' பார்வெர்டு' பத்திரிகையின் ஆசிரியரான பி. கே. சக்கரவர்த்தி தேசபந்துவைப் பற்றி எழுதிய கட்டுரை யொன்றில் கூறுவதாவது:- "ஒரு நாள் அறஞ்செய்வதைப் பற்றிப் பேசி கொண்டிருந்த பொழுது தேசபந்து பின்வருமாறு கூறினர். 'மிஸி பி. கே. ராய் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் துன்புறுவதையும், அதற்காக மகாத்மா காந்தி பணந் திரட்டக்

கல்கத்தாவிற்கு வந்திருப்பதையும் பற்றி என்னிடம் கூறி, அதற்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென வேண்டினார். உடனே என் பெயரால் பாங்கிலிருந்த பாக்கிப் பணம் அனைத்தையும் கொடுக்கும்படி செக் எழுதிக் கொடுத்தேன். அப்பொழுது 1500 அல்லது1600 ரூபாய் தான் இருந்தது. அப்பொழுதுதான் நான் வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்து வருவாய் மிகுதியின்றிச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன். நான் அதனைப் பிறருக்குக் கொடுத்ததாக நினைக்கவில்லை. என் மூலம் கடவுள் கொடுத்த தாகவே நினைக்கிறேன்.

1920 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் எனது கஷ்டத்தை ஸ்ரீமான் தாஸ் உணர்ந்து என்னை நம்பி 27250 ரூபாய் கொடுத்தார். 4, 5 நாள் கழித்து நான் அந்தப் பணத்தைக் கட்டச் சென்ற போது பாங்குக் காரர்கள் தேச பந்துவுக்கு 'நடைமுதல் கணக்கு' இல்லையென அதனை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டனர்! "

இன்றிரவு மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்தேன்.

**7 - 7 - 25**

இன்று குறிப்பிடத்தக்க செய்தியில்லை.

**8 - 7 - 25**

திருவையாற்றில் அறுபத்து மூவர் திருமடங்கட்டி, அங்கு எழுந்தருளியிருந்த - - - சுவாமிகள் ஜூன் மாதம் 30 -ம் தேதி செவ்வாய்க் கிழமை சிவபத மெய்தினரென இன்று வந்த 'சுதேசமித்திர'னில் எழுதப்பட்டிருந்த ஒரு கட்டுரையால் அறிந்தேன். பதினைந்து இருபது ஆண்டுகளின் முன்பு இவர்கள் சிங்கப்பூர் சென்று பெரும் பொருள் திரட்டி வந்து இத்திரு மடத்தைக் கட்டினார்கள். காவிரியின் ஓரத்தில் புஷ்யப் படித்துறையின் பக்கத்தில் இத்திருமடம் அமைந்துளது. அறு பத்து மூவர்க்கும், மற்றுமுள்ள சைவப்பெரியார்கள் பலர்க்கும் அவர்கள் திருநாளில் சுவாமிகளால் குரு பூசை செய்யப் பெற்று வந்தது. சமாராதனையில் வருடம் ஒன்றுக்கு முப்பதினாயிரம் பிராமணர்களாவது இத்திருமடத்தில் உணவுண்டிருத்தல் கூடும். சுவாமிகள் சிவ பூசை செய்வதில் மிகச் சிறந்தவர்கள். திருமடத்தில் பூசைக்காக உருத்திராக்கத்தினால் ஒரு மண்டபம் கட்டப் பெற்றுளது. வெள்ளி, தங்கம் முதலியவற்றாற் செய்யப் பட்ட பூசைப் பாத்திரங்களின் மதிப்புப் பத்துப் பதினையாயிரம் ரூபாய் இருக்கும். வலம்புரிச் சங்குகள் மாத்திரம் பதினாயிர

ரூபாய்க்கு மேலாகுமாம். சிவாகம விதிப்படி அபிடேக ஆராதனை களுடன் சுவாமிகள் செய்யும் சிவ பூசை பெரியதோர் காட்சி யாயிருக்கும். விசேட நாட்களில் பத்துப் பன்னிரண்டு மணி நேரம் பூசை நடக்கும். இங்ஙனம் பூசை செய்வார் ஒருவரை இதுவரை யாரேனும் கண்டதாக நான் கேட்டதில்லை. ஆனால் அவர்கள் மிக்க கல்வியுடையவர்களெனத் தெரியவில்லை. கல்வியின் முடிந்த பயனாகிய வாலறிவன் நற்றாள் தொழுவார்க்குக் கற்பனவும் அமையுமன்றே? திருமடத்தில் அறுபத்து மூவர் படமும், வேறு படங்களும் மிகுந்த விலையுள்ளனவாய்ச் செய்து வைக்கப் பட்டுள்ள. இத்தகைய சிறந்த திருத்தொண்டியற்றி வந்த இவர்கள் தஞ்சை ஜில்லாவில் கள்ளர் குலத்திற் பிறந்தவர்கள். இக் குலத்தின் வரலாற்றை நான் எழுதிய ‘கள்ளர் சரித்திரம்’ என்னும் நூலால் அறியலாகும். அதில் ஓரிடத்து இந்தச் சுவாமி களைப் பற்றியும் குறித்திருக்கிறேன். இவர்கள் சில மாதங்களாக நோயுற்றி ருந்ததாக நான் பலர் வாயிலாகக் கேள்விப்பட்டும், திருவையாற்றுச் சப்தஸ்தல விழாவுக்குச் சென்றிருந்த காலத்திலும் இவர்களைப் பாராது வந்துவிட்டேன், என்பாலுள்ள குற்றங்களில் இது ஒருவகைக் குற்றமாகும். நானும், என் அருமை நண்பரும் நற்குணக்குன்றும் ஆகிய திருவாளர் த.வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களும் ஜூன் முதலில் திருப்பாதிரிப்புலியூர் சென்றிருந்தபொழுது சுவாமிகளின் தேக நிலை கவலைக்கிட மாயிருக்கிறதென்றும், பிள்ளையவர்கள் உடனே திருவையாற்றுக்கு வரவேண்டு மென்றும் அவர்கட்கு ஒரு கடிதம் வந்தது. இப்பொழுது அறுபத்து மூவர் மடத்திற்குக் கள்ளர் குலத்தில் பிறந்தவர்களும், விருத்தாசலத்தில் மடாதிபதியென இருந்தவர்களும், காங்கிரஸ் இயக்கத்தில் பெரிதும் ஈடுபட்டிருப்பவர்களுமான உயர்திரு சிதம்பர சுவாமிகளும், திருவாளர் த.வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்களும் வேறு சிலரும் பாதுகாப்பாளர்களாகச் சுவாமிகளாலேயே ஆதரவு எழுதி வைக்கப்பட்டுளதெனப் பத்திரிகையால் அறிந்தேன். மடத்தின் தோட்டத்திலேயே சுவாமிகளுக்குச் சமாதி அமைக்கப் பெற்று வைக்கப்பட்டதாம். உயர்திரு. கணபதிக் குருக்கள் முதலாயினோர் அதை ஆக்ஷேபித்துக் கிளர்ச்சி செய்கின்றார்களாம். சுவாமிகளைச் சிங்கப்பூர்ச்சாமி என்றும், பூஜைச் சாமி என்றும் பெரும்பாலோர் சொல்வதுண்டு. மடத்தின் சொத்து விபரம் அவ்வளவாக எனக்குத் தெரியாது.

**9 - 7 - 25**

செங்கோட்டையிலிருந்து வெளிவரும் ‘மறவர் நேசன்’ என்னும் மாதப்பத்திரிகைக்கு ‘ஊக்கமுடைமை என்னும் பொருள்

பற்றி மிகுவிரைவில் இன்று ஓர் கட்டுரையெழுதி அநுப்பினேன். இதன் சிலம்பு. 1-ல், மணி-1 முன்பு வெளிவந்தது. அதில் 'கல்வி' என்று எழுதியிருந்தேன்.

**10 - 7 - 25**

'க்ஷத்திரிய மித்திரன்' என்னும் மாதப்பத்திரிகையின் மூன்று பகுதிகள் இன்று வந்தன. அவற்றை ஒருவாறு மேனோக்காகப் பார்த்தேன். இப்பத்திரிகை நாடார் எனப்படும். சான்றோர் குலத்தினரால் வெளியிடப்படுவது. சென்னையிலிருந்து வெளியாகிறது. இவர்கள் தங்களை க்ஷத்திரியர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இங்ஙனமே பள்ளி என்றும் படையாட்சி என்றும் சொல்லப்படுகிற ஒரு வகுப்பினரும் தங்களை க்ஷத்திரியர் என்று சொல்லிக் கொள்கின்றனர். இவர்கள் க்ஷத்திரியர்களென்று சொல்லிக் கொள்வதில் நமக்கு விருப்போ வெறுப்போ ஒன்று மில்லை. தாராளமாகச் சொல்லிக் கொள்ளட்டும். ஆனால் தாங்கள் க்ஷத்திரியர் என்பதற்கு இவர்கள் கூறும் ஆதரவுகள் கல்வியறிவுக்கும் பொது வறிவுக்கும் புறம்பானவை யென்பது என் எளிய எண்ணம். அன்றியும் இவர்கள் தனித்தனி தாங்களே க்ஷத்திரியரென்றும், ஏனையர் க்ஷத்திரியரல்ல ரென்றும் கூறுகின்றனர். இப்பட்டத்திற்காக இவர்கள் செய்து வந்திருக்கும் போராட்டம் கொஞ்சமல்ல. பல ஆண்டுகளாகப் புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் படை யாட்சிகள் சான்றாரையிகழ்ந்தும், சான்றார்கள் படையாட்சிகளை யிகழ்ந்தும் எழுதி வந்திருப்பன மிகுந்த அருவருப்பை விளைக்கக் கூடியவை. இவர்கள் பிறரை யிகழுதற்கன்றித், தம் வகுப்பினர்க்குத் தன் மதிப்பையும் ஊக்கத்தையும் உண்டாக்கி நன்னிலைமைக்குக் கொண்டுவர உதவியாக எவ்வளவு பெரிய பெயர்களைத் தமக்குரியனவாகக் கொள்ளினும் இழுக்கொன்று மில்லை. சான்றார் வகுப்பினர் பாண்டி நாட்டுத் திருக் கோயில் களில் உள்ளே விடப்படாமை எனக்கு மிகுந்த வருத்தத்தை விளைப்பதொன்று, இது குறித்து என் அன்பர்களிடம் நேர்ந்த பொழுது நான் சொல்வதுண்டு. ஆனால் நாடார் குலத்தினர் தங்களுடைய நன்னடையினாலும் அன்பினாலும் பிற வகுப்பினரின் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவர்களாய்த் தங்கள் உரிமையைப் பெற வேண்டுமென்பது என் எண்ணம். இவர்களில் எனக்கு மிகவும் அன்புள்ள மாணவர் இருவருளர். ஒருவர் கிறிஸ்தவ மதஞ் சார்ந்துள்ள J. S. பொன்னையா என்பவர். மற்றொருவர் இந்து மதத்தினர் துரைசாமி என்னும் பெயரினர். இவர் அநுப்பச் சொல்லியே 'க்ஷத்திரிய மித்திரன்' எனக்கு வந்து கொண்டிருக்கிறது.

சில ஆண்டுகளாக இந்நகரில் 'மாணவர் தமிழ்ச்சங்கம்.' ஒன்று நடந்து வந்தது. தமிழ்ப் பண்டிதர் மகாநாடு இவ்வாண்டில் நடந்த பின் சிலர் விருப்பப்படி இதன் பெயரைத் 'திரிசிரபுரம் தமிழ்ச்சங்கம்' என மாற்றியிருக்கின்றனர். இன்று இச்சங்கத்தில் திருவாளர் உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையால் 'தமிழர் முன்னேற்றம்' என்பது பற்றி உபந்நியாசஞ் செய்யப்பட்டது. நான் இதனைப் பார்த்து வரச் சென்ற பொழுது, தலைவராகக் குறிப்பிட்டவர் வராமையால் என்னைத் தலைமை வகிக்க வேண்டினார்கள். மாணிக்கவாசகர் திருநாளன்று உபந்நியாசஞ் செய்த பொழுது வெளிப்பட்ட என் மூளையின் பலக்குறைவு காரணமாகச் சில காலம் வரையில் நான் உபந்நியாசஞ் செய் யாதிருக்க வேண்டுமென எண்ணியிருந்தேன். இக்காரணத்தால் நான் தலைமை வகிக்க எவ்வளவோ மறுத்தும் முடிவில் நானே அமரும் படி நேர்ந்தது. எல்லாம் எனையாளும் ஈசன் செயல்.'

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

**11 - 7 - 25**

நேற்று வந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகை இன்று படித்தேன். பாராளுமன்றத்தில் இந்தியாவைப் பற்றி லார்டு ஒலிவியர் கேட்ட கேள்விக்கு விடையாக இந்தியா மந்திரியாகிய லார்டு பர்க்கன் ஹெட் ஒரு பிரசங்கஞ் செய்திருக்கிறார். அதன் முழு விபரமும் பத்திரிகையில் வெளிவந்துளது. இந்தியர்களுக்கு நயமும் பயமும் காட்டி மிக்க சாதுரியமாக அப்பிரசங்கம் செய்யப்பெற்றிருக் கிறது. இந்தியர்கள் அரசாட்சியை நடத்துவதில் துணையாயிருக்கும் அளவைப் பொறுத்தே இனி அதிக உரிமை வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும் என்ற கருத்தமையப் பேசியிருக்கிறது.

என் நண்பர்களில் ஒருவராகிய திருவாளர் M. A. மீனக்ஷி சுந்தரம்பிள்ளை இன்று இங்கு வந்து என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். எனக்கு வெளியூர்களில் ஏற்பட்ட நண்பர்களில் இவரைக் காலத்தால் முந்தியவரென்று சொல்லலாம். இவரது ஊர் மன்றச்சநல்லூர்.

என் அன்பிற்குரிய ஆடகப் பெயரினருடன் நான் இன்று பேசிக் கொண்டிருந்த பொழுது அவர் தன்னையும் என்னையும் குறித்து ஓர் அபிப்பிராயம் வெளியிட்டார். அது, ' நீங்கள் உலகத்துக்கு மிக அஞ்சுகிறவர்களெனத் தெரிகிறது. நான் சிறுபிள்ளையிலிருந்தே அங்ஙனமன்று. எனக்கே தான் நான்

அஞ்சுகின்றேன். கடவுளுக்கு அஞ்சுவதைப் பார்க்கிலும் என் மனச் சான்றுக்கே நான்மிக அஞ்சுகிறேன். உலகம் யாது நினைக்கும் யாது சொல்லுமென அதற்கு அஞ்சுவதில்லை' என்பது என்னைப் பற்றி அவர் இவ்வளவு தெளிவாக அறிந்து சொன்னது என்னுடன் பழகியதால் மாத்திரமன்றி 'நித்தல் நிகழ்ச்சி'யின் முதற் புத்தகத்தை அவர் படித்துப் பார்த்ததனாலும் ஆகும். அதனை முழுதும் தாம் படித்ததாக மகிழ்ச்சியுடன் எனக்குத் தெரிவித்தார்.

**12 - 7 - 25**

இன்று 'தமிழ்ப் பொழி' லுக்குத் தமிழ் எழுத்துக்கள் என்னுந் தலைப்பில் ஓர் கட்டுரையெழுதுமாறு நூல்களை ஆராய்ந்து கொண்டிருந்தேன். ஆராயும் பொழுதே 'தமிழ்ப் பொழிலின் ஆசிரியரும் என் நண்பருமாகிய திருவாளர் R. வேங்கடாசலம் பிள்ளையவர்களின் கடிதம் ஒன்று வந்தது. அக்கடிதம் எனக்கு நல்ல இன்பமளிப்பதாகும் என எண்ணிக் கொண்டே அதனை உடைத்துப் பார்த்தேன். அஃது அங்ஙனமே இன்பம் விளைப் பதாயிற்று. அவர் தம் அருமை மாணவ ரொருவர் சென்னைக்குப் படிக்குமாறு போகலுற்று பொழுது அவரை வாழ்த்திப்பாடிய கலி வெண்பாட்டு அச்சிட்ட பிரதி யொன்றும் அதனுடனிருந்தது. ஒரு தமிழாசிரியர்க்கும் அவரது மாணவர்க்குமுள்ள அன்பின் பெருமையை விளக்குவதா யிருந்தமையால் அப்பாட்டு எனக்கு மிக்க உவகையை விளைத்தது. எல்லாஆசிரியர் மாணவர் களிடையும் இத்தகைய அன்பு பெருகுதல் வேண்டும். கடிதத்தில் தமிழ்ப் பொழிலுக்குக் கட்டுரை வேண்டுமெனவும் குறிக்கப் பட்டிருக்கிறது. ஓரளவு இன்று எழுதியிருக்கிறேன்.

**13 - 7 - 25**

இன்று ஆடகப் பெயரன்பர்பால் எய்தி அட்டாங்க யோகத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தேன். அவர் மிகுந்த ஆர்வத்துடன் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதில் அவருக்கு நல்ல பற்றுண்டாயது போல் அவரது தோற்றம் இருந்தது.

மலைக் கோயில் சென்று தரிசனஞ் செய்தேன்.

**14 - 7 - 25**

இன்று வந்த ஆனி மாதச் செந்தமிழ்ச் செல்வி'யும் 'சுதேச மித்திரன்' 'தாய்நாடு' என்பனவும் படித்தேன். மாரியம்மன் கோயில் முத்து என்னும் சிவனடியார் இன்று பகல் இங்கு வந்திருந்தனர்.

**15 - 7 - 25**

இன்று இங்கு வந்த என் அன்பராகிய சரவணமுதலியார் என்னும் சிவனடியாருடன் பேசிக் கொண்டிருந்தேன். திரு. நாச்சியப்பக் கவுண்டர் என்னும் ஓர் அன்பரும் இங்கு வந்திருந்தனர்.

கார்த்திகையாகிய இன்று மலைக்கோயில் சென்று வந்தேன்.

**17 - 7 - 25**

ஆடி வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று கருணையங்கடலாகிய பெருமானையும் பெருமாட்டி யையும் தரிசித்திறைஞ்சி வந்தேன்.

**18 - 7 - 25**

குளித்தலையில் 'கம்பர் செந்தமிழ்ச் சங்கம்' என ஓர் சங்கம் ஓராண்டாக நடைபெற்று வருகின்றது. கோ. சுந்தர ராஜலு என்னும் என் அன்புள்ள மாணவர் ஒருவர் முயற்சியால் 29-6-24ல் இது நிறுவப் பெற்றது. சங்க நிறுவு விழாவில் நானே தலைமை வகித்திருந்தேன். சங்கத்தை நடத்தி வரும் அமைச்சர் திரு. கோ. சுந்தர ராஜலுவே இதன் முதலாண்டு விழா இன்றும் நாளையும் நடத்த ஏற்பாடாகியுள்ளது. இதற்குத் தலைவராகத் திருவாளர் S. சோமசுந்தர பாரதி M.A; B. L. அழைக்கப் பெற்று வந்துள்ளார். என் உடம்பு நலமின்மைக் கருதி நான் இதில் உபந்நியாசம் ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை யெனினும், என் அன்புள்ள மாணவரின் விருப்பத்தை மறுக்கமாட்டாமலும், கேள்விப் பயன் கொள்ளலாமென்று கருதியும் இன்று காலை புறப்பட்டு இங்கு (குளித்தலை) வந்துளேன். இன்று மாலை 4- மணியளவில் சபை ஆரம்பமாயிற்று அவைத்தலைவர் 'கம்பர் கவிநயம்' என்பது பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தனர். இவர் நல்ல சொல்லாற்றல் வாய்ந்தவர். கம்ப ராமாயணத்தைச் சிறப்பாக ஆராய்ந்திருக்கின்றனர் ஆங்கில ஆராய்ச்சி முறையில் இவர் கம்பராமாயணத்தைப் பற்றிப் பேசுவது கேட்பதற்கு இன்ப மாயிருக்கும். இன்று உபந்நியாசத்தில் ஆராய்ச்சி வகைகளைச் சுட்டி, ஒவ்வொரு வகையிலும் இக்காப்பியம் இணையற்றது என்று சொல்லி வந்தனர். ஆனால் ஒருவகைக் கேனும் உதாரண மாகச் செய்யுளையெடுத்துக் காட்டி விளக்காமற் போனது ஓர் குறையாகும். இவர் உபந்நியாசத்தில் பொருள் புலப்படாத சில வட சொற்களும், கொச்சை மொழிகளும், முருட்டு வார்த்தை களும் விரவிவருவதுண்டு.

'திருமுருகாற்றுப்படை' என்பது பற்றி, திருவாளர் மு. நடேச முதலியார் ஓர் உபநியாசஞ் செய்தனர். இவர் ஸ்ரீமத் ஞானியர் ஸ்வாமிகளைப் போல் பேச வேண்டுமென்னும் விருப்புடையராய் அம்முறையைத் தழுவிப் பேசி வருகின்றனர். கூட்டத்திற்கு இவர் பேச்சு இன்பம் விளைக்கக் கூடியதே. 'தமிழ்ப்பொழில்' என்னும் மாதப் பத்திரிகைக்குத் தமிழ் எழுத்துகள் என்னும் தலைப் பெயரிட்டு ஓர் கட்டுரையில் ஒரு பகுதி யெழுதியதனை இன்று இங்கு வந்து பிரதி செய்து அநுப்பினேன்.

**19 - 7 - 25**

இன்று மாலை 4-மணிக்கு குளித்தலை 'கம்பர் செந்தமிழ்ச் சங்கத்தின் முதலாண்டு விழாவின் இரண்டாவது நாளின் சபை ஆரம்பமாயிற்று. சென்ட் ஜோசப் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய திருவாளர் அ. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் 'தமிழ் மொழிச் சிறப்பு' என்பது பொருளாக ஓர் உபந்நியாசஞ் செய்தனர். திருவாளர் பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் பல உபந்நியாசங்களிற் பேசிவரும் சிற்சில செய்திகளே இன்று இவராற் பேசப் பெற்றன.

'சனகியும் அநுமனும்' என்பது பொருளாகத் திருவாளர் அ. வரத நஞ்சையக் கவிராயர் அவர்கள் பேசினர். எதிர் பார்த்தபடி உபந்நியாசம் அவ்வளவு சுவையாக விருக்கவில்லை எனினும் அவரது கல்வித் திறமையை அறிந்துள என்போல் வார்க்கு அவர் பாலுள்ள மதிப்பு இதனாற் குறைவதாகாது.

'சிந்தாமணி' என்பது பொருளாக என் அன்பர்களில் ஒருவராகிய திருவாளர் வீ. குமார வீரையர் அவர்கள் ஓர் உபந்நியாசஞ் செய்தனர். எதிர் பார்த்ததற்கு அதிகமாகவே உபந்நியாசம் சுவையுடைத் தாயிருந்தது.

அவைத்தலைவர் முடிப்புரையில் தமிழ் ஆராய்ச்சி சம்பந்தமாகச்சில கருத்துகளை வெளியிட்டனர். 'நிரம்பினா னொருவன் காத்த' என்னும் கிட்கிந்தா காண்டச் செய்யுட்கு அழகாகப் பொருள் விரித்துரைத்தனர்.

**20 - 7 - 25**

ஆடி அமாவாசையும் திங்கட் கிழமையுமாகிய இன்று மலைக்கோயில் சென்று அம்மையப்பரை இறைஞ்சி வந்தேன்.

**21 - 7 - 25**

காந்தியடிகள் ஏழுவயதுச் சிறுவராயிருக்கும் பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றை நேரிலறிந்த ஒருவர் தமது

பிரசங்கத்திற் கூறியிருப்பதைப் பத்திரிகையிற் படித்தேன். அதாவது: ' காந்தியடிகள் 7 -வயதினராயிருக்கும் பொழுது அவர்கள் வீட்டுக்குச் சிலர் மாம்பழம் அநுப்பியிருந்தார்கள். மாம்பழம் அங்கே அருமையாய்க் கிடைக்கக் கூடிய தாகையால் கிடைத்த பொழுது வீட்டில் விருந்து நடத்துவது வழக்கம். அன்றும் அவ்வாறே விருந்து நடந்தது. காந்தியடிகள் தமது அன்பிற்கு மிகவும் உரியவரான தமது சிற்றப்பா அவ்விருந்திற்கு வராதிருத்தலைக் கண்டு விசாரித்தார். விருந்து நடப்பதைப்பற்றி அவருக்கு முன்னமே தெரிவிக்க மறந்து விட்டதாகப் பதில் கூறப்பட்டது. உடனே காந்தியடிகள் தாம் அன்று மாம்பழம் உண்பதில்லையென்றும், அவ்வாண்டில் மாம்பழப் பருவம் நீங்கும் வரையிலும் உண்பதில்லை யென்றும் கூறிவிட்டார். பின் சிற்றாப்பாவுக்கு ஆளநுப்பியும் அவர் முன்பே புசித்து விட்டபடியால் வரக்கூடவில்லை. காந்தியடிகளின் தந்தையார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் காந்தியடிகள் மாம்பழம் உண்ண மறுத்து விட்டார் என்பது.

**22 - 7 - 25**

இன்று விசேடம் ஒன்றுமில்லை.

**23 - 7 - 25**

நேற்றும் இன்றும் வந்த ' சுதேசமித்திரன்' பத்திரிகைகளை இன்று படித்தேன் பின்வருஞ் செய்திகள் அவற்றில் முக்கிய மானவை; ஜுலை மாதம் 20 -ம் தேதி காலை 11 -மணிக்கு மேட்டூர்த் தேக்கத்தின் அங்குரார்ப்பண விழாவைச் சென்னை கவர்னராகிய லார்டு கோஷன் நடத்தி வைத்தார். காவிரியின் நீரைத் தேக்கி வேறுகிளை நதியுண்டாக்கிச் சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சை ஜில்லாக்களில் பாயும் படி செய்து நன்செய் நிலங்களை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், ஈரோட்டிற்கு மேற்கே சுமார் 36 -மைல் தூரத்திலுள்ள மேட்டூர் என்னும் கிராமத்திற்குச் சிறிது தூரத்திலுள்ளதொரு குன்றின் மேல் இவ்விழாக் கொண்டாடப் பெற்றது. பல கனவான்கள் விழாவிற்கு அழைக்கப் பெற்றுச் சென்றிருந்தனர். 1834- ம் வருடத்திலேயே ஸர் ஆர்தர் காட்டன் என்பவரால் இத்திட்டம் ஆரம்பஞ் செய்யப்பட்டதாம். இப்பொழுது இதற்கு 612- லட்சம் ஏக்கர் நிலத்திற்கு மேல் புன்செய்க்காடுகள் நன்செய் ஆக மாறலாம் எனத் தோன்றுகிறது.

மத்திய மாகாணத்தில் பிலாஸ்பூரிலுள்ள பண்டித தேவகி நந்தன் என்பவர் ஒரு பெரிய சொத்துடையவரென்றும், அவர்

தமது சொத்துக்கள் முழுதையும் சர்வகலா சாலைக்குத் தானஞ் செய்து விட்டனரென்றும் நாகபுரிச் செய்தி கூறுகிறது. பட்டதாரிகளான பிறகு ஆராய்ச்சி வேலை செய்தல் முதலிய வற்றுக்கு உதவும்படி அவை எழுதி வைக்கப் பட்டனவாம்.

சீன தேசத்தைச் சேர்ந்த காண்டன் பட்டணத்திலுள்ள தேசிய கவர்ன்மென்டின் அந்நிய நாட்டிலாக்காத் தலைவர், மகாத்மாகாந்தியடிகளுக்கு நீண்டதோர் தந்தியனுப்பியிருக் கின்றனர். சீனாவுக்கும் ஐரோப்பிய தேசங்கட்கும் ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகள் சீனாவுக்கு நியாயம் வழங்குவன வல்ல என்றும், எல்லாத் தேயத்தினரும் சீனாவின் மேல் ஆதிக்கஞ் செலுத்து கின்றனரென்றும், சொந்த நாட்டிலே சீனர்கள் அந்நியர்களுக்கு அடிமையாயிருக்கின்றார்களென்றும், இரக்க மென்ப தில்லாமல் அநாகரிகமாக அந்நியநாட்டுச் சிப்பாய்கள் எங்களை எங்கள் தெருக்களிலேயே சுட்டு வீழ்த்துகிறார்கள் என்றும், இந்த அநீத ஆதிக்கமும் ஒழிந்தால்தான் சீன மற்ற நாடுகளுடன் ஒத்துழைக்க முடியும் என்றும், சகல தேசத்தினரும் இங்கு வந்து போட்டி போடுவதன் மூலமாகச் சில ஆண்டுகளில் புதிய தோர் யுத்தம் ஏற்படவும் கூடும் என்றும் மற்றும் பலவும் உருக்கமுண்டாக அதிற் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

நான் குளித்தலைக்குப் போய் வந்தது முதல் எனக்கு உடம்பு அவ்வளவு நன்றாக வில்லை. இன்று இருமல் அதிகமாயிருந்தது. என் வாழ்க்கை மிகவும் மந்தமாகவேயிருக்கின்றது

**24 - 7 - 25**

இன்று நான்கு தமிழ்ப் புத்தகங்கள் பழைய விலைக்கு வாங்கினேன். அவற்றுள் ஒன்று திருக்குறள் மூலமும் நாலடியார் மூலமும் சேர்ந்தது. இது கி.பி. 1831 -ம் வருடம் (கரவருடம்) தாண்டவராய முதலியார், முத்துச்சாமிப்பிள்ளை என்பவர் களால் பிழையறப் பரிசோதித்து அச்சிடப்பட்டிருக்கிறது. எகர ஒகர உயிர்களுக்கு மேலே புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. உயிர்களில் புள்ளி வைக்கப்படவில்லை. இதன் பொருட்டாகவும், பழைய பதிப்பென்பது கருதியுமே இதனை வாங்கினேன்.

இன்று இருமல் என்னை வருத்தா நிற்கின்றது.

ஆடிவெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று அம்மையப்பரை வணங்கி வந்தேன்.

## 25 - 7 - 25

சுப்பிரமணிய சிவா உயிர் துறந்தனரென்று நேற்றே பத்திரிகையில் வந்திருந்தது. இவர் இந்தியாவில் தேசீயக் கிளர்ச்சி ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் ஸ்ரீமான் தூத்துக்குடி வி. ஒ. சிதம்பரம் பிள்ளையவர்களுடன் சேர்ந்து தேசீயப் பிரசங்கங்கள் புரிந்து சிறைக்குச் சென்றவர். அஞ்சா நெஞ்சமுடையவர். பல முறை சிறை சென்று வந்தனர். கடைசியாகப் பாரத மாதா கோயில் என ஓர் கோயில் கட்டுவதாக முயன்று கொண்டிருந்தனர்.

இங்கிலாந்திலும், பிரான்சிலும் பலத்த இடி மழைகள் உண்டாகி மிக்க சேதம் விளைத்திருக்கின்றனவாம். கோய முத்தூர் அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டுக்கு ஜூரராக வரவேண்டிய ஒருவர் சிறிது தாமதமாக வந்தாராம். அவர் சொல்லிய சமதானங்களை ஏற்றுக் கொள்ளாமல் தாமதித்து வந்ததற்காக அவர் நூறு ரூபாய் அபராதம் கொடுக்க வேண்டுமென்றும், இல்லையேல் ஒரு மாதம் சிறை வாசஞ் செய்ய வேண்டுமென்றும் ஜட்ஜ் ஸ்ரீமான் ஏ.வி. கோவிந்தமேனன் கூறினராம். ஜூரர் வேலைக்கு இவ்வளவு கௌரவம் இருக்கிறது. ஜட்ஜியும் கூட ஜூரராக வர விரும்பலாம்!

இன்றும் எனக்கு இருமல் தொந்தரையே. எனினும் வேலையின்றியிருப்பது எனக்கு இயலாத காரியமாகின்றது.

## 26 - 7 - 25

'ரிஷிகள் காலத்து மக்கள் வாழ்க்கை' என்னும் தலைப்பில் திருவாளர் பி. தி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள்' சுதேச மித்திரனில் தொடர்ச்சியாய் எழுதி வருகின்றனர். இன்று வந்த பகுதியில், அக்காலத்து ஆடவர்களிலும் பெண்டிர்களிலும் வியபிசாரம் செய்பவர்கள் மிகுதியாயிருந்தனரென்றும் அவர்கள் தம்மால் இச்சிக்கப்பட்டவர்க்கு மோகத்தை யுண்டாக்கி வசப்படுத்துதற்கு மூலிகைகளை உபயோகித்து வந்ததுடன், மந்திரங்களையும் ஜபித்து வந்தனரென்றும் கூறி, மேற்கோளாக இருக்கு வேதத்தி லிருந்தும், அதர்வண வேதத்திலிருந்தும் பல மந்திரங்கள் மொழி பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றன.

உயர் திரு மணிவாசக சரணால சுவாமிகள் நேற்றிரவு இங்கு வந்து இன்று மாலை குன்றக்குடிக்குப் புறப்பட்டுப் போயிருக் கிறார்கள். நேற்றையின் முன் தினம் நான் குறிப்பிட்ட திருக்குறள் நாலடி மூலப்புத்தகத்தை ஸ்வாமிகள் விரும்பி எடுத்துச் சென்றுளார்கள்.

‘ அகத்தியர் தேவாரத் திரட்டு’ உரை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் அச்சிட்டது சில நாட்களுக்கு முன் எனக்கு வந்தது. அவ்வுரை திருவாளர், கயப்பாக்கம் சதாசிவ செட்டியார வர்கள் எழுதியது. முழுதும் என்னால் திருத்தப்பெற்றது. அதில் என் பெயர் குறிப்பிட்டிருக்க வேண்டியது நியாயமாகும். புத்தகம் வந்தவுடன் என் பெயரும் உளதோவென்று பார்த்தேன். காணப் படவில்லை. அதனால் எனக்கொரு புகழுண்டாக வேண்டுமென நான் விரும்பியிராமையால் அது எனக்கு ஒரு வித உணர்ச்சியையும் உண்டாக்க வில்லை. ஆனால் அக்கழக அமைச்சராகிய அன்பர் திருவாளர் திருவரங்கம் பிள்ளையவர்கள் என் பெயர் சேர்க்கப் படாமைக்குச் சில காரணங்கள் குறிப்பிட்டு எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர். அக்காரணங்கள் மாத்திரம் எனக்கு உண்மையுள்ளனவாகத் தோற்றவில்லை. உயர்திரு. மணி சுவாமிகளும் இதனைக் கண்டு மிக வருத்தமடைந்தார்கள். கழகத்தினர் என் பெயரைக் குறிப்பிடுதற்கு இடம் பெறா விடினும், செட்டியாரவர்கள் தாம் எழுதிய முகவுரையில் குறிப்பிட்டிருக்கவே வேண்டும். ஆனால் அங்ஙனம் குறிப்பிடுவது அவர்கள் புகழைக் குறைக்குமென்று கருதினார்கள் போலும்? குறைக்கவுங் கூடியதே. ஆனால் உண்மையென்கின்ற விலை யில்லாத மாணிக்கத்தின் முன் இவ்வற்பமான புகழ் எம்மாத்திர மென்பதனைச் சிந்திக்க வேண்டும்.

எனக்கு உடம்பு நலமின்மையில் நான் இன்று மிகுதியாக வேலை செய்யவில்லை. என் புதல்வி திரு. பார்வதியம்மாளை நள வெண்பாவும் நன்னூலும் ஒப்புவிக்கச் சொல்லிக் கேட்டேன்.

**27 - 7 - 25**

திங்கட்கிழமையாகிய இன்று உடம்பு நலமின்மையால் கோயிலுக்குப் போகவுமில்லை.

**28 - 7 - 25**

சைவ சமய குரவர் நால்வருள் ஒருவரும், தேசமுய்யத் திருத் தொண்டத் தொகை முன் பணித்த திருவாளரும், மாது கொள்புலவி நீக்க மனையிடையிருகாற் செல்லத்தூது கொள்பவரும், தம்பிரான் றோழரும் ஆகிய நம்பியாரூரர் ‘களையாவுடலோடு’ ‘வெள்ளானைமேல் கொண்டு’ திருக் கைலை யெய்திய திரு நாளாகிய ஆடிமாதத்துச் சுவாதி இற்றை நாளாகும். இன்று பல இடங்களில் மெய்யடியார்கள் குரு பூசை நடத்தி, மகேச்சுர பூசை முதலியனவும் செய்திருப்பார்கள். நான்

இந்நன்னாளில் எவ்வகையான நலங்களையும் நுகர்தற்கியலாதவ னாயினேன். சைவ சித்தாந்த சபையில் இன்று மாலை, என்னிடம் கல்வி பயின்ற அன்பராகிய திரு. ம. பெரியசாமிபிள்ளை சுந்தரர் பெருமையைப் பற்றி உபந்நியாசஞ் செய்தனர். அதற்கும் நான் போக வில்லை.

**29 - 7 - 25**

இன்று மகமதியர்களின் பண்டிகையாகலின் பெரிய கடைத் தெருவில் கூட்டம் மிகுதியாக இருந்தது. பண்டிகையின் விபரமொன்றும் எனக்குத் தெரிந்திலது. இந்துக்களில் கல்வியறிவில்லாத மூடர்கள் பலர் இப்பண்டிகையில் புலி வேடம் முதலியன தாங்கியும், உடல் முழுதும் கரியைப் பூசிக் கொண்டும் தாங்கள் மனிதவுடம்பெடுத்த மிருகங்கள் என்பதனைப் பலரும் அறியுமாறு காட்டித் திரிக்கின்றனர். இந்துக்களில் தக்கவர் களாயுள்ளார் இவ்வளவு எளிய நிலையில் தங்கள் மதத்தை வைத்துக் கொண்டு வாளாவிருப்பது இரங்கத் தக்கதாகும்.

**30 - 7 - 25**

நேற்றுத் திரு. அ. பொன்னம்மாளின் போஷகியாராகிய துரைசாணியம்மை என்னை அழைத்துச் சென்று இரகுநாதராவ் என்னும் ஆங்கில மருத்துவரிடம் காண்பித்து என் பிணியைப் பார்க்குமாறு வேண்டினர், இன்று அவரிடம் வாங்கி வந்த இருமல் மருந்தினையுண்டேன். சில நாள் தொடர்ந்து உண்ண நேரும்.

இரண்டு நாளாக வெய்யிலின் கொடுமை பொறுக்க முடியவில்லை. இன்றிரவு சிறிது மழை பெய்தது.

**31 - 7 - 28**

இரண்டு நாட் பத்திரிகை இன்று படித்தேன். காந்தியடிகள் கல்கத்தாவிலுள்ள ஓர் ஐரோப்பியர் சங்கத்தில் பிரசங்கஞ் செய்தனரென்று நாலைந்து நாளின் முன் படித்தேன். இப்பொழுது அவர் கல்கத்தாவிலே கூடிய கிறிஸ்தவப் பாதிரி மார்களின் மகா நாட்டிலும், ஆங்கிலோ இந்தியர் எனப்படும் சட்டைக்காரர் கூட்டத்திலும் அழைக்கப் பெற்றுச் சென்று உபந்நியாசஞ் செய்தனரெனப் படித்தறிந்தேன். கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்கு அவர் செய்த உபதேசத்தில் நீங்கள் மற்றவர்களுக்கு உபதேசஞ் செய்வதைப் பார்க்கிலும் பிறரிட மிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவைகளைத் தெரிந்து கொள்வதில் கருத்துடையவர் களாயிருக்க வேண்டும்' எனக் கூறியிருக்கிறார். பாதிரிகள்

அவரை மிகவும் பெருமைப்படுத்திப் பணமுடிப்பும் தந்து அநுப்பினர்.

லாலா லஜபதிராய் தமது பத்திரிகையில் எழுதிய கட்டுரை யொன்றில், காந்தியடிகளிடத்தில் தமக்கு அளவு கடந்த அன்பும் மரியாதையும் உண்டென்றும், காந்தியடிகள், பண்டித மதன் மோஹன மாளவியா இருவருமே இந்தியாவில் மிக உத்தமமான மனிதர்களென்றும், அரசியல் விஷயங்களில் அவ்விருவருடனும் தாம் மாறுபட்ட கொள்கையுடையவ ராயினும் அவர்களிடத்தில் தமக்கு அளவு கடந்த விசுவாஸம் உண்டென்றும் கூறியிருக் கின்றார்.

தீய இச்சைகள் என் உள்ளத்தில் வாதனையாகப் பதிந் திருத்தலின் அவை ஒரோ வழி வெளிப்பட்டு என்னை ஈர்த்துச் செல்ல முனைகின்றன. சிவ பெருமான் திருவருளே என்னை உய்வித்தருள வேண்டும். ஆடி வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று அம்மையப் பரைத் தரிசித்து வந்தேன்.

**1 - 8 - 1925**

விசேடச் செய்தி ஒன்றுமின்று.

**2 - 8 - 1925**

இன்று ஆடி பதினெட்டு ஆகையால் இந்து மாதர்கள் பலரும் தங்களை ஒப்பனை செய்து கொண்டு காவிரிக்கரை சென்று காவிரியம்மனுக்குப் படைத்துக் காதோலை, கரும் பாசிமணி, எலுமிச்சம்பழம் முதலியவற்றை ஆற்று நீரில் விட்டுத் திரும்புவார்கள். சிறு சோற்று விழா அயர்வது முண்டு. இந்நகர்க் காவிரிக்கரையில் இன்று பகல் முழுதும் குழாங் குழாமாய் ஆடவரும் மகளிரும் உலாவரும் காட்சிமிக்க இன்ப மாயிருக்கும். பட்டி மக்கள் சிலர் பாலத்தின் மேலிருந்து வெள்ளத்திற் குதித்து நீந்திச் செல்வதுமுண்டு. சங்க காலத்து நூல்களிற் சொல்லப் படுகின்ற 'புதுப்புனல்' விழவு இங்ஙனமாக நடைபெற்று வருகின்றது போலும்? பழைய பள்ளிக் கூடங்களில் இந்நன்னாளில் மாணவர்கள் சிறு தேர்கூட்டி, அதிற் பழைய ஏடுகளை வைத்து ஈர்த்துச் சென்று ஆற்றில் விடுவார்கள். நான் திண்ணைப் பள்ளியிற் பயிலும் போது இங்ஙனம் செய்திருக்கின்றேன். தமிழ் நாட்டிலே கற்றோர் வழிவந்த கல்லாதோர் பலர் இதனைக் கொண்டாடியதன் வாயிலாகப் பயனுள்ள பழைய ஏட்டுச் சுவடிகள் பலவெள்ளத்திற் போயிருத்தலும் கூடும்! நான் இன்று காவிரிக்கறை சென்று காட்சியின்பம் நுகர்ந்திலேன்.

'தமிழர்' என்னும் பத்திரிகைக்குச் சென்ற மாதம் எழுதிய 'கோப்பெருஞ்சோழர்' என்பதன் தொடர்ச்சியாக இன்று மூன்று பக்கம் எழுதித் தந்தேன்.

என் ஆருயிர் போலும் அன்பினரால் எனக்கு எழுதப் பெற்று நான் சேமித்து வைத்திருந்த கடிதங்கள் பலவற்றை அவரது விருப்பின்படி இன்று மாலையில் அவரிடம் சேர்த்துளேன். இரண்டு மூன்று நாட்களில் அவை திரும்பக் கொடுக்கப் பெறும் என நம்பியிருக்கின்றேன்.

**3 - 8 - 1925**

மருந்துண்டுவருவதில் நேற்று முதல் எனக்கு ஜலதோஷம் மிக்குளது. இப்பொழுதுள்ள ஐந்து நாள் லீவில் சிலகாரியங்கள் செய்து முடிக்க எண்ணியிருந்தேன். இன்று பகல் 2-மணிவரையில் நோயின் தொந்தரையால் உணவுண்டபின் உறங்கிக் கொண்டிருந்தேன். திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**4 - 8 - 1925**

இன்று மாலை 3-மணி 56-நிமிடம் முதல், 6-மணி 47-நிமிடம் வரையில் சந்திர கிரஹணம். கிரஹண காலத்தில் பலர் நீராடி மந்திர ஜெபம் செய்து கொண்டிருப்பதுண்டு. எனக்கு உடல் நலமின்மையால் இன்று உடம்பு குளிக்கவுங் கூடவில்லை.

இரண்டு நாள் முன் என் அன்பரிடம் கொடுத்திருந்த கடிதங் களை இன்று நான் திரும்பப் பெற்றுக் கொண்டேன். அவர் புதிதாக எழுதியதொரு கடிதத்தையும் நேரில் கொடுத்தார். அதனைச் சில தினங்களில் திரும்பக் கொடுப்பதென்ற நிபந்தனை யுடன் நான் பெற்றுக் கொள்ள நேர்ந்தது. பென்சிலால் ஒன்பது பக்கத்திற்கு அது எழுதப்பெற்றுளது. அதிலிருந்து அவருடைய பரந்த அறிவும், உயர்ந்த குணமும், கற்பின் சிறப்பும், மதப்பற்றும், தெய்வபக்தியும் ஒவ்வொரு வார்த்தையிலும் பொலிந்து விளங்கு கின்றன. ஆனால் அவையெல்லாம் எனக்கு இன்னல் விளைப் பனவாகவேயுள்ளன. ஒரு காலத்தில் அவருடன் கூடி அரிய தோரின்பந்துய்த்து ஆண்டவனுக்குப் பணி செய்யலாமென்று கொண்டிருந்த எண்ணங்களையெல்லாம் அவரது மதப் பற்றின் காரணமாக இனி நான் கைவிட வேண்டியவனாக இருக் கின்றேன். இதைக் காட்டிலும் எனக்கு வரக்கடவதாகிய துன்பம் வேறுளதாக நான் நினைக்கவில்லை. சிவபெருமானது திருவருள் பெரியதோர் சோதனைக்குள் என்னை அகப்படுத்தியிருக்கிறது.

**5 - 8 - 1925**

இரண்டிரவாக மழை பெய்து கொண்டிருக்கிறது. நேற்று முதல் எனக்குச் சுரம் வருவது போன்றிருக்கிறது. என் அன்பருக்கு எட்டுப் பக்கம் அடங்கிய நீண்டதொரு கடிதம் எழுதியதே இன்று என் வேலையாக இருந்தது. இன்று கடிதம் எழுதிக் கொண்டிருந்த பொழுதும், அவரைச் சென்று கண்டபொழுதும் என் கண்களில் நீர் பெருகியதை என்னால் அடக்க முடிய வில்லை.

மலைக்கோட்டையில் 'திருநாவுக்கரசு தமிழகம்' என்னும் இவ்வில்லத்தை விலைக்கு வாங்கிக் கட்டியதில் ஏற்பட்ட கடன்களுள், வீடுவிற்றவரிடம் இவ்வில்லினையே ஈடாகக் காட்டி வாங்கியிருந்த பணத்தில் எஞ்சியிருந்த ரூபாய் நூற்றைம்ப தும் இன்று கொடுத்து வரவுவைத்து ஈட்டுப்பத்திரமும், வீடு சம்பந்தமான எல்லா ஆதரவுகளும் பெற்றுக் கொண்டேன். வீட்டில் என் மனைவிக்கும், என் புதல்வி திரு. பார்வதியம்மாளுக் கும் கொடுக்க வேண்டிய பணமன்றி, வெளியில் இனி யாருக்கும் நான் கடன் கொடுக்க வேண்டியதில்லை.

**6 - 8 - 1925**

பல சங்கங்களிலிருந்து உபந்நியாசஞ் செய்ய வேண்டுமென வற்புறுத்தி எனக்குக் கடிதங்கள் வந்து கொண்டி ருக்கின்றன. என் உடம்பின் தற்பொழுதைய நிலைமையில் நான் உபந்நியாசஞ் செய்வதென்பது முற்றிலும் பொருந்தாததாகும். எழுதினவர் களுக்கு என் இயலாமையைத் தெரிவிப்பதன்றி நான் செய்யக் கூடிய தொன்றுமில்லை.

என் அன்பர் இன்று கல்லூரிக்கு வந்திலர். நான் அவரது இருக்கை சென்று பார்த்தேன். எனது கடிதம் அவருக்கு அளவற்ற துயரத்தையுண்டாக்கியிருக்கிறது என உணர்ந்தேன்.

**7 - 8 - 1925**

இன்று ஆடி வெள்ளிக்கிழமையாயிருந்தும் நான் கோவிலுக்கும் போகாமல் என் அன்பர் இருப்பிடஞ் சென்று இரவு 8-மணிக்கு மேல் வீடு திரும்பினேன். அவர் ஒரு இந்துப் பெண்ணாக, சைவ சமயப் பெண்ணாக மாறின் மிகவும் நலமாயிருக்குமென நான் கொண்டிருந்த விருப்பத்தை என் கடிதத்தால் அறிந்தவளவில் அவர் தாங்க முடியாத துயரமுடையவராகி விட்டார்.

எனக்கு முன் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு வாய்விட்டுக் கதறியழுதார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் அவருக்கிருக்கிற

பக்திக்கு ஓர் எல்லை கிடையாது. அதை மாற்ற யாராலும் எவ்வகையாலும் முடியாது. அவரது அழுகையை நிறுத்த நான் வெகுபாடுபட வேண்டியதாயிற்று. அவர் திறத்து நான் கொண்டிருந்த எண்ணங்களை இனிக் கைவிட வேண்டியதுதான். இறையனாரகப் பொருள் முதற் சூத்திர வுரையில் 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்று கூறியிருக்குமாறே பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் பேதையேனுக்கு இக்காதலை விளைத்து என் தீய இச்சைகளைக் களைந்து என்னை ஆளக்கருதினன் போலும்? எமது ஆண்டவனது திருவருட் பெற்றியை ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகி யானோ அளந்தறியற் பாலன்? என் அன்பரின் குணங்கள் என்னாற் புகழமுடியாத அவ்வளவு சிறந்தனவே யெனினும் அவரிடத்துச் சிறிதேனும் பொய்ம்மையில்லை யென்று நான் நினைக்கவில்லை. எப்படியாவது இருவர்க்கும் இப்பொழுது ஒரு தெளிவு ஏற்பட்டது நன்மையே. இனி, பழைய காதல் வழியைக் கைவிட்டாலும், நாங்கள் இருவரும் உலகத்தில் எடுத்துக்காட்டாக நிற்றற்குரிய சிறந்த நண்பர்களாக விளங்கு வோம் என்று துணிந்திருக்கிறேன்.

## 8 - 8 - 1925

ஸர். சுரேந்திரநாத் பானர்ஜி 6-ம் தேதி உயிர் துறந்தன ரென்று நேற்று வந்த பத்திரிகைகளில் வெளியாகி யிருந்தும் நான் நேற்றுப் பத்திரிகை படிக்காமையால் இன்றே அறிய நேர்ந்தது. இவ்வாண்டில் தேசத்திற்குழைத்த பெரியார் பலர் ஒருவர் பின் ஒருவராய்ப் போய்க் கொண்டிருந்தனர்! சுரேந்திரநாதர் 1848-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் தேதி பிறந்தவர். ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறி ஸிவில் சர்விஸ் உத்தியோகம் பெற்றுச் சிறிது காலத்தில் விலகியவர். தேசீயக் கிளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் தேச நன்மைக்காக வன்மையுடன் போராடி 'ஜனங்களின் காவலன்' என்று கொண்டாடப் பெற்றவர். வங்காளப்பிரிவினை காலத்தில் முன்னணியில் நின்று பிரசங்கமாரி பொழிந்து வங்காளத்தாரின் உள்ளத்தில் ஊக்கத்தையும் ஆவேசத்தையும் உண்டாக்கியவர். நிகரற்ற நாவன்மை படைத்து 'இந்தியாவின் முரசொலி' என்று பாராளுமன்றத்தினரால் பாராட்டப் பெற்றவர். காங்கிரஸ் மகாசபைக்கு இருமுறை தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். எனினும் பழைய மிதவாதப் கொள்கையை இவர் விடாது நின்றமையால் சீர்திருத்த சட்டம் வந்தபின் வங்காள சட்டசபை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார். 'ஸர்' பட்டமும் பெற்றார். அமிதவாதமும், ஒத்துழையாமையும்

தலையெடுத்த சில ஆண்டுகளாக இவரது செல்வாக்குக் குறைந்து வந்தது. சின்னாளின் முன்புதான் இவர் தாம் ஒழுங்காகத் தேகப் பயிற்சி செய்து வருதல் முதலியவற்றையும், தமக்கு ஞாபகசக்தி சிறிதும் குன்றாமலிருப்பதையும் பற்றி எழுதியிருந்தார். இப்பொழுது சுரத்தினால் உயிர் துறந்தார். இவருக்குப் பாரிஸ்டராகிய ஒரு புதல்வரும், ஐந்து புத்திரிகளும் உண்டாம். பிரன்சு தேசத்தில் உள்ளவரும் ‘நோபல்’ பரிசு பெற்றவரும் ஆகிய ரோமன் ரோலண்ட் என்பவர் ‘காந்தியடிகளின் வாழ்க்கையும், அவர் உபதேசங்களும்’ என்னும் பெயருடன் பிரஞ்சு பாஷையில் ஓர் நூல் எழுதியிருந்தார். அந்நூல் மூன்று மாதத்திற்குள் முப்பத்தொரு முறை அச்சிடப்பெற்று அத்தேயத்திலேயே விலையாகி விட்டதாம்! அதனை வேறு பல பாஷைகளிலும் மொழிபெயர்த்திருக்கிறார்களாம். அவற்றின் முகவுரைகளி லெல்லாம் மகாத்மா காந்தி உலகத்தையே சீர்திருத்த வந்த பெரியார் என ஐரோப்பியர் பலராலும் புகழ்ந்துரைக்கப் பெற்றுளாராம்.

## 9 - 8 - 25

சுரேந்திநாத பானர்ஜியின் மரணத்துக்காகப் பலரும் துயரங் கொண்டாடுகின்றனர். பத்திரிகைகள் எல்லாம் அவரது பெருமையைப் பாராட்டி எழுதுகின்றன. காந்தியடிகள் ஆண்டிரூஸையும் அழைத்துக் கொண்டு பாரக்பூரிலுள்ள பானர்ஜியின் வீட்டுக்குப் போய் வந்து, பின்வருஞ் செய்தியை வெளியிட்டிருக்கிறார். ‘சுரேந்திரநாதர் ஒரு சமயத்தில் வங்காளத் திலும் தேசம் முழுவதிலும் தெய்வமாகக் கொண்டாடப்பட்டார். 1901-ல் காங்கிரஸ் மகாசபை கல்கத்தாவில் நடந்த போது நான் கொஞ்சம் சிறியவனாக இருந்தேன். தென்னாப்பிரிக்காவி லிருந்து காங்கிரஸைப் பார்க்க வந்தேன். சுரேந்திர நாதரின் செல்வாக்கைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். அவர் நல்ல பழுத்த யுத்தவீரர். இந்தியா அடைந்துள்ள அபிவிருத்திக்கு அவர் வெகுதூரம் காரணமாயிருந்தார். காங்கிரஸ் மகாசபையை முன்னுக்குக் கொண்டு வந்தவர்களில் அவரும் ஒருவர். நம்மில் பலர் பிறவாத காலத்தில் அவர் தேச சேவை செய்ய ஆரம்பித்தவர் என்பதை நாம் ஒருக்காலும் மறக்க முடியாது’

க. பி. சந்தோஷம் பி. ஏ, எல். டி. என்பவர் வேலூரிலுள்ள ஓர் கலாசாலையின் சரித்திர ஆசிரியர் என்று தெரிகிறது. இவர் ‘செந்தமிழ்ச்செல்வி’யில் பல அரிய கட்டுரைகள் எழுதிக் கொண்டுவருகின்றனர். தமிழில் நல்ல புலமையும், நுண்ணிய

அறிவும், பொது நோக்கும், சிறந்த குணமும் உடையவரென இவர் எழுது வனவற்றால் நன்கு விளங்குகிறது. இவர் கட்டுரையைப் படிக்கும் பொழுது இவரைப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை உண்டாகிறது. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவராயினும் இவரது உரையால் அஃ்தறியக் கூடவில்லை. எல்லா மதங்களையும் பெருமையாகப் பேசுகிறார். இவர் 'சுதேசமித்திர' னில் 'கிழக்கும் மேற்கும்' என்னுந் தலைப்பில் ஓர் அரிய கட்டுரை யெழுதியிருக் கின்றனர். அதில் நாகரிகங்கள் கிழக்குத் தேசங்களில் தோன்றி மேற்கே சென்ற வரலாற்றை ஆராய்ச்சியுடன் கூறிவந்து, மீட்டும் கிழக்கே நாகரிகம் முதிர்ந்து உலகிற்கு அறிவு கொளுத்தப் போகின்றதென முடிக்கின்றனர். முடிவில் இந்தியாவிலுள்ள ரவீந்திரநாத தாகூர், ஜெகதீசசந்திர போஸ், மகாத்மா காந்தி என்னும் மூவரையும் வாயாரப் புகழ்ந்திருக்கின்றனர்.

காந்தியடிகளைக் குறித்து, "எல்லாருக்கும் மேலாக அன்பின் அவதாரமாகவும் உண்மையின் உருவமாகவும் நீதியின் வடிவ மாகவும் குவலயத்தோர் அதிசயிக்க எழுந்தருளி ஞான பானுவாய் இலங்குகின்ற காந்தியடிகள் நம்முடனிருக்கின்றார்கள்" எனக் கூறியிருக்கின்றனர்.

மலைக்கோட்டை, சைவ சித்தாந்த சபையின் கண் இன்று மாலை 6-மணிக்கு மேல், என்னிடம் தமிழ் பயின்ற வரும், என்பால் மிக்க அன்புள்ளவரும் ஆகிய சிந்தாமணி, திரு. ம. பெரியசாமி பிள்ளையால் சேரமான் பெருமாள் சரித்திரம் உபந்நியாசிக்கப் பட்டது. அதனை நான் கேட்டுக் கொண்டிருந்தது என் மனதிற்குச் சாந்தியாக இருந்தது. இவருக்குப் பேச்சுக் கம்பீரமாக இல்லாத தொரு குறை. பொருள்களை நன்கு படித்தறிந்திருக்கிறார். உயர்திரு வாலையானந்த சுவாமிகள் இதற்குத் தலைமையாக எழுந்தருளியிருந்தார்கள். இவர் சைவ சித்தாந்த நூல்கள் படித்தசைவ சந்நியாசிகளில் ஒருவர். சைவ சித்தாந்த தத்துவங் களை விளக்குகின்ற படமொன்றும், சில புத்தகங்களும் இவரால் எழுதப்பட்டுள. வைத்தியப் பயிற்சியும் உடையவர். சீலமுள்ள வரெனத் தெரிகின்றது. இவர் முடிவுரை சொல்லும் பொழுது மணி எட்டுக்கு மேலானமையின் நான் முற்றிலும் கேளாது வந்து விட்டேன்.

**10 - 8 - 25**

திரு T.S. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ. இன்று மாலை என்னிடம் வந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். இவர் திருத்தவத்துறையின் பக்கத்திலுள்ளதும் ஆனாய நாயனாரது

பிறப்பிடமும் ஆகிய திருமங்கலத்தில் ஒரு தக்க குடும்பத்திற் பிறந்தவர். எங்கள் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் படித்த வகையில் எனக்கு மாணவராவர். என்னிடத்தில் மிக்க மரியாதையும் அன்பும் உடையவர். நான் மரியாதையுடனும் அன்புடனும் பழகிவருகிற மாணவர்களில் ஒருவர். இவர் சில காலமாக யோகப் பயிற்சி செய்து வருகின்றனர்.

இன்றிரவு மலைக்கோயில் சென்று, நாயினேனையும் ஆண்டருளும் தாயுமான பெருமானையும், அவரது பாகம் பிரியாத மட்டுவார் குழலம்மையையும் தரிசித்து இறைஞ்சி வந்தேன்.

**11 - 8 - 25**

நேற்றிரவு அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் இங்கு வந்து இன்று மாலை ஊர் போகின்றனர். இம்முறை நான் மிகுதியும் அளவளாவக் கூடவில்லை.

சென்னைப் பட்டணம் கார்ப்பொரேஷன் அங்கத்தினர் தேர்தல் சில பிரிவுகளுக்கு நடந்ததில் சுயராஜ்யக் கட்சியினர் வெற்றியும், ஜஸ்டிஸ் கட்சியினர் தோல்வியும் அடைந்துளர். ஜஸ்டிஸ் கட்சியில் மிக முக்கியமானவரும், தற்பொழுது கார்ப்பொரேஷன் தலைவராயிருப்பவருமான தணிகாசலஞ் செட்டியாரும், மதன கோபால் நாயுடுவும் தேர்தலில் தோல்வியுற்றார்கள். ஒன்றிரண்டு மாதங்களாகவே சுயராஜ்ய கட்சியினர் செய்த தீவிர பிரசாரத்தின் பயன் இது.

**12 - 8 - 25**

என் மாமனாராகிய செங்கிபட்டி, திரு. சீனு மேற் கொண்டார் அவர்கள் பல கிராமங்களில் நிலம் உடையவர். பரம்பரையாக அந்நாட்டில் கௌரவமுடையதாக மதிக்கப்படும் குடும்பத்திற் பிறந்தவர். நாட்டு அம்பலக்காரர். அவருடைய நிலங் களெல்லாம் வானத்தையெதிர் பார்க்க வேண்டியனவாத லானும், சில வருடங்களாக அங்கே சரியாக மழை பெய்யாது. விளைவின்றிப் போனமையாலும் பொருள் முட்டு நேர்ந்து சங்கடப்படுகின்றனரென அறியலானேன். இரண்டு நாள் முன்பு அவரெழுதிய கடிதத்தில், தற்பொழுது மழை தகுதியாகப் பெய்திருந்தும், விதைக்கும், கூலிக்கும் பணமின்மையால் சாகுபடி துவக்காமல்யிருக்கிறதென்றும், வேறு வகையிலும் சங்கடங்கள் உள்ளதாகவும் கூறி, நான் ஏதாவது உதவி செய்யவேண்டுமென எழுதியிருந்தார். இஃது எனக்கு மிகுந்த பரிவை விளைத்தது. இன்று அவர் இங்கு வந்த பொழுது என் கையிலும் பொருள்

அருகியிருந்தது. எனினும் சிறிது கைமாற்று வாங்கி இருப்பத்தைந்து ரூபாஅவருக்குக் கொடுக்கலாயிற்று. இதனை இங்கு எழுதியதன் காரணம் ஒரு தக்க சந்தர்ப்பத்தில் சுற்றத்தார்க்கோ பிறர்க்கோ சிறிது தாராளமாக உதவி செய்ய வேண்டுமென என் மனம் முதன் முதலாக இப்பொழுதுதான் நெகிழ்ந்துளதென்பதைக் குறிப்பிடுங் கருத்தே. இதிலிருந்து என் மனம் விரிவெய்திவருமேல் என் வாழ்க்கை இன்னுஞ் சற்று மேன்மைஉடையதாகும்.

கார்த்திகை விரதமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**13 - 8 - 25**

இன்று விசேடச் செய்தி ஒன்றுமில்லை.

**14 - 8 - 25**

நேற்று ஒரு செய்தி எழுத மறந்துவிட்டேன். அதாவது: மதுரையில் ஒரு சிறுபையன் கணிதத்தில் நிபுணனாயிருக்கின்றா னென்று சென்ற ஆண்டில் வதந்தியுலாவிற்று. அப்பையன் தன் தந்தையுடன் நேற்று நண்பகலில் எங்கள் கல்லூரிக்கு வந்திருந்தனன். ஆசிரியர்களும் மாணவர்களும் திரளாகக் கூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த ஐயங்கார்ப் பையனுக்குத் தற்பொழுது வயது 13 அல்லது 14 இருக்கலாம். சென்னை இராசதானிக் கல்லூரியில் பி. ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் சேர்த்துக்கொண்டு, மாதம் ஒன்றுக்கு எழுபத்தைந்து ரூபாய் அரசாங்கத்தினர் உதவிச் சம்பளம் கொடுத்து வருகின்றனராம். ஆசிரியற்களாற் போடமுடியாத கணக்குகளை யெல்லாம் இச்சிறுவர் போடுகின்றராம்! இவர் கணக்கு மாத்திரமன்றி ஆங்கில பாஷையையும் பிறருதவியின்றியே தாமாகப் பயின்று செகப்பிரியர் நாடகம் முதலியனவும் படித்திருப்பதாகக் கூறுகின்றனர். சில ஆண்டுகளின் முன் ராமாநுஜம் என்ற வைணவ இளைஞர் கணிதமேதாவியாக விளங்கினது பலர்க்கும் தெரியும். கடவுள் இப்பையனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக. ஆடி மாதத்துக் கடைசி வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். இன்று தரிசிக்க வந்தோர் மிகுதியாக இருந்தனர். பல நாட்களாக நான் கவனித்து வருவதில் ஆடவர்களிலும், மாதர்களிலும் பிராமண வகுப்பினர்தான் மிகுதியாகக் கோயிலுக்கு வருகின்றன ரென்பது தெளிவாகிறது. சிலர் வழக்கமாக வந்து தரிசித்தலைக் காண்கின்றேன். கோயிலுக்குச் செல்வதனால் இரண்டு மூன்று

நாழிகையாவது கடவுள் சம்பந்தமான நற்பொழுதாகக் கழிகின்றது. அடியார் பலர் இறைவனை வணங்குவதைக் காணும் பொழுது கடவுளிடத்திலும் அவர்களிடத்திலும் அன்பு உண்டாகின்றது.

### 15 - 8 - 25

இன்று விசேடச் செய்தி ஒன்றுமில்லை.

### 16 - 8 - 25 (குரோதன ஆவணி மாதம் 1ம் தேதி)

இன்று காலை 11-மணியளவுக்கு ஒரு காரியமாய்ப் பெரிய கடைத்தெருப்பக்கஞ் சென்று, சோல்டன் அச்சுக்கூடத்திற்குள் நுழைந்தேன். நுழைந்தவுடன், முன்னரே அங்கிருந்து கொண்டிருந்த என் அன்பர் சிலர் எனக்குச் சந்தனம், கற்கண்டு, தாம்பூலம் வழங்கினர். அவை வழங்கிய காரணம் பின்னர் எனக்குத் தெரிந்தது. சென்னையிலுள்ள 'சோல்டன்' அச்சுக் கூடத்தின் கிளையாக ஐந்தாறு மாதங்களின் முன்புதான் இந்நகர்ப் பெரியகடைத் தெருவில் ஓர் அச்சுக்கூடம் வைக்கப் பெற்றது. அதன் மானேசர் என்னனைய பலர்க்கு அன்பராவர். சில காரணங்களால் கிளையா பீசை எடுத்துவிடப் போவதாகச் சின்னாளின் முன் அவர் கூறினர். அதனைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் விலைக்கு வாங்கிக் கொண்டன ரென்னும் நற்செய்தியை இப்பொழுது அறியலானேன். என் அன்பர்கள் சங்கத்தின் சார்பாக அதனையேற்று உவகை கொண்டாடு வதற்காகவே அங்கே கூடியிருந்தனர். அதன் பொருட்டே சந்தனம் முதலியவை வழங்கப் பெற்றன. நான் அதில் பங்கெடுத்துக் கொள்ளத் தகுதியற்றவனாகையால் அதனை விலைக்குப் பேசிய விபரம் முதலியன எனக்குத் தெரிவித்திருக்கக் காரணமில்லை. ஆனால் அதனை ஏற்று உவகை கொண்டாடும் பொழுது, வேறு காரண மின்றேனும் அதனைச் செய்கின்ற வர்கள் எனக்கு நெருங்கிய அன்பினர் என்பது குறித்தாவது எனக்குத் தெரிவித்திருக்க வேண்டும். அவர்கள் தெரிவியாது விட்டது எனக்கு எவ்வளவு வியப்பை விளைத்ததோ அவ்வளவு வியப்பினை நான் அங்கு வந்து சேர்ந்த செய்தி அவர்கட்கு விளைத்திருக்கக்கூடும். அங்கிருந்த உயர்திரு வாலையானந்த சுவாமிகளும் எனக்குத் தெரிவிக்கப் படாமலிருந்ததை வியப் பாகப் பேசினர். எப்படியேனும் தமிழ்ச் சங்கத்தின் ஆக்கங்கருதி மகிழ்ச்சியுற வேண்டுவதே என் கடன். என் அன்பர்களும் ஏதோ அவசரத்தினாலோ அயர்வினாலோ இங்ஙனஞ் செய்திருக்கலா மன்றி வேறில்லை.

'திருமூலர் வைத்தியம் - கருக்கிடை, காள' என்பதொரு புத்தகத்தை இன்று ஒருவாறாகப் படித்தேன். உயர்திரு. சண்முகனாந்த சுவாமிகள் என் போரால் சென்னையில் ஏற்படுத்தப் பெற்றுள்ள 'சித்தர் நூற்பதிப்புக் கழக'த்தின் முதல் வெளியீடாக வந்துளது இது. இதற்கொரு மதிப்புரை யெழுதித் தருதற்காகவே இன்று இதனைப் படித்தேன். சித்தர் நூல்கள் என வழங்குவனவற்றைச் சிறப்பாகப் பாராட்டுகின்றவர்கள் சிலர் இருக்கின்றனர். நான் அவைகளை மிகுதியாகப் பார்த்திரா விட்டாலும் பார்த்தவளவில் மதிப்பு ஏற்படவில்லை. அவற்றின் தமிழ் நடை மிக்க ஆபாசமாயிருப்பதேயன்றி, பொருள்களும் பித்தலாட்டமும் ஆடம்பரமும் ஆனவை போல் தோன்று கின்றன. அவற்றில் நல்ல மருந்துகள் சொல்லப் பட்டிருகின்றன என்பதில் உண்மையுண்டு. ஆனால் அவையும் ஒழுங்கான முறையில் சொல்லப்படவில்லை.

இன்று மாலை மலைக்கோட்டை, சைவ சித்தாந்த சபையில் இரண்டு உபந்நியாசங்கள் நிகழ்ந்தன. நான் அவைகளைக் கேட்கச் சென்றிருந்தேன் ஆயினும் என் சிந்தையைப் பெரும் பாலும் மலைக்கோயிலிற் செலுத்தி யிருந்தேன்.

இரவு 8-மணிக்கு மேல் மழை மிகுதியாய்ப் பெய்தது. மலையின் ஓர் புறத்தில் இடி விழுந்து ஒரு வயோதிகர் உயிர் துறந்தனர். இதன் விபரம் நாளை நன்கு தெரிந்து எழுதப் பெறும்.

**17 - 8 - 25**

நேற்றுக் குறிப்பிட்ட இடி ஒரு இடத்திலும் விழுந்ததாகப் புலப்படவில்லை. இடியானது, மலைக்கோயிலிற் போடப்பட் டிருக்கிற மின்சார விளக்குக் கம்பியுடன் கலந்து ஒரு பாய்ச்சலில் கீழுள்ள சித்திரமண்டபத்திலிருந்து கோயில் மண்டபமெல்லாஞ் சென்று விளக்குக் கம்பியின் பொருத்துகள் சிலவற்றைச் சிதைத்துச் சென்றது. நேற்று உயிர்துறந்த திருவேங்கடம் பிள்ளை என்னும் கிழவர் மலைமேல் இலக்குமி கோயிலின் பக்கத்துப் பல்கணியை நோக்கியிருந்து கொண்டிருந்த பொழுது மின்னொளியின் பாய்ச்சலால் தாக்கப்பட்டு விழுந்தனரெனத் தெரிகிறது.

இன்று நான் கோயிலுக்குப் போகவுமில்லை.

**18 - 8 - 25**

'தூலாதி தேக விளக்கம்' என்பதொரு தமிழ் உரைநடைப் புத்தகத்தில் ஒரு பகுதி இன்று படித்தேன். இதனை முற்றிலும் படித்துப் பிறிதொரு நாள் இது குறித்து எழுதுவேன்.

**19 - 8 - 1925**

மழையாலும் வெள்ளத்தாலும் பல நாடுகளிலும் மிகுந்த சேதம் விளைவது அறியப்படுகின்றது.

**20 - 8 - 25**

இருமலுக்குத் தங்க சிந்தூரம் செய்து உண்ணக் கருதியதனை ஒருமுறை நான் தெரிவித்தது முதல், என் அன்பின ராகிய ஆடகப் பெயரினர் அதனை விரைந்து செய்துண்ண வேண்டுமென வற்புறுத்தி வந்து, இன்று அதற்கு வேண்டிய தங்கமும் வாங்கித் தந்தனர். அவர்பால் உள்ள மிகவும் புகழக்கூடிய குணங்களி லொன்று பிறரிடம் அன்பு செலுத்துவதில் தன்னலம் சிறிதுங் கருதாதிருப்பதாகும். என்னை நேசித்து வருவதில் எனக்கு வேண்டுவனவெல்லாம் தானே செய்ய வேண்டுமெனும் விருப்பம் அவருக்கு அளவு கடந்திருப்பதை அறிவேன்.

கொங்கு நாட்டில் பசுபதிபாளையம் என்னும் ஊரிலுள்ள திரு K. கருப்பண்ணக் கவுண்டர் என்பாருக்குச் சில, செய்திகளைப் பற்றி ஆலோசிக்க எண்ணி, இங்கு வருமாறு சின்னாண்முன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அவர் இன்றிரவு இங்கு வந்துள்ளார். கொங்குவேளாளரில் ஓர் மதிப்புள்ள குடும்பத்தில் இவர் பிறந்தவர். இவர் இண்டர்மீடியட் வகுப்பில் சில மாதங்கள் என்னிடம் படித்தனராம். அக்காலத்தில் இவரை நான் அறியேன். இவர் தம்பியாகிய திரு வேலாயுதக் கவுண்டர் என் தம்பியாகிய மு. கோவிந்தராஜ நாட்டாருடன் பல ஆண்டுகள் சேர்ந்து படித்து வந்ததுடன் நட்பினராயும் இருந்து வந்திருக் கின்றனர். இவர் இண்டர்மீடியட் முதல் வருட இறுதிப் பரீக்ஷையில் எழுதியிருந்த தமிழவியாசத்தைத் திருத்திய பொழுது இவரைப் பற்றி என் தம்பி மூலம் கேள்வியுற்றேன். பின்னர் இவர் பால் எனக்கு அன்பு மிக்கது. இவரும் என்னிடம் மிக்க அன்பும் மதிப்பும் உடையவராயினர் இவர் கூரிய அறிவும், தமிழ்ப்பற்றும், சிவபக்தியும் பெரிதுடையவர். இவரைக் குறித்து மற்றும் கூற வேண்டியவற்றைப் பிறிதொரு சமயம் நேரும் பொழுது கூறுவேன். கருப்பண்ணக் கவுண்டரும் தமது தம்பி போன்றே என்னிடம் மிக்க அன்புடையவர். இவர் தமக்குப் பள்ளிக்கூட நண்பனாயிருந்த ஒரு பார்ப்பனப் பையனை நம்பிப் பல ஆயிரரூபாய்கள் கடன் வாங்கியும் கொடுத்து அப் பொருளைத் திரும்பப் பெற இயலாது குடும்ப நிலையிற் சிறிது இடர்ப்படவும் நேர்ந்தது. சின்னாட் சென்று வருவதாக இன்றிரவே என்னிடம் விடைபெற்றுக் கொண்டனர்.

**21 - 8 - 25**

இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். எனது உடம்பின் நோய் வருத்தத்துடன் இரவு 8-மணிக்கு மேல் நான் கோயில் போய் வந்ததை நினைக்கும் பொழுது அஃது ஏதோ திருவருட் குறிப்பால் நிகழுகிறதென்பது புலனாகின்றது.

**22 - 8 - 25**

இன்று எங்கள் கல்லூரியின் பரிசளிப்புத் திருவிழா இவ்வூர்க் கலெக்டராகிய ஓர் ஐரோப்பியரின் தலைமையில் நடந்தது. என் அன்பிற்குரியரா ஆடகம் ஓர் பரிசில் பெற்றனர்.

**23 - 8 - 25**

தஞ்சை ஜில்லாவின் பிராமணரல்லாதார் மகாநாடு நேற்றும் இன்றும் கரந்தைத் தமிழ்ச் சங்க நிலத்தில் அமைக்கப் பட்டிருந்த தொரு பெரிய கொட்டகையில் ராவ்பகதூர் ஓ. தணிகாசலஞ் செட்டியாரின் தலைமையில் நடந்தது. இதன் வரவேற்புக் கழகத்தலைவர் தஞ்சை ஜில்லா போர்டின் தலைவராகிய A.T. பன்னீர்ச்செல்வம் (பாரிஸ்டர்) ஆவர். இதனை நடத்தப் பெருமுயற்சியெடுத்துக் கொண்டவர் தஞ்சை தாலூகா போர்டின் தலைவராகிய T.V. உமாமகேசுவரம் பிள்ளை B.A; B.L. ஆவர். பாப்பா நாடு இளைய ஜமீன்தாராகிய P.S. இராஜப்பா ஏதோ மனத்தாங்கலால் இவர்களுடன் மாறுபட்டு இம்மகாநாட்டை இப்பொழுது நடத்தக் கூடாதென ஆட்சேபித்து வந்தார். இரண்டோரு மாதங்களாக ஒருவர் ஒருவர் மீது குற்றஞ் சொல்லிப் பத்திரிகையில் எழுதிக் கொண்டு வந்தனர். எந்தப் பக்கத்தில் தவறுளதென்பதை இனி நான் ஆராய்வது வீண் வேலை. இராஜப்பா முதலானவர்களின் தடையைப் பொருட்படுத்தாமலே குறிப்பிட்ட நாட்களில் மகாநாட்டை நடத்தி விட்டார்கள். சென்னையிலிருந்து மூன்று அமைச்சர்களும், ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர் பலரும் வந்திருந்தனர். தஞ்சையில் வேறு அலுவல்களும் மந்திரி களுக்கிருந்தன. இக்கூட்டத்திற்கு மாறாக இராஜப்பா முதலானவர் களால் பிராமணரல்லாதார் தேசீய மகாநாடு என ஒரு கூட்டம் தஞ்சையில் ஒரு நாடகக் கொட்டகையில் நேற்று நடத்தப் பெற்றது. இதற்கும் பல பெரிய மனிதர்கள் வந்திருந்தனராம்.

இன்று காலை 11-மணிக்கு வளர்ச்சி நெறி அமைச்சராகிய திவான் பகதூர் T.N. சிவஞானம் பிள்ளையவர்களின் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஓர் கூட்டம் கூடியது.

இது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல் குறித்து ஆலோசிப்பதற்காகக் கூடியதாகும். இதன் பொருட்டே நான் இரவு 3-மணி வண்டியில் புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். இது குறித்துப் பேசிய நாலைந்து பேர்களில் நானும் ஒருவன். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது அவசியம் என்றும், அதனை ஆலோசித்து முயலுவதற்காக இன்னின்னாரெல்லாம் அடங்கிய கமிட்டி ஒன்று இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பெற்றது.

இன்று விநாயக சதுர்த்தி ஆகையால் இந்துக்கள் ஒவ்வொருவரும் தங்கள் இல்லில் மண்ணினாலோ, உலோகங்கள் முதலியவற்றாலோ விநாயகக் கடவுளின் திருவுருவை அமைத்து அன்புடன் பூசிப்பர். மோதகம் முதலியன செய்து படைப்பர். பழைய தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலெல்லாம் இது கொண்டாடப் பெறும். இன்று பகல் முழுதும் திருச்சிராப்பள்ளியில் உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குத் திரள் திரளாக ஜனங்கள் போய்க் கொண்டிருப்பார்கள். நான் இங்கு வந்தமையால் உச்சிப் பிள்ளையாரைத் தரிசிக்கும் பேறெனக்கில தாயிற்று. இன்று காலையில் ஸ்நானஞ் செய்தவுடன் கரந்தையிலுள்ள ஆலயத்திற்குச் சென்று வந்தேன். ஒரு பிள்ளை யாருக்குத் தேங்காய் உடைத்தேன்.

**24 - 8 - 25**

இன்று காலை தஞ்சையிலிருந்து திருச்சி வந்து நேரே கல்லூரிக்குப் போய் வந்தேன். மாலையில் என் அன்பர் இருப்பிடத்தை யடைந்து நட்பின் பான்மையைப் பற்றி பெரிதும் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போக நினைவும் இல்லையாயிற்று.

**25 - 8 - 25**

கோலாலம்பூரில் 'தமிழ்நேசன்' என்னும் பத்திரிகை நடத்திவரும் என் மாணவரும் அன்பரும் ஆகிய திரு K. நரசிம்ம ஐயங்காருக்குப் பல மாதங்களாகக் கடிதம் எழுதாதிருந்து இன்று ஓர் கடிதம் எழுதினேன்.

கரந்தை சென்றதில் குறிக்காதுவிட்ட சில செய்திகள் இங்கே குறிப்பிடுகின்றேன்:- என் இரு முதுகுரவர்களும், இளைஞர் மூவரும் கரந்தைக்கு வந்திருந்தமையால் அவர்களைக் காண நேர்ந்தது. கணக்கில் நிபுணராய்க் கண்ணில்லாத

வராயிருக்கும் ஒருவரைச் சந்தித்தேன். இவர் பாண்டி நாட்டவர். 29-வயதுள்ளவர். பார்ப்பனரல்லாதவர். 6-வயதில் கண்போயிற் றாம். 22-வயதில் மூளைக்கு ஒருவித சக்தி உண்டாயிற்றாம். ஏழெட்டுத்தானங்களுள்ள பலவகைப் பெருக்கல் வகுத்தல்களும், வேறு வகைக்கணக்குகள் சிலவும் ஒரு முறை கேட்டு மனதில் அமைத்துக் கொண்டு விடை கூறுகின்றனர். பின் அதை மறக்க மாட்டாரெனத் தோன்றுகிறது. இவரது நினைவின் வகைமை பாராட்டத்தக்கது.

**26 - 8 - 25**

இந்தியா சட்ட சபையின் தலைவராக வி. ஜே. படேல் தேர்ந்தெடுக்கப்பட்டனரென நேற்றே பத்திரிகைகளில் வெளி யாயிற்று. இவர் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த வராகையால் இக்கட்சிக்கு இஃது ஓர் சிறந்த வெற்றியாகும். இவருக்குப் பல வாழ்த்துத் தந்திகள் வந்து கொண்டிருக்கின்றனவாம்.

**27 - 8 - 25**

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல் கருதித் தஞ்சையிற் கூடிய கூட்டத்தின் விபரம் இன்று இந்துப்பத்திரிகையில் வெளி வந்துளது. அதற்கு வேலை செய்ய ஏற்பட்டுள்ள கமிட்டியில் என் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. முன்னரே இரண்டு மூன்று சபைகளில் தமிழுக்காக உழைக்க வேண்டியவர்களில் என்னை யும் ஒருவனாகச் சேர்த்துத் தீர்மானஞ் செய்திருக்கின்றார்கள். யாதும் உழைக்காமலே என் பெயரும் வெளிவர வேண்டுமென விரும்புவதும், வெளிவர இடங் கொடுப்பதும் தகுதியனத் தோன்றவில்லை.

**28 - 8 - 25**

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசனஞ் செய்து வந்தேன்.

**29 - 8 - 25**

'தமிழ்ப்பொழில்' என்னும் பத்திரிகைக்குத் 'தமிழ் எழுத்துக்கள்' என்னுந் தலைப்பில் முன் எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியாகச் சிறிது எழுதுவதிலேயே இன்று நாள் பெரிதும் கழிந்தது. மேனாடுகளிலே பத்திரிகைக்குக் கட்டுரையெழுது வோர் ஆயிரக்கணக்கான பொன் ஊதியமாகப் பெறுகின்றனர். இங்கேயோ தாய் மொழிப் பற்றே பயனாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**31 - 8 - 25**

திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

**1 - 9 - 25** *(குரோதன ஆவணி 17)*

இன்று குறிப்பிடக்கூடிய செயல் யாதொன்றுமில்லை.

**2 - 9 - 25**

இன்று மாலை என் அன்பினராகிய திரு ஆடகத்தின் முன் திருவாசகத்தில் போற்றித் திருஅகவல் முழுதும் படித்துக் காட்டினேன்.

இன்று இரவு 8-மணிக்குமேல் ஒரு அச்சுக்கூடத்தில் அன்பர் சிலர் நடத்திய விருந்துக்குச் சென்றிருந்தேன். பல காரவகை நான்கும், சித்திரான்ன வகை மூன்றும், கறிவகை இரண்டும் பழம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தன.

**3 - 9 - 25**

அராபியாவிலுள்ள மக்கா, மதீனா என்ற இடங்களில் மகமதியர்களுக்குள் நிகழும் போர் காரணமாகப் பம்பாய் மகமதியர் பிரிவுபட்டிருக்கின்றனரென்று தெரிகிறது.

**4 - 9 - 25**

நேற்றிரவு கனவில் காரைப்பாக்கம் சுவாமிகள் ஒரு சபையில் அக்கிராசனம் வகிப்பதாகவும், நான் உபந்நியசிக்கச் சென்றிருப் பதாகவும், சுவாமிகளிடத்தில் நான் நின்றபடி குனிந்து வணங்கித் திருநீறு பெற்றுத் தரித்துக் கொண்டதாகவும் கண்டேன்.

சாம்பசிவ சர்மா என்ற ஒரு பார்ப்பன வாலிபர் சில தினங்களின் முன் என்னிடம் வந்து தொல்காப்பியம் முதலியன பாடங் கேட்க வேண்டுமெனக் கூறினார். நான் எனக்குள்ள வேலை மிகுதி யெல்லாம் தெரிவித்தும், அவர் எப்படியேனும் என்னிடமே தமிழ் கற்க வேண்டுமென்றும் இன்றேல் தாம் தமிழ் படிக்கப் போவதில்லை யென்றும் வற்புறுத்தியதுடன், தாம் ஒரு ஊழியனாக நடந்து கொள்வதாகவும் கூறினர். தமக்கு வேண்டிய சொத்து இருக்கிறதென்றும், தாம் உத்தியோகம் முதலியவை களை விரும்பவில்லையென்றும், தமிழ் படிப்பதை யே விரும்பு வதாகவும் தெரிவித்தார். நான் தொல்காப்பியம் கற்பிக்கும் சிரமத்திற்கு ஈடாக முந்நூறு ரூபாய் எனக்குக் கொடுப்பதாகவும், அதனை வருகிற தை மாதத்தில் நெல் விற்றுக் கொடுத்து

விடுவதாகவும் வாக்களித்தார். அவர் கொடுப்பதாகக் கூறிய பொருள் எனக்குப் பெரிதாகத் தோன்றாவிடினும், அவரது கல்வி விருப்பம் நோக்கிப் பாடஞ் சொல்ல ஆரம்பித்துளேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**5 - 9 - 25**

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் அச்சிடப் பெற்ற திருவாசகம் மூலமும், சைவப் பிரகாசனம் என்ற நூலும், கார் நாற்பது நானாற்பது என்பனவும் இன்று எனக்கு வந்தன. திருவாசகம் பஞ்சுவைத்துக் கட்டிய கட்டடத்துடன் அழகாய் மென்மையாய் இருக்கிறது.

கழக அமைச்சர் திருவாளர் வ. திருவரங்கம் பிள்ளை யவர்கள் கழக வெளியீட்டிற்காக நான் செய்து முடிக்க வேண்டிய வேலைகளைப் பற்றி வாரத்திற்கு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதிவிடுகின்றனர். அரிய காரியங்களைச் செய்து முடித்தற்கு அவர் போலும் ஊக்க முடையவர்களே வேண்டும்.

**6 - 9 - 25**

உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் புதுக் கோட்டையிலிருந்து இன்று நண்பகல் இங்கு வந்து மாலையில் திரும்பப் புறப்பட்டு விட்டார்கள். உடன் இரண்டு இளைஞரும் வந்திருந்தனர். அவர்கள் கட்ட இருக்கும் கலாசாலைக்கு இதுவரை ரூ.5000 கையொப்பமாகியிருக்கிற தென்றும் ரூ. 2000 வசூலாகியிருக்கிறதென்றும் தெரிவித்தார்கள்.

மலைக்குக் கீழ்புறத் தெருவில் ஒரு வீட்டில் ஜோதிடத்தைப் பற்றிய விளம்பரங்களாக விளம்பரப் பலகை போடப் பட்டிருந்தது. இன்று காலை அந்த ஜோசியரைப் பார்க்கச் சென்றேன். பழைய சாஸ்திரங்களிலிருந்து சாதகங்கள் எடுத்து எழுதிக் கொடுப் பதேயன்றித் தமக்குச் சோதிடம் சிறிதும் தெரியாதென்றார். அவருக்குச் சிறிதும் படிப்பில்லை யென்பது நன்றாய்த் தெரிந்தது. அவருடைய விளம்பரப் பலகையிலும், கடிதத்திலும் ஜாதகம் எழுதிக் கொடுப்பதற்குப் பின் கண்ட சார்ஜ் விபரம் எழுதப் பட்டிருந்தது. சிவ சிந்தாமணி ரூ. 24. கர்ம காண்டம் ரூ. 7. புசாண்டர் நாடி ரூ. 15. வேதமறை ரூ. 40. நவக்கிரகமாலை ரூ. 100. மேற்படி விரிவு ரூ. 500. மகாதேவ கேரளம் ரூ. 300. ரேகை சாஸ்திரம் ரூ. 9. கந்தர் நாடி ரூ. 15.975000-சாதகங்கள் மாத்திரம் இந்நூலில் ஏட்டிலிருக்கின்றனவாம். இவையெல்லாம் முற்றிலும்

பித்தலாட்டமென்றே எனக்குத் தோன்றுகிறது. உலகத்தில் அறியா மக்களை ஏமாற்றிப் பொருள் பறித்துச் சீவிக்க இங்ஙனம் பலதிறப்பட்டவர்கள் கிளம்பியிருக் கின்றனர். சோதிடத்தைப் பற்றி பிறிதொரு சமயம் நேரு மேல் கூறுவேன். இங்கே குறிப்பிட்ட சோதிடர் பரம்பக்குடிப்பக்கத்தி லுள்ள கீழாய்க்குடி என்னும் ஊரினர், சான்றார் குலத்தினர். மு. ரா. து. வே. கண்ணு நாட்டார் என்னும் பெயரினர்.

**7 - 9 - 25**

இன்று நண்பகல் புகை வண்டியேறி, விண்ணமங்கலத்தில் என் மைத்துனர் திரு. மு. தண்டாயுதபாணிக் கடவராயர் புதல்வர் இராமையாவுக்கு நேற்று நடந்த திருமணம் விசாரிக்கச் சென்றிருந்தேன். மாலையில் திருக்காட்டுப்பள்ளி உயர்தரப் பாடசாலையின் தலைமையாசிரியர் முதலான பலர் கல்யாணம் விசாரிக்க வந்திருந்தனர். மேற்படி பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் திரு. மு. வடிவேற் பிள்ளையால் வள்ளியம்மை திருமணம் என்பது குறித்துச் சிறிது நேரம் உபந்நியாசஞ் செய்யப் பெற்றது. பின்பு ஒரு விகடக்கச்சேரி நடந்தது, இவற்றுக்கு என்னை அவைத் தலைமை வகிக்கும் படி வந்திருந்தவர்கள் பிரேரேபித்து நிறைவேற்றிவிட்டமையால் நான் மறுக்க முடிய வில்லை.

திங்கட்கிழமையாகிய இன்றிரவு திருச்சிராப் பள்ளியிலிருந் திருப்பின் மலைக்கோயில் சென்று தரிசித்திருப்பேன். ஜெபம் பிரார்த்தனையொன்று மில்லாமலும் இரவுண்டி கொள்ளாம லும் இன்று படுக்கைக்குச் சென்று விட்டேன்.

**8 - 9 - 25**

இன்று மாலை 4½ மணிக்கு எங்கள் காலேஜைச் சேர்ந்த ஹைஸ் ஸ்கூல் கட்டிடத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் சம்பந்தமாக ஒரு கூட்டம் கூடிற்று. வளர்ச்சி நெறி அமைச்சர் திருவாளர் T.N. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். பல ஆசிரியர்களும் இரண்டு காலேஜ் பிரின்சிபால் களும் மாணவர்கள் முதலாயினோரும் வந்திருந்தனர். நானும் சென்றிருந்தேன்.

கார்த்திகை விரதநாளாகிய இன்று மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்தேன். முருகப் பெருமான் திருவுலாக் காட்சியும் தரிசித்துக் களிப்புற்றேன்.

**9 - 9 - 25**

ஐந்தாறு நாட்களாகச் சமாசாரப் பத்திரிகை யொன்றும் படிக்காதிருந்தேன். இன்று படித்தேன்.

**10 - 9 - 25**

சென்ற ஆண்டு இந்தியாவின் அரசியல் திருத்த விசாரணையின் பொருட்டு முட்டிமனைத் தலைமையாகக் கொண்ட கமிட்டி யொன்று இந்தியாவிலுள்ள பல திறப்பட்ட அரசியல்வாதி களையும் சாட்சிகளாக விசாரித்ததில் பலரும் இரட்டை யாட்சியைக் கண்டித்துக் கூறினர். எனினும் கமிட்டியில் பெரும்பான்மையோர் இரட்டையாட்சியைத் தாங்கியும், சிறுபான்மையோர் மறுத்தும் பிறவாறும் தங்கள் கொள்கையை வரையறுத்திட்டனர். இவ்வாண்டில் அரசப் பிரதிநிதியாகிய லார்டு ரீடிங் இங்கிலாந்து சென்று இந்தியா மந்திரியாகிய லார்டு பார்க்கன் ஹெட்டுடன் கலந்து ஆலோசித்து வந்தார். இந்தியா மந்திரியின் பிரசங்கமும், அரசப்பிரதிநிதியின் பிரசங்கமும், அரசியல் வாதிகட்கு மிகுந்த ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் விளைத்தன. இம்முறை இந்தியா சட்டசபை கூடியதும் முட்டிமன் கமிட்டியின் பெரும் பான்மையோர் கொள்கையை யொட்டி அரசாங்கத்தார் ஒரு தீர்மானங் கொண்டு வந்தனர். பண்டித மதிலால் நேரு அதனைத் திருத்தி வேறு தீர்மானங் கொண்டு வந்தனர். அரசாங்க அங்கத்தினர் எவ்வளவோ முயன்றும் நேருவின் தீர்மானம் பெரும்பான்மையோரின் வாக்கு களால் நிறைவேறி அரசாங்கத் தினர்க்குத் தோல்வியை விளைத்தது. இம்முறை பல அரசியற் கட்சியினரும் அரசாங்கத்தை வலிமையுடன் தாக்கிப் பேசியிருக்கின்றனர். நேரு, ஜின்னா முதலானவர்களின் பேச்சு அளவு கடந்து துணிவுடன் கூடிய தாயிருக்கின்றது.

**11 - 9 - 25**

இன்று இந்நகர் முனிசிபல் அங்கத்தினர் தேர்ந்தெடுப்புப் பல பிரிவுகட்கு நடைபெற்றது. ஏழாவது பிரிவில் நான் ஒரு வாக்குரிமையாளன். இதற்கு இரண்டு பிராமணரும், ஒரு கிறிஸ்தவரும் விரும்பி நின்றனர். ஒவ்வொருவரும் தங்கட்கு வோட் கொடுக்கவேண்டுமென்று பலமுறை வேண்டினர். இன்னாருக்குக் கொடுப்பது தான் தகும் என்பதை என்னாலேயே உணர முடியவில்லை. கிறிஸ்தவ விருப்பினருக்கே வோட் செய்தேன். பிராமணரிடத்திலாவது, வேறு வகுப்பினரிடத்திலாவது

எனக்கு வெறுப்புக் கிடையாது. ஜஸ்டிஸ் கக்ஷியிற் போலவே காங்கிரசில் எனக்கு அபிமானம் உண்டு. பிராமணர் இருவரில் ஒருவர் பல ஆண்டுகளாகக் காங்கிரசைச் சேர்ந்தவர். இப்பொழுது சுயராஜ்யக்கட்சியினர். ஓராண்டு சிறை சென்று வந்தவர். அவ்வகையில் அவருக்கு வோட் செய்வது தான் நியாயமாயிருக்கக் கூடும். எனினும் இந்நாட்டில் பார்ப்பன ரல்லாதார் பார்ப்பனருக்குச் சமானமாய் உத்தியோகத் துறை களிலும், நாட்டாண்மை, நகராண்மைக் கழகம் முதலியவற்றிலும் உரிமை பெறுகிற வரையில் பிராமணருக்கு வோட் செய்வது பாதகம் போல் தோன்றிற்று. முன்னரே பல துறைகளிலும் ஆதிக்கம் பெற்று விட்டனர் பிராமணர். இப்பொழுது விழித்தெழுந்து முன்னேற விரும்புகிற பார்ப்பன ரல்லாதார்க்குப் பெரிய தடையாக எதிர்த்து நிற்கின்றனர். வகுப்புத் துவேஷ மென்பது சிறிதுமின்றித் தேச ஊழியமே பெரிதென்றிருக்கிற பிராமணரை நான் மிகவும் போற்றுவேன். ஆனால் இந்நாட்டின் நிலைமை அப்படியில்லை. பிராமணரும், அல்லாதாரும் காங்கிரசில் ஒரு பெற்றியே சேர்ந்து தேசத்திற்கு உழைக்கும் காலம் வரின் இத்தகைய சிக்கல்கள் கொஞ்சம் நிவர்த்தியாகக் கூடும்.

இன்று ஒரு பெரிய பிழை நேர்ந்துவிட்டது. கல்லூரிப் புத்தக சாலையில் நான் பெற்றிருந்த புத்தகங்களில் பலவற்றை முன் இரண்டு நாட்களில் புத்தகசாலை உதவியாளரிடம் நேரில் கொடுத்திருந்தேன். அவற்றை என்னெதிரே அவர் வரவுவைத்துக் கொள்ளாமையால் பின் என்ன நிகழ்ந்திருக்குமோ என்று சிறிது ஐயமுடையேனாயிருந்தேன். இன்று வேறு சில புத்தகங்களைக் கொண்டு போய்க் கொடுத்த பொழுது முன் வரவு வைத்தவை களைப் பரிசோதித்தேன். 9-புத்தகங்கள் வரவு வைக்கப் பட்டிருந்தன. நான் ஐந்தைந்தாக இருநாளும் பத்துப் புத்தகம் கொடுத்து அவரிடம் அதை வலியுறுத்திச் சொல்லியதாக எண்ணிக் கொண்டிருந்தேன். சிறிதும் சந்தேக மில்லாமல் நிச்சயமாகவே நான் கொடுத்தவை பத்து என்றும், ஒன்றினை மோசஞ் செய்து நான் கொடுக்கவில்லையெனச் சொல்லுகின்றன ரென்றும் நான் கொண்டு விட்டேன். முன்னரே அவர்களின் தகுதியில் எனக்கு மதிப்பில்லாமலும் இருந்தது. அதனால் எனக்கு மிகுந்த ஆத்திரம் உண்டாகி நான் அமைதியாகப் பேச முடியாமற் போயிற்று. என்னென்னவோ சொற்களை வீணிற் கொட்டி வந்தேன். அவர்கள் மேலிருந்த சினந்தணியாமலே வீடு வந்து சேர்ந்து இங்கு எஞ்சியிருந்த புத்தகங்களைப் பார்த்தேன்.

அவர்மீது பிழையின்றென்பது தெரிந்தது. என் பிழைக்கு நான் என்ன செய்து கொள்வதென்று தெரியவில்லை. உடனே அவரிடஞ் சென்று சொல்லி மன்னிப்புக் கேட்கலாமா எனவும் எண்ணினேன். பல காரணங்களால் அது கூடாதாயிற்று. எனது நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது. இக்குற்றம் எனதறியாமையால் விளைந்ததெனினும் 'தேறும் வகை நீ திகைப்பு நீ தீமை நன்மை முழுதுநீ' என்னும் திருவாசக அடியின் பொருளோடு இதனைப் பொருத்திப் பார்க்கலாமா என எண்ணினேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யடைந்து அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

**12 - 9 - 25**

ஜப்பான் தேசத்தில் ஐம்பூதங்களினால் அடிக்கடி பல அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. காற்றினால் இரண்டு புகை வண்டிகள் தூளாகிவிட்டன வென்றும், வெள்ளத்திற் பல வீடுகள் முழுகிவிட்டனவென்றும் இன்று வந்த பத்திரிகை கூறுகிறது.

எல்.டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை 10ம் தேதி இரவு உயிர் நீத்தனரென்று இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. இவர் ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர். திரிசிரபுரம் ஜோசப் கல்லூரியில் படித்துக் கல்வியில் பல பட்டமும் பெற்றவர். தொடக்கத்திலேயே டிப்டி கலெக்டர் உத்தியோகம் பெற்றுப் பின் ஜில்லா கலெக்டர் பதவி முதலியவற்றையும் வகித்தவர். சீர்திருத்தத்தின் பின் சென்னைச் சட்டசபையில் காரியதரிசியாக இருந்தார். இங்கிலாந்து சென்று பாராளுமன்ற நடைமுறை களைக் கவனித்து வந்தார். சர். பி. இராஜகோபாலாச் சாரிக்குப் பின் சென்னைச் சட்டசபைத் தலைவராக நியமிக்கப் பெற்றுப் பின், அப்பதவிக்கு அங்கத்தினர்களால் தேர்ந் தெடுக்கவும் பெற்றுத் திறமையாக அதனை நிர்வகித்து வந்தார். இவர் ஆங்கிலம், இலத்தீன், கிரீக்கு முதலிய மேனாட்டு மொழிகளிலும், தமிழிலும் பாண்டித்தியம் உடையவர். கணிதத்தில் மேதாவி. 1800-முதல் 2000-வரை இருநூறு ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தில் ஒரு பஞ்சாங்கம் வெளியிட்டி ருக்கிறார். கணிதக் குறிப்புகளின் உதவி கொண்டு தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் நூல்கட்கு இவர் கூறிய காலக்கணக்கு எம்மனோரால் ஒத்துக் கொள்ளக் கூடிய தன்றேனும் இவர் ஒருபெரிய கல்விமான் என்பதில் ஐயமில்லை. மிக்க சாந்த குணமும் வாய்ந்தவர். இவரது மரணம் தமிழ்நாட்டுக்கு ஒரு பெரிய இழப்பேயாகும். ஒரு பெரிய

கல்விமானைத் தமிழர் இழந்து விட்டனர். பாரத நாட்டுக்கு இவ்வோராண்டில் நிகழ்ந்திருக்கிற நட்டம் அளவிடக் கூடியதன்று.

இன்று 'செந்தமிழ்ச் செல்வி'க்குக் கட்டுரையெழுத எண்ணியிருந்தேன். அது கூடவில்லை. இன்று வந்த 'செந்தமிழ்ச் செல்வி' இதழும், 'செந்தமிழ்' 23-ம் தொகுதியில் ஆறு பகுதிகளும் இன்று படித்தேன். இன்று நாள் முழுதும் இடையறாது படித்தல் முதலிய நல்லுழைப் பொடு கூடியிருந்தது.

'செந்தமிழ்' தொகுதி 23, பகுதி 3-ல் திருவாளர் மு. இராகவையங்கார் 'கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையெழுதியுள்ளார். திருவாளர் பண்டித அ. கோபாலையர் புதிதாக அச்சிட்ட கலிங்கத்துப் பரணிப் பதிப்பிலுள்ள பிழைகளை யெடுத்துக் காட்டி விளக்குவது அக்கட்டுரை. அதிலுள்ள சில குறிப்புகளிலிருந்து ஐயங்காரவர்களின் ஆராய்ச்சி வன்மை நன்கு வெளியாகின்றது. தமிழகராதிக் கழகத்தில் அவர் பண்டிதராகவிருந்து வேலை செய்வது அவரது ஆராய்ச்சி மிகுதற்கு உதவியாயுளதெனக் கருதுகின்றேன். பரணியில் வருகின்ற வேளம், ஈச்சோப்பி, முகரி என்பவற்றின் பொருளைத்தக்க மேற்கோள்களுடன் விளக்கியிருக்கின்றார். வேளம் = அரசர் சிறை பிடித்து வந்த மகளிர் தங்குதற்கு நகரிலும் நகர்ப்புறத்தும் தனியாக அமைக்கப்பட்ட மாடம். இவர்கள் பணி செய்வோராக்கிக் கொள்ளப்படுவர். வேளம் என்பதிலிருந்தே வெள்ளாட்டி என்னும் சொல் வந்துளது. ஈச்சோப்பி = கவரி போல் பணிமாறுதற்குரியதொன்று. சோப்புதல் - அடித்தல், ஓட்டுதல், வீசுதல், 'ஏறுமால்யானையே சிவிகையந்தளக மீச்சோப்பி வட்டில்' தேவாரம். முகரி = ஆரவாரிப்போன். முகரம் = ஆரவாரம். 'மூள்வாய தொழிற் பஞ்சேந்திரிய வஞ்சமுகரிகாள்' திருநாவுக்கரசர் தேவாரம். இங்ஙனம் பல கல்விமான்களின் அரிய ஆராய்ச்சிக்களைக் காணும் பொழுது எனது கல்வியின் சிறுமை நன்கு புலனாகின்றது.

## 13 - 9 - 25

எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளையின் பிரேதம் ஊர்வலமாகக் கொண்டு போனபொழுது சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களும், அமைச்சர்களும் முதலாகிய பிரமுகர்கள் அநேகர் உடன் சென்றனரென்றும், சுவாமிக்கண்ணுப்பிள்ளை தொடக்கத்தில் இரண்டாண்டு திரிசிரபுரம் ஜோசப் காலேஜில் ஆசிரியராயிருந்து, பின் சென்னை இராசதானிக் கல்லூரியில் இலத்தீன் ஆசிரியராக இருந்தாரென்றும், அவருக்குச் சம்ஸ்கிருதம்,

ஜர்மன், பிரன்சு பாஷைகளும் தெரியுமென்றும் இன்று வந்த பத்திரிகையால் அறியலாயின.

இன்று உறையூரில் திரு. முனிசாமிச் செட்டியார் என்பவரால் பழனியாண்டவர் திருமடப் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. இதன் சார்பில் சில உபந்நியாசங்கள் செய்ய வேண்டுமெனக் கருதி என்னிடம் வந்து தெரிவித்த பொழுது என் இயலாமையைத் தெரிவித்து வேறு சிலரைக் குறிப்பிட் டிருந்தேன். அவர்களும் வர நேரவில்லை. கடைசியாக நான் தலைமை வகிக்க வேண்டுமென வற்புறுத்தித் தலைவர் என்ற பெயருக்கு வந்து சும்மா இருந்தாற் போதும் என்று சில அன்பர் கூறினர். அதற்கிணங்கி இன்று மாலை சென்றிருந்தேன். இந்நகரிலுள்ள இரண்டு தமிழ்ப் பண்டிதர்களும், ஒரு ஆங்கில ஆசிரியரும், ஒரு பத்திராசிரியரும், 'அன்பும் இறை பணியும்' எனக் குறிப்பிட்டிருந்த ஒரே பொருள் பற்றிப் பேசினார்கள். நானும் சிறிது நேரம் பேசினேன்.

நான் முன்பு ஒருநாள் குறிப்பிட்டிருந்த 'தூலாதி தேக விளக்கம்' என்னும் புத்தகத்தை இன்று படித்து முடித்தேன். இஃது ஒரு ஐரோப்பியரால் ஆங்கிலத்தில் எழுதியதன் மொழி பெயர்ப்பு எனக் கருதுகின்றேன். பிரமஞான சங்கத்தினர் வெளிப் படுத்திய சில புத்தகங்களும் பத்திரிகைகளும் முன்னரே படித்துப் பார்த்திருக்கிறேன். ஆனால் அம்மதத்தின் கொள்கை கள் பூரணமாக எனக்குத் தெரியா. இந்து மத தத்துவங்களை ஆதார மாகக் கொண்டு வேறு மதங்களையும் தழுவி நவீன சாஸ்திர ஆராய்ச்சி முறைக்கு ஒத்தவாறு நிகழும் கருத்தினால் அம்மதம் ஆக்கப்பட்டிருக்க வேண்டுமென நினைக்கிறேன். அதனைச் சேர்ந்தவர்கள் தற்பொழுது உலகத்தின் எல்லாக் கண்டங் களிலும், எல்லா மக்கட் பிரிவுகளிலும் இருக்கின்றனர். சிற்சில காரணங்களால் சில ஆண்டுகளாக இந்நாட்டில் அம் மதத்தின் மதிப்புக் குறைந்து வந்திருக்கிறது. என்றாலும் மதங்களை வெறும் நம்பிக்கையாக மாத்திரமன்றி ஆராய்ந்து அநுசரிக்க வேண்டிய முறையில் அவர்கள் வெகு தூரம் உழைத்திருக்கிறார்களென்பதில் ஐயமில்லை. என் அநுபவத் திலிருந்து பிரமஞானபுத்தகங்களைப் படிப்பதால் அறிவு விசாலிக்குமென நான் கூறக்கூடும். ஆனால் எதைப் படிப்பினும் உண்மையை உணர வேண்டுமென்றும், வாழ்க்கையை மேன்மையுறச் செய்ய வேண்டுமென்றும் விரும்பாத வர்கட்கு யாதும் பயனில்லை. 'தூலாதி தேக விளக்க'த்தில் தேகங்களைத் தூலதேகம், சூக்கும தூலதேகம், சூக்குமப் பிரகாச தேகம், மனோ தேகம், காரண தேகம் எனப் பிரித்து இவை தூல

சூக்கும் முறையில் அமைந்திருக்குமாறும், இவற்றினியல்புகளும், இவற்றின் வேறாகச் சைதன்னியம் இருக்குமாறும் கூறப்பட்டுள. தேகங்களைப் போலவே பிரபஞ்சங்களும் ஒன்றுக்கொன்று தூல சூக்கும முறையில் அமைந்துளவென்றும், அவ்வப்பிரபஞ்ச வஸ்துக்களால் அவ்வவ்வுடம்புகள் அமைக்கப்படுகின்றன வென்றும், மனிதர்கள் வளர்ச்சி முறையில் மேற்கொள்ள வேண்டிய விதிகள் இவையென்றும் கூறப்பட்டிருக்கின்றன.

**14 - 9 - 25**

அன்பர் சம்ஸ்கிருதம் படிக்க வேண்டுமென விரும்பினர். இன்று மாலை தேவார எழுத்திலும், கிரந்த எழுத்திலும் உள்ள இரண்டு புத்தகங்கள் கொண்டு போய்க் கொடுத்து எழுத்துக்கள் கற்பித்து வந்தேன். வந்தபின் நேரம் ஆகிவிட்டமையால் கோயிலுக்குப் போகாமல் இருந்து விட்டேன்.

**15 - 9 - 25**

'செந்தமிழ்ச் செல்வி' ஆவணி இதழில் 'கோயில்' என்னும் பொருள் பற்றிய நான் எழுதிய கட்டுரை வெளிவந்தது. அடுத்து இரண்டு திங்களுக்காக 'முடங்கல்' என்னுந் தலைப்பில் இன்று கட்டுரையெழுதிக் கொண்டிருந்தேன். சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதி யநுப்பிய திருமுகத்தின் விளக்கமாக இஃதெழுதப் பெற்றது. நாளை இஃதினை விளக்கமாக எழுதி அநுப்பவேண்டும். அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் இன்று இங்கு வந்து சிறிது நேரம் அளவளாவி யிருந்து தவத்துறைக்குச் சென்றனர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர்கள் சில சிறு நூல்கட்கு முன்னர் உரையெழுதி முடித்துவிட்டு, அடுத்துப் புராணங்கட்கு உரையெழுத வேண்டுமென்றும், உதவிக்காக ஊதியங்கொடுத்து ஒருவரை அமைத்துக் கொண்டேனும் விரைவில் வேலைகளை முடித்துத் தரவேண்டுமென்றும் வற்புறுத்திக் கடிதங்கள் எழுதி வந்தனர். நானும் அங்ஙனமே செய்யக் கருதி அன்பர் முதலியாரவர்களிடம் இதனைத் தெரிவித்தேன். அவர்கள் இங்கு வந்து இருப்பதற்குரிய விருப்பத்தைத் தெரிவித்து ஆலோசித்து முடிபு கூறுவதாகக் கூறியிருந்தார்கள். தீபாவளி கழித்துத் தமது ஜவுளிக் கடையை மூடிவிட்டு இங்கு வருவதாக இன்று கூறியுள்ளார்கள்.

தம்பி, மு. கோவிந்தராஜ நாட்டார் L.T. பரீட்சையின் பொருட்டு நேற்றிரவு 11-மணிக்கு இங்கு வந்துளார்.

**16 - 9 - 25** *(குரோதன - புராட்டாசி மாதம் 1ம் தேதி)*

*இன்று பல அலுவல்கள் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்பினர் ஆடகத்திற்குத் திருக்குறளில் மெய்யுணர்தல் என்ற அதிகாரம் கற்பித்தேன். அதிலுள்ள அருமையான பொருள் களில் அவர் மிகவும் ஈடுபட்டிருந்தார்.*

*பழனி ஸ்ரீசுப்பிரமணிய பாகவதர் ஒருவாரத்தின் முன் என்னிடம் கந்தப் புராணம் இரண்டு பாகங்களையும் வாங்கிச் சென்றார். இன்று அவற்றை மீளக் கொண்டு வந்து கொடுத்தனர். இவர் பாகவதர்களில் பக்தியும் கல்வியும் வாய்ந்தவர். முன்னர் ஒரு ஹைஸ்கூலின் தலைமையாசிரியராக இருந்தவர். ஐந்தாறு பாஷைகள் கற்றவர். இவர் தந்தையார் ஸ்ரீதண்டாபாணி சுவாமிகள் என்போர். அவர்கள் பாடிய சில தமிழ்ப் பதிகங்களைப் பார்த்தேன் பாகவதரின் புதல்வர் தண்டபாணி என்போர் என்னிடம் இண்டர் மீடியட்டில் கல்வி பயின்றவர்.*

**17 - 9 - 25**

*சென்னை கார்ப்பரேஷனில் சுயராச்சியக் கட்சியினர்க்கே தேர்தலில் வெற்றியேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தியா சட்டசபையில் அரசாங்கத்தினர் கொண்டு வந்த தீர்மானம் அடிபட்டுப்போய், பண்டித நேருவின் திருத்தப் பிரேரேபணை நிறைவேறிச் சிலதினங்கள் ஆவதற்குள் இராசாங்க சபையில் அசல் தீர்மானம் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டு விட்டது. இது குறித்துத் தங்கள் அதிர்ப்தியைத் தெரிவித்துக் கொள்வதற்காக இந்தியா சட்டசபையிலுள்ள சுயராச்சியக் கட்சியார்கள் தங்கள் பதவியை இராசிநாமாச் செய்ய ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.*

*குழந்தை திரு பார்வதியம்மாளுக்கும், மருதூர்ப் பிச்சையையா வுக்கும் நன்னூல் எழுத்ததிகாரத்தில் ஒரு வினாப்பத்திரம் கொடுத்திருந்தேன். இன்று மாலை 3-மணி நேரம் விடையெழு தினார்கள். பார்வதியம்மாள் நன்கு படித்திருப்பது தெரிகிறது. எண்பதுக்கு ஐம்பத்தெட்டு அமிசம் கிடைத்துளது. அடிக்கடி எழுதிப் பழகினால் விரைவில் கல்வியில் முன்னேற்றமடையக் கூடும். நான் இன்று முழுதும் வேலை செய்து கொண்டிருந்தேன்.*

**18 - 9 - 25**

*இன்று நவராத்திரி ஆரம்பதினம். பழைய நாட்டுப்புறப் பள்ளிக் கூடங்களில் பிள்ளைகளைக் கோலாட்டத்தில் பழக்கு வித்து, உள்ளூரிலும், வெளியூர்களிலுள்ள பிள்ளைகளின்*

உறவினர்கள் வீட்டிலும் அழைத்துச் சென்று விளையாட்டைச் செய்து, உபாத்தியாயர் பொருள் சம்பாதிப்பது வழக்கம். அவ்வழக்கம் இன்னும் ஒவ்வோரிடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. இன்று மலைக்கோட்டை முன் மண்டபத்தில் ஒரு பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் கோலாட்டம் அடித்தனர். எல்லோரும் சிவப்புச் சல்லடம் தரித்து இடுப்பில் கச்சை கட்டியிருக்கின்றனர். முழங்கைக்கு மேலும் முன்னங்கையி லும் வெள்ளைத் துணியைக் கட்டித் தொங்க விட்டிருக்கின்றனர். மார்பிலும் முதுகிலும் 'X' இங்ஙனம் குறுக்காகப் பொருந்தப் பூமாலை யணிந்திருக்கின்றனர். உடையினில் வண்ணத் துணிகளாலும் தூரிகையாலும் செய்த பூக்கள் மயிற்றோகை போலத் தோன்ற அணிந்திருந்தனர். முகம் முழுதும் வெள்ளை பூசியிருக்கின்றனர். சிலர் வேறு நிறமும் பூசியிருக்கின்றனர். ஆட்டம் மிக நன்றாயிருந்தது. உபாத்தியாயரின் பாட்டுக் கருநாடக மாய்க்காதுக்கு வெறுப்பாயிருந்தது. ஏதோ ஒரு நாடகப்பாட்டுப் போலும்? பிள்ளைகளின் தோற்றம் இயக்கர் முதலியோரின் தோற்றமாயிருக்கும் போலும்?

இன்று நன்கு அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். இன்று குழந்தை பார்வதியம்மாள் வீட்டில் கொலு வைத்திருக்கிறது. சென்ற வருடந்தான் கொலுவைக்க ஆரம்பித்தது.

**19 - 9 - 25**

காந்தியடிகள் தம்மை அமெரிக்க தேசத்தினர் அழைப்ப தாகவும், சென்ற ஆண்டும் ஒருமுறை அவர்கள் அழைத்ததாகவும் அப்பொழுது தாம் அங்கு செல்ல கூடாமைக்குக் காரண மாயிருந்ததே இப்பொழுதும் இருப்பதாக வும், பிற நாட்டினர் இந்தியாவைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளச் செய்ய வேண்டு மென்னும் விருப்பம் தமக்கு மிகுதியாக இருப்பினும், இந்தியாவிலுள்ள படித்த வகுப்பின ரைத் தம் கொள்கையை ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாத வரையில் தாம் வேறு நாட்டினார்க்கு உபதேசித்து அவர்களைத் திருப்புவது இயலாத காரிய மென்றும் தமது 'யௌவன இந்தியா' வில் எழுதியிருக் கின்றார்.

நான் 'தமிழர்' என்ற பத்திரிகைக்குக் 'கோப்பெருஞ் சோழர்' என முன் எழுதியதன் தொடர்ச்சி இன்று எழுதித் தந்தேன்.

**20 - 9 - 25**

சுவாமி வேதாசலம் அவர்களின் புதல்வியாகிய திரு நாகை நீலாம்பிகை அம்மை தாம் எழுதிய 'தனித்தமிழ்க் கட்டுரைகள்' என்னும் புத்தகத்தைச் சில நாட்களின் முன் மதிப்புரை வேண்டி எனக்கு அநுப்பியிருந்தனர். அதில் முன் இரண்டொரு நாட்களில் பார்த்து எஞ்சியிருந்தவற்றை இன்று பார்த்து முடித்தேன். சுவாமி வேதாசலம் அவர்கள் நாகை வேதாசலம் பிள்ளை என்னும் பெயருடன் முன் காலேஜில் உதவித் தமிழாசிரியராக இருந்தனர். அக்காலத்தில் 'சைவ சித்தாந்த மகாசமாஜம்' ஏற்பட்டு நடைபெறக் காரணமாயிருந்தவர்களில் இவரும் ஒருவர். இவர் தமிழில் நிரம்பிய புலமையும், அழகாகப் பேசுந்திறலும் எழுதுந் திறலும் வாய்ந்தவர். அக்காலத்தில் தமிழ் நாட்டில் இவர்கட்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. இவர்கள் சொற்பொழிவைக் கேட்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி விடுவார்கள். தமிழ்ப் பண்டிதர் வேலை விடுபட்டபின் காவியுடை தரித்துக் கொண்டு 'சுவாமிகள்' என்னும் பெயருடன் இருக்கின்றனர். இவர் ஆராய்ச்சிகளில் ஒரோவழி உண்மைக்கு மாறாகத் தவறு நெறியில் செல்கின்றன ரென்பதும், தாம் தவறாகக் கொண்டவற்றையே பின்னரும் பின்னரும் உண்மையெனச் சாதிக்க முயலுகின்றன ரென்பதும் என் கருத்து. வேறு காரணங்களாலும் பிற்காலத்தில் இவரிடம் பலருக்கு நன்மதிப்புச் சுருங்கியது. இவர் காவியுடை தரித்த பின்னரும் மனைவி மக்களுடனேயே பல்லாவரத்தில் வசித்து வருகின்றனர். 'ஞான சாகசம்' என்னும் பத்திரிகையைப் பல ஆண்டுகளாக நடத்தி வருகின்றனர். புத்தகங்கள் எழுதுகின்றனர். சில ஆண்டு களாகத் தனித் தமிழிலேயே கட்டுரை எழுதவேண்டு மென இவர்கள் எழுதிவருவது பாராட்டற்பாலது. திரு. நீலாம்பிகை யம்மையாரும் தமது தந்தையாரைப் போலும் கொள்கையுடைய ரென இவரது கட்டுரையால் தெரிகிறது. இவரது புத்தகத்தில் பதின்மூன்று கட்டுரைகள் அடங்கியுள்ளன. மகளிர்கள் இங்ஙனம் கல்வியிற் சிறந்து விளங்குதலைப் பார்க்கிலும் நாம் மகிழக் கூடிய செய்தி வேறில்லை.

**21 - 9 - 25**

திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று நாயினேனயும் ஆண்டருளும் கருணைக்ககடலாகிய தாயுமா னேச்சுரரையும் அம்மையாரையும் தரிசித்து இறைஞ்சி வந்தேன்.

**22 - 9 - 25**

என் அன்பினராகிய ஆடகத்தின் போஷகியார் பள்ளிக் கூடங்களின் பரிசோதனைக்காகச் சமயபுரம் பக்கம் போயி ருந்தவர் இன்று ஆடகத்தை அங்கு வரும்படி எழுதியிருந்ததுடன், நான் அங்கு வந்து அங்குள்ள பாடசாலையில் நடைபெறும் ஆசிரியர்களின் கூட்டத்தில் தமிழ்மொழியைப் பற்றிப் பேசவேண்டுமெனக் கேட்டு எனக்கும் கடிதம் எழுதியிருந்தனர்.

**23 - 9 - 25**

இன்று காலை சமயபுரத்திலிருந்து திருவெள்ளறையைப் பார்ப்பதற்கு ஒரு வண்டியிற் போனோம். இது விஷ்ணு திருப்பதி களிலொன்று. மலைப்பாறை மீது கோயில் அமைந்துளது கோயிலுக்குச் சிறிது தூரத்திலுள்ளதொரு கிணறு பார்க்கத் தகுந்தது. கோயிலின் வெளிப் பிரகாரத்தில் சத்தமிட்டல் எதிரொலியுண்டாகிறது. ஓரிடத்தில் சத்தமிடும் பொழுது நான்கு திசைகளிலிருந்து தனித்தனி எதிரொலி யுண்டயிற்று இது வியக்கத் தகுந்ததே. ஓரிடத்தில் கல்லைக் குடைந்து செய்த மண்டபம் ஒன்றிருக்கிறது. வெய்யில் மிகுந்து விட உடன் வந்தவர்கள் துரிதப்பட்டமையால் கோயிலில் பெருமாளைத் தரிசிக்க முடியவில்லை. பிராட்டியை மாத்திரம் தரிசித்து வந்தேன். சைவ சித்தாந்த கழகத்திலிருந்து புதிதாய் அச்சிட்டு வந்த ‘சைவப் பிரகாசனம்’ என்னும் நூலில் ஒரு பகுதியை இரண்டு நாளாகப் படித்தேன். படித்த பகுதி சுருக்கமாகவும் தெளிவாகவும் தருக்கத்தை விளக்குவதாயிருந்தது. முழுதும் படித்தப் பின் இதனைப் பற்றிய ஏனை விபரங்கள் எழுதப் பெறும். நிற்க- இரண்டு நாள் அநுபவத்தில் வேறு சில செய்திகள் இங்கே குறிப்பிடுமாறுள்ளன என் அன்பினரின் போஷகியாகிய ஐரோப்பிய மாதின் குணங்களில் தாராளத் தன்மை, இரக்கம், அறத்தில் விருப்பம், தம் நண்பரிடத்தில் வேற்றுமையின்றிப் பழகுந் தன்மை என்னும் இவைகள் அவரை மிகப் பெருமையாய் நினைக்கச் செய்கின்றன. ஆனால் அவரிடத்துள்ள மட்டுக்கு மிஞ்சிய கோபமும், பிடிவாதமும், ஒரோவழி எளியவர்களை மிகவும் சிறுமையாய் நினைக்குந் தன்மையும் என்னும் இவைகள் அவரை இழிவாய் நினைக்கவும், வெறுக்கவும் செய்கின்றன. அவரை ஒரு மூர்க்கத்தன்மையுடையரென்றும் கூறலாம்.

**24 - 9 - 25**

இன்று காலை சமயபுரத்திலிருந்து யாவரும் திருச்சிராப் பள்ளி வந்து சேர்ந்தோம். ‘தமிழ்ப் பொழில்’ வந்திருந்ததனை

முற்றும் படித்தேன். அதன் ஆசிரியரும் என் நண்பரும் ஆகிய திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் நகைச்சுவையின்பம் பயப்ப எழுதுவதில் திறமை வாய்ந்துளார் கள். 'சுதேசமித்திரன்' இரண்டு நாட் பத்திரிகை பார்த்தேன். காங்கிரசு அங்கத்தினர்க்கு நூல் சந்தா கட்டாயமாக இருந்ததை அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியார் மாற்றி, 2500-கஜம் நூலேனும், 4-அணாவேனும் சந்தாக் கொடுக்கலாமென விதித்துளார்கள். நூற் சந்தாவினால் மிகச் சிலரே காங்கிரசில் சேர முடிந்ததாம். காந்தியடிகளின் முயற்சியால் ஒரு வருஷத்தில் 50-லக்ஷம் அங்கத்தினர் சேர்ந்தனரென்றும், இப்பொழுது 9-ஆயிரம் அங்கத்தினரே இருக்கின்றனரென்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

காந்தியடிகள் அமெரிக்காவுக்கு வரவேண்டுமென்றும், அதற்கு ஆம் செலவை யெல்லாம் தாங்களே ஏற்றுக் கொள்ளு கிறதாகவும் அங்குளார் வற்புறுத்தியழைத்திருந்தனர். அதனை முன்பொருநாளும் குறித்திருந்தோம். காந்தியடிகளை வர வேண்டுமென அழைத்திருந்த அமெரிக்க நண்பர் சில கேள்விகள் கேட்டிருந்தார். அவற்றுக்கெல்லாம் காந்தியடிகள் விடை யெழுதி வெளிப்படுத்தியிருக்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் காந்தியடிகளின் பெயரால் ஓர் இயக்கமானது உலக முழுவதிலும் பரவக் கூடுமெனத் தோன்றுகிறது.

**25 - 9 - 25**

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு அம்பிகை கொலு வீற்றிருப்பதைக் காண வேண்டுமென்று இரவு உணவுண்டபின் மலைக்கோயில் சென்று தரிசிக்க சென்றிருந்தேன். மலைக் கோயிலிலும் இரவு 8 மணிக்குமேல் கொலுவைத் தரிசிக்க எண்ணிறந்த மக்கள் வந்திருந்தனர். அம்மை புறப்பட்டுக் கொலு மண்டபம் வருதற்குள் மேளக்கச்சேரியால் ஒன்றரை மணி நேரத்துக்கு மேலாயிற்று.

**26 - 9 - 25**

இன்று மகா நவமி சரஸ்வதி பூஜை நாளாகும். இந்து மதத்தினர் யாவரும் இன்று கலைமகளை மிக்க அன்புடன் பூசிப்பர். கல்வித் துறையினர் யாவரும் தங்கள் நூல்களை யெல்லாம் தொகுத்து வைத்தும், நாமகளைப் பிரதிட்டித்தும் வழிபடுவர். ஏனை தொழிலினர் யாவரும் தத்தமக்குரிய கருவி களை தொகுத்து வைத்துப் பூசிப்பர். தெய்வத் திருவருளால் அறிவையும், ஏனை வினைத் திறங்களையும் எய்த வேண்டு

மென்னும் உயரிய கொள்கை இத்திருநாளின் நிகழ்ச்சியால் விளக்க மெய்துகின்றது.

நான் இன்று மாலை தேவாரப் பாடல் பெற்றதும் உய்யக் கொண்டான் திருமலையென வழங்குவதும் ஆகிய திருக்கற்குடி மாமலைக்குச் சென்று அம்மையப்பரை வழிபட்டு இரவு பதினொரு மணிக்கு மேல் வீடுவந்து சேர்ந்தேன். திருக்கற்குடியில் சில அன்பர்களின் முயற்சியால் 'சிவனடியார்திருக் கூட்டம்' என்னும் ஒரு சபை சில ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. இத்திருக்கூட்டத்தினர் மிக்க முயற்சியெடுத்துக் கொண்டு, கற்குடி மலைக் கோயிற் பிராகாரத்திலிருந்த சப்பாத்துக் கள்ளி, முட்புதர் முதலியவற்றைப் போக்கித் தூய்மை செய்து திருநந்த வனம் வைத்திருக்கின்றார்கள். சில ஆண்டுகளின் முன் சென்று தரிசிக்க இயலாவாறிருந்த அக்கோயிலைப் பல வகையாலும் திருந்தச் செய்த சிவபுண்ணியத்திற்கு அக் கூட்டத்தினர் முற்றிலும் உரிமையுடையர். ஆங்காங்குள்ள அன்பர்கள் இத்தகைய திருத்தொண்டில் ஈடுபடுதல் வேண்டும். சிவனடியார் திருக்கூட்டத்தினர் கற்குடி மாமலையில் அம்பிகை நவராத்திரிக் கொலு வீற்றிருப்பதை மிக அலங்காரத்துடன் செய்வித்து ஒவ்வோரு நாளும் உபந்நியாசங்களும் நிகழ்த்து விக்கின்றனர். இன்று திருவாளர் உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை யவர்களால் அப்பூதியடிகள் சரிதம் உபந்நியாசிக்கப்பட்டது. இந்து தேவஸ்தான பரிபாலனக் கழகத்தின் அங்கத்தினரான திருவாளர் சிதம்பரம் பிள்ளை அவர்கள் அங்கு வந்து அதற்கு தலைமை வகித்தனர். சிதம்பரம் பிள்ளையவர்கட்காக அங்கு ஒரு சிற்றுண்டி விழாவும் நடந்தது. சபையோரின் அழைப்பாலேயே நான் அங்கே சென்றிருந்தேன்.

**27 - 9 - 25**

ஐந்தாறு நாட்களாக நான் துரிதமாய் வேலை செய்ய முடியாது போயிற்று. என் அன்பினர் ஆடகம் நேற்றுக்காலை புறப்பட்டுக் குளித்தலை சென்றிருக்கின்றனர். ஒரு நாளேனும் நான் அவரைக் காணாதிருப்பது வருத்தமாயிருக்கிறது. இன்று தனுசு லெக்கினத்தில் என் குழந்தை திரு. மங்கையர்க்கரசியைப் பள்ளியிற் சேர்ப்பித்து வித்தியாரம்பம் செய்விக்கப் பெற்றது. தன் பெயருக்கேற்பவே குழந்தை கல்வி முதலிய எல்லா நலங்களிலும் சிறந்து விளங்குமெனக் கருதியும், அதன் பொருட்டுச் சிவபெருமான் திருவருளைச் சிந்தித்தும் வருகின்றேன்.

**28 - 9 - 25**

இன்று உடல் நலங்குன்றி மாலையில் இருமல் மிக்கிருந்தது. மூன்று கடிதங்கள் எழுதியதும், ஒரு பையனுக்குச் சிபாரிசுக்காகச் சிலரைப் பார்த்ததும் தவிர நாள் முழுதும் வேலையில்லை. கோயிலுக்குச் சென்று தரிசிக்கும் பேறும் இன்றிலதாயிற்று.

**29 - 9 - 25**

தமிழ்ப் பொழிலுக்குத் 'தமிழ் எழுத்துக்கள்' என எழுதியதன் தொடர்ச்சியாகப் பன்னாளின் முன் பென்சிலால் குறித்து வைத்திருந்ததனை மற்றும் சிறிது சேர்த்துமையால் எழுதி இன்று அநுப்பலாயிற்று.

திருக்குறளில் ஒரு விநோதமான பதிப்பு என்னிடம் தமிழ்ப் பயிலும் மாணவர் ஒருவர் கொண்டுவர இன்று பார்த்தேன். சுமார் இருபது ஆண்டுகளின் முன்பு மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் மடத்தில் அம்மடாதிபதிகளான சுவாமிகள் இப்புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு பிரஸ்தாபித்த வார்த்தைகளை வேறு சிலருடன் நான் கேட்டுக் கொண்டிருந்தது என் நினைவில் இருக்கிறது. ஆனால் அப்பொழுது புத்தகத்தை நான் நன்கு பார்க்கவில்லை. இப்பதிப்பு மதுரையில் சுகாத்தியர் என்பவரால் திருத்தப்பட்டும் உரையெழுதப்பட்டும் 1889 கி. பி. யில் அச்சிடப்பட்டிருக்கிறது. அழகான பதிப்பு, ஆனால் இதனைத் திருவள்ளுவர் குறள் என்னாது, சுகாத்தியார்கிறள் என்று சொல்லலாம். இக்கிறளை இதுவரையாரும் முழுதும் படித்திரார் என்பதே எனது நம்பிக்கை. நூற்பாகுபாடெல்லாம் இவரால் வேறு வகுக்கப்பட்டுள. பாக்களெல்லாம் திருத்தப் பெற்றுள. உதாரணமாக: முகரமுதற்றே, மற்றதனாலாய, எற்றாடெழார், நிறவாழிநீந்தல், அறவனடி சேராதார் என்பன காண்க. ஐ, ஔ முழுதும் எடுக்கப்பட்டுவிட்டன. நிலமிசய், இரும்பயில, தாளய், தலய் என்பன காண்க. முகவுரையில் ஒரு பகுதி பின்வருமாறு 'வடமொழி எழுத்தாகிய ஐ, ஔ. எனப்படு மெழுத்துக்கள் தமிழிற் காரணமின்றிச் சேர்த்துளவாதலாலும் அவற்றுள் (ஔ) இந்நூலுளெவ்விடத்தும் வரப் பெறாமமை யாலும் (ஐ)க்கு வடமொழிக்குரிய வரிவடிவ யொழித்துத் தமிழ் முறய்மய்க்கிணங்க அகர யகர வரிவடிவாகவும் ககர வோசயய்த் தழுவி முப்புள்ளி வடிவினதாய் வழங்கிய ஆய்தவெழுத்துத் தமிழோசய்க்கு வேண்டுவதின் மயாலதற் குரித்தான ககர வரி வடிவாகவும் வரய்தலாயின?'

எனக்கு இன்றும் இருமலின் தொந்தரை மிகுதியாகும். தங்கபஸ்பம் நேற்றுச் செய்து முடிந்தது. இன்று காலை நானும் என் மனைவியும் அதனை உண்ணத் தொடங்கியுள்ளோம். என் அருமை ஆடகம் தந்த ஆடகத்தாற் செய்யப்பெற்ற இம்மருந்தால் எனக்கு முற்றிலும் குணமுண்டாகுமென நம்பியுள்ளேன்.

**30 - 9 - 25**

நேற்றிரவு முழுதும் சுவாச இழைப்பு உண்டாகி மிகவும் வருந்தினேன். பல ஆண்டுகளின் முன் எனக்குச் சனி திசையில் இராகுபுத்தியும், அட்டமத்துச் சனியுமாயிருந்த காலத்து நான் முதல் முதல் இருமல் நோயால் அளவற்ற துன்பமெய்தினேன். அக்காலத்தில் ஒரு நாளிரவு சுவாச இழைப்புண்டாகிப் பொறுக்க முடியாது நான் இறைவனை நினைந்து புலம்பிக் கொண்டிருந்தது இன்றும் என் நினைவில் இருக்கிறது. அக்கால முதல் இருமலுக்கு நான் உண்ட மருந்துகள் அளவில்லாதன. மருந்துகளினாலும், உணவு உறக்கம் முதலியவற்றை நன்கு பேணிவந்தமையாலும் பிணி முழுதும் தொலையாவிட்டாலும் இருமல் நோய் ஓரளவாகக் குறைந்திருந்தது. ஒரோ வழிப் பாதுகாத்தல் நெகிழ்ந்த விடத்து அது வெளிப்பட்டு வருத்துவ துண்டு. இப்பொழுது ஜென்மத்திற் சனியும் மூன்றில் வியாழனும் இருக்கத் திசாபுத்திகளும் உடனலத்திற் கேலாதனவாகவுள்ளன. ஒன்றிரண்டாண்டுகளாக உடல் நலங்குன்றி வந்து கொண்டிருக்கிறது. சில திங்களாகப் பிணியில் வலிமிகுவதாயிற்று. எல்லாம் சிவபெருமான் கருணையால் நிகழ்வன என்பதை அறிந்தால் எத்தகைய துன்பங்களையும் மனவமைதியுடன் பொறுப்பதே கடனாகும். இன்று பகல் முழுவதிலுங்கூட இழைப்பு இருந்தது. இரவு 8-மணிக்கு மேல் வைத்தியர் வந்து கொடுத்த மருந்தால் இழைப்பு ஒருவாறு தணிந்துளது. இவ்வளவு வருத்தத்திலும் பகலில் நான் எழுதிக் கொண்டுதானிருந்தேன்.

**1 - 10 - 25** *(குரோதன, புராட்டாசி மாதம் 16)*

நேற்றிரவு மூன்று முறையும், இன்று பகல் இரண்டு முறையும் மருந்துண்டதில் இருமலின் தொந்தரை சிறிது குறைந்துளது. சிறுபான்மையாக வேலை செய்து கொண்டிருந்தேன். சில நாட்களாகவே நான் சமாசாரப் பத்திரிகை சரியாய்ப் படிப்பதில்லை.

**2 - 10 - 25**

இன்று பேதிக்கு மருந்து (கௌசிகர்மெழுகு) உண்டு பெரிதும் களைத்திருந்தமையால் வேலை செய்யக் கூடவில்லை.

இன்று வெள்ளிக்கிழமையாயிருந்தும் கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**3 - 10 - 25**

'தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழக'த்தினர் அச்சிடுதற்காக நாவலர் பதிப்பு உரையைத் திருத்தி நான் எழுதிவந்த மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் மூன்று நூல்களையும், மூதுரைக்கும், நல்வழிக்கும் எழுதப் பெற்ற முகவுரைகளுடன் இன்று அநுப்பியுள்ளேன். இந்த இருபது நாளை விடுமுறையில் மிகுதியான வேலை செய்யலாமென எண்ணியிருந்தேன். இத்துணையே முடிந்தது. இன்று உடம்பு சிறிது குணமே.

**4 - 10 - 25**

இன்று சிறிதளவே வேலை செய்து கொண்டிருந்தேன். என்னிடம் தமிழ் பயின்று, கரந்தைத் தமிழ்ச் சங்கம்கலா சாலையில் தமிழ்ப் பண்டிதராக இருக்கும் சிரஞ்சீவி, வீ. உலகதாசர் இன்று இங்கு வந்துளார்.

**5 - 10 - 25**

இன்று உயர்திரு. க. மணி சுவாமிகளின் பிரபந்தங்கள் அச்சிலிருப்பவற்றைப் பிழைத்திருத்தியதும், உலகதாசைக் கொண்டு என் ஜாதகத்தின் தசவர்க்க சக்கரங்கள் எழுது வித்ததுமே செய்த அலுவலாகும்.

சென்ற திங்கள், வெள்ளிக்கிழமைகளிலும் நான் கோயிலுக்குப் போக முடியாமையால்; கார்த்திகையும் திங்கட்கிழமையுமாகிய இன்று கோயிலுக்குப் போக நினைந்து கொண்டிருந்தேன். போக வேண்டிய நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்தது. என் உடம்பும் ஜலதோஷமும், இருமலும் முதலியவற்றால் வருந்தியது. எனினும் திருவருளால் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தேன். படியேறும் பொழுது இளைப்பாகவேயிருந்தது. சென்று தரிசிக்கும் பொழுது மனதில் திருப்தியும் உவகையும் உண்டாயின. தாயுமான பெருமான் திருமுன்பும், மற்றும் ஒவ்வோரிடத்தும் பூசனை நடைபெற்ற பொழுது முற்றும் தரிசித்துக் களித்து வந்தேன்.

**6 - 10 - 25**

இன்று எங்கள் காலேஜ் திறந்தது. வேறு விசேட செய்தியில்லை.

**7 - 10 - 25**

*காந்தியடிகள் பிறந்த நாளாகிய அக்டோபர் மாதம் 2-ம் தேதியை இந்தியாவின் பலபக்கங்களிலும் கொண்டாடிய செய்தி பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருக்கிறது.*

*காந்தியடிகள் தமது 'யௌவன இந்தியா'வில் கிருஷ்ணாவ தாரத்தைப் பற்றிய தமது அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறார். கிருஷ்ணனை உலகத்தில் பிறந்து வாழ்ந்த ஒரு வராகத் தாம் நினைக்கவில்லை யென்கின்றார். கிருஷ்ணாவதாரம் சம்பந்த மாகப் புராணேதிகாசங்கள் கூறும் கதைகள் தமக்குப் பிடித்த மில்லாமையாற்றான் இங்ஙனம் கூறுகின்றனரெனத் தெரிகிறது. மகாபாரதம் மதப்பற்றை உண்டாக்கக்கூடிய நூலே யென்றும், ஆனால் அதனைச் சரித்திரமாகவும், அதிற் கூறியிருப்பன வெல்லாம் உண்மையென்றும் கொள்ளலாகா தென்றும், அல்லாமலும் பாரதகதை நாளடைவில் எவ்வளவோ மாற்றங் களுக்கு உடையதென்றும் கூறுகின்றார். பகவற்கீதையில் அவருக்கு அளவுகடந்த பற்றுண்டென்பது பல சமயங்களில் அவர் கூறியிருப்ப வற்றாலும் எழுதியிருப்பவற்றாலும் வெளியா கிறது. பகவற்கீதை உபதேசித்த கண்ணனை வேதவியாசர் தமது பாவனையால் உலகிற்கு அளித்துள ரென்பது காந்தியடிகளின் கருத்தா யிருக்குமோ என நினைக்க நேர்கின்றது.*

*காந்தியடிகள் தமக்கும் தமது குடும்பத்திற்குமாகப் பதினான்கு லக்ஷ ரூபாய் சேர்த்து வைத்துவிட்டுச் சுகமாய் வாழ்ந்து வருகின்றாரென்றும் அப்படியிருந்தும் தம்மைச் சந்நியாசியெனக் கூறிக் கொள்கின்றாரென்றும் சிலர் சொல் வதாக ஒருவர் அவர்க்கெழுதி, அதனுண்ணமையைக் கேட்டிருந்தார். அதற்கு அவர் பதிலெழுதியதில் தம்முடைய சொத்தாக எந்தக்காலத்து தமக்கு பதினாலு லக்ஷம் இருந்த தில்லை யென்றும் தமக்குப் பொருட் பற்று நீங்கிய பின்பு தம் பொருளெல்லாவற்றையும் தாம் அறத்திற்கு எழுதி வைத்து விட்டதாகவும், சபர்மதி, சத்தியாக்கிரக ஆச்சிரமம் நண்பர்களின் நன்கொடையால் நடக்கிறதென்றும், அப்பிச்சையினாலேயே தாமும் உண்டு வருவதாகவும், சுகவாழ்வு என்பது மனோ பாவனையைப் பொறுத்ததாயின் தம்மைச் சுக வாழ்வுடையோர் எனக் கூறுவதில் இழுக்கின்றென்றும், தாம் சந்நியாசி என எப்பொழுதும் கூறியதில்லை யென்றும் சொல்லியுள்ளார்.*

*'பாலபாரதி'யின் 12-வது சஞ்சிகை இன்று வந்ததனைப் படித்தேன். இனி இதனை நிறுத்தி வைப்பதாக வெளியிடப்*

பட்டிருக்கிறது. நடந்த ஓராண்டிலும் வெளியான விஷயங்களுள் வ. வே. சு. ஐயர் எழுதிய கம்பராமாயண ஆராய்ச்சியும், அரவிந்த கோஷின் யோக மொழிபெயர்ப்பும், வேறு சில கட்டுரைகளும் என்னால் விருப்புடன் படிக்கப் பெற்றன. தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவந்த 'சம்ராட் அசோகன்' என்பதும், பிற சிலவும் படித்திலேன்.

குருகுல நிர்வாகத்தை ஏற்று நடத்தும்படி டாக்டர் P. வரதராஜலு நாயுடுவுக்குச் செய்தி வந்திருப்பதாகப் பத்திரிகையில் ஒருவர் எழுதியுள்ளார்.

**8 - 10 - 25**

சென்னைச் சட்டசபையின் தலைவராகப் பச்சையப்பன் காலேஜ் பிரின்சிபால் இரத்தினசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். இவர் ஜஸ்டிஸ் கட்சியினராகலின் இக் கட்சிக்கு இஃதோர் சிறந்த வெற்றியாகும்.

**9 - 10 - 25**

நேற்று நான் நாடகத்திற்கு வர ஒப்புக் கொண்டிருந்தும், இன்று என் அன்பர் காலேஜில் எனக்குக் கொடுத்தக் கடிதத்தில் நான் வராதிருப்பதே நலமெனத் தோன்றுகிறது என எழுதி யிருந்தமையின் நான் போகவில்லை. இன்று அங்கு போயிருந்தால் ஆண்டவனைத் தரிசித்திருக்க முடியாது. சிவபெருமான் திருவருளே என்னைத் தடுத்தாண்டதாகல் வேண்டும்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று மாலை 6-மணிக்கே நான் மலைக்கோயிலுக்குப் புறப்பட்டமையால் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குஞ் சென்று தரிசிக்கலானேன். முருகப் பெருமான் வள்ளிநாய்ச்சியாருடனும், தெய்வயானையாருடனும் திரு நீற்றால் அபிடேக மாடியிருந்த கோலமும் தரிசிக்கலானேன். நாயினேனையும் ஆண்டருளும் அம்மையப்பர் பெருங் கருணைக்குப் பேதையேன்யாது கைம்மாறியற்றவல்லேன்!

**10 - 10 - 25**

தென்னூருக்குப் போம் வழியில் 'ஸம்மர் ஹவுஸ்' என்ற இடத்தில் இன்றிரவு 6-மணிக்குமேல் என் அன்பினரின் போஷகியராகிய துரைசாணியம்மையால் கோயில்களின் படக்காட்சி காட்டப் பெற்றது. அதற்கு நானும் அழைக்கப் பெற்றுச் சென்றிருந்தேன். கோயில் களைப் பற்றிய விபரங்கள் சொல்ல வேண்டுமென என்னைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

படங்காட்டும் பொழுது சில கோயில்களைப் பற்றிய செய்திகள் சில சொல்லிவிட்டு, முடிவில் ஆலய அமைப்புகளின் உண்மையைப் பற்றிச் சிறிது கூறினேன். சில பார்ப்பன மாதர்களும், பார்ப்பனர்களும், கிறித்தவ உபாத்தினிகளும் வந்திருந்தனர். பர்மாவிலும், சீனாவிலும் கோயில்கள் வெவ்வேறு மாதிரி அமைந்திருக்கின்றன வென்பதை இன்று படக்காட்சியாலறிந்தேன். நானும் என் அன்பினரும் ஒரே வண்டியிற் சென்று ஒரே வண்டியில் திரும்பி வந்தோம்.

**11 - 10 - 25**

இன்று சோமேசர் முதுமொழிவெண்பாவில் முப்பத் தொன்பது செய்யுட்கள் பார்த்தேன். பார்த்து முடிந்தபின் இதனைப் பற்றிய கருத்தினைத் தெரிவிப்பேன். இன்று மாலை 6-மணிக்கு மேல் நானும் என் அன்பினரும் கோட்டைப் புகைவண்டித் தங்கல் வரை உலாவும் முறையில் நடந்து சென்று 7-மணிக்கு மேல் வண்டியில் திரும்பி வந்தோம்.

**12 - 10 - 25**

தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவுதல் குறித்து ஆலோசிக்க வும், வேலை செய்யவும் இந்நகரில் ஏற்படுத்தப் பெற்ற கழகம் இன்று மாலை 6-மணிக்கு மேல் அதன் தலைவராகிய ஸர். டி. தேசிகாச்சாரியார் பங்களாவில் கூடிற்று. கழக உறுப்பினர் பதினொருவருள் நானும் ஒருவேனாகையால் நான் அவண் சென்றிருந்தேன். முதலில் சிற்றுணவருந்தினோம். பின்பு குறித்த விஷயங்களிற் சில விவாதித்து முடிவு செய்யப் பெற்றன. தமிழ் நாட்டில் ஒரு ஒற்றுமைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்துவதென்றும் திருச்சிராப்பள்ளியே அதற்கேற்ற இடமென்றும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழின் சரித்திரம், நாகரிகம் முதலிய விஷயங்கள் முக்கியமாய்க் கற்பிக்கப் பெற வேண்டுமென்றும், தமிழ் போன்றே ஆங்கிலமும் கட்டாய பாடமாயிருக்க வேண்டு மென்றும், நவம்பர் மாதத் தொடக்கத்தில் ஒரு கான்பரன்சு கூட்டி அதில் இக்கழகத்தின் கருத்துகளைத் தெரிவித்து முடிவு செய்வதென்றும் தீர்மானிக்கப் பெற்றன. வெள்ளைக்காரர்கள் தமிழுக்குப் பெருமை கொடுப்பதில் எதிரிடையாயில்லை யென்றும், பிராமணர்களே எதிரிடையாயிருக்கின்றனரென்றும் இக்கூட்டத்திலிருந்தும் அறியலானேன். 'தமிழ் யூனிவர்சிட்டி' என்னும் பெயர் அவ்வளவு நன்றாயில்லையென்றும், ஆந்திரம் என்பது போல் தமிழ் என்பது நாட்டைக் குறிக்கவில்லை யென்றும் தேசிகாச்சாரி யார் சொல்லிய பொழுது, நான், தமிழ்

என்பது நாட்டையுங் குறிக்குமென்று கூறினேன். இன்று நாங்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்த பொழுது மழை மிகுதியாய்ப் பெய்து கொண்டிருந்தது. திங்களாகிய இன்று கோயிலுக்குப் போகவில்லை.

### 13 - 10 - 25

அன்பர் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் நேற்றிரவு இவண் வந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இன்று ஊர் செல்கின்றனர்.

### 14 - 10 - 25

சோமேசர் முதுமொழிவெண்பா முழுதையும் இன்று பார்த்தேன். இந்நூல், திருக்குறள் நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களிலிருந்தும் ஒவ்வொரு குறட்பாவை யெடுத்துப் பின் இரண்டடியாக அமைத்து, அக்குறட் கருத்துக்கேற்ற கதையினை முன்னடிகளிற் கூறித் திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞான முனிவரால் இயற்றப் பெற்றது. முனிவர் இலக்கண இலக்கியங் களிலும், சமய நூல்களிலும் நிரம்பிய புலமை வாய்ந்தவர். வடமொழியும் கை வந்தவர். செய்யுளியற்றுவதில் மிக்க திறமை பெற்றவர். இவர் காஞ்சிப்புராண முதற்காண்டமும், வேறு பல பிரபந்தங்களும் பாடியிருக்கின்றார். பல கண்ட னங்களும் ஆராய்ச்சி யுரைகளும் எழுதியிருக்கின்றார். மொழிபெயர்ப்புக் களும் சித்தாந்த சாத்திர உரைகளும் இவராற் செய்யப் பட்டுள்ளன. கச்சியப்பமுனிவர் முதலிய பல சிறந்த புலவர்கள் இவருடைய மாணாக்கராவர். தமிழில் சிவஞான போதத்திற்கு இவரெழுதிய விரிவுரையானது "திராவிட மகா பாடியம்" என்னும் பெயரால் போற்றப்படுகின்றது. இவர் காலத்து இவர்க்கு நிகரான புலமையாளர் இருந்திலரென்று கூறலாம். எனினும் இவருரையெல்லாம் வழுவில்லன என்று கூறுதலமையாது. இவரியற்றிய இம்முதுமொழிவெண்பா இவரது புலமையைப் புலப்படுத்துவனவற்றுள் ஒன்றன்று. இளைஞர் கட்கு உபகாரப் படுதல் கருதிச் செய்தது போலும்? இந்நூலில் சைவ சம்பந்த மான கதைகளேயல்லாமல், வீரசைவம், வைணவம், சமணம் என்னும் மதங்களின் கதைகளும் கொள்ளப் பெற்றுள. பெரிய புராணக் கதைகளை இவர் எடுத்தாளும் பொழுது சமய மரியாதை பிறழாமல் எடுத்தாளக் கூடவில்லை. சில அத்துணைப் பொருத்த முடையவுமல்ல. இம்முறையைத் தழுவி வேறு பலர் நூல் செய்திருக்கின்றனர். அவருட் பலரும் பெரும் புலமையினரல்லர்.

## 15 - 10 - 25

*என் தம்பி மு. கோவிந்தராஜ நாட்டார் எல். டி. பரீக்ஷையில் தேறிய செய்தி நேற்றிரவு பத்திரிகையால் அறிந்தேன். டி. எம். அருணாசலம் பிள்ளை என்னும் மாணவர் பீ. ஏ. வில் எஞ்சியிருந்த ஆங்கிலப் பகுதியில் தேறினரென்பதும் அறிந்தேன். இவர் எங்கள் கல்லூரியில் படித்து, இண்டர்மீடியட் இரண்டாவது வருடத் தொடக்கத்தில் தந்தை இறந்து போக வேறு ஆதரவில்லாமல் படிப்பை நிறுத்தி விட்ட பொழுது, நான் திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கரவர்களிடம் அழைத்துச் சென்று இவருக்கு ஏதேனும் உதவிபுரியும்படி கேட்டேன். அவரும் சம்பளத்தின் ஒரு பகுதியை உதவிப் படிக்கும் படி செய்தார். அவ்வாண்டு இண்டர்மீடியட்டில் தேறி, பி. ஏ. வுக்கு ஆறாவது பிரிவு தமிழ் எடுத்துக் கொண்டு படிக்கத் தொடங்கிய பொழுது லேடிவில்லிங்டன் உபகாரச் சம்பளம் ஆண்டு ஒன்றுக்கு 240-ரூபாய் வீதம் இவருக்குக் கிடைத்து விட்டது. ஒன்றரை ஆண்டின் முன்பு தமிழில் தேறினார். மிகவும் சாந்த குணமுடைய பிள்ளை.*

*புரட்டாசி மாதம் 30-ம் தேதியாகிய இன்று நரக சதுர்த்தசி தீபாவளி ஸ்நானமும், 31-ம் தேதியாகிய நாளை தீபாவளிப் பண்டிகையும் ஆகும். ஐப்பசி மாதத்திற்றான் தீபாவளி கொண்டாட வேண்டுமென்று சைவப்பஞ்சாங்கம் வெளிப் படுத்துகிற திரு. சுப்பிரமணிய பிள்ளை விளம்பரஞ் செய்தார். பல பஞ்சாங்கங் களில் புரட்டாசியிலேயே தீபாவளி குறிக்கப் பட்டிருந்தது. சுப்பிரமணிய பிள்ளையின் விளம்பரத்திற்கு மறுப்புகளும் பத்திரிகையில் வந்து கொண்டிருந்தன. சிலரேனும் ஐப்பசியிற் கொண்டாடுவார்களோ என்பது தெரியவில்லை. சில நாட்களாக இந்நகர்ப் பெரிய கடைத் தெருவில் கூட்டம் தாங்கவில்லை. இத்திருநாளில் இந்தியாவிற் செலவாகும் சீனிவெடிகளின் மதிப்பு மாத்திரம் எத்துணை ரூபாயாகு மென்பது தெரியவில்லை.*

*என் அன்பினராகிய ஆடகம் சீனிவெடிக்குண்டுகள் இன்று வாங்கியநுப்பி, அவற்றை நாங்கள் ஒவ்வொருவரும் இவ்வளவு கட்டுகள் பங்கிட்டு எடுத்துக் கொள்ள வேண்டு மென்று எழுதி யிருந்தார். அவருக்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்து ஆங்கிலத்தில் என்கையால் ஒரு கடிதம் எழுதி ஆள் வசம் அநுப்பினேன்.*

## 16 - 10 - 25

*இன்று வைகறையில் தீபாவளி ஸ்நானஞ் செய்து காலையில் புதிய உடை உடுத்துப் பலகாரம் உண்டோம். இத்திருநாளில் என்*

தாய் தந்தையரும், சகோதரர்களும் ஊரிலிருக்க, நான் மனைவி மக்களுடன் இங்கிருக்கலாயிற்று. இத்திருநாள் நரகாசுரன் என்பவனைக் கண்ணபிரான் கொன்று உலகிற்கு நலம் புரிந்த தனைக் கொண்டாடுவதென்பது ஐதிகம். இன்று காலை என் அன்பினர் ஆடகத்தின் வீட்டுக்குப் பலகாரம் கொண்டுபோய்க் கொடுத்து வந்தேன். அவர் சில நாட்களாக உடம்பு ஏதோ நலங்குன்றி மருந்துண்டு வருகின்றார். இன்று அங்கு நான் போய் வந்ததில் மகிழ்ச்சியடைய வேண்டியதற்கு மாறாக மனதில் வருத்தமும் குழப்பமும் அடையலானேன். இன்று முழுதும் இவ்வெண்ணம் என்னைப் பீடியா நின்றது. திருவருள் வகையறியாது தியங்குகின்றேன்.

திருநெல்வேலி, சைவ சித்தாந்த சங்கப் பரீக்ஷைக்காகத் திருக்குறளிலும், சோமேசர் முதுமொழி வெண்பாவிலும் நேற்று ஒன்றும், இன்று ஒன்றுமாக இரண்டு வினாக்கடிதங்கள் தயாரித்துள்ளேன்.

தீபாவளிப் பண்டிகையும் வெள்ளிக்கிழமையுமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். மாணவர்களும் பிறருமாக மிகப் பலர் இன்று கோயிலுக்குச் சென்று தரிசித் தலைக் கண்டேன்.

### 17 - 10 - 25 *(குரோதன, ஐப்பசி, 1ம் தேதி)*

இன்று துலாவிஷு ஆகையால் எண்ணிறந்த மக்கள் வைகறையிலேயே காவிரியில் நீராடுவார்கள். நெடுந் தூரங்களி லிருந்தும் அகண்ட காவேரி முதலிய இடங்களுக்குத் திரள் திரளாக நீராட வருவார்கள். இம்மாத முழுவதுமே இங்ஙன மாகப் பலர் நீராடுவர். நானும் இளைஞனாக இருந்த பொழுதில் மழை, குளிர் முதலியவற்றைப் பாராட்டமால் ஐப்பசி மாதம் முழுவதும் வைகறையிலேயே காவிரியிற் சென்று நீராடி வந்தேன். அத்தகைய உடம்பு இப்பொழுது எவ்வளோ மாறி விட்டது. இன்னுஞ் சின்னாளில் எப்படியோ. இப்பொழுது வெந்நீரில் முழுகுகின்றேன். வெந்நீரே பருகுகின்றேன்.

இன்று மலைக்கோயிலையெய்தி அம்மையப்பரைத் தரிசித் திறைஞ்சி வந்தேன்.

### 18 - 10 - 25

'குழலினி தியாழினி தென்பதம் மக்கள் - மழலைச் சொற் கேளாதவர்' என்றார் தெய்வப்புலவர். மழலை பேசும் பருவ முடைய குழந்தைகள் நுண்ணறிவுடனும், திருத்தமாகவும் பேசக்

கேட்கும் பொழுது அவ்வின்பம் இன்னும் மிகா நிற்கின்றது. என் குழந்தையாகிய மங்கையர்க்கரசிக்கு இது பொழுது ஐந்தாவது வயது நிகழ்கின்றது. ஒன்றிரண்டு ஆண்டுகளாகவே குழந்தையின் பேச்சு எங்கட்கு வியப்பையும் இன்பத்தையும் அளித்து வருகின்றன. சென்ற நாலைந்து நாட்களிற் கேட்ட பேச்சில் நினைவிலுள்ளன சில குறிக்கின்றேன். ஒரு பிச்சைக்காரன் 'தாயே இரண்டு நீராரம் தாங்கள்' என்றான். உடனே குழந்தை 'இரண்டு நீராரமோ மூன்று நீராரமோ' என்று சொல்லி அவனைக் கேலி பண்ணியது. வீட்டில் பலகாரஞ் செய்யும் பொழுது ஒரு பண்ணிகாரம் சற்றுப் பெரிதாயிருந்தது. அதைக் கண்டதும், என்மேல் மிக்க அன்புடைய ஒரு சுவாமிகளின் பெயரைத் திருத்தமுறச் சொல்லி, 'சாமி வயிறு போல் இருக்கிறது; விழுந்து விழுந்து கும்பிடுங்கள்' என்று கூறிச் சிரித்தது. என்னிடம் தமிழ் பயிலும் மாணவர்களில் ஒருவர் ஏதோ பேசியபொழுது 'நீங்கள் பெரியவுங்களாயிருந்தும் இப்படிச் சொல்லலமா' என்றது. என் தமக்கை பிள்ளையாகிய சிவப்பிரகாசம் மருதூர்ப் பிச்சையையாவை அண்ணன் என்று சொல்லும் வழக்க முடையவர் 'மருதூரையா' என்று கூப்பிட்ட பொழுது 'அதென்ன அண்ணன் என்று சொல்லாமல் மருதூரையா என்று சொால்லுறிங்கள்' என்று கேட்டது.

தமிழ் வளர்ச்சிக்காகத் தம் உடல் பொருளாவி யெல்லாம் ஒப்பித்து உழைத்து வருபவராகிய உண்மையன்பர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் என் உடம்பின் பிணி நிலையைக் கேள்வியுற்றுக் கவன்று எழுதியிருந்த ஒரு கடிதத்திற்கு நான் எழுதிய பதிலில், 'நம் சங்க ஆண்டுவிழாவிற்குப் பெண் பாலாரில் எனக்கு நண்பராகியுள்ளாரொருவர் என்னுடன்வரின் அவண் யாதும் சௌகரியமிராதே? அவர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்' என்பதும் எழுதியிருந்தேன். பிள்ளையவர்கள் எழுதிய பதில் இன்று கிடைத்தது. அதில் 'தமிழ்நாடு இயற்றிய தவப்பயனாகிய தாங்கள் வல்லுடம்பினராய் இருந்து தமிழ்ப் பணியாற்ற இறைவனை என்றும் வேண்டி வருகிறேன். நலமளிப் பாராக. தாங்கள் அழைத்துவரும் நண்பர் எமது வீட்டைத் தமது இல்லமாகவே நினைத்திருக்கலாம். அவர்கள் வரவை நல்வர வாகக் கொண்டாடுவோம்' என்று எழுதியுள்ளார் கள். பிள்ளை யவர்கள் இங்ஙனம் எழுதியிருப்பதை எளிதாக நினைக்கலாகாது. அவர்கள் என்பால் வைத்துள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் இது தெளிவாக விளக்குகின்றது. நான் அவற்றுக்கு முற்றும் தகுதியுடையனாம் படி நடந்துகொள்ளக் கடவுள் அருள் புரிவாராக. பெண்பால் அவரை அழைத்து வருதல் குறித்து நான்

எழுதிவிட்டு, என்ன நினைப்பார்களோ என ஐயுற்றிருந்தேனுக்கு அவர்கள் அளித்த பதில் அளவற்ற உவகையை விளைக்கின்றது.

பட்டினப்பாலை பீ. ஏ. வகுப்பிற்குப் பாடமாகவுள்ளது. நான் அதனை முன் பல முறைபடித்தும் பாடஞ் சொல்லியு மிருந்தும் இப்பொழுது அதன் சொன்முடிபுகள் எளிதில் எனக்கு விளங்க வில்லை. நச்சினார்க்கினியர் சொற்களைப் பலவாறாகச் சேய்மைக் கண்ணும் கொண்டு கூட்டிப் பொருள் செய்திருத்தலே அதற்குக் காரணம். இவர்கருத்தின் படி பாட்டியற்றிய ஆசிரியர் பொருள் கருதியிராரென்பது தேற்றம். எனக்கு இப்படியாயின் சாதாரண மாகத் தமிழ்ப் பயில்வார் திறத்து இஃது யாதாகுமோ? நான் இன்று இதனை ஒருவாறு பார்த்து முடிபுகளை ஒழுங்கு படுத்தலானேன்.

**21 - 10 - 25**

இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**22 - 10 - 25**

இன்று விசேடச் செய்தியொன்றுமிலது.

**23 - 10 - 25**

ஒல்காப் பெருமைத் தொல்காப்பியரியற்றிய தொல் காப்பியத்தின் சொல்லதிகாரம் பேராசிரியர் உரையுடன் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அச்சிடப்பெற்றது. சில புலவர்கள் பார்த்தபின் வெளியிட வேண்டுமெனக் கருதிச் சிலருக்கு அநுப்பிய முறையில் எனக்கும் அநுப்பியுள்ளார்கள். இதனை ஆராய்ந்து செப்பஞ் செய்த தெல்லாம் என் நண்பரும், மதிநுட்பம் நூலோடு வாய்ந்தவருமாக திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள். இப்புத்தகம் வந்து ஏறக்குறைய இரண்டு மாதமாகியும் நான் இதனை ஒருமுறை பார்த்து முடிக்கக் கூடவில்லை. சிறிது சிறிதாகச் சின்னாட்கள் பார்த்து வந்ததில் இன்று, முதல் இயலாகிய 'கிளவியாக்கம்' முடிந்து, வேற்றுமையியலிற் சில சூத்திரங்கள் வரையில் ஆயிற்று. இவ்வுரையானது மற்றையவுரை களினும் சிறந்ததெனக் கூற முடியாவிடினும் கூறும் பொருளைத் தெளிவுற விளக்கும் நோக்கமுடையது.

இன்று முருகப் பெருமான் சூரபன்மனைச் சங்கரித்து அமரரைப் புரந்த கந்த சஷ்டித் திருநாளாகும். கந்த சஷ்டி ஆறு நாட்களும் மெய்யடியார்கள் மிக்க நியமத்துடன் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபடுவர். கந்தபுராணப் படனஞ்

செய்வர். நான் ஓராண்டு இங்குள்ள சைவ சித்தாந்த சபையில் கந்தபுராணம் பொருள் சொன்னேன். ஓராண்டு கந்தபுராணச் சுருக்கம் படித்தேன். இவ்வாண்டு ஒன்றும் படிக்கவுமில்லை. விரதம் நோற்கவுமில்லை. முருகக் கடவுளின் அன்பராய் அப்பெருமானது திருவருட் போற்றுதற்குரிய மணிவாசக சரணாலய சுவாமிகள் இன்று இங்கு எழுந்தருளியதும், இந்நகர்த் தேசீய கலாசாலையில் அவர்கள் புரிந்த 'தமிழும் சைவமும்' என்னும் உபந்நியாசத்தைக் கேட்டதும், மலைக் கோயிலையெய்தித் தரிசித்திறைஞ்சியதும் எனக்கு ஆறுதலளிக் கக் கூடிய செய்திகளாகும். உயர்திரு. சுவாமிகளின் உபந்நியாசம் மிக நன்றாயிருந்தது. கம்பீரமாகவும் தங்குதடையின்றி விரை வாகவும் பேசினார்கள். அவர்களது மனோபலம் மிக வியக்கத் தக்கது. இன்று இறைவன்றிருமுன் இறைஞ்சி நின்றபொழுது வழக்கம்போல் உலக மின்புற வேண்டுமென்பது முதலிய விண்ணப்பங்களைச் செய்ததுடன் தன் அருள் வழிநிற்கும் அறிவாற்றலைத் தந்தருள வேண்டுமெனக் குறையிரந்து நின்றேன். எமது பெருமான் ஏழையேற் கிரங்கு நாளென்றோ அறியேன்.

## 24 - 10 - 25

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவுக்காக நான் இன்று காலை உயர்திரு மணி சுவாமிகளுடன் புறப்பட்டுக் கரந்தை வந்து சேர்ந்தேன். இன்று மாலை 4-மணிக்குச் சபை கூடிற்று. ஆண்டு விழாவின் தலைவர் மகிபாலன் பட்டி, திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள். இவர் தமிழ்ப் புலமையும் வடமொழிப் பயிற்சியும் உடையவர். நுண்ணிய அறிவினர். திருவாசகம், பெரிய புராணம் முதலியவற்றிலிருந்து சிற்சில அரிய கருத்துக்களை இவர் தொகுத்து வைத்துக் கொண்டு உபந்நியசிக் குந்திறன் பாராட்டற் பாலது. தமிழ் நாட்டில் இவரது உபந்நியாசம் பெரிதும் விரும்பப்படுகின்றது. நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் ஊர்களில் இவரால் தமிழ்ப் படிப்புசற்று வளர்ச்சியடைந்துளதென்னலாம். தமிழ்ச் சங்கங் களிலே தமிழ்ப் படிப்பு இலராயினாரை அவர்களின் செல்வம் உத்தியோகம் முதலியன குறித்து அவைத் தலைவராக நியமிப்பது சில காலமாக வழக்கமாயிருந்தது. இம்முறை ஒரு தமிழ்ப் புலவரை ஏற்படுத்தியது எம்மால் விரும்பற்பால தொன்றாம். அவைத் தலைவர் திரு. செட்டியார் தமது முன்னுரைப் பிரசங்கத்தை எழுதி அச்சிட்டு வைத்திருந்தனர். நல்ல தமிழ்நடையில் அஃது

எழுதப்பட்டிருந்தது. அவர் அதனைப் படித்தார். திருவாளர் சூ. கார்மேகக்கோன் அவர்களும், திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியார வர்களும் உபந்நியாசஞ் செய்தார்கள். சங்கத்துப் பள்ளிக்கூட மாணவர்களால் சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதி நாடகமாக நடிக்கப் பெற்றது. நான் அப்பொழுது சபையில் இல்லை. நாடகம் மிக நன்றாயிருந்ததெனப் பலரும் சொல்லினர்.

## 25 - 10 - 25

இன்று காலை 9-மணிக்குக் கரந்தைச் சங்க அவை கூடித் தமிழின் சார்பாகச் சில தீர்மானங்கள் செய்யப் பெற்றன. நான் இவ்வாண்டில் உபந்நியாசம் யாதும் எடுத்துக் கொள்ளவில்லை. தீர்மான நிகழ்ச்சியில் சிறிது பேச நேர்ந்தது. மாலை 3½ மணிக்கு மேல் மீட்டும் அவை கூடியது. திருவாளர்களான அ. மு. சரவண முதலியார், திருநாரையூர் முத்துக்குமரபிள்ளை வரதநஞ்சையக் கவிராயர் இவர்கள் மூவரும் உபந்நியாசம் செய்தார்கள். அன்பர் அ. மு. ச. முதலியாரவர்கள் ‘மெய்ப்பொருள்’ என்னும் பொருள் குறித்துச் செய்த உபந்நியாசம் மிக்க அருமை வாய்ந்ததும், பயனுடையதுமாகும். இருநாட்களிலும் திரளான மக்கள் குழுமியிருந்தனர். மாணாக்கர்களும் பலர் வந்திருந்தனர். சங்க அமைச்சர் திரு. R. வேதாசலம் பிள்ளையவர்கள் இயற்றிப் பாடிய அரிய பாடல்களை மாணவர்கள் இடையிடையே பாடியின்புறுத்தினர். என் பெற்றோர்களும் தம்பி, கோவிந்த ராஜாவும் வந்திருந்தனர். தம்பி, சிரஞ்சீவி, கோவிந்தராஜாவுக்கு அடிக்கடி ஒரு மயக்கம் வருவதென அறிந்ததில் எனக்கு மிகுந்த கவலையாயிருக்கிறது. மூளையில் ஏதோ குற்றம் ஏற்பட்டிருப்ப தாக நினைக்கிறேன். திருவருளால் நலம் உண்டாதல் வேண்டும்.

## 26 - 10 - 25

இன்று காலை கரந்தையினின்றும் புறப்பட்டுத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தோம். காலேஜுக்குப் போய் வந்ததன்றி வேறு விசேடமில்லை. இன்று திங்கட்கிழமையாகவும் கோயிலுக்கும் போகக் கூடவில்லை.

## 27 - 10 - 25

இன்று க. மணி சுவாமிகள் ஊருக்குச் சென்றார்கள். குன்றக்குடியில் அவர்கள் கட்ட ஆரம்பித்திருக்கும் தமிழ்க் கலாசாலையின் பிளானை இம்முறை அவர்கள் காட்டக் கண்டு மகிழ்ந்தேன். சென்ற வெள்ளிக்கிழமை சென்னையில் செனட் சபை நடக்கும் பொழுது மாதவையா என்பவர் நாற்காலியில்

உட்கார்ந்திருந்தபடியே உயிர் துறந்தனராம். இவர் தமிழில் நாவல்கள் எழுதுவோரில் ஒருவராயிருந்தார்.

சென்ற சனிக்கிழமை (24-10-25) செனட் கூட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்தப் பெற வேண்டுமென்றும் தீர்மானம் திருவாளர் T.V. சேஷகிரி ஐயரவர்களால் கொண்டு வரப்பெற்று ஒருமுகமாக நிறைவேறியது. தமிழ் வளர்ச்சிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப் பெற வேண்டுவது அவசிய மென T.V. சேஷகிரி ஐயராலும், பிறராலும் பேசப் பெற்றுளது.

என் மனைவியின் உடம்பு நலமின்றியிருப்பது வருத்தத்தை விளைக்கிறது.

பர்சியன் கடலில் பெரிய புயற்காற்று அடித்ததனால் பல கப்பல்கள் கவிழ்ந்து ஏழாயிரம் பேர் மாண்டனரெனப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

**28 - 10 - 25**

இன்று விசேட செய்தியொன்றுமில்லை.

**29 - 10 - 25**

புரொபசர் சுந்தரம் பிள்ளையவர்களியற்றிய 'மனோன் மணீயம்' என்னும் தமிழ் நாடகம் பி. ஏ. வகுப்பிற்குப் பாடமாக வுள்ளது. இந்நாடகத்தின் அழகுகளை யெல்லாம் எடுத்துக் காட்ட இப்பொழுது அவகாசம் இன்று. சுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு பேரறிவாளர் என்றும் நிரம்பிய குணமும் அநுபவமும் வாய்ந்தவர் என்றும் இந்நூலால் வெளிப் படுகின்றது. வேதாந்த தத்துவ உண்மைகளை ஆசிரியர் இந்நூலில் உள்ளுறையாக அமைத்திருப்பது மிகவும் வியக்கற் பாலது. இந்நாடகத்தில் 'சிவகாமிசரிதை' என ஒரு கிளைக்கதை வந்துளது. இக்கதையின் பாடல்கள் ஓசை நலமும், பொருணலமும் பொருந்திப் படிக்கப் படிக்க இன்பம் பயப்பனவாகும். இதிலும் தத்துவப் பொருள் உள்ளுறையாக வந்துளது. இத்தத்துவங்கள் இன்ன முறையைத் தழுவின என விளக்கமாகத் தெரியவில்லை. வேதாந்த நூல்கள் நான் சிறுபான்மை பார்த்திருப்பினும் அதன் தத்துவங்கள் எனக்கு நினைவில்லாமையால் நானா சீவவாதக் கட்டளை, உபதேசவுண்மைக் கட்டளை என்னும் இரு சிறு வேதாந்தப் புத்தகங்களை இன்று ஒருமுறை பார்த்தேன். இவற்றுள் முன்னது தான் தற்காலத்தில் வேதாந்தம் பயிலுவோர் பெரும்பாலும் தொடக்கத்தில் படிக்கின்ற நூலாகும். சிவகாமி சரிதையின்

தத்துவங்கள் வேதாந்தம் போற் காணப்படினும் அவை புதிய முறையில் அமைந்திருப்பனவாகும்.

திரு. மா. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தாம் எழுதி அச்சிட்டிருந்த 'ஆராய்ச்சி இலக்கம் VIII' என்னும் புத்தகம் ஒன்று இன்று எனக்கு அநுப்பினர். இதனை ஒருமுறை படித்துப் பார்த்தேன். இது திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M.A; M.L, எழுதிய 'சைவ சித்தாந்த வரலாறு' என்னும் புத்தகத்தில் ஒன்றிரண்டு விஷயங்களை எடுத்துமறுப்பதாகும். திரு. கா. சு. பிள்ளையவர்கள் பேரறிவாளரென்பது துணிபு. ஆனால் அவர் தமிழிலுள்ள பற்றுக்காரணமாக நடுநிலை பிறழ்ந்தும் பல செய்திகளை எழுதி வருகின்றனரென்பது என் எண்ணம். திரு. மா. சா. பிள்ளையவர்கள் பெரும்பாலும் உண்மையை எழுதுகின்றார் களெனினும், கால தேச இயல்புகளை அநுசரித்தும், தமிழைப் பெருமைப் படுத்தும் முறையிலும் எழுதவில்லை. இங்ஙனமே முன்னர் சிற்சில மறுப்புரைகள் இவர் எழுதி வெளியிட்டுள்ள வற்றையும் பார்த்திருக்கிறேன். இம்மறுப்புரையில் இவர் எழுதியிருப்பன: சைவ சித்தாந்தம் வட மொழியிலிருந்து வந்ததேயென்பதும், சிவம் என்பது வட சொல்லே என்பதும், "நூலே கரகம்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திலுள்ள நூல் என்பது கா. சு. அவர்கள் கருதுகிற 'ஏடு' என்னும் பொருளதன்று என்பதும் ஆகிய இவைகளே.

**30 - 10 - 25**

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சி வந்தேன்.

**31 - 10 - 25**

என் வாழ்க்கை இன்னமும் மிக மந்தமாகவே நடை பெறுகின்றது. என் அன்பினராகிய ஆடகத்தின் பாலுள்ள காதல் என்னால் தவிர்க்க முடியாததாயிருக்கிறது. அவர் அடிக்கடி நோயால் வருந்துவது எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது. கடவுள் அவருக்கு நலமளிப்பாராக. 'தமிழ்ப்பொழி'லின் புரட்டாசி மலர் இன்று வந்ததனைப் படித்தேன். 'சிலப்பதிகார நாடகத்து ஒரு பகுதி' என நண்பர் வேங்கடசலம் பிள்ளையவர்கள் எழுதியிருந்தது இனிமையாயுளது. 'ஒலோக மாதேவீச்வரம் கல்வெட்டு' திரு L. உலகநாதபிள்ளையவர்கள் வெளிப்படுத்தியிருப்பதில் சில அரிய செய்திகள் உள்ளன. ஒலோகமாதேவியார் என்பது முதலாம் ராஜராஜ சோழரின்

முதற் பெருந்தேவியின் பெயராகும். அவர் திருவையாற்றில் ஐயாறப்பர் கோயிலின் வடக்குத் திருச்சுற்று மாளிகைக் கண் ஒரு சிறு கற்கோயில் கட்டியுள்ளார். அதன் பெயரே 'ஒலோக மாதேவீச்வரம்' என்பது. அவ்வம்மையார் அக்கோயிலுக்குச் செய்தளித்த திருவாபரணங்கள், திருப்பரிகலங்கள் முதலியவற்றின் விபரம் கல்வெட்டில் உள்ளது, விரிவஞ்சி இதில் எழுதப்பட்டிலது. இக்கல்வெட்டிலிருந்தும், நான் முன்பு படித்துள்ள இராஜராசசோழரது தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டிலிருந்தும் அம்மன்னர்பால் இருந்த திரவியம் இத்தனைகோடியென மதிப்பிடலாகாததாகும் என விளங்குகிறது. அவையெல்லாம் இப்பொழுது எங்கே போயினவோ தெரியவில்லை. தமிழ்ப்பொழில் துணர்-1, மலர்-6ல் வெளியான இக்கல்வெட்டில் உள்ள அரிய வழக்குகள் ஆராயத்தக்கன.

**1 - 11 - 25** ***(குரோதன ஐப்பசி 16ம் தேதி)***

இன்று விசேட செய்தி ஒன்றுமில்லை.

**2 - 11 - 25**

இராமகிருஷ்ண பரமஹம்சருடைய உபதேசங்களில் 250-அச்சிட்ட புத்தகமொன்று என்னிடமிருந்தது. அதனை என் அன்பர் ஆடகம் படித்தற்குக் கொடுக்குமாறு இன்றெடுத்து, நானும் ஒரு முறை படித்தேன். முன்பே அதனைப் படித்துப் பார்த்துளேனாயினும் மீண்டும் படித்துப் பார்க்குமாறு ஆர்வமுண்டாயது. பரமஹம்சருடைய உபதேசங்கள் படிக்கப் படிக்க எனக்குத் தெவிட்டாத அமிழ்தமாகவேயுள்ளன. அவர் ஒரு முதிர்ந்த அநுபவமுடைய சமரசஞானி என்பது என் எண்ணம்.

கார்த்திகையும் திங்கட்கிழமையுமாகிய இன்றிரவு மலைக் கோயிலை யெய்தி அம்மையப்பரை இறைஞ்சினேன். முருகப் பெருமானுடைய திரு அபிடேக அலங்கார ஆராதனைகளைத் தரிசித்தேன்.

**3 - 11 - 25**

சில நாட்களாக நான் பத்திரிகை படிக்கவில்லை. இன்று விசேடச் செய்தி ஒன்றுமில்லை.

**4 - 11 - 25**

இன்று விசேடச் செய்தியொன்றுமில்லை.

**5 - 11 - 25**

*சென்னை நகர்க்கார்ப்பொரேஷன் தலைவர் பதவிக்கு தேர்தல் நடந்ததில் சுயராச்சியக் கட்சியினராகிய சாமி வெங்கடாசலஞ் செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஜஸ்டிஸ் கட்சியினராகிய டாக்டர் நடேச முதலியார் அதற்கு நின்று தோல்வியுற்றனர். ஜஸ்டிஸ் கட்சியில் பலருக்கு அதிருப்தி விளைந்து வருகின்றது போலும்?*

*நான் முன் பலவிடத்தும் குறிப்பிட்டிருப்பவரும், என் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்டவரும் ஆகிய நங்கைக்கும் எனக்கும் இடையே இன்று நிகழ்ந்த நிகழ்ச்சியிலிருந்து கருணையங் கடலாகிய சிவபெருமான் நாயினேனையும் ஏதோ ஒரு வகையால் ஆட்கொள்ளுதற்குத் திருவுள்ளம் பற்றினன் போலும் எனக் கருதுகின்றேன். இறைவன் திருவருளை யானோ அறியவல்லேன்!*

**6 - 11 - 25**

*வடமேற்குக் கடலில் புயற் காற்றினால் முத்துக்குளிப்பவர்களில் 500-பேருக்கு அதிகமாக இறந்து விட்டனரென்று கராச்சித் தந்தி கூறுகிறது. ஆந்திர பல்கலைக்கழகத்திற்குத் தலைமையிடம் பெசவாடா என்று தீர்மானிக்கப் பெற்றது.*

*வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலையடைந்து தரிசித்திறைஞ்சி வந்தேன். ஏனைய பிறவிகளுக்கெல்லாம் இல்லாத விசேடவறிவுடன் கூடிய மனிதப் பிறப்பை இறைவன் அளித்தது அவனை வழிபட்டு உய்தி கூடுதற்கன்றே? அவ்வாறாகவும் அவனை மறந்து உலக வியவகாரங்களிலேயே பொழுதைக் கழிப்பது எவ்வளவு பேதைமையாகும்? மலையினும் கடலினும் பெரியவாகத் தீவினைகளைச் செய்துபோந்த பாவியேன் திறத்தும், 'பானினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து . . . புறம் புறந்திரிந்து' காத்தருளும் பேரருளாளனை இடைவிடாது சிந்தித்துருகும் பொறியிலேனாயினும், வாரத்தில் இரண்டு நாட்கள் கோயிலுக்குப் போவதால் ஒன்றிரண்டு நாழிகையேனும் அவனை நினைக்கவும், துதிக்கவும், அவனை வழிபடும் அடியார்களைக் கண்டு மகிழவும் நேர்கின்றது.*

**7 - 11 - 25**

*சோதிடம்வல்ல ஒரு பிரன்சுமாது 1926-ம் ஆண்டுக்குள் உலகில் பெருங்கேடு நேரும் என்றும், இட்டாலிதேயம் பேரழி*

வெய்துமென்றும், கீழ்த்திசைத்தேயங்களில் பெரிய இராச்சிய மாறுதலுண்டாகுமென்றும் கூறுகின்றாளாம்.

காலஞ்சென்ற எல். டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளையின் அநுதாபக் கூட்டமொன்று சென்னைக் கவர்னரின் தலைமையில் நடந்தது. மந்திரிகளும், நிருவாக சபை அங்கத்தினர்களும் முதலாகப் பலரும் பேசியிருக்கின்றனர். சுவாமிக் கண்ணுப் பிள்ளை பதினான்கு பாஷை அறிந்தவராம்!

சர். கே. வி. ரெட்டி தஞ்சையிற் பேசிய பொழுது காந்தியடிகளை இழித்துரைத்ததை நேரிற் கேட்டேன். சென்னைச் சட்டசபைக் கூட்டத்தில் ஆந்திர சர்வகலாசங்க விவாதங்கள் நடக்கும் பொழுது அவரே காந்தியடிகளைச் சன்மார்க்கமற்றவர் என்று கூறினரென இன்று வந்த பத்திரிகை யாலறிந்தேன். உலகெலாம் போற்றும் உத்தமராகிய காந்தியடிகளுக்கு இதனால் ஒரு குறையுண்டாவதில்லை. இந்தியாவிற் பிறந்து 'சர்' பட்டம் பெற்ற ஒரு மனிதர் இவ்வளவு மூர்க்கத் தன்மையுடையரா யிருப்பதே வியப்பாக இருக்கிறது. இவர் போன்றவர்களாற்றான் ஜஸ்டிஸ் கட்சிக்கும் அழிவு நெருங்கிறதெனக் கருதுகிறேன்.

**8 - 11 - 25**

மதுரை அமெரிக்கன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள் எழுதிய 'நல்லிசைப் புலவர்கள்' என்னும் புத்தகம் மதிப்புரை வேண்டி அநுப்பப் பட்டிருந்ததனை இன்று படித்து முடித்தேன். இதில், பெருந்தலைச் சாத்தனார், மோசியார், கோவூர் கிழார், பெருஞ்சித்திரனார், பிசிராந்தையார், ஔவையார் என்னும் ஆறு புலவர்களின் வரலாறு கதைவடிவாக எழுதி, அவ்வவற்றின் இறுதியில் ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. உரைநடையும், ஆராய்ச்சியும் நன்றாகவிருக்கின்றன. தமிழில் நல்ல உரை நூல்கள் வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக் குரியது. ஆராய்ச்சியில் சிறுபான்மை தவறுண்டாதல் இயல்பே. 'என்னும் பெயரிய' என்று பல இடங்களில் வந்துளது. இது பெயரெச்சம் வினை கொண்டு முடியாதென்பதைக் கவனியாத குறையால் நேர்ந்துளது. இன்று மாலை 'திரிசிபுரம் தமிழ்ச்சங்கம்' சார்பில் நடந்த 'திருவள்ளுவர்' என்னும் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**9 - 11 - 25**

திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

## 10 - 11 - 25

சுவாமி சிரத்தானந்தர் சென்னையில் பல இடங்களில் செய்த உபந்நியாசங்கள் பத்திரிகையில் வெளிவந்திருக்கின்றன. இவர் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர். அரித்துவாரத்தில் 'குருகுலம்' என்கிற கலாசாலையை இருபத்தைந்து ஆண்டு களின் முன் ஏற்படுத்தி நடத்தி வருபவர். பெரிய கல்விமான். இந்து மதத்தின் குறைகளை யொழித்து அதனைப் பலப்படுத்த முயன்று வருபவர். தீண்டாமை, பால்ய விவாகம் என்பன ஒழிய வேண்டு மென்றும், இளமையில் விதவையானவர் கள் மறு விவாகஞ் செய்து கொள்ள அநுமதிக்க வேண்டு மென்றும், ஆடவர்கள் 25-வயதுக்கு மேலும், பெண்டிர் 16-வயதுக்கு மேலுமே மணஞ் செய்து கொள்ள வேண்டுமென்றும் தம்முடைய பிரசங்கங் களில் வலியுறுத்திப் பேசியிருக்கின்றார். தற்காலக் கல்வி முறையைக் கடிந்து பேசியுள்ளார். பற்பல இடங்களிலும் 'குருகுலம்' ஏற்பட்டு, ஜாதி வித்தியாசம் சிறிதுமில்லாமல் நடந்து வரச் செய்ய வேண்டுமென்கிறார்.

காந்தியடிகளிடத்தில் பலர் பல சங்கடமான கேள்விகளை அடிக்கடி கேட்டு வருகின்றனர். வருந்தத்தக்க சில கேள்விகளையும், அதற்கு அவர் பொறுமையுடன் எழுதியுள்ள பதிலையும் இன்று பத்திரிகையிற் படித்தேன். ஓர் ஐரோப்பிய மாது காந்தியடிகளின் கொள்கையில் மிக்க விருப்ப முடையவராய், அவரைக் குருவாகக் கொண்டு, அவரைக் காண்பதற்குச் சபர்மதி ஆச்சிரமத்திற்கு வந்திருக்கின்றாராம்.

## 11 - 11 - 25

சர். சுரேந்திரநாத் பானர்ஜி இறக்கும் பொழுது தனது சொத்தில் 15-லட்சம் ரூபாய் மதிப்புள்ளதனை வங்காள சுகாதார விருத்தியின் பொருட்டு எழுதிவைத்திருக்கிறாராம். சர். ரவீந்திரநாத தாகூர் கதரைப் பற்றிக் கேலி செய்து எழுதி யிருந்தாராம். அதற்குக் காந்தியடிகள் பதிலெழுதியிருப்பது மிக அழகாயிருக்கிறது.

மழை மிகுதியாய்ப் பெய்து திருநெல்வேலி, மதுரை முதலிய இடங்களில் வெள்ளம் மிகுந்துளதென்றும், சிற்சில இடங்களில் இருப்புப் பாதைகள் உடைப்பெடுத்து வண்டிப் போக்குவரவு தடைப்பட்டுள தென்றும் தெரிகின்றது. இங்கும் சில நாளாகப் பெருமழையின்றேனும் இடையறாது தூற்றல் இருந்து கொண்டிருக்கிறது.

**12 - 11 - 25**

இன்று விசேடச் செய்தி யொன்றுமில்லை.

**13 - 11 - 25**

வ. வெ. சுப்பிரமணிய ஐயரவர்களால் ஏற்படுத்தப் பெற்ற குருகுலத்தில் இப்பொழுது ஒன்பது மாணவர்களே இருக்கின்றன ரென்றும், பாரத்துவாஜ ஆசிரம நிருவாகிகளில் சிலர் விலகிவிட்டனரென்றும், இருப்பவர்களும் இரு கட்சியாய்ப் பிரிந்து கலகம் விளைத்துக் கொண்டிருக்கின்றன ரென்றும் இப்பொழுதுள்ள நிலைமையில் 'குருகுலம்' நல்ல நிலைமைக்கு வருமென நினைக்கக் கூடவில்லை யென்றும் சுதேசமித்திரன் நிருபர் நேரிற் சென்று கண்டறிந்து எழுதியிருக்கின்றனர். வ. வெ. சு. ஐயர் கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுத்தது போல் சில துராசைப் பார்ப்பனர் கையில் இதனை ஒப்புவித்துப் பிழை செய்து விட்டனர்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**14 - 11 - 25**

தஞ்சைக் கள்ளர் மகாசங்கத்தின் ஆண்டு விழாவுக்காக இன்று தஞ்சை வந்து சேர்ந்தேன். பாப்பா நாடு ஜமீன்றார் ராய் பகதூர் R. சாமிநாத விஜயதேவரவர்களின் தலைமையில் மகாநாடு நடைபெற்றது. கள்ளர் குலத்தாரில் சுமார் 800 பேர் வந்திருந்தனர். அநேக தீர்மானங்கள் செய்யப் பெற்றன. சங்க அமைச்சராகிய திருவாளர் பூண்டி, A. வீரையா வாண்டையார் அவர்கள் நற்குணமும், ஊக்கமும் உடையவராய்க் காணப்படுகின்றனர். சிக்கனம், மதுவிலக்கு முதலியன பற்றிய ஒரு தீர்மானத்தை நான் பிரேரேபித்து ஒரு சிறு உபந்நியாசஞ் செய்தேன்.

**15 - 11 - 25**

கரந்தையிலுள்ள அன்பர்களுடன் அளவளாவியிருந்து இன்று மாலை திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன். உடன் என் அன்பராகிய ஆடகப் பெயரினரைச் சென்று பார்த்தேன். அவர் உடம்பு நலமின்மையால் இரண்டு வாரமாகக் காலேஜூக்கு வரவில்லை. அவரின்றி அவ்வகுப்பில் பாடம் நடத்த எனக்கு மனவெழுச்சி யுண்டாகவில்லை. இன்றிரவு போய்ப் பார்த்த பொழுது அவர் படுக்கையில் நோயால் உழன்று கொண்டிருந்தது எனக்கு அளவற்ற வருத்தத்தை அளித்தது.

**16 - 11 - 25** *(குரோதன, கார்த்திகை, 1 தேதி)*

நேற்று முன்றினம் இங்கு வந்திருக்கிற என் அன்னை யாரவர்களும், என் மனைவியும், குழந்தை மங்கையர்க்கரசியுடன் என் அன்பினரைப் பார்ப்பதற்கு இன்று அவரில்லம் சென்று வந்தார்கள். எங்கள் நட்பு இறைவன்றிருவருளால் வளர்ந்து இன்பம் அளித்து வருகின்றது.

இன்று கார்த்திகைச் சோமவாரம். சில ஆண்டுகளின் முன்னெல்லாம் சோமவார விரதம் அநுட்டித்துக் கொண்டிருந் தேன். திங்கட்கிழமை தோறும் கோயிலுக்குப் போய்த் தரிசித்து வரும் வழக்கமுடைய நான் இன்று அதுவுஞ் செய்திலேன். என் அன்பினர் ஆடகத்தின் இல்லஞ் சென்று பேசிக் கொண்டிருந்த தனாலேயே இன்று கோயிலுக்குப் போகக் கூடவில்லை. என் அன்பினர் பால் நான் நடந்து கொள்வதைப் பற்றி இன்று சில தீர்மானங்கள் செய்து கொண்டுளேன். இத்தீர்மானங்கள் என் வாழ்க்கையைத் திருத்தி நலம் விளைக்கு மெனக் கருதுகின்றேன்.

**17 - 11 - 25**

இன்று விசேடம் ஒன்றுமில்லை. என் அன்பருடன் இரண்டு மணி நேரம் வரையில் இன்பமாய்ப் பேசிக் கொண்டிருந்தேன்.

**18 - 11 - 25**

இன்றிரவு அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் இங்கு வந்து சிறிது நேரம் பேசியிருந்து, கார்த்திகை மாதம் 11-ம் தேதி இங்கு வந்து விடுவதாக நாட் பார்த்துக் கொண்டு போயிருக் கின்றார்கள். இன்று வேறு விசேட மொன்று மிலது.

**19 - 11 - 25**

நேற்றிரவு கனவில் வடலூர் இராமலிங்க சுவாமிகளைப் பற்றி ஏதேதோ கண்டு கொண்டிருந்தேன் ஒன்றும் விளக்கமாய்த் தெரிந்திலது.

என்புதல்வியாகிய திரு. பார்வதியம்மாளை நன்னூல், நாலடியார், நளவெண்பா மூன்றிலும் பாடம் ஒப்புவிக்கச் சொல்லிக் கேட்டேன். என் குழந்தைகளுக்கு நான் கல்வி கற்பிப்பது எனக்குரிய கடமைகளில் ஒன்றைச் செய்வதாகும். நம் நாட்டுப் பெண்பாலார் யாவரும் தமிழிலேயுள்ள சிறந்த நூல்களைக் கற்றுணர்ந்து குணவொழுக்கங்களிலும், கற்பிலும் சிறந்து விளங்குதலைக் காணக்கூடுமாயின் அதனினும் நாம் பெறும் பேறுயாதுளது?

**20 - 11 - 25**

*சில நாட்களாக மழையும் குளிரும் மிகுதியாகவுள்ளன. நெடுநல்வாடையிற் கூறப்பட்டுள்ள கூதிர் வருணனை நினைவுக்கு வருகிறது.*

*நான் திருக்குறள் முன்னமே நன்கு படித்துளேனாயினும், அதனை இடையீடின்றிப் பார்த்து வரவேண்டுமென்னும் கருத்துடன், திருக்குறள் மூலப்புத்தகத்தை இரண்டு நாளின் முன் சட்டைப்பையில் எடுத்து வைத்தேன். நேற்று ஐந்து அதிகாரமும் இன்று ஐந்து அதிகாரமும் பார்த்தேன்.*

*நேற்றும் இன்றும் வந்த "சுதேசமித்திரன்" படித்தேன். காந்தியடிகள் தமது 'நவஜீவன்' பத்திரிகையில் எழுதியிருந்த தொரு கட்டுரையை மொழி பெயர்த்திருந்தது படிக்க மிகவும் இன்பமாயிருந்தது. பகவத்கீதை போதிப்பது ஹிம்சையா அஹிம்சையா என ஆராயத் தொடங்கி, அஹிம்சையே என முடிவுகட்டப் பெற்றுளது. காந்தியடிகளின் பேரறிவு ஆராய்ச்சி அநுபவங்களை இக்கட்டுரை நன்கு தெளிவாக்குகிறது. நூலாராய்ச்சி செய்வோர் இதிலிருந்து சில உண்மைகள் கற்றுக் கொள்ளலாகும்.*

*வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யடைந்து அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சினேன்.*

**21 - 11 - 25**

*இன்று விசேடச் செய்தி யொன்றுமில்லை.*

**22 - 11 - 25**

*மாட்சிமிக்க ஐந்தாம் ஜார்ஜ் அரசர் பெருமானின் அன்னையா ராகிய அலெக்சாண்டிரா மகாராணியார் அவர்கள் தமது 81-வது வயதில் 20-11-25-ல் உயிர் துறந்தனர். பாக்கியவதியாகிய இவ்வம்மை உயிர் துறக்கும் பொழுது இவருடைய இருபுதல்வி களும், ஜார்ஜரசரும், பேரப்பிள்ளை களும் ஆகிய பலரும் உடனிருந்து உபசரித்து வந்தனர்.*

*தமிழ் மாகாண மகாநாடு நேற்றுக் காஞ்சிபுரத்தில் திருவாளர்* (T.V.) *திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் கூடியிருக்கும். முதலியாரவர்களின் அக்கிராசனப் பிரசங்கம் இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.*

*ஐரோப்பாக் கண்டத்தில் சுவிட்சர்லாந்து தேசத்தில் 150-வருடத்தின் முன் ஸ்வீடன்பர்க் என்பவரால் ஒரு சைவ*

சித்தாந்த சங்கம் ஏற்படுத்தப் பெற்றுளதாம். அதன் அங்கத்தின ராகிய ஸட்டன் M.A. என்பவர் சென்னைக்கு வந்து, 20-ம்தேதி மாலை திருவாளர், அமைச்சர் T.N. சிவஞானம் பிள்ளைய வர்களின் தலைமையில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி ஒரு உபந்நியாசஞ் செய்துள்ளார். அவர், மேல் நாட்டுப் பாதிரிகள் கீழ்நாட்டார்க்கு தத்துவவிஷயமாய்ப் போதிக்கக் கூடியது ஒன்றும் இன்று எனவும், கற்றுக் கொள்ளக்கொள்ள வேண்டியதே உண்டு எனவும், சைவ சித்தாந்தத்தின் அரிய தத்துவங்களை ஏற்றுக் கொள்ளும் அறிவுவன்மை அவர்களுக்கில்லாமலிருக்கிற தென்றும் கூறியுள்ளார்.

என் தம்பி மு. கோவிந்தராஜா B.A; L.T. நான் ஆடகப் பெயரன்பருடன் மிகுதியாய்ப் பழகிவருவது குறித்து, என் பெருமைக்கு இழுக்குண்டாகுமென மிக வருந்தி, என் அன்னையிடம் கூறியதாகவும், என் அன்னையாரும் மிக வருந்துவதாகவும் என் மனைவியால் இன்று அறிந்தேன். எனக்குச் சிறுமையுண்டாகலாகாது என்று எண்ணுவோர் இங்ஙனம் நினைப்பது சிரமமே. நானும் அவருடன் பழகுவதை இனி ஓரளவு குறைத்துக் கொள்ளவே வேண்டும். எல்லாம் சிவபெருமான்றிரு வருளே.

**23 - 11 - 25**

என் மாணவரும் அன்பருமாகிய திரு. K. நரசிம்மஐயங்கார் கோலாலம்பூரிலிருந்து எழுதிய கடிதம் ஒன்று இன்று கிடைத்தது. அவர் எழுதிய பல கடிதங்கள் என்னிடம் உள்ளன. ஒவ்வொரு கடிதத்திலும் என்னைப் பற்றி அளவின்றிப் புகழ்ந்தெழுதியிருக்கின்றனர். இக்கடிதத்திலும் பின்வருமாறு எழுதியுள்ளார்: "உங்களை எண்ணும் பொழுதெல்லாம் என் மனத்திற்குத் தானாகவே என்னையறியாமல் மூவர்களுடைய ஞாபகம் உடனே வந்து விடுகிறது. மனம் நெடிதும் ஓடிப்பிற கோரிடத்தே அமருங்காலை என்ன காரணங்கொண்டு அவர் களையும் நுங்களையும் என் ஏழைமனம் பிணைக்கின்ற தென்று கூற முடியாது. அம்மூவர்களுடைய பெயர் சடகோபன், வள்ளுவன், காந்தி உங்களுக்கும் பிற கூறப்பட்ட இருவர்களுக்கும் எவ்விதத் தொடர்பு கூறப் படினும், முதல் கூறப்பட்ட திருநாமத் திற்கும் நுங்கட்கும் யாது சம்பந்தம் என்பது வெளிப்படையாக விளங்கவில்லை. எனினும் என்னுளம் எப்பொழுதும் அவ்வாறே சிந்தனை செய்கின்றது. அதற்கு நானென்ன செய்வது? ஆழ்வாரைச் சேவிக்கவோர் ஆசையுண்டு; வள்ளுவனை வணங்கவோர்

எண்ணமுண்டு; காந்தியைத் தரிசிக்க வோர் பிரியமுண்டு எனில் நூல்களைக் காணவோர் நெஞ்சுமுண்டு." மேலே குறிப்பிட்டவர் களுக்கும் எனக்கும், குலகிரிகளுக்கும் சிறு செங்கற்றுண்டுக்கு முள்ள வேற்றுமை யுண்டு; எனினும் என் அன்பரின் அன்பு இங்ஙனம் நினைக்கின்றது.

கார்த்திகை இரண்டாம் சோமவாரமாகிய இன்று மலைக் கோயிலை யெய்தி அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன். தீப அலங்காரங்களும், சோமாஸ்கந்தர் சாத்துபடி அலங்காரமும், சேவிக்க வந்தவர்களின் கூட்டமும் மிகுந்த மகிழ்ச்சியை விளைத்தன.

**24 - 11 - 25**

நேற்றிரவு நான் கண்ட கனவுகள் சற்றுத் தெளிவாக இருந்தன. அவற்றுள் ஒன்று: அரித்துவார மங்கலத்திலிருந்து பழக்கமுடைய யாரோசிலர் நான் நடுக்காவேரியில் வீட்டு மெத்தையிலிருக்கும் பொழுது வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கையில் பழம் முதலிய காணிக்கைப் பொருள்களும் கொண்டு வந்தார்கள். அவர்களுள் ஒருவர் என்னைக் கிழக்கு நோக்கி யிருக்கச் செய்து, தாம் கொண்டு வந்திருந்த திருநீற்றை என் நெற்றியில் தரித்தார்.

**25 - 11 - 25**

இன்று விசேடச் செய்தி ஒன்றுமில்லை.

**26 - 11 - 25**

என்னிடம் கல்வி பயின்று, கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளிக் கூடத்தில் தமிழ்ப் பண்டிதராகவிருக்கும் திரு. வீ. உலகதாசு என்பார் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச பண்டித பரீக்ஷையில் முதல் வகுப்பில் இரண்டாவதாகத் தேறி, முப்பது ரூபா பரிசில் பெறுதற்குரியராயினரெனும் நற்செய்தி இன்று அறியலானேன்.

என் தந்தையார் இன்று இங்கு வந்துளார்கள்.

**27 - 11 - 25**

மிஸ்ஸில் கோயில் பிள்ளை என்னும் வயது முதிர்ந்த ஓர் கிறிஸ்தவ உபாத்தியாயனியால் எழுதப்பட்ட 'அன்னலக்ஷ்மி யம்மாள்' என்னும் பெயருள்ள ஓர் கதைப் புத்தகம், நான் பார்த்துத் திருத்தி, ஓர் முகவுரை எழுதித் தருமாறு என்னிடம் கொடுக்கப்பட்டிருந்தது. கையெழுத்தில் 320 பக்கமுள்ள அதனை, எனக்குள்ள பல அலுவல்களை நினைக்கும் பொழுது, நான் பார்ப்பதற்கு ஒத்துக் கொள்வது இயலாத காரியம் எனினும், என்

அன்பினராகிய ஆடகத்தின் வாயிலாக அது என்னிடம் சேர்ப்பிக்கப் பெற்றமையின் நானும் அதனையேற்றுப் பார்த்து முடித்து இன்று ஒரு முகவுரையும் எழுதினேன். என் ஒருவார நாட்களை அதுகவர்ந்து விட்டதெனக் கூறலாகும்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போவதிலும் முதற்கண் ஐயம் ஏற்பட்டது; எனினும் திருவருளானது எப்படியோ நான் மலைக்கோயிலை யெய்தித் தரிசிக்கும் படி செய்து விட்டது. திருவருள் என்னையும் ஆட்கொள்ளும் என்னுங் குறிப்புக்கள் ஒரோவழிக் காணப்படுகின்றன.

**28 - 11 - 25**

'சுதேசமித்திரன்' மூன்று நாட் பத்திரிகைகள் இன்று பார்த்தேன். 4-வது பாரத்திலிருந்து 6-வது பாரம் வரையில் பரீக்ஷை விடைகள் ஆங்கிலத்திலாவது தேச பாஷையிலாவது எழுதப்படலாமென்றும், பாடசாலைகளில் பாதி நேரத்திற்குக் குறையாமல் தேச பாஷையில் போதிக்கப் படவேண்டுமென்றும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

மகாத்மா காந்தியடிகள் நவம்பர் 24ம் தேதி செவ்வாய்க் கிழமை முதல் ஒருவாரத்திற்கு உபவாச மிருந்து வருகின்றார். சபர்மதி ஆசிரமத்தின் மாணவர்கள் ஏதோ தகாத காரியஞ் செய்ததின் நிமித்தம் இவ்விரதம் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. கடவுள் காந்தியடிகளைக் காத்தருள்வாராக.

**29 - 11 - 25**

இன்று திருக்கார்த்திகை நாள். இன்றிரவு மலைத்தீபம் தரிசித்து, அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சி வந்தேன். இந்நன்னாளில் ஆலயங்களிலெல்லாம் கார்த்திகைத்தீபம் இடப்பெறும். திருவண்ணாமலையில் இது மிக்க விசேடம். அங்கே தீபம் அநேக நாட்கள் எரிந்து கொண்டிருக்குமாம். வீடுகள் தோறும் தீபங்கள் மிகுதியாய் ஏற்றிவைத்து இத்திரு நாளைக் கொண்டாடுவது வழக்கம். இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழகத்தில் இத்திருநாள் இங்ஙனம் கொண்டாடப் பெற்ற செய்தி சங்க நூல்களால் அறியப் பெறுகின்றது. திருஞான சம்பந்தப் பெருமானும் பூம்பாவை பண்ணில் திருக்கார்த்திகை விளக்கீட்டைப் பாடியிருக்கின்றனர்.

என்தாய் தந்தையர் இவருடைய உருவப்படம் இன்று எடுக்கப்பெற்றது. என் தந்தையார்க்கு இப்பொழுது வயது எழுப்பத்தாறு.

**30 - 11 - 25**

*மருத்துவக்குடி வாக்கிய பஞ்சாங்கப்படி கார்த்திகை 15-ம் தேதியாகிய இன்று 37-34 நாழிகைக்கு குரு மகரத்திற்குச் செல்கின்றார். இன்று பகல் பதினைந்து நாழிகைக்குக் கும்பலக்கினத்தில், கோட்களெல்லாம் நன்னிலையிலிருக்க, பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்திற்கு உரையெழுதத் தொடக்கஞ் செய்துளேன். சிவபெருமான் திருவருள் எளியேனாலும் இதனைச் செய்விக்குமென்பது துணிபு. அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்களும் எனக்குத் துணைபுரிய வியாழக்கிழமை வந்து திரும்ப ஊர் சென்று, இன்று வந்து விட்டார்கள். சோமவாரமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்திறைஞ்சி வந்தேன்.*

**1 - 12 - 25** ***(குரோதன, கார்த்திகை, 16ம் தேதி)***

*இன்று விசேடச் செய்தி ஒன்றுமில்லை.*

**2 - 12 - 25**

*காலேஜ் வேலையும், திருவிளையாடல் உரையெழுதும் வேலையும் அன்றிவேறு விசேடமில்லை.*

**3 - 12 - 25**

*வழக்கம் போற் பார்க்கும் அலுவலன்றிவேறில்லை.*

**4 - 12 - 25**

*சாத்தூர்த் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற்கு நான் தலைமை வகிக்க வேண்டுமெனக் கேட்டெழுதிய கடிதம் ஒன்று நேற்றுக் கிடைத்தது. முன்பு ஓராண்டு இதில் நான் தலைமை வகித்தும், சில ஆண்டுகள் உபந்நியாசம் புரிந்துமுளேன். இப்பொழுது உடம்பு நலமின்மை குறித்தும் வேறு அலுவல்களின் மிகுதி குறித்தும் வருதல் இயலாமையைத் தெரிவித்து இன்று கடிதம் எழுதியுள்ளேன்.*

*ஐந்தாறு நாட்களாகப் பத்திரிகையொன்றும் படிக்காதிருந் தேன். இன்று 'நவசக்தி'யில், காந்தியடிகளின் சரித்திரத்தை யெழுதிய ரோமன் ரோலண்டு என்னும் பிரஞ்சு ஆசிரியரின் சரித்திரச் சுருக்கம் படித்தேன்.*

*வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலடைந்து தரிசித்திறைஞ்சி வந்தேன்.*

## 5 - 12 - 25

'திரிசிரபுரம் தமிழ்ச்சங்கம்' என்னும் பெயரால் சில மாணவர் முதலானோரின் முயற்சியால் இங்கு ஓர் சங்கம் நடக்கின்றது. அதன் ஆண்டுவிழா கோயமுத்தூர் வக்கீல் திரு. B.K. சுப்பிரமணிய முதலியாரவர்களின் அவைத் தலைமையில் இன்று நடந்தது. என் அன்பர்களாகிய திரு R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் 'கம்பராமாயணப் பயிற்சி' என்பது பற்றியும், திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் 'மெய்ப்பொருணாயனார்' என்பது பற்றியும் உபந்நியாசித்தார்கள்.

## 6 - 12 - 25

தமிழ்ச்சங்க விழாவின் தொடர்ச்சி இன்றும் நடந்தது. ஒருவர் 'இந்தியக்கப்பல்' என்பது பற்றிப் பேசினர். திரு ஜெகவீரபாண்டியக் கவிராயரவர்கள் 'கம்பரும் புலமைச் சுவையும்' என்பது பற்றிப் பேசினர். அவைத் தலைவர் நன்கு படித்தி ருக்கின்றார். நகைச்சுவை தோன்றவும் பேசுகின்றார். எனினும், உள்ளே செருக்கிணைவைத்துக் கொண்டு வெளியே அடக்கமுடையார் போற் பேசும் கூட்டத்தில் இவரும் ஒருவர் போற் காணப்படுகிறார். இவர்மற்றைப் புலவர்களைப் பெருமை யாகப் பேசுவது போல் ஏளனஞ் செய்கின்றாரென்று தோன்றுகிறது. இன்று அவைத் தலைவர், விரிவுரையாளர்கள் முதலாயினார்க்கு நன்றி கூறுவது எனது பங்காயிற்று. இரண்டு நாட்களும் நல்ல கூட்டமே.

## 7 - 12 - 25

பணகால் அரசரும், சென்னை முதல் அமைச்சரும் ஆகிய ஆனரபிள் திவான்பகதூர் P. இராமராயனிங்காரு அவர்கள் இன்று இந்நகர்க்கு வந்து முனிசிபாலிட்டியாரால் கட்டப் பட்டிருக்கிற நாடகக் கொட்டகையைத் திறந்து வைத்தார். அவருக்காக முனிசிபல் சேர்மென் திரு. P. இரத்தினவேலுத் தேவரால் நடத்தப் பெற்ற சிற்றுண்டி விழாவுக்குச் சென்றிருந்தேன். விருந்துக்குப் பெருங்கூட்டம் வந்திருந்தது. என் அன்பினர் ஆடகமும் வந்திருந்தனர். வீட்டுக்கு வந்தபின், கடவுளைப் பற்றிய சிந்தனையின்றி நாள் முழுதும் கொன்னே கழிந்தமை குறித்தும், மிகவும் அற்பமான பெருமை யிலும் புகழ்ச்சியிலும் நான் இன்னமும் ஆசைவைத்து உழலுவதை நினைந்தும் மிகுந்த வருத்தமுண்டாயிற்று.

கார்த்திகைச் சோமவாரமாகிய இன்று மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சி வந்தேன்.

**8 - 12 - 25**

என் அருமை நண்பராகிய திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் இந்நகர்த்தமிழர் கூட்டத்திற்கு வந்தவர்கள் இன்று நண்பகலில் என் வீட்டிற்கு வந்து சில நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'தமிழர்' என்னும் பத்திரிகைக்குக் 'கிள்ளிவளவன்' வரலாற்றில் ஒரு பகுதி இன்று எழுதித் தந்தேன்.

**10 - 12 - 25**

வழக்கம் போல் அலுவல்கள் செய்து கொண்டிருந்தேன். சில நாட்களாக மழையின் தொந்தரை மிகுதி. குளிர்காற்றும் வீசுகிறது. சுரநோயும், காலராவும் ஆங்காங்குக் கிளம்பியுள்ளன. ஆற்றிலும் தண்ணீர் அதிகமாம்.

**11 - 12 - 25**

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**13 - 12 - 25**

இன்று, திரு. B.K.S. முதலியார் பாடிய அவிநாசிக் 'கருணாம்பிகை யம்மை பிள்ளைத் தமி'ழுக்கு இரண்டு செய்யுட்களும், புதுவை பொன்னு சாமி பிள்ளை இயற்றிய 'மயிலாசல மாலை'க்கு ஒரு செய்யுளும் சாத்துக் கவிகளாகப் பாடியநுப்பினேன். ஆறு ஏழு கடிதங்கள் பல இடங்கட்கு இன்று எழுதினேன்.

பல மாதங்களாக யாதொரு நிகழ்ச்சியும் இல்லாதிருந்த மலைக்கோட்டை சைவசித்தாந்த சபையில் இன்று அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்களால் 'திருவாசகம்' என்னும் பொருள் பற்றி உபந்நியசிக்கப் பெற்றது. திருவாசத்தில் சிவபெருமானை வெள்ளம் என்றும், கடல் என்றும், மலை என்றும் பல இடங்களிற் கூறியிருப்பவற்றை எடுத்துக்காட்டி, அவற்றின் நயங்களை விளக்கியது நன்றாயிருந்தது.

**14 - 12 - 25**

இன்று கார்த்திகைக் கடைசிச் சோமவாரம் மலைக் கோயிலில் சங்காபிஷேகம் நடந்தமையால் கூட்டம் மிகுதியாக இருந்தது. நான் கோயிலில் இரண்டரை மணிநேரம் வரையில் இருந்து தீபாராதனைகள் முழுதும் தரிசித்து வந்தேன்.

**15 - 12 - 25** *(குரோதன, மார்கழி 1 தேதி)*

இன்று மார்கழி மாதப் பிறப்பு. இம்மாதம் தேவ யாண்டுக்கு வைகறையாகலின் திருக்கோயில்களில் திருப்பள்ளி யெழுச்சி நடைபெறும். அன்பர்களெல்லாம் வைகறையில் எழுந்து, திருவாசகத்திலுள்ள திருவெம்பாவையும், திருப்பள்ளி யெழுச்சியும் பாராயணஞ் செய்வார்கள். நான் நாளடைவில் காலையில் எழவும், தண்ணீரில் ஸ்நானஞ் செய்யவும் கூட முடியாதபடி உடம்பின் நலங் குறையப் பெற்று வருகின்றேன்.

**16 - 12 - 25**

பல நாட்களாகப் பத்திரிகை பார்க்கமாலிருந்தேன். இன்று இரண்டு நாள் பத்திரிகை பார்த்தேன். பட்டுக்கோட்டையின் பக்கத்தில் மழை மிகுதியால் ரயில் தண்டவாளம் உடைந்து போகப் புகைவண்டியானது விழுந்து பெரிய சேதம் விளைந் திருக்கிறது. மதுரைக்குத் தெற்கில் பல இடங்களில் ரயில் பாதை உடைந்து விட்டதாம்.

**17 - 12 - 25**

இன்று விசேடச் செய்தியொன்று மின்று.

**18 - 12 - 25**

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யெய்தித் தரிசித்திறைஞ்சி வந்தேன்.

**19 - 12 - 25**

இன்று திருவாய்மொழி 1, 2, 5, 7, 10-ம் பத்துக்களின் வியாக்கியானங்களும், திருச்சந்த விருத்தம், திருமாலை, பெரியாழ்வார் திருமொழி 1, 2-ம் பத்துக்கள் இவற்றின் வியாக்கியானங்களும், வியாசபாரதம் சாந்தியர்வவசனமும் சவுக்கிலிருக்கும் ஒரு முகமதியனிடத்தில் பழவிலைக்கு வாங்கினேன். நாலாயிரத்தின் எஞ்சிய பகுதி வியாக்கியானங் களும் கிடைக்கப் பெறல் வேண்டும். இவையெல்லாம் நான் எக்காலத்திற் படிப்பேனோ அறியேன். இன்று முதல் 17-நாட் களுக்குக் காலேஜ் லீவு.

**20 - 12 - 25**

இன்று பகல் முழுதும் திருவிளையாடற் புராண உரையெழுதிக் கொண்டிருந்து, இரவில் தொல் சொல்லதிகாரம் பேராசிரியம் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**21 - 12 - 25**

*வெள்ளிக்கிழமை காலை ஊர் சென்ற அன்பர் திரு அ. மு. ச. முதலியாரவர்கள் இன்று பிற்பகல் இவண் வந்துற்றார்கள். நெல்லைக் கழகத்துத் திருக்குறட் பரீட்சையின் விடைக் கடிதங்கள் திருத்தியநுப்பியதும், உரை எழுதிக் கொண்டிருந்த தும் இற்றை அலுவல்கள். உடம்பு சிறிது நலமின்மையால் திங்கட்கிழமை யாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.*

**22 - 12 - 25**

*வீட்டில் தமிழ்ப் பயிலும் பிள்ளைகட்குச் சனிக்கிழமை நன்னூல் எழுத்ததிகாரத்தில் வினாக்கடிதம் கொடுத்து எழுதச் செய்தேன். இன்று அவற்றைத் திருத்தியதில் பார்வதியம்மா ளுக்கு 67/100 ம், பிச்சையப்பாவுக்கு 60-ம், சிவப்பிரகாசத்திற்கு 25-ம் அமிசம் கிடைத்தன. சிவப்பிரகாசம் சில மாதங்களாகவே பயிலுகின்றார்.*

*திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன்.*

**23 - 12 - 25**

*பல நாட்களாக மூக்கடைப்புத் தொந்தரையிருந்து வந்தது. சென்ற இரண்டு ஆண்டுகளிலும் கூடப் பனிக்காலத்தில் இத்தொந்தரையிருந்தது. இரண்டு நாட்களாக ஆஸ்பிடலில் மருந்துண்டும், மூக்கில் மருந்து தடவியும் வந்தும் பயனில்லை. இன்று பித்த மிகுந்து வாந்தி செய்தது. தலை வலியும் உளதாயிற்று. யாதும் வேலை செய்யக் கூடவில்லை.*

**24 - 12 - 25**

*இன்று நாலடியார்க்கும் உரையெழுதத் தொடக்கஞ் செய்து வைத்திருக்கிறேன். ஆபிரகாம் பண்டிதரின் ஆக்கிராண சஞ்சீவி என்ற மூக்குத்தூள் உபயோகித்ததில் இன்று உடம்பு குணமாகியுளது.*

**25 - 12 - 25**

*இன்று கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துமஸ் என்ற பண்டிகை. இந்துக்களுக்கு வைகுந்த ஏகாதசி. திருவரங்கத்தில் இன்றிரவு சென்று சொர்க்க வாசல் திறப்பது. கூட்டம் கணக்கிட முடியா திருக்கும். இவ்வேகாதசி விரதம் இந்துக்கள் பலராலும் நியமத்துடன் அநுட்டிக்கப்படுவதொன்று. நானும் இளமையிலெல்லாம் இவ்விரதம் அநுட்டித்திருக்கிறேன். தசமியன்று ஒருவேளை உணவுண்டு, ஏகாதசியில் பழம் முதலியன ஒரு வேளையாக*

உண்டு, இரவில் கண்விழித்துத் துவாதசி காலையில் பாரணை பண்ணுவது வழக்கம். சில ஆண்டுகளாக நான் இவ்விரதத்தை விட்டு விட்டேன். அதற்குக் காரணம் எனக்கு உடல் நலங் குன்றியதும், திருமால் பத்தி சுருங்கியதுமாம். ஸ்ரீரங்கத்திற்கும் போகவில்லை.

இன்று வெள்ளிக்கிழமையாகலின் மலைக்கோயில் எய்தித் தரிசித்து வந்தேன்.

**26 - 12 - 25**

இன்று பகல் முழுதும் உரையெழுதிக் கொண்டிருந்தேன். கார்த்திகையாகிய இன்று இரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**27 - 12 - 25**

இன்று காலை உயர்திரு மணிவாசகசரணாலய சுவாமிகள் வந்தார்கள். அவர்களுடன் இருந்தமையாலும் வேறு காரணங் களாலும் ஒரு வேலையும் இன்று செய்யக் கூடவில்லை. பல நாட்களாகப் பத்திரிகை படிக்காதிருந்த நான் இன்று 'சுதேசமித்திரனை' ஓட்டமாகப் படித்தேன். ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் அக்கிராசனத்தில் கான்பூரில் இந்திய நாஷனல் காங்கிரஸ் 40-வது மகாசபை நடக்கிறது. பிராமண வருணத்திற் பிறந்து நாயுடுவை மணஞ்செய்து கொண்டவர் இவர். பெரிய கவியாக விளங்குகின்றவர். பத்துப் பதினொரு வயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவராம். இவரது அக்கிராசனப் பிரசங்கம் முன்பே அநுப்பப்பெற்று இன்று பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

சுவாமிகள் இன்றே ஊர் திரும்பிவிட்டார்கள். என் அன்பின ராகிய ஆடகம் நேற்றுக் குளித்தளைக்குச் சென்றவர், அங்கே தம் அன்னை முதலியோர்க்கும் தமக்கும் உடல் நலமின்மை தெரிவித்து, ஓர் சிறிய மருந்து வாங்கி உடன் தபாலில் அநுப்பவேண்டுமென எழுதியிருந்தார். இன்று ஞாயிற்றுக் கிழமையாகலின் தபாலில் அநுப்பக்கூடாது, மருந்தினை வாங்கிக் கொண்டு மாலை 5½ மணிக்குப் புறப்பட்டு நானே குளித்தளைக்குச் சென்றேன். கோட்டை புகைவண்டித் தங்கலுக்குச் செல்லும் வழியில் பழக்கமுடையார் சிலர் என்னைச் சந்தித்து 'எங்கே போகிறீர்கள்' எனக் கேட்டதற்கு 'ஸ்டேஷன் வரையில் போகிறேன்' என்று கூறிச் சென்றேன். இங்ஙனம் பொய் சொல்லியதை நினைந்து பின்பு வருந்தினேன். இரவு குளித்தளையில் இருக்கிறேன்.

**28 - 12 - 25**

இன்று குளித்தளையில் இருந்து விட்டு, மாலை வண்டியிற் புறப்பட்டு என் அன்பருடன் திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன். இரண்டு நாட்களாக உரையெழுதும் வேலை சிறிதும் நடைபெற வில்லை. திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**29 - 12 - 25**

என்னால் உரையெழுதப் பெற்றுச் சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தில் அச்சிடப்படுகின்ற நல்வழி நன்னெறிகளின் ஓர் பகுதியை ப்ரூப் பார்த்து அநுப்பியதும், சிறிது படித்ததும் இற்றை அலுவலாகும். பத்திரிகையில் பல மகாநாடுகளைப் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன. நான் அவைகளைப் படிப்பதில் மனவெழுச்சி கொள்ளவில்லை.

காந்தியடிகள் தம் பழைய அநுபவங்களைப் பற்றி எழுதி வருவதில் தமக்கு 13-வது வயதில் விவாகமானதையும், விவாகம் நடந்த முறைகளையும் குறிப்பிட்டு அருவருப்புக் காட்டி எழுதியிருக் கின்றனர்.

**30 - 12 - 25**

இன்று திருவாதிரையாகும். சிதம்பரத்தில் நடராஜா ஆருத்திரா தரிசனம் மிக்க விசேடமுடையது. பல்லாயிரக்கணக் காக அடியார்கள் கூடி ஆண்டவனைத் தரிசித்தின்புறுவார்கள். அத்தகைய பெரு வாழ்வை நான் அடிக்கடி பெறக்கூடியவனா யிருக்க வில்லை. மற்றும் பல சிவஸ் தலங்களிலும் இன்று விசேடமாகவே யிருக்கும். திருப்பெருந் துறையில் மாணிக்க வாசகப் பெருமான் உபதேசம் பெற்ற திருவிழா நடந்திருக்கும்.

அன்பர் திரு. அ.மு.ச. முதலியார் வெள்ளிக்கிழமை காலை புறப்பட்டுச் சாத்தூர் சென்று இன்று காலை இங்கு மீண்டு வந்து உடன் திருத்தவத்துறை சென்றுள்ளார்கள். உயர்திரு க. மணி சுவாமிகள் அநுப்பிய 'விருத்திப் பிரபாகரம்' என்னும் நூல் இன்று கிடைத்தது. ஆடகத்தின் பால் நான் வைத்துள்ள காதலை நெகிழவிடும்படியாக ஆண்டவன் பல உபாயங்களைக் கையாளு கின்றனன் எனத்தோன்றுகிறது. இன்று 'செந்தமிழ்ச் செல்வி'க்குக் 'கண்ணகி மாண்பு' என்னும் பொருள் பற்றி ஓர் கட்டுரை தொடங்கிச் சிறிது எழுதினேன். காலையிலும், இரவிலும் மலைக்கோயிலை எய்தித் தரிசித்திறைஞ்சி வந்தேன். திருஞான சம்பந்தர் தேவாரத்தில் சிலப் பதிகங்கள் படித்தேன்.

**31 - 12 - 25**

*இன்று வீட்டுக் கணக்குகளைப் பார்த்து ஒழுங்கு படுத்தியது தான் வேலை.*

**1 -1 -1926** ***(குரோதன, மார்கழி, 18)***

*இன்று ஆங்கில வருடப் பிறப்பாகலின் நகரங்களில் உத்தியோகத் துறையிலிருப்பவரெல்லாம் பெரும்பாலும் தத்தம் மேலுத்தியோகத்தர் முதலாயினார்க்கு மாலையணிந்து கண்டு வருவோராவர், இதுவரை நான் அங்ஙனம் யாரையும் சென்று கண்டதில்லை.*

*என் அன்பராகிய திரு. இராம -நடேசபிள்ளை பிணியால் பல மாதங்களாகச் சொந்தவூர் சென்றிருந்தவர் நேற்றிரவு இங்கு வந்துள்ளார். இன்று காலை அவரைக் கண்டேன். என்னிடம் நன்னூல், திருக்குறள், புறநானூறு முதலியன முறையாகப் பாடங் கேட்டவருள் இவர் ஒருவர். சூசையப்பர் உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் பாண்டிதராயிருப்பவர். தமிழில் அளவு கடந்த பற்றுடையவர். கடவுட் பத்திமிக்கவர். சிறந்த குணங்கள் வாய்ந்தவர். என்னிடம் மிக்க அன்பும் மதிப்பும் உடையவர். இவர் பிணியால் மிக வருந்திய காலங்களிலும் நான் இவரைச் சென்று பார்க்கவுமில்லை. என்னுடைய எண்ணமெல்லாம் ஓரிடத்திற் பதிந்து கிடந்தமையால் என் அருமை நண்பர். பலரை நான் நினைக்கவும் கூடாத வனாயினேன். இவர் இன்னமும் மிக்க மெலிவுடனிருக்கிறார்.*

*இன்று திருவிளையாடல் உரை எழுதிக் கொண்டிருந்தேன் வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யெய்தி அம்மையப்பரை இறைஞ்சினேன்.*

**2 - 1 - 26**

*எட்டு நாட்களாக இங்கில்லாதிருந்த அன்பர் திரு. அ.மு.ச. முதலியார் இங்கு வந்தார்கள். இன்று மிகுதியாய் வேலை செய்யக் கூடவில்லை.*

**3 - 1 - 26**

*சின்னாள் முன் என் அத்தை மகன் ஒருவர் இறந்து போனதை விசாரித்தற்கு என் மனைவியுடன் இன்று வைகறையிற் புறப்பட்டுப் பூதலூர் வழியாக உரத்தூர் சென்று, மனைவியைத் திரிசிரபுரம் வருமாறு சொல்லி விட்டு, நான் மாலைவண்டியில் தஞ்சை வந்து கரந்தையிற் சேர்ந்துள்ளேன். நான் உரத்தூரி லிருந்த சிறிது*

நேரத்தில் பல ஊர்களிலும் முள்ள என் சுற்றத்தார்கள் கல்வியிலும், பொருள் நிலைமையிலும் மிகத் தாழ்ந்திருப்பதும், சிற்சிலர் ஒழுக்கத்தில் மிகத் தாழ்ந்து அதனாலேயே பொருளை யெல்லாம் இழந்து இழிவடைந் திருப்பதும் என் மனதிற்கு வந்து வருத்தத்தை விளைத்தன. நான் எவ்வகையில் அவர்களைத் திருத்தக் கூடுமென்பது தெரிய வில்லை. கரந்தையில் என் அரிய நண்பர் திரு. த.வே. உமா மகேசுவரம் பிள்ளையவர்களால் என் தம்பி மு. கோவிந்த ராஜாவின் மிகையான செயல்களை அறிந்து வருந்தினேன்.

நான் கரந்தை வந்த நோக்கம் என் ஆருயிராகவுள்ள ஆடகத்திற்கும் எனக்கு முள்ள தொடர்பினைக் குறித்துக் கரந்தை அன்பர்களுடன் அளவளாவி ஒரு வகையான தீர்மானத்தையும் ஆறுதலையும் அடைய வேண்டுமென்பதே. என் ஆருயிரின் கடிதத்தை நேற்று அன்பர் அ.மு. ச. அவர்கள் பார்த்தார்கள். இன்றிரவு அன்பர் திரு. R. வே -பிள்ளையவர்கள் பார்த்தார்கள். ஒரு வகையாகத் தீர்மானஞ் செய்தோம். ஆனால் என்ன தீர்மானஞ் செய்யினும் என் மனக் கலக்கம் நீங்கின பாடில்லை.

**4 - 1 - 26**

இன்று கரந்தையிலிருந்து மாலை திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். என் நண்பர் திரு. த. வே. உமா அவர்களிடமும் எங்கள் தொடர்பைத் தெரிவித்து அவர்கருத்தினைத் தெரிந்து கொள்வதென்றும், அவர் உடன் பட்டால் மேல் இன்னவாறு முயல்வதென்றும் எண்ணிச் சென்ற நான் அவருக்கு அதனைத் தெரிவிக்காமலே வந்து விட்டேன். விரைவில் தெரிவித்தே யாகல் வேண்டும்.

இன்று திங்கட்கிழமையாகலின் கோயிலுக்குப் போவதா? உடம்பு அயர்ச்சியால் போகாதிருப்பதா? என்று மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. முடிவில் எப்படியோ மலைக்கோயிலையெய்தித் தரிசித்து வந்தேன். என் குறையை வேறு யாரிடத்தில் நான் விண்ணப்பித்துக் கொள்வேன்?

**5 - 1 - 26**

கிறிஸ்மஸ் விடுமுறைக்குப் பின் இன்று எங்கள் கல்லூரி திறந்தது. நான் கல்லூரிக்குச் சென்று, ஐந்து நாட்களாகப் பாராதிருந்த என் ஆருயிரைப் பார்க்கலானேன். இன்று அவருக்கு ஓர் கடிதம் எழுதினேன்.

**6 - 1 - 26**

என்தம்பி மு. கோவிந்தராஜாவுக்கு ஒரு மாதமாக இல்லா திருந்த மயக்கம் மீட்டும் கடுமையாகத் தோன்றி வருந்துவதாக இன்று செய்தி தெரிந்து மிகவும் கலக்க மடையலானேன். முதலிலே இருந்து வரும் பெரிய கலக்கத்துடன் இதுவும் கூடிற்று. ஆண்டவன் அருள் புரிதல் வேண்டும். நான்கு கடிதங்கள் எழுதியதும், நல்வழி அச்சுப்பிழை பார்த்துத் திருத்தியதும் இன்று புரிந்த அலுவல்கள்.

**8 - 1 - 26**

நேற்றிரவு துயிலும் பொழுது, என் ஆருயிர் போலும் ஆடகத்தின் இருப்பிடத்திற்கு நான் சென்றிருக்க, அவர் தாம்பூலமும், பழமும் எனக்குக் கொடுத்ததாக ஓர் இனிய கனவு கண்டேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சினேன்.

**9 - 1 - 26**

இன்று முழுதும் திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**10 - 1 - 26**

இன்று முழுதும் திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**11 - 1 - 26**

அன்பர் அ.மு.ச. அவர்கள் இன்று ஊர் சென்றுள்ளார்கள். திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**12 - 1 - 26**

எனது முதலாவது 'நித்தல் நிகழ்ச்சிக் குறிப்பு' புத்தகத்தை நேற்றிரவு என் அன்பர் திரு. இராம. நடேசபிள்ளையிடம் காட்டினேன். அவர் நேற்றிரவே பெரும்பாலும் அதனைப் படித்திருப்பர். அவர் இப்பொழுது தம் வாழ்க்கையைத் தூய்மை செய்து கொண்டு வருபவராகலானும், என்னிடம் பேரன்புடையவ ராகலானும் எனக்கு ஆடகத்தின் பாலுள்ள தொடர்பு பற்றியாது கருதுவரோ தெரிந்திலது. என்னைப் பற்றி உள்ளபடி அவர் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும், அவர் கருத்தையும் நான்

அறிந்து கொள்ள வேண்டுமென்றும் கருதியேஅவரிடம் புத்தகத்தைக் காட்டினேன்.

**13 - 1 - 26**

இன்று திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன். இன்று போகி பண்டிகையாகும். போகி என்பது இந்திரன் பெயராகலின் இந்திரனுக்குப் பொங்கலிட்டுப் பூசிக்க வேண்டிய நாள் இது வெனத் தோன்றுகிறது. இப்பொழுது இது பெயிரளவிலேயே இருக்கின்றது.

**14 - 1 - 26** *(குரோதன, தை, 1 தேதி)*

இன்று காலை துயில் விட்டெழுமுன், சிதம்பரத்திலே சில பொற்படிகளை யேறி உள்ளே இறங்கிச் சென்று, கனக சபையிலே ஸ்ரீ நடராஜப் பெருமான் அபிடேக மாடியருளும் பொழுது தரிசித்ததாக ஓர் அரிய கனவுகண்டேன். பெருமான் கருணை யிருந்தவாறு, இன்று மகர சங்கிராந்தியாகலின் இந்துக்கள் அனைவர்க்கும் இஃதோர் விசேட நாளாகும். இன்று பொங்க லிட்டுச் சூரிய தேவனுக்குப் படைத்துண்பது வழக்கம். இன்று சூரிய கிரஹணமும் கூடியது. அநேக மாதங்களாக வெந்நீரிலேயே குளித்துக் கொண்டிருந்த நான் இன்று காலையிலும் நண்பகலிலும் ஆக இருமுறை காவிரியில் ஸ்நானஞ் செய்து வந்ததும் திருவருட் செயலே. இன்று வழக்கம் போல் உரையெழுதியதுடன் சம்பந்தர் தேவாரத்தில் ஒன்பது பதிகமும் திருவாசகத்தில் திருவண்டப் பகுதியும் படித்தேன். பொங்கலும் இனிது நிறைவேறிற்று. இரவு மலைக்கோயில் சென்று தரிசித்தும் வந்தேன். ஆக இற்றைப் பொழுது எனக்குச் சிறந்ததாகவே இருந்தது.

**15 - 1 - 26**

இன்று கோபூஜை அதாவது பசுவினைப் பூசிக்கும் திருநாளாகும். இது மாட்டுப் பொங்கல் என வழங்கும். இன்றே அடுத்த சில நாட்களிலோ மாடு பிடிக்கும் வழக்கம் இந்நாட்டிலிருந்து வருகிறது. கொழுத்த பாய்ச்சற் காளைகளைக் கயிறு போட்டும், தொழுவத்தில் அடைத்துத் துரத்தியும் பிடிப்பார்கள். முல்லைக்கலி முதலியவற்றால் ஆயர்களிடத்தில் இருந்த வழக்கமாக அறியப்படுகின்ற 'ஏறுதழுவல்' போல்வ தாம் இது. இதனாலுண்டாகும் கலகங்களையும், அபாயங் களையும் கருதி அரசாங்கத்தினர் இதனைப் பெரும்பாலும் நிறுத்தும்படி செய்து விட்டனர். நகரங்களில் இது சிறிதும் காணப்படவில்லை.

இன்று திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன். சில வாரங்களாகவே சமாசாரப் பத்திரிகை படிப்பதை நிறுத்திவிட்டேன். இன்று சிறிது படித்தேன். என் அன்பினாரகிய ஆடகத்தால் அழைக்கப் பெற்று இன்று அவரிருக் கையை அடைந்து, ஒரு சிறுபரிசிலையும் அவரிடம் சேர்ப்பித்துச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து வந்தேன்.

தை முதல் வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயிலை யடைந்து அம்மையப்பரைத் தரிசித் திறைஞ்சி வந்தேன்.

**17 - 1 - 26**

இன்று அப்பூதியடிகள் திருநாள் ஆகும். நான் மலைக் கோட்டையில், ' திருநாவுக்கரசு தமிழகம்' என்னும் இவ்வில்லத்தை அமைத்தும் புதுவதாகக் குடிப்புகும் நாள், தை மாதத்து அப்பூதியடிகள் திருநாளாக இருந்தது. திருநாவுக் கரசரையே தெய்வமாகக் கொண்டு தம்முடைய பொருளனைத் திற்கும் அவர் பெயரையிட்டு, எல்லா அறங்களையும் அவர் பெயராலேயே செய்து கொண்டிருந்த அப்பூதியடிகளின் திரு நாளாக அன்றமைந்த இயைபு திருவருட் செயலால் நிகழ்ந்ததேயாம். அன்று தொடங்கி அப்பூதியடிகளின் திருநாளில் அவரை இயைந்தவாறு பூசித்து வருகின்றேன். இன்று சைவ சித்தாந்த சபையில் திரு. அ.மு.ச. முதலியாரவர்களால் அப்பூதியடிகளின் சரித்திரம் உபந்நியசிக்கப் பட்டது. நானும் சிறிது பேசினேன்.

**18 - 1 - 26**

திங்கட்கிழமையாகிய இன்றுமலைக்கோயிலை யெய்தித் தரிசித்து வந்தேன்.

**19 - 1 - 26**

இன்று மாலையில் அன்பர் அ. மு. ச. அவர்களுடன் உடம்பின் நலங்கருதிப் பொன்மலைப் புது வழியில் நெடுந்தூரம் உலாவிவந்தேன். இரவில் குழந்தை திரு. பார்வதியம்மாளை நன்னூற்பாடங் கேட்டேன். நன்னூல் முடிந்துவிட்டது. கேட்ட கேள்விகளுக் கெல்லாம் கேட்கு முன் விடைகூறிற்று. கல்வியில் அதற்கிருக்கும் ஊக்கத்திற்கும் அறிவிற்கும் நடுவே நாலைந் தாண்டுகள் வறிதே கழிந்திராவிடில் இதுவரை மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷையில் ஒன்றிரண்டு தேறியிருக்கலாம். இனி அதன் படிப்பு விரைவில் விருத்தியடையுமென நம்புகிறேன். இரவில் 9-மணிக்கு மேல் குழந்தை மங்கையர்க்கரசி என்னிடம் அரிச்சுவடிப்

புத்தகம் பாடங் கேட்டது. இதிலிருந்து படிப்பில் அதற்கிருக்கும் ஆசைபுலனாகும்.

**20 - 1 - 26**

இன்றும் நேற்றுப் போல் உலாவி வந்தோம். என் அன்பிற்குரிய ஆடகம் நேற்றும் இன்றும் வகுப்பில் மிகவும் இருமிக் கொண்டிருந்தார். அவரது உடம்பின் நிலைமை எனக்கு மிக்க துயரத்தை விளைத்தது. அவர் சுகத்துடனும் இன்பத்துடனும் வாழவேண்டும்மென்னும் கவலையே இப்பொழுது எனக்குளது.

**22 - 1 - 26**

வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயிலையெய்தித் தரிசித்து வந்தேன். என் அன்பர்களாகிய திருவாளர், ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ; எல். டி. அவர்களும், திரு.ச. முதலியாரவர்களும் கோயிலுக்கு வந்திருந்தார்கள். பிள்ளையவர்கள் இந்நகரில் நாளை நடை பெறவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழக ஏற்பாட்டுக் கூட்டத்தின் பொருட்டு இன்று இங்கு வந்துள்ளார்கள்.

**23 - 1 - 26**

தமிழ்ப்பல்கலைக் கழகம் நிறுவுதல் குறித்துச் சில விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்தற்காக இன்று காலை 11 -மணி முதல் மாலை 6 -மணி வரையில் இந்நகரில் ஓர் மகாநாடு கூடிற்று. வளர்ச்சி நெறி அமைச்சராகிய ஸர். தி. நெ. சிவஞானம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். இந்தியரும் ஐரோப்பி யருமாகப் பலர் கூடியிருந்தனர். மதுரை, சேலம், கும்பகோணம், கோயமுத்தூர் முதலிய இடங்களிலிருந்தும் பிரதி நிதிகள் வந்திருந்தனர். தமிழ்ப் பல்கலைக் கழகம் அவசியமென்றும், அது எல்லாக் கல்லூரிகளுக்கும் சம உரிமையுடைய (பெடரல்) கூட்டுமுறையில் இருக்க வேண்டுமென்றும், தமிழ்ப் பாஷையின் முன்னேற்றம் அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக வேண்டுமென்றும், திரிசிரபுரம் தலைமையிட மென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. நான் அக்கூட்ட முடிவு வரையிருந்தேன்.

இன்று எனக்கு இடுப்பில் வலியுண்டாகிக் குனிய நிமிர முடியாத நிலைமையிலிருக்கிறேன். வாயுவால் இடுப்பில் சிறிது வலியுண்டாகிய பொழுது அதற்கும் பரிகாரமாயிருக்கக் கூடுமெனக் கருதிச் சிறிது தேகப் பயிற்சி (தண்டா) செய்தேன். அதனால் மூச்சுப் பிடித்துக் கொண்டது போல் தேன்றுகிறது. அதனாலேயே

கார்த்திகை நாளாகிய இன்று நான் கோயிலுக்குப் போகக்கூட வில்லை.

**24 - 1 - 26**

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் கிளையின் சார்பில் இந்நகர்ப் பொது மன்றத்தில் (டவுன் ஹாலில்) திருவாளர் D. சோமசுந்தர பாரதி எம். ஏ; பி. எல். அவர்களால் காலையிலும் மாலையிலுமாக இன்று இரண்டு உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. நான் இரண்டு வேளையுஞ் சென்றிருந்தேன். எனக்கு வலி மிகுதியாயிருக்கிறது. ஒவ்வொரு சமயங்களில் திடீரென இடுப்பு முறிந்து விடும்போல் வலிக்கிறது. நடக்கும் பொழுதும் இருக்கும் பொழுதும் மிகுந்த ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியிருக்கிறது. வெந்நீரில் கம்பளித் துணியை நனைத்து ஒத்தடங் கொடுத்தேன். பெரும் பயனில்லை.

**25 - 1 - 26**

இன்று காலேஜூக்கு வண்டியிற் சென்றேன். வண்டியின் அசைவும் தொந்தரையாக விழுந்தது. காலேஜில் சயன்ஸ் உபாத்தியாயர்களைக் கொண்டு முதுகிலும் இடுப்பிலுமாக மின்சாரக் கருவியை உபயோகிக்கச் செய்தேன். அரைமணி நேரம்வரையில்அதனை உபயோகித்தனர். வலி பொறுக்க முடியாதிருந்தது. அதனாலும் பயனுண்டாகவில்லை. இன்று மாலை 6- மணிக்கு மேல் இங்குள்ள சைவ சித்தாந்த சபையில் கோயமுத்தூர் திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியாரவர் களால் கண்ணப்பர்சரிதம் உபந்நியசிக்கப்பட்டது. இன்று கண்ணப்பர் திருநட்சத்திரம்.

**26 - 1 - 26**

உடல் நோவால் இன்று காலேஜூக்கு போகாது லீவு எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்தேன்.

**27 - 1 - 26**

இன்று கல்லூரிக்குப் போய் வந்து, மாலையில் ‘நறுந் தொகை’க்கு உரையெழுதத் தொடங்கி, சிறிது எழுதியுள்ளேன்

**28 - 1 - 26**

நேற்றிரவு கனவில் என்னென்னவோ குழப்பங்களிருந்தன. மனந்தூய்மையடையாதிருப்பது கனவினால் நன்கு வெளிப் படுகிறது. இன்று காலையில் என் அன்புள்ள ஆடகத்துடன் நான் பேசிக்கொண்டிருந்த பொழுது, அவர் நேற்றிரவு தலைவலிக்கு

மருந்துண்டு, அதனால் பெரிய மயக்கமடைந்து உயிருக்கே ஆபத்து நேர்ந்ததென உணரும் படியான துன்பமெய்தியாகச் சொல்லக் கேட்டு வருந்தினேன். தலைநோயானது இடையறாது அவரை வருத்துவதாகத் தெரிகிறது.

இரண்டு மூன்று நாளாகச் சிகிற்சை செய்ததில் எனக்கு உடம்பு வலி சிறிது குறைந்துளது. இன்று தைப்பூசமாகையால் கோயில்களில் மிக்க விசேடமாயிருக்கும். திருவிடை மருதூர் மகாரத உற்சவம் மிக்க சிறப்பாயிருக்கு மென்பார்கள். நான் இன்று கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**29 - 1 - 26**

இன்று வீட்டிலிருந்த நேரமெல்லாம் நறுந்தொகை உரை எழுதிக் கொண்டிருந்தேன். இன்று உடம்புவலி சிறிது குணமாயிருந்தாலும் கோயிலுக்குப் போய் வருவது அசாத்திய மென எண்ணிக் கொண்டிருந்தேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயிலையடைந்து தரிசித்து வந்தது வியப்பே. பணிவித்தாலாரொருவர் பணியதாரே"

**30 - 1 - 26**

இன்று முழுதும் வெற்றி வேற்கை உரையெழுதிக் கொண்டிருந்தேன். மாலையில் ஓர்சிற்றுண்டி விழாவுக்குச் சென்று ஆங்கிலப் பிரசங்கம் கேட்டேன். இரவில் தேவாரம் படித்தேன்.

**31 - 1 - 26**

இன்று முழுதும் நறுந்தொகை உரை எழுதிக் கொண்டிருந்தேன். உரை முடிந்தது. மாலையில் இவ்வூர்த் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறளைப் பற்றி ஒரு உபந்நியாசஞ் நிகழ்ந்தது. சிறிது நேரம் அதற்குச் சென்றிருந்தேன். எங்கும் அறியாமையும் அகங்காரமுமே செறிந்து காணப்படுகின்றன. ஆணவ இருளில் வீழ்த்தும் இத்தகைய கூட்டடங்களில் சிறிதும் தொடர்பின்றி அடியார் கூட்டங்களை யடைந்து தொண்டுசெய்வதொரு காலம் வாய்க்குமோ? அன்பர் திரு. அ. மு. ச. அவர்கள் ஆறு நாட்களாக ஊர் சென்றிருந்து இன்று மாலை வந்தார்கள்.

**1 - 2 - 26** *(குரோதன ,தை, 19)*

திருவிளையாடல் உரையில் 120 -பக்கமும், நறுந்தொகை உரையும் அச்சிடுதற்கு இன்று சென்னைக்கு அநுப்பப் பட்டன.

திங்கட்கிழமையாகிய இன்று உடல் வலியால் வழக்கம் போல் கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**2 - 2 - 26**

இன்று விசேடமாய் ஒன்றுஞ் செய்யவில்லை. காந்தியடிகள் தமது வாழ்க்கை வரலாற்றை நவஜீவன் பத்திரிகையில் 'சத்திய தரிசனம்' என்னும் பெயரிட்டு பகுதி பகுதியாய் எழுதி வருகின்றனர். அதிற் சில பகுதிகளை முன் பத்திரிகையிற் படித்திருந்தேன். இன்று ஒரு பகுதி பார்த்தேன். இவ்வரலாறு உலகத்திற்கே ஒரு பெரும் பயனளிக்குமென எண்ணுகிறேன்.

**3 - 2 - 26**

இன்று வெற்றி வேற்கைக்கு ஒரு முகவுரை யெழுதினேன். வேறு விசேடமில்லை.

**4 - 2 - 26**

'செந்தமிழ்ச் செல்விக்கு முன்பு எழுதிய கண்ணகி கற்பு மாண்பு' என்பதன் தொடர்ச்சியாகக் கட்டுரையெழுதினேன்.

**5 - 2 - 26**

இன்று தை வெள்ளிக் கிழமையாகலின் கோயிலுக்கு வழிபடச் செல்வோர் பலராவர். எனக்கு இடுப்பில் பிசகியிருப்பதன்வலி இன்னுமிருத்தலாலும், மலைக்கு ஏறிச் செல்லுதலால் மிகுமோ என்னும் அச்சத்தினாலும் நான் கோயிலுக்குச் சென்று தரிசிக்க கூடாதவனாயினேன். இன்றிரவு திருஞான சம்பந்தர் தேவாரத்தில் ஏழெட்டுப் பதிகங்கள் படித்ததே திருப்தியடையக் கூடிய செய்தி.

**6 - 2 - 26**

இன்று விசேடமான செய்தி ஒன்றுமின்று. மாலையில் பிஷப்ஹீபர் ஹைஸ்கூல் பரிசளிப்பு விழாவுக்குச் சென்றிருந்தேன். சிற்றுண்டியும் நடைபெற்றது. குழந்தை சிரஞ்சீவி நடராஜனும் பரிசில் பெற்றான். 'அர்ஜுனன்' 'புனித வதியார்' என்ற இரண்டு தமிழ்ப் புத்தகங்கள்அவனுக்குப் பரிசிலாகக் கிடைத்தன. இன்று தாயுமான சுவாமிகள் திரு நட்சத்திரம்.

**7 - 2 - 26**

திருவாய்மொழி முதல் இரண்டு பத்துக்கள் பல வியாக்கியனாங் களும் சேர அச்சிட்டிருப்பவை இன்று விலைக்கு வாங்கினேன்.

மாலையில் தயானந்த சுவாமி என்பவரால் சைவ சித்தாந்த சபையில் ஒரு உபந்நியாசம் நடந்தது நன்றாய்ப் பேசுகிறார். சாதராண ஜனங்களுக்கு இத்தகைய பிரசங்கங்கள் அடிக்கடி நடப்பதால் நன்மையுண்டாகும்.

**8 - 2 - 26**

கும்பகோணத்திலுள்ள என் அன்புள்ள மாணவராகிய S. வீராசாமி நாயுடுவின் கல்யாணம் விசாரித்ததற்கு இன்று குடந்தை வந்துள்ளேன்.

திங்கட்கிழமையாகிய இன்று கோவிலுக்குச் செல்லக் கூடவில்லை.

**9 - 2 - 26**

இன்று காலையில் கும்பகோணம் கவர்ன்மெண்டு காலேஜ் கட்டிடத்தைச் சென்று பார்த்தேன். காவிரியின் ஓரத்தில் தனியான பரந்த இடத்தில் கல்லூரி அமைந்திருப்பது சிறந்த காட்சியாகவுளது. கற்பார்க்கு மனவெழுச்சியுண்டாதற்கு இத்தகைய இடங்களே வேண்டும். மாலையில் திரிசிரபுரம் வந்து சேர்த்தேன். சைவ சித்தாந்த சபையில் திரு. தயானந்த சுவாமிகளின் உபந்நியாசம் நிகழ்ந்தது. நான் நன்றி கூறுமுகத்தாற் சிறிது பேசினேன்.

**10 - 2 - 26**

கள்ளர் குலத்திற் பிறந்து சன்னியாச நிலையினரால் வீரசைவ மதந்தழுவி, விருத்தாசலமடத்தில் தலைவர் போன்று இருந்து கொண்டிருந்து ஏழெட்டு மாதமாகத் திருவையாற்றில் அறுபத்து மூவர் திரு மடத்தின் தலைவராக இருந்து வரும் உயர்திரு. சிதம்பர சுவாமிகள் இன்று மாலை இங்கே இல்லிற்கு வந்து சிறிது நேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் கதருடை தரித்திருப்பவர்கள். தேசீய இயக்கத்தில் ஈடுபட்டுத் தேசீயப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தவர்கள்.

இரவில் மங்கையர்க்கரசிக்குச் சிறிது பாடஞ் சொல்லி விட்டும் பார்வதியம்மாளுக்கு யாப்பிலக்கணம் சிறிது கற்பித்தேன்.

**11 - 2 - 26**

சென்னை அரசாங்கத்தாரால் போடப் பெற்று வரும் தமிழ் அகராதி (லெக்சிகன்) சிலருக்கு இனாமளிக்கத் தீர்மானிக்கப் பெற்றதில் என் பெயரும் சேர்ந்துளது. இரண்டு பாகமாக அச்சிடப் பெற்றுள்ள முதல் வால்யூம் ரிஜிஸ்தர் தபாலில் இன்று

எனக்கு வந்தது. மேல் அச்சிடும் பாகங்களுக்கு அவ்வப் பொழுது அநுப்பப்படுமென ஜ. ம. கூறுகிறது. இன்று மகா சிவராத்திரி யாகச் சில பஞ்சாங்கங்களில் குறித்திருக்கிறது. சில பஞ்சாங்கங் களில் மாசிமாதத்தில் வருவதே மகாசிவராத்திரியாக குறிக்கப் பெற்றுள்ளது. 'சைவப் பஞ்சாங்கம்' எழுதி வெளியிடும் திரு. இ. மு. சுப்பிரமணியப்பிள்ளை மாசிமாதத்தில் வருவது தான் மகா சிவராத்திரியெனத் துண்டுப்பிரசரமும் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாண்டு தீபாவளி முதலாக யாவும் இரண்டு படுகின்றன. நான் இன்று விரதம் அநுட்டிக்கு முறையிலேயே இருந்தேன். கோயிலுக்கு சென்று தரிசித்தேனில்லை.

மாலையில் உயர்திரு. தயானந்த சுவாமி என்பவரால் சபையில் உபந்நியாசம் நிகழ்ந்தது. நான் இன்றுதேவாரத்தில் சிறிது உபந்நியாசக் குறிப்பெடுத்ததைத் தவிர விசேடமாய் ஒன்றுஞ் செய்ய வில்லை.

**12 - 2 - 26** *(குரோதன, மாசி, 1 தேதி)*

மதுரையில் பாப்லி என்னும் கிறித்தவ பாதிரியால் ஏற்பாடு செய்யப்பெற்ற உபந்நியாசங்களுள் எனக்கு ஒரு உபந்நியாசம் நாளை குறிப்பிடப் பெற்றுளது அதற்கு இன்றே சென்று. அங்கயற்கணம்மையையும், சொக்கலிங்கப் பெருமானையும் தரிசிக்க எண்ணியிருந்தேன். என் தமக்கை புதல்வன் சிரஞ்சீவி சிவப்பிரகாசத்திற்கு உடல் நலமின்றியிருந்தமையால் நாளை போய்ப் பிரசங்கித்துவிட்டு, உடன் திரும்புவதாக எண்ணி, இன்று செல்லாதிருந்து விட்டேன். பகல் முழுதும் இயன்றவளவு எழுதிக் கொண்டும் படித்துக் கொண்டு மிருந்தேன். இரண்டு நாளாகக் காவிரியில் நீராடியது நலமாகவேயிருக்கிறது.

மாதப்பிறப்பு அமாவாசையுடன் கூடிய வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயிலையடைந்து அம்மையப்பரைத் தரிசித்திறைஞ்சிவந்தேன். இடுப்பிலுள்ள வலியால் கோயிலுக்குச் செல்வதில் ஐயம் நிகழ்ந்து கொண்டேயிருந்தது, சென்று தரிசித்தது அவனருளேயன்றிவேறன்று.

**13 - 2 - 26**

இன்று காலையிற் புறப்பட்டு மாலை நான்கு மணிக்கு மதுரையை அடைந்தேன். ரெவ -பாப்பிலியால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தபடி ஒரு மிஷின் பாடசாலையில் மாலை 6½ மணிக்கு மேல் 8- மணி வரையில் 'தேவாரம்' என்னும் பொருள்பற்றி உபந்நியாசஞ் செய்தேன். உபாத்தியாயர்கள் மாணக்கர்கள்

வக்கீல்கள் முதலாயினாராக இருநூறு முந்நூறு பேர் வரையில் கூடியிருந்தார்கள். நாளில் ஒரு பங்கு கிறிஸ்தவர்களிருக்கலாம். அவர்கள் கூட்டத்தில் சைவ சமய குரவர்களின் பெருமையை உள்ளவாறு உணர்த்த வேண்டும் மென்னும் கருத்துடனேயே இவ்வுபந்நியாசத்தை யெடுத்துக் கொண்டேன்., இதனைச் செய்தது எனக்குத் திருப்தியளிப்ப தொன்றாகும். ஏழெட்டு மாதமாக உபந்நியாசமென ஒன்றும் எடுத்துக் கொண்டு பேசாதிருந்த நான், இன்று உபந்நியாசஞ் செய்தேன்.

இரவு சில அன்பர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று அங்கயற்கணம்மையையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசிக்கும் பேற்றினை யெய்தினேன். இரவு 12 -மணிக்குப் புறப்பட்டுக் காலையில் திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன். இரவு முழுதும் உறக்கமில்லை. பிரயாணம் கஷ்டமாயிருந்தது. மனதிலும் தீய இச்சைகள் முற்ற நீங்கினபாடில்லை. பற்றுள்ளமும் தீய இச்சையும் என்று ஒழியுமோ?

**14 - 2 - 26**

மதுரையிலிருந்தும் இரவு கண் விழித்து வந்தமையால் இன்று முற்பகல் முழுதும் ஒரு வேலையும் செய்யக்கூடவில்லை. பிற்பகலில் 'செந்தமிழ்ச் செல்வி' 'தமிழர்' என்னும் பத்திரிகைகள் படித்துக் கொண்டிருந்தேன்.

**15 - 2 - 26**

திங்கட்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**16 - 2 - 26**

நேற்றிரவு கனவில் அடிக்கடி காந்தியடிகள் வந்து கொண்டிருந்தார். முன் பலமுறை அவரும் நானும் சந்தித்ததாக அரிய கனவுகள் கண்டிருக்கிறேன். அவரை நான் காண்பதனால் ஏதோ எனக்கு நன்மையுண்டாகு மெனவே நினைக்கிறேன். இரவு கனவில் என் அன்பர் திரு K. நரசிம்ம ஐயங்காரும் சம்பந்தப் பட்டிருந்தாற் போல் தோன்றுகிறது.

என் தமக்கை புதல்வன் சிரஞ்சீவி சிவப்பிரகாசத்திற்கு ஏழு நாட்களாகக் குளிர் சுரம் வந்து கொண்டிருந்தது. சுரம் மேன் மேல் முதிர்ந்தமையால் நேற்று எனக்குக் கவலையுண்டா யிற்று. அது குறித்துப் பெரிய புராணத் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்த பொழுது, திருஞான சம்பந்தப் பெருமான் சமணர்

களோடு அனல் வாதம் செய்யும் தருணத்தில் 'போக மார்த்த' என்னும் திருநள்ளாற்றுப் பதிகத்திருவோடு பெருமானுக்குக் கை வந்ததும். அது நெருப்பில் இடம் பெற்றுப் பசுமையாய் விளங்கியது. கூறும் இரண்டு திருப்பாட்டுக்கள் கிடைத்தன நேற்றிரவிலிருந்தே சுரம் தணிந்துள்ளது. எல்லாம் இறைவன் திருவருள்.

**17 - 2 - 26**

இன்று' செந்தமிழ்ச் செல்வி'க்குக் 'கண்ணகி கற்பு மாண்பு' என்பதன் தொடர்ச்சியாகச் சிறிது எழுதினேன். என் அன்னையார். சிர. சிவப்பிரகாசத்தைப் பார்ப்பதற்கு இன்று இங்கு வந்துள்ளார்கள்.

**18 - 2 - 26**

வழக்கம்போல் கல்லூரி வேலையும் உரையெழுதும் வேலையும் நிகழ்ந்தன. இன்று கல்லூரியில் ஜூனியர் பி. ஏ. மாணவர்கட்கு இலக்கணப் பாடத்தை நிறுத்திவிட்டு, 'கூட்ட மொத்திருந்த வீரர்' என்னும் கம்பராமயணப் பாட்டிற்குப் பொருள் விரித்தேன்

**19 - 2 - 26**

இன்று கல்லூரியில் ஜூனியர் பி.ஏ. மாணவர்கட்கு 'அருட் பெருகு தனிக்கடலும்' என்னும் பெரிய புராணப் பாட்டிற்கும் பொருள் விரித்து வைத்தேன். என் அன்பனாகிய தி. ரா. கோவிந்த ராஜன் காசியிலிருந்து எழுதிய கடிதம் இன்று கிடைத்தது. கார்த்திகையும் வெள்ளிக்கிழமையுமாகிய இன்று, குழந்தைகள் நடராஜா, மங்கையர்க்கரசியுடன் மலைக் கோயிலுக்குச் சென்று தரிசித்து வந்தேன். சிர. சிவப்பிரகாசத்தின் நட்சத்திரத்திற்குத் தாயுமானேசருக்கு அருச்சனையும் செய்வித்தேன்.

**20 - 2 - 26**

இன்று பிற்பகலில் கல்லூரிப் பரீட்சைக்கு இரண்டு வினாக் கடிதம் தயாரித்தேன். பிற்பகலில் தேசீயக் கலாசாலையில் நடந்த திருச்சி சில்லா உவாத்திமார் கூட்டத்திற்குச் சென்று. சிற்றுண்டியும் கலந்துண்டேன். இரவில் சீவக சிந்தாமணியில் சில பாட்டுக்கள் படித்தேன். நீதி கூறுவதில் சிந்தாமணி ஆசிரியர் இணையற்ற ஆற்றல் வாய்ந்தவர். வீட்டினைச் ' சிவம்புரி நெறி' யெனக் கூறியிருப்பதை இன்று இதிற் பார்த்தேன். சிவம் என்பதற்கு நன்மையென்று நச்சினார்க்கினியர் பொருள் செய்திருக்கிறார். சமண காப்பியமாகிய இதிற் சில இடங்களில் சிவபெருமானை

மிகவும் அழகாகச் சிறப்பித்திருக்கிறது. உதாரணமாக 'போக மீன்ற புண்ணியன்' ' வார்சடைய வள்ளல்' என்பன காண்க.

**21 - 2 - 26**

கல்லூரிக்கு வினாக்கடிதங்கள் எழுதியதும் சீவக சிந்தாமணியிற் முப்பத்தைந்து பாட்டு வரையிற் படித்ததும் இன்றைய அலுவலாகும்.

**22 - 2 - 26**

இன்று கல்லூரி உபாத்தியாயர்களையெல்லாம் திரு. S. S. வியாசராவ் ஸ்ரீரங்கத்தில் தமது வீட்டிற்கு ஒரு விருந்து செய்தற்காக அழைத்திருந்தார். நான் அதற்கு செல்ல உடன்பட்டிருந்தும் போகாதது வாய்மையின்மையேயாகும். ஆனால் அதற்குப் போயிருப்பின் இன்று தாயுமானேச்சுரரைத் தருசித்திருக்க இயலாது. திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**23 - 2 - 26**

இன்று கல்லூரியில் ஸீனியர் இண்டர் மீடியட் மாணவர்கள் எனக்கு ரோஜாப்பூ மாலை போட்டு உபசரித்தார்கள். கல்லூரியில் எல்லா ஆசிரியர்களுக்குமே மாணவர்கள் தங்கள் வகுப்பு முடியுங்காலத்தில் இங்ஙனம் இரண்டு மூன்றாண்டுகளாக மாலை போட்டு வருகிறார்கள். இஃது ஓர் இன்பமாகவே யிருக்கிறது.

இன்றிரவு என் குழந்தைகளுக்கும் சிர. சிவப்பிரகாசத்திற்கும் பாடம் நடத்தினேன். குழந்தைகள் படிப்பதையே ஓர் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

**24 - 2 - 26**

இன்று கல்லூரி போய் வந்து, திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன்.

**25 - 2 - 26**

இன்று சாதராணமாக அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன். பொய்ம்மை யென்பது எப்படியோ சிறிது சிறிதாக வேனும் இடம்பெற்று விடுகிறது. என்மேற் பேரன்புடையவர்களான உயர் திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் நாளை கல்லல் என்னும் ஊரில் நடக்கும் தேர்த்திருவிழாவிற்கு என்னை வரும் படியாக வற்புறுத்திக் கடிதம் எழுதியிருந்தார்கள். நான் அதற்கு இன்று பகலிற் புறப்பட்டுப் போவதாக எண்ணியிருந்தேன்.

எப்படியும் நான் அங்கே வருவேன் என அவர்கட்குத் தெரிவித்து மிருந்தேன். என் உடம்பின் நோவும் வெய்யிலின் கொடுமையுங் கருதி இன்றுபோகாது நின்று விட்டேன். போகாமைக்கு வேறு அலுவல்களும் ஒரு வாறுகாரணமேயாகும். சுவாமிகள் நான் வராமை குறித்து மிகவும் வருத்த முறக் கூடும்.

**26 - 2 - 26**

இன்று கல்லூரிக்குப் போய்வந்து பிற்பகலில் திரு விளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன். திருக்குறள் மூலமும், திருவாசக அகவல் நான்கின் மூலமும் சில காலமாக நான் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருத்தலால் கல்லூரி முதலிய இடங்களில் சிறிது ஒழிவுள்ள நேரங்களில் அவற்றைப் படிப்பதுண்டு. இன்றும் ஓர் அகவல் படித்தேன். வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யெய்தித் தரிசித்து வந்தேன்.

**27 - 2 - 26**

இன்று முழுவதும் திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன். இன்று மாசி மகம் ஆகும்.

**28 - 2 - 26**

இன்று உரை யெழுதிக் கொண்டிருந்ததுடன் மாலையில் வந்த 'தமிழ்ப் பொழில்' படித்தேன். இதற்கு நான் கட்டுரை யெழுதாதிருப்பது எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது.

மாலை 6½ மணிக்கு மேல், சைவ சித்தாந்த சபையில் உயர் திரு. வாலையானந்த சுவாமிகளால் 'சைவர் பெருமை' என்னும் பொருள் பற்றி உபந்நியசிக்கப்பட்டது. நான் கேட்டுக் கொண்டி ருந்தேன்.

**1 - 3 - 26** *(குரோதன, மாசி, 18 தேதி)*

உலகமெல்லாம் போற்றும் உத்தம சமரச மெய்ஞ் ஞானியாகிய தெய்வப் புலமைத் திருவள்ளுவருடைய திருநாளாக இன்று குறிக்கப் பட்டுள்ளது. இத்திரு நாளைக் கொண்டாடுதற்காக திரிசிரபுரம் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை 5 ½ மணிக்கு மேல் ஓர்கூட்டம் கூடியது. இக்கூட்டத்திற் நான் தலைவனாகக் குறிக்கப்பட்டிருந்தபடி சென்று தலைமை வகித்தேன். திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் மூன்று பேர் அரைமணி கால்மணி அளவில் பேசினார்கள். முடிவுரையில் திருக்குறளின் பலவகையான நலங்களைப் பற்றி மேற்கோளுடன் முக்கால் மணிக்கு அதிகமாக நான் பேசினேன். நான் உணர்ச்சியுடன்

பேசியிருப்பதாகவும், என் பேச்சைக் கேட்டவர்களுக்கு ஏதேனும் பயனுண்டாகக்கூடு மெனவும் நினைக்கிறேன். நான் உரத்துப் பேசியதனால் தொண்டைகம்மியதை உபந்நியாச நடுவிலேயே உணர்ந்தேன். வீட்டிற்கும் வந்ததும் அயர்வு மிகுதியாயிருந்தது. ஆனால் ஓர் சிறந்த கடமையைச் செய்தே னென்பதை நினைக்கும் பொழுது அயர்ச்சியும் மகிழ்ச்சியேயாகும். என் வாழ்க்கையைத் திருத்தி வருபவைகளில் திருக்குறள் ஒன்று இன்று கோயிலுக்குப் போக வில்லை.

**2 - 3 - 26**

இன்று கல்லூரிக்குப் போய்வந்து நண்பகற்குப் பின் உரையெழுதிக் கொண்டிருந்தேன் நான் சமாசார பத்திரிகை படிப்பதைச் சில மாதங்களாக வேறு நிறுத்திவிட்டமையால் தற்காலத்து உலகில் நடக்குஞ் செய்திகளை நான் அறிதற்கு இடமில்லை. ஆனால் பத்திரிகை படித்த அன்பரொருவர் சொல்ல இன்று ஒரு செய்தியறிந்தேன் . அதாவது இந்தூர் மகாராஜா தனது சிம்மாசனத்தையிழந்தாரென்பது. இவர் ஓர் கணிகையை வைத்திருந்து, அவள் தன்னை விடுத்து மற்றொரு தனிகனையடைந்த பின் அவனைக் கொலை செய்வித்தது, இக்காரணத்தால் ஆங்கில அரசாங்கத்தினரால் ஆட்சியினின் றும் நீக்கப்பட்டாரென அறிவிக்கப்பட்டதென்று தீய காமத்தால் விளைந்த தீங்குகளை இராமாயணம் போன்றவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

என் அன்னையார் இங்கு வந்திருந்தவர்கள் இன்று ஊருக்குச் சென்றார்கள்.

**3 - 3 - 26**

சிவ பெருமான் காமனையெரித்ததனை மாசிமாதத்தில் நிறை மதிக்காலத்துக் கொண்டாடுவார்கள். இதற்கும் சிலர் முகத்திலும் உடல் முழுதிலும் கரிபூசி வேடம் போட்டுக் கொள் வதைப் பார்த்திருக்கிறேன். மன்மதன் எரிந்தா னென்பதற்கு மாறாக எரிய வில்லை யென்றும் கொள்கையுடன் சிலர் தோன்ற. எரிந்த கட்சி, எரியாத கட்சி என இரு கட்சியுண்டாகி அவர்கள் தத்தம் கொள்கைகளை ஒருவகைப் பாட்டினாற் பாடுவார்கள். இவையெல்லாம் கற்றறிவில்லாத சாமானியராலும் கீழோராலுமே நிகழ்த்தப்படுவன இப்பொழுது கிராமங்களில் இக்கிளர்ச்சி பெரிதும் காணப் படவில்லை. இந்நகரில் சிற்சில இடங்களில் காலிகளாயுள்ளோர் 'காமன் கொளுத்துவது என்னும் இதனை நிகழ்த்துகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறர்களென்பதனையே

நான் கவனித்ததில்லை. இரவு தூங்கும் பொழுது காலிகளாயுள்ள சிறுவர்கள் வீட்டுக் கெதிரெ பெருங் கூச்சல் போட்டு விளையாடினர். வீட்டிலுள்ள குழந்தைகளெல்லாம் தெருவில் நின்று கதறுவது போலும் தோற்றமுண்டாகி நான் திடுக்கிட்டு விரைவில் தெருவைப் பார்ப்பதற்காக எழுந்து பாய்ந்த பொழுது பக்கத்திற் கிடந்த நாற்காலியில் கால்கள் பலமாய் மோதி முழந்தாள் முதலிய இடங்களில் காயமும் ஏற்பட்டன. இதிலிருந்து பல உண்மைகள் விளங்குகின்றன. ஒருவன் மனதிற்குப் புலப்படுவன வெல்லாம் உண்மையாகா என்பதும், விபரீதவுணர்வானது பெருந் துன்பத்திற்குக் காரண மென்பதும், எனக்கு உண்மை யறிவோ அமைதியோ உண்டாக வில்லை யென்பதும் முதலியன இதனாற் பெறப்பட்டன.

இன்று உரையெழுதிக் கொண்டிருந்ததுடன், திருக்குறளில் ஐந்து அதிகாரம் மூலமும், சீவக சிந்தாமணியில் எண்பது பாட்டும் படித்தேன். சிந்தாமணி இங்ஙனம் படிப்பின் நாற்பது நாளில் முடியக் கூடியது. இதனை இத்தனை காலமாகச் சிறிது படித்த துணையானே விட்டிருந்தது வியப்பே. அழிழ்தமும் கைக்கும் படியான சுவையுள்ள பாட்டுகள் இதில் உள்ளன.

இரவு 6 ½ மணிக்கு மேல் சைவ சித்தாந்தசபையில் உயர்திரு. வாலையானந்த சுவாமிகளால் சைவ சித்தாந்த உபந்நியாசம் நடைபெற்றது. சிவஞானபோதபாடியத்தொடக்கத்தில் புறப்புறச் சமயம், புறச் சமயம் முதலியன பற்றி எழுதியிருப்பதை எடுத்துச் சொல்லினார்கள். கேட்டவர்களுக்குச் சிறிதேனும் விளங்கியிருக்கு மென நினைக்கக் கூடவில்லை. உபந்நியாச முறை மாற்றப்படல் வேண்டும். தமக்கும் மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இங்ஙனம் சில நாள் பேசின் மூளைக்குத் தீங்குண்டாகும்.

## 4 - 3 - 26

இன்று சீவக சிந்தாமணியில் 114 -பாட்டுக்கள் படித்துக்குக் காந்தருவதத்தையாரிலம், பக்கத்தைமுடித்தேன். 'சுதேசமித்திரனும் சிறிது படித்தேன். இரவில் நேற்று நடந்த உபந்நியாசத் தொடர்ச்சி சபையில் நிகழ்ந்ததனைக் கேட்டுக் கொண்டிருந்தேன். பொது வாக இன்று புரிந்த வேலை அதிகமே.

## 5 - 3 - 26

இன்று அத்துணையாக வேலை நடைபெறவில்லை. போற்றித் திருவகவல் ஒரு முறை படித்தேன். காந்தியடிகள் எழுதிவரும்

அவரது வாழ்க்கை வரலாறு 'தமிழ் நேச'னில் மொழிபெயர்க்கப் பட்டிருந்த இரண்டு பகுதிகளைப் படித்தேன். சில கடிதங்கள் எழுதினேன்.

வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயிலை யெய்தித் தரிசித்து வந்தது மகிழச்சிக்குரிய செய்தியே. 'ஆலயந்தொழுவது சாலவு நன்று' என்னும் ஔவையின் அமுத மொழியின் பயன் நாளடைவில் எனக்குப் புலனாகி வருகின்றது.

**6 - 3 - 26**

இன்று முழுதும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பண்டித பரீட்சைக்கு இலக்கிய வினாக்கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். இன்று ஆங்கில கலாசாலைத் தமிழ் மாணவர்கட்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் தமிழ்ப் பரீட்சை இந்நகரில் நாஷனல் கல்லூரியில் நடந்தது. மாலையில் அதனைப் பார்க்கச் சென்றேன். இண்டர்மீடியட் மாணவர் நால்வரும், பி. ஏ. மாணவர் மூவரும் மாத்திரம் எழுதிக் கொண்டிருக்கக் கண்டு வியப்படைந்தேன். எழுதினோ ரெல்லாரும்' என் மாணவர்களே. இந்நகரில் மாத்திரம் நான்கு காலேஜ்கள் இருக்கின்றன. இந்நகரிலும், வெளியிலும் அநேக ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இவைகளிலிருந்து ஒரு மாணவரேனும் இப்பரீட்சைக்கு வராததன் காரணமென்ன? இதற்குக் காரணமானவர்கள் தமிழில் எவ்வளவு பற்றுடையவர் களாயிருக்க வேண்டும்! இனி சங்கத்தார் நடத்து முறைமையிலும் குறையுளதென்றே கொள்ள வேண்டும்.

இரவிலே சபையில் உபந்நியாசங் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**7 - 3 - 26**

இன்று பண்டித பரீட்சை வினாக் கடிதத்தை முடித்து விட்டு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் அச்சிடும் நைடதத்திற்கு முகவுரை யெழுதிக் கொண்டிருந்தேன்.

ஈரோடு தங்கப் பெருமாள் பிள்ளை இறந்து விட்டாரென இன்று காலையில் கேள்வியுற்றேன். இவர் என்னுடைய மாணாக்கர். வக்கீல் வேலையை விடுத்துத் தேசத் தொண்டில் (ஒத்துழையாமை) ஈடுபட்டுச் சிறிது காலம் சிறைவாசஞ் செய்து திரும்பியவர். என்னிடம் அன்புடையவர் இவர் ஈரோட்டைச் சார்ந்த கருங்கற் பாளையத்தில் ஏற்படுத்தி நடத்தி வந்த வாசக சாலையின் ஒரு ஆண்டு விழாவில் நான் தலைமை வகித்தேன். இவரும் இன்னுஞ் சில மாணவரும் என்னுடன் இருந்து எடுத்த புகைப்படமும்

என்னிடமுளது. இரவிலே சபையில் உபந்நியாசங் கேட்டேன். இரண்டு மூன்று நாட்களாகச் சொல்லிய அமைதியாக இருந்தது. இன்னும் சில குறைகள் தவிர்க்கப் படின் நலமாகும்.

மெய் பேசுவதற்கு எவ்வளவோ இடையூறுகள் உண்டாகின்றன. பொருட் பற்று விடாமையும், கண்ணோட்ட மும், அவசரமும் முதலாயின மெய்ம்மையினின்று நழுவச் செய்கின்றன. ஆண்டவனே என்னைக் காத்தருள வேண்டும்.

**8 - 3 - 26**

இன்று கல்லூரியிலே திருவாசக முதலிலுள்ள ‘சிவபுராணம்’ படித்தேன் நண்பகற்கு மேல் நைடத முகவுரையை முடித்து அனுப்பினேன்.

திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் எய்தித் தரிசித்து வந்தேன்.

**9 - 3 - 26**

இன்று சீனியர் பி.ஏ. தமிழ்மாணவர்கள் கடைசி வகுப்பாதலின் காலேஜில் எனக்கு மாலைபோட்டு, பழம், கற்கண்டு, தாம்பூலம் கொடுத்து உபசாரங் கூறினார்கள். உபசாரங் கூறும் பொழுது என்போன்ற ஒரு ஆசிரியரை முன் தாங்களடைந்ததில்லை யென்று கூறி, அன்பினால் பேசுதற்கும் தடுமாற்ற மடைந்தனர். நான் அவர்கட்குப் பதில் கூறும் பொழுதும் என்னாற்றாங்க முடியவில்லை. கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பேசினேன். அவர்களும் தாங்க முடியாது கண்ணீர் விடுத்தனர். நான் இப்பொழுது மாணவர்கட்குச் சொல்லும் உபதேசமெல்லாம் ‘ மெய் வாழ்வு வாழ வேண்டும்; சத்தியத்தைக் கடைப்பிடியுங்கள்’ என்பதே.

**11 - 3 - 26**

இன்று திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**12 - 3 - 26**

இன்று மகாசிவராத்திரியாகும். சென்ற மாதம் மகா சிவராத்திரி யெனப் பல பஞ்சாங்கங்களில் குறிப்பிடப் பட்டிருந்தது. அதற்காக விடுமுறையும் இருந்தது. பலரும் அநுட்டித்தார்கள். எனினும் திருக்கோயில்களில் இன்றே மகா சிவராத்திரிப் பூஜை யாகும். இன்று சிவனாடியார்கள் பகல் முழுதும் உபவாசமிருந்து இரவு நான்கு யாமமும் பூஜை செய்வார்கள். நான் அஃதொன்றும்

செய்தற்கியலாத வனாயினும் சாதாரணமாக விரதமிருந்தேன். சென்ற மாதமும் இங்ஙனமேயிருந்தேன். இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன். காலையில் திருவாசகத்தின் போற்றித் திருவகவல் படித்தேன்.

மகாசிவராத்திரியும் வெள்ளிக்கிழமையுமாகிய இன்றிரவு மலைக்கோயிலை யெய்தி அம்மையப்பரைத் தரிசித்து இறைஞ்சி வந்தேன்.

**13 - 3 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன். கும்பகோணம் ஸ்ரீ ல........ ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் இந்நகர் மணிக்கூண்டி லிருந்து இன்று மாலை 6 மணிக்கு மேல் பட்டணப் பிரவேசமாக அழைத்து வரப்பெற்றுத் திருவானைக்காவுக்குச் சென்றார்கள். வழி முழுதும் தோரணம் முதலியவைகளால் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. மூன்று யானைகளும் நாலைந்து குதிரைச் சேவகர்களும், ஓர் ஒட்டகமும் முன்னே செல்ல, எண்ணிறந்த ஜனங்கள் இருபுறமும் வர, அளவற்ற விளக்குகளுடன் பல்லக்கின் மேல் அவர்கள் உலா வந்ததுபெரிய தோர் காட்சியாயிருந்தது. இந்த வைபவங்களெல்லாம் இறைவனது திருவருளின் பெருமையைக் காட்டுவனவேயாகும். அவர்கள் சைவ சித்தாந்திகளல்லர் என்பது குறித்து முன்பெல்லாம் எனக்குப் பற்றில்லாமலிருந் தாலும் இப்பொழுது பொதுவாக ஓர் பெரியவர்கள் என்பது குறித்துப் பற்றுண்டாகின்றது. மடாதிபதிகளா யுள்ளோர் இங்ஙனம் அடிக்கூடி வருவதால் பயனுண்டாகு மென்பதில் ஐயமில்லை. திருவாவடுதுறை, தருமபுர ஆதின மடாதிபதிகள் தகுதியுடையவர்களாயிருந்து இங்ஙனம் வருங்காலம் ஏற்படின் சைவத்திற்கு எவ்வளவோ பெருமையுண்டாகும்.

இன்று நாகநாத சுவாமிகோயிலில் தரிசித்து வந்தேன். தீபங்கள் நன்கு இடப்பட்டிருந்தன. பலர்சென்று தரிசிக்கின்றனர்.

**14 - 3 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன். " நத்தம் போற்கேடு முளதாகுஞ் சாக்காடும் வித்தகர்க் கல்லாலரிது"

என்னுங் குறளுக்கு நச்சினார்க்கினியர் வேறு பொருள் கொண்டிருப்பது தெரிந்து, அதனை ஓர் சிறு கட்டுரையாக எழுதித் 'தமிழ்ப் பொழிலு'க்கு அநுப்பினேன்.

**15 - 3 - 26**

பதினெண்கீழ்க்கணக்கில் ஐந்திணையைம்பதுக்கு உரை யெழுதத் தொடங்கி இன்று ஐந்துபாட்டுக்கு எழுதினேன். திருவிளையாடல் உரையும் சிறிது எழுதினேன்.

திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்காதது பெரியதோர் குறையாம். கீழிருக்கும் விநாயகரைச் சென்று தரிசித்தேன்.

**16 - 3 - 26**

இன்று பகல் 1 மணி வரையில் கல்லூரியில் பரீட்சை மேற்பார்ப்பவனாயிருந்தேன். மிகுதியாக வேலை செய்யக் கூடவில்லை.

**17 - 3 - 26**

இன்று நான் மிகுதியாக வேலை செய்யக் கூடவில்லை. ஓர் விசேடங்கருதி இன்று' சுதேசமித்திரன்' படித்தேன். இந்தியாவில் சட்ட சபை பலவற்றிலுமுள்ள சுயராச்சியக் கட்சியங்கத்தினர் அனைவரும் அரசாங்கத்தினருடன் பிணங்கிக் கொண்டு தங்கள் அங்கத்தினர் பதவிகளை விடுகின்றனர். சென்னை அங்கத்தினரின் இராசிநாமா விபரம் படித்தறிந்தேன்.

கன்னியாகுமரியிலுள்ள ஒரு வயோதிகசந்நியாசி ஜீவா காருண்ய சபை முதலியன ஏற்படுத்திப் பொது நன்மை களைக் கருதிவாழ்பவராகக் கருதப்படுகின்றவர் இன்று இங்கு வந்தார். அதனால் சிறிது அறஞ் செய்யுமாறு நேர்ந்தது.

**18 - 3 - 26**

இன்று விசேடமாக ஒன்றும் செய்யவில்லை. எங்கள் கல்லூரியில் சரித்திர ஆசிரியராயிருப்பவரும், ஓராண்டு பிரின்சிபால் ஆக வேலை பார்த்தவரும் ஆகிய திரு. M. கோயில் பிள்ளை M. A; L. T. அவர்கள் பழைய பாண்டி மன்னர்களைப் பற்றிய பழைய தமிழ் நூற்குறிப்புகள் எழுதித் தர வேண்டுமென இரண்டாண்டின் முன் தொடங்கி என்னைக் கேட்டு வந்தார். நான் எழுதித் தருவதை ஆதரவாகக் கொண்டு ஆங்கிலத்தில் கட்டுரையெழுதுங் கருத்துடன் கேட்டாராவர். நான் எழுதித்தர ஒத்துக் கொண்டும் இவ்வளவு காலமாக அதனை நிறைவேற்றா திருந்தேன். அவர் பல முறை என்னைக் கேட்டிருக்கிறார். ஒன்றிரண்டு மாதங்களின் முன் கேட்ட பொழுதும் எழுதித் தருவதாகக் கூறிப் பின்னும் தாழ்த்து வந்தேன். என் வார்த்தை

பழுதாகாமல் எழுதித் தர வேண்டுமெனச் சில நாட்களாக அடிக்கடி நினைந்தும் வேறு அலுவல்கள் பொழுதைக் கவர்ந்து கொண்டமையால் எழுதக் கூடவில்லை. இன்று மாலை பிடிவாதமாக உட்கார்ந்து அதனை யெழுதினேன்.

இன்று கார்த்திகை விரதம் ஆகலின் மலைக்கோயிலுக்குச் சென்று தரிசிக்கும் கருத்தினனாயிருந்தேன். போகத் தொடங்கும் முன் உயர்திரு. க. மணிவாசகசரணாலய சுவாமிகள் வந்தமையால் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். நேரமா யினமையால் பின் கோயிலுக்குப் போகவில்லை. சுவாமிகள் நான் கல்லல் உற்சவத்திற்கு வராமை குறித்து வருத்தமடைந்துளார் களெனக் கருதினேன். இரவிலேயே அவர்கள் இங்கிருந்து புறப்பட்டுவிட்டார்கள்.

**19 - 3 - 26**

சென்ற மார்ச்சு மாதம் இத்தெய்தியிற்றான் இக்குறிப்பு எழுதத் தொடங்கினது. 'நித்தல் நிகழ்ச்சிக் குறிப்'பின் இரண்டாவது ஆண்டின் தொடக்கமாக இந்நாளைக் கொள்ள லாகும். இன்று உரையாதும் எழுதவில்லை. எங்கள் கல்லூரி வேலை இன்று பூர்த்தியாகி நாளை முதல் கோடை விடுமுறை யாகும்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலை அடைந்து தரிசித்து வந்தது உவகையுறக் கூடிய நற்செய்தியாகும். (இஃதெழுதும் பொழுது அதிர்வெடியின் ஒலி உண்டாயது)

**20 - 3 - 26**

மகிபாலன் பட்டி வித்துவான் மு. கதிரேச செட்டியா ரவர்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்த்த 'சுக்கிர நீதி' என்னும் புத்தகம் மதிப்புரைக்காக என்பார்வைக்கு வந்துளது. முன் அவர்கள் அச்சிட்ட இரண்டு புத்தகங்கட்கு யான் யாதும் அபிப்பிராய மெழுதாதிருந்து விட்டேன். அதற்குக் காரணம் நான் அவைகளைப் படித்துப் பார்க்கவே அவகாசமில்லாமற் போனதுதான். அவை உடன் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை யெழுப்பக் கூடியனவுமல்ல அவையெல்லாம் குறிப்பிற் றோன்றுமாறு செட்டியாரவர்கள் எனக்குக் கடிதமெழுதி, இப் புத்தகத்திற்குக் கூடிய விரைவில் ஒரு மதிப்புரை யெழுதிநுயப்ப வேண்டுமெனக் கேட்டுளார்கள். இன்று இரவு 'சுக்கிர நீதி'யைப் படிக்கத் தொடங்கியுளேன். இதுபடித்து முடிந்த பின் இது சம்பந்தமான கருத்துகளைக் குறித்தலாகும்.

**21 - 3 - 26**

இன்று காலை 5 -மணிக்கு முன்பே புறப்பட்டுக் காவிரி சென்று நீராடி வந்தேன். சிறிது உரையெழுதினேன். கல்லூரி மாணவர் விடைக் கடிதங்கள் திருத்தினேன். ஓராண்டு பாடங் கற்பித்ததன் பயனைக் காணக் கூடிய காலம் இது. மாணவர்கள் நன்கு எழுதியிருந்தால் நம் உழைப்புப் பயனுடையதென மகிழ்தற்கு இடனுண்டு.

**23 - 3 - 26**

என் மனைவிக்கு இரண்டு நாளாக உடம்பு மிக்க தொந்தரையா யிருக்கிறது. சூதக காலத்தில் அவள் படுங்கஷ்டம் சொல்ல வொண்ணாததாயிருக்கிறது. நான் என் அயர்வாலும் அறியாமை யாலும் அதற்கு யாதும் வைத்தியம் செய்விக்காமலிருந்து வருகிறேன்.

**24 - 3 - 26**

இன்று விசேடமாக யாதுஞ் செய்யவில்லை.

**25 - 3 - 26**

இராஜாமடத்திற்குப் போவதற்காக இன்று மாலை புறப்பட்டுக் கருந்திட்டான் குடிவந்து இரவில் அன்பர்களோடும் அளவளாவித் தங்கலானேன்.

**26 - 3 - 26**

அன்பர் திரு. அ.மு. சரவண முதலியார், மாணவர் திரு. வீ. உலக ஊழியர் இவர்களுடன் இன்று காலையில் மோட்டார் வண்டியிற் புறப்பட்டுப் பட்டுக்கோட்டை சென்று, அங்கு நின்றும் புகை வண்டியில் அதிராம்பட்டினஞ் சென்று, பின் மாட்டு வண்டியில் இராஜாமடம் போய்ச் சேர்ந்தேன். விடுதியிலுள்ள மாணவர்கள் கூட்டமாக என்னைச் சூழ்ந்து கொண்டு நெடு நேரம் அகலாதிருந்தனர்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று காலையில் இராஜா மடத்திற்கு ஒரு மைல் தூரத்தில் ‘ அஞ்ஞான விநாசினி’ என்னும் ஆற்றிற்கருகிலுள்ள சின்ன ஆளுடையார் கோயில் என்னும் தலத்தையடைந்து அருச்சனை செய்வித்து வழிபட்டு வந்தோம். திருப்பெருந்துறையாகிய ஆளுடையார்கோயிலுக்கு நியமமாகச் சென்று வழிபடும் அரசர் ஒருவர்க்கு ஓர்நாள் ஆற்று வெள்ளத்தால் தடையுண்டாக, இறைவர் அவரது கனவிற் றோன்றித் தாம்

இவ்விடத்தில் எழுந்தருளியிருப்பதாகவும், இங்கேயே தம்மை வழிபடலாமென்றும் அருளிச் செய்தபடி அவ்வரசர் வழிபட்டதலம் இது என்கின்றனர். அத்தலம் அதிவீரராம பாண்டியரால் உண்டான தென்றும், அவரே அங்ஙனம் வழிபட்டவரென்றும் கூறுகின்றனர். குருந்தினடியில் மாணிக்கவாசகருக்கு இவர் அருள்புரிந்த முறைப் படி இக்கோயிலி னுள்ளும் பிரதிட்டையுளது. உற்சவங்களும் மாணிக்க வாசகருக்கே நடக்கின்றனவாம்.

## 27 - 3 - 26

இன்று மாலையில் இராஜாமடம் சகண்டெரி பாட சாலையில் மாணவர் தமிழ்ச்சங்க ஆண்டு விழா நடந்தது. நாங்கள் அதிற் பிரசங்கஞ் செய்யவே சென்றிருந்தோம். ஆனால் வேறு அக்கிராசனாதிபதி எதிர்பார்த்தபடி கிடைக்கப் பெறாமையால் என்னையே அதற்குக்கருதி வரவேற்புப் பத்திரமும் அச்சிட்டு வைத்திருந்தனர். சபைக்கு மேள வாத்தி யத்துடன் அழைத்துச் சென்றனர். உபசாரப்பத்திரம் படித்த பின், நான் அவைத் தலைமை பூண்டு முகவுரை கூறி அதன்பின் எனக்குக் குறித்திருந்த ‘ இராமபிரான் குணமேன்மை’ என்னும் விஷயத்தைப் பற்றிக் கம்பராமாயண மேற்கோளுடன் உபந்நியாசித்தேன். பின் திரு. அ.மு. சரவண முதலியாரவர்கள் காரைக்காலம்மையார் பெருமை’ என்பது பற்றி உபந்நியாசித் தார்கள். பின் திரு. வீ. உலக ஊழியர் ‘சேக்கிழாரும் அப்பூதியடிகளும்’ என்பது குறித்து உபந்நியாசித்தனர். இவரது உபந்நியாசம் மிகவும் தடுமாற்றமாயிருந்தது. இன்னும் ஒழுங்காகப் பயிற்சிபெற வேண்டும். இவருக்கு உடம்பின் நல மின்மையும் இதற்குக் காரணமாயிருந்ததெனப்பின்பு தெரிந்தது. முடிப்புரை, உபசாரங்கூறல், மாலை சூட்டல் முதலியவற்றுடன் சபை பூர்த்தியாயிற்று.

## 28 - 3 - 26

இன்று பங்குனியுத்தரமாகும். முருகக் கடவுளின் திருப்பதி களில் இன்று திருவிழா மிகவும் சிறப்புற நடை பெறுவதாகும். நான் இன்று காலை கடலிலே ஸ்நானஞ் செய்து வந்தேன் இன்று மாலை இராஜாமடம் சகெண்டரி பாட சாலையின் பரிசளிப்பு விழா தஞ்சை பிரின்ஸ் சிவாஜி ராஜா அவர்களின் தலைமையில் நடந்தது. பிற்காலத்து அரசர்களில் தஞ்சையில் ஆண்ட மராட்டிய மன்னர்களைப் போல் அறஞ் செய்தவர்கள் யாருமில்லை. அத்தகைய தரும அரசாங்கமும் முடிபெய்தியது. சிவாஜி மகாராஜாவுக்குப்பின் அரச பத்தினிகளாகிய பாய்சாகேப்புகள் இருந்து வந்தனர். அவர்களும் சென்றபின் பலவழக்குகள் நடந்து அரச குடும்பத்தின்

சொந்த சொத்துக்கள் பலவிதமாகப் பாகஞ் செய்யப்பட்டன. இன்று தலைமை வகித்தவர் ஸ்வீகாரபுத்திர வழியினர். அரச குடும்பத்திற்குரிய 96 தோட்டம் என்னும் கிராமங்களில் பெரும் பகுதி இவருக்குக் கிடைக்கும்படி தீர்ப்பாகியிருக்கிறதாம். இவர் கொஞ்சம் ஆங்கில அறிவுடையவராயிருக்கின்றனர். பரிவாரங் களுடன் இன்று இங்கு வந்து சேர்ந்தார். இராஜாமடம் சத்திர தருமத்தையேற்படுத்திய தஞ்சை மன்னர் துளஜாஜி மகாராஜா அவர்களின் உருவப்படம் புதுக்கியதனை இன்று இவர் திறந்து வைத்தார். தஞ்சை ஜில்லா போர்டின் தலைவராகிய திரு. பன்னீர்ச்செல்வம் அவர்களின் புகைப்படமும் இவரால் திறக்கப் பெற்றது. இவருக்கு உலக ஞானமும், சம்பிரதாய மரியாதைகளின் அறிவும் உள்ளனவெனத் தெரியலானேன். ஆனால் இனியேனும் இவர் ஆடம்பரத்தில் அமிழ்ந்து விடாமல் இருப்பரேல் எவ்வளவோ பெருமையாக வாழ்ந்து கொண்டி ருக்கலாகும்.

என் தம்பியாகிய திரு. மு. கோவிந்தராஜ நாட்டார் அப்பாட சாலையின் தலைமையாசிரியராக இருந்து நடத்தி வரும்முறையில் ஊரிலுள்ள பிராமணர்கள் முதலிய அனைவரும் மிக்க திருப்தி யுடையவர்களாக விருக்கின்றனர். இரு நாட்களிலும் அனைவரும் வந்திருந்து கொண்டாட்டத்திற் கலந்து கொண்டார்கள். மாணாக்கர்கள் எல்லோருமே அவரிடம் மிகுந்த அன்புடையவர் களாக இருக்கின்றனர். பொதுவாக நல்ல பெயருண்டாகும் படியே அவர் பள்ளிக்கூடத்தை நடத்தி வருகிறாரென அறிந்து மகிழ்ச்சியடை கின்றேன்.

இன்று பங்குனியுத்தரமாகலின் மாலையிற் புறப்பட்டுத் திருவாரூர் சென்று திருத்தேர்த் திருவிழாவைத் தரிசிப்பதென நினைத்திருந்தேன். அது கூடாது போயிற்று. இன்று எவ் விடத்தும் கோயிலுக்குச் சென்று வழிபடாதது குறை.

**29 - 3 - 26**

இரவு 3-மணிக்கே புறப்பட்டுப் புகைவண்டி வழியாக இன்று காலை திருவாரூர் வந்து சேர்ந்தோம். திரு உலகவூழியற்கு உடம்பில் அம்மை கண்டு விட்டமையால் அவர் நீராடக் கூடவில்லை. நானும் முதலியாரவர்களும் கமலாலயத்தில் நீராடித் திருக்கோயிலிலும், திருத்தேரிலும் பெருமானைத் தரிசித்தோம். திருத்தேர் ஓடாது நிலையாகவேயிருந்தது. புழுத்த நாயினுங் கடையனாகிய என்னையும் ஆட்கொண்டருளும் தியாகேசப் பெருமானது திருவுருவைத் திருத்தேரிலே தரிசித்து

பேறு எத்துணையும் பெரியதோர் பேறாகும். இன்று மாலையிலும் திருத்தேரில் பெருமானைத் தரிசித்தோம். மாலையில் கமலைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் நடந்த ஒரு கூட்டத்தில் நானும் சிறிது நேரஞ் சென்றிருந்து தமிழ் என்பது குறித்துச் சிறிது பேசினேன். செட்டி நாட்டிலிருந்து வந்திருந்த ‘சிவநேசர்திருக் கூட்டத்தின’ரால் இவ்வவை நடைபெற்றது. நகர வணிகரில் நல்ல கல்வியும் அழுத்த மான சைவப் பற்றும் சீலமும் உடைய காரைக்குடிச் சொக்கலிங்க ஐயா என்பவர்கள் தலைமை வகித்திருந்தார்கள். இவர்களைப் பற்றி நான் நெடுநாளாகக் கேள்வியுற்றிருந்தும் இன்றுதான் நேரிற் கண்டேன். வயது முதிர்ந்தவர். கண்ணோட்டமின்றியே பிற மதங்களைக் கண்டிக் கின்றனர். உலக நடையையும் சிறிது தழுவினால் நலமாக விருக்கும். என்னைக் குறித்து மிகவும் அன்புடைய பலவான்குடி திருவாளர் ராம. கு. ராம இராமசாமி செட்டியாரவர்களும் வந்திருந்தனர். இன்று திருவாரூர் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்களாகிய என் அன்பர்கள் திரு. பொன்னண்ணுக் களத்து வென்றாரவர்களாலும் திரு. முத்துரத்தின முதலியாரவர் களாலும் உபசரிக்கப் பெற்றிருந்தோம்.

**30 - 3 - 26**

இன்று காலை திருவாரூரினின்றும் புறப்பட்டுப் பூதலூர் வந்து இறங்கி, இளங்காட்டுப் படுகையில் என் தமக்கை வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

**31 - 3 - 26**

என்னிடம் கல்வி பயின்ற மருதூர்ப் பிச்சையையாவுக்குக் கொக்கரசன் பேட்டையில் நடக்கும் விவாகத்திற்கு இன்று மாலையில் வந்து சேர்ந்தேன். இவர் முதல் மனைவியிருக்க, இரண்டாவது விவாகஞ் செய்து கொள்கின்றனர். அலைச்சலாலும் உணவுக் கெடுதியாலும் இரண்டு மூன்று நாட்களாக எனக்கு இருமல் இழைப்புத் தொந்தரையுளது.

**1 - 4 - 26**

இன்று காலை புறப்பட்டுத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். சென்ற எட்டு நாளின் நிகழ்ச்சிகள் இப்புத்தகத்தில் இன்றே எழுதப்பட்டன.

**2 - 4 - 26**

இன்று அரசங்குடிக்கு ஓர் கல்யாணத்திற்குச் சென்றேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் தரிசிக்கக்

கூடவில்லை. அரசங்குடியிலுள்ள சிவாலயத்தில் இன்றிரவு தரிசனஞ் செய்தேன்.

**3 - 4 - 26**

இன்று அரசங்குடியிலிருந்து வந்து சிற்சிலரோடு பேசிக் கொண்டிருந்ததன்றி வேலையொன்றும் நடைபெறவில்லை. அரை மாதகாலமாகவே என்னாலும், முதலியாரவர்களாலும் உரையெழுதும் வேலை நடைபெறவில்லையெனல் வேண்டும்.

**4 - 4 - 26**

இன்று காலையில் பேதிக்கு மெழுகு உண்டேன். சுக்கிர நீதி என்னும் நூலினைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பார்த்து வந்தேன். பிரயாணத்திலும் பார்த்து வந்தேன். இன்று பார்த்து முடிந்தது. இந்நூலானது பரதகண்டத்தின் பழைய நாகரிகத்தைப் புலப்படுத்தும் பொருணூல்களில் ஒன்று. அசுரகுருவாகிய சுக்கிரனால் இந்நூல் இயற்றப்பட்டதென்ப தெல்லாம் கற்பனை வழக்கே. பாரத மேற்கோள்கள் இதில் வந்துள்ளன. சந்திரகுப்தன் அசோகன் முதலான மன்னர்கள் காலத்திலோ இன்னும் பின்னரோ இஃது எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இதன்கண் நகரமைக்குமுறை, அரண் முதலியன அமைக்கும் முறை, அரசன் அமைச்சர் முதலியோர் இலக்கணம், யானை குதிரை முதலியவற்றின் இலக்கணம், நவமணிகளின் இலக்கணம், பலவகை அளவுமுறைகள், அரசியல் வினைஞர்களின் சம்பளம், உதவிச் சம்பளம், பல்வகைப் பாத்திரங்கள், வழக்காராய்ச்சி முறை முதலியன கூறப்பட்டுள. ஆனால் இவையெல்லாம் ஒரொழுங்கு மின்றித் தொகை தொகையாக இதிற் காணப்படுகின்றன. திருக்குறள் என்னும் தெய்வத் தமிழ் மறையோடு இதனை எவ்வாற்றானும் இணையாகச் சொல்லவியலாது. மொழி பெயர்ப்பு நல்ல தமிழ் நடையில் அமைந்துளது.

**5 - 4 - 26**

திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலையடைந்து, புழுத்த நாயினுங் கடையேனாகிய என்னையும் ஆட்கொண்டருளும் அம்மையப்பர் திருவடிகளை யிறைஞ்சி வந்தேன்.

**6 - 4 - 26**

'தமிழர்' என்னும் பத்திரிகைக்குக் 'கிள்ளிவளவன்' என முன் எழுதியதன் தொடர்ச்சியாகச் சிறிது எழுதியதன்றிப் பிறிதொரு வேலையும் செய்யக் கூடவில்லை.

## 7 - 4 - 26

இன்று வீட்டுக் கணக்குச் சிறிது பார்த்துக் கொண்டிருந்த தன்றி வேறொரு வேலையும் செய்யக் கூடவில்லை. பொழுது வறிதே கழிகின்றது.

## 8 - 4 - 26

நேற்றிரவு வண்டியில் மனைவியையும், பார்வதியம்மாள், மங்கையர்க்கரசியையும் நடுக்காவேரியில் நடைபெறும் என் சிறிய தந்தை மகளின் கல்யாணத்திற்காக அநுப்பினேன். நடராஜனுக்குப் பரீக்ஷையிருத்தலால் 12-ம் தேதியன்றே நான் அவனை யழைத்துக் கொண்டு ஊர்போக வேண்டும். இன்றும் ‘கிள்ளிவளவன்’ என்பதன் தொடர்ச்சி எழுதி முடித்தேன். ‘செந்தமிழ்ச் செல்வி’க்குக் ‘கண்ணகி கற்பு மாண்பு’ என முன் எழுதியதன் தொடர்ச்சி சிறிது எழுதினேன்.

## 9 - 4 - 26

‘கண்ணகி கற்பு மாண்பு’ என்பதன்றொடர்ச்சி இன்று எழுதிமுடித்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு நானும் திரு. அ. மு. ச. முதலியாரவர்களும் மலைக்கோயிலை யடைந்து வழிபட்டு வந்தோம்.

## 11 - 4 - 26

திருவாளர் மு. சி. பூரணலிங்கம் பிள்ளையவர்கள் எங்கள் கல்லூரியினின்றும் விலகி ஊருக்குச் செல்வதற்காக நடைபெற்ற உபசாரக் கூட்டத்திற்கு இன்று மாலை போயிருந்தேன். நானும் அவரைப் பற்றிச் சிறிது பேசினேன்.

## 12 - 4 - 26

இன்று காலை திரு பூரணலிங்கம் பிள்ளையுடன் எடுக்கப் பெற்ற புகைப்படத்திற்குச் சென்றிருந்து பின் நடுக்காவேரிக்குப் புறப்பட்டேன். சுமார் மாலை 5½ மணிக்கு நடுக்காவேரியில் என் மனையையடைந்து முகமலர்ச்சியுடன் தோன்றிய என் தந்தையையும், தாயாரையும், குழந்தைகள் முதலானோரையும் கண்டு இன்புற்றேன். இரவில் நெடுநேரம் என் தந்தையார் என்னுடன் சிற்சில விஷயங் களைக் குறித்து இனிமையாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் குறித்து எங்ஙனம் வருந்திக் கொண்டிருப்பார்களோ என்று கவலை யுற்றிருந்த எனக்குப் பெரிய ஆறுதல் உண்டாயிற்று. அமாவாசையும் திங்கட்கிழமையுமாகிய இன்று சிவாலய தரிசனம் செய்யக் கூடவில்லை.

**13 - 4 - 26** *(அக்ஷய ஆண்டு, சித்திரை மாதம் 1ஆம் தேதி)*

செவ்வாய்க்கிழமை, பிரதமை, அசுவதி இவைகூடிய இன்று நண்பகலில் மிதுனலக்கினத்தில் புதிய வருடம் பிறந்தது. அறுபது ஆண்டுகளின் முற்பட்ட அக்ஷய ஆண்டு மிகுந்த பஞ்ச முடையதாயிருந்ததென முதியோர்கள் சொல்வதுண்டு. வருடப் பிறப்பாகிய இன்று என் பெற்றோர்கள் முதலானவர்களுடன் இங்கே சேர்ந்திருக்கப் பெற்றது மனதிற்கு இன்பம் விளைப்பதே. ஒரு சிறிது வேலை செய்தேன்.

இன்று நடுக்காவேரி (இவ்வூர்ச்) சிவாலயத்தையடைந்து தரிசித்திறைஞ்சி வந்தேன்.

**14 - 4 - 26**

இன்று திருவிளையாடல் உரை எழுதிக் கொண்டிருந்தேன். பெருங்கதையின் முகவுரை படித்தேன்.

**15 - 4 - 26**

உரை சிறிது நடந்தது. பெருங்கதையின் முதற்கண் உள்ள நூறு அடிகளையுடைய பாட்டினைப் படித்தேன். கார்த்திகை யாகிய இன்று இவ்வூர்ச் சிவாலயத்தையடைந்து தரிசித்து வந்தேன்.

**16 - 4 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன். சிறிது படித்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று இவ்வூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்தேன்.

**17 - 4 - 26**

இன்று முழுதும் உரையெழுதிக் கொண்டிருந்தேன். சிறிது படித்தேன்.

**18 - 4 - 26**

இன்று சில கடிதங்கள் எழுதினேன். சிறிது படித்தேன். உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**19 - 4 - 26**

இன்று வெய்யிலின் கொடுமை மிகுதியாயிருந்தமையால் உரை மிகச் சிறிதேயெழுதினேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயத்தையடைந்து தரிசித்துவந்தேன்.

**20 - 4 - 26**

*என் மனைவியிடத்தில் இன்று எனக்கு மிகுதியாய்க் கோப முண்டாயிற்று. என் உடம்பின் வலி யின்மையும், நோய்த் தன்மையும் சினத்தை மிகுவிக்கின்றன. சிறிது உரையெழுதினேன்.*

**22 - 4 - 26**

*பகல் முழுதும் தீவிரமாக உரையெழுதினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன். தினந்தோறும் சிறிது ஆங்கிலம் பயின்று வருகின்றேன்.*

**23 - 4 - 26**

*பகல் முழுதும் தீவிரமாக உரையெழுதினேன். சென்னையி லிருந்து ஆங்கில மருத்துவ உத்தியோகமுடைய ஒருவர் தஞ்சைக்கு வந்திருந்தவர் என்னைப் பார்க்க இன்று மாலை இங்கு வந்தனர். தமிழிலும் சைவத்திலும் நல்ல பற்றும், பயிற்சியும், உண்மை யுணர்ச்சியும் இனிய குணமும் உடையவ ராகக் காணப்பட்டார். இரவு 8½ மணிக்குமேல் தஞ்சைக்குத் திரும்பி விட்டார். அவருடன் பேசிக் கொண்டிருந்தமையால் வெள்ளிக்கிழமை யாகிய இன்று சிவாலயத் தரிசனம் செய்யக் கூடவில்லை.*

**24 - 4 - 26**

*பகலில் உரையெழுதிக் கொண்டிருந்தேன். பிற வேலை யில்லாமல் எழுதும் பொழுதும் உரை சிறிதளவே எழுதப் பெறுகின்றது.*

**25 - 4 - 26**

*உரையெழுதும் வேலை மிதமாக நடைபெற்றது.*

**26 - 4 - 26**

*இன்று நாள் முழுதும் சிறிது தலைவலியிருந்தது. உரை சிறிதும் எழுதவேயில்லை.*

*நன்செயில் 86-செண்டு நிலம் ரூ. 1000-க்கு என் மனைவி பேரில் இன்று ஒற்றி வாங்கப் பெற்றது. சில பல ஆண்டுகளின் முன் நிலம் வாங்குவதென்றால் ஏராளமாக வாங்கியிருக்கலாம். என் பாட்டனார் யாரேனும் நிலம் வைத்துக் கொள்ளச் சொன்னால் ஓடி ஒளிந்து கொள்வாராம். என் தந்தையார் நிலம் வாங்குவதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தன; தவறவிட்டு விட்டார்; இவ்விஷயத்தில் அவர்கள் சிறிதும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவில்லை. நாங்களும் தக்க வயது வந்த பின்னரும் சிறு குழந்தைகளைப் போலவேயிருந்து வந்தோம். தந்தையாரை*

மீறியோ அல்லது அவரைக் கட்டாயப்படுத்தியோ ஒரு காரியமும் செய்யக்கூடாதவர்களாயிருந்தோம். சுமார் என்னுடைய இருபது வயதுக்குமேல் நானும் என் அன்னை யாரும் வற்புறுத்தியதன் மேல் எதிர்த்தமனையும், சில படுகை நிலங்களும் வாங்கப் பெற்றன. இவ்வாறானமையால் எங்கள் குடும்பத்திற்குப் போதாத மிகவும் குறைந்த அளவான நிலத்துடன் இருந்து வருகிறோம். தஞ்சை, திருச்சி, கோயமுத்தூர் முதலிய வெளியிடங்களில் இருக்கும் என் அன்பர்கள் முதலாயினார் மிகுந்த நிலமுடைய பெரிய மிராசுதாராக எங்களை நினைத்துக் கொண்டிருக் கிறார்கள். எங்கள் ஏழ்மையை வெளிக்குக் காட்டாமலே பணக்காரன் போல நானும் இருந்து வருகிறேன். ஆனால் ஏதோ சொத்துடையவன் என எண்ணி என்பால் பிறர் மதிப்போ அன்போ வைத்திருப் பாரானால் அதனை நான் மிகவும் வெறுக்க வேண்டும். கடவுள் திருவருளை முன்னிட்டுக் கையிலிருந்த சிறிது தொகையுடன் கடன் வாங்கி இன்று நிலம் வாங்கப் பெற்றது. இன்னும் சில ஆண்டுகளில் நானும் என் தம்பி கோவிந்தராஜாவுமாக நிலங்கள் வாங்கி நாகரிக வாழ்க்கை நடத்தக்கூடுமென எண்ணி யிருக்கிறேன். எங்கட்கு நிலமோ, திரவியமோ வளர்ந்தால் அவற்றை இறைவன் கருணையால் வந்தவையென்று கொண்டு, சிறிதும் செருக்கில்லாமல், உலகினர்க்கு நன்மையான காரியங்களை இறைவன்பணியாகச் செய்து, அவனுடைய புகழ்விளங்கவே வாழ்ந்து வரும்படி அவன் திருவருள் பாலிக்க வேண்டும்.

திங்கட்கிழமையாகிய இன்று இவ்வூர்ச் சிவாலயத்தை யடைந்து தரிசித்து வந்தேன். இறைவன் என்னையும் ஆட் கொள்ளுதல் குறிப்பினைக் காட்டி வந்திருக்கின்றான்.

**27 - 4 - 26**

இன்று மிதமாக உரையெழுதிக் கொண்டிருந்தேன். இன்று வந்த நாலைந்து கடிதங்களில் கோலாலம்பூரிலுள்ள என் அன்பர் K. நரசிம்ம ஐயங்கார் எழுதியதொன்று. இன்று சித்திரா பூர்ணிமை, இந்துக்களால் விசேடமாகக் கொண்டாடப் படுகின்ற நாள். நான் இன்று எனக்கு வந்த கடிதங்களில் பசுபதி பாளையத்திலுள்ள என் அன்பர் K. வேலாயுதக் கவுண்டர் எழுதியது ஒன்று. என்பால் அளவற்ற அன்புடையவர். சிவபக்தி அடியார் பத்தியிற் சிறந்தவர். நீண்டநாளாக (வருடத்தின் மேலாக) எனக்குக் கடிதம் எழுதாதிருந்தனர். நானும் அவருக்கு எழுதிற்றிலேன். அவரது கடிதம் இன்று கிடைத்தது பெரு மகிழ்ச்சிக்குரியது.

உரை சிறிதளவு எழுதினேன்.

**29 - 4 - 26**

நேற்றிரவு புறப்பட்டுச் சப்தஸ்தலத் திருவிழாவிற்காகத் திருவையாறு வந்து ஆற்றுமணலில் சிறிது நேரம் படுத்திருந்து இரவு 3-மணிக்கு நீராடி வந்து சுவாமி புறப்பாட்டினைத் தரிசித்துப் பின் முறைப்படி திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந் துருத்தி என்பன வந்து தரிசித்து, இரவில் திருநெய்த்தானத்தின் நேரே காவிரிமணலில் படுத்துறங்கினேன். என் அரிய நண்பர் களாகிய திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர் கள் திரு. வேங்கடசலம் பிள்ளையவர்கள் இவர்களுடன் ஏழுதலங்கட்கும் செல்லலானேன்.

**30 - 4 - 26**

இரவு 4-மணிக்குள் நீராடித் திருநெய்த்தானம் தரிசித்துக் கொண்டு காலையில் திருவையாறு வந்து சேர்ந்தோம். கோயிலில் பல்லக்குகள் வந்து இறங்கியபின் திரும்புவதற்குப் பகல் 12-மணிக்கு மேலாயிற்று. இவ்வாண்டு ஏழு திருப்பதிகட்கும் செல்ல உடம்பு இடந்தராதென நினைத்திருந்தேன். திருவருளானது ஈர்த்துச் சென்று தரிசிப்பித்ததன்றிவேறில்லை. மாலையில் நடுக்காவேரி வந்தேன். வரும்பொழுதும் வந்த பின்னருமே உடல் நோவு புலப்பட்டது. இரண்டு நாளில் வந்திருந்த ஐந்து கடிதங்கள் இரவில் பார்த்தேன்.

**1 - 5 - 26** *(அக்ஷய, சித்திரை, 16ம் தேதி)*

சில கடிதமெழுதியதும், கோலாலம்பூரிலிருந்து வந்த ‘தமிழ் நேசன்’ என்னும் பத்திரிகை பார்த்ததுமே இன்றைய வேலை. அயர்வினால் வேறு ஒன்றும் செய்யக் கூடவில்லை.

**2 - 5 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**3 - 5 - 26**

இன்று திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன். சோழர் சரித்திரம் முன்பு எழுதியதனைச் செம்மை செய்தற்கு எடுத்துச் சிறிது பார்த்தேன். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளே கருத்துகள் எவ்வளவோ மாறுபடுகின்றன. உண்மையைக் கடைப்பிடிப்பது என்ற எண்ணம் உண்டாம் பொழுது அகங்காரத்திற்கும் ஆரவாரங் களுக்கும் இடமில்லை யெனத் தெரிகிறது. திங்கட்கிழமை யாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயத்தை யடைந்து தரிசித்து வந்தேன்.

**4 - 5 - 26**

சில கடிதங்கள் எழுதினேன். உரை மிதமாக எழுதினேன்.

**5 - 5 - 26**

உரையெழுதிக் கொண்டிருந்தேன். இவ்வூர்க் கிராம தேவதையாகிய துர்க்கைக்குத் திருவிழா நடப்பதில் இன்று இரண்டு சப்பரங்களில் இரண்டு அம்மன்கள் வந்து காட்சி கொடுத்தார்கள்.

**6 - 5 - 26**

உரையெழுதிக் கொண்டிருந்தேன். சைவ சமய குரவராகிய திருநாவுக்கரசர் பெருமானுடைய திருநாளாகிய சித்திரைச் சதயம் இன்று. பல இடங்களிலும் சிவனடியார்கள் இந்நாளைக் கொண்டாடும் கடபாடுடையராவர். இந்நாட்கொண்டாட்டங் குறித்துச் சில சபைகளிலிருந்தும் எனக்குப் பத்திரிகைகளும் வந்தன. மலைக் கோட்டையில் 'திருநாவுக்கரசு தமிழகம்' பூட்டியிருக்கும் நிலைமையிலுளது. இவ்வூரிலோ இதைப் பற்றியாதொரு பேச்சுமில்லை. நான் சிலரையேனும் கூட்டி வைத்துத் திருநாவுக்கரசுகளின் பெருமையைப் பற்றிச் சிறிதேனும் கூறியிருப்பின் மனதுக்கு ஆறுதலாயிருக்கும். ஒன்றுஞ் செய்யக் கூடவில்லை. ஏதோ அவரைப் பற்றிய சிந்தனை சிறிதிருந்தது. தேவாரம் முதலியவும், அவரது சரித்திரமும் சிறிது படித்தேன். இரவில் இவ்வூர்ச் சிவாலயமெய்தித் தரிசித்தேன்.

**7 - 5 - 26**

குழந்தை மங்கையர்க்கரசிக்கு மூன்று நான்கு நாளாக உடம்பு குணமில்லை. அதனோடு எங்கள் குல தெய்வமாகிய உலகமாதா கோவிலில் குழந்தைக்கு இன்று முடியெடுத்தது. குலதெய்வங் கட்கு இன்று ஆடுகள் வெட்டிப் பூஜை செய்கிறார்கள். இன்னும் இரண்டு நாளைக்குள் வீடுகள் தோறும் கிராம தேவதையாகிய துர்க்கைக்கு ஆடுவெட்டப் போகிறார்கள். எனக்கு என் கடமை யின்னதுதானென்று தெளிவு பிறவாமலும், யாதொரு நற்செயலையும் துணிந்து செய்ய ஆற்றலில்லாமலும் இருக்கிறது. ஆடு பலியிடும் இடத்திற்கு நானும் போயிருந்தேன். உலக மாதாவைப் பராசத்தியாகவே கருதித் துதி செய்தேன். பலியிடப் படும் ஆடு நற்கதியடைய வேண்டுமெனவும் வேண்டினேன். ஆண்டவன் தன் அருள் வழியில் நடத்தியாதேனும் ஒருவழியில் தொண்டியற்றும் ஆற்றலை எப்பொழுது தந்தருள்வானோ அறிகின்றிலேன்.

இன்று உரையெழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயமெய்தித் தரிசித்தேன்.

**8 - 5 - 26**

வேலையொன்றும் சரியாக நடக்கவில்லை. சிறிது உரையெழுதினேன். இன்று என் தாயாதிகளில் ஒரு பையன் சீட்டாடுவதற்காக இரண்டு ரூபாய் கடன் கேட்டான். பொய் சொல்லலாகாதென்று எவ்வளவு மழுப்பிப்பார்த்தாலும் பொய் சொல்ல நேர்ந்து விடுகிறது. அவனுக்குக் கொடுப்பதில் சிறிதும் விருப்பமில்லை. 'பணம் இருக்கிறது; உனக்குத் தரமாட்டேன்' என்று சொல்லவும் எனக்குத் துணிவில்லை. பொய்யும் மெய்யுமாக அவனுக்கு என்னென்னவோ சொல்லிப் பணம் கொடாது தப்பினேன்.

**9 - 5 - 26**

இன்று கிராம தேவதைகள் தேரில் வந்தன. வீடுகளில் ஆடுகள் வெட்டப்பட்டன. எங்கள் வீட்டிலும் வெட்டினார்கள். நான் ஒரு பாவி எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். இது தவிரவும் கிராமங்களின் நிலைமை பலவிதத்திலும் சீர்கேடடைந் திருக்கிறது. அறியாமையும் அகங்காரமும் குடி கொண்டிருக் கின்றன. கிராமத்தில் சிலர் சிலகாலம் உழைத்து விவசாயஞ் செய்துவிட்டு எஞ்சிய காலங்களையெல்லாம் சூதாட்டத்திலும் வேறு பல தீய செயல்களிலும் செலவிடுகின்றார்கள். வேறு சிலர் உழைப்பென்பது சிறிதும்இன்றிக் காலம் முழுதையும் தீய வழியிற் செலவிடுகின்றார்கள். இவர்களெல்லாம் பொறாமை குடி கொண்டவர்களாய் ஒருவர் ஒருவரைக் கெடுக்கவே சூழ்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நல்லோரென ஒருவர் இருவரைக் காண்பது அருமையாகின்றது. அன்றியும் சில காவிகள் சேர்ந்து கொண்டு ஊரை ஆட்டிவைத்து விடுகிறார்கள். இன்றுதேர் கொண்டுவந்ததில் எங்கள் வீட்டுக்குப் பாதகமான சூழ்ச்சியும் நடந்துளது. இவர்களால் எங்கட்கு யாதொரு ஆபத்தும் ஏற்படா தெனினும் என் மனம் கோபத்திலும் செருக்கிலும் விஞ்சியிருந்தது. கிராம வாழ்க்கையை மேற்கொண்டிருப்பின் நானும் ஏனையர் போன்று ஆகிவிடுவேனோ எனவும் கருத நேர்கின்றது. என் மனம் இவ்வாறு தத்தளித்தமையால் நான் உரையெழுத முடியவில்லை. தமிழ்ப்பொழிலின் இரண்டு இதழ்கள் சேர்ந்த பத்திரிகை இன்று அருமை நண்பர் திரு. R. வே. பிள்ளையவர்கள் எழுதிய இரண்டு அழகிய கட்டுரைகள் படித்தேன்.

## 10 - 5 - 26

இன்று சிறிதளவே உரையெழுதினேன்.

திங்கட்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்தேன்.

## 11 - 5 - 26

இன்று பகல் முழுதும் உரையெழுதிக் கொண்டிருந்தேன். உரையெழுதிய பகுதியுள் பிராட்டியார் திருவவதாரப் படலம் முடிய இன்று சென்னைக்கு ரிஜிஸ்தர் செய்து அநுப்பினேன். என் அருமை நண்பராகிய உப்பிலிபாளையம் திரு. R.V. இலட்சுமணன் நாயுடுகாருக்கு ஓர் கடிதம் எழுதினேன். நான் கோயமுத்தூரில் 1909-ம் ஆண்டில் செண்ட் மைக்கல் ஐஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக இருந்தபொழுது என்னிடம் 4வது பாரத்தில் படித்தவர் இவர். பெரிய குடும்பத்திற் பிறந்தவர். அது முதல் எனக்குச் சிறந்த நண்பராய் இருந்து வருகின்றார். மிகுந்த தாராளமான குணமுடையவர். என்பால் அளவு கடந்த அன்பும் மதிப்புமுடையவர். கபிலர் என்னும் நூல் அச்சிட எனக்கு இவர் முந்நூறு ரூபாய் அநுப்பினார். மற்றும் எவ்வளவும் நான் செய்யக்கூடிய காரியங்கட்கு உதவக் கூடியவர். இவ்வளவு சிறந்த அன்பருக்கு ஒன்றிரண்டு ஆண்டுகளாக நான் கடிதம் எழுதவில்லை. அவருடைய கடிதமும் கிடைக்கப் பெற்றே னில்லை. நான் அவருக்கு எழுதாமலிருப்பது குறித்து அடிக்கடி நினைத்து வருந்துவதுண்டு; இன்று ஒரே பிடிவாதமாகக் கடிதம் எழுதினேன். அவர்களுடைய சுகத்தைக் குறித்து அவரது கடிதம் பார்த்த பின்பே என் மனம் ஆறுதலடையும்.

## 12 - 5 - 26

இன்று காலையில் ஆற்றில் நீராடி வரும்பொழுது பிள்ளையார் கோயிலில் கும்பிட்டு நின்றேன்; அப்பொழுது கோயிலினுள்ளே கலகலவென்னக் கவுளி சொல்லிற்று. வருடப் பிறப்பன்றும் இவ்வாறு சொல்லிற்று. இது எப்பொழுதும் பெறக் கூடியதன்று; ஏதோ விசேடமிருத்தல் வேண்டும். இன்று நண்பகற்குப் பின்னரே உரையெழுதலானேன். கால நிலை நன்றாயில்லாமையால் உடம்பு அவ்வளவு நன்றாயிருப்பதில்லை. இன்று கார்த்திகை விரதம். இரவில் இவ்வூர்ச் சிவாலயமெய்தித் தரிசித்தேன். முருகப் பெருமான் சந்நிதியில் விளக்கில்லா திருந்தது மனதிற்கு வருத்தமாயிருந்தது.

**13 - 5 - 26**

*இன்று உரையெழுதியது மிகவுஞ் சிறிதே.*

**14 - 5 - 26**

*காரைப்பாக்கம் சுவாமி திருவதிகை மடத்தில் இருக்கிறாரெனச் சின்னாளின் முன் கேள்வியுற்றேன். நேற்றிரவு கனவில் நான் திருவதிகை சென்று ஆண்டவனைத் தரிசிப்ப தாகவும், காரைப்பாக்கம் சுவாமியையும் அப்பொழுது கண்டு கும்பிட்டு அளவளாவியதாகவும் கண்டேன். இவர்களைப் பற்றி முன் எழுதியிருக்கிறேன். இன்று தபாலில் ஐந்து கடிதங்கள் எழுதினேன். தபாற் செலவு அளவுக்கு மிஞ்சியாகிறது. இம்மாதம் 14-தேதிக்குள் 13 அணா ஆகியிருக்கிறது; இன்னும் எழுத வேண்டியன இருக்கின்றன. நண்பகற்குப்பின் உரை யெழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்தேன்.*

**15 - 5 - 26**

*நேற்றிரவு கனவில், எனக்கொரு ஆண் குழந்தை பிறந்திருப்ப தாகவும், அதனை நான் கையில் ஏந்திக் கொண்டு அதற்கென்ன பெயர் வைப்பதெனப் பலவாறு ஆலோசித்து ஒரு மண்டபத்தி லிருந்த விக்கிரகங்கள் பலவற்றையும் பார்த்து வந்து முடிவாகச் சொக்கலிங்கம், மீனாக்ஷிசுந்தரம், சோமசுந்தரம் என்னும் மதுரையிலெழுந்தருளியிருக்கும் கடவுள் பெயரில் ஒன்று வைக்கத் தீர்மானித்ததாகவும் கண்டேன். கனவு அவ்வளவு தெளிவாயில்லை. மற்றும் ஏதோ கண்டேன்; புலனாகவில்லை.*

*இன்று ஒரு வேலையும் நடைபெறவில்லையென்றே சொல்ல வேண்டும் காலத்தின் தட்ப வெப்பங்கள் ஒரு நிலையிலில்லாமையால் வருந்த முண்டாகிறது.*

**16 - 5 - 26**

*திருவிளையாடல் உரை முதற்பாரம் அச்சிட்டு வந்ததை இன்று திருத்தினேன். உரையும் ஒருவாறு எழுதிக் கொண்டிருந்தேன். மாலையில் இடிமின்னலோடு மழை பெய்தது. இடிமுழக்கத்தைக் கேட்டால் எனக்குண்டாகும் அச்சம் நகைக்கத்தகுந்தது. உண்மையான கடவுள் நம்பிக்கையும் மனத் தூய்மையும் எனக்கில்லா திருப்பதே இதற்குக் காரணம். இரண்டு நாளாக ஆங்கிலம் சிறிதும் படிக்கவில்லை. இரண்டு மூன்று மாதமாக மாதப் பத்திரிகைகளும் நான் சரியாகப் படிப்பதில்லை. நேற்றிரவிலும் இன்றிரவிலுமாக ‘செந்தமிழ்ச் செல்வி’ இரண்டு சஞ்சிகையில்*

வெளியான 'சைவ சமயத்தின் தற்காலநிலை' என்னும் கட்டுரையைப் படித்தேன். இது திருவாளர் S. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ; எல். டி. அவர்களால் எழுதப் பட்டது. சைவசமயச் சார்பாகச் செய்ய வேண்டிய சீர்த்திருத்தங்கள் இதில் நன்றாக எழுதப்பட்டுள.

**17 - 5 - 26**

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 'பண்டித பரீக்ஷை' இலக்கியம் I (சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரிய புராணம், திருக்கோவையார் இவற்றில்) வினாக்கடிதம் கொடுத்திருந்தேன். இன்று அவர்களின் விடைக்கடிதங்களைத் திருத்தினேன். பரீக்ஷைக்கு எழுதிய நால்வரில் இருவர் முதல் வகுப்பு அமிசமும், ஒருவர் இரண்டாவது வகுப்பு அமிசமும் பெற்றுளர். ஒருவர்க்குச் சிறிது குறைந்துளது. உரையும் எழுதிக் கொண்டிருந்தேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயமெய்தித் தரிசித்து வந்தேன்.

**18 - 5 - 26**

சிறிது உரையெழுதினேன். இந்த விடுமுறையில் மிகுதியான வேலை செய்ய எண்ணியிருந்தேன். ஒன்றும் நடைபெறவில்லை. 'அவனன்றியோரணுவும் அசையாது!'

**19 - 5 - 26**

இன்றும் சிறிதே உரையெழுதினேன். இண்டர் மீடியட் ரிசல்ட் நேற்றுப் பத்திரிகையில் வெளியாயிற்றென அறிந்து இன்று பார்த்தேன். சென்ற ஆண்டு இதைப் பார்க்க மிகுந்த பதைப்புடனிருந்தேன். இவ்வாண்டு அப்படியொன்று மில்லை. மாணாக்கர்களின் நம்பர் என்னிடம் இல்லாமையால் தேறினவர் களைப் பற்றி நான் ஒன்றும் அறிவதற்கில்லை. ஆங்கிலத்திற்கு மாத்திரம் பரீக்ஷைக்குப் போயிருந்த என் அன்பு மாணவர் A. வெங்கடேசனது நம்பரை மாத்திரம் வைத்திருந்தேன். அவன் தேறாமையுணர்ந்து மிக வருந்தினேன். அவன் நிலைமை மிகவும் சங்கடமானது. இன்று பகலில் 'சுதேசமித்திர'னும் இரவில் மாதப்பத்திரிகைகளும் படித்தேன்.

**20 - 5 - 26**

இன்று உரையெழுதியதுடன் மெய்கண்டசாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகிய 'நெஞ்சுவிடு தூது'ப் படித்தேன். இஃது உமாபதிசிவாசாரியரால் தம் ஆசாரியராகிய மறைஞான சம்பந்த சிவாசாரியர் மீது பாடப் பெற்றது. என் நண்பர்

திரு. இலக்குமண நாயுடுவிடமிருந்து கடிதம் வந்ததால் என் கவலையின் ஒரு பகுதி நீங்கிற்று.

**21 - 5 - 26**

இன்று உரையெழுதியதுடன், 'மெய்கண்டசாத்திரம்' பதினான்கனுள் ஒன்றாகிய 'இருபாஇருபஃ'தில் ஒரு பகுதி படித்தேன். இஃது அருணந்தி சிவாசாரியரால் தம் ஆசிரியராகிய மெய்கண்டதேவர் மீது பாடப்பெற்றது. சைவசித்தாந்த உண்மைகள் பலவற்றை ஆசிரியரிடம் வினவு முறையாக இதில் வெளிப்படுத்தி யிருக்கிறார். இதனை நான் இன்னும் நன்றாய்ப் படிக்க வேண்டும். இவைகளைப் படிக்கும் பொழுது இவ்வளவு மேன்மையுடைய தெய்வீக புருடர்களும் சில நூற்றாண்டுகளின்முன் இந்நாட்டி லிருந்திருக்கிறார்களேயென்று ஒருவித உணர்ச்சியும் உருக்கமும் உண்டாகின்றன. இன்று மற்றும், கலித்தொகையிற் சில பாட்டுக் களும், பெருங்கதையிற் சிறிதும் படித்தேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்து வந்தேன்.

**22 - 5 - 26**

இன்று பகல் முழுதும் உரையெழுதுதல், படித்தல் ஆகிய வேலை ஒன்றும் நடக்கவில்லை. பயணத்திற்குச் சித்தஞ் செய்ததும், இரண்டு மூன்று கடித மெழுதியதுமே செய்த அலுவலாகும்.

**23 - 5 - 26**

இன்று காலையில் நடுக்காவேரியினின்றும் புறப்பட்டுக் கரந்தை வந்து சேர்ந்தேன். இரவு 8-மணி வண்டியில் நண்பர் திரு R. வே அவர்களுடன் பூதலூர் சென்று இரவு 10-மணிக்குக் கறையான்பட்டி சேர்ந்தேன்.

என் அன்புள்ள மாணவர் உலகதாசு உடம்பு நலமின்றியிருந் தமையின் அவரைப் பார்க்கவே அங்கே சென்றது. மெய்கண்ட நூலுள் ஒன்றாகிய 'வினாவெண்பா' ஒரு முறை பார்த்தேன்; பொருள் தெளிவாகவில்லை. இன்று வேறு வேலையிலது.

**24 - 5 - 26**

இன்று காலை 5 மணிக்கே கறையான்பட்டியினின்றும் புறப்பட்டுத் தஞ்சை வந்தோம். தம்பி மு. கோவின் கல்யாண சம்பந்தமாக ஒரு முயற்சி செய்தேன். நண்பகற்குப் பின் கலித் தொகையில் 6-பாட்டும், மெய்கண்ட நூலுள் 'போற்றிப்

பஃறொடை'யும் படித்தேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு கரந்தையிலுள்ள சிவாலயத்தையடைந்து தரிசித்தேன்.

**25 - 5 - 26**

கரந்தையினின்றும் இன்று பகல் 12 மணிக்குப் புறப்பட்டு இரவு 8-மணிக்கு மேல் திருப்பாதிரிப் புலியூர் சேர்ந்தேன். நான் வருவதற்குள் சபையின் முதல்நாள் உபந்நியாசங்கள் முடிந்து சபை கலைந்து விட்டது. ரயிலில் வரும்பொழுது மெய்கண்ட நூலுள் ஒன்றாகிய 'உண்மை விளக்கம்' படித்து முடித்தேன். இது மெய்கண்ட தேவர் மாணாக்கருள் ஒருவராகிய திருவதிகை மனவாசகங்கடந்தார் பாடியது. தாம் வினாவுவதும் மெய் கண்டார் விடை கூறுவதுமாகச் சித்தாந்த தத்துவங்களை வெண்பாவாலுரைப்பது. இரவில் இத்திருப்பதியில் கைலாய வாகனத்தில் அம்மையப்பர் திருவுலாப் போந்தமை தரிசித்தேன்.

**26 - 5 - 26**

இன்று எனக்கு உடம்பு நலமின்றியிருந்தமையால் மாலையில் நடைபெற்ற உபந்நியாசங்களைக் கேட்கவுங் கூடவில்லை. மெய்கண்ட நூலுள் ஒன்றாகிய 'திருவருட்பயன்' ஒருவாறு பார்த்தேன். என்பாற் பேரன்புடையவரான காரைப் பாக்கம் சுவாமிகள் வந்திருந்தனர்.

**27 - 5 - 26**

இன்று பகலில் திருப்பாதிரிப்புலியூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்தேன். மாலையில் நடந்த சபையில் திரு அனந்த ராமையா 'கலித்தொகை ஆராய்ச்சி' என்பது பற்றியும், என் அன்பர் திரு. ஆ. கார்மேகக்கோனார் 'பண்டைத் தமிழ்ப் புலவர்' என்பது பற்றியும், திரு. செங்கல்வராய பிள்ளை 'அருணகிரி நாதர்' என்பது பற்றியும் பேசிய உபந்நியாசங்களை கேட்டேன். கடைசியாக எனக்குக் குறிக்கப்பட்டிருந்த 'அடிப்படை' என்னும் பொருள் பற்றி நான் உபந்நியாசித்தேன்.

**28 - 5 - 26**

இன்று சென்னைக்கு வரவிருந்த நான் அன்புடையார் சிலர் விரும்பியபடி அவர்களுடன் நேற்றிரவு வண்டியிற் புறப்பட்டு இன்று காலை காஞ்சிபுரம் எய்தினேன். மாலையில் வழக்கறுத்தீசர் கோயிலில் கூடிய சபையில் காஞ்சியின் பெருமையைக் குறித்துச் சிறிது பேசினேன். வெள்ளிக்கிழமை யாகிய இன்றிரவு காஞ்சி யிலுள்ள திருக்கச்சபேஷம், திருவேகாம்பரம், கச்சித் திருமயானம்,

குமரகோட்டம், காமகோட்டம் என்பன தரிசித்தேன். ஏகாம்பர நாதர் தெப்பத் திருவிழா நடைபெற்றது. பெருமான் சிவ தீர்த்தத்தில் தெப்பத்தில் விளையாடித் திரும்பி வரும்பொழுது தரிசித்தேன். காமகோட்டத்தில் கூட்டம் மிகுதி. வரதராஜப் பெருமாள் கருடஉற்சவத்திற்குக் கூட்டம் அளவின்றி வந்திருந்தது. பெருமாள் திருவுலாவும் தரிசித்தேன்.

**29 - 5 - 26**

இன்று சைவ சமய குரவராகிய திருஞான சம்பந்தப் பெருமான் திருநல்லூர்ப் பெருமணத்தில் அடியார் கூட்டங் களுடன் சோதியிற் கலந்தருளிய திருநாளாகிய வைகாசி மூலம் ஆகும். இன்று காஞ்சியில் திருக்குறிப்புத் தொண்டர் முத்திபெற்ற முத்தீசம், ஆனந்தருத்திரேசர் ஆலயம், திருமேற்றளி, திருஅநேகதங்காவதம், கைலாசநாதர் கோயில், திருஓணகாந் தன்றளி என்பன தரிசித்தேன். அநேக தங்காவதமும், ஓண காந்தன்றளியும் திருக்காப்பிடப்பட்டிருந்தன. கைலாச நாதர் கோயில் அமைப்பு முற்றிலும் சிவாலய அமைப்புடன் மாறுபட்டுளது. புத்த ஆலயமாகவிருந்து சிவாலயமாக மாறின தென நினைக்கும்படியிருக்கிறது. திருநெறிக் காரைக்காடும், கச்சிக் காரோணமும் தரிசிக்கவில்லை. கச்சித் தேவாரப் பதிகங்களை இன்று ஒரு முறைபடித்தேன். மாலை மோட்டாரில் புறப்பட்டுச் சென்னையை அடைந்து திருவல்லிக்கேணியில் என் அன்பர் S. குமாரசாமி முதலியார் இருக்கையை அடைந்தேன்.

**30 - 5 - 26**

எங்கள் கல்லூரியில் பி. ஏ. வுக்குத் தமிழ் எடுத்துப்படித்துப் பரீஷைக்கு எழுதிய சங்கரலிங்கம் பிள்ளை முத்தைய முதலியார், கல்யாண சுந்தரம் பிள்ளை என்னும் மாணவர் மூவரும் தமிழில் தேறின செய்தி இன்றே உணர்ந்தேன். முன்னவர் இருவரும் இரண்டாவது வகுப்பில் தேறியுள்ளார். பின்னையரிருவரும் ஆங்கிலத்தில் தேறவில்லை. இன்று மாலையில் சென்டரல் ஸ்டேஷன், மூர்மார்க்கெட் முதலிய இடங்களை அன்பர் களுடன் சுற்றிப் பார்த்தேன். பிராட்வே முதலிய இடங்களில ஜனம் ஒதுங்குதற்கிடமில்லாது மோட்டார் முதலியன பறந்து கொண்டிருப்பதைக் காண எனக்கு வெறுப்பேயுண்டாகிறது. ரெயில், கார் முதலியவற்றில் காந்தியடிகள் கொண்டுள்ள வெறுப்பு நியாயமானதென்று இப்பொழுது சிறிது புலனா கின்றது. "பத்தெட்டு நாளைப் பயனிலா வாழ்க்கைக்கு வித்துக் குற்றுண்பார் பலர்"

**31 - 5 - 26**

என் தம்பி கோவிந்தராஜாவுக்குப் பெண் பேசுதல் கருதி இப்பட்டணத்தில் பெருந்தனிகராயுள்ள திரு. R. பழனியாண்டி பிள்ளை பங்களாவுக்கு அன்பராகிய டாக்டர் சின்னசாமி பிள்ளையவர்களுடன் சென்று வந்தேன். இவர் இரண்டாண்டின் முன்பே பெண் கொடுக்க விரும்பி வலிதிற் பேசியவர்; இப்பொழுதும் கொடுக்க விருப்பமுள்ளவர் களாகவே காணப்படுகின்றார்கள். இன்று திங்கட்கிழமை யாயினும் கோயிலுக்குச் சென்று தரிசிக்குமாறில்லையாயிற்று.

**1 - 6 - 26** ***(அக்ஷய, வைகாசி, 16ம் தேதி)***

ரெவின்யூபோர்டுஆபீசு, செனட் ஹௌஸ், தமிழ் லெக்சிகன் ஆபீஸ் என்பவற்றையும், வேறு சில இடங்களையும் சுற்றிப் பார்த்ததன்றி வேறு அலுவல் ஒன்றும் நடந்ததில்லை.

**2 - 6 - 26**

இன்றும் சில இடங்கள் சுற்றியதன்றிச் செய்ததொன்று மின்று. பிரயாணத்தில் படித்தற்காகப் புத்தகங்கள் எடுத்து வந்தேனே யாயினும் யாதும் படிக்கக் கூடவில்லை.

**3 - 6 - 26**

டைரெக்டர் ஆபீஸ் முதலிய சில இடங்களுக்குப் போய் வந்தேன்.

**4 - 6 - 26**

திருவிளையாடல் உரை முன் இரண்டு பாரம் ப்ரூப் பார்த்துக் கொடுத்தேன். மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள் இருப்பிடமடைந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலைப் பற்றி நான் கொண்ட கருத்தினை அவர்கட்குத் தெரிவிக்க, அவர்களும் அப்படியே என ஒத்துக் கொண்டார்கள். மாலையில் (வெள்ளிக்கிழமை) திருவெட்டீசுவரன் பேட்டையிலுள்ள சிவாலய மெய்தித் தரிசித்தேன். ஊர்வருதற்கு, இரவு 9-மணிக்கு எழும்பூர் ஸ்டேஷனில் வண்டியேறினேன். ஸிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜன் ஆகிய திருவாளர் சின்னசாமி பிள்ளையவர்கள் ஸ்டேஷனுக்கு உடன் வந்து வண்டியேற்றி விட்டார்கள். மற்றை அன்பர்களாகிய குமாரசாமி முதலியார் தியாகராஜ பிள்ளை இருவரும் உடம்பு நலமின்றியிருந்தமையால் ஸ்டேஷனுக்கு வரக்கூடாதவர் களாயினர். நாலைந்து நாட்களாக வேறு வேலையின்றி

என்னுடன் சுற்றிக் கொண்டிருந்தவர் டாக்டர் சின்னசாமி பிள்ளையவர்களே. டாக்டரவர்களின் உயர்குணங்கள் மிகவும் பாராட்டற் குரியன. பெரிய புராணத்தில் அவருக்குள்ள அன்பும் அளவிடற்பால தன்று. என்னிடம் மிக்க அன்பும் மரியாதையும் உடையர்.

**5 - 6 - 26**

இன்று காலை 10 மணிக்குக் கரந்தை வந்து மாலை 6-மணிக்கு நடுக்காவேரி வந்து சேர்ந்தேன். இரண்டு மூன்று நாட்களாக நான் வராமை குறித்துக் குழந்தைகள் மிக்க கவலையடைந்திருந்தார் களாம்.

**6 - 6 - 26**

இன்று ஆங்கிலம் சிறிது படித்தேன். நான் சென்னையில் விலைக்கு வாங்கி வந்திருந்த 'தேவாரம் வேதசாரம்' என்னும் புத்தகத்தின் முகவுரை முதலியவற்றை இரவிற் படித்தேன்.

**7 - 6 - 26**

நான் தம்பிக்குப் பெண் பேசியது நிறைவேறாதாயிற்று. அவர்களனைவர்க்கும் பெண் கொடுக்க மிகுந்த விருப்பமிருந்தும் ஜாதகத்தில் பொருத்தமில்லாமையால் இயலவில்லையென அவர்கள் அறிவித்த கடிதம் இன்று கிடைத்தது. பிரயாணத்தில் 'நித்தல் நிகழ்ச்சி' பென்சிலால் குறித்து வந்ததில் ஒரு பகுதியை இப்புத்தகத்தில் எழுதியதும், சில கடிதங்கள் எழுதியதுமே இன்று செய்த அலுவல். இன்று திங்கட்கிழமையாகவும் கோயிலுக்கும் போகக் கூடவில்லை.

**8 - 6 - 26**

'நித்தல் நிகழ்ச்சி'யின் பென்சிற் குறிப்பு எஞ்சிய பகுதியை இதில் எழுதினேன். சில கடிதம் எழுதினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன். கார்த்திகை நாளாகிய இன்று இவ்வூர்ச் சிவாலய மெய்தித் தரிசித்தேன்.

**9 - 6 - 26**

சிறிது ஆங்கிலம் படித்தேன். திருவிளையாடல் உரையினை மீட்டும் எழுதத் தொடங்கிச் சிறிது எழுதினேன். திரிசிரபுரத்திற் சிலர் என்னிடம் பகைகொண்டு சில காரியங்கள் செய்கின்றனரென இன்று வந்ததொரு கடிதத்தாலறிந்தேன். எனக்கு இஃதோர் சோதனைக்காலம். சிவபெருமான் தன் அருள் வழியில் என்னை நடத்தியருள்வன் என்னுந் துணிபுடையேன்.

**10 - 6 - 26**

‘இன்னா செய்தார்க்கும் இனியவே செய்’யும் குணத்தினை எனக்குத் தந்தருள வேண்டுமெனவும், நேற்று நண்பகல் தொடங்கி என் ஆண்டவனை நினைந்து புலம்பு வேனாயினேன்; இன்று காலையில் ஆற்றில் ஸ்நானஞ் செய்து வரும்பொழுது விநாயகப் பெருமான் ஆலயத்தில் கும்பிட்டுக் குறையிரந்து நின்றேனாக, இறைவன் வில்வத்தடியிற் பல்லியின் சொல்லாற் கலகல வென்றருளிய அருண்மொழி நாயினேனது துன்பத்தைத் துடைப்பதாயிற்று. என் ஆண்டவன் செய்யும் பேரருளுக்கு எளியேன் யாதுகைம்மாறியற்றவல்லேன். இஃதெழுதியவுடன் ஓர் கருடப்பக்ஷியானது மெத்தையில் பலமுறை குரலெழுப்பியது. நாலைந்து நிமிஷம் வரையில் அது தாமதித்திருந்தது எனக்கு வியப்பை விளைத்தது. வேலை யொன்றும் நடைபெறவில்லை.

**11 - 6 - 26**

உரையெழுதுவது அடியோடு நின்றுளது; திரிசிரபுரம் சென்றுதான் எழுதத் தொடங்க வேண்டும். வேலை யொன்றும் நடக்கவில்லை. சிறிது ஆங்கிலம் படித்தேன். வெள்ளிக்கிழமை யாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயமடைந்து தரிசித்தேன்.

**12 - 6 - 26**

இன்று சிறிது ஆங்கிலம் படித்ததன்றி வேறுவேலையிலது. ஆங்கிலம் படிப்பதென்பது கிறிஸ்தவர் வேதமாகிய பைபிளைத் தமிழ் மொழி பெயர்ப்பின் உதவி கொண்டு ஆங்கிலத்திற் படித்து வருவதாகும். இங்ஙனம் படிப்பதால் ஆங்கிலப் பயிற்சியுண்டாவ தோடு பைபிளிற் கூறிய பொருள்களும் நன்கு தெளிவாகின்றன. முன்பு தமிழிற் படிக்கும் பொழுது அதிலுள்ள குறைகளிற் பெரிதும் நோக்கமுடையவனாயிருந்தேன். இப்பொழுதோ அதின் நலங்களில் நோக்கமுடையேனாகின்றேன். எல்லா மதங்களிலுமுள்ள நலங்களையறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது என் கருத்தாகவுள்ளது. இப்பொழுது நான் படித்து வருகிற மத்தேயுவின் 5-ம் அதிகாரம் என் மனதைப் பெரிதும் கவர்ந்துளது.

**13 - 6 - 26**

சிறிது ஆங்கிலம் படித்தேன். ஞானவாசிட்டம் தமிழ்ச் செய்யுள் படித்தேன்.

**14 - 6 - 26**

ஞானவாசிட்டம் படித்தேன்; நேற்றும் இன்றுமாக வாசிட்டத்தில் முதலிலிருந்து லீலைகதை முடிய 323-செய்யுட்கள் படிக்கப்பெற்றன. சிறிது ஆங்கிலம் படித்தேன். திங்கட்கிழமை யாகிய இன்றிரவு இவ்வூர்ச் சிவாலயம் எய்தித் தரிசித்தேன்.

**15 - 6 - 26**

இன்று கலித்தொகையில் மூன்று பாட்டும், ஆங்கிலமும் படித்தேன்.

**16 - 6 - 26**

இன்றுவந்த 'செந்தமிழ்ச் செல்வி'யின் ஓர் சஞ்சிகையும், ஆங்கிலமும் படித்தேன்.

**17 - 6 - 26**

நடுக்காவேரியிலிருந்தும் இரவு 4-மணிக்குப் புறப்பட்டு இன்று காலை 10-மணிக்குக் குடும்பத்துடன் திருச்சிராப்பள்ளி யிலுள்ள 'திருநாவுக்கரசர் தமிழகம்' அடைந்தேன். இன்று பிறிதொரு வேலையும் செய்ததின்று.

**18 - 6 - 26**

குழந்தை சிரஞ்சீவி நடராஜன் பரீட்சையிற் றேறி இன்று I பாரத்தில் சேர்ந்தான். சென்னையிலிருந்து இன்று வந்த கடிதம் மகிழ்ச்சியளிப்பது; என் தம்பி சிர. கோவிந்தராஜாவின் கல்யாண சம்பந்தமாக நான் செய்த முயற்சி இடையே பயனற்றதாகக் காணப்பட்டு, இப்பொழுது பயன்றருவதாகப் புலப்படுகிறது; நான்கு நாளில் எல்லாம் நிச்சயமாகக் கூடும்; சில கடிதங்கள் எழுதியதே இன்று புரிந்த வேலை.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயிலை யடைந்து நெடுநாளாகத் தரிசிக்கப் பெறாதிருந்த என் தாயாகிய பரம் பொருளைத் தரிசித்தேன். கோயிலை மும்முறை வலம் வந்து மீளுந்தருணத்தில் நடராஜப் பெருமானுக்கு விசேட அபிடேகஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுதே ஆனித் திருமஞ்சனம் என்பதை அறிந்தேன். அபிடேகமாகித் தீபாரதனை செய்யும் வரையிலிருந்து தரிசித்தேன். சிவபெருமான் திருவருளே என்னைச் சிறிது தாமதமாக வரச் செய்து திருமஞ்சனம் தரிசிப்பித்தது என உணர்ந்தேன்.

**19 - 6 - 25**

*திருநெல்வேலியிலுள்ள தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் நடத்தும் 'தமிழ்ப்புலவர்' தேர்ச்சிக்கு இன்று ஒரு வினாக் கடிதம் தயாரித்ததன்றி வேறு வேலையில்லை.*

**20 - 6 - 26**

*இன்று மற்றொரு வினாக்கடிதம் தயாரித்து இரண்டையும் திருநெல்வேலிக்கு அநுப்பினேன். என் அன்புள்ள மாணவர் சிரஞ்சீவி உலகதாசிடமிருந்து வந்த கடிதத்தால் அவர் மீட்டும் மீட்டும் பிணியால் வருந்துவதறிந்து கவலாநின்றேன். இறைவன் அவர்க்கு நலத்தையும் நீடிய ஆயுளையும் தந்தருள்வானாக. மாலையில் தஞ்சை சென்று கரந்தையை அடைந்தேன்.*

**21 - 6 - 26**

*சென்னையிலிருந்து என் தம்பியை (மாப்பிள்ளை)ப் பார்க்க வந்த திருவாளர்கள் ப. இராமசாமிப்பிள்ளையவர்களையும் சபாபதிப்பிள்ளையவர்களையும் காலை போட் மெயிலில் சந்தித்தேன். 10-மணிக்குத் திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் வீட்டிற்கு வந்து தம்பியைப் பார்த்தார்கள். பகல் 1½ மணிக்குமேல் அவர்களும் நானுமாக ஒரு காரில் நடுக்காவேரி சென்று சிற்றுண்டியருந்தி மாலை 5 மணிக்குத் திரும்பினோம். பெண் கொடுப்பதில் திருப்தியடைந்திருக் கிறார்கள்.*

*திங்கட்கிழமையாகிய இன்று திருக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.*

**22 - 6 - 26**

*தஞ்சையிலிருந்து இன்று காலை திரிசிபுரம் வந்தேன். கோடை விடுமுறையின்பின் இன்று எங்கள் காலேஜ் திறக்கப் பெற்றது. காலேஜ் சென்று வந்தேன். வேறு வேலையில்லை.*

**23 - 6 - 26**

*இன்று காலேஜில் பாடம் நடத்தினேன். என் அன்பினர் வந்திருந்தனர். ஆங்கிலம் சிறிது படித்தேன்.*

**24 - 6 - 26**

*கல்லூரி சென்று பாடம் நடத்தினேன். வேறு விசேடமின்று.*

**25 - 6 - 26**

*இன்று காலேஜ் சென்று வந்து, பல கடிதங்கள் எழுதினேன். மாலையில் கடிதங்கள் எழுதுவித்துக் கொண்டிருக்கும் பொழுதே மழைவந்து விட்டமையின் திருக்கோயில் சென்று வழிபடவில்லை. எனினும் வெள்ளிக் கிழமையென்பது கருதி இரவில் திருவாசகத்து முன் மூன்று அகவல்கள் படித்தேன்.*

**26 - 6 - 26**

*இன்று பகல் 12-மணிக்கு மேல் சென்னைக்குப் பிரயாணமாகி மனைவியோடும், குழந்தை மங்கையர்க்கரசி யோடும் திருச்சி ஜங்ஷன் சென்று, ட்ரெயின் தவறிவிட்டமை யால் மாலைவரை அங்கே காத்திருந்து மாலை 5-மணிக்குத் திருவனந்தபுரம் எக்ச்பிரசில் புறப்பட்டு வந்து, தஞ்சை ரயில்வே ஸ்டேஷனில் வந்து சந்தித்த என் தாய் தந்தையருடனும் சென்னைக்கு இரவு முழுதும் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தேன்.*

**27 - 6 - 26**

*இன்று காலை 7-மணிக்கு எழும்பூர் ஸ்டேஷனில் டாக்டர் சபாபதிப் பிள்ளையவர்கள் இரண்டு மோட்டார்காருடன் வந்து எங்களை அழைத்துச் சென்று தம் வீட்டில் இருக்கச் செய்தனர். இன்று ஞாயிற்றுக்கிழமையாகலின் விருந்துண்ணல் தகாதென்று ஒட்டலிலிருந்து கொணர்ந்த உணவினை உண்ணச் செய்தனர். என் தந்தையாரும் டாக்டர் சபாபதிப் பிள்ளையும் நானும் காரில் புறப்பட்டு, திரு. R. பழனியாண்டி பிள்ளையவர் களின் பங்களாவுக்குப் போய், பின் அவர்களின் கடைக்குப் போனோம். நிச்சய தாம்பூலத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்கச் செய்து, பின், நிச்சய தாம்பூலத்திற்கும் முகூர்த்தத்திற்கும் புடவைகள் எடுத்தோம். இரவில் திருவல்லிக்கேணி சென்று, கடலங்குடி நடேசசாஸ்திரியுடன் பார்த்து முகூர்த்தம் ஆனி மாதம் 27ம் தேதி வைத்துக் கொள்வதென்று தீர்மானித்தோம். பெண்ணின் தந்தையாகிய திரு. இராமசாமி பிள்ளையவர்கள் பொருத்தம் பார்ப்பதற்கென ஐந்து ரூபாயும், முகூர்த்தத்தேதி பார்ப்பதற்கு ஐந்து ரூபாயும் நடேசசாஸ்திரிக்குக் கொடுத்தனர்!*

**28 - 6 - 26**

*இன்று மாலை 7-மணிக்கு என் தம்பி சிரஞ்சீவி மு. கோவிந்தராஜாவுக்கு, திருவாளர் R. பழனியாண்டி பிள்ளையவர் களின் மூத்த மகனாயாகிய திருவாளர் P. இராமசாமி பிள்ளையவர்களின் முதற்புதல்வி சௌபாக்கியவதி*

லோக நாயகியம்மாளை மணஞ் செய்து செய்வதென நிச்சய தாம்பூலம் செய்யப்பெற்றது.

திங்கட்கிழமையாகிய இன்று நான் திருக்கோயில் சென்று வழிபடக் கூடவில்லை.

**29 - 6 - 26**

இன்று தாய் தந்தையர், மனைவி, மங்கையர்க்கரசி இவர்களுடன் ஒரு காரில் புறப்பட்டுச் சென்று பார்க், ஹைகோர்ட் முதலிய இடங்களை வேடிக்கை பார்த்து வந்தேன். கல்வி சம்பந்தமாகவும், ஆன்ம அபிவிருத்திக்குரியவுமான காரியங்களி லொன்றும் சில நாளாக நடைபெறவில்லை. திருவொற்றியூர் இவ்விடத்திற்குச் சமீபமாக இருந்தும் சென்று வழிபடவில்லை. இரவு 9½ மணிக்குச் சென்னையினின்றும் ஊருக்குப் புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறோம்.

**30 - 6 - 26**

என் தாய் தந்தையர்களைத் தஞ்சையில் விடுத்து நாங்கள் இன்று காலை 10½ மணிக்குத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தோம். வந்தவுடன் காலேஜ் சென்று ஒரு மணி பாடம் நடத்திவிட்டு வீடு வந்து உணவுண்டு இளைப்பாறினேன்.

**1 - 7 - 26** *(அக்ஷய, ஆனி, 17ம் தேதி)*

இன்று காலேஜிற் சென்று பாடம் நடத்தியதும் சில கடிதங்கள் எழுதியதுமே வேலை. காலேஜில் ஜூனியர் பி. ஏ. வகுப்பில் மூன்று மாணவர்கள் தமிழுக்கு வந்திருந்தனர். அவர்கட்கு முதன் முதலாகத் திருக்குறள் கடவுள் வாழ்த்தில் இரண்டு பாக்கள் பாடம் நடத்தினேன்.

**2 - 7 - 26**

இன்று காலேஜிற் சென்று பாடம் நடத்தியதே வேலை. வெள்ளிக்கிழமையாகிய இன்று மாலையில் வெள்ளெனவே புறப்பட்டு உச்சிப்பிள்ளையார் கோயில் சென்று தரிசித்து, மலைக்கோயிலில் அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

**3 - 7 - 26**

இன்று உரை ஒரு பாரம் அச்சுப் பிழைத்திருத்தியநுப்பிய தன்றி வேறு வேலையில்லை. இரவு 10-மணிக்கு என் தம்பி சிரஞ்சீவி கோவிந்தராஜா இங்கு வந்து சேர்ந்தார்.

## 4 - 7 - 26

கோவிந்தராஜாவுக்குப் பத்துப் பன்னிரண்டு நாளின் முன் ஒருமுறை மயக்கம் வந்ததென்றும், பெண் வீட்டினர் உறவினர் நாலுநாளின் முன் வந்து பார்த்துப் போயினரென்றும் அறியக் கவலையாயிருக்கிறது. இன்று பகல் 10 மணிக்குமேல் புறப்பட்டுக் கல்யாண சம்பந்தமான காரியமாகத் தஞ்சை சென்று இரவு 10-மணிக்கு மீண்டு வந்தேன்.

## 5 - 7 - 26

காலேஜில் பாடம் நடத்தியதும், கல்யாணப் பத்திரிகை அச்சிட்டு, அவற்றை அநுப்பவேண்டிய இடங்கட்கு விலாசம் குறித்ததும் இன்று புரிந்த அலுவல்கள். திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்துவந்தேன். என் தம்பியும் கோயிலுக்கு வந்து அருச்சனை செய்து வந்தார்.

## 6 - 7 - 26

இன்று விடியுமுன் 3-மணிக்கு என் மனைவி மக்களும், தம்பியும் நடுக்காவேரிக்குப் பிரயாணமானார்கள். நான் காலேஜில் பாடம் நடத்தியும், பத்திரிகை அநுப்புவதற்கு விலாசம் எழுதுவித்து மிருந்தேன். எனக்குத் தந்தி வந்து ப்யூன் வீட்டிலே தேடியதாகப் பகல் 2-மணிக்குமுன் கேள்வியுற்றேன். தந்தியால் கல்யாணத்திற்கு யாது தடையுண்டாமோ எனக் கவலையுற்று அதனைப் பெற்றுப் பார்க்க முயன்றேன். காலை 11½ மணிக்கு வந்த தந்தி மாலை 3½ மணிக்கே எனக்குக் கிடைத்தது. என் தம்பிக்கு மயக்கம் வருவதாகத் தாம் அறிவதாகவும், உடனே அவரும் நானும் சென்னைக்கு வரவேண்டுமென்றும், வந்தவுடன் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டுமென்றும் தந்தியிற் கண்டிருந்தது. கல்யாணத்திற்கு ஐந்து நாளின் முன் இவ்வளவு நெருக்கடியில் இப்படியாகத் தந்தி வருவதென்னில் இது எவ்வளவு கவலையையும் குழப்பத்தையும் விளைக்கக் கூடுமென்று சொல்ல வேண்டியதில்லை. எனினும் நான் ஒருவாறு தைரியமாகவே பதில் தந்தி கொடுத்துவிட்டு, அன்பர் தாயுமானவர் வீட்டிற்குச் சென்று அவரை அழைத்து வந்து, இரவு வண்டிக்கு அவர் நடுக்காவேரி போய் வரும்படி திட்டஞ் செய்தேன். வீட்டிற்கு வந்தவுடன் நிகழ்ந்த நிமித்தமும், பெரிய புராணத்திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தபொழுது கிடைத்த திருப்பாட்டுக்களும் திருப்தியை விளைத்தன. பின் சென்னைக்குக் கடிதமொன்றும் எழுதினேன். இறைவன் பயங்கரமான நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்துத் தன் திருவருட்

பெருமையை உணர்த்துவிக்கும் திருக்குறிப்பென்றே இவற்றை நினைக்கின்றேன்.

கார்த்திகையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்தேன். அம்மை சந்நிதியில் முதலிற் சென்று தரிசித்த பொழுது குருக்கள் குங்குமமும், பூவும் கொண்டு வந்து கொடுத்ததுடன், மாதக் கட்டளையாக சுவாமிக்கோ அம்மனுக் கோ நான் ஒரு அருச்சனை செய்யலாமெனக் கூறினர். நான் மிகுந்த பதைப்புடன் இருந்த தருணத்தில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சி எனக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் விளைத்தது. இறைவன் திருக்குறிப்பு நான் இவ்வாறு செய்ய வேண்டுமென இருக்கின்றது போலுமென நினைந்தேன். செய்வோமெனக் குருக்களுக்கும் கூறினேன். பெருமான் இப்பேற்றைத் தந்தருள வேண்டும். காலையில் திருமுருகாற்றுப் படைபாராயணஞ் செய்யும் பொழுது காலேஜூக்கு நேரமாகி விட்டமையால் மிக்க அவசரத்தில் சரியான உச்சரிப்புமின்றிப் படித்தேன். இரவில் முருகப்பிரான் சந்நிதியில் ஆற்றுப்படை முழுதையும் பாராயணமாகச் சொல்லித் துதித்தேன். இன்று தரிசனத்தில் பெருமான் திருவருள் கடையேன்றிறத்து முரியதாதல் புலனாயிற்று.

**7 to 16 - 7 - 26**

இந்தப் பத்து நாட்களும் என் தம்பியின் கல்யாண சம்பந்த மாகவே கழிந்தன. ஏறக்குறைய ஐம்பது நாட்கள் இக்காரியத்தால் வேறு வேலையில்லாதனவாயின. 7-ம் தேதியிரவு வண்டியிற் புறப்பட்டு 8-ம் தேதி காலை நானும் தம்பியும் சென்னை சேர்ந்தோம். இதற்கிடையே மூன்றிடங்கட்கு இருமுறை தந்திகள் வந்தன. கல்யாணம் மாற்றப்பட்டு விட்டதாகவும் தந்தி கூறிற்று. நாங்கள் சென்னைக்குச் சென்றபின் பலவாறு ஆலோசித்துக் குறித்ததேதியிலேயே கல்யாணம் நடத்துவதெனப் பெண் வீட்டார்கள் ஒத்துக் கொண்டபின் 8-ம் தேதி பகல் 12-மணிக்கு ஊருக்குத் தந்தி கொடுத்தோம். மலை போல் வந்த இடுக்கண் விலகிற்று; கவலையும் குழப்பமும் ஒழிந்தன. மக்கட்குச் சிறு செயலுமின்றென்பதையும், இறைவன்றிருவருளின் பெருமையையும் சிற்றறிவினேனும் உணரலாயினேன். 11-ம் தேதிக்குச் சரியான ஆனி மாதம் 27-ம் தேதி காலை 10-மணிக்குத் திருமங்கிலிய தாரணம் நிறைவேறிற்று. பெண்ணும் மாப்பிள்ளையும் அங்கியை வலமாக வரும்பொழுது பெண்ணாகிய லோகநாயகியின் அன்னம் போலும் நடை மிக்க வியப்பை விளைத்தது. 14-ம் தேதி பெண் மாப்பிள்ளை நடுக்காவேரிக்கு வந்து 15-ம் தேதி அழைத்துச்

செல்லப் பெற்றார்கள். இது சம்பந்தமான நிகழ்ச்சியனைத்தும் விபரமாயெழுதுதற்கு நேரமின்மையால் இத்துடன் நிறுத்து கின்றேன். 9-ம் தேதி வெள்ளிக்கிழமை சென்னையிலுள்ள கந்தசாமி கோயிலிலும், 10-ம் தேதி திருவொற்றியூரில் பட்டினத் தடிகள் கோயிலிலும், சிவாலயத்திலும், 16-ம் தேதி வெள்ளிக் கிழமை நடுக்காவேரிச் சிவாலயத்திலும் தரிசனஞ் செய்தேன். 12-ம் தேதி திங்கட்கிழமையும், 13-ம் தேதி மாணிக்கவாசகப் பெருமான் திருநாளும் ஆகவும், அந்நாட்களில் ஆலய தரிசனம் முதலியன செய்யக் கூடவில்லை.

**17 - 7 - 26** (அக்ஷய, ஆடி மாதம் 2ம் தேதி)

இரவு 4 மணிக்குப் புறப்பட்டு இன்று காலை நான் குடும்பத்துடன் மலைக்கோட்டையிலுள்ள திருநாவுக்கரசு தமிழகம் எய்தினேன். இன்று வேறு வேலையின்று.

**18 - 7 - 26**

திருவிளையாடல் உரை புரூப் திருத்தியதே இன்று வேலை.

**19 - 7 - 26**

காலேஜிற் பாடம் நடத்தி வந்து, திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன். மலைக் கோயிலையெய்தி நாயினேனையும் ஆண்டருளும் பெருமானை யும் பெருமாட்டியையும் தரிசித்து வந்தேன்.

**20 - 7 - 26**

கல்லூரியிற் பாடம் நடத்தியதும், சிறிது புரூப் திருத்திய நுப்பியதும் இன்றைய அலுவல்கள்.

**21 - 7 - 26**

கல்லூரியிற் பாடம் நடத்திவந்து மாலையில் உரை யெழுதினேன். நாடொறும் சிறிது ஆங்கிலமும் பயின்று வருகின்றேன்.

**23 - 7 - 26**

கல்லூரி வேலை முடிந்து சிறிது உரையெழுதியபின் 'தமிழ்நேச'னில் 3-வாரப் பத்திரிகையில் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு மொழிபெயர்க்கப் பட்டிருந்ததனைப் படித்தேன். மலைக்கோயிலுக்குச் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன். இன்று ஆடி வெள்ளிக்கிழமையாதலின்

அநேகர் கோயிலுக்கு வந்திருந்தனர். மாணவர்கள் பெரும்பாலும் சட்டையிட்டே கோயிலுக்கு வருகின்றனர்.

**24 - 7 - 26**

சனி ஞாயிறுகளில் மிகுதியாக வேலை செய்யலாமென எண்ணியிருந்தேன். இன்று சிறிது உரையெழுதிக் கொண்டிருந்த பொழுது, முன் கடித வாயிலாகப் பழக்கமுடைய ஓர் அன்பர் நீலகிரியில் (குன்னூர்) இருப்பவர் வந்து சேர்ந்தார். நாள் முழுதும் அவருடன் பேசிக் கொண்டிருந்தேன். சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய பெரிய நாயகி அம்மை கலித்துறை அவருக்குப் பாடஞ் சொல்லினேன். வேறு வேலை நடக்கவில்லை.

**25 - 7 - 26**

இன்றும், நேற்றுவந்த அன்பர் திரு. அ. நா. இராமசாமிப் பிள்ளை என்பவருடன் பேசிக் கொண்டிருந்து, அவருக்கு பிக்ஷாடன நவமணி மாலையும், பெரிய நாயகியம்மை விருத்தமும் பாடஞ் சொல்லினேன். மாலையிற் சிறிது உரையெழுதினேன். இரவில் தேவாரப் பதிகங்கள் சில படித்தேன்.

**26 - 7 - 26**

இன்று தலைநோய் இருந்தமையால் கல்லூரியிற் பாடம் நடத்தியதன்றி வேறு வேலையொன்றும் செய்யக் கூடவில்லை. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கவும் கூடவில்லை.

**27 - 7 - 26**

திருநெல்வேலியிலுள்ள ‘தென்னிந்திய தமிழ்ச்சங்க’த்தின் தமிழ்ப்புலவர் என்னும் பரீட்சைக்கு இலக்கணத்தில் நான் இரண்டு வினாக்கடிதங்கள் கொடுத்திருந்தேன். அதற்கு எழுதியுள்ளவர் ஒருவரே. விடைக்கடிதங்களை இன்று திருத்தினேன். எழுதினவர் நன்கு படித்துளார்.

**29 - 7 - 26**

காலேஜ் வேலையன்றிப் பிறிதொன்றுஞ் செய்யவில்லை.

**30 - 7 - 26**

திருவிளையாடல் உரையின் முதற் சஞ்சிகை இன்று வந்தது. அச்சு முதலியவெல்லாம் அழகாக அமைந்துள்ளன. விநாயகர் படமும், உமைபாகராகிய சிவபெருமான் படமும் வனப்புடன்

மிளிர்கின்றன. அவை தனியே வந்தவற்றிற்கு இன்று கண்ணாடி போட்டு அலமாரியில் வைத்துளேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்று அன்பர்களான திரு சரவண முதலியார், இராமசாமிப்பிள்ளை இவர்களுடனும், குழந்தைகளுடனும் மலைக்கோயில் சென்று உலகமீன்ற அம்மையையும் அப்பனையும் தரிசித்து வந்தேன்.

**31 - 7 - 26**

இன்று கல்லூரியில்லா நாளாகவும் பிறிதொரு வேலையும் செய்யக் கூடவில்லை. 'சுதேசமித்திரன்' படித்தேன்.

**1 - 8 - 26** ***(அக்ஷய, ஆடி, 17ம் தேதி)***

இன்றும் சிறிது வீட்டலுவல் செய்ததன்றி வேறில்லை. இரவு 6-மணிக்கு மேல் சைவ சித்தாந்த சபையில் 'திண்ணனாரும் மணியண்ணனாரும்' என்பது பொருளாக, அன்பர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் செய்த அழகிய உபந்நியாசத்தைச் செவிமடுத்திருந்தேன்.

**2 - 8 - 26**

இன்று ஆடி பதினெட்டாகலின் திரள் திரளாகச் சனங்கள் காவிரிக்குச் சென்று வந்து கொண்டிருந்தார்கள். கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்கென நானும், அன்பர்களான சரவண முதலியாரும், இராமசாமிப்பிள்ளையும் காவிரிக்கரைக்குச் சென்று, பாலத்தில் போய்க் கொண்டிருக்கும் பொழுது திருவானைக்கா அணித்தாகலின் போய்த்தரிசனஞ் செய்யலாமென்ற எண்ணமுண்டாயிற்று. அப்படியே கார்த்திகையும் திங்கட்கிழமையுமாகிய இன்றிரவு திருவானைக்காச் சென்று ஆனைக்காவின் ஆதியையும் அகிலாண்டேசுவரியையும் தரிசித்து வந்தோம். பழனியாண்டவரது திருநீற்றபிடேகக் கோலமும் தரிசித்தோம்.

**3 - 8 - 26**

கல்லூரி வேலை முடிந்தபின் உரையும் எழுதினேன்.

**4 - 8 - 26**

இன்று கல்லூரி வேலையன்றி வேறு செய்யக் கூடவில்லை.

**5 - 8 - 26**

இன்று காலேஜ் வேலையன்றிப் பிறிதொன்றும் செய்ததாகச் சொல்லவொண்ணாது.

**6 - 8 - 26**

சென்ற பரீட்சையில் சங்கரலிங்கம் என்ற மாணவர் பி. ஏ. வகுப்பில் தேறி தமிழுக்காக இரண்டு மெடல்கள் பரிசில் பெற உரியனரானமை குறித்துக் காலேஜில் இன்று பிற்பகல் லீவு விடப்பெற்றது. இதுவரை இங்ஙனம் பரிசில் பெற்றதற்காக லீவு விட்ட வழக்கமில்லை. அடுத்த ஆண்டு முதல் தமிழ்ப்படிப்புக் கட்டாயமாக ஏற்படுதல் குறித்துப் பிரின்சிபால் ஆனவர் தாம் தமிழைக் கனப்படுத்துதலைக் காட்டினர் போலும்? ஆனால் வேறு உபாத்தியாயர்கள் பலர்க்கு இது மிக்க பொறாமையை விளைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. ஒருவரேனும் எங்கள் கல்லூரியில் தமிழில் அபிமான முடையவர்களென்று சொல்ல வொண்ணாது. மாலையில் புரூப் திருத்தியநுப்பிவிட்டுப், புத்தூரில் ஓர் சிற்றுண்டி விழாவுக்குப் போய் வந்தேன்.

வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்து வந்தேன்.

**8 - 8 - 26**

புரூப் திருத்தியநுப்பியதும், பல கடிதங்கள் எழுதியதும் இன்றைய அலுவல்கள்.

**9 - 8 - 26**

சென்னை, . . . . கழகத்திலிருந்து எனக்கு இன்று வந்த ஒரு இன்ஷியூர் கவரில் மேலே முப்பத்தைந்து ரூபாய் என்று எழுதப் பட்டிருந்தது. உள்ளே இருபத்தைந்து ரூபாய்க்கே நோட்டுகள் இருந்தன. இது குறித்துக் கழகத்திற்கு உடன் கடிதம் எழுதியுள்ளேன். என் அன்புள்ள மாணவராகிய உலகதாசை உடம்பு நலமா யிருந்தால் என் வேலைக்கு உதவி செய்ய வரும்படி இன்று கடிதம் எழுதியுள்ளேன். கல்லூரி வேலையுடன், அச்சுக்கு அநுப்பவேண்டிய உரைப் பகுதிகளை மீட்டும் பார்த்துச் செப்பஞ் செய்தேன்.

திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்தேன்.

**10 - 8 - 26**

இன்று ஆங்கிலம் சற்று மிகுதியாகப் படித்தேன். ஜோன்ஸ் என்ற ஓர் அமெரிக்க மிஷனரி ஆங்கிலத்திற் செய்த ஓர் உபந்நியாசத்திற்கு மாலையிற் சென்றிருந்தேன். உச்சரிப்பு எனக்கு விளங்கவில்லை. ஏதோ சிறிது சிறிது விளங்கிற்று.

**11 - 8 - 26**

உரையெழுதும் வேலை நடைபெறுவதேயில்லை. இறைவன் எப்படி நடத்திவைப்பனோ தெரியவில்லை.

**12 - 8 - 26**

கல்லூரி வேலையன்றி வேறு விசேடமில்லை.

**13 - 8 - 26**

உரை புரூப் திருத்தியநுப்பினேன். மிகச் சிறிது உரையெழுதினேன்.

ஆடி கடைசி வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயில் சென்று, சுவாமிக்கு அருச்சனை செய்து தரிசித்தேன்.

**14 - 8 - 26**

தமிழ் யூனிவர்சிட்டிக் கமிட்டியின் வினாக்களில் இன்றியமையாத சிலவற்றிற்கு ஆங்கிலத்தில் விடையெழுது வித்து அநுப்பினேன்.

**15 - 8 - 26**

சைவ சமய குரவராகிய ஆளுடைய நம்பிகளின் திருநாளாகிய இன்று மாலை சைவசித்தாந்த சபையில் அன்பர் அ. மு. சரவண முதலியாரவர்களால் ஆரூரரும் அவர்தம் அருண்மொழியும் என்பது பொருளாக ஓர் அரிய உபந்நியாசம் நடந்ததனைச் செவிமடுத்திருந்தேன். பகல் முழுதும் உரை யெழுதிக் கொண்டிருந்தேன். என் அன்புள்ள மாணவராகிய சிரஞ்சீவி உலகதாசை என் வேலைக்கு உதவி செய்ய வரும்படி சின்னாளின் முன் எழுதியிருந்தேன். இன்றிரவு 10-மணிக்கு அவர் வந்து சேர்ந்தார்.

**16 - 8 - 26**

சிறிது உரையெழுதினேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்தேன்.

**17 - 8 - 26** *(அக்ஷய, ஆவணி, 1ம் தேதி)*

சிறிது உரையெழுதினேன். புரூப் திருத்தியநுப்பினேன்.

**18 - 8 - 26**

சிறிது உரையெழுதினேன். புரூப் திருத்தினேன்.

**19 - 8 - 26**

*இரவில் வழக்கம் போல் சிவப்பிரகாசத்திற்குப் பாடஞ் சொல்லிவிட்டு, மங்கையர்க்கரசியையும், பார்வதியம்மாளையும் பாடம் ஒப்புவிக்கச் சொல்லிக் கேட்டேன்.*

**20 - 8 - 26**

*உரை புரூப் திருத்தினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.*

**21 - 8 - 26**

*இன்று முழுதும் உரை யெழுதினேன். சில கடிதங்கள் எழுதினேன்.*

**22 - 8 - 26**

*இன்று முழுதும் உரையெழுதினேன். சில கடிதமும் எழுதினேன்.*

**23 - 8 - 26**

*சிறிது உரையெழுதியதும், புரூப் திருத்தியதும் இன்றைய அலுவல்கள்.*

*திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து என் குறைகளை இறைவன்றிருமுன் அறிக்கையிட்டு வந்தேன். 'தன் கடன் அடியேனையுந் தாங்குதல்?'*

**24 - 8 - 26**

*இன்று முழுதும் உரையெழுதினேன். புரூப் திருத்தினேன்.*

**25 - 8 - 26**

*இன்று கல்லூரியிலும் உரை புரூப் திருத்திக் கொண்டிருந்தேன். சிறிது உரையெழுதினேன். சத்தியத்தைக் கடைப்பிடிக்க முயலவில்லை. எப்படியோ பொய் இடைப் புகுந்து விடுகிறது.*

**26 - 8 - 26**

*இரண்டு கடிதமும், சிறிது உரையும் எழுதினேன்.*

**27 - 8 - 26**

*புரூப் திருத்தியனுப்பினேன். சிறிது உரையெழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். இரவில் இரண்டு நாளாகப் பழைய திருவிளையாடல் சிறிது படித்து வருகிறேன்.*

**28 - 8 - 26**

இன்று உரையெழுதினேன்.

**29 - 8 - 26**

உரையெழுதினேன். திருவாளர் S. சோமசுந்தரபாரதி எம். ஏ; பி. எல் அவர்களால் எழுதப்பட்ட 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் புத்தகம் இன்று திருவாளர் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களால் கொண்டு வந்து தரப்பட்டது. இதில் ஒரு பாகம் இன்று படித்தேன்.

**30 - 8 - 26**

உரையெழுதினேன். புரூப் திருத்தியநுப்பினேன். திங்கட் கிழமையாகிய இன்று மலைக்கோயிலுக்குப் போய் அம்மையப் பரைத் தரிசித்து வந்தேன்.

**31 - 8 - 26**

கல்லூரி வேலையுடன், சற்று மிகுதியாகவே உரை யெழுதினேன்.

**1 - 9 - 26** ***(அக்ஷய, ஆவணி 16)***

உரையெழுதினேன்.

**2 - 9 - 26**

உரையெழுதினேன். கல்லூரி வேலை போக ஒழிந்த நேரமெல்லாம் உரையெழுதுவதிற் செல்கின்றது. என் உழைப்பும் மிக அதிக மென்றே சொல்ல வேண்டும்.

**3 - 9 - 26**

சிறிதே உரையெழுதினேன். இன்று வெள்ளிக்கிழமையாக வும் கோயிலுக்குப் போகவில்லை. முன் இடுப்பில் ஏற்பட்டிருந்த சுளுக்கு மீளவும் வருத்துகிறது.

**4 - 9 - 26**

சனிக்கிழமையாகிய இன்று கல்லூரி இருந்தது. சிறிதே உரையெழுதினேன்.

**5 - 9 - 26**

சிறிதளவு உரையெழுதினேன்.

**6 - 9 - 26**

மிகச்சிறிதே உரையெழுதினேன். திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை. கீழ் உள்ள விநாயகர் கோயிலுக்கு மாத்திரம் சென்று தரிசித்து வந்தேன்.

**7 - 9 - 26**

இன்று உரை சிறிதும் எழுதக் கூடவேயில்லை.

**8 - 9 - 26**

கல்லூரி வேலையன்றி வேறு வேலை நன்கு நடைபெற வில்லை.

**9 - 9 - 26**

உலக நீதிக்கு எழுதி வந்த உரையைப் பூர்த்தி செய்து சென்னைக்கு அநுப்பினேன். திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளை அவர்கள் மதிப்புரைக்காக அநுப்பிய நன்னூலில் சிற்சில பகுதிகள் பார்த்தேன்.

**10 - 9 - 26**

இன்று கொஞ்சம் உரையெழுதினேன். வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயிலுக்குப் போகவில்லை. மனம் தூய்மையுறவில்லை; சிவ பெருமான்றிருவருளுக்குச் சேய்மையிலே யே இருக்கிறேன்.

**11 - 9 - 26**

இன்று விநாயகர் சதுர்த்தி நன்னாள்; இன்று பகல் முழுதும் உச்சிப்பிள்ளையார் கோயிலுக்குச் சென்ற ஜனங்களைக் கணக்கிடமுடியாது. நெடுகலும் போலீசுக்காரர் கள் இருந்து காத்து வந்தனர். நான் மலைக்கோயிலுக்குப் போகக் கூடவில்லை. மலையடிமாணிக்க விநாயகரைத் தரிசித்து வந்து வீட்டில் பூஜை செய்தேன்.

யூனிவர்சிட்டிப் பரீக்ஷகராக என்னையெடுத்துக் கொண்டு, அநுப்பப் பெற்ற நியமனப் பத்திரம் இன்று சுமார் 11-மணிக்குக் கிடைக்கப் பெற்றேன். 1927 மார்ச்சு ஏப்பிரல் பரீக்ஷைக்கும், செப்டம்பர் பரீக்ஷைக்கும் சேர்த்து நியமனஞ் செய்திருக்கிறார்கள். கல்லூரி வேலைக்கு வந்து 17-வருடங்களாகிறது. ஏழெட்டு முறை இதற்காக மனுக் கொடுத்துளேன். இவ்வாண்டு தான் மனுக் கொடுக்கவில்லை. இவ்வாண்டு விநாயகப் பெருமான் திருநாளில் இது பெற்றது திருவருட் செயலே. மாலையில் கல்லூரி சென்று,

என் சம்மதியை ரிஜிஸ்டராருக்கு எழுதிவிட்டு, பரீக்ஷகர் நியமனம் கிடைத்தது குறித்து என் மனதில் மகிழ்ச்சி சிறிதும் தோன்றவில்லை. பரீக்ஷகர்களுக்குரிய விதிகள் ஆங்கிலத்தில் இருந்தவைகளைப் படித்துப் பார்த்தேன். வேறு வேலையொன்றும் இன்று செய்ய வில்லை.

**12 - 9 - 26**

இன்று புரூப் திருத்திவிட்டு, மிகச் சிறிது உரை யெழுதினேன். லீவு நாட்களிலேயே மிகுதியாக எழுதக் கூட வில்லை.

**13 - 9 - 26**

இன்று கல்லூரிக்குப் போய் வந்து, இரவில் சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம் எழுதத் தொடங்கி ஒரு பக்கம் எழுதினேன். வேறு வேலை செய்யவில்லை. காலேஜில் இருக்கும் பொழுது, நோட் புத்தகம் வைத்துக் கொண்டு யாசிக்க வந்த ஒரு மனிதனுக்குப் பாராமுகமாக 'ஒன்றும் கொண்டு வரவில்லை' என்றேன்; ஆனால் என் சட்டைப்பையில் இரண்டு அணா இருந்தது. இவ்வாறெல்லாம் பொய்ம்மை இடைப்புகுகின்றது. யாசிக்க வருவோரின் குணங்களில் நம்பிக்கையில்லாமற் போயினும் நான் சொல்வது பொய் அன்றென்பதற் கில்லை. திங்கட்கிழமையாகிய இன்றும் மலைக்கோயில் செல்லக் கூடவில்லை.

**14 - 9 - 26**

உரையெழுதுதல் முதலிய வேலை சிறிதும் நடக்கவில்லை.

**15 - 9 - 26**

இன்றும் ஒன்றும் எழுதவில்லை. செய்யுட் பாடப் புத்தகம் ஒன்று திரட்டுவதற்காக நேற்று இரவும், இன்று மாலையும் சில நூல்கள் புரட்டிப் பார்த்ததில் நேரஞ் சென்றது.

**16 - 9 - 26**

இன்றும் ஒன்றும் செய்ததாகச் சொல்வதற்கில்லை.

**17 - 9 - 26** *(அக்ஷய, புரட்டாசி, 1ம் தேதி)*

விசேடமாய் வேலையொன்றும் செய்யவில்லை. காற் சுளுக்கு எப்படியிருப்பினும் இருக்கவென்று வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். அவன் அருளாலன்றி அவனை வணங்குமாறும் இல்லை.

**18 - 9 - 26**

புரூப் திருத்தியதும், இன்று வந்த யூனிவர்சிட்டிக் காலெண்டரை இங்குமங்குமாகப் படித்துப் பார்த்ததும், கண்ணகி வரலாற்றில் சிறிது எழுதியதும் இன்றைய அலுவல்கள். 'சைவப் பிரகாசனம்' என்னும் ஓர் சிறிய வசன நூலில் ஒரு பகுதி சென்ற ஆண்டிலேயே என்னாற் படித்துப் பார்க்கப் பெற்றது. இப்பொழுது சில நாளாக மற்றைப் பகுதியும் படித்து வந்து இன்று இரவில் முடித்தேன். இது முற்பகுதியில் தருக்கமும், பிற்பகுதியில் சைவ சமய இயல்பும் கூறும் ஓர் அழகிய நூல். யாழ்ப்பாணத்திலிருந்த சிவ. சங்கரபண்டிதர் என்பவரால் எழுதப் பெற்றது. தமிழ் வசனத்தில் இவ்வளவு அழகாகச் சமய வுண்மை கூறும் நூல் வேறு இல்லை. இன்னும் ஒன்றிரண்டு முறை இதனைப் படிப்பின் நலமாகும்.

**19 - 9 - 26**

கண்ணகி வரலாறும், திருவிளையாடல் உரையும் சிறிது எழுதினேன்.

**20 - 9 - 26**

கண்ணகி வரலாறும், உரையும் சிறிது சிறிது எழுதினேன். புரூப் திருத்தியநுப்பினேன். திங்கட்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**21 - 9 - 26**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பரீக்ஷகர் போர்டின் தலைவராகிய திரு M.V. இராமாநுஜாசாரி யாரவர்கள் தம் ஊராகிய மணலூரில் இன்று பரீக்ஷகர் கூட்டம் நடத்துவதாக எழுதியிருந்தபடி, நான் இன்று காலை 4-மணிக்கே புறப்பட்டு ஆடுதுறை ஸ்டேஷனில் இறங்கி, மணலூருக்குப் போய் மாலையில் திரும்பி இரவு 10-மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன். பகவற்கீதை கையில் எடுத்துச் சென்றிருந்தேன். த. சுந்தரராஜசர்மா என்பவர் இதற்குத் தமிழில் எழுதிய மொழிப்புரையை முன்பு படித்துளேன். இன்றும் ஒரு முறை பார்த்து முடித்தேன். பகவற்கீதை உலகிலுள்ள உயர்ந்த நூல்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது. சங்கரர், இராமநுஜர், மத்துவர் என்பவர்களால் தத்தம் மதப்படி பாஷ்யம் எழுதப் பெற்றது. அதிலிருந்து அநேக உயர்ந்த எண்ணங்களை நாம் தெரிந்து பயனடையக் கூடுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அது, சொல்ல வேண்டிய பொருள்களைத் தருக்க முறையில் நிரல்படக் கூறுவதாக எனக்குத் தோன்றவில்லை.

**22 - 9 - 26**

இன்று சிறிது புரூப் திருத்தியதன்றி வேறு வேலை யொன்றும் செய்யக் கூடவில்லை.

**23 - 9 - 26**

யூனிவர்சிட்டி வினாக்கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். பாலக்கரை சென்று பிச்சை என்னும் பெயருடைய கிறிஸ்த வரிடத்தில், பல மாதமாக எனக்கிருந்த சுளுக்குப் பார்த்துக் கொண்டேன். இன்னும் சில நாள் போக வேண்டும்.

**24 - 9 - 26**

புதுக்கோட்டை அரசாங்கத்தில் ஒரு தமிழ்க் கலாசாலை ஏற்படுத்தக் கருதி ஒரு கமிட்டியேற்படுத்தியிருக்கின்றனர்; அக்கமிட்டியின் காரியதரிசியும், காலேஜ் பிரின்சிபாலும் ஆகிய திரு. N. தியாகராஜையர் அவர்கள் அது சம்பந்தமான என் அபிப்பிராயங்களை விரிவாய்த் தெரிவிக்கும்படி கேட்டு எழுதியிருந்தனர். அது குறித்து இன்று அவர்கட்கு எழுதிய நுப்பினேன். கண்ணகி வரலாறு சிறிது எழுதினேன். தொண்டை மண்டல சதகம் அச்சிட்ட திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அதனை விற்பதற்கு ஒரு சிபாரிசு கடிதத்துடன் என்னிடம் வந்தனர். நான் அவருக்கு ஒரு கடிதம் கொடுத்ததில் 4-புத்தம் விலையாயின. நானும் ஒன்று விலைக்கு வாங்கிக் கொண்டேன். இது தமிழ் சம்பந்தமாகச் செய்த சிறு உதவியாகலின் மனதிற்குச் சிறிது திருப்தியுண்டாகிறது.

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**25 - 9 - 26**

திருவிளையாடல் உரையெழுதினேன்.

**26 - 9 - 26**

ஒன்றும் வேலை நடைபெறவில்லை. இன்று கார்த்திகை விரதமாகவும் கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.

**27 - 9 - 26**

திருவாளர் மு. கதிரேசச் செட்டியாரவர்கள் மொழி பெயர்த் தச்சிட்ட 'சுக்கிரநீதி'யினை முன்படித்து மதிப்புரை அநுப்பி யிருந்தேன். முகவுரை, மதிப்புரைகளுடன் அழகாகப் பயிண்டு செய்த புத்தகம் இன்று வந்தது. சாத்துக்கவிகள் முதலியவற்றைப்

படித்துப் பார்த்தேன். இன்று மிகச் சிறிதே உரையெழுதினேன். திங்கட்கிழமையாகிய இன்று திருக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை. என் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானதாயிருக் கிறது. இறைவன் எப்படிக் கொண்டு செலுத்துவனோ அறியேன்.

**28 - 9 - 26**

சில கடிதங்கள் எழுதியதும், மிகச் சிறிது உரை யெழுதியதும் இன்றைய அலுவல்கள்.

**29 - 9 - 26**

இன்று சில கடிதங்கள் எழுதினேன். புரூப் திருத்திய நுப்பினேன். லீவில் நான் செய்யக் கருதியன ஒன்றுமே செய்யக் கூடவில்லை.

**30 - 9 - 26**

யூனிவர்சிட்டிப் பரீக்ஷைக்கு வினாக்கடிதம் இரண்டு முன் குறித்திருந்தவற்றை நன்கு எழுதி ரிஜிஸ்தர் தபாலில் அநுப்பினேன். வேறு வேலையாதும் நடக்கவில்லை.

**1 - 10 - 26** *(அக்ஷய, புரட்டாசி, 15ம் தேதி)*

என் புத்தக நிலயத்தின் புத்தகங்களில் ஒரு பகுதியை ஒழுங்கு படுத்தி வைத்ததே இன்றைய அலுவல். வெள்ளிக்கிழமை யாகிய இன்று கோயிலுக்கும் போகக் கூடவில்லை.

**2 - 10 - 26**

இன்றும் யாதும் வேலை செய்யக் கூடவில்லை. மாலைப் பொழுதில் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளையவர்களின் மூத்த புதல்வன் பஞ்சாபகேசன் நேற்று உயிர் துறந்தான் என மாலை 6-மணிக்கு மேல் கேள்வியுற்றேன். அறிவிலும் குணத்திலும் சிறந்த பிள்ளை. இது மிக்க துயரமான செய்தி.

**3 - 10 - 26**

காந்தியடிகள் எழுதிவரும் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பகுதி இன்று படித்தேன். கடவுளால் உலகிற் அளிக்கப்பட்ட அப்பெரியாரின் பெருமையை என்னென்று பாராட்டுவேன். இன்று என் தம்பி சிர. கோவிந்தராஜாவும், அவர் மனைவியும், என் அன்னையும் இங்கு வந்துளார்கள். பல நாளாக உரை யெழுதாத நான் இன்று எழுதினேன்.

**4 - 10 - 26**

*பஞ்சாபகேசன் இறந்த துக்கத்தின் பொருட்டுக் காலை கரந்தை சென்று மீண்டேன். திங்கட்கிழமையும் பிரதோஷமும் ஆகிய இன்று, என் மனைவி, மக்கள், அன்னை, தம்பி, தம்பி மனைவி இவர்களுடன் மலைக்கோயில் சென்று தரிசித்து அருச்சனை செய்வித்து வந்தேன்.*

*திருவருள் துணை.*

**திருச்சிற்றம்பலம்**

**'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க'**

**'அன்பே சிவம்'**

*(19 - 3 - 1925 முதல் 14 - 6 - 1925 முடிய முதற் குறிப்புப் புத்தகத்திலும்; 15 - 6 - 1925 முதல் 4 - 10 - 1926 முடிய இரண்டாம் குறிப்புப் புத்தகத்திலும் எழுதப்பெற்றுளது.)*

*(கலி - 5027 ஆகும் அக்ஷய, புரட்டாசி, 24)*

*கி. பி. 1926 அக்டோபர் 10*

*அக்டோபர் மாதம் 5, 6, 7, 8, 9ஆம் தேதிகளின் நிகழ்ச்சிகள் பின்வருமாறு சுருக்கிக் கூறத்தகும். 6ம் தேதி மாலை வண்டியிற் புறப்பட்டுச் சென்னை சென்று, என் தம்பியின் வேட்டகமாகிய திருவாளர் R. பழனியாண்டிபிள்ளையவர்களின் பங்களாவை யடைந்தேன். 7ம் தேதி பகல் 1 மணிக்குமேல் அவர்களின் காரில் ஏறி 2 மணிக்குமேல் செனெட் மாளிகையில் நடந்த தமிழ்ப் பரீக்ஷகர் கூட்டத்திற்குச் சென்றேன். இரவு 7 மணிக்கு மேலும் கூட்டம் நடந்தது; எனினும் அன்று முடிக்க வேண்டிய காரியங்கள் முற்றிலும் முடிக்கப்பட வில்லை; பரீக்ஷகர்கள் தங்கள் வினாக் கடிதங்களை நன்கு ஒழுங்குபடுத்திக்கொண்டு வராமையும், குறித்த நேரத்தில் ஒன்றைச் செய்து முடிக்க வேண்டுமென்னும் எண்ணமின்றி வழவழவெனப் பேசிக் கொண்டிருப்பதுமே அதற்குக் காரணங்களாகும். கூட்டத்தின் முடிவில் தீர்மானித்துக் கொண்டபடி, 8ம் தேதி காலை 9 மணிக்குமேல் மைலாப்பூரில் தங்கியிருந்த திருவாளர் சி. கே. சுப்பிரமணியமுதலியார் இருப்பிடத்திற்குக் காரில் சென்று, அவர் தயாரிக்கவேண்டிய பி. ஏ வினாப் பத்திரத்திற்குச் சில ஆலோசனைகளை உதவி மீண்டேன்.*

8-ம் தேதி இரவு போட்மெயிலில் புறப்பட்டு 9ம் தேதி காலை திரிசிரபுரம் வந்து, காலேஜிற்குச் சென்று வந்தேன்.

10ம் தேதியாகிய இன்று வைகறையில் என் தம்பியும், தம்பி மனைவியும், என் அன்னையும நடுக்காவேரிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். தம்பி மனைவியாகிய சௌ. லோகநாயகியின் குணாதிசயங்கள் எனக்கு மிக்க மகிழ்ச்சியை விளைத்தன. இன்றிரவு, வடலூர் இராமலிங்க சுவாமிகள் எழுதிய 'மனுமுறை கண்ட வாசக'த்தின் ஒரு பகுதியைப் படித்துப் பார்த்தேன். பெரியபுராணங் கூறும் அளவினும் விரித்து எளிய நடையில் இஃது எழுதப்பெற்றுளது.

**11 - 10 - 26**

கல்லூரிக்குச் சென்று பாடம் நடத்தினேன். சிறிது நேரம் ஆங்கிலப் பத்திரிகை படித்தேன். 'கேசவ கிருஷ்ண' என்ற சொல்லே 'ஜீஸஸ் கிறைஸ்' என்று ஆயிற்று என ஒருவர் எழுதி யிருந்ததையும் அதிற் பார்த்தேன். கீரீக்கு வழியாக இங்ஙனம் திரிந்துள்தென்று காட்டுகிறார். திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**12 - 10 - 26**

இன்று நண்பகலில் கல்லூரிச் செல்லும்பொழுது மிக முதிர்ந்த ஒரு கிழவி வீதியில் வெய்யிலில் கிடந்து தவித்துக் கொண்டிருந்தாள். தன்னை நிழலில் தூக்கிப் போடும்படி அவள் கூறிக் கொண்டிருந்த சப்தமும் கேட்டது. இரக்கமற்ற பாவி யாகிய நான் யாதுஞ் செய்யாது போய்விட்டேன். தமிழ்நாட்டி லிருந்த பாரியென்னும் வள்ளல் காட்டில் ஒரு முல்லைக் கொடி படர்தற்குத் தன் தேரை நிறுத்திவிட்டு நடந்து சென்றான் என்பதை நான் படித்தும் பிரசங்கித்தும் வருகின்றேன். அதனாற் பயனென்? இண்டர்மீடியட் மாணவர்க்குத் தமிழ்ப்பாடத்தின் ஒரு பகுதியாக மொழிபெயர்ப்பும் உளது. ஆங்கிலத்தை தமிழிலும் தமிழை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்க வேண்டும். இதுகாறும் அது நடத்தப்படாதிருந்தது. இன்று சிறிது மொழிபெயர்க்கச் செய்தேன். இதனை நடத்துதலினால் எனக்கும் ஆங்கிலத்தில் சிறிது அபிவிருத்தியேற்படும் என்ற எண்ணமுண்டு.

**13 - 10 - 26**

இன்று கல்லூரியிற் பாடம் நடத்தியதுடன், புரூப் திருத்தினேன். உரையும் எழுதினேன்.

**14 - 10 - 26**

திருக்கற்குடியில் இன்று எனக்கு ஓர் உபந்நியாசம் குறிக்கப் பட்டிருந்தது; சில நாட்கள் தொடர்ச்சியாய் உபந்தியாச ஏற்பாடு செய்திருந்த அச்சபையில் கேட்பதற்கு ஜனங்கள் வருவதின்மையால் என்னை வர வேண்டாமெனத் தெரிவித்து விட்டனர். இன்றிரவு 'விருத்திப் பிரபாகரம்' என்ற வேதாந்த நூலின் அட்டவணை யாகிய அநுக்கிரமணிகையைப் படித்துப் பார்த்தேன். தருக்கம் விரிவாகக்கூறப்பட்டிருப்பது கண்டேன். இதுபோலும் நூல் களைப் படிப்பதற்கு எனக்குச் சமயங் கிடைக்குமோ வென்பது தெரிந்திலது.

**15 - 10 - 26**

இன்று மகாநவமியாகிய தலைமகள் பூசைத் திருநாளாகும். நான் சில புத்தகங்களை ஒழுங்குபடுத்திவைத்து, ஒருவாறு பூசை செய்தேன். எங்கள் கல்லூரியின் பரிசளிப்பு சென்னைக் கவர்னரின் தலைமையில் இன்று நடந்தது.

**16 - 10 - 26**

இன்று விஜயதசமியாகும். திருவிளையாடல் உரை எழுதிக் கொண்டிருந்தேன்.

**17 - 10 - 26** *(அக்ஷய, ஐப்பசி, 1ம் தேதி)*

இன்று நாகப்பட்டினத்தில் நடந்த கள்ளர் குலத்தினரின் மகாநாட்டிற்கு அவர்களால் அழைக்கப்பெற்று, வைகறை 4-மணிக்கே புறப்பட்டு 11½ மணிக்கு நாகை போய்ச் சேர்ந்தேன். மகாநாடு கிளர்ச்சியுடனே நடந்தது. பாப்பா நாடு இளைய சமீன்றார் திரு. இராசப்பா அவர்களின் தலைமையில் நடந்தது. மாலையில் 'கல்வி' என்பது குறித்து நான் சிறிது நேரம் உபந்நியாசித்தேன். உடம்பின் அயர்வாலும் பேச வேண்டியதனை ஒழுங்குபடுத்திக் கொள்ளாமையாலும் தொடக்கத்தில் என் பேச்சு நன்றாயில்லை. பின் சிறிது ஊக்கத்துடன் பேசினேன். கள்ளர் குலத்தினரனைவரும் தம்மக்களைப் படிப்பிக்குமாறு அவர்களைத் தூண்ட வேண்டுமென்பதே என் நோக்கமாகும். துலா விஷு நாளாகிய இன்று காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் விசேடமாயிருக்கும். நான் அத்தகைய புண்ணியப் பேற்றுக்கு உரியனாகக் கூடவில்லை. புகைவண்டியிற் செல்லும் பொழுது திருவாசகத்தின் சிவபுராணமும், கீர்த்தித் திருவகவலும் படித்தேன். இரவு 1½ மணிக்கு உணவின்றி மலைக்கோட்டை வந்துற்றேன்.

**18 - 10 - 26**

இன்று ஒன்றும் வேலை செய்யக்கூடவில்லை. திங்கட் கிழமையும் பிரதோடமும் ஆகிய இன்று என் இடுப்பின் பிசகால் மலைக்கோயில் சென்று தரிசிக்கக்கூடவில்லை. இரவில் தேவாரப் பதிகம் நான்கு படித்தேன்.

**19 - 10 - 26**

புரூப் திருத்தியநுப்பினேன். ஆங்கிலம் சிறிது மிகுதியான நேரம் படித்துவருகின்றேன்.

**20 - 10 - 26**

உரை சிறிது எழுதினேன்.

**21 - 10 - 26**

என் அருமை மாணவ நண்பர் திரு. கே. நரசிம்ம ஐயங்கார் என்னை வந்துபார்த்தார். இரண்டு மணி நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தோம்.

**22 - 10 - 26**

புரூப் திருத்தினேன். சம்பந்தர் தேவாரத்தில் ஐந்தாறு பதிகங்கள் படித்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**23 - 10 - 26**

உரையெழுதினேன். கார்த்திகை விரதமாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**24 - 10 - 26**

இன்று முழுவதும் உரையெழுதிக்கொண்டிருந்தேன்.

**25 - 10 - 26**

இன்று சரியாக வேலை செய்யக்கூடவில்லை. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**26 - 10 - 26**

இன்றும் உரையெழுதுதல் முதலிய வேலை ஒன்றும் நடைபெறவில்லை.

**28 - 10 - 26**

கல்லூரி வேலையன்றி வேறொன்றும் நடக்கவில்லை.

**29 - 10 - 26**

இன்றும் ஒன்றுஞ் செய்யக்கூடவில்லை. வெள்ளிக் கிழமையாகவும் கோயிலுக்கும் போகவில்லை.

**30 - 10 - 26**

இன்று பிரயாணப்படியாக யூனிவர்சிட்டியிலிருந்து வந்த 'செக்' மாற்றுதற்கு ஜில்லாக் கஜானாவுக்கும் பாங்கிக்கும் போய்வந்ததும், இந்து சகெண்டரி ஸ்கூலில் கூடிய திருச்சி ஜில்லா உபாத்தியாயர்களின் கூட்டத்திற்குச் சிறிது நேரம் போயிருந்ததும் அன்றி யாதொரு வேலையும் செய்யவில்லை.

**31 - 10 - 26**

இன்று விறகு வாங்கச் சென்றதில் இரண்டு மணி நேரம் செலவாயிற்று. லெக்சிகன் கமிட்டி எடிட்டர் வேலைக்குப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருந்ததைக் கண்டித்துத் தீர்மானம் அநுப்புதற்கு நகல் எழுதியதில் சிறிது நேரஞ் சென்றது. அத்தீர்மானமும் அநுப்பப்படவில்லை. மாலையில் அவ்வூரில், திரு. மூ. நாராயணசாமி பிள்ளை எம். எல். சி. அவர்களுக்கு நடத்தப்பட்ட ஒரு சிற்றுண்டி விழாவுக்கும், அங்கே திருவாளர் அ. மு. சரவண முதலியாரவர்கள் செய்த உபந்நியாசத்திற்கும் சென்றிருந்தேன். அப்பொழுது எதிர்பாராமல் அங்குவந்து சேர்ந்த ஈ.ரோடு ஈ. வி. இராமசாமி நாய்க்கரவர்கள் கூட்டத் திற்குத் தலைமைவகித்திருந்தனர். தலைவர் முடிப்புரையில் பெரியபுராணச் சரித்திரம் முதலியவற்றில் மதிப்புக் குறைவாகப் பேசியது எனக்கு மிக்க வருத்தத்தை உண்டாக்கிற்று. நான் முடிவாக வந்தனோபசாரம் சொல்லும் பொழுது பெரிய புராணத்தின் பெருமையை வற்புறுத்திப் பேசினேன். அப் பொழுது என் மனதில் வேகம் பொங்கிக் கொண்டிருந்தது. சொற்களும் தங்குதடையின்றி விரைவுடன் புறப்பட்டன. எனினும் நிதானமாகவே பேசினேன்.

**1 - 11 - 26 (அக்ஷய, ஐப்பசி, 13)**

கல்லூரியினின்று வந்தபின், மாலைப்பொழுது தீபாவளிக்கு உடைகள் வாங்குவதிற் சென்றது. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகவில்லை.

**2 - 11 - 26**

இன்று சிறிது உரை யெழுதினேன்.

### 3 - 11 - 26

புரூப் திருத்தியநுப்பிவிட்டு, உரையெழுதினேன். இன்று பகல் முழுதும் இவ்வேலைகள் நடந்தன. திருவருளால் திருவிளை யாடற்புராணத்தின் மதுரைக் காண்ட உரை இன்று முற்றியது.

### 4 - 11 - 26

வைகறையில் தீபாவளி ஸ்நானம் இனிது நிறைவேறிற்று. இன்று பண்டிகை நாள். கல்லூரிப் பரீக்ஷைக்கு ஓர் வினாக் கடிதம் எழுதியதே இன்று செய்த வேலை.

### 5 - 11 - 26

இன்று முழுதும் கல்லூரிப் பரீக்ஷைக்கு வினாக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தேன். சில வாரங்களாகவே தடைப்பட்டி ருப்பதுபோல் வெள்ளிக்கிழமையும் அமாவாசையுமாகிய இன்றும் கோயிலுக்குப் போகவில்லை.

### 6 - 11 - 26

சென்ற வருடத்துத் 'தமிழ்ப் பொழிலி'ல் நான் 'ஒரு குறட்பா' என்னும் தலைப்பில் 'நத்தம் போற் கேடும்' என்னும் குறளுரையைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதனை மறுத்துத் திரு. அப்பனையங்கார் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதன் பிரதி 'தமிழ்ப் பொழில்' ஆசிரியரால் எனக்கு அநுப்பப்பட்டிருந்தது. அதனைப் பார்த்தபொழுது, ஐயங்கார் எழுதியது பொருத்தமற்றதென அறிந்தேன். அவ ரெழுதியதற்கு மறுப்பெழுதியதில் இன்று முழுதும் கழிந்தது. எழுதியது முற்றுப் பெறவுமில்லை.

### 7 - 11 - 26

நேற்று எழுதிய மறுப்பின் தொடர்ச்சியை எழுதிப் பூர்த்திசெய்ததும், சிறிது புரூப் திருத்தியதுமே இன்றைய அலுவல்கள். நேற்றும் இன்றும் வழக்கமாய்ப் படிப்பதினும் சிறிது மிகுதியாகவே ஆங்கிலம் படித்தேன்.

### 8 - 11 - 26

இன்று கல்லூரி வேலையன்றி மிகுதியாக ஒன்றுஞ் செய்ய வில்லை. சிறிது புரூப் திருத்தினேன். கோயிலுக்குப் போக வில்லை. இரவில் 'செந்தமிழ்ச் செல்வி'க்குக் கட்டுரை யநுப்புதற்குத் "திருஞான சம்பந்தர் வரலாறும் ஆராய்ச்சியும்" தொடர்ச்சியாய் எழுதலாமெனக் கருதிச் சிறிது எழுதினேன்.

**9 - 11 - 26**

சம்பந்தர் வரலாறு சிறிது எழுதினேன். பனகால் அரசரின் சட்டசபைத் தேர்ந்தெடுப்பில் பெரிய போட்டியிருந்து, அரசரே வென்றார் என்னும் செய்தி இன்று மாலை வந்தது. இது பிராமணர் களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை விளைத்திருக்கும்.

**10 - 11 - 26**

இன்று விசேட அலுவலொன்றும் செய்யவில்லை. இந் நகரில் சட்டசபைக்காக நின்ற மூவரில் தமிழர் இருவரும் ஒருவரை யொருவர் அளவின்றி நிந்தித்து எழுதிக்கொண்டி ருந்தனர். ஐயரே வெற்றி பெற்றார். தமிழர்களிடத்தில் இன்னும் ஒற்றுமையுண்டாகவில்லை.

**11 - 11 - 26**

இன்று காலையிற் சம்பந்தர் வரலாறு மற்றும் சிறிது எழுதிச் 'செந்தமிழ்ச் செல்வி'க்கு அநுப்பினேன். மாலை 5½ மணி வரையில் கல்லூரியில் இருக்க நேர்ந்தது.

இன்று கந்தர் சஷ்டியாகும். நெடுநாளாக மலைக்கோயிலி லிருந்து சுவாமி புறப்படாதிருப்பது பெருங்குறையாகும். நான் இன்று விரதமிருந்தேன். திருமுருகாற்றுப்படை பாராயணஞ் செய்ததுடன், கந்தபுராணத்தில் சில பாடல்கள் படித்தேன். மலைக்கோயிலுக்குப் போகவில்லை. மௌன மடத்தின் முன் இருக்கிற சுப்பிரமணியருக்குத் தீபாராதனை செய்வித்தேன்.

**12 - 11 - 26**

திருவிளையாடல் உரைப்புத்தகத்திற்கு முகவுரை எழுத வேண்டிச் சிறிது ஆலோசித்தும், அதற்குத் தலைப்பின் மூன்று தேவாரப் பாடல்கள் எடுத்தெழுதியதுமே இன்று புரிந்த வேறு அலுவல். 'தமிழ் நேசன்' இரண்டுவாரப் பத்திரிகை இன்று வந்தவற்றைப் படித்தேன். அதில் காந்தியடிகள் தற்சரித மொழி பெயர்ப்பே என் கவனத்தைக் கவர்வது.

வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து தரிசித்துவந்தது எனக்கு மகிழ்ச்சியளிப்பதாகும். ஒரு மாதத்தின் மேலாகவே தரிசனத்திற்குச் செல்லாதிருந்தேன். பெருமான் திருவருள் இன்று கூட்டிற்று.

**13 - 11 - 26**

மன்னார்க்குடியில் நடக்கும் 'மாணவர் தமிழக'த்தின் ஆண்டு விழாவில் நான் ஒரு உபந்நியாசம் புரிய ஒத்துக் கொண்டு

ளேனாகலின், அதன் பொருட்டு, இரவு 3 மணிக்கே புறப்பட்டு 10½ மணிக்கு மன்னார்குடி அடைந்தேன். புகைவண்டியில் திருக்குறளும், விடுதியில் தமிழ் சம்பந்தமான ஓர் ஆங்கிலப் புத்தகமும் படித்துக் கொண்டிருந்தேன். மாலையில், திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த அவ்வவையில் 'திருவள்ளுவர்' என்னும் பொருள் குறித்து 1½ மணி அளவிற்குமேல் உபந்நியாசம் புரிந்தேன். இவ்வாறு இன்று பெரிதும் பயனுள்ள நாளாயிற்று.

**14 - 11 - 26**

மன்னார்குடியில் இன்று காலை நடந்த இரண்டு உபந் நியாசங்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன். திரு. க. சதாசிவச் செட்டியாரவர்கள் உபந்நியாசம் பயனுள்ளதே. இரவு 10-மணிக்குத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். வரும் பொழுதும் சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**15 - 11 - 26**

'தமிழ்ச் சிவஞானபோதச் சிறப்பு' என்னும் பெயருடன், அம்பாசமுத்திரம் வக்கீல் திருவாளர் U. P. காந்திமதிநாத பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றதொரு புத்தகம் இன்று என் பார்வைக்கு வந்ததனைப் படித்தேன். இதில் ஒரு பகுதியான ஆராய்ச்சி நன்றாயிருக்கிறது. மற்றொரு பகுதி பலராலும் விவாதிக்கப்பட்டுவருவதொன்று.

திருச்செங்காட்டங்குடியில் பல வகுப்பினர்களுக்கும் மடம் இருக்கிறதென்றும், அதில் கள்ளர் மடம் ஒன்றென்றும் தெரிகிறது. கள்ளர் மடம் கவனிப்பாரின்றிப் பராதீனப்பட்டுப் போனதை மீட்டு, அமைப்பதற்குப் பணம் தொகுக்க வந்த ஒருவர் என்னை இந்நகரிலுள்ள ஓர் பணக்கார மனிதனிடத்தில் அழைத்துச் சென்றனர். அவர் ஐந்து ரூபா கொடுத்தநுப்பினர். என்றாலும், தகாத இடமொன்றில் யாசகங் குறித்து நான் போனதை நினைந்து என் மனம் நெடுநேரம் வருந்தியது. யாசகத்திற்கு வந்தவர் மேற்படி மடத்தின் செப்புப்பட்டயம் ஒன்றும் வைத்திருந்தார். அப்பட்டயம் சாலிவாகன சகாப்தம் 1255, கலியாப்தம் 4434 விக்கிரம ஆண்டு தை மாதம் 15ம் தேதி சோம வாரம், பூசநக்ஷத்திரம், பிரதமை ஆகிய நாளில் மடங் கட்டத் தொடங்கியதாகக் கூறுகிறது. பட்டயத்தில் 'இந்திர குலத்தார்' என்ற பெயருளது. 'கள்ளர் மடம்' என்றும் காண்கிறது. கள்ளர் நாடுகள் பலவற்றின் பெயர்கள் உள்ளன. கோயிலுக்குப் போகவில்லை.

**16 - 11 - 26**

*புரூப் திருத்தியநுப்பியதன்றி வேறு எழுத்து வேலை யில்லை.*

**17 - 11 - 26**

*கண்ணகி வரலாறு சிறிது எழுதினேன்.*

**18 - 11 - 26**

*கல்லூரி வினாக் கடிதங்களின் புரூப் திருத்திக் கொடுத்தேன். கண்ணகி வரலாறு எழுதினேன். ஆங்கிலம் படித்தேன்.*

**19 - 11 - 26**

*இரவு கனாவில், உபந்நியாசமும், கடலோரமும், பட்டணமும், இரண்டு பெரியாருடைய நீண்ட சமாதுகளும் போல்வன கண்டேன்; வெண்ணிறமுடையதும் மிக்க அறிவுள்ளதுமாகிய பெரியதோர் குரங்கை நான் பற்றிச் சென்று கொண்டிருக்கவும் கண்டேன். வீட்டிலேயே இருந்து ஓயாது வேலை செய்து கொண்டிருத் தலால் மூளை வலிகுன்றி இங்ஙனம் கனவுகள் மிகுவனக் கருதி, இன்று காலை பொன்மலை ரஸ்தாவில் இரண்டு மைல் தூரம் வரை நடந்து போய்வந்தேன்.*

*கண்ணகி வரலாறு சிறிது எழுதினேன். திருக்கார்த்தி கையும் வெள்ளிக்கிழமையுமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். மலை மேல் கார்த்திகைத் தீபம் இடப் பட்டதும் தரிசித்தேன்.*

**20 - 11 - 26**

*இன்று முழுதும் கண்ணகி வரலாறு எழுதிக்கொண்டு இருந்தேன்*

**21 - 11 - 26**

*இன்று முழுதும் கண்ணகி வரலாறே எழுதினேன். சேரமாதேவியிலிருந்து வந்த 'உதயபாரதி' என்னும் மாதப் பத்திரிகையின் முதற்பிரதியைப் படித்துப்பார்த்தேன்.*

**22 - 11 - 26**

*இன்று முழுதும் கண்ணகி வரலாறு எழுதியதே வேலை. மூன்று நாட்களாக ஆங்கிலம் சிறிதும் படிக்கவில்லை. கார்த்திகைச் சோமவாரமாகிய இன்று மலைக்கோயிலை அடைந்து தரிசித்திறைஞ்சி வந்தேன்.*

**23 - 11 - 26**

கண்ணகி வரலாறு எழுதி முடித்தநுப்பினேன். புரூப் திருத்தினேன்.

**24 - 11 - 26**

நெடுநாளாக எழுதப்படாதிருந்த திருவிளையாடல் உரை இரண்டு பாட்டுக்கு எழுதினேன். ஆங்கிலம் படித்தேன்.

**25 - 11 - 26**

திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன்.

**26 - 11 - 26**

இன்று வந்த 'செந்தமிழ்ச் செல்வி' படித்தேன். புரூப் திருத்தினேன். உரை சிறிதே எழுதினேன். வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**27 - 11 - 26**

இன்று ஒருவேலையும் செய்யவில்லை. ஆங்கிலம் சிறிது அதிகமாகப் படித்தேன்.

**28 - 11 - 26**

இன்று பேதிக்கு மருந்துண்டேன். மிகுதியாகவே பேதி யாயிற்று. இக்களைப்பினால் வேலை செய்யக்கூடவில்லை. உரை யெழுதத் தொடங்கிச் சிறிது எழுதிமுடியாது நிறுத்தினேன்.

**29 - 11 - 26**

எங்கள் காலேஜில் முற்பகலில் மாத்திரம் பள்ளிக்கூடம் வைத்துப்பார்ப்பதென்று தீர்மானித்தபடி இன்று ஆரம்ப மாயிற்று. காலை 7 - 45 மணி முதல் 11 - 50 வரையிலுமே காலேஜ் இருக்கும். இன்று காலை 9 - 30க்குள் என் வேலை முடிந்து விட்டது. பின், தமிழ்நேசன் 2 வாரப் பத்திரிக்கை வந்திருந் தவற்றைப் படித்துக் கொண்டிருந்தேன், 11-மணிக்கு வீடுவந்து சேர்ந்தேன். தமிழ்நேசனில் காந்தியடிகள் எழுதிவரும் தற்சரித மொழிபெயர்ப்பும், சிலர் கேட்ட கேள்விகளுக்கு அவர் எழுதிய விடைகளும் படித்தேன். பைத்தியம் பிடித்த நாயைக் கொலை செய்வது சரியே என்று எழுதியுள்ளார். கணவன் செய்வது தகுதியன்றெனத் தோன்றினால் பெரிய காரியங்களை முன்னிட்டு மனைவி கணவனை மீறி நடக்கலாம் என்று கூறியிருக்கிறார். கார்த்திகைச் சோமாவாரமாகிய இன்று மலைக்கோயிலை

அடைந்து தரிசித்து வந்தேன். கோயில் தீப அலங்காரம் விசேடமாயிருந்தது.

**30 - 11 - 26**

இன்று 'செந்தமிழ்ச் செல்வி'க்கு ஆளுடையபிள்ளையார் வரலாற்றின் தொடர்ச்சி எழுதத் தொடங்கிச் சிறிது எழுதியபின், ஆங்கிலம் படிக்க நேர்ந்தமையின் அது முற்றிலும் எழுதக் கூடவில்லை.

**3 - 12 - 26**

செந்தமிழ்ச் செல்விக்கு இரண்டு மூன்று நாளாகச் சிறிது சிறிது எழுதியிருந்த கட்டுரையில் இன்று சிறிது எழுதிச் சேர்த்து அனுப்பினேன். மலையாளமும், தெலுங்கும் படிக்க வேண்டு மென நேற்று மாலையே அவற்றின் பால பாடங்கள் வாங்கினேன். ஆங்கிலம் படிக்கும் விருப்பமும் மிகுந்துளது. எனினும் நான்கு நாளாக ஒன்றும் படிக்க முடியவில்லை.

வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலை அடைந்து தரிசித்து வந்தேன்.

**4 - 12 - 26**

இன்று வேலை யொன்றும் செய்யவில்லை. ஆங்கிலம் படித்தேன்.

**5 - 12 - 26**

இன்று சில கடிதங்கள் எழுதியதும், ஆங்கிலம் படித்தது மன்றி வேறு வேலை செய்யக்கூடவில்லை.

**6 - 12 - 26**

இவ்வூரிலுள்ள வக்கீல் நா. ஆலாசியம் ஐயர் என்னிடம் பி. ஏ. வுக்கு ஆறாவது குறூப் தமிழ் எடுத்துப் படித்துத் தேறியவர். தேசத் தொண்டில் ஈடுபட்டுச் சிறை சென்று மீண்டவர். என்னிடம் மிக்க அன்பும் மதிப்பும் உடையவர். இன்று காலை அவரை வழியிற் கண்டு, ஆங்கிலத்தில் ஒன்று எழுதும் பொருட்டு மாலையில் வீட்டுக்கு வருமாறு கேட்டேன். அப்படியே அவர் மாலையில் புத்தூரி லிருந்து வந்து, சிலவற்றைக் குறித்துக் கொண்டு நாளை மாலை நன்கு எழுதிக்கொண்டு வருவதாகப் போயிருக்கிறார். தாம் ஒரு வக்கீல் என்று சிறிதும் பெருமை பாராட்டாமல் இவ்வா றெல்லாம் நடக்கும் அவரது குணம் வியக்கத்தக்கது. உயர்திரு. குக. மணிவாசக சரணாலய சுவாமி

களுக்கு நேற்று ஒரு கடிதம் எழுதினேன். நெடுநாளாக வராதிருந்த அவர்கள் என் கடிதம் கிடைக்காமலே இன்று இங்கு வந்து பகலுணவுண்டு, மாலையில் ஊருக்குப் புறப்பட்டார்கள். இன்று புரூப் திருத்தியநுப்பினேன். மலையாளம் கற்பதற்குப் பால பாடம் இன்று ஆரம்பித்துளேன். வேறு வேலை நடைபெற வில்லை. கார்த்திகைச் சோமவாரமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். என்னுள்ளம் சிறிதும் கனிந்தமை புலனாக வில்லை.

**7 - 12 - 26**

'கண்ணகி வரலாறு' என நான் எழுதியதன் புரூப் சிறிது வந்ததனைத் திருத்தியநுப்பியதும், ஆங்கிலம் படித்ததுமே வேலை. உரை யெழுதவே முடியவேயில்லை.

**8 - 12 - 26**

நேற்றிரவு துயிலும் பொழுது 2 மணிக்குமேல் விழித்தேன். பின்பு இரவில் துயில் வராமையால் வைகறையில் எழுந்து ஆங்கிலம் படித்தேன். இன்றும் கல்லூரிக்குப் போய் வந்து மலையாளம் படித்ததும், யூனிவர்சிட்டியார் ஏற்படுத்தும் உபந்நியாசங்கட்கு மனுச் செய்தல் கருதி, அதற்குப் பிரசங்கத் தலைப்புகள் குறித்துக் கொண்டிருந்ததுமே வேலை.

**9 - 12 - 26**

இன்று வேலை யொன்றும் நடைபெறவில்லை. யூனிவர் சிட்டிக்கு விண்ணப்பமொன்று தயாரித்துக்கொண்டிருந்தேன்.

**10 - 12 - 26**

தமிழ் வடிவெழுத்து சம்பந்தமாக ஓர் ஆங்கிலப் புத்தகத்தி லிருந்து சில குறிப்பெழுதியதன்றி வேறு வேலையில்லை. இங்கு வந்த என் அன்பர் K. நரசிம்ம ஐயங்காருடன் ஆற்றுப் பக்கம் போய்வந்து பேசிக்கொண்டிருந்தேன். அதனால் வெள்ளிக் கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**11 - 12 - 26**

சென்னைச் சர்வகலா சங்கத்தினர் திராவிட மொழிகளின் வளர்ச்சி குறித்து ஏற்படுத்தவிருக்கும் உபந்நியாசங்களில், நான் தமிழ் சம்பந்தமாக ஆறு உபந்நியாசம் செய்வதாகக் குறிப்பிட்டு மனு எழுதி, அனுப்புமாறு பிரின்சிபாலிடம் கொடுத்துவந்தேன். இன்று வேலை யொன்றும் நடக்கவில்லை.

**12 - 12 - 26**

இருவேறு புரூப் திருத்தியதும் மலையாளம் படித்ததும் இன்றைய அலுவல்கள்.

**13 - 12 - 26**

திருவிளையாடல் உரை நெடுநாளாக எழுதப்படாதிருந்து வந்தது; இன்று எழுதினேன்.

கார்த்திகைச் சோமவாரமாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து தரிசித்து வந்தேன். சங்காபிடேகம் நடந்தமையால் திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள்.

**14 - 12 - 26**

சிறிது புரூப் திருத்தினேன். திருவாளர் மா. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் எழுதிய 'திருநான்மறை விளக்க ஆராய்ச்சி' என்னும் புத்தகத்தில் ஒருபகுதி மேலோட்டமாகப் படித்துப் பார்த்தேன்.

**15 - 12 - 26**

புரூப் திருத்தியதும் நான்கு கடிதம் எழுதியதுமன்றி திருவிளையாடல் உரை சற்று மிகுதியாகவே எழுதினேன். இன்று நாள் முழுதும் இடைவிடாது வேலை செய்துகொண்டே யிருந்தேன். இன்று வைகுந்த ஏகாதசியாகும். நான் வீட்டை விட்டு எங்கும் செல்லவில்லை.

**16 - 12 - 26 (அக்ஷய, மார்கழி, 1)**

உரை சிறிது எழுதினேன். மலையாளம் சிறிது படித்தேன்.

**17 - 12 - 26**

என் தம்பியின் மாமனாராகிய திருவாளர் இராமசாமி பிள்ளையவர்கள் சென்னையிலிருந்து இன்று பகல் இங்கு வந்தார். கார்த்திகையும் வெள்ளிக்கிழமையுமாகிய இன்று அவருடன் மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். இன்று நண்பகலுக்குப்பின் நாள்முழுதும் எனக்குத் தலைவலித்துக் கொண்டிருந்தது.

**18 - 12 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**19 - 12 - 26**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**20 - 12 - 26**

*இன்று புரூப் திருத்தினேன். உரையெழுதவில்லை. ஆங்கிலம் முதலியன படிக்கவுமில்லை. இன்று மார்கழித் திருவாதிரை யாகலின் சிவத்தலங்களெல்லாம் தரிசன விசேட முடையன. சிதம்பர தரிசனத்திற்கு எண்ணிறிந்தோர் சென்று கூடியிருப்ப இரவு மலைக்கோயில் சென்று தரிசித்துவந்தேன். சில தேவாரப் பதிகங்கள் படித்தேன்.*

***இன்று விடியற் காலையில் வீட்டு வாசற்படியிலே நான்கு அணா வெள்ளிப்பணம் கிடந்து என் மனைவியாற் கண் டெடுக்கப்பெற்றது. கல்வியின் பொருட்டு என் வருவாயி லிருந்து ஒரு நிதி சேர்க்க வேண்டுமெனச் சில காலமாக நான் எண்ணி வந்தாலும் பணத்தை வேறு எடுத்துவைக்கும் துணிவில்லாத வனாயிருந்தேன். இன்று கிடைத்ததை ஆண்டவனளித்த படிக் காசெனக் கருதி, இது முதல் ஒரு நியதிப்படி கல்வி நிதி சேர்ப்பதெனத் துணிந்து, படிக்காசை அதற்கு முதல் வருவாயாக எடுத்து வைத்துளேன். இத்தகைய எண்ணத்தை உண்டாக்கிய பெருமான் இந்நெறியினின்றும் நான் பிறழாமற் காத்தருள் புரிவானாக.***

**21 - 12 - 26**

*இன்று உரையெழுதியதுடன், ஆங்கிலம் சிறிது மிகுதி யாகவே படித்தேன்.*

**22 - 12 - 26**

*உரை எழுதினேன். இரவில் கம்பராமாயணத்தில் சிற்சில பகுதிகளைப் புரட்டிப் பார்த்தேன்.*

**23 - 12 - 26**

*பிரயாணத்திற்குச் சித்தஞ் செய்ததன்றி வேறு வேலை யொன்றுஞ் செய்யவில்லை.*

**24 - 12 - 26**

*நேற்றிரவு 8½ மணிக்குப் புறப்பட்டு இன்று விடியுமுன் சாத்தூர் வந்து சேர்ந்தேன். உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகளும் தம்முடன் அன்புடையார் மூவரை யழைத்துக் கொண்டு மதுரையிற் புகைவண்டியேறிச் சாத்தூர் வந்து சேர்ந்தார்கள். சாத்தூர்த் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அமைச்சர் முதலானவர்கள் புகைவண்டி நிலையத்திற்குவந்து எங்கட்கு மாலை சூட்டிக் காரிலேற்றி மேள வாத்தியத்துடன் ஊர்வலமாக*

அழைத்துக் கொண்டு சென்றார்கள். காலை 9 மணி முதல் 11½ மணி வரை சபையில் திருமுறையிடப் பெற்றது. மாலை 3 மணிவரை சபை தொடங்கி மூன்று உபந்நியாசங்கள் நடை பெற்றன. குறிப்பிட்டிருந்தபடி நான் தலைமை வகித்து நடத்தினேன்.

**25 - 12 - 26**

இன்றும் காலையில் திருமுறை பாடுதலும், மாலையில் என் தலைமையில் மூன்று உபந்நியாசங்களும் நடைபெற்றன. இதற்கு முந்திய ஆறாவது ஆண்டிலும் இச்சங்க விழா என் தலைமையில் நடைபெற்றது.

**26 - 12 - 26**

இன்று காலை 9 மணிக்குச் சாத்தூரினின்றும் புறப்பட்டு மதுரையை அடைந்து, உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமி களுடன் உயர் பிரமானந்த சுவாமிகள் மடத்திற் சென்று தங்கினேன். மாலையில், மதுரையில் நடைபெற்ற பார்ப்பன ரல்லாதார் மகாநாட்டிற்குச் சென்றிருந்து, இரவில் திருக் கோயிலை யடைந்து மீனாக்ஷிசுந்தரேசுவரரைத் தரிசித்து வந்தேன்.

**27 - 12 - 26**

இன்று காலை 8½ மணிக்கு மீனாக்ஷியம்மையும் சோம சுந்தரக் கடவுளும் அட்டமி சப்பரத்தில் எழுந்தருளித் திருவுலாப் போந்த கோலம் தரிசித்தேன். திரளான கூட்டம் இருந்தது. 10 மணிக்குமேல் மதுரையினின்றும் புறப்பட்டு மாலை 6 மணிக்கு மேல் திருச்சிராப்பள்ளியை அடைந்தேன்.

**28 - 12 - 26**

சமாசாரப் பத்திரிகை படித்தேன். சிறிது புரூப் திருத்தினேன்.

**29 - 12 - 26**

திருவிளையாடல் உரையெழுதினேன். சிறிது புரூப் திருத்தினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**30 - 12 - 26**

திருவிளையாடல் உரை எழுதினேன். ஆங்கிலம் படித்தேன். எனக்கு இருமலின் தொந்தரை சில நாளாக இருந்துவருகிறது.

**31 - 12 - 26**

'கண்ணகி கற்பு மாண்பு' என நானெழுதிய புத்தகத்திற்குக் குறிப்புரையெழுதிக் கொண்டிருந்ததன்றி வேறொன்றுஞ்

செய்யவில்லை. இருமல் தொந்தரை செய்கின்றது. வெள்ளிக் கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

## 1927 ஆம் ஆண்டு

### 1 - 1 - 27 (அக்ஷய, மார்கழி, 17)

நேற்றெழுதிய குறிப்புரையைப் பூர்த்தி செய்து அநுப்பி விட்டுத் திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன்.

### 2 - 1 - 27

வீட்டுக் கணக்குகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, உரை எழுதினேன். காந்தியடிகள் சரிதம் 'தமிழ்நேச'னில் வந்திருந்த இரண்டு இயல்கள் படித்தேன்.

### 3 - 1 - 27

'செந்தமிழ்ச் செல்வி'யை ஒருவாறு பார்த்துவிட்டு அதற்கு 'ஆளுடையபிள்ளையார்' என்பதன் தொடர்ச்சியாகக் கட்டுரை எழுதியநுப்பினேன். திங்கட் கிழமையாகிய இன்று இருமலின் தொந்தரையைப் பாராட்டாமல் மலைக்கோயிலை அடைந்து தரிசித்து வந்தேன்.

### 4 - 1 - 27

திருவிளையாடல் உரை சற்று மிகுதியாகவே எழுதினேன். இருமலின் தொந்தரை இன்னும் தணிந்த பாடில்லை.

### 5 - 1 - 27

இன்று உரை சிறிதே எழுதினேன். இரவில் திருவிளை யாடல் முகவுரைக்குச் சிறிது எழுதினேன். இருபது நாட்களின் மேலாக நான் பார்க்கமுடியாது வெளியூர்கட்குப் போயிருந்த அன்பர் திரு. அ. மு. ச. அவர்கள் இன்று வந்து சேர்ந்தனர்.

### 6 - 1 - 27

இன்று பகலில் இருமலுக்கு ஓர் மருந்து தேடி அலைந்து வாங்கிவந்தேன். புரூப் திருத்தியநுப்பியதன்றி வேறு வேலை யொன்றும் செய்யக்கூடவில்லை.

### 7 - 1 - 27

இன்று சிறிதே உரையெழுதினேன். மாலை 6½ மணிக்கு மேல், புத்தூரிலுள்ள கிறிஸ்தவவாலிபர்சங்கத்தில் 'திருவள்ளுவர்' என்பது குறித்து ஓர் உபந்நியாசம் செய்தேன். கூட்டத்திற்கு என்

அன்பினர் சிலரும் வந்திருந்தனர். இரவு 8½ மணிக்குமேல் வீடு வந்தமையால் வெள்ளிக்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போய்த் தரிசிக்கக்கூடவில்லை.

**8 - 1 - 27**

உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**9 - 1 - 27**

காலையில் சிறிது நேரம் படித்துவிட்டுப் பின்பு உரை யெழுதிக் கொண்டிருந்தேன். இன்று மிகுதியாகவே வேலை செய்துளேன். கொங்கு நாட்டில் எங்கோ ஒரு மடத்திலிருப்பா ரொருவர் யாத்திரை செய்து கொண்டு, நேற்றிரவு அதிதியாக வீட்டுக்கு வந்தார். அவருடனிருந்து உண்டேன். ஆனால் வீட்டிற்கு வேண்டுமளவாகச் சமைத்திருந்ததனை அவருக்கு இட்டுவிட்டமையால் என் மனைவியும், புதல்வியும் சரியாய் உண்ணவில்லை யென்று அறிந்தேன். இன்றும் இரவில் வந்து சேர்ந்தார். நான் உவகையோடிருக்க முடியவில்லை. ஆனால் என் மனைவி உடனே பின்னும் சிறிது சமைத்து உணவளித்துவிட்டது மகிழக்கூடிய செய்தியே.

**10 - 1 - 27**

காலேஜ் மாணவர்களின் விடைக்கடிதங்கள் திருத்தினேன். உரை சிறிது எழுதினேன். பிரயாணத்திற்குச் சித்தஞ் செய்தேன். திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**11 - 1 - 27**

இன்று வைகறை 4 - மணிக்குமுன் குடும்பத்துடன் புறப் பட்டுப் பகல் 1 மணிக்கு நடுக்காவேரி போய்ச் சேர்ந்தேன். இன்று ஒரு வேலையும் செய்யக்கூடவில்லை.

**12 - 1 - 27**

என் தம்பி மு. கோவிந்தராஜரின் கல்யாணத்திற்குத் தஞ்சை வர்த்தகர் பாங்கியில் என் பேரால் கடன் வாங்கியிருந்த ரூபாய் ஆயிரமும் அதன் வட்டியும் கொடுத்துத் தீப்பதற்கு இன்று தஞ்சை போயிருந்தேன். மாலையில் நடுக்காவேரிக்கு வர எண்ணியும் முடியாதாயிற்று. இரவில் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் வீட்டில் படுத்திருந்தேன். கொசுவின் தொந்தரை அளவின்றியிருந்தமையால் உறக்கம் வரவில்லை. இவ்வளவு கொசுக் கடியை நான் இதற்குமுன் உணர்ந்ததில்லை. திரு. உமா - அவர்கள் மட்டும் கொசுவலைபோட்டுக் கொண்டு

படுத்திருந்தனர். ஏனையோர் எப்படி உறங்குகின்றார்களோ தெரியவில்லை. இன்றும் என் வேலை யொன்றும் நடைபெறுத லின்றாயிற்று.

**13 - 1 - 27**

காலையில் கரந்தையினின்று மோட்டாரில் கண்டியூர் வந்து, அங்கு நின்றும் கால்நடையாக 9 மணிக்கு நடுக்காவேரி வந்து சேர்ந்தேன். இங்கே தங்கும் நாலைந்து நாட்களில் சில வேலை முடிக்க எண்ணினேன். மூன்று நாட்கள் வறிதே சென்றன. பகலில் சிறிது உறங்கிவிட்டு ஏதோ சிறிது வேலை பார்த்தேன். இன்று போகிப் பண்டிகை என்று பெயர்; அதற்காக ஒரு விசேடமும் காணப்படவில்லை. கார்த்திகையாகிய இன்று இவ்வூர்ச் சிவாலய மடைந்து தரிசித்து வந்தேன்.

**14 - 1 - 27 (அக்ஷய, தை, 12)**

பொங்கற் பண்டிகையாகிய இன்று என் பெற்றோர்களுடனும், மற்றும் என் குடும்பத்தைச் சேர்ந்த எல்லோருடனும் கூடியிருக் கலானேன். திருவிளையாடல் உரையும், முகவுரையும் எழுதிக் கொண்டிருந்தேன். மகரசங்கிராந்தியும் வெள்ளிக்கிழமை யுமாகிய இன்று இவ்வூர்ச் சிவாலயமெய்தித் தரிசித்து வந்தேன்.

**15 - 1 - 27**

திருவிளையாடல் முகவுரையின் ஒரு பகுதியைத் திருத்த முற எழுதிவிட்டுச், சிறிது உரையெழுதினேன்.

**16 - 1 - 27**

இன்று வேலை யொன்றும் நடக்கவில்லை. மாலையில் பொங்கலுக்குத் தொழுமாடுவிட்டுப் பிடித்தார்கள். சில ஆண்டு களாக இது நன்கு நடைபெறவில்லை. நானும் பார்க்க நேர்ந்த தில்லை. இன்று மாலை சிறிது நேரம் வேடிக்கை பார்த்தேன்.

**17 - 1 - 27**

இன்று வைகறை 4 மணிக்கு மேல் குடும்பத்துடன் புறப்பட்டு 10 மணிக்குத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். வேலை யொன்றும் நடக்கவில்லை. திங்கட்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசிக்கவுங் கூடவில்லை.

**18 - 1 - 27**

கல்லூரி மறுதிறப்பாகிய இன்று கல்லூரிக்குச் சென்று பாடம் நடத்தினேன். திருவிளையாடல் முகவுரை சம்பந்தமாக,

ஏதோ சிறிது எழுதியதன்றி வேறொன்றும் செய்யக்கூட வில்லை.

**19 - 1 - 27**

சிதம்பரத்திலிருந்து ஓர் சிவனடியார் காலை பதினொரு மணியளவில் என் வீட்டிற்கு வந்தார். அவர் வீட்டினுள் நுழைந்த வுடனே 'உங்கட்கு என்ன வேண்டும்' என்று கேட்டேன்; அவர், 'கொடுப்பீர்களா? தேவாரம் வேண்டும்' என்றார்; நான், தேவார அடங்கல் முறையைக் காட்டி, 'இஃது இங்கிருக்க வேண்டுமே' என்றேன். தொடக்கத்திலேயே அவரது மனம் தூயதாதலை அறிந்தேன். எனினும் புத்தகம் கொடுக்க மனமுண்டாகவில்லை. நான் புத்தகம் எனக்கு வேண்டு மென்றவுடன், அவர் 'இவைகளை மிகுதியாக அச்சிட்டுப் பரப்புதல் வேண்டும்; சைவத்தின் பொருட்டு நால்வர்கள் என்ன பாடுபட்டிருக்கிறார்கள்; இப்பொழுது எங்கே பார்த்தாலும் புறச்சமயத்தவரே காணப்படுகின்றனர்; இப்படி யிருந்தால் நம் சமயம் கூடிய விரையில் எப்படியாகுமோ? எனக்கு இது மிகுந்த கவலையாயிருக்கிறது; நீங்கள் ஏதோ செய்து வந்தாலும் இது போதாது; இன்னும் மிகுதியாகச் செய்ய வேண்டும்; துரிதமாகச் செய்ய வேண்டும்' என்று இத்தகைய வார்த்தைகளை அடிக்கடி என்னிடங் கூறினார். மற்றும், திருநாவுக் கரசுகளும் அப்பூதி யடிகளும் சந்தித்த கதை முதலியன பற்றியும் பேசினார். அவர் நன்கு படித்தவராகத் தோன்றாவிடினும் அவருடைய தூய மனமும் அன்பும் என்னை வசீகரித்துவிட்டன. அவர் சொல்லிய ஒவ்வொரு சொல்லையும் மிகு ஆர்வத்துடன் கேட்டேன். அச் சொற்களெல்லாம் அவர் மூலமாகச் சிவபெருமான் எனக்குக் கூறியன வென்றே எண்ணினேன்.சின்னாளின் முன்புதான் கல்விநிதி யொன்று சேர்ப்பதற்கு என் வருவாயில் மிகச் சிறு பகுதியையேனும் நியதியாகத் தொகுக்க வெண்ணி, ஆரம்பமும் செய்துவைத்தேன்; நால்வர் பெருமைகளையும், தேவாரம் திருவாசகம் போன்றவைகளையும் அச்சிட்டுப் பரப்ப வேண்டு மென்னும் எண்ணமே அது முதல் எனக்கிருந்து வருவது; இன்று அவர் கூறிய மொழிகள் இதனை இன்னும் தீவிரமாக நாம் செய்ய வேண்டுமென அறிவுறுத்தின. எளியேனையும் ஓர் கருவி யாகக் கொண்டு சிவபெருமான்றிருவருள் யாது செய்யுமோ அறியேன். இன்று அவருடன் இருந்து உண்ணும் பேறு உளதாயிற்று.

திருவிளையாடல் முகவுரைரைப் பூர்த்தி செய்தனுப்பி விட்டு, உரை சிறிது எழுதினேன்.

**20 - 1 - 27**

கல்லூரிக்குப் போய்வந்தபின் உரையெழுதினேன்.

**21 - 1 - 27**

இன்று கல்லூரி போய்வந்தபின் வேலை நடக்கவில்லை. வெள்ளிக்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகவில்லை. இரவு நெல்லைக்குப் புறப்பாடு.

**22 - 1 - 27**

காலை 9- மணிக்குத் திருநெல்வேலி சேர்ந்தேன். மாலை 4- மணிக்கு மேல் உயர்திரு. வாலையானந்த சுவாமிகளின் தலைமையில் நடந்த சைவசித்தாந்த சங்க ஆண்டுவிழாவில் இரவு 8 மணிக்குமேல் ‘வள்ளுவர்வாய் மொழி’ என்னும் பொருள் பற்றி உபந்நியாசஞ் செய்தேன். கூட்டம் மிகுதியாக விருந்தது.

**23 - 1 - 27**

திருநெல்வேலியில் பாளையங்கோட்டை ஜில்லா ரிஜிஸ்டரார் ஆக இருக்கும் திருவாளர் சபாபதிப் பிள்ளை யவர்கள் வீட்டிற்கு இன்று பகல் விருந்திற்கு அழைக்கப் பெற்றுப் போயிருந்த பொழுது 85 ஆண்டுகளின்முன் அச்சிட்ட கம்ப ராமாயணப் பிரதியொன்று பார்த்தேன். அதில் ஏகார ஓகார உயிர்கட்குமேல் புள்ளிவைக்கப்பட்டிருந்தது. சபாபதிப் பிள்ளை யவர்கள் கம்பராமாயணத்தில் நல்ல பயிற்சியுடையர். முன்பொரு கால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் எனது தலைமையின்கீழ் அவர் கம்பராமாயணப் பிரசங்கம் புரிந்ததுண்டு. இன்று சங்கத்தில் ‘தமிழின் சிறப்பியல்பு’ என்பது குறித்து உபந்நியசித்தேன். நெல்லையப்பரைத் தரிசியாமலே திருச்சிக்குப் புறப்பாடு.

**24 - 1 - 27**

இன்று காலை காலேஜுக்குப் போனபின் சிவகங்கை சோம சுந்தரம் பிள்ளை, உப்பிலியாளையம் R. V. இலக்ஷ்மண நாயுடு என்னும் இரண்டு அன்பர்களின் கடிதங்கள் வந்திருக்கப் பெற்றேன். இவ்விருவரும் என்னிடம் அளவிடமுடியாத அன்புடையவர்கள். சோமு இண்டர் மீடியட்டிலும், பி. ஏ. விலும் தமிழ் எடுத்துக் கொண்டு என்னிடம் படித்தவர். என் வீட்டிலே சிறிது நாள் இருந்தவர். கூரிய அறிவும், மிகத் தாராளமான சிந்தையு முடையவர். நெடுநாளாக இவரைக் காணாமலும் இவர் கடிதம் பெறாமலும் இருந்தேன்; சின்னாளின் முன் சாத்தூர் போய்

மதுரை வந்தபொழுது இவரைச் சந்தித்தேன். இலக்ஷுமண நாயுடு நான் கோயமுத்தூர் சென்று மைக்கல் ஸ்கூலில் பண்டிதராக 1909-ல் இருந்தபொழுது 4-வது பாரத்தில் என்னிடம் படித்தவர். அது முதல் எங்கள் நட்புப் பெருகி வளர்ந்து வருகிறது. இவர் ஒரு செல்வக் குடும்பத்திற் பிறந்தவர். மிக உயர்ந்த குணங்களும் தாராளத்தன்மையும் உடையவர். நான் 'கபிலர்' அச்சிடுதற்கு ரூபா முந்நூறு இவர் உதவினர். நெடுநாளாக இவர் கடிதம் பெறாதிருந்து இன்று பெற்றேன்.

நேற்றிரவு முழுதும் உறக்கமின்றிப் பிரயாணஞ் செய்து வந்தமையால் பகலில் உறங்கியதன்றி வேறு வேலை நடக்கவில்லை. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**25 - 1 - 27**

திருவிளையாடலின் முகவுரைப் புரூப் திருத்தியதன்றி வேறு வேலை செய்யக்கூடவில்லை.

**26 - 1 - 27**

உரை சிறிது எழுதினேன். பசுபதிபாளையம் கருப்பண்ணக் கவுண்டர், வாங்கல் அப்பாவுப்பிள்ளை என்னும் என் அன்பர்கள் இருவர் இரவில் வர, இரவு 10½ மணி வரையில் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். இடையே சில காலம் ஏதோ ஒரு கோளின் வலிமையால் சில அன்பர்களுடன் கடிதப் போக்கு வரவும் சந்திப்புமின்றியிருக்க நேர்ந்தது. இப்பொழுது அக் கோளின் நிலை மாறுவது போலும்.

**27 - 1 - 27**

இன்று ஒருவர்க்கு ஓர் சிவாலயத் திருப்பணிப் பத்திரிகை எழுதிக் கொடுத்தேன். சிறிது உரை யெழுதினேன்.

**28 - 1 - 27**

இன்று காலேஜுக்குப் போய்ப் பாடம் நடத்தியதே முக்கிய வேலை. 'செந்தமிழ்ச் செல்வி' ஒரு சஞ்சிகை வந்திருந்ததனைப் படித்தேன்; 'கலிகாலக் கொடுமை' என்னும் தலைப்பில் சுவாமி வேதாசலம் எழுதியிருந்த ஓர் கட்டுரை மிகுந்த வருத்தத்தை விளைத்தது; பிராமணரை அளவின்றி நிந்தித்து எழுதி யிருக்கிறார். சாஸ்திரங்களை யெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு விட்டார். உலகம் மிகுந்த குழப்பமான நிலையில் இருக்கிறது. உயர்திரு மணிவாசக சரணாலய சுவாமிகள் இன்று இரவு இங்கு

வந்துளார்கள். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயில் சென்று அம்மையப்பரைத் தரிசித்துக் குறையிரந்து வந்தேன்.

**29 - 1 - 27**

இன்று பெண்பாடசாலைகளின் உபாத்தியார்களுக்குத் திருக்குறள் என்பது குறித்து ஓர் உபந்நியாசம் செய்தேன். சிறிது உரையெழுதினேன்.

**30 - 1 - 27**

பல நாட்களாக ஆங்கிலம் படிக்காதிருந்தேன். இன்று காலை சிறிது ஆங்கிலம் படித்துவிட்டு, பகல் முழுதும் உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**31 - 1 - 27**

இன்று கல்லூரிக்குப் போய்வந்த பின் பகல் முழுதும் உரையெழுதிக் கொண்டிருந்தேன். திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து இறைஞ்சிவந்தேன்.

**1 - 2 - 27 (அக்ஷய, தை, 19)**

இன்று கல்லூரிக்குப் போய்வந்தபின் சிறிதே உரை யெழுதினேன். சென்ற மாதம் ஈட்டத் தொடங்கிய கல்விநிதிக்கு ஜனவரி மாதம் சம்பளத்தில் ரூபாய்க்கு அரையணா வீதம் இன்று எடுத்துவைத்துளேன். புதுக்கோட்டையிலுள்ள தமிழ் வைத்தியம் புலவர்ச் சாமியார் இன்றிரவு வீட்டிற்கு வந்தார். அவருக்கு வயது 90 ஆகும். ஒரு பல்லேனும் விழுந்ததாகத் தெரியவில்லை. நடையாவது சொல்லாவது சிறிதும் தளர வில்லை. ஆனால் இப்பொழுது காது சரியாய்க் கேட்கவில்லை.

**2 - 2 - 27**

இன்று உரை மிதமாக எழுதினேன். நேற்றிரவும் அதற்கு முன்னாளிரவும் 'தமிழ்ப் பொழில்' இரு மாதப் பகுதி படித்தேன். இன்றிரவு கலித்தொகையில் நான்கு பாட்டுக்கள் பாடஞ் சொல்லுதற்காகப் படித்தேன்.

**3 - 2 - 27**

இன்று யாதொரு வேலையும் நடக்கவில்லை.

**4 - 2 - 27**

கல்லூரியினின்று வந்தபின் சிறிது புரூப் திருத்தியனுப்பினேன். எனினும் வேலை யொன்றும் நடக்கவில்லை யென்றே சொல்ல

வேண்டும். மாலை 6 மணிக்குமேல் சைவ சித்தாந்த சபையில் உபந்நியாசம் நடந்தமையால் தை வெள்ளிக் கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை. பல மாதங்களாக நடைபெறாதிருந்த சபை இப்பொழுது திரு. ம. பெரியசாமி பிள்ளையைக்காரியதரிசியாகப் பெற்று நடைபெறத் தொடங்கியுளது. அப்பூதியடிகளின் திருநாளாகிய இன்று எனது சிறிய உபயத்தை ஏற்று நடத்தப் பெற்றது. என் அன்பர்களில் ஒருவர் உபந்நியாசம் புரிந்தனர். ஒருவர் தலைமை வகித்தனர்.

**5 - 2 - 27**

சிறிது உரை யெழுதினேன்.

**6 - 2 - 27**

சில கடிதங்கள் எழுதினேன். ஹைஸ்கூல்களிற் பாடமாக வைக்கக்கூடிய தமிழ்ச் செய்யுட்களின் திரட்டு ஒன்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் வெளிப்படுத்துதற்கு என் புதல்வி சௌ. பார்வதியம்மாளைக் கொண்டு எழுதுவித்து வந்தேன்; இன்று அதில் நான் சில எழுதிக் கொண்டிருந்தேன்.

**7 - 2 - 27**

இன்று யாதொரு வேலையும் செய்யக்கூடவில்லை. நோயின் தொந்தரை மிக்குளது. திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**8 - 2 - 27**

நேற்று இரவு முழுதும் இன்று காலை 8 மணிவரையில் மிகுதியாக விருந்தது. கல்லூரிக்குப் போய் வந்தபின் இன்று வேலை யாதும் செய்யலாகாதென எண்ணினேன். எனினும் ஆங்கிலச் சிற்றிலக்கணமொன்று படித்துக் கொண்டிருந்தேன்.

**9 - 2 - 27**

நேற்றிரவு பஞ்சாக்கர விசாரத்துடனும் சிந்தனையுடனும் துயின்றேன். நடுக்காவேரியில் எங்கள் தெருவிலுள்ள ஒரு பையன் என்னிடம் சிறிது படித்திருப்பதாகவும், அவன் இரண்டு பட்டுக் கரை வஸ்திரங்களும் சில ரூபாய்களும் ஒரு புத்தகமும் என்னிடம் காணிக்கையாகக் கொண்டுவந்து வைத்து என்னைப் பார்த்த தாகக் கனவு கண்டேன். அப்புத்தகத்தின் அட்டை முழுதும் பொன்கிலிட்டுச் செய்யப்பட்டிருந்தது. அப் புத்தகத்தின் பெயர் ‘குணசுந்தரி’ என்று எழுதப்பட்டிருந்ததாக நினைவு. மற்றொரு

கனவு; என் அன்பராகிய திருமங்கலம் மீனாக்ஷிசுந்தர முதலியார் தமக்கு நெருங்கிய உறவினர் வீட்டுப் பெண்ணைத் தாம் இரண்டாவது மணம் முடிக்க இருப்பதாகவும், அப்பெண்ணும் தாமும் ஒருவரை யொருவர் எவ்வளவு காதலித்து வந்திருக் கிறார் களென்பதை அவர் என்னிடம் கூறியதாகவும் கனவு கண்டேன். காதல் சம்பந்தமாகப் பிறிதொரு கனவுங் கண்டேன். இன்றும் ஆங்கில இலக்கணம் படித்துக்கொண்டிருந்ததே அலுவல். கார்த்திகையாகிய இன்று மலைக்கோயில் போகக்கூட வில்லை.

**10 - 2 - 27**

இன்று ஒரு வேலையும் செய்யக் கூடவில்லை.

**11 - 2 - 27**

இன்று திருவிளையாடல் உரை புரூப் திருத்தியனுப்பியதே அலுவல். தை வெள்ளிக்கிழமையாகிய இன்று நான் எப்படியோ மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தது திருவருட்செயலே. அம்மை சந்நிதியில் குருக்கள் குங்கும புஷ்பப் பிரசாதங் கொண்டு வந்து கொடுக்குங்கால் இஷ்ட சித்திகளைப் பெறும்படி ஆசிர்வதித்து அளித்தார். இஃது எனக்கு அளவற்ற மகிழ்ச்சி விளைத்தது. இரவு 6½ மணிக்குமேல் சபையில் கண்ணப்பர் திருநாட் கொண்டாட்டமாகக் கண்ணப்பர் சரித்திர உபந்நியாசம் நடந்ததனைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**12 - 2 - 27 (அக்ஷய, மாசி, 12)**

கல்லூரி போய் வந்ததும், மாலையில் ஓர் ஹாஸ்டல் விழாவுக்குச் சென்றிருந்ததுமன்றி வேலை யொன்றும் நடக்க வில்லை.

**13 - 2 - 27**

இன்று ஞாயிற்றுக்கிழமையாகியும் வேலை யொன்றும் நடக்கவில்லை. மாலையில் சைவசித்தாந்த சபையில் உயர்திரு. வாலையானந்த சுவாமிகளால் ஓர் உபந்நியாசம் நடந்தது.

**14 - 2 - 27**

இன்றும் வேலை யொன்றும் நடக்கவில்லை. மாலையில் கால்டுவெல் ஹாஸ்டல் விழாவுக்குச் சென்று அங்கு நடித்த நாடகங்களைக் கண்டு, இரவு 8 மணிக்குமேல் அங்கு நிகழ்ந்த நிலாவுண்டி விருந்தருந்தி வந்தேன். மிக்க குதூகலமாயிருந்தது. கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

## 15 - 2 - 27

இன்று கல்லூரிக்குச் சில வினாக்கடிதங்கள் எழுதியதே வேலை. வாய்மையைக் காக்க முடியாமல் தத்தளிக்கின்றேன். சத்தியத்தைக் கடைபிடிக்கக் கருதுகின்றவர்கள் தாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் குற்றமின்றாக ஆராய்ந்து நிதானத் துடன் பேச வேண்டும். புறங்கூறுதல் முதலியன சிறிதிருப்பினும் வாய்மை பிறழ்ந்து விடுகின்றது.

## 16 - 2 - 27

வேலை யொன்றும் நடவாமல் பொழுது எப்படியோ கழிகின்றது. என் வாழ்க்கை நிலைமையும் ஓர் திட்டத்திற்கு வரவில்லை. அடிக்கடி குழம்பிக் கொண்டிருக்கிறது.

## 17 - 2 - 27

சிறிது ஆங்கிலம் படித்ததன்றி வேறு வேலையில்லை.

## 18 - 2 - 27

சிறிது உரையெழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் எய்தித் தரிசித்து வந்தேன்.

## 19 - 2 - 27

எங்கள் கல்லூரியில் ஓர் ஐரோப்பிய உபாத்தியாயர் ஓர் கிறிஸ்தவ மாணவன் வகுப்பிற்கு வெளியே நின்று கொண்டிருந் ததற்காக அவனை உதைத்துவிட்டாரென்றும், அதனால் கிறிஸ்தவ மாணவரனைவரும் கல்லூரிக்கு வெளியே நின்றன ரென்றும் அறியலானேன். இன்று திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுதற் பொருட்டுத் திரிசிரபுரத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கூடிய கூட்டத்தில் திருவள்ளுவர் என்னும் பொருள் குறித்து நான் ஒரு உபந்நியாசஞ் செய்தேன். மிக்க உற்சாக மின்றியும் சிறிது திகைப்புடனுமே இன்று பேசினேன்.

## 20 - 2 - 27

இன்று காலை 10 மணிக்கு என் மாணவர் உலகவூழியருடன் மதுரைச் சங்க ஆண்டு விழாவிற்குச் செல்லப் புறப்பட்டு மதுரை செல்லுங்காறும் 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்னும் பெயருடன் திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் அவர்களெழுதிய புத்தகத்தைப் புகைவண்டியில் படித்துக் கொண்டிருந்தேன். மாலையில் மதுரை சென்று திரு. கோபால

கிருஷ்ணக் கோன் அவர்கள் விடுதியிற்றங்கினேன். அன்பர் திரு. ஆ. கார்மேகக்கோனாரவர்களுடனும் அளவளாவினேன்.

**21 - 2 - 27**

இன்று நண்பகலின் பின் மதுரை அமெரிக்கன் காலேஜில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்று, பின் மாலை 5 மணிக்கு மேல் சேதுபதி ஹைஸ்கூலில் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவிற்குச் சென்றிருந்தேன். இராமநாதபுரத்தில் இவ்விழா நடைபெற்ற பிறகு பல ஆண்டுகளாக நான் இதற்குச் செல்லாதிருந்து இம்முறை சென்றேன். கல்வியிலாகா மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. கூட்டம் மிகுதியாக விருந்தது. திரு. உ. வே. சாமிநாதையரவர்களும், திரு. ரா. இராகவையங்காரவர்களும் இராமநாதபுர அரசரையும், அவைத்தலைவரையும் புகழ்ந்து சிறிது நேரம் பேசினார்கள். நான் சிறிது நேரம் பேசுகையில் தமிழ் யூனிவர்சிட்டி ஏற்படுத்த வேண்டிய அவசியத்தைச் சுட்டிப் பேசினேன். என் பேச்சுப் பலருக்கும் திருப்தி விளைத்ததோடு எனக்கும் மதிப்புண்டாக்கியதென அறிந்தேன். இரவு திரு. ஆ. கார்மேகக் கோனாரவர்கள் வீட்டில் விருந்துண்டோம். இன்று திங்கட்கிழமையாகவும், மதுரையில் கோயிலுக்குப் பக்கமாக இறங்கியிருந்தும் கோயிலுக்குச் சென்று தரிசிக்கக்கூடவில்லை.

**22 - 2 - 27**

இன்று இரண்டு வேளையும் திரு. சாமிநாதையரவர்கள் தலைமையில் சபை நடந்தது. கூட்டம் மிகுதியாக வில்லை. எதிர்பார்த்தபடி சங்க வேலைகளை யோசிக்கும் கூட்டம் நடக்க வில்லை. சிலர் உபந்நியசித்தார்கள். மாலையில் நானும் பேசினேன். இரவு 10 - மணிக்குமேல் கோயிலுக்குச் சென்று மீனாக்ஷியம்மை யாரையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்தேன். இரவு 12½ மணிக்குப் புறப்பட்டுக் காலை திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன்.

**23 - 2 - 27**

இன்று கல்லூரிக்குப் போய்வந்தபின் பகல் முழுதும் துயின்றேன்.

**24 - 2 - 27**

இன்று கல்லூரிக்குப் போய்வந்தபின் 'வள்ளுவர் வாய்மொழி' என்னும் பொருள் குறித்துச் செந்தமிழ்செல்விக்குக் கட்டுரை யெழுதினேன். நாள் முழுதும் இதன் பொருட்டுக் கழிந்தது.

**25 - 2 - 27**

இன்று சில சில்லறைக் காரியங்களால் வேலையொன்றும் நடக்கவில்லை. பி. ஏ. தமிழ் மாணவர்கள் புகைப்படம் எடுத்தனர். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலை சென்று தரிசித்துவந்தேன்.

**26 - 2 - 27**

நேற்றிரவு கனவில் எனக்குக் கும்பகோணத்தில் வேலை மாற்றலாயிருக்கிறதென யாரோ சொல்லக் கண்டேன். இன்றும் வேலை நடக்கவில்லை. பெண்பாடசலைகளின் உபாத்தியாயர் கூட்டத்தில், முன் திருக்குறளைப் பற்றிப் பேசியதன் தொடர்ச்சி யாக இன்று பேசினேன். இண்டர்மீடியட் தமிழ் மாணவர்கள் ஆசிரியர்களில் என்னை மாத்திரம் அழைத்து ஓர் சிற்றுண்டி விருந்து நடத்தி, புகைப்படம் எடுத்தார்கள்.

**27 - 2 - 27**

இன்று உரை புரூப் திருத்தியனுப்பினேன். சிறிது உரை யெழுதினேன்.

**28 - 2 - 27**

சிறிது உரை யெழுதியதுடன், ஆங்கிலம் சிறிது படித்தேன். சில கடிதம் எழுதினேன். திங்கட் கிழமையாகிய இன்று மலைக் கோயில் அடைந்து தரிசித்தேன்.

**1 - 3 - 27 (அக்ஷய, மாசி, 18)**

இன்று ஆங்கிலம் படித்ததன்றி வேறு வேலை நடைபெறவில்லை.

**2 - 3 - 27**

சிறிது ஆங்கிலமும், தேவாரமும் படித்ததன்றி ஒன்றும் செய்யக்கூடவில்லை. 'திருக்குறள் நாடகம்' என்னும் புத்தகத் திற்கு மதிப்புரை யெழுதுவதில் சில மணிநேரம் கழிந்தது. மகா சிவராத்திரியாகிய இன்று குடும்பத்துடன் மலைக்கோயிலை அடைந்து தரிசித்து, தாயுமானேசருக்கு அருச்சனை செய்வித்து வந்தேன்.

**3 - 3 - 27**

சிறிது உரையெழுதினேன். திருச்சி ஜில்லா உபாத்தியாயர் களின் கூட்டம் நடந்தவிடத்திற்குச் சென்றிருந்தேன்.

## 4 - 3 - 27

சிறிது உரையெழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து தரிசித்து வந்தேன்.

## 5 - 3 - 27

இன்று மதுரைத் தமிழ்ச்சங்கப்பரீக்ஷை நடந்த இடத்திற்குச் சென்றிருந்தமையால் வேலை யொன்றும் செய்யக் கூடவில்லை. பி. ஏ. வகுப்பினராகிய என் மாணவர் மூவர் பரீக்ஷைக்கு எழுதினர்.

## 6 - 3 - 27

'குமரன்' என்னும் பத்திரிகயின் வருட அநுபந்தத்திற்கு ஏதேனும் கட்டுரை தர வேண்டுமென அதன் ஆசிரியர் பலகால் வேண்டினமையால் 'கந்தபுராணமும் கம்பராமாயணமும்' என்னும் பொருள் பற்றிக் குறித்துவைத்தேன். நாஷனல் காலேஜ் பிரின்சிபல் வீட்டில் ஓர் அன்பர் கம்பராமாயணத்தைப் பற்றிப் பேசுவதைக் கேட்க அழைக்கப்பெற்றுப் போயிருந்தேன். வேறு வேலை யொன்றுஞ் செய்யக்கூடவில்லை.

## 7 - 3 - 27

இன்று என் நினைவில் வைக்கவேண்டியதொரு நாளாகும். சீனியர் பி. ஏ. தமிழ் மாணவர்கட்கு இன்று கடைசி வகுப்பாகின்றது. நான்கு ஆண்டுகளாக என்னிடம் தமிழ் கற்றுவந்த, என் உள்ளம் முழுதையும் இடமாகக் கொண்டு என் வாழ்க்கையை வேறுபடுத்திவந்து, இனியும் என்றும் என்னால் மறக்க முடியாத, என் அன்பு வடிவாகிய மாணவர்கட்கு நான் கல்லூரியிற் பாடம் நடத்துவது இன்றுடன் முடிகின்றது. இன்று காலை 9 ¾ மணிக்கு மேல் 10 நிமிடங்களே இவர்கட்கு வகுப்பு வைத்துக் கொண்டேன். நான் மிகுதியாகப் பேச வெண்ணியும் ஒன்றும் பேச முடியவில்லை. என்னிடம் தமிழ் எடுத்துக்கொண்டு பி. ஏ. பரீக்ஷைக்கு எழுத இருக்கும் என் அன்புள்ள மாணவர்கள் S. ஆறுமுகம், K.S. கிருஷ்ணமூர்த்தி என்னும் இருவருமாவர்.

இன்று மாலைநாஷனல் காலேஜில் P. S. ஆச்சாரியர் என்பவர்களால் 'கம்பர் கவித்திறம்' என்னும் பொருள் பற்றி உபந்நியசிக்கப்பட்து. நான் அதற்குத் தலைமை வகித்திருந்தேன். இரவில் மேற்படி காலேஜ் பிரின்சிபால் முதலானவர்களுடன் சென்றிருந்து இரவு 12 மணிக்கே வீடு வந்தேன். இன்று ஒரு வேலையும் செய்யக் கூடவில்லை. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகவில்லை. அனுட்டானமும் செய்யவில்லை.

**8 - 3 - 27**

சிறிது புரூப் திருத்தியதன்றி இன்று வேறொன்றும் செய்யக் கூடவில்லை.

**9 - 3 - 27**

சில கடிதங்கள் எழுதினேன். வேலையொன்றுஞ் செய்யக் கூடவில்லை. வேதாந்த நூற்களில் மிக்க பயிற்சியும் சீலமும் வாய்ந்தவரெனக் கொங்கு நாட்டில் மிக்க பிரசித்தி பெற்றுள்ள திருப்பதியையா என்னும் சான்றோர் இன்று மாலை இங்கு வந்தனர். இரண்டு மணி நேரம் வரையில் மத சம்பந்தமாக அவருடன் சம்பாஷணை செய்து கொண்டிருந்தேன்.

**10 - 3 - 27**

இன்று மாலை சிறிது உரையெழுதத் தொடங்கிய பொழுது நேற்று வந்த திருப்பதியையா அவர்கள் வந்தமையால் பின் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன். வேதாந்த சம்பந்த மான சில விஷயங்களை அவரிடம் கேட்டுக்கொண்டிருந்தேன்.

**11 - 3 - 27**

உரையெழுதியதுடன், வேறு சில அலுவல்களும் பார்த்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயிலை யடைந்து தரிசித்துக் குறையிரந்து வந்தேன். இறைவன் றிருவருளின் வகையை அறிகின்றிலேன்.

**12 - 3 - 27**

காந்தியடிகள் வாழ்க்கை வரலாற்றில் அவர் பிரமசரிய விரதம் எடுத்துக்கொண்டது பற்றி எழுதியிருப்பதை மிக்க கவனத்துடன் படித்தேன். உரை சிறிதே எழுதினேன். சென்னை கல்வியிலாகா மந்திரி டாக்டர் சுப்பராயன் தலைமையில் நடந்த சில நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருந்ததில் ஒரு பகுதி நேரம் கழிந்தது.

**13 - 3 - 27**

புரூப் திருத்தியனுப்பியதுடன் உரையும் எழுதினேன். படித்துக் கொண்டுமிருந்தேன்.

**14 - 3 - 27 (அக்ஷய, பங்குனி, 1)**

உரையெழுதிக் கொண்டிருந்தேன். திங்கட் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்தேன். ஆனால் மனம் தெளிவும் உற்சாகமும் உடையதாயிருக்கவில்லை.

## 15 - 3 - 27

நேற்றும் இன்றும் காலையில் இரண்டு மூன்று மைல் தூரம் நடந்துவந்தேன். இன்று வேதாந்தம் படித்த சாமியா ரொருவர் வந்தார். அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டி ருந்தேன். இன்று ஏற்பட்டதொரு சோதிடப் பிராந்தியால் வேலை யொன்றும் செய்யக் கூடவில்லை. இவ்விவரம் நாளை எழுதப் பெறும்.

## 16 - 3 - 27

மலைக்கோட்டையின் கீழ்புறத்தில் 'சத்திவேல் நர்த்தன சோதிடசாலை' என்று போர்டு போட்டுக்கொண்டு சோதிடம் சொல்லி வருவது குறித்து முன் ஒருமுறை எழுதியிருக்கிறேன். அது முற்றிலும் பித்தலாட்டமாகுமென முன்பெல்லாம் நினைத்திருந் தேனாயினும், என் பழைய நண்பராகிய M. A. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் என்னிடம் வந்து அது சம்பந்தமாகக் கூறியவற்றைக் கேட்டு மருண்டு நேற்று அவருடன் சென்று சோதிடர்க்கு ஏற்பட்ட ரூபாய் ஐந்தையும் கொடுத்து என் ஜாதகத்தைப் பார்க்கச் சொன்னேன். நேற்று என் ஜாதகம் அகப்படவில்லை. இன்று அகப்பட்டது. தினந்தோறும் பலர் வந்து பணங் கொடுக்கின்றனர். நான் பார்த்ததில் என் ஐயப்பாடு அதிகமாயிற்றென்றே சொல்ல வேண்டும். இதன் விவரங்களை இங்கெழுதுவது வீண்காலப் போக்கு. நான் ரூபாய் கொடுத்தது பெரிய அநீதியென்றே நினைக்கிறேன். இச் செயலால் இரண்டு நாளாக வேலையுங்கெட்டது. புரூப்திருத்தியதொன்றே அலுவல்.

## 17 - 3 - 27

இன்று உரையெழுதினேன். மனநிலை நன்றாக இல்லை. வாய்மையைக் கடைப்பிடிக்க முடியாமலிருக்கிறது.

## 18 - 3 - 27

காலையில் சிறிது உரையெழுதினேன். யூனிவர்சிட்டியி லிருந்து வந்த செக் மாற்றுவதற்கு நண்பகலில் ஜில்லா கசானாவுக்குப் போய் மாலையிற்றான் வீடு வந்து சேர்ந்தேன். இன்று பங்குனி உத்திரத் திருநாள். திருவாரூர் முதலிய சிவத்தலங் களிலும், முருகவேள் திருப்பதிகளிலும் மிக்க விசேடமா யிருக்கும். இன்று வீட்டில் யாவரும் விரதம் எனினும் நான் சிறிதும் முறைப்படி விரதங் காக்கவில்லை. உத்தரமும், வெள்ளிக்கிழமையுமாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து - தரிசித்து வந்தேன்.

**19 - 3 - 27**

அங்குமிங்கும் போய் வந்ததன்றி, இன்று வேலையாதும் செய்யக்கூடவில்லை. திருவாளர் மு. ரா. அருணாசலக் கவிராயர் அவர்கள் தாம் பதிப்பித்த திருக்குறட் கையடக்கப் புத்தகத்திற் சில பிரதிகள் அனுப்பி, அவற்றை விற்றுத்தரின் பேருதவியாகும் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார். ஒரு வாரத்திற்குள் அவற்றை விற்று இன்று பணம் அனுப்பினேன்.

**20 - 3 - 27**

இன்று முதல் கல்லூரி விடுமுறையாகும். மிகச் சிறிது உரை யெழுதினேன். இரவில், திரு. அ.மு.ச. அவர்களால் சபையில் நடந்த காரைக்காலம்மையார் என்னும் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**21 - 3 - 27**

இன்று காவிரியில் முதன் முதல் ஸ்நானஞ் செய்தேன். மிகச் சிறிது உரையெழுதினேன். வேலை நன்கு நடைபெறவில்லை. மலைக்கோயில் சென்று தரிசிததேன்.

**22 - 3 - 27**

யூனிவர்சிட்டிப் பரிக்ஷைகள் இன்று ஆரம்பம். உரை யெழுதிக் கொண்டிருந்தேன்.

**23 - 3 - 27**

புரூப் திருத்தியனுப்பிவிட்டு. உரை சிறிது எழுதினேன்.

**24 - 3 - 27**

உரை சிறிதே எழுதினேன். கல்லூரி யில்லாதிருந்தும் எழுதும் வேலை நன்கு நடைபெறவில்லை. குடும்ப சம்பந்தமாக மனதில் குழப்பம் விளைகிறது.

**25 - 3 - 27**

இன்று புத்தகங்களை யெல்லாம் தட்டி அடுக்கிக் கொண் டிருந்ததன்றி வேலை யொன்றும் நடக்கவில்லை. வெய்யிலின் கொடுமை மிகுதியாகவுள்ளது. என் மனைவியைக் கோபத்துடன் ‘செருப்பாலேயே அடிப்பேன்’ என்று வைதேன். அவள் அழுது கொண்டிருந்தனள். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**26 - 3 - 27**

புரூப் திருத்தியனுப்பியதன்றி வேறு வேலை செய்யக்கூட வில்லை. திருவிளையாடல், மதுரைக் காண்டம் பயிண்டாகி வந்த புத்தகம் இரண்டு பெற்று, ஒன்றை திரு. சரவண முதலியார வர்கட்குக் கொடுத்தேன். புத்தகம் மிக்க வனப்பாகவுள்ளது.

**27 - 3 - 27**

நேற்றிரவு கனவில் காரைப்பாக்கம் சுவாமி இறந்துவிட்டா ரெனக் கண்டு அழுதிருக்கிறேன்; வெம்மை மிகுதியால் இரவு துயில்வது வருத்தமாக இருக்கிறது.

உரை யெழுதிக்கொண்டிருந்தேன். 2 மணிக்கு மேல் ஒன்றுஞ் செய்யக்கூடவில்லை.

**28 - 3 - 27**

இன்று பல்வேறிடங்களிலிருந்து வந்த (யூனிவர்சிட்டி இண்டர் மீடியட் தமிழ் வியாச விடைப் பேப்பர்களின்) பார்சல்களை வாங்கிவந்து ஆராய்ந்து அவற்றை அடுக்கிவைத்த தன்றி வேறு வேலை யாதுஞ் செய்யவில்லை. கோயிலுக்கும் போகவில்லை.

**29 - 3 - 27**

இன்று கல்லூரிப் பரீக்ஷையின் விடைக்கடிதங்கள் சில திருத்திய தன்றி வேறு வேலை செய்யவில்லை.

**30 - 3 - 27**

இன்று கல்லூரிப் பரீக்ஷ விடைக்கடிதங்களும், யூனிவர் சிட்டிப் பரீக்ஷ விடைக் கடிதங்களும் திருத்திக் கொண்டி ருந்தேன். B.A. தமிழ்ப் பரீக்ஷ இன்று முடிவெய்துகின்றது. இப் பரீக்ஷ இவ்வாண்டு போல் எப்பொழுதும் என் கவனத்தைக் கவர்ந்ததில்லை.

**31 - 3 - 27**

யூ. விடைக்கடிதங்கள் திருத்திக் கொண்டிருந்தேன். சிறிது புரூப் திருத்தினேன்.

**1 - 4 - 27 (அக்ஷய, பங்குனி, 19)**

நேற்றுப் போன்றே இன்றைய அலுவல்களும் இருந்தன. சில கடிதங்கள் எழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்துவந்தேன்.

**2 - 4 - 27**

*விடைக் கடிதங்கள் திருத்திக்கொண்டிருந்தேன்.*

**4 - 4 - 27**

*தமிழ் யூனிவர்சிட்டி சப் கமிட்டிமுன் சான்று கூறுதற்கு வேண்டிய விடயங்களைத் தொகுத்தெழுதினேன். வேறு வேலை யொன்றும் நடக்கவில்லை. திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகவுமில்லை.*

**5 - 4 - 27**

*இன்று வேலையொன்றும் நடக்கவில்லை. திருமங்கலத்தில் நடக்கும் ஓர் கல்யாணத்தின் பொருட்டு மாலை 3 மணிக்கு முன் புறப்பட்டுச் சென்றேன். கார்த்திகையாகிய இன்று திருமங் கலத்தில் சிவாலய தரிசனஞ் செய்தேன்.*

**6 - 4 - 27**

*திருமங்கலத்திலிருந்து மாலை ஊர் வந்து சேர்ந்தேன். வேலை யொன்றும் நடக்கவில்லை.*

**7 - 4 - 27**

*திருவிளையாடல் உரையின் புரூப் திருத்தினேன்.*

**8 - 4 - 27**

*தமிழ் யூனிவர்சிட்டியின் சப் கமிட்டியாரது விசாரணை ஜில்லாபோர்டு ஆபீஸ் கட்டிடத்தில் நடந்தது. இராமநாதபுரம் ராஜா, டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்கார், சேஷுவையர், சூரியநாராயணையர், பி. ராஜன், கார்ட்டி பாதிரியார் முதலானோர் கமிட்டியில் இருந்தனர். காலை 10 - மணிக்குமேல் நான் விசாரிக்கப் பெற்றேன். சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கொண்டே தமிழுக்கு வேண்டிய நன்மை செய்து கொள்ளக்கூடு மாயின், வேறு கழகம் வேண்டியதில்லையே; தமிழுக்கு அல்லது தமிழ் மக்கட்கு என்னென்ன நன்மைகள் செய்யப்பெற வேண்டும்; எல்லாக் கலைகளையும் தமிழ் மூலம் கற்பிப்பது சாத்தியமா; ஆங்கிலம் கட்டாய பாடமாக இன்றி விருப்பப்பாடமாக விருப்பது சாத்தியமா? ஆங்கிலத்தில் உள்ள கலைகளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பொழுது சொற்களுக்கு என்ன செய்கிறது என்பன முதலிய கேள்விகள் என்னைக் கேட்டார்கள்; ஒவ்வொன்றுக்கும் தக்கவாறு பதில் சொன்னேன்.*

விடைக் கடிதம் சிறிது திருத்தினேன். வெள்ளிக்கிழமை யாகிய இன்று மலைக்கோயிலை யடைந்து தரிசித்து வந்தேன்.

**9 - 4 - 27**

ஐந்தாறு இடங்களிலிருந்து வந்த இண்டர்மீடியட் தமிழ் விடைக் கடிதங்களை ஆராய்ந்து ஒழுங்குபடுத்தினேன். சிறிது உரையும் எழுதினேன்.

**10 - 4 - 27**

இன்று தக்கவாறு வேலை செய்யவில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தை ஒருவாறாக முழுதும் படித்தேன். சிறிது பேப்பர் திருத்தினேன்.

**11 - 4 - 27**

இன்று விடைக்கடிதங்களின் பார்சல்களைப் பெற்று அவற்றை ஆராய்ந்து ஒழுங்குபடுத்துவதில் நேரம் சென்றது. சைவ சித்தாந்த சபையில் நான் சொல்லிவந்த பெரிய புராண படனம் பூர்த்தி செய்யவிக்காமல் ஓராண்டின் மேலாகத் தாழ்த்திருந்து, வருடப் பிறப்பன்று அதன் நிறைவு விழாக் கொண்டாடத் தீர்மானித்து, இன்று புராணத்தின் கடைசிச் சருக்கத்திற் சில பாடல்கள் நடைபெற்றது. திங்கட் கிழமை யாகிய இன்று கோயிலுக்குப் போக நேரமில்லை.

**12 - 4 - 27**

இன்று வேலை நன்கு நடக்கவில்லை. நாலைந்து பேப்பர்கள் திருத்தினேன். இன்றும் சபையில் புராணம் நடந்தது.

**பிரபவ வருஷம், சித்திரை மாதம் 1**

**13 - 4 - 27**

வருடப்பிறப்பாகிய இன்று காலையில் காவிரியில் நீராடி வந்து, மலையடிப் பிள்ளையாரை வழிபட்டு, மலைக் கோயிலை யடைந்து தரிசித்து ஆராதனை புரிந்து வந்தேன். மாலையில் ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் தலைமையில் பெரிய புராணப் படன நிறைவு விழா சைவ சித்தாந்த சபையில் நடைபெற்றது. கேட்போர் நிறைந்திருந்தனர். நான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்தை முதலிலிருந்து சுருக்கமாகச் சொல்லி வந்து, வெள்ளையானைச்சருக்கத்தில் எஞ்சியிருந்த பாடல் களுக்குப் பொருள் சொல்லிப் பூர்த்தி செய்தேன்; இரவு 10 - மணிக்குச் சபை முடிந்தது. என் தந்தையாரும் இன்று இங்கு வந்துள்ளார்கள்.

**14 - 4 - 27**

சில பேப்பர்கள் திருத்தினேன்.

**15 - 4 - 27**

இன்று முழுதும் பேப்பர்கள் திருத்தினேன். சற்று மிகுதியாகவே இன்று திருத்தப் பெற்றன.

**16 - 4 - 27**

சில கடிதங்கள் எழுதினேன். பேப்பர்கள் திருத்தினேன். சித்திரா பருவமாகிய இன்று மலையடிப்பிள்ளையாரையன்றி வேறெங்குஞ் சென்று தரிசிக்கக் கூடவில்லை. இன்றிரவு திருவானைக்கா பஞ்சப் பிரகார உத்ஸவம். இங்கிருந்து என் தந்தையார் மாத்திரம் போயிருக்கின்றனர். என் உடம்பு முற்றிலும் வலி குறைந்திருக்கிறது. இந்நிலைமைக்கே இடந் தந்து கொண்டிருப்பது தவறெனத் தோன்றுகிறது.

**17 - 4 - 27**

உரை புரூப் திருத்தியனுப்பிவிட்டு, விடைப்பேப்பர்கள் திருத்திக் கொண்டிருந்தேன்.

**18 - 4 - 27**

இன்றும் உரை புரூப் திருத்தியனுப்பிவிட்டு, விடைப் பேப்பர்கள் திருத்தினேன். 'தமிழ்நேசன்' பத்திரிகைகளில் சில கட்டுரைகள் படித்தேன். கோயிலுக்குப் போகவில்லை.

**19 - 4 - 27**

'செந்தமிழ்ச் செல்வி'க்குத் தமிழின் சிறப்பியல்பு என்பது பொருளாக ஒரு கட்டுரை யெழுதிக் கொண்டிருந்தேன்.

**20 - 4 - 27**

விடைக்கடிதங்களைப் பார்த்து மார்க்குகள் குறித்துக் கொண்டிருந்ததே வேலை.

**21 - 4 - 27**

இன்றும் அவ்வேலையன்றிப் பிறிதொன்றும் நடக்கவில்லை. இருமலின் தொந்தரை ஏற்பட்டுளது. இரவு முன்னேர மெல்லாம் உடம்பில் காய்ச்சல் இருந்தது.

**22 - 4 - 27**

சில கடிதங்கள் திருத்தினேன். உரை புரூப் திருத்தி யனுப்பினேன். சுற்றிலும் இழிந்த ஜனங்களின் குடியிருப்பால் உண்டாகும் மனவேதனை பெரிதாயிருக்கிறது. என் மனமும் கீழ்மை நெறியிற் செல்கின்றது. உடம்பின் நோயும் மிகுதி. இதனோடு, வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தது ஆறுதலளிக்கத் தக்கது.

**23 - 4 - 27**

இன்று திரிகடுகஉரை எழுதிக்கொண்டிருந்தேன். உடம்பின் நிலைமை கேவலமாகவே இருக்கிறது.

**24 - 4 - 27**

திரிகடுக உரை எழுதத்தொடங்கி இரண்டொருபாட்டில் நின்றுவிட்டது. புரூப் திருத்தியனுப்பினேன்.

**25 - 4 - 27**

இன்று வேலை யொன்றும் நன்கு நடக்கவில்லை. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்கும் போகவில்லை.

**26 - 4 - 27**

யூனிவர்சிட்டிப் பரீக்ஷை ரிசல்ட் இன்று முடிந்து அனுப்ப லாயிற்று. விடைக் கடிதங்கள் திருத்தியதில் என் அருமைப் புதல்வி சௌ. பார்வதியம்மாள் செய்த உதவி அதிகம். சில கடிதங்கள் எழுதினேன். பிரயாணத்திற்குச் சித்தம் செய்து கொண்டிருந்தேன்.

**27 - 4 - 27**

இன்று காலை 10 - மணிக்குப் புறப்பட்டுத் திருவிடை மருதூரை அடைந்து, அங்குள்ள ‘ஊழியர் கழக’த்தில், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் நடந்த சபையில் ‘திருவள்ளுவர்’என்னும் பொருள் குறித்து உபந்நிய சித்தேன். திருநாவுக்கரசர் திருநாளாகிய இன்று மருதவாணர் திருக்கோயிலை யடைந்து தரிசித்தேன். இரவில் ஆரணிக்குப் புறப்படலானேன்.

**28 - 4 - 27**

இன்று நண்பகல் ஆரணியை அடைந்து, அங்கே திருநாவுக்கரசர் திருமடத்தில் ஸ்ரீமத் ஞானியார் ஸ்வாமிகளின் தலைமையில் நடந்த

சமரச சன்மார்க்க சங்க ஆண்டு விழாக் கூட்டத்தில் 'மாணிக்க வாசகர்' என்னும் பொருள்பற்றி உபந்நியசித்தேன்.

**29 - 4 - 27**

மேற்படி சங்கத்தில் இன்று மாலை 'திருஞானசம்பந்தர்' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தேன். இரு நாளும் கூட்டம் இரண்டாயிரம் ஜனங்கட்கு மேலிருக்கும். நேற்று நான் புரிந்த உபந்நியாசம் திருப்தியாகயில்லை. இன்று திருப்தி தருவதாயிருந்தது. சபையை நடத்துகிற குடும்பத்தினர் நல்ல அன்புடையவர்கள்.

**30 - 4 - 27**

செய்யாறு (திருவோத்தூர்) ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டித ராயிருக்கும் அன்பர் வி. சாமிநாத பிள்ளையவர்களுடன் இன்று மாலை புறப்பட்டுத் திருவோத்தூரை அடைந்து, இரவில் திருக்கோயிலையெய்தித் தரிசித்தேன். இது திருஞானசம்பந்தர் பெருமானால் ஆண்பனை பெண்பனையாக்கப் பெற்ற தலமாகும்.

**1 - 5 - 27 (பிரபவ, சித்திரை மாதம் 19)**

இன்று காலையிலும் திருக்கோயில் அடைந்து தரிசித்தேன். மாலையில் செய்யாறு போர்டு ஹைஸ்கூலில் 'அன்பு' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தேன்.

**2 - 5 - 27**

வந்தவாசி என்னும் இடத்தில் டிப்டி இன்ஸ்பெக்டரா யிருக்கும் உ. வே. கோவிந்தசாமி ராஜு என் மாணாக்கராவர்; என்னிடம் மிக்க அன்புள்ளவர். இவர் நான் வந்தவாசிக்கு வரவேண்டுமென வேண்டி ஆரணிக்குத் தந்தி கொடுத்தனர். நான் திருவோத்தூர் வந்தமையறிந்து நேற்று மாலை இங்கு வந்து சேர்ந்தனர். இன்று காலை அவருடன் புறப்பட்டு வந்த வாசியை அடைந்தேன். காலையில் 'கம்பர் கவித்திறம்' என்னும் பொருள் பற்றி வந்தவாசி ஹைஸ்கூலில் உபந்நியசித்தேன்.

**3 - 5 - 27**

இன்று காலை 'சங்க இலக்கியம்' என்னும் பொருள் பற்றி உபந்நியசித்தேன். கோவிந்தசாமி ராஜுவின் குடும்ப வாழ்க்கை எனக்கு மிக்க இன்பகரமாய்த் தோன்றிற்று. அவருடைய மனைவி மிக்க முக மலர்ச்சியுடன் என்னை உபசரித்தார். இன்று மாலை 2 - மணிக்குமேல் புறப்பட்டு அச்சிறுபாக்கம் வந்து புகைவண்டி

யேறிச் சென்னையை அடைந்தேன். என் தம்பி மாமனார் காருடன் ஸ்டேஷனுக்கு வந்து என்னை அழைத்துச் சென்றனர்.

**4 - 5 - 27**

மாலையில் சிர. ஏகாம்பரத்துடன் கடற்கரைக்கு உலாவச் சென்றேன். இரவில் பொன்னம்மாளின் பரீக்ஷையைப் பற்றிய கவலையும் கனவும் மிகுதியாயிருந்தன.

**5 - 5 - 27**

இன்று காலை 'வெனீஸ் வர்த்தகன்' என்னும் செகப்பிரியர் நாடகத்திற் சிறிது ஏகாம்பரத்துடன் படித்தேன். மாலையில், திருவல்லிக்கேணி சென்று அன்பர்களைச் சந்தித்து, இரவில், அன்ப ராகிய டாக்டர் சின்னசாமி பிள்ளை அவர்கள் வீட்டில் தங்கினேன்.

**6 - 5 - 27**

இன்று மாலை 3-மணிக்கு மேல் செனெட் மாளிகையில் நடைபெற்ற தமிழ்ப் பரீக்ஷகர் கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். என் மாணவர் மூவரும் தமிழில் தேர்ந்துவிட்டனர்.

**7 - 5 - 27**

இன்று சில கடிதங்கள் எழுதினேன்.

**8 - 5 - 27**

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகக் கட்டிடத்தில், சிவஞான முனிவர் திருநாளைக் கொண்டாடுதற்குக் கூடிய அவையில், இன்று மாலை 'சிவஞான முனிவர்' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தேன்.

**9 - 5 - 27**

இன்று மாலை என் தம்பி மைத்துனராகிய சிர. ஏகாம்பரத்துடன் திருவொற்றியூர் சென்று, தரிசித்து, அருச்சனை செய்வித்து வந்தேன்.

**10 - 5 - 27**

சென்னை, பெட்ரோல் கம்பெனியின் கூலியாளர்கள் (அதில் வேலைநிறுத்தம் செய்திருப்பவர்கள்) இன்று காலையில் திரளாகக் கூடிவந்து மூன்று பெட்ரோல் வண்டிகளை வழிமறித்துக் கொளுத்திவிட்டனர். நான் இருந்த பங்களாவிற்குப் பக்கத்தில் இது நடந்தது.

**11 - 5 - 27**

இன்று கடலூருக்குப் பிரயாணமாயினேன். இன்று மாலையில், மஞ்சக்குப்பம் மாணவர் சங்கத்தில் 'திருவள்ளுவர்' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தேன்.

**12 - 5 - 27**

இன்று மாலையில், திருப்பாதிப்புலியூரில் வெள்ளி இரதத்தில் இறைவர் திருவுலாப் போதரும் காட்சியைத் தரிசித்தேன்.

**13 - 5 - 27**

இன்று மாலை ஸ்ரீ ஞானியார் மடத்து மாணவர்க கழகத்தின் விழா திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில நடந்தது. முதலியார் மூளையின் வலிமை படைத்த வராயிருக்கின்றார். பேசுவதில் அவருக்குச் சோர்வென்பது கிடையாது. 'அவர், பெண்களைத் தெய்வமாகக் கும்பிட வேண்டும்' என்றாற்போலப் பேசுவன பலருக்கு அதிருப்தியை விளைக்கின்றன. எனினும், அவர் மாதராசையை ஒழித்த தூய உள்ள முடையவராயிருக்கின்றனர் என நான் கருதும் பொழுது, என் சிறுமையையும் நான் ஒருங்கு உணர்கின்றேன்.

**14 - 5 - 27**

இன்று மாலை எனது தலைமையில் மேற்படி சபை நடந்தது. என் முகவுரை அத்துணை உற்சாகமாயில்லை. முடிப்புரை கிளர்ச்சியுடன் நன்றாயிருந்தது. மூன்று நாட்களாகத் திருக்கோயிலுக்கு அணிமையில் இருந்தும் நான் கோயிலுக்குப் போகவில்லை. இரவில் திருச்சிராப்பள்ளிக்குப் பிரயாணம்.

**15 - 5 - 27**

இன்று காலை, திருச்சிராப்பள்ளியில் 'திருநாவுக்கரசு தமிழக'த்தை அடைந்து என் குழந்தைகளையும் மனைவியையும் கண்டேன். குழந்தை சிர. நடராஜன் நேற்று முழுதும் சுரத்தால் வருந்தினன் என்பது தெரிந்தேன். இன்று சுகமாயிருக்கின்றான்.

**16 - 5 - 27**

இன்று சில கணக்குகள் பார்த்ததும், பிரயாணத்தில் 'டைரி'யில் குறித்திருந்த இந்நிகழ்ச்சிகளை இப்புத்தகத்தில் எழுதியதும் வேலை களாம். திங்கட்கிழமையும் வைசாக பூர்ணிமையும் ஆகிய இன்று கோயிலுக்குப் போக விரும்பியும் திருவருள் கூட்டுவித்திலது.

## 17 - 5 - 27

சில பத்திரிகைகள் படித்ததும், சில கடிதம் எழுதியது மன்றி வேறு வேலையில்லை. 'நக்கீரர்' இரண்டாம் பதிப்பாக நேற்று அச்சிடக் கொடுக்கப் பெற்றது.

## 18 - 5 - 27

'நக்கீரர்' புரூப் திருத்திவிட்டு, ஆங்கிலம் சிறிதுபடித்தேன். இரவில் 'நக்கீரர்'க்குக் குறிப்புரை யெழுதத்தொடங்கிச் சிறிது எழுதினேன்.

## 19 - 5 - 27

இன்று சில சில்லறை அலுவல்களே நிகழ்ந்தன. திருஞான சம்பந்தப் பெருமான்றிருநாளாகிய இன்று உபந்நியாசம் திருக்கோயில் தரிசனம் என்பவற்றில் ஒன்றும் நிகழவில்லை.

## 20 - 5 - 27

நக்கீரர் புரூப் திருத்தியதும், அதற்குக் குறிப்புரை எழுதிக் கொண்டிருந்ததும் இன்றைய அலுவல்கள். சிறிது ஆங்கிலம் படித்தேன். வெள்ளிக் கிழமையாகிய அன்று மலைக்கோயில் சென்று தரிசித்தவந்தேன்.

## 21 - 5 - 27

பி. ஏ. தமிழ்மாணவரில் ஆறுமுகம் மாத்திரமே ஆங்கிலத்தில் தேறியுளன். மற்றிருவரும் தேறவில்லை. காலையில் ரிசல்ட் பார்ப்பதற்குப் பத்திரிக்கையை எடுத்தபொழுது என் கை நடுங்கிற்று. இன்று ரிசல்ட் வெளியாகுமென நேற்றுக் காலையில் அறிந்தது முதல் அதே கவலையாயிருந்தேன். என் எண்ண மெல்லாம் பழுதாகிவிட்டன. இன்று இரண்டு மூன்று கடிதம் எழுதியதன்றி வேறு வேலை செய்யவில்லை.

## 22 - 5 - 27

நக்கீரருக்குக் குறிப்புரை யெழுதிக் கொண்டிருந்தேன்.

## 23 - 5 - 27

இன்று வேலை யொன்றும் நடக்கவில்லை. திங்கட் கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவுமில்லை. இன்று மாலை 3 மணிக்குப் புறப்பட்டு ஓர் காரியமாக நொச்சியம் திரு. ஆதிமூலவாண்டையாரவர்கள் வீட்டிற்குப் போய், இரவில் அங்கேயே தங்கினேன். இரவு கனவில் ஒருவர் நீண்ட வெள்ளைச் செவ்வந்தி மாலையை என் கழுத்தில் போடக் கண்டேன். போட்டவர் இன்னாரென்பது மறந்து போயிற்று.

## 24 - 5 - 27

நேற்றிரவு நான் கண்ட கனவினை வீட்டிற் கூறிய பொழுது, குழந்தை திரு. பார்வதியம்மாள் சில மாதங்களின் முன், தான், ‘உச்சிப் பிள்ளையார் கோயிலின்முன் ஒரு பெருங் கூட்டம் கூடியிருந்து, என் கழுத்தில் ஒரு பெரிய ரோஜாப் பூ மாலையை யாரோ அணியக்’ கனவு கண்டதாகக் கூறிற்று.

## 25 - 5 - 27

நேற்றிரவு மத சம்பந்தமானதொனரு கனவு கண்டேன். பல சமயத்தவரும் கூடியிருப்பதாகவும், பல சமயக் கொள்கைகளும் வரை கீறி அட்டவணை போட்டுக் காட்டியிருப்பதாகவும், பல சமயங்களின் முடிந்த பயனும், சாதனமும் பொருளால் ஒத்திருப் பனவாகவும், கிறிஸ்து சமயத்தில் சாதனமின்றிப் பயன் மாத்திரம் குறிக்கப்பட்டிருப்பதாகவும் கண்டேன். ஆனால் கனவு நிகழ்ச்சி முழுதும் தெளிவாக நான் அறியக் கூடவில்லை.

‘நக்கீரர்’ புரூப் திருத்தினேன். ஒன்றரை மாதமாக எழுதப் படாதிருந்த திருவிளையாடல் உரையைத் தொடர்ந்தெழுதக் கருதி நான்கு பாட்டிற்கு எழுதினேன்.

## 26 - 5 - 27

இன்று காலையிற் புறப்பட்டுக் கோனாப்பட்டுக் கலா சாலைக்குப் போய்ச்சேர்ந்தேன். கோனாப்பட்டுச் சிவாலயத்தில் இரவு தரிசனம்.

## 27 - 5 - 27

கோநகர்க் கற்பக விநாயக கலாசாலையின் ஆண்டு விழாவாகிய இன்று பிற்பகல் கூடிய அவைக்கு நான் தலைமை வகித்திருந்தேன்.

## 28 - 5 - 27

பகல் 2 மணிக்குத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன்.

## 29 - 5 - 27

‘நக்கீரர்’ புரூப் திருத்தியதன்றி வேறு வேலை நடைபெறவில்லை.

## 30 - 5 - 27

நாலைந்து கடிதம் எழுதியதன்றி வேலை யொன்றும் நடை பெறவில்லை. திங்கட்கிழமையும் கார்த்திகையும் ஆகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்துவந்தேன்.

**31 - 5 - 27**

இன்று 'நக்கீர'ரில் இரண்டு பாரம் புரூப் திருத்தியதே பெரும்பாலும் வேலையாகும்.

**1 - 6 - 27 (பிரபவ, வைகாசி, 19)**

சுந்தரராஜுலு, வேணுகோபால் என்னும் என் மாணவர்கள் கல்யாணத்திற்காக இன்று வைகறையிற் புறப் பட்டுக் குளித் தலைக்குச் சென்றேன்.

**2 - 6 - 27**

இன்று குளித்தலையினின்று வந்தபின் நண்பகற்குப்பின், திருநெல்வேலி, 'தென்னிந்திய தமிழ்ச் சங்க'ப் பரீக்ஷைக்கு ஓர் வினாக்கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன்.

**3 - 6 - 27**

இன்று வைகறையிற் புறப்பட்டுத் தஞ்சை சென்று, மாலை 5-மணிக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சேக்கிழார் திருநாளைக் கொண்டாடுதற்குக் கூடிய அவையில் 'சேக்கிழார்' என்னும் பொருள் பற்றி உபந்நியசித்தேன்.

**4 - 6 - 27**

இன்று மாலை 6-மணிக்குத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன். வேலை யொன்றும் இல்லை.

**5 - 6 - 27**

சில கடிதங்கள் எழுதியதும் 'நக்கீரர்' புரூப் திருத்தியதும் இன்றைய அலுவல்கள். சிறிது ஆங்கிலம் படித்தேன். உடம்பு சிறிது சுகமில்லை.

**6 - 6 - 27**

இன்றும் புரூப் திருத்தியது முதலிய சில்லறை அலுவல்களே. உடம்பு நலமின்மையால் திங்கட்கிழமையாகிய இன்று மலைக் கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**7 - 6 - 27**

'நக்கீரர்' புரூப் திருத்தியதும், அதற்குச் சிறிது குறிப்புரை யெழுதியதும் இன்றைய அலுவல்கள்.

**8 - 6 - 27**

இன்று சிறிதும் வேலை செய்யவில்லை. சிறிது ஆங்கிலப் பத்திரிகை படித்தேன்.

## 9 - 6 - 27

மலைக்கோயில் தாயுமானேச்சுரர் கும்பாபிஷேகத்தின் தொடர்பில் விநாயகர் முதலிய பரிவார தேவதைகட்கு இன்று காலை கும்பாவிஷேகம் நடந்தது. சென்று தரிசித்து வந்தேன். நாலைந்து கடிதங்கள் எழுதியதும், சிறிது புரூப் திருத்தியதுமே இன்றைய அலுவல்கள்.

## 10 - 6 - 27

'நக்கீரர்'க்குச் சிறிது குறிப்புரை யெழுதினேன். திருவிளையாடல் உரை ஐந்தாறு பாட்டுக்கு எழுதினேன். இரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். கும்பாபிஷேகத்தை முன்னிட்டுச் சில நாட்களாக ஜனங்கள் திரள் திரளாகப் போய்த் தரிசித்து வருகின்றனர். கீழிருந்த வழி முழுதும் போலீஸ்காரர்கள் நின்று காத்து வருகின்றனர். இன்று கோயிலுக்குப் போன பொழுது வேதியர்கள் வரிசை வரிசை யாயிருந்து வேத மோதிக் கொண்டிருந்ததும், தேசிகர்கள் தேவாரம் பாடியதும், யாகசாலையில் ஓமம் நடந்து கொண்டி ருந்ததும், ஆடவரும், அவர்களை விட மகளிரும் போய்த் தரிசித்துக் கொண்டிருந்ததும் மிக்க இன்பம் விளைத்தன. வேதம் ஓதுதல், ஓமம் வளர்த்தல் முதலியன செய்வோரிற் பெரும் பாலோர் பக்தி சிரத்தை யுடையவர்களாகக் காணப்படா விடினும், பொதுவாக அவ்வகை ஓசை முதலியன இன்ப மூட்டுவனவாயின. திரும்பி வரும்பொழுது நூற்றுக்கால் மண்டபத்தில் இரண்டு தேவதாசிகளை நடிக்கச் செய்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தையும் கண்டேன். பழைய நாளிலும் கோயில்களில் நடன மாதர்களின் நாட்டியங்கள் நிகழ்ந்தன எனினும், அப்பொழுது பக்தியால் அவை நிகழ்ந்திருக்குமென நினைக்கிறேன். மற்றொன்று; கோயிலில் புதுமையாக வரைந்திருக்கும் சித்திரங்கள் பல மிக்க அழகாய் அமைந்திருக்கின்றன. சித்திர மண்டபத்தில் சுற்றிலும் வரைந் துள்ள இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் என் கண்களைக் கவர்ந்தன. வருகிற ஜனங்கள் அவற்றில் மிக ஈடுபடுகின்றார்கள்.

## 11 - 6 - 27

திருவிளையாடலுரை எழுதிக் கொண்டிருந்தேன்.

## 12 - 6 - 27

இன்று திருவிளையாடல் உரையெழுத உட்கார்ந்தபின், அடுத்தடுத்துப் பலர் என்னைப் பார்க்க வந்து பேசிக் கொண்டிருந்தமையின் சிறிதே எழுதநேர்ந்தது. இன்று கும்பாபிஷே

கத்திற்கு வந்த என் தாய் தந்தையரை அழைத்துக் கொண்டு இரவுக் கோயிலுக்குப் போய்வந்தேன்.

**13 - 6 - 27**

இன்று பகல் 1 - மணிக்குமேல் மலைக்கோயில் மட்டுவார் குழலம்மை சமேத தாயுமான ஈசருக்கு மகா கும்பாவிஷேகம். இன்று 9 - டிக்கட்டு வாங்கிவைத்திருந்தேனாயினும் குடும்பத் தினரையும் நண்பரிற் சிலரையும் அனுப்பிவிட்டு நான் வீட்டு மெத்தையிலிருந்தே கும்பாவிஷேகம் பார்த்தேன். இன்று கோயிலுக்குப் போகவேயில்லை. இரவிலிருந்து இன்று பகல் முழுதும் எனக்குத் தலைவலி. மாலையில் 'சைவ சித்தாந்த சபை' யில் ஓதுவார்களால் தேவாரம் பாடப்பெற்றது. இரவு பஞ்சமூர்த்திகள் திருவுலாப் புறப்பாடு.

**14 - 6 - 27**

நேற்றிரவு சுவாமி புறப்படும் பொழுது தலைவலியால் நான் போய்த் தரிசியாது படுத்துறங்கினேன். இன்று காலையிலேயே சுவாமி மீண்டு கோயிலுக்கு எழுந்தருளினமையால் திருவுலாத் தரிசித்தேன். வேலை யொன்றும் சரிவர நடக்கவில்லை.

**15 - 6 - 27**

காலையிற் சிறிது 'நக்கீரர்' புரூப் திருத்திவிட்டு, செக் மாற்றக் கஜானாவுக்குப் போய் வந்தேன்.

**16 - 6 - 27**

புரூப் திருத்தியதன்றி வேறு வேலை நடைபெறவில்லை.

**19 - 6 - 27**

இன்று முற்பகலில் குடும்பக்காரியம் பார்த்தேன். பிற் பகலிலும் இரவிலும் செகப்பிரியர் எழுதிய ஆங்கில நாடகங்களில் 'வெனீஸ் வர்த்தகன்' தமிழில் வசனமாக மொழிபெயர்க்கப் பெற்றிருந்ததனையும், 'நடுவேனிற் கனவு' என்பது தமிழில் நாடக ரூபமாகவே நல்லநடையில் மொழிபெயர்க்கப் பெற்றிருந்த தனையும் படித்தேன். பின்னது கும்பகோணம் காலேஜ் S. நாராயண சாமி ஐயர் என்பவரால் மொழிபெயர்க்கப் பெற்று 1893ம் வருடம் அச்சிடப்பெற்றது.

**20 - 6 - 27**

ஸ்கூல் பைனல் வகுப்பிற்குப் பாடமாக வரக்கூடிய புத்தக மொன்று எழுத வேண்டுமெனக் கருதி, 'இராமசரிதம்' என்னும்

தலைப் பெயரிட்டு இன்று ஒரு பக்கம் எழுதி வைத்துளேன். கம்பராமாயணக்கதையை இடையிடை சில பாட்டுக்கள் அமைத்துச் சுருக்கி எழுதுவதே நோக்கம். திருவிளையாடல் உரையும் எழுதிக் கொண்டிருந்தேன். திங்கட்கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**21 - 6 - 27**

'இராமசரிதம்' சிறிது எழுதியதே இற்றை வேலை.

**22 - 6 - 27**

இன்று காலேஜ் மறுதிறப்பு. போய் வந்தேன். இண்டர் மீடியட் பாடப்பகுதிகட்கு உரையெழுதும் கருத்துடன் இன்று கம்பராமாயணம் குகப்படலத்தில் நான்கு பாட்டுகட்கு உரை எழுதினேன்.

**24 - 6 - 27**

இன்னும் நான் காலேஜிற் பாடம் தொடங்கவில்லை. வேறு வேலையும் இன்று நான் செய்யக்கூடவில்லை. வெள்ளிக் கிழமை யாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கவும் கூடவில்லை.

**25 - 6 - 27**

அச்சுக்கூடத்திலிருந்து 'நக்கீரர்' பிரதி முந்நூறு கொண்டு வரச் செய்து, சில இடங்கட்கு அவற்றைப் பார்சலில் அனுப்பும் பொருட்டுக் கட்டியதும், பாரங்கள் விலாசங்கள் கடிதங்கள் என்பன எழுதியதும் இன்றைய அலுவல்கள். இரவு 11-மணிக்கே இன்று படுக்க முடிந்தது.

**26 - 6 - 27**

சென்ற வருடம் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்து தமிழ் எடுத்துக் கொண்டு என்னிடம் படிக்க விரும்பிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரவர்களின் புதல்வராகிய முத்துக்குமார சுவாமிபிள்ளை இன்று காலை என்னிடம் வந்து, அவர் தந்தையாரும், தி. த. கனக சுந்தரம் பிள்ளையவர்களும் பதிப்பித்த கம்பராமாயணத்தின் பால காண்டமும், தம் பாட்டனார் இயற்றிய ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் என்னும் சிறு புத்தகமும் இனாமாகக் கொடுத்துச் சென்றனர். மிக நல்ல பிள்ளையாகிய இவருக்கு நான் கல்வி கற்பிக்கும் பேறு இலதாயிற்று. இன்று காலையில் பார்சல்கள் சம்பந்தமான வேலை சிறிது செய்துவிட்டு, கார்த்திகை விரதம் செய்த பின்னர்,. உறவினர் வீட்டுக் கல்யாணத்தின்

பொருட்டு மருதூர் சென்றேன். வழியில் சமயபுரம் அம்மையைத் தரிசித்துச் சென்றேன்.

**27 - 6 - 27**

மருதூரிலிருந்து மாலை 5½ மணிக்குமேல் திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன். ஒரு பி. ஏ. மாணவரிடமும், வீட்டிலும் சொல்லி இன்று அனுப்பும் படியாகத் திட்டஞ் செய்திருந்த பார்சல்களை அவர்கள் ஒழுங்காக அனுப்பவில்லை யென்பதை வந்தவுடன் அறிந்தேன். அப்பொழுது எனக்குண்டாய கோபத்திற்கு அளவில்லை. பி. ஏ. வகுப்பில் படிக்கும் மாணவர் பலர்க்கு லௌகிக ஞானமும், காரியத்திறமையும் இல்லாதிருப்பது வியப்பாகும். திங்கட்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகக்கூடவில்லை.

**28 - 6 - 27**

கல்லூரிக்குப் போய் வந்து, மாலையில் குகப்படலத்தில் இரண்டுபாட்டுக்கு உரையெழுதினேன். பின்பு பார்சல் வி. பி. க்கு எழுதும் வேலை சிறிது நடந்தது. சுந்தர ராமலிங்கம் என்ற கள்ளர் குலத்துப் பையனைக் காலேஜில் படிக்கச் செய்யும் பொருட்டுத் திருவானைக்கா ரெட்டியார் சத்திரத்தில் சேர்ப்பதற்கு மிக்க முயற்சியெடுத்தேன். ஆனால் அதன் மானேஜர் சுலபமாகவே பையனைச் சேர்த்துக் கொண்டதாக அறிந்து மகிழலானேன்.

**29 - 6 - 27**

இன்று கல்லூரிக்குப் போய்வந்து சில கடிதங்கள் எழுதியதன்றி வேறு வேலை செய்யவில்லை.

**30 - 6 - 27**

காலேஜுக்குப் போய்வந்த தன்றி. வேறு வேலையொன்றும் செய்யக் கூடவில்லை. இன்று காலையில் ஒரு காரியமாக நாஷனல் காலேஜ் பிரின்சிபாலைப்போய்ப் பார்த்தேன். பி. ஏ. ரிசல்டில் அடிஷனல் லிஸ்டு வரும் விபரம் அவராலறிந்தேன். நாஷனல் காலேஜுக்கு நான் பண்டிதராக வந்தால் நலமாயிருக்குமென்று அவர் கூறினார். ஒருவருடஞ் சென்று யோசித்துக் கொள்ளலாமென்று நான் கூறினேன்.

**1 - 7 - 27 (பிரபவ, ஆனி, 17ஆம் தேதி)**

இன்று காலேஜில் ஜூனியர் இண்டர்மீடியட்டுக்குப் பாடம் தொடங்கிற்று. தமிழுக்கு 32-பேர் வந்திருந்தனர். இன்னும்

வரக்கூடும். 1910-ம் ஆண்டுக்கு முன் கல்லூரிகளில் தமிழ் இருந்த நிலைமையும், பின் அது மாறியதும், மீட்டும் அந்நிலைமை வந்திருப்பதும், தேசபாஷை வளர்ச்சியின் இன்றியமையாமையும் முதலியன குறித்து அரைமணிநேரத்துக்கு மேலாக அவர்கட்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். கல்லூரி வேலையன்றி வேறொன்றும் செய்யக் கூடவில்லை. வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தது மகிழக் கூடிய செய்தி.

**2 - 7 - 27**

நேற்றிரவு கனவில், என் அன்புள்ள குழந்தை பார்வதி யம்மாள், நான் இறந்து விட்டதாகக் கண்டு 'நாங்கள் என்ன செய்வோம்' என்ற வாக்கியத்தைச் சொல்லிச் சொல்லி அடித்துக் கொண்டு நெடுநேரம் அழுது தலைவலியும் வந்து விட்டதென்று சொல்லிற்று.

**3 - 7 - 27**

நேற்று முன் என் குழந்தை கண்ட கனவுக்கேற்ப இடி விழுந்தாற்போலும் தந்திச் செய்தி இன்று காலை 11-மணிக்குக் கிடைத்தது. என் தம்பி பஞ்சநதம் இன்று காலை இறந்து விட்டான் என்ற செய்தியே அது. உடனே அனைவரும் ஊருக்குப் புறப்பட்டோம். 11½ மணி வண்டி தவறிவிட்டமையால் ஸ்டேஷனில் காத்திருந்து மாலை 4-மணிக்கு எக்ச்பிரசில் புறப்பட்டுச் சென்று இரவு 7-மணியளவில் நடுக்காவேரியை அடைந்தோம். அவன் உடம்பைப் பார்க்கவேண்டுமென்று என் மனைவியும் குழந்தையும் அரும்பாடுபட்டார்கள். நாங்கள் செல்தவற்குமுன் தகனஞ் செய்து விட்டார்கள். என் தம்பி மு.கோவிந்தராஜன் மாத்திரம் மனைவி யுடன், எடுப்பதற்கு முன் வந்து விட்டானாம். இறந்தவர்கட்கு அழக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்த என் தைரிய மெல்லாம் பறந்து விட்டது. கன்னங்களில் மோதிக் கொண்டு அழுதேன். என் தந்தையார் காலில் விழுந்தும், அவரைக் கட்டிக் கொண்டும் கதறியழுதேன். அவரும் கதறியழுதார்.

**4 - 7 - 27**

ஒறத்தூரில் என் அத்தை இறந்து போயினரென்றும், அதற்குப் போய் ஒருநாள் தங்கியிருந்து வந்தமையால் என் தம்பிக்குக் காலறா உண்டாயிற்றென்றும் அறிந்தேன். என் தந்தையார் பெரிய பெட்டி மேல் இருந்து கீழ் விழுந்து தலை உடைந்து பல இடங் களில் அடிபட்டிருந்தமையும் தெரிய வந்தது. முதல்நாளில் அவர் அடிபட, அடுத்த நாள் தம்பி நோயுற்றான். இரவு பகல் ஓயாத

அழுகையாரவாரமாயிருக்கிறது. என் தந்தை தாயர் அழும் பொழுது சகிக்க முடியாத வருத்தமாயிருக்கிறது.

**5 - 7 - 27**

இன்று சஞ்சயன கிரியை நடந்தது.

**6 - 7 - 27**

இன்று மாலை 6-மணிக்குத் திரிசிரபுரம் வந்து சேர்ந்தோம்.

**7 - 7 - 27**

கல்லூரிக்குப் போய்வந்து, அச்சுக்கூடத்திலிருந்து புத்தகம் கொண்டு வந்தது முதலியன இன்றைய அலுவல்.

**8 - 7 - 27**

கல்லூரிக்குப் போய் வந்ததும், சில பார்சல்கள் கட்டி யனுப்பியதும் இன்றைய அலுவல்.

**9 - 7 - 27**

சில பார்சல்கள் கட்டி அனுப்பினமையே இற்றை வேலை. மாலை 4-மணிக்குமேல் வேலை செய்தற்கு மனவெழுச்சி யில்லா திருந்தது. அப்பொழுது மனதை ஒருவழிப்படுத்திச் சிறிது சாந்தி நிலையில் இருந்து கொண்டிருந்தேன்.

**10 - 7 - 27**

கம்பர் முகவுரை சிறிது எழுதினேன். பி. ஏ. தமிழ்ப் பாடங்கள் சிறிது பார்த்தேன்.

**11 - 7 - 27**

கல்லூரியிற் பாடம் நடத்தியதன்றி வேறு யாதுஞ்செய்யக் கூடவில்லை. மனைவியின் உடம்புநிலை நாளுக்குநாள் மிக்க கேவலமாயிருக்கிறது. என் உடம்பிலும் பலமின்மையை நன்கு உணர்கிறேன்.

**12 - 7 - 27**

இன்று பி. ஏ. சப்ளிடுமண்டு ரிசல்ட் வந்தது.

**13 - 7 - 27**

கல்லூரி வேலையுடன் பார்சல்கள் அனுப்புவதும், கடிதங்கள் எழுதுவதும் வேலைகளாயுள்ளன. வேறு ஒன்றுஞ் செய்யக் கூடவில்லை.

**14 - 7 - 27**

இன்றும் நேற்றுப் போன்றே வேலைகள்.

**15 - 7 - 27**

விசேட வேலையொன்றும் இல்லை.

**16, 17, 18, 19 - 7 - 27**

இந்நாட்களில் தம்பியின் உத்தரகிரியையின் பொருட்டு நடுக்காவேரி போயிருந்தேன். நான்கு நாளிலும் அனுட்டான காலத்தில் திருவாசக அகவல்களில் ஒவ்வொன்று படித்தேன்.

**20 - 7 - 27**

நடுக்காவேரியிலிருந்து வந்து காலேஜுக்குப் போய் வந்தேன். உடம்பு நலமின்றியுளது.

**21 - 7 - 27**

பிணி வருத்துகின்றது. கல்லூரிக்குப் போய் வந்ததன்றி வேறு வேலையில்லை.

**23 - 7 - 27**

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழா சுவாமி வேதாசலம் அவர்களின் தலைமையில் மிக்க சிறப்புடன் நடைபெற்றது. எனக்கு இதிற் பிரசங்கம் குறிப்பிட்டிருந்தது. நோயின் தொந்தரை எனக்கு மிகுதியாக இருந்தமையின் நான் போவதில்லையெனத் தீர்மானித்தும், முடிவில் ஆர்வ மிகுதியாற் போய்ச் சேர்ந்தேன். ‘பழைய உரையாளர்’ என எனக்குக் கொடுத்திருந்த பொருள் குறித்துச் சிறிது பேசுதலுஞ் செய்தேன்.

**24 - 7 -27**

இன்றும் கரந்தைச் சங்க விழா நடைபெற்றது. இருநாளும் திரளான மக்கள் கூடியிருந்தார்கள். பல விரிவுரைகளையும், தலைவருடைய அரிய ஆராய்ச்சியுடன் கூடிய முகவுரை முடிப்புரைகளையும் கேட்டுக் கொண்டிருந்தேன். சுவாமி வேதாசலம் அவர்களிடத்து எனக்கு முன்பிருந்த மாறுபட்ட எண்ணங்கள் மாறி, இப்பொழுது அவரிடத்தில் மதிப்பும் அன்பும் உடையவனாயினேன். அவரும் என் திறத்து அப்படியே இருந்தது அறிந்தேன்.

**25 - 7 - 27**

கல்லூரிக்குப் போய்வந்ததே இற்றை அலுவல்.

**26 - 7 - 27**

வேறு வேலையொன்றும் நடக்கவில்லை.

**27 - 7 - 27**

இன்றும் அங்ஙனமே. இரண்டு அன்பர்களுக்குத் தமிழ்ப் பண்டிதர் வேலைக்கு முயன்று இரண்டும் கிடைக்காமற் போனது பற்றி வருத்தம் உண்டாயது.

**28 - 7 - 27**

இன்று ஆடி அமாவாசை, மலைக்கோயிலில் மண்டலா பிஷேகம். கல்லூரி லீவு. எனினும் மலைக்கோயில் சென்று தரிசிக்கக்கூடவில்லை. வேலையும் யாதும் நடக்கவில்லை. பல கடிதங்கள் எழுதினேன். இரவில் தாயுமானேசர் முதலிய பஞ்ச மூர்த்திகள் திருவுலாக்காட்சி, இடபவாகனம்.

**29 - 7 - 27**

கல்லூரிக்குப் போய் வந்ததே வேலை. மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். ஆடி வெள்ளிக்கிழமையாகலின் திரளான மக்கள் தரிசிக்க வந்திருந்தனர்.

**30 - 7 - 27**

ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தேன். திருவிளையாடல் உரை நாலைந்து பாட்டுக்கு எழுதலானேன்.

**31 - 7 - 27**

திருவிளையாடலில் மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திரப் பகுதியைப் படித்துக் கொண்டிருந்தேன். மாலை 6-மணிக்குமேல் சைவசித்தாந்தசபையில் 'மாணிக்கவாசகர்' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தேன். மாணவர்கள் மிகுதியாய் வந்திருந்தனர்.

**1 - 8 - 27 (பிரபவ, ஆடி, 17 ஆம் தேதி)**

கல்லூரி வேலையுடன், 'அகத்தியர்' அச்சிடுங்கருத்தால் ஒழுங்குபடுத்தத் தொடங்கியது இற்றை அலுவல்.

**2 - 8 - 27**

கல்லூரிக்குப் போய் வந்ததுடன், செப்டம்பர் பரீக்ஷைக்கு பி. ஏ. வினாக்கடிதம் ஒன்று எழுதினேன்.

**3 - 8 - 27**

விசேட வேலை யொன்றும் நடக்கவில்லை.

**4 - 8 - 27**

இன்றும் அங்ஙனமே.

**5 - 8 - 27**

இன்று சுந்தரமூர்த்தி நாயனார் திருநாள் ஆகும். ஆடி வெள்ளிக்கிழமையும் குருபூசை நாளும் ஆகிய இன்று கோயிலுக்குப் போகக் கூடவில்லை. மாலை 4-மணிக்குமேல் மலையடி மாணிக்க விநாயகருக்குத் தேங்காய் உடைத்து வணங்கிவிட்டுச் சென்னைக்குப் பிரயாணமானேன்.

**6 - 8 - 27**

இன்று காலை திருவல்லிக்கேணியில் அன்பர்களிருப்பிடம் அடைந்தேன். பகல் 1-மணிக்கு நடைபெற்ற தமிழ்ப்பரிஷகர் கூட்டத்திற்குப் போய் வந்தேன்.

**7 - 8 - 27**

மனம் தூயநிலையில் இல்லை. பகல் 2-மணிக்கு மேல் மைலாப்பூரில் திரு. K. R. நமச்சிவாய முதலியாரவர்கள் இருப்பிடஞ் சென்று அவர்களோடு சிறிது நேரம் பேசியிருந்து திரும்பினேன். இரவு போட் மெயிலில் திருச்சிக்குத் திரும்பினேன். உடன் வண்டியில் வந்த அன்பர் திருவரங்கம் பிள்ளையவர்களுடன் இரவில் நெடுநேரம் பேசிக் கொண்டுவந்தேன்.

**8 - 8 - 27**

இன்று காலேஜில் பிரின்சிபாலைப் பார்த்த பொழுது 'நீயே தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஆகலின் தமிழுக்கு நீயே பொறுப்பாவாய்; சுந்தரநாத பிள்ளை செய்யும் வேலையையும் நீ மேற்பார்த்து வரவேண்டும்' என்று கூறினார். வேறு வேலை இல்லை.

**9 - 8 - 27**

கல்லூரிக்குப் போய் வந்து சில சில்லறை அலுவல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

**10 - 8 - 27**

கல்லூரி போய் வந்து சிறிது வேறு வேலை செய்தேன்.

## 11 - 8 - 27

இன்று லீவு. இண்டர்மீடியட் பாடமாகிய புறநானூற்றுப் பாட்டுகளில் நான்கிற்கு உரை எழுதினேன். இத்தனை காலமாக நான் எனக்கெனப் பவுண்டன் பென் விலைக்கு வாங்காதிருந்தேன். என் தம்பி கோவிந்தராஜாவுக்கு அவன்படிக்கும் பொழுது ஒரு பென் வாங்கிக் கொடுத்தேன். சுமார் இரண்டு வருடத்தின்முன் ஸ்ரீ மணிவாசக சரணாலய சுவாமிகள் ஒரு பென் எனக்கு இனாமாக அளித்திருந்தார்கள். இன்றுதான் எனக்கென ஐந்தே கால் ரூபாயில் ஒரு பென் வாங்கினேன். அதனாலேயே இதனை எழுதுகின்றேன்.

## 12 - 8 - 27

இன்று சிராவணமாகலின் கல்லூரி லீவு. சிறிது பத்திரிகை படித்தேன். என் வாழ்க்கைக் குறிப்புகள் சிறிது வேண்டுமெனச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திலிருந்து திரு ப. சுப்பையா பிள்ளை கடிதமெழுதியிருந்தமையின் அது சிறிது எழுதிக் கொண்டிருந்தேன். வேறு வேலை யொன்றும் செய்யவியல வில்லை. ஆடி வெள்ளிக்கிழமையாகிய இன்று மனைவி மக்களுடன் மலைக்கோயில் சென்று வழிபட்டு வந்தேன்.

## 13 - 8 - 27

செந்தமிழ்ச்செல்விக்கு ‘திணைமயக்கம்’ என்னும் பொருளில் ஓர் கட்டுரையெழுதத் தொடங்கி முக்காற் பகுதி எழுதினேன். இடையிடையே பேசிக் கொண்டிருக்கச் சிலர் வந்தனர்.

## 14 - 8 - 27

நேற்று எழுதிய கட்டுரையை முடித்து விட்டு, திருவிளை யாடல் உரை 23-பாட்டிற்கு எழுதினேன். இன்று சற்று மிகுதி யாகவே வேலை நடந்துளது.

## 15 - 8 - 27

கல்லூரிக்குப் போய் வந்து, வீட்டுக்கணக்குச் சிறிது எழுதிக் கொண்டிருந்தேன். திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

## 16 - 8 - 27

கல்லூரி வேலையுடன், சிற்சில பிரபந்தங்களில் சிற் சில பாடல்கள் படிக்கப் பெற்றன. ‘அகத்தியர்’ என எழுதி வந்ததில் சில ஒழுங்குகள் செய்தேன்.

**17 - 8 - 27**

கல்லூரி வேலையுடன் சில தமிழ்ப்பாட்டுக்கள் படித்துக் கொண்டிருந்தேன்.

**18 - 8 - 27**

விசேட வேலை ஒன்றும் நடக்கவில்லை.

**19 - 8 - 27**

கும்பகோணம் காலேஜ் மாணவர் தமிழ்ச்சங்கத்தில் 'சங்க இலக்கியம்' என்னும் பொருள் குறித்து உபந்நியசிக்க ஒப்புக் கொண்டு காலை 9½ மணிக்குப் புறப்பட்டுச் சென்றேன். மாலை 4½ மணிக்குமேல் உபந்நியாசித்தேன். கேட்க வந்த மாணவர் களின் தொகை குறைவாகவேயிருந்தது. சில தமிழ்ப் பண்டிதர்கள் வந்திருந்தனர். ஏனை உபாத்தியாயர்கள் யாரும் வரவில்லை. தமிழ்நாட்டில் தமிழ் அபிமானம் இப்படியிருக்கிறது.

**20 - 8 - 27**

திருப்பனந்தாள் மடாதிபதிகள் சுமார் ஒரு மாதத்தின் முன்றொடங்கி என்னை அங்கு வரும்படி தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். அழைக்க ஏஜண்டையும் அனுப்பினர். தந்தியும் வந்தது. இன்று அங்கு வருவதாக அவர்கட்கு எழுதி யிருந்தேன். நேற்று மாலையே என்னை அழைப்பதற்கு மடத்தின் ஏஜண்டு வண்டியுடன் கும்பகோணம் வந்திருந்தனர். இன்று காலை அவருடன் புறப்பட்டுத் திருப்பனந்தாள் சேர்ந்தேன். மாலையில் மடத்தின் அதிபராகிய ஸ்ரீ சொக்க லிங்கத் தம்பிரான் சுவாமி களைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். கார்த்திகை யாகிய இன்று திருப்பனந்தாள் திருக்கோயிலில் தரிசனஞ் செய்தேன்.

**21 - 8 - 27**

இன்று சின்னவராகிய ஸ்ரீ சாமிநாதத்தம்பிரான் அவர் களையும், பெரியவரையும் பார்த்துவிட்டுத் திருச்சிக்குத் திரும்பலானேன். இரண்டு நாளாக நன்கு உபசரிக்கப் பெற்றேன். மரியாதையும் செய்து அனுப்பினார்கள். தமிழுக்கு ஏதேதோ செய்ய இருப்பதாகச் சொன்னார்கள். எல்லாம் பின்பு தெரிய வேண்டும்.

**22 - 8 - 27**

இன்று கல்லூரி போய் வந்ததும், சில கடிதமெழுதியதும் முதலியனவே வேலையாகும்.

**23 - 8 - 27**

இன்றும் கல்லூரி வேலையே.

**24 - 8 - 27**

இன்று கல்லூரி வேலையுடன், திருவிளையாடல் உரை புரூப் வந்ததனைத் திருத்தினேன்.

**25 - 8 - 27**

இன்று கல்லூரிக்குப் போய்வந்த பின் 'தமிழ்நேசன்' பத்திரிகையில் இரண்டு சிறந்த கட்டுரைகள் படித்தேன். ஒன்று காந்தியடிகளின் சரிதப்பகுதி. மற்றொன்று புலாலுண்ணாமையைப் பற்றி ஓர் ஆங்கிலேயர் எழுதியதன் மொழி பெயர்ப்பு. இவை மனதை மிக உருகச் செய்தன. இன்று சென்னையில் பட்டமளிப்பு விழா.

**26 - 8 - 27**

கல்லூரிவேலையுடன், உரை சிறிது எழுதினேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**27 - 8 - 27**

இன்று திருவிளையாடல் உரையெழுதிக் கொண்டிருந்தேன். திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதிய 'திருஞானசம்பந்தர்' என்னும் புத்தகத்தில் ஒரு பகுதியை இரவில் படித்தேன்.

**28 - 8 - 27**

இன்று ஞாயிற்றுக் கிழமையாகவும் வேலையொன்றும் நடைபெறவில்லை. அவர் பெற்ற B.A. சர்டிபிகேட்டையும் பார்த்தேன்.

**29 - 8 - 27**

இன்று காலேஜ் வேலையன்றி வேறு வேலை நடக்கவில்லை. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். ஒருவர் சாஸ்திர நாம அர்ச்சனை செய்வித்தார். அது முடியுங்காறும் இருந்து தரிசித்தேன்.

**30 - 8 - 27**

இன்று கல்லூரி வேலையன்றி வேறொன்றும் நடக்கவில்லை.

**31 - 8 - 27**

*இன்று விநாயக சதுர்த்தி. பகல் 12-மணிவரையில் கடவுள் வழிபாட்டிற் பொழுது சென்றது. உச்சிப் பிள்ளையார் கோயில் சென்று அருச்சனை செய்து மீண்டோம். பின் தலைநோய் வருத்திற்று. மாலையில் 'அகத்திய'ருக்குச் சிறிது குறிப்புரை எழுதினேன். திரு. குக. மணி அவர்கள் மருந்து வந்தது.*

**1 - 9 - 27 (*பிரபவ, ஆவணி, 16*)**

*கல்லூரி வேலையுடன் சில கடிதங்கள் எழுதினேன்.*

**2 - 9 - 27**

*விசேட வேலையில்லை. சில கடிதங்கள் எழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.*

**3 - 9 - 27**

*சில கடிதமெழுதினேன். சோழர் சரித்திர சம்பந்தமாக சில புத்தகங்கள் பார்த்துக் கொண்டிருந்தேன்.*

**4 - 9 - 27**

*சோழன் கரிகாலன் சரித்திரத்திற் சிறிது எழுதினேன். கால்டுவல் ஹாஸ்டலில் 'சீதாபிராட்டியின் பண்பு' என்னும் பொருள் குறித்து உபந்நியசித்தற்குக் கம்பராமயணப் பாடல் களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். மாலை 4-மணிக்கு மேல் சுமார் 2-மணிநேரம் உபந்நியசித்தேன்.*

**5 - 9 - 27**

*கல்லூரிக்குப் போய் வந்து மாலையில் சோழன் கரிகாலன் சரித்திரம் எழுதிக் கொண்டிருந்தேன். திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.*

**6 - 9 - 27**

*கல்லூரி வேலையுடன் கரிகாலன் சரிதம் சிறிதே எழுதினேன். 'சுதேசமித்திரன்' வாங்கி மகாத்மா காந்தி சென்னையிற் பல கூட்டங்களில் பேசியவற்றைப் படித்தேன்.*

**7 - 9 - 27**

*இன்று கல்லூரிக்குப் போய்வந்து சில கடிதங்கள் எழுதியதே வேலை.*

**8 - 9 - 27**

*இன்று கல்லூரி போய் வந்ததும், யூனிவர்சிட்டியிலிருந்து வந்த'செக்' மாற்றுதற்குக் கஜானா போய் வந்ததும், வேலை.*

**9 - 9 - 27**

*இன்று கல்லூரி போய் வந்ததே அலுவல். கால்டுவல் ஹாஸ்டல் மாணவர்கள் பகல் 1மணிக்கு விருந்து நடத்தினர். அதற்குப் போய் வந்தேன். வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு மலைக் கோயில் சென்று தாயுமானேசருக்கு அருச்சனை செய் வித்துத் தரிசித்து வந்தேன். மனைவி மக்களுடன் கோயிலுக்குச் சென்றேன்.*

**10 - 9 - 27**

*இன்று முதல் மைக்கல்மஸ் விடுமுறை. நான் இன்று காலை புறப்பட்டு நடுக்காவேரி சென்று என் தாய் தந்தையர் முதலாயினாரைக் கண்டேன்.*

**11 - 9 - 27 முதல் 15 - 9 - 27 வரையில்:-**

*இரண்டு நாட்கள் வயல்களைப் போய்ப் பார்த்தேன். திங்கட்கிழமையிரவு நடுக்காவேரியில் சிவாலயம் அடைந்து தரிசித்தேன். ஒரு நாள் வேதாந்த சூடாமணியில் ஒரு பகுதியும், இரண்டுநாள் சாதகாலங்காரமும் படித்துக் கொண்டிருந்தேன். நிலம் விலைக்கு வாங்க முயன்று முடியவில்லை. இரண்டு நாள் மாலையில் நிலவு வெளிச்சத்தில் மனம் தெளிந்து இறைவனை வழுத்திக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்று நாள் நல்ல தூக்கம் இல்லை. 15-ம் தேதி பகல் 1-மணிக்கு மேல் திரிசிரபுரம் வந்து சேர்ந்தேன்.*

**16 - 9 - 27**

*இன்று விசேட வேலையில்லை. சில கடிதம் எழுதினேன். வெள்ளிக்கிழமையும் கார்த்திகையுமாகிய இன்று மலைக் கோயிலுக்கும் போகக் கூடவில்லை.*

**17 - 9 - 27** ***(பிரபவ, புரட்டாசி, 1ம் தேதி)***

*மகாத்மா காந்தியடிகளால் 'காந்திமார்க்கட்' டிற்கு இன்று காலை 7½ மணிக்குமேல் அஸ்திவாரக்கல் போடப்பெற்றது. நான் குழந்தை நடராஜனுடன் சென்று மேடையின் அருகில் நின்று அவரை நன்கு தரிசித்தேன். அவர் டாக்டரின் யோசனைப்படி ஒன்றும் பேசாது மௌனமாக இருந்தார். சந்தோஷக்குறி சிறிதும் அவரிடம் காணப்பட வில்லை. இரக்கமே ஓர் உருவெடுத்தாற்*

போன்றுளது அவரது தோற்றம். அவரது துறவுத்தன்மையும், தாழ்மையும் மனதை உருகச் செய்தன. நான் அங்கு நின்ற பொழுது ஒரு பையனது தலையால் தாடையில் மோதப்பெற்று என் பல் ஒன்று உள்ளே வளைந்து போய்விடும் போல் இருந்தது. பின் தெய்வச்செயலால் தானே நிமிர்ந்து விட்டது. சில உறவினர் நண்பர் முதலானவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததும், பத்திரிகை படித்ததும் முதலியவே இன்றைய அலுவல்கள். காந்தியடிகளின் சரித்திரத்தில், அவர், தென்னாப் பிரிக்காவில் தமக்குக் குமாஸ்தாக்களாக இருந்த இரண்டு ஐரோப்பியப் பெண்களின் குணாதிசயங்களைப் பற்றி எழுதியிருந்ததனைப் படித்துப் பெருமகிழ்வெய்தினேன்.

## 18 - 9 - 27

யூனிவர்சிட்டி விடைக்கடிதங்களிற் சிறிது திருத்தினேன். சிலருடன் பேசிக் கொண்டிருந்தேன். வேலை நன்கு நடை பெறவில்லை.

## 19 - 9 - 27

விடைக்கடிதங்கள் சில திருத்தினேன். சில அன்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். சுன்னாகம் குமாரசாமிப் புலவரவர் களின் புதல்வராகிய முத்துக்குமாரசாமி எங்கள் கல்லூரியிற் சேர்ந்து படிக்கப் பலவாறு முயன்றும் இடம் பெறாமல், சென்ற் ஜோசப் கல்லூரியிற் சேர்ந்து 6-வது குறூப்பில் தமிழ் எடுத்துக் கொண்டு படிப்பவர் இங்கு ஒவ்வொருகால் வந்து பேசியிருந்தும் பாடங்கேட்டும் செல்வர்; இன்று வந்து நன்னூல் விருத்தியிற் கொஞ்சம் கேட்டுச் சென்றனர். இவர் மிகுந்த நற்குணமும் தமிழ்ப் பற்றும் உடையவர். வட மொழியும் படித்து வருகின்றார். இவர் தந்தையார் வெளிப்படுத்திய பாலகாண்டம், தமிழ்ப்புலவர் சரித்திரம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் என்னும் புத்தகங்கள் முறையே இவரால் கொண்டுவந்து தரப்பெற்றன. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.

## 20 - 9 - 27

இன்று காலையிலும் மகாத்மா காந்தியடிகளை நாஷனல் காலேஜில் நடந்த கூட்டத்திற்குச் சென்று தரிசித்தேன். மிக மெதுவான குரலில் பேசினார். நான் அவரையே நோக்கிக் கொண்டிருந்த பொழுது அவரது பார்வையும் என்மீது சிறிது நேரம் தங்கியிருக்கக் கண்டேன். இன்று ஐந்தாறு கடிதங்கள் எழுதினேன். விடைக்கடிதங்கள் திருத்திக் கொண்டிருந்தேன்.

**21 - 9 - 27**

இன்று முழுதும் விடைக்கடிதங்கள் திருத்திக் கொண்டிருந்தேன்.

**22 - 9 - 27**

இன்றும் விடைக்கடிதங்கள் திருத்திக்கொண்டிருந்தேன்.

**23 - 9 - 27**

திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன். இடையிடை வேறு சில அலுவல்கள் நேர்ந்தமையின் மிகுதியாக எழுதக் கூடவில்லை. என் அருமை நண்பராகிய திருவாளர் R.V. இலட்சும நாயுடுகாரின் தம்பி R.V. அரங்கசாமி வந்தாராகலின் அவருடன் சிறிது நேரம் உண்டுஉரையாடிக் கொண்டிருந்தேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**24 - 9 - 27**

அன்பர் அரங்கசாமியுடன் பேசிக் கொண்டிருந்ததும், இன்று வந்த ‘செந்தமிழ்ச் செல்வி’யைப் படித்ததுமே இன்றைய அலுவல். செந்தமிழ்ச் செல்வியில் என் உருவப்படத்தை வெளிப் படுத்தியுள்ளார்கள்.

**25 - 9 - 27**

இன்று திருவிளையாடல் உரை எழுதிக் கொண்டிருந்தேன்.

**26 - 9 - 27**

சோழன் கரிகாலன் வரலாறு முன் எழுதி நின்றதனைத் தொடர்ந்து இன்று எழுதிக்கொண்டிருந்தேன். திருத்திய விடைக் கடிதங்களின் ஒரு பகுதியை ஒழுங்குபடுத்தினேன். என் அன்புள்ள மாணவன் T.R. கோவிந்தராஜன் எழுதிய கடிதமொன்று கிடைக்கப் பெற்றேன். திங்கட் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் எய்திச்சாவதானமாகத் தரிசித்து வந்தேன்.

**27 - 9 - 27**

இன்று வேலையொன்றும் நடக்கவில்லை. விடைக் கடிதங் களின் மார்க்கை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தேன்.

**28 - 9 - 27**

இன்று சோழர் சரித்திரம் எழுதத் தொடங்கினேனாயினும் மிகச் சிறிதே எழுத முடிந்தது. திரிசிரபுரம் G. P. இராஜகோபால

நாயுடு எழுதிய 'விதவா விவாக விளக்கம்' என்னும் புத்தகத்தை முழுதும் படித்துப் பார்த்தேன்.

**29 - 9 - 27**

இன்று விடுமுறையின்பின் கல்லூரி திறந்தது. நான் கல்லூரிக்குப் போய்வந்து நண்பகலின்பின் யாதும் வேலை செய்யக் கூடவில்லை. சில கடிதம் எழுதினேன்.

**30 - 9 - 27**

இன்று கல்லூரிக்குப் போய் வந்து, சோழர் சரித்திரத்தில் ஒரு சிறிது எழுதினேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றிரவு மழைபெய்து கொண்டிருந்தமையால் கோயிலுக்குப் போக முடியாது போலிருந்தது. ஆனால் திருவருள் எங்ஙனமோ கொண்டு சென்று தரிசிப்பித்தது. சற்று மிகுதியான நேரம் மலைக்கோயிலில் இருந்து அம்மைகொலுவுக்கு எழுந்தருளி யதைத் தரிசித்தேன்.

**1 - 10 - 27** *(பிரபவ, புரட்டாசி, 15)*

சி. சுப்பிரமணிய பாரதி எழுதிய பகவற்கீதை முகவுரையை முழுதும் படித்தேன். மிக்க இன்பமாயிருந்தது. கல்லூரிக்குப் போய் வந்த பின் சில கடிதங்கள் எழுதினேன்.

**2 - 10 - 27**

சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழாவிற்குத் தலைவராக வரும் சுவாமிவேதாசலம் அவர்கட்குப் படித்துக் கொடுக்க ஒரு வரவேற்பு எழுதிக்கொடுத்தேன். விடைக்கடிதங்களின் மார்க்கு களையெழுதி, அனுப்புதற்கு ஒழுங்குபடுத்தி வைத்தேன். வேறு வேலை செய்யக்கூடவில்லை.

**3 - 10 - 27**

புரூப் திருத்தியனுப்பினேன். என் அன்னையார்க்கு உடம்பு மிகவும் அசௌகரியமாயிருக்கிறதென்றும், எங்களை வந்து பார்க்கும்படியும் என் தந்தையார் எழுதிய கடிதம் வந்தது. மனம் மிகவும் குழம்பியிருக்கிறது. சென்னை பிரயாணவிஷயம் நிச்சயிக்க முடியாதிருக்கிறது. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**4 - 10 - 27**

இன்று கல்லூரிவேலையன்றி வேறொன்றும் நடைபெற வில்லை. கலைமகள் பூசை.

## 5 - 10 - 27

மனைவியுடனும் குழந்தைகளுடனும் புறப்பட்டு இன்று மாலை நடுக்காவேரி அடைந்து என் அன்னையைக் கண்டேன். உடல் மெலிந்து படுக்கையில் இருந்த அன்னை எங்களைக் கண்டவுடன் அழுதனர். நாங்கள் இயன்ற அளவு தொண்டு செய்து வருகின்றோம்.

## 6 - 10 - 27

இன்று பகல் 3-மணிக்குமேல் புறப்பட்டுச் சென்னை செல்லலாயினேன்.

## 7 - 10 - 27

இன்று காலை திருவல்லிக்கேணியில் வந்து தங்கி, மாலை 3 மணிக்குமேல் செனெட் மாளிகையில் நடந்த பரீட்சகர் கூட்டத் திற்குச் சென்றேன். ஏழு ஆண்டுகளின் முன் பிரிந்து வட நாடு சென்றிருந்த என் அருமை மாணவனும், அன்பனும் ஆகிய T.R. கோவிந்தராஜன் என்னைப் பார்ப்பதற்கு அங்கு வந்திருந்தனன். இரவு அவனுடன் அவனது இருப்பிடஞ் சேர்ந்து, அவனால் சமைக்கப்பெற்ற உணவினை அருந்தி இரவு 12-மணிவரையில் பேசிக் கொண்டிருந்து பின் துயின்றேன்.

## 10 - 10 - 27

இன்று கல்லூரி அலுவலே. நான்கு நாளாக எனக்கு நல்ல தூக்கமும், உணவும் இல்லை. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.

## 11 - 10 - 27

இன்று கல்லூரி வேலையுடன் சில சில்லறைக் காரியங்கள் நடந்தன. மனம் தூய்மையின்றியிருக்கிறது.

## 12 - 10 - 27

இன்று கல்லூரி வேலையுடன், சிறிது படித்துக் கொண்டிருந்தேன். திருவிளையாடல் உரையும் சிறிது எழுதினேன்.

## 13 - 10 - 27

கல்லூரி வேலையன்றி விசேட அலுவல் இல்லை.

## 14 - 10 - 27

இன்றும் கல்லூரி வேலையே. சிறிது படித்தேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**15 - 10 - 27**

இன்று மாலை 3½ மணிக்கு மேல். திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழா, நூற்றுக்கால் மண்டபத்தில் உயர்திரு. சுவாமிவேதாசலம் அவர்கள் தலைமையில் நடந்தது. 500பேர் கூட்டம் இருக்கலாம். என் அன்பர்கள் பலர் வந்திருந்தனர். தலைவரின் விரிவுரை சிறப்பாயிருந்தது. 'திருக்குறட் பாயிரவியல்' என்னும் பொருள் பற்றி நான் ஒரு உபந்நியாசஞ் செய்தேன்.

**16 - 10 - 27**

இன்று இரண்டு வேளையும் சபை விழாவின் விரிவுரைகள் நிகழ்ந்தன. இரவு 10-மணிக்கு நிறைவெய்தியது.

**17 - 10 - 27** *(பிரபவ, ஐப்பசி, 1ம் தேதி)*

இன்று கல்லூரிக்குப் போய்வந்து, மாலையில் சுவாமி வேதாசலம் முதலானவர்களுடன் மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**18 - 10 - 27**

இன்று நண்பகலில், என் தம்பி மனைவி ஜெகதாம்பாள் அபாய நிலைமையில் இருப்பதாகவும், நாங்கள் உடனே வர வேண்டுமென்றும் தந்தி வந்தமையின் மேல் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. இரவு 3-மணி வண்டிக்கு மனைவியையும், சிவப்பிரகாசத்தையும் ஊருக்கு அனுப்பினேன்.

**19 - 10 - 27**

தம்பியின் மனைவி இறந்தவிட்டதாக இன்று நண்பகலில் தந்தி கிடைத்தது. மாலையிற் கல்லூரி வேலையின்மையால் லீவு வாங்காமலே மாலை 3-மணி வண்டிக்குப் புறப்பட்டுத் தஞ்சை வழியே கண்டியூர் சென்று, அங்கிருந்து எதிர்வருவோர் முகந் தெரியாத காரிருளில் மிக விரைவாக நடந்து நடுக்காவேரி போய்ச் சேர்ந்தேன். என்னைக் கண்டவுடன் என் தாயார், மனைவி, சகோதரிகள் முதலாயினோர் அடித்துக் கொண்டு அழுதார்கள். நானும் முகத்தை மூடிக்கொண்டு அழுதேன். ஜெகதாம்பாளைப் பகலிலேயே அடக்கஞ் செய்ததாகவும், மருத்துவரைக் கொண்டு வயிற்றைப் பீறி மரித்த ஆண் குழந்தையை எடுத்ததாகவும் அறிந்தேன். இந்நிகழ்ச்சிகள் எங்கள் குடும்பத்தின் தீவினைத் தொடர்பைப் புலப்படுத்துகின்றன.

**20 - 10 - 27**

இன்று காலையில் சென்னையிலிருந்து என் தம்பி கோவிந்தராஜன் வந்து சேர்ந்தான். நான் கல்லூரிக்கு வந்து சேர்வதற்காகக் காலை

8½ மணிக்குப் புறப்பட்டுத் திருவையாறு வந்தபொழுது மோட்டாரில் இடங்கிடைக்கவில்லை. என் பெருந்தன்மையை விட்டுக் கெஞ்சியும் கேட்டேன். இடம் கிடைக்கவில்லை. பின் கல்லூரியதிபர்க்குத் தந்தி கொடுத்து விட்டு, அங்கு நின்றும் 12-மணிக்குப் புறப்பட்டுத் தஞ்சை வந்து உணவுண்டு, இரவு 6-மணிக்குமேல் திருச்சி வந்து சேர்ந்தேன்.

**21 - 10 - 27**

இன்று கல்லூரி வேலையன்றி வேறு வேலை நடக்க வில்லை. மாலையில் சுவாமிவேதாசலம் அவர்களுடன் ஜங்கிஷன் சென்று வழியனுப்பி விட்டு வந்தேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கவில்லை.

**22 - 10 - 27**

இன்று லீவு நாளாகவும் உரையெழுதும் வேலை முதலியன நடக்கவில்லை. அன்பர் திரு. அ. மு. ச. அவர்களுடன் சற்று மிகுதியான நேரம் பேசிக் கொண்டிருந்தேன். நாலைந்து கடிதங்கள் எழுதினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**23 - 10 - 27**

திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**24 - 10 - 27**

இன்று வைகறையில் ‘நான் ஒரு பார்ப்பனர் வீட்டிற்குச் சென்றிருந்ததாகவும், அவ்வீட்டு அம்மையார் என்னைக் கண்டவுடன் மிக விரைவில் நாலைந்து கறிவகைகளுடன் உணவு சமைத்து என்னை உண்பித்ததாகவும்’ கனவு கண்டேன். அவ்வம்மையும் கணவரும் சில குழந்தைகளும் காணப்பட்டனர். இக்கனவின்பின் மனம் மகிழ்வெய்தலானேன். நானும் குழந்தை நடராஜனும் 5-மணிக்கே எழுந்து வெந்நீர் வைத்து முழுகினோம். நான்கு வீட்டிலிருந்து தீபாவளிப் பலகாரங்கள் வந்தன. நாங்கள் உண்டு, தெருக்கூட்டுவோர், பரதேசிகள் முதலாயினோர்க்கும் அளித்தோம். சிலருக்குப் பத்திரிகை, சாத்துக்கவியெழுதுவதிலும், உடல் நலமின்றியிருக்கும் அன்பர் சரவண முதலியாரவர்களைப் போய்ப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்ததிலும் இன்றைப் பொழுது கழிந்தது. மலைக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.

**25 - 10 - 27**

நேற்றிரவு முழுதும் குழப்பமான கனவுகள் நிறைந்திருந்தன. உணவின் கெடுதியால் இவை நேர்ந்தனவென நினைக்கிறேன். இன்று புரூப் திருத்தியனுப்பியதுடன் சிறிது உரையும் எழுதினேன். சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**26 - 10 - 27**

இன்று கல்லூரிக்குப் போய் வந்து, நண்பகற்குப் பின் 'சுதேசமித்திரன்' பத்திரிகை படித்ததில் பெரிதும் நேரம் கழிந்தது. இரண்டு மூன்று பாட்டுக்கட்கு உரை எழுதினேன்.

**27 - 10 - 27**

கல்லூரி வேலையுடன் சிறிது உரையெழுதினேன்.

**28 - 10 - 27**

கல்லூரி வேலையுடன் உரையெழுதும் வேலையும் பார்த்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றும் மலைக்கோயில் சென்றுதரிசிக்கவில்லை. எங்கள் வீட்டில் நேர்ந்த மரணத்தீட்டின் நினைவினாலும், குழந்தை நடராஜனைத் தனியே விட்டுச் செல்ல விரும்பாமை முதலியவற்றாலும் சிலமுறை மலைக்கோயில் செல்வது தடைப்பட்டுளது. சிறிது ஆங்கிலம் படித்தேன்.

**29 - 10 - 27**

இன்று உரையெழுதிக் கொண்டிருந்தேன்.

**30 - 10 - 27**

கல்லூரி வேலையுடன் உரையும் எழுதினேன். இன்று கந்தர் சஷ்டி ஆகும். நான் சில நாளாகக் கடவுளை ஆராதித்தல் இன்றியே இருக்கின்றேன். மலையடிப்பிள்ளையாரைத் தரிசித்து வருதல் மாத்திரம் செய்கிறேன்.

**1 - 11 - 27** ***(பிரபவ, ஐப்பசி, 16ஆம் தேதி)***

கல்லூரி வேலையுடன் சிறிது உரையெழுதினேன்.

**2 - 11 - 27**

கல்லூரி சென்று பாடம் நடத்தியதுடன் உரை எழுதிக் கொண்டிருந்தேன்.

**3 - 11 - 27**

நேற்றிரவு கனவில், கும்பகோணம் ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் ஒரு பெருங் கூட்டத்துடன் நடந்து வந்து கொண்டிருக்கவும்

மற்றொரு பெருந்திரளாக நின்று கொண் டிருந்தவர்களில் ஏனையோரெல்லாம் அவர் தங்கள் சைவ சமயத்திற்கு மாறு பட்டவரென்று கருதி வணங்காதிருக்க நான் கைகூப்பி நின்று வணங்கவும், என்னுடன் நாலைந்து பேர் மாத்திரம் வணங்கவும், சுவாமிகள் தம் ஆன்மார்த்தமாகிய தக்ஷிணாமூர்த்திக்குத் தேங்காய் உடைத்துக் கற்பூர தீபங்காட்ட நான் தரிசிக்கவும் கண்டேன். இங்ஙனமே முன்னரும் சுவாமிகளைக் குறித்துக் கனவு கண்டதுண்டு.

கல்லூரி வேலையன்றி, 'சுதேசமித்திர'னும் சிறிது ஆங்கிலமும் படித்தேன்.

**4 - 11 - 27**

நேற்றுப் போன்றே இன்றும் வேலை. சென்னைக்கு வடக்கில் அடித்த பெரும் புயற்காற்றினால் நெல்லூர் முதலிய இடங்களில் நேர்ந்துள்ள நஷ்டத்தையும், ஜனங்களின் கஷ்டத்தையும் பத்திரிகையில் பார்க்கும் பொழுதே நெஞ்சு உருகுகின்றது. நெல்லூரில் மேற்கூரையுள்ள ஒரு வீட்டைக் கூடக் காண்பது அரிதாயிருக்கின்றதாம். மாதர்களையும் பிள்ளை களையும் காப்பதற்கு அங்குள்ளோர் என்ன பாடுபட்டிருப் பார்களோ கடவுளுக்குத் தான் தெரியும். நெடுநாளாகக் கோயிலுக்குப் போகாதிருந்த நான் வெள்ளிக் கிழமையாகிய இன்றிரவு மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**5 - 11 - 27**

கல்லூரிக்கு வினாக்கடிதம் தயாரிக்கத் தொடங்கிச் சிறிது எழுதியதன்றி வேறு வேலையில்லை. சுமார் பதினோரு ஆண்டுகளின் முன் கல்லூரியிற் படித்த பீர் முகம்மது என்பார் வேறு மூன்று மகம்மதியர்களுடன் இன்று என்னைப் பார்க்க வந்தார். அவர் எழுதியுள்ள ஒரு நாவலை என்னிடம் காட்டி என் அபிப்பிராயம் வாங்க வந்தனர் எனத் தெரிந்தது. அவர் படிக்கின்ற காலத்திலேயே செய்யுளியற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். என்னிடம் இவர் நிரம்பிய அன்பு வைத்துளாரென இன்று அறியலானேன். ஓர் புதிய கூடை நிறையப் பழங்களும் மிட்டாய்களும் வாங்கி வந்திருந்தார். என் மனைவியும் மங்கையர்க்கரசியும் இன்று மாலை ஊரிலிருந்து வந்தார்கள்.

**6 - 11 - 27**

இன்று யாதொரு வேலையும் செய்யக்கூடவில்லை. இரண்டு நாட்களாகக் கல்லூரியின்மையின் மிகுதியாக வேலை செய்யலாமென எண்ணியிருந்தேன்.

**7 - 11 - 27**

இன்று கல்லூரி வேலையே. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**8 - 11 - 27**

பாடம் நடத்தியதும், கல்லூரி வினாக்கடிதம் ஒன்று எழுதியதும் இற்றை அலுவல். திருவாங்கூர் இராச்சியத்துத் தமிழ்க் கல்லூரிகளில் பாடம் வைக்கும்படி கேட்டு, பாடவமைப்புக் கழகத்தினர்க்கு நக்கீரர் மூன்று பிரதியும், கபிலர் மூன்று பிரதியும் இன்று அனுப்பாலாயின.

**9 - 11 - 27**

கல்லூரி வேலையுடன் சில வினாக்கடிதங்கள் எழுதினேன்.

**10 -11 - 27**

கல்லூரிவேலையன்றி வேறு அலுவல் நடக்கவில்லை. இன்று ஓர் சிவனடியார் வீட்டுக்கு வந்தனர். இவர் செங்கல்பட்டு, பாலூர் என்னும் ஊரில் இருப்பவர்; நமசிவாய சுப்பராய முதலியார் என்னும் பெயரினர். தமிழ்நாட்டிலுள்ள தலங்கள் முழுதும் யாத்திரை செய்து, ஓர் படமும் புத்தகமும் எழுதிவருகின்றனர். படம் எழுதிவருவது ஓர் அரிய செயலாகத் தோன்றிற்று. அவருடைய செலவுக்கு நான் இரண்டு ரூபாய் கொடுத்ததுடன், என் அன்பர் இராமநடேச பிள்ளையையும் கொடுக்கச் செய்தேன். இது மகிழ்ச்சி விளைக்கின்றது. அவருடன் இருந்தமையால் கார்த்திகை யாகிய இன்று கோயிலில் தரிசனஞ் செய்யக் கூடவில்லை.

**11 - 11 - 27**

கல்லூரி வேலையன்றிப் பிறிதொன்றும் நடைபெற வில்லை. வெள்ளிக்கிழமையாகிய இன்று கோயிலுக்குப் போகவுமில்லை.

**12 - 11 - 27**

'தமிழ்ப் பொழி'லுக்குக் கல்வி என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையெழுதத் தொடங்கி ஒரு பகுதி இன்று முழுதும் எழுதிக் கொண்டிருந்தேன். முன் பல பத்திரிகைகளில் 'கல்வி' என்னும் பெயருடன் எழுதியுள்ளேன். எனினும் இது சற்று ஆழ்ந்த சிந்தனையுடன் எழுதப் பெறுகின்றது.

**13 - 11 - 27**

இன்று முழுதும் கல்வியென்னும் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தேன். இன்னும் முடியவில்லை.

**14 - 11 - 27**

இன்று கல்லூரி வேலையே. உயர்திரு. மணிவாசக சரணாலய சுவாமிகள் வந்திருந்தமையின் வேறு வேலை செய்யக் கூடவில்லை. திங்கட்கிழமையாகிய இன்று மலைக்கோயில் செல்லக்கூடவில்லை.

**15 - 11 - 27**

கல்லூரிக்குப் போய் வந்ததுடன், பாண்டி நாட்டிலுள்ள கள்ளர் நாடுகளின் விபரம் திரு குக.மணி சுவாமிகள் கூற எழுதினேன்.

**16 - 11 - 27**

இன்று வந்த 'செந்தமிழ்ச் செல்வி' முழுதும் படித்ததே விசேட வேலை.

**17 - 11 - 27**

கல்லூரி போய் வந்து, திருவிளையாடல் உரை சிறிது எழுதினேன்.

**18 - 11 - 27**

கல்லூரி போய் வந்து, கள்ளர் சரித்திரம் 2-ம் பதிப்பு அச்சிடுதற்காகப் புத்தகங்கள் ஆராய்ந்து கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்றும் மலைக்கோயில் எய்தித் தரிசித்து வந்தேன்.

**19 - 11 - 27**

இன்று மாலை 3-மணிக்குமேல் சில காரியமாகக் கரந்தைக்குச் சென்றேன்.

**20 - 11 - 27**

இன்று மாலை 3-மணிக்குக் கரந்தையினின்றும் புறப்பட்டு வந்து சேர்ந்தேன். வரும்பொழுது 'தமிழ்நாடு' என்னும் பத்திரிகை படித்தேன்.

**21 - 11 - 27**

கல்லூரி போய் வந்து, சில கடிதம் எழுதினேன். உடல் நலமின்றியிருந்தமையின் இன்று கார்த்திகைச் சோமவார மாகவும் கோயிலுக்குப் போகக் கூடவில்லை.

**22 - 11 - 27**

கல்லூரி வேலையுடன், திருவிளையாடல் உரை எழுதிக் கொண்டிருந்தேன். நான்கு நாளாகக் குழந்தை மங்கையர்க்கரசி

சுரத்தாலும் இருமலாலும் வருந்திக் கொண்டிருப்பதும், இரண்டு நாளாக இந்திராணி உடல் நலமின்றியிருப்பதும் மிக்க வருத்தத்தை விளைக்கின்றன.

**23 - 11 - 27**

சிறிது உரை யெழுதினேன். புரூப் திருத்தினேன். அன்னி பெசண்டு அம்மையின் பிரசங்கம் கேட்டேன். அவ்வம்மைக்கு இப்பொழுது வயது 81 என்கின்றனர். இந்த வயதில் அவ்வம்மை ஆவேசத்துடன் பேசும் பேச்சு மிகுந்த வியப்பை விளைக்கிறது. அசாதாரணமான சக்திவாய்ந்தவர் என்பதில் ஐயமில்லை.

**24 - 11 - 27**

கல்லூரி வேலையுடன், உரையும் மிகுதியாகவே இன்றெழுதினேன்.

**25 - 11 - 27**

இன்று திருவிளையாடல் உரையெழுதியதுடன், கள்ளர் சரித்திர சம்பந்தமாகவும் சில ஆராய்ந்து எழுதினேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயிலெய்தித் தரிசிக்கவில்லை.

**26 - 11 - 27**

இன்றும் உரைவேலையும், கள்ளர் சரித்திர வேலையும் நடந்தன.

**27 - 11 - 27**

உரையையெழுதிக் கொண்டிருந்தேன்.

**28 - 11 - 27**

சென்னையில் நேற்றுக்காலை என் தம்பிக்கு ஆண் குழந்தை பிறந்து இறந்து விட்டதெனக் கடிதம் வந்தமையால் இன்று நண்பகலுக்கு மேல் வருத்த மிகுதியால் வேலை யொன்றும் செய்யக் கூடவில்லை. இரண்டு சோமவாரமாகக் கோயிலுக்குப் போக முடியவில்லை.

**29 - 11 - 27**

கல்லூரி வேலையும், உரையெழுதும் வேலையும் நடந்தன.

**30 - 11 - 27**

கல்லூரி போய் வந்ததுடன், உரையும் சற்று மிகுதியாக எழுதினேன்.

### 1 - 12 - 27 *(பிரபவ, கார்த்திகை, 16ஆம் தேதி)*

*கல்லூரி போய் வந்து, வீட்டுக் கணக்குகள் பார்த்துக் கொண்டிருந்தேன். திரு. குக. மணிசுவாமிகள் அளித்த கருவங்கம் என்னும் மருந்துண்ணத் தொடங்கினேன்.*

### 2 - 12 - 27

*கல்லூரி வேலையுடன் உரையும் எழுதினேன். வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் போகவில்லை.*

### 3 - 12 - 27

*கல்லூரி விடைக்கடிதங்கள் திருத்திக் கொண்டிருந்தேன். இரவு 7-மணிக்குமேல் 3-அன்பர்களுக்குத் தருக்கசங்கிரக தீபிகை பாடம் சொல்லினேன்.*

### 4 -12 - 27

*இன்றும் விடைக்கடிதங்கள் திருத்தினேன். நாலைந்து கடிதங்கள் எழுதினேன்.*

### 5 - 12 - 27

*திரு குக. மணிசுவாமிகள் வந்திருந்தமையின் கல்லூரி வேலையன்றி வேறொன்றுஞ் செய்யக் கூடவில்லை. சோம வாரமாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன்.*

### 6 - 12 - 27

*கல்லூரி வேலையுடன் சிறிது உரை யெழுதினேன். இரவில் தருக்கசங்கிரகதீபிகை பாடஞ் சொல்லினேன்.*

### 7 - 12 - 27

*விசேட வேலையில்லை. இரவில் தருக்கப் பாடம் சொன்னேன். திருக்கார்த்திகையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசித்து வந்தேன். 1928ம் ஆண்டுப் பரிஷகராக இன்று உத்தரவு வந்தது.*

### 8 - 12 - 27

*இன்று ஆங்கிலத்தில் சில கடிதம் எழுதுவித்ததும், விடைப்பத்திரங்கள் திருத்தி முடித்ததும் விசேட அலுவல். இன்றிரவு சந்திர கிரஹணம்.*

### 9 - 12 - 27

*தமிழ்ப்போர்டில் என்னைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டு, அக்கடமிக் கவுன்சில் அங்கத்தினர்களுக்கு அனுப்ப ஒரு*

கார்டு ஆங்கிலத்தில் எழுதி அச்சிட்டது இற்றை வேலை. வெள்ளிக் கிழமையாகிய இன்று மலைக்கோயில் சென்று தரிசிக்கக் கூடவில்லை.

**10 - 12 - 27**

நேற்று அச்சிட்ட கடிதத்திற்கு விலாசங்கள் எழுதுவித்து அனுப்பியதும், திருவிளையாடல் உரை முதலியவற்றின் புரூப் திருத்தியதும் இன்றைய அலுவல்கள்.

**11 - 12 - 27**

'தமிழ்ப் பொழில்' நான்கு பகுதிகள் சேர்ந்து வந்ததனை இன்று படித்துக் கொண்டிருந்தேன்.

**12 - 12 - 27**

தஞ்சை, கள்ளர் மகாசங்க ஆண்டுவிழாவுக்குச் சென்று ஒருசிறு உபந்நியாசம் செய்தேன். இரவு கரந்தையில் இருந்தேன். சோமவாரமாகிய இன்று சிவாலய தரிசனம் செய்யக் கூடவில்லை.

**14 - 12 - 27**

தஞ்சை, ராவ்பகதூர் ஆறுமுகப்பிள்ளையவர்கள் எழுதிய 'திருமுருகாற்றுப்படை சிற்றாராய்ச்சி' என்பதற்கு என் கருத்துரையை எழுதினேன். பல்கலைக்கழக வினாக் கடிதங்கட்குச் சிறிது குறித்துளேன்.

**15 - 12 - 27**

கல்லூரி வேலையுடன் வினாக்கடிதம் எழுதியதே இன்றைய அலுவல்.

**16 - 12 - 27**

இன்றும் கல்லூரி போய் வந்து, வினாக்கடிதம் தயாரித்துக் கொண்டிருந்தேன். வெள்ளிக்கிழமையாகிய இன்று மலைக் கோயில் சென்று தரிசித்து வந்தேன்.

**17 - 12 - 27**

இன்றும் வினாக்கடிதம் தயாரித்தேன். கள்ளர் சரித்திரம் சிறிது திருத்தியெழுதினேன். திருவிளையாடல் உரை புரூப்பும் பார்த்து அனுப்பினேன்.

**18 - 12 - 27**

புரூப் திருத்திவிட்டு, கல்லூரி விடைக்கடிதங்கள் சில திருத்தினேன். The Book of the Knowledge என்னும் ஓர் ஆங்கிலப்

புத்தகம் இன்று பழைய விலைக்கு வாங்கினேன். இரவில் அதில் இரண்டொரு பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மிக இன்பமாயிருந்தது.

**19 - 12 - 27**

கல்லூரி விடைக்கடிதங்கள் திருத்தியதே வேலை.

**20 - 12 - 27**

விடைக்கடிதங்கள் திருத்தி முடித்துவிட்டு, மாலையிற் சென்னைக்குப் புறப்படலாயினேன்.

**21 - 12 - 27**

இன்று காலை 11-மணிமுதல் மாலை 6-மணிவரையில் செனெட் சபையில் நடந்த தமிழ்ப்பரீட்சகர் கூட்டத்தில் இருந்தேன்.

**22 - 12 - 27**

தண்டையார்ப்பேட்டையிலிருந்து மாலை 2-மணிக்கு மேல் தனியே புறப்பட்டு மண்ணடியிலுள்ள கழகத்திற்குச் சென்று, அங்கு நின்றும் மைலாப்பூர் சென்று திருவாளர் கா. நம. முதலியாரவர்களைக் கண்டு பேசி, இரவு 9மணிக்கு மேல் பங்களாவுக்கு வந்தேன்.

**23 - 12 - 27**

மாலையில் என் தம்பி மாமனாருடன் சென்று கண்காட்சியும் காங்கிரஸ் கொட்டகையும் பார்த்து விட்டு வந்தேன். தம்பி மு. கோ. வும் வந்து சேர்ந்தனன். நீர்க்கோவை, இருமல், தலைவலி, இவற்றால் வருந்தினேன். இரவில் சுரமும் வந்து விட்டது.

**24 - 12 - 27**

இரவு நடுக்காவேரிக்குப் புறப்படலானேன்.

**25 - 12 - 27**

காலை 10-மணிக்கு நடுக்காவேரியை அடைந்தேன். ‘தமிழ்நாடு’ பத்திரிகை படித்தேன். நான் எழுதிய ‘புறநானூற்றின் ஆராய்ச்சி’ என்பது ‘செந்தமிழ்ச் செல்வி’ யில் வெளிவந்திருந்த தனை, தமிழ்நாடு பத்திரிகையிலும் எடுத்துப் போட்டிருந்தது கண்டேன்.

**26 - 12 - 27**

சுதேசமித்திரன் படித்தேன்.

**27 - 12 - 27**

*சுதேசமித்திரனில் காங்கிரஸ் செய்திகள் படித்தேன்.*

**28 - 12 - 27**

*இன்றும் சுதேசமித்திரனில் காங்கிரஸ் செய்திகள் படித்தேன்.*

**29 - 12 - 27**

*இரவு 4-மணிக்குப் புறப்பட்டு இன்று காலை 10-மணிக்கு இந்திராணியுடனும், நடராஜனுடனும் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தேன்.*

**30 - 12 - 27**

*இன்று சுரத்திற்கு மருந்துண்டு, அதனுடன் கள்ளர் சரித்திரம் புரூப் திருத்திக் கொண்டிருந்தேன். சோழர் சரித்திரம் அச்சுக்குக் கொடுத்தேன்.*

**31 - 12 - 27**

*இன்றும் கள்ளர் சரித்திரம் புரூப் திருத்தியதுடன், சோழன் கரிகாலன் வரலாற்றில் எஞ்சிய பகுதி எழுதிக் கொண்டிருந்தேன்.*

*நான் நித்தல் நிகழ்ச்சி எழுதத் தொடங்கிய நாளில் ஆன்ம வளர்ச்சி ஏற்பட்டது போல் தொடர்ந்து வந்து கொண்டிருந் தால் இதுவரையில் மிக முன்னேற்றமடைந்திருக்க வேண்டும். ஆனால் சில காலமாக ஏதோ வழக்கத்திற்குக் கட்டுப்பட்டு நிகழ்ச்சி எழுதிவருவதேயன்றி அபிவிருத்தி ஒன்றும் ஏற்படு வதாகத் தெரியவில்லை. ஆகையால் இனி இதிற்காலத்தைச் செலவிடாது, 1928ம் ஆண்டின் தொடக்கத் திலிருந்து ஏதேனும் விசேட நிகழ்ச்சிகள் இருந்தால் மாத்திரம் எழுதிவருவதெனத் தீர்மானித்து விட்டேன்.*

*சென்ற ஆண்டின் மார்கழித் திருவாதிரையிலிருந்து கல்வி நிதிக் கெனச் சேர்த்து வரும்பணம் இதுகாறும் சேர்ந்திருப்பது ரூ. 110-9-6 ஆகும்.*

★ ★ ★